# தமிழரசு

1-1-1980 50 காசு.

பாட்டாளிகளின் பிள்ளைகள்
பட்டதாரிகளாகிறார்கள்





தோற்றம் : 17-9-1879
மறைவு : 24-12-1973

தோற்றம் : 10-12-1878
மறைவு : 25-12-1972



# தந்தை பெரியார்–மூதறிஞர் இராஜாஜி

## முதல் சந்திப்பு

"ராஜாஜியோடு தங்களுக்குப் பழக்கம் ஏற்பட்டது எப்போது?"

"அதுவா? அந்தக் காலத்திலே ஈரோட்டிலே பி.சி. நரசிம்மய்யர்னு எனக்கு ரொம்ப வேண்டிய வக்கீல் ஒருத்தர் இருந்தாரு. ஈரோட்லே நான் சேர்மனா இருந்தப்போ குடியானவங்க வழக்கெல்லாம் என்கிட்டே நிறைய வரும். அந்தக் கேசெல்லாம் அவருக்கு அனுப்புவேன்; யாருக்கு-நரசிம்மய்யருக்கு! நான் சேர்மனா வர்ரது சில பேருக்குப் பிடிக்கலே. பொறாமையினாலே எம் பேரிலே கலெக்டருக்குப் 'பெட்டிஷன்' எழுதிப் போட்டாங்க. சேர்மன் பதவின்னா இப்ப மாதிரி எலெக்ஷன்லே ஜெயிச்சதும் நேராப் போயி சேர்லே உட்கார்ந்துட முடியாது. கலெக்டர் சிபாரிசு செய்யணும்னு வச்சிருந்தாங்க. அந்தச் சமயத்துலே ஸர். பீ. ராஜகோபாலச் சாரிங்கறவர் சப் கலெக்ட்ரா இருந்தாரு. அவருக்கு என்னைப் பத்தி நல்லாத் தெரியுமான தாலே, பெட்டிஷனைப் பொய்யென்று தள்ளிட்டு என்னைச் சேர்மனாக்கிட்டாரு."


"ஆமாம். அந்த மாதிரி 'பெட்டிஷன்' எழுதிப் போட்ட ஆசாமி யாரு?"

"சீனிவாச முதலியாருன்னு ஒரு வக்கீல். 'நான்பிராமின்' வக்கீலாயிருக்காரே முன்னுக்குக் கொண்டாருவோம்னு நான்தான் அவரை முன்னுக்குக் கொண்டுவந்தேன். ஆனால் அவரே என் பேரில் 'பெட்டிஷன்' கொண்டு வந்தாரு. அப்ப ராஜகோபாலாச்சாரி சேலத்துலே வக்கீல். கெட்டிக்கார வக்கீல்னு சொல்லுவாங்க. அதனால் என்கிட்டே வர கேசெல்லாம் அவருக்கு அனுப்பி வைப்பேன். அந்தப் பழக்கத்துலே அவர் வர, போக இருந்தாரு. எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவாரு. அவரும் அப்ப சேலத்துலே சேர்மன்."

"எந்த வருஷம் அது?"

"தொளாயிரத்துப் பத்தொன்பதுன்னு ஞாபகம்...."

[ஒரு பேட்டியில் தந்தை பெரியார்.]



மலர்-10 தமிழரசு இதழ்-13

1-1-1980

# பினாமிகளை ஒழிக்கும் புதிய அவசரச் சட்டம்

"பினாமி" பெயரில் இருக்கும் குத்தகை நிலங்கள் உண்மையான விவசாயிகளுக்குப் போய் சேருகிற அளவுக்கு வகை செய்யும் புதிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்துள்ளது.

நிலக் குத்தகைக்கு உச்சவரம்பாக "5 ஸ்டாண்டர்டு ஏக்கர்" என்று இதுவரை இருந்து வந்ததை இனி "3 ஸ்டாண்டர்டு ஏக்கரா வாக குறைத்து தமிழக அரசு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது.

**உண்மையான விவசாயிக்கு நிலம் கிடைக்கும்**

இது குறித்து 1978ஆம் ஆண்டு 79ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புதிய அவசரச் சட்டம் "5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததை3 ஸ்டாண்டர்டு ஏக்கராக குறைப்பத்தின் மூலம் 39,000 விவசாயத் தொழிலாளர்க்கு புதிதாக குத்தகை நிலம் கிடைக்கும்.

இந்த நிலத்தை அரசு எடுத்துக் கொள்ள வில்லை. வேறு பெயரில் 'பினாமி'யாகவுள்ள குத்தகை நிலங்களைக் கண்டுபிடிக்கவே இந்த அவசர நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது. இதன்மூலம் உண்மையான விவசாயிகள் பயனடைவார்கள். நிலம் கொடுக்கும் போது அரிசன ஏழை விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சிறுநிலச்சுவான்தாரர்களுக்கு பாதிப்பு வராது**

இத்திருத்தங்களால் ஏற்படும் நன்மைகள்:


பொது பொறுப்புக் கழகங்கள் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம் இரண்டின் கீழும் பயிரிடும் குத்தகைதாரர்களின் நில உச்சவரம்பு ஒரே முறையில் அமையும். சிறிய நிலச் சுவான் தார்கள் எந்தவிதத்திலும் பாதிக்கமாட்டார்கள்.


குடும்பநபர்கள் தனித்தனியே குத்தகைக்கு நிலம் தனியாரிடம் எடுத்து ஒரு குடும்பத்திற்குள்ளேயே அதிக நிலம் இருக்கும் நிலை மாறும்.

குத்தகைக்கு சாகுபடி செய்பவருக்கு அவரது குடும்பத்திற்கு 3 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் எந்த வகையிலும் நிலம் இருக்கலாகாது என்பதுடன் கிடைக்கும் உபரி நிலம் மேலும் பல நிலமற்ற நபர்கள் குத்தகை சாகுபடியேனும் செய்து பலனடைய உதவும்.

மேற்கூறிய இருச்சட்டங்களிலும் பயிரிடும் குத்தகைகாரரின் உச்சவரம்பு என்பதில் அவர் முழுவதும் பயிரிடும் குத்தகைகாரராகவோ, அல்லது ஒரு பகுதி சொந்த சாகுபடியும் இன்னொரு பகுதி குத்தகை சாகுபடியாகவோ வைத்துள்ள நிலங்கள் அடங்கும். அதில் உபரி நிலமாக. எடுத்துக் கொண்டு பங்கீடு செய்ய வேண்டிய நிலம் பயிரிடும் குத்தகைகாரராகச் சாகுபடி செய்யும் நிலம் மட்டுமேயாகும்.

அதாவது ஒருவர் 4½ ஸ்டாண்டர்டு ஏக்கர் சொந்த சாகுபடியும், ½ ஏக்கர் ஸ்டாண்டர்டு ஏக்கர் குத்தகைகாரராக குத்தகை சாகுபடியும் செய்து வந்தால் இப்போழுது பயிரிடும் குத்தகை காரரில் உச்சவரம்பு 3 ஸ்டாண்டர்டு ஏக்கர் எனக் குறைக்கப்படுகையில் உபரியாக அவரிடமிருந்து எடுக்கப்படுவது ½ ஸ்டாண்டர்டு ஏக்கர் குத்தகை நிலம் மட்டுமேயாகும்.







# கீழ்த்திசை நாடுகளில் கண்டதும் கேட்டதும்

—மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத்துறை அமைச்சர்

**திரு ப. குழந்தைவேலு**

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று அன்றொரு நாள் மகாகவி பாரதியார் தமிழர்களுக்குக் கட்டளையிட்டார்! அதே வழியில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் தன் சக அமைச்சர்களை அயல் நாடுகளுக்கு அனுப்பி, அந்நாட்டில் ஏற்பட்டுள்ள அறிவியல் முன்னேற்றங்களைக் கண்டறிந்து வந்து தமிழகத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புக்கட்டளை பிறப்பித்து வருகிறார்.

ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கான மேம்பாட்டு ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனங்களுக்காக ஒரு சங்கம் உள்ளது. அந்தச் சங்கத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் ஒரு உறுப்பினராக உள்ளது. அச் சங்கத்தின் 4-வது பொதுக் குழுக் கூட்டம் அக்டோபர் 8-ம் தேதி முதல் 13-ஆம் தேதி வரை கொரியாவிலுள்ள சியோல் நகரில் நடைபெறும் என்றும், அப் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் எனக்கு அழைப்பு வந்தது. அந்த அழைப்பை எடுத்துச் சென்று தமிழக முதலமைச்சரிடம் காட்டி அனுமதி வேண்டினேன்.

"கொரியாவுக்குப் போய்விட்டு வந்தால் மட்டும் போதாது; அப்படியே ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்கும் சென்று அங்கெல்லாம் ஏற்பட்டுள்ள நவீன வேளாண்மை முன்னேற்றங்களைக் கண்டறிந்து வாருங்கள்!" என்று மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்புக் கட்டளையை ஏற்று நான் அக்டோபர் 5-ந்தேதி காலை 6.00 மணிக்கு விமானம் மூலமாக அயல் நாடு புறப்பட்டேன்.

**அண்ணாவின் குரல் கேட்டது**

விமானத்தில் அமர்ந்த உடனே, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு வந்தது. "தம்பி, இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டும் என்று கேட்கலாம்; அந்தத் துறையிலே இன்னும் நாம் போதிய அனுபவம் பெறவில்லை' என்பதால், 'சப்மரின்'வேண்டுமென்று கேட்கலாம்; அந்தத் துறையிலே நாம் பயிற்சி பெறவில்லை என்பதால். ஆனால் சோறு போடு என்றா அயல்நாடுகளிடம் கையேந்துவது?" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது என் காதுகளில் இனிமையாக ஒலித்தது.

"மழை கண்ட பயிரினைப் போல்" நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன், உணவுக்காகப் பிற நாடுகளிடம் கையேந்தும் அளவுக்கு இன்று நாம் இல்லை என்றாலும், இன்னும் எல்லாப் பயிர்களிலும் நமது தேவைக்கு ஏற்ப உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலையிலேயே உள்ளோம். இந்நிலை தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ளது. அந்நிலையை மாற்றிடுவதற்காக என்னால் இயன்ற வகையில் உதவிடுவது என்று என் மனதில் தீர்மானித்துக் கொண்டேன். அயல் நாடுகளில் ஏற்பட்டுள்ள வேளாண்மை முன்னேற்றங்களைக் கண்டறிந்து வந்து, தமிழக வேளாண்மையை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உறுதிகொண்டேன்.

அக்டோபர் 7-ஆம் நாள் மாலை கொரியாவிலுள்ள சியோல் நகரைச் சென்றடைந்தேன். 8-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரை அங்கு நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர் என்ற முறையில், "மேம்பாட்டிற்கான மாற்று முறைகள்" என்ற தலைப்பில் அப் பொதுக்குழுவில் ஒரு அறிக்கையை அளித்தேன்.

**எல்லார்க்கும் எல்லாம்**

அந்த அறிக்கையில் பொதுவாக இந்தியாவில் ஏற்பட்டுள்ள வேளாண்மை வளர்ச்சியையும், சிறப்பாகத் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் சுட்டிக் காட்டியுள்ளதுடன், இந்தியாவில் மலர்ந்துள்ள பசுமைப் புரட்சியினால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் விளக்கியுள்ளேன்.



தென்கொரிய நாட்டுக் கல்வி அமைச்சர் மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சரை வரவேற்கிறார்.

''சொத்து அல்லது செல்வம் ஒரு சிலரிடமே குவியுமானால் வறுமையும், சமத்துவமின்மையும் தோன்றக்கூடும்'' என்பதைக் கோடிட்டுக் காட்டி, 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற சமத்துவ நிலை ஏற்பட இந்திய அரசும் தமிழகஅரசும் மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்காக அரசு மும்முனை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு முனையில் விளை பொருள்களுக்கு நல்ல விலை, உழவர் பெருமக்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்து வரும் அரசு, மறு முனையில் உழவர் பெருமக்களுக்கு நவீன வேளாண்மை பற்றிய கல்வியையும் பயிற்சியையும் அளித்து வருகிறது. மூன்றாவது முனையில் நிறுவனங்களின் நிதி உழவர்களுக்குக் கிடைக்க அரசு ஊக்குவித்து வருகிறது என்பதை அவ்வறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளேன். நமது நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக்கேட்டு அவர்கள் வியப்பில் ஆழ்ந்து பாராட்டினார்கள்.

கொரியா நாட்டின் கல்வி அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்ட அப் பொதுக்குழுவில், ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளைச் சார்ந்த 110 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பொதுக்குழுவில் ஒவ்வொரு நாட்டிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றியும், மேலும் ஏற்படவேண்டிய முன்னேற்றங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சி மற்றும் அளிக்க வேண்டிய பயிற்சி ஆகியவை பற்றியும் விரிவாக விவாதித்தோம்.

மாலை வேளைகளில் கொரியா நாட்டில் கிராமப் புறங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் வேளாண்மையைப் பற்றியும் தெரிந்து கொண்டோம். 'இன்சான்' என்னுமிடத்தில் நடைபெறும் 'சேமல் அண்டங்' என்கிற கூட்டுறவுமுறைப் பயிற்சியையும் கண்டறிந்தேன்.

### தென்கொரியாவில் வேளாண்மை

தென் கொரியாவில் விவசாய உற்பத்தித் திறன் அதிகமாக உள்ளது. அதற்குக் காரணம் தென் கொரியா விவசாயிகளுடைய கடின உழைப்புதான். அங்குள்ள விவசாயிகள் கூலி ஆட்களை வைத்துப் பண்ணை வேலைகளைச் செய்வதில்லை. ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திலும் உள்ள அனைவரும் வயலில் பாடுபடுகிறார்கள். அத்துடன் இயந்திர சாதனங்களைப் பண்ணை வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் ஆதலால் அவர்கள் அதிக வருவாய் பெறுகிறார்கள்.

### ஒரு கிலோ அரிசி ரு. 12

தென்கொரியா சாலைகளின் இருமருங்கிலும் நெல் விளைவிக்கப்படுவதைக் கண்டேன். அது குளிர் பிரதேசமாதலால் நெல் விளைய 5 மாதம் முதல் 6 மாதம் வரை ஆகிறது. அங்கு ஒரு கிலோ அரிசி ரு. 12- வீதம் விற்கிறது. தென் கொரியா மக்கள் அரிசியை மட்டும் உணவுக்குப் பயன்படுத்துவதில்லை. நாம் நம் உணவுக்குச் ''சைடு டிஷ்'' வைத்துக் கொள்வதைப் போல, தென் கொரிய மக்கள் அரிசி உணவுகளை 'சைடு டிஷ்' ஆக மட்டுமே வைத்துக் கொள்கிறார்கள்.





ஆராய்ச்சி—பயிற்சி நிறுவனச் சங்கக்கூட்டத்தில் மற்றொரு உறுப்பினருடன் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர்.

### கலப்பு உணவு

தென்கொரியா மக்கள் கஞ்சி கோர்த்த அரிசி சாதத்தைச் சாப்பிடுகிறார்கள். அதைக் குச்சியால் எடுத்துச் சாப்பிடுகிறார்கள். அது அவர்களுக்கு வசதியாக உள்ளது. தென் கொரிய மக்களுடைய உணவில் காய்கறி, இறைச்சி, முட்டை ஆகியவையே முக்கிய இடம் பெறுகிறது. ஆனால் நாம் முழுக்க முழுக்க அரிசி உணவுகளையே சாப்பிடுகிறோம். ஆதலால்தான் இந்தியாவில் அரிசி அதிக அளவில் உற்பத்தியாகிய போதிலும், அரிசி பற்றாக்குறை நிலவுகிறது. ஆகவே, நாமும் நமது உணவில் அரிசியைக் குறைத்து மற்ற உணவுகளை உட்கொள்ளும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

''தென் கொரியாவில் நிலத்தைத் தரிசாகப் போடக்கூடாது! விவசாய நிலமானாலும் சரி. தொழிற்சாலைக்கு எடுத்த நிலமானாலும் சரி ஒரு ஆண்டுக்கு மேல் தரிசாகக் கிடந்தால் அந்த நிலத்தை அரசே எடுத்துக் கொள்ளும்''

### இந்தியப் பசுவல்ல! சாப்பிடுங்கள்!

''தென் கொரியாவில் விவசாயம் இயந்திர மயமாகவே நடைபெற்று வருகிறது. விவசாயம் அங்கு இலாபகரமாக உள்ளது. அங்கு வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. இங்கு ரு. 1,000 சம்பளம் வாங்குவதும், அங்கு ரு. 8,000 சம்பளம் வாங்குவதும் சமம். அங்குள்ளவர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் உழைக்கிறார்கள்.

''தென் கொரியாவில் விவசாய வேலைகளுக்குக் கால்நடைகள் பயன்படுத்தப்படவில்லை. விவசாய வேலைகளில் பெரும் பகுதி, இயந்திரம் மூலமாகவே நடைபெறுகிறது. அங்கு, உணவுக்காக மாடுகள் அறுக்கப்பட்டு தட்டில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். ''நாங்கள் பசுவை வணங்குகிறோம்'' என்றேன். அவர்கள் 'இட் ஈஸ் நாட் இன்டியன் கௌ' என்றார்கள்.

கொரியா பயணத்தை முடித்துக்கொண்டு அக்டோபர் 14-ஆம் நாள் ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோ சென்றேன்.

இரவும், பகலும் ஒன்று என்று நினைக்குமளவுக்கு தூங்காத நகரம், டோக்கியோ! ஜப்பானில் வேளாண்மை சிறந்து காணப்படுகிறது. விவசாயிக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது. அதனால் ஜப்பானிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. அங்கு ஒரு ஆண்டில் ஒரு போகம் தான் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. வாய்க்கால், கிணற்றுப் பாசனங்களின் மூலம்தான் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. காய்கறிகள் பயிர் செய்வதை முக்கியமாகக் கொண்டுள்ளார்கள். டோக்கியோவைச் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு இப்பொழுது பெரும் பயம் ஏற்பட்டுள்ளது. காரணம், இருக்கின்ற நிலங்களை வீடு கட்ட உபயோகிக்கின்றார்கள்.

''ஜப்பானிய மக்கள் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற கடமை உணர்வுடன் கடினமாக உழைக்கிறார்கள். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் அங்கு கிடைக்கிறது. உழைப்புக்கு ஏற்ற உல்லாசம் தேவை என்று ஜப்பானிய மக்கள் நினைக்கிறார்கள்.

ஜப்பானிய உழவர்கள் கடமை உணர்வுடனும், சுறு சுறுப்பாகவும் உழைக்கிறார்கள். ஆதலால் அங்கு விவசாயம் மிக மிக இலாபகரமாக இருக்கிறது. தொழிற்சாலைகளில் அதிக இலாபம் கிடைப்பது போல் ஜப்பானிய விவசாயத்திலும் அதிக இலாபம் கிடைக்கிறது.

ஜப்பானிய உழவர்கள் உழைப்பில் மட்டுமல்ல, உபசரிப்பிலும் உயர்ந்து விளங்குகிறார்கள். விருந்தோம்பலில் அவர்களுக்கு ஈடு இணை இல்லை என்றால் மிகையாகாது.

### ஜப்பானிய உழவர்களின் நிலை

''ஜப்பானில் ஏற்பட்டுள்ள விவசாய முன்னேற்றத்தை அறிந்து கொள்வதற்காக நான்



### தோட்டக் கலையில் சென்னை மாநகராட்சியின் பங்கு!

தோட்டக் கலையில் சென்னை மாநகராட்சி காட்டிய தனி ஆர்வத்தின் காரணமாக நாற்றுச் செடிகள் விளைபொருள்கள் விற்பனையின் மூலம் ரூ. 2,67,000 வருவாய் வந்துள்ளது. ஈராண்டுக்கு முன் இவ்வகையில் மாநகராட்சி பெற்றிருந்த வருவாய் ரூ. 15,000 மட்டுமே!



தென்கொரியாவின் தலைநகரான சியோல் நகரில் அரும் பொருட் காட்சியகத்தை மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் பார்வையிடுகிறார்.

டோக்கியோவிற்கு அருகில் உள்ள 'இரியா-கோ அர்ச்சாகூ' என்ற கிராமத்திற்குச் சென்றேன். அங்கு 'யூச்சி சைட்டோ' என்ற உழவர் பெருமகனின் பண்ணையைப் பார்வையிட்டேன். அந்த உழவர் பெருமகனுக்கு 4 ஏக்கர் நிலம்தான் உள்ளது. அவர் நெல், சோயாபீன்ஸ், காய்கறி ஆகியவைகளைப் பயிரிட்டு வருகிறார். அவருக்கு 3 கார், 1 வேன், 2 புல்லெட் ஆகியவை சொந்தமாக உள்ளன. இதிலிருந்தே ஜப்பானிய உழவர்களுடைய வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது தெளிவாகும். உழைத்தால் உயரலாம் என்பதற்கு அந்த உழவர் பெருமகன் நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

### விருந்தோம்பல்

''அந்த உழவர் பெருமகனுடன் ஏறத்தாழ 2 மணி நேரம் அளவளாவி பல்வேறு வேளாண்மை நுட்பங்களைத் தெரிந்து கொண்டேன். அவர் என்னை வரவேற்ற பாங்கும், உபசரிப்பும் மறக்க முடியாத ஒன்றாக உள்ளது.

''ஜப்பானிய உழவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதற்கு, அவர்களுடைய விளை பொருட்களுக்கு அதிக விலை கிடைப்பதுதான் காரணமாக உள்ளது. அவர்களுக்கு நுகர்வோர்களைப் பற்றிக் கவலை இல்லை. அனைவரும் கடினமாக உழைத்து, நன்கு சம்பாதிப்பதால் அவர்களுக்கு வாங்கும் சக்தி அதிகமாக உள்ளது. ஆதலால் உழவர்களின் விளைபொருட்களுக்கு நல்லவிலை கிடைக்கிறது.

### பறவைகளை விரட்ட புதியமுறை

''ஜப்பான் நாட்டின் பல பகுதிகளில் பூச்சி இல்லை. ஆனால் நம் நாட்டில் பல்வேறு வகையான பூச்சிகள் உள்ளன. அவைகளை உடனடியாகக் கட்டுப்படுத்தவேண்டும். பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் நமது விவசாயிகள் ஒற்றுமையாகச் செயல்பட்டு, அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்.

''வயல்களில் பறவைகளினால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க ஜப்பானில் ஒரு நல்ல முறையைக் கையாளுகிறார்கள். பறவைகள் உட்காராதிருக்க ஒருவித பளபளப்பான காகிதத்தை வயல் வெளிகளில் கட்டியுள்ளனர். அதே முறையை இங்கும் செய்து பார்க்கலாம்.

''ஜப்பானில் சிறு சிறு இயந்திரங்களே பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல் நமது விவசாயிகளும் சிறு சிறு விசை உழவுக் கருவிகளைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நகரங்கள் மிகவும் சுத்தமாக உள்ளன. சுகாதாரம் மிகுந்த நகரமாக அவைகள் உள்ளன. அந்த நாடுகளில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு, 15 ஆண்டுகள் முடிந்து விட்டால், அக்கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அரசு அக்கட்டடத்திற்கு நஷ்டஈடு கொடுத்துவிட்டு எடுத்துக் கொள்கிறது. பிறகு புதுக் கட்டடம் கட்டுகிறது. அங்கெல்லாம் கட்டுப்பாடு இருப்பதால்தான் அம்மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து காணப்படுகிறது.

சிங்கப்பூரில் இருந்து விமானம் மூலமாக அக்டோபர் 20-ஆம் நாள் இரவு 8.20மணிக்கு சென்னை வந்து சேர்ந்தேன்.

ஜப்பானில் உள்ளது போன்ற சிறு சிறு விசைக் கருவிகளைத் தமிழகத்திற்கு ஏற்ற வகையில் பயன்படுத்தினால் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகுவதுடன், உற்பத்தியும் பெருகிடும்! ஆகவே, அது பற்றி அலுவலர்களுடன் கலந்தாலோசித்து வருகிறேன். விரைவில் நல்ல முடிவெடுத்து தமிழக விவசாயத்தை ஜப்பானில் உள்ளதுபோல் மேம்படுத்த முயற்சி செய்வேன்.



# உயிர் காக்கும் திட்டம்

சாலை விபத்துக்கள், தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் நீரில் மூழ்குதல், விஷம், விட்டில் கவனக்குறைவினால் ஏற்படும் தீ விபத்து போன்றவற்றில் தாமதம் இல்லாமல் உடனடி நிவாரணம் கிடைத்து இருந்தால் மேலும் பலர் பிழைத்துக் கொள்ள முடியும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சாலை விபத்துக்கள், மற்றும் தொழிற்சாலைகளில் பணியில் இருக்கும்பொழுது ஏற்படும் விபத்துக்கள், வீடுகளில் ஏற்படும் விபத்துக்கள் ஆகிய விபத்துக்களினால் உயிர்ச்சேதம்ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், ''விபத்துக்கு உடனடி முதலுதவித் திட்டம்'' என்ற பெயரில் மக்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய ஒரு திட்டத்தினை முதன் முதலில் தமிழ்நாட்டில் செயல்படுத்தத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

### இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் இப்படி ஒரு திட்டம் முதன் முதலாகச் செயல்படுத்தப்படுகிறது

ஆகவே, அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும் வகையில் முழுமையான முதலுதவி, நல்ல மருத்துவவசதி மற்றும் தேவைப்படும் அனைத்து வசதிகளும் கொண்ட அவசரகால மருத்துவ உதவி நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டார, மாவட்டத் தலைமையிடங்களில் அமைக்கப்படும்.

விபத்துக்கள் நடந்தால் உடனே விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு முதலில் கொண்டுபோய் முதலுதவி அளிப்பது. சிறிய காயங்களாக இருந்தால் வட்டாரத் தலைமை மருத்துவ மனைக்குக் கொண்டுசென்று சிகிச்சை பெறவும் மிகவும் ஆபத்தான நிலை ஏற்படுமானால் மாவட்டத் தலைநகரிலுள்ள அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று தனி சிகிச்சை அளிப்பது என்று மூன்று வகையாக இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இதற்கு வசதியாகத் தனித்தனி 'வயர்லஸ்' கருவிகள், தனித்தனி ஆம்புலன்ஸ் வண்டிகள், தனித் தனி வார்டுகள் கட்டி முடிக்கப் படும்.

### அவசரப்பிரிவு

இத்திட்டத்தைப் பரீட்சார்த்தமாக மதுரை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்த முடிவு செய்து அதற்காக தமிழக அரசு ஒரு கோடியே எழுபது இலட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. 107 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தனி அவசரப் பிரிவுகள் (Accident and Emergency units) ஏற்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்டவர்களை உடனடியாகக் கவனிக்க, எல்லா மருத்துவ வசதிகளும் கொண்ட தனிப் பிரிவுகள் திண்டுக்கல், பழனி, பெரியகுளம், இராமநாதபுரம், ராஜபாளையம், அருப்புக்கோட்டை, சிவகெங்கை, தூத்துக்குடி, தென்காசி, கோவில்பட்டி, நாகர்கோவில் ஆகிய வட்ட மருத்துவமனைகளில் அமைக்கப்படும். அந்த மருத்துவமனைகளில் இதற்காக தனி வார்டுகள் ஒவ்வொன்றும் 10 படுக்கைகள் கொண்டது கட்டப்படும். இவைகளைக் கட்ட பணம் ஒதுக்கப்பட்டுவிட்டது.


### முன்வரவேண்டும்

இந்தக் கட்டடங்களைக்கட்ட தனிநபர்கள் - தாராளமான மனப்பான்மையுள்ள வசதி படைத்தவர்கள் உதவ முன்வர வேண்டும்.

மிக நுட்பமான மருத்துவக் கருவிகள், இருதய சிகிச்சைக் கருவி, இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் கருவி போன்றவை சென்னை நகரத்தில் இருந்தால் மட்டும் போதாது.

எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ நிலையங்களிலும், எல்லா வகையான உயர்தர மருத்துவக் கருவிகளும் வைக்கவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


இந்த விபத்து உடனடி முதலுதவித் திட்டத்திற்கு அந்த நவீன கருவிகளும் பயன்படும்.



## தந்தை பெரியார் அறிவியல் அருங்காட்சியகம்

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரையை ஏற்று, தந்தை பெரியார் பெயரில் சென்னையில் அறிவியல் அருங்காட்சியகம் (மியூசியம்) ஒன்றினை நிறுவ அரசு தீர்மானித்துள்ளது.

சென்னை அடையாறு தொழில் நுட்பப் பள்ளி வளைவுக்குள் அமைக்கப்படும் இந்த அருங்காட்சியகத்திற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.



# தமிழக அரசு தேர்ந்தெடுத்த 24 பின்தங்கிய வட்டங்கள்

மைய அரசு 1971ஆம் ஆண்டில் கொண்டுவந்த திட்டத்தின்கீழ் 15 சதவிகித "மூலதன உதவித் தொகை அளிக்கும் திட்டம்" ஏற்கெனவே தமிழகத்தின் 33 பின்தங்கிய வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் (சிப்காட்), சிறுதொழில்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனமும் (சிட்கோ) செயலாக்கி வருகிறது.

இதுபோன்று "மூலதன உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை" மைய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் வராத வட்டங்களிலுள்ள, சிறுதொழில்களுக்கு விரிவுபடுத்துவது குறித்துத் தமிழக அரசு ஆலோசனை செய்தது.



மக்கள் தொகை, தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, வேளாண்மை வளர்ச்சியைப் பெருக்குவதற்கான அளவு ஆகிய முக்கியமான கருத்துகளைத் தமிழக அரசு கவனத்தில் கொண்டது. இத்திட்டத்தை மாநில நிதியிலிருந்து செயலாக்கும் பொருட்டு 24 வட்டங்களைத் தற்போது தமிழக அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

இந்த வட்டங்களில் மாநில அரசு வழங்க இருக்கும் "மூலதன மானியம்" மைய அரசு ஊக்குவிக்கும் மானிய திட்டத்தின் அடிப்படையிலேயே அமையும்.

இத்திட்டம் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மூலமாகச் செயல் படுத்தப்படும் 24 வட்டங்கள் விவரம் வருமாறு :

நெல்லை மாவட்டம்

1. விளாத்திகுளம் 2. நாங்குனேரி

திருச்சி மாவட்டம்

3. முசிறி 4. அரியலூர்

தஞ்சை மாவட்டம்

5. ஒரத்த நாடு 6. பேராவூரணி

தென்னார்க்காடு மாவட்டம்

7. திட்டக்குடி 8. சிதம்பரம் 9. காட்டு மன்னார் கோயில் 10 செஞ்சி 11 திருக்கோவிலூர் 12 உளுந்தூர்ப்பேட்டை 13 கள்ளக்குறிச்சி 14 திண்டிவனம்

புதுக்கோட்டை மாவட்டம்

15. அறந்தாங்கி 16. ஆவுடையார்கோவில்

வடஆர்க்காடு மாவட்டம்


17. போளூர் 18. செங்கம் 19. வந்தவாசி 20. செய்யாறு

செங்கல்பட்டு மாவட்டம்

21. மதுராந்தகம் 22. பொன்னேரி 23. கும்மிடிப்பூண்டி

மதுரை மாவட்டம்

24. பெரியகுளம்



## கோவை குடிநீர் பெருக்குத் திட்டம்!

சிறுவாணி நீரைக் கொண்டுவரும் இத்திட்டத்தின் அமைப்பு செலவு ரூ.1,616 இலட்சம். பராமரிப்பு செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 35 இலட்சம். இத்திட்டத்தின்கீழ், கேரள எல்லையில் அமைந்துள்ள பகுதிகளில் 701 இலட்ச ரூபாய் மதிப்பிற்கான வேலைகள் கேரள மாநில பொதுப் பணித் துறையினராலும், தமிழக எல்லையில் அமைந்துள்ள பகுதிகளில் 915 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டச் செலவு முழுவதையும் கோயம்புத்தூர் நகராட்சி ஏற்றுக் கொள்ளும். இதற்காக இந்நகராட்சி ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து 500 இலட்ச ரூபாயும், தமிழ்நாடு அரசிடமிருந்து 1146 இலட்ச ரூபாய் கடனாகவும் பெறுகிறது. இத்திட்டம் 1980 ஜூன் திங்களில் முற்றுப் பெறும்.





# நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

நீண்ட காலமாக மறு நிலவரித் திட்டம் ( Re-settlement ) மேற்கொள்ளப்படாத காரணத்தால், இரயத்துவாரி கிராமங்களிலுள்ள நிலப்பதிவேடுகள் பழமையானவையாகவும், தற்போதுள்ள நிலையைப் பிரதிபலிக்காமலும் உள்ளன. இதனால் கீழ்க்கண்ட தொல்லைகள் ஏற்படுகின்றன:

ஒரு விவசாயி, அரசாங்கத்திடமோ அல்லது கூட்டுறவு வங்கியிடமோ கடன்பெற விரும்பினால், அவர் தனக்குச் சொந்தமான நிலத்தின் சிட்டா, பட்டா புத்தகம், ரிஜிஸ்டரின் நகல், அடங்கல் போன்ற பதிவேடுகளின் நகலைத் தயாரித்துக் கொடுக்கவேண்டும். அப்பதிவேடுகளில் கடன் பெற விழைபவரின் பெயர் இருந்தால்தான், உடனடியாகக் கடன் பெற இயலும். அவ்வாறு இல்லாமல், கடன் பெற விழைபவரின் தகப்பனார் பெயரிலோ, அல்லது மற்றவர்களின் கூட்டுப் பெயரிலோ பதிவேடுகள் இருப்பின் அப்பெயரில் உள்ளவர்களின் மற்றும் அவர்களது எல்லா வாரிசுதாரர்களிடம் இருந்தும் ஒப்புதல் பெற்றால் அல்லாமல் கடன் எளிதில் பெற இயலாது. கடன் பெற விழைபவர் தனிப்பட்டா வைத்துக்கொண்டிருந்தால், எளிதில் கடன் பெற இயலும்.

கூட்டுப்பட்டாவாக நிலங்கள் இருப்பின் மனு செய்பவரின் உரிமை நிலத்தின் மேல் எந்த அளவு உள்ளது என்பதை அறிவதும் கடினம்.

மேலும், ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் உள்ள கிராம கிணற்றுக்கு மின் இணைப்பு பெற விரும்பினால் அவர் மின் இலாகாவினருக்கு மனுச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும்போது, அந்த நிலம் தனிப்பட்டாவாக உள்ளதா அல்லது கூட்டுப்பட்டாவாக உள்ளதா என்று மின்துறையினர் கவனிக்கிறார்கள். தனிப்பட்டாவாக உள்ள நிலங்களுக்கு மின் இணைப்பு எளிதில் கிடைக்கிறது. கூட்டுப்பட்டாவாக இருந்தால் எல்லா கூட்டுப்பட்டாதாரர்களின் ஒப்புதல் பெற்றால் அன்றி மின் இணைப்பு பெற இயலாது.

ஒரு நிலம் பலருடைய கூட்டுப்பட்டாவாக இருப்பதால், ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி எவ்வளவு என்று சரிவர அவர்கள் தெரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில பட்டாக்களில் அடையாளம் கண்டு கொள்ள முடியாத நபர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ள நிலையும் உள்ளது. பல ஆண்டுகளாகக் கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக மாற்றப் படாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

மேலும் விற்பனை, பரிவர்த்தனை (Transferred) போன்ற மாறுதல்களால் ஏற்படும் நில உட்பிரிவுகள் (Sub-Division) சரிவர பதிவேடுகளில் செய்யப்படாமல் இருப்பதால், நிலத்தை அனுபவிப்பவரின் பெயருக்கும், பதிவேடுகளில் உள்ள பெயர்களுக்கும் சம்பந்தமில்லாத நிலையில், நிலத்தை அனுபவிப்பவர்கள் கடன் வசதி பெறாத நிலை ஏற்படுகிறது.

ஒருவர் பயிரிட்டு அனுபவித்து வரும் நிலத்திற்கும், அந்த நிலத்தின் பட்டா

விலுள்ள பெயருக்கும் தொடர்பில்லாமல் நிலம் ஒருவருடைய உரிமையின் கீழும், பட்டா வேறு ஒருவரின் பெயரிலும் இருந்துவரும் நிலையிலும் உள்ளதால், நிலவரி வசூல், வராத கடன் வழங்குதல் போன்றவற்றில் ஏற்படும் சிக்கலைத் தவிர்க்க, அரசு நில உரிமையாளர்களுக்குப் பட்டா பாஸ் புத்தகத்தை வழங்கியுள்ளது. இந்த பட்டா உரிமைப் புத்தகத்தில், பட்டா யார் பெயரில் இருக்கிறதோ அவருடைய பெயர்தான் காணப்படும். அந்தப் புத்தகத்தில் நிலத்தை அனுபவித்து வரும் விவசாயியின் பெயர், பட்டா மாற்றம் செய்யப்படும்போது தான் குறிக்கப்படும்.

**நில உடைமைப் பதிவுத் திட்டத்தின் குறிக்கோள்கள் :**

1. விவசாயிகள் தங்கள் நில உரிமையினை அறியமுடியும்.
2. கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக மாற்றப்படும்.
3. ''சிட்டா'' போன்ற கிராமக் கணக்குகளில் நில உரிமையாளர்களின் பெயர்கள் குறிக்கப்படும்.
4. விற்பனை, பாகப்பிரிவினை நிலங்களை மாற்றிக்கொள்ளுதல் போன்ற மாறுதல்களைச் சரியான முறையில் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்படும். மேற்கூறிய குறிக்கோள்களை கொண்ட நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தை அரசு செயலாக்க முன்வந்துள்ளது.

**இத்திட்டத்தின் வாயிலாக ஏற்படும் நன்மை :**

1. ஒவ்வொரு புலத்தினையும் மீண்டும் அளந்து, வருவாய்த்துறை பதிவேடுகளில் பதிக்கப்படும்.
2. பூமியில் உட்பிரிவுகள் செயல்படுத்தப்படும்.
3. கூட்டுப்பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாகப் பிரித்துத் தரப்படும்.
4. விவசாயிகள் தங்குதடையின்றி வங்கிகளில் கடனுதவி பெற வாய்ப்பு பெருகும்.
5. அவர்கள் தங்கள் உரிமையினை எளிதில் அறியமுடியும்.
6. அரசுக்குச் சொந்தமான நிலங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு, அவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் இத்திட்டம் வகை செய்யும்.
7. மேலும் கூட்டுப்பட்டா நிலங்களின் ஈட்டின்பேரில் வாங்கப்பட்ட கடன் பணத்தை உரியவர்களிடத்தில் வசூலிக்க இத்திட்டம் வகை செய்யும்.
8. இத்திட்டத்தின்கீழ் பட்டா புத்தகங்கள் புதுப்பிக்கப்படுவதால் விவசாயிகளுக்குத் தங்கள் கைப்பற்றிலுள்ள நிலத்தின் எல்லா விவரங்களும், அந்நிலத்தில் தங்களுக்குள்ள உரிமைகளையும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

## விழி இழந்தோர் பள்ளிகளை சமூக நலத்துறை ஏற்கும் !

தமிழ்நாட்டில் விழி இழந்தோர், காது கேளாதவர்களுக்காக தனியாக 40 பள்ளிகள் உள்ளன. அத்துடன் பூவிருந்தவல்லியில் விழி இழந்தோர் அச்சகமும் மேலும், பூவிருந்தவல்லியிலும், கிண்டியிலும் பயிற்சி நிலையங்களும் உள்ளன.

இதுவரை பள்ளிக் கல்வித்துறையின் பொறுப்பில் இருந்த இவற்றின் நிர்வாகம், உடனடியாக சமூக நலத்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படுகிறது.

இவை தவிர, உடல் ஊனமுற்றோர்களுக்கான நகராட்சிகள், தனியார் பள்ளிகள் உட்பட உடல் ஊனமுற்றோர்க்கான எல்லாப் பள்ளிகளும், பள்ளிக் கல்வித்துறை இயக்குநரிடமிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்படுகின்றன.

9. இதுநாள் வரை குடும்பத்தில் பாகப் பிரிவினை ஏற்படுங்கால், நிலங்களை பாகத்திற்கேற்பப் பிரித்துத் தர விவசாயிகள் அதற்குண்டான கட்டணத்தைச் செலுத்திவிட்டு அலுவலர்களை நாடி அல்லலுற வேண்டியிருந்தது. இதனால் பண விரயமும், கால தாமதமும் நேர்ந்து வந்தது. இனி அந்நிலை இத்திட்டத்தின்கீழ் தவிர்க்கப்படும்.
10. புதிய திட்டப்படி, மனு இல்லாமலேயே நிலங்கள் பிரிவினைப் பத்திரங்களின் அடிப்படையில் அளக்கப்பட்டு, பிரித்துத் தரப்படுவது மட்டுமின்றி, பட்டா மாறுதலும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
11. மேலும் கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்கு இத்திட்டம் வழி வகுத்துள்ளது.

மாநிலத்தில் 30,000 சதுர மைல்கள் பரப்புள்ள நிலங்கள் அளவை செய்யப்பட்டு, ஐந்தாண்டுகளில் மாநிலம் தழுவிய அளவில் முடித்திட திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூ. 1.48 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் நில உரிமையாளர்களுக்கு ஓர் ஒப்பற்ற வரப்பிரசாதமாகும், நிலப்பதிவேடுகளில் நெடுங்காலமாக இருந்து வந்த குறைகளைக் களைவதுடன், விவசாயப் பெருங்குடி மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற ஒரு வாய்ப்பையும் இத்திட்டம் வழங்குகின்றது. நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களில் எல்லைகளைக் குறித்த வழக்கினை வழக்கு மன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய நிலை, இத்திட்டத்தால் பெருமளவு தவிர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**வாக்குரிமையே உங்களுக்குள்ள உயர் மதிப்பு மிக்க உரிமை**

# செல்லுபடியாகும் வகையில் உங்கள் வாக்கு அமையட்டும்


வாக்களிக்கும்போது உங்கள் வாக்கை செல்லுபடியாகும் வகையில் செலுத்துங்கள்.

வருகின்ற 1980 ஆண்டுத் தேர்தலில் பயன்படுத்தப்பட இருக்கும் வாக்குச் சீட்டின் மாதிரி அருகே உள்ளது.

ஒன்பது வேட்பாளர்களுக்கு மேல் இருந்தால் அவர்களின் பெயர்களும் சின்னங்களும் இரண்டு படிவங்களில் கொடுக்கப்படும். ஆகையால் வாக்களிக்கும்போது கவனம் வேண்டும்.

சின்னத்தின் மீதோ அல்லது வேட்பாளரின் பெயர் மீதோ முத்திரையிடுங்கள்.


உங்கள் வாக்கு செல்லுபடியாகும் வகையில் அமையட்டும்.




- உங்கள் வாக்கு இரகசியமானது. அச்சமின்றி வாக்களியுங்கள்.
- வாக்குரிமை உங்கள் பிறப்புரிமை. அது உங்கள் கடமையும்கூட. அதனை உபயோகியுங்கள்.

**வேட்பாளர்களிடமிருந்தோ அல்லது அவர் கட்சிகளிடமிருந்தோ எந்த வகையான அன்பளிப்போ இலவச வாகன வசதியோ பெறுவது தவறு.**


**வாக்குகளை பதிவு செய்யும் நேரம் காலை 8-30 முதல் மாலை 4-30 வரை**



DIPR 70

இயக்குநர் செய்தி-மக்கள் தொடர்புத்துறை தமிழ்நாடு அரசு.

# தென்னைக்கு ஊசி



**தி. பூ. தாண்டவராயன்**
**பண்ணை வானொலி அலுவலர்**

பொதுவாக மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் ஊசி போடுவது பற்றி நமக்கு நடைமுறையில் பழக்கமுண்டு. ஆனால், மரத்திற்கு ஊசி போடுவது பற்றி தெரிந்திருக்கிறோமா?

தற்போது தென்னையைத் தாக்கும் கருந்தலைப் புழுவினைக் கட்டுப்படுத்த தென்னை மரத்திற்கு ஊசி போடும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த புதியமுறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெஃபான்ட்டிஸ் செரினோப்பா என்றழைக்கப்படும் கருந்தலைப் புழு தென்னையின் ஓலைகளை மடக்கிக் கொண்டு, அதன் உட்புறத்தில் இருந்து கொண்டு பச்சை ஓலைகளைச் சுரண்டித் தின்று பெருமளவு சேதத்தை விளைவிக்கிறது. இவற்றின் தாக்குதலால் தென்னை ஓலைகள் எரிந்தது போன்று காணப்படும். நாளடைவில் அனைத்து ஓலைகளுமே பச்சையம் இழந்து, மரங்கள் காய்க்கும் திறனை இழந்து விடுகிறது.

தென்னை போன்று மிக உயரமாக வளரும் மரங்களுக்கு நெல், கேழ்வரகு, பருத்தி போன்ற பயிர்களுக்கு மருந்தடிப்பது போல, மருந்து தெளித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது என்பது ஒரு கடினமான பணி.

> 1—4—'79 முதல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2 அதிகப்படி ஊதியமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 2,000 தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

எனவே, இந்தப் புதிய சிக்கனமான, எளிதான, சிக்கலற்ற சிகிச்சை முறை தென்னைச் சாகுபடியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். தென்னை மரங்களுக்கு ஊசி போடுவதற்கான இந்த சிகிச்சை முறை பற்றிப் பார்ப்போம்:

கால் நடைகள் மற்றும் யானை போன்ற விலங்குகளுக்குப் பயன்படுத்துவது போன்ற அளவில் பெரிய ஊசிகளை (சிரிஞ்சுகளை) இதற்கு முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மரம் ஒன்றிற்கு 2½ மிலி நுவக்ரான் பூச்சிக்கொல்லி மருந்து தேவைப்படும். ஆகவே, இந்த அளவிற்கு மருந்தை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடிமரத்தில் தரைமட்டத்திலிருந்து ஒன்று அல்லது ஒன்றரை அடி உயரத்திற்கு மேல் துளைபோடும் ஆக்ரைக் கொண்டு சுமார் 6 அங்குல ஆழத்திற்குத் துளை செய்து இத்துளை வழியே மருந்தை ஊசி மூலம் செலுத்த வேண்டும்.

ஊசி போட்ட ஏழு நாட்களில் மருந்து மரத்தின் உச்சியை அடைந்து மரத்தில் உள்ள கருந்தலைப் புழுக்களை இறக்கச் செய்கிறது. இம்மாதிரி ஒருமரத்திற்கு 2.5 மிலி மருந்தை ஊசி மூலம் செலுத்த மருந்தின் கிரயம் உள்பட ஆகும் செலவு 50 காசு.

ஊசி போடுவதற்கு முன்னர் அறுவடைக்குத் தயாராக உள்ள காய்களைப் பறித்து கொள்ளுதல் வேண்டும்.

ஊசி போட்ட பின்னர் 45 நாட்கள் வரை ஊசிபோட்ட மரத்திலிருந்து காய்களைப் பறித்துப் பயன்படுத்தக் கூடாது.

அதற்கு இடைப்பட்ட காலத்தில் அறுவடை செய்ய நேர்ந்தாலோ அல்லது நன்கு முற்றிய நெற்றுக்கள் தானாக விழுந்தாலோ அவற்றை அப்படியே 45 நாட்கள் வரை வைத்திருந்து பின்னர் பயன்படுத்தலாம்.

மரங்களுக்கு ஊசி போட்ட 45 நாட்கள் வரை மருந்தின் நச்சுத்தன்மை அக்காய்களில் இருக்கும் என்பதை நாம் மறக்கக் கூடாது.

பதநீர் இறக்குகின்ற தென்னை மரங்களில் இந்த ஊசி போடும் சிகிச்சையினைச் செய்யவோ கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக இந்தக் கருந்தலைப் புழுவை ஒழிக்க, அனுகூல ஒட்டுண்ணிப் பூச்சிகளான ஈலோபிட், பெத்திலிட், பிராக்கானிட்போன்ற பூச்சிகளை விடுவது வழக்கம். ஆனால், இவைகள் கோடையில் இறந்து விடுவதால் கருந்தலைப் புழுவை இந்தச் சமயத்தில் ஒட்டுண்ணிப் பூச்சிகளைக் கொண்டு கட்டுப்படுத்த முடியாமல் போய்விடுகிறது. ஆனால், அதே சமயம், கோடையில் தான் கருந்தலைப் புழுக்கள் அதிக அளவில் பெருகுகின்றன.

ஆக, இத்தனைத் தொல்லைகளையும் தவிர்க்க ஒரே வழியாக இருப்பது ''தென்னைக்கு ஊசி''.

# தமிழின் பெருமை



**கவிஞர் ஏ. எஸ். முத்துச்சாமி**

சங்கம் வைத்து மொழி வளர்த்தது நமதுநாடு. அதன் பொற்கால வரலாற்றினைப் பழம் பெரும் நூலான வால்மீகி இராமாயணத்திலும்இறையனார் களவிய லுரையிலும் இலண்டன் மியூசியத்திலுள்ள சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பேடுகளிலும் அறிய முடிகிறது.

கணக்கற்ற மொழிகள்தோன்றி மறைந்த, உலகில், அன்று முதல் இன்றுவரை நின்று நிலைப்பவை தமிழ், சீனம் முதலான ஓரிரு மொழிகளே!

எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே பிறமொழிகளில் இலக்கணம் இருக்க, பொருளுக்கும் இலக்கணம் உள்ள ஒரே மொழி தமிழ் மொழியாகும்.

## வளரும் தமிழ்ச் செல்வம்

''வடமொழி, எபிரேயம் (யூத மொழி) கிரேக்கம் முதலான மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன '' என்று மேலை நாட்டு மொழியாராய்ச்சி நிபுணர் ''ரைஸ் டேவிஸ்'' கூறியுள்ளார். "பண்பட்ட மொழியாகும் தமிழ்'' என்று மாக்ஸ் முல்லரும், ஆற்றல் சான்றமொழி என்று பெஸ்கி பாதிரியாரும் கூறிப் புகழ்ந்துள்ள நமது தாய்த் தமிழின் வரலாற்றின் ஆரம்ப காலத்தை ஆதார பூர்வமாக நாம் அறிய முடியாவிடினும் பல அறிஞர்களின் உழைப்பால் கிடைத்த தொகுப்பினை, வளரும் தமிழ்ச் செல்வங்கள் நினைவுகூர வேண்டியது மிகவும் அவசியம்.

குமரிக்குத் தெற்கே இருந்த தென்மதுரையில் சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவானது முதல் தமிழ்ச்சங்கமென்றும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளான சிவபெருமானும் தேவர்தம் குறை தீர்த்த முருகப் பெருமானும் அச்சங்கத்திலிருந்து தமிழாய்ந்தனர், என்பதும் நம் முன்னோர்களின் நம்பிக்கை.

அகத்தியத்தை இலக்கணமாக வைத்து, பரிபாடல், முதுநாரை, முதுமுருகு, களரியாவிரை முதலான எண்ணற்ற நூல்களை உருவாக்கிய முதற் சங்கத்தில், அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர், முதலான 549 புலவர்கள் கூடி, மொழி வளர்த்த தென் மதுரையை, காய்சினவழுதி முதலாக கடுங்கோன் பாண்டியன் வரை 89 மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். முதற் சங்கத்தின் ஆயுள் 4440 ஆண்டுகள் என்று கூறப்படுகிறது.



கடல்கோளால் அழிந்துபோன தென் மதுரையை அடுத்து உருவான கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் தோன்றியதாகவும், அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூத புராணம் முதலானவற்றை இலக்கண நூல்களாக வைத்து, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலான நூல்கள் உருவாக்கப் பெற்ற இரண்டாம் தமிழ்ச் சங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் அகத்தியர், தொல்காப்பியனார், வெள்ளூர் காப்பியன், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, சிறுபாண்டரங்கன், திரையன், மாறன்துவரைக் கோமான், கீரந்தை முதலானோர்.

வெண்டேர்ச் செழியன் முதலாக, முடத்திருமாறன் வரையிலான பாண்டிய மன்னர்களின் பராமரிப்பிலே, இரண்டாவது தமிழ்ச் சங்கம் 3,700 ஆண்டுகள் செழித்திருந்தது என்று கூறப்படுகிறது.

## கடைச்சங்கப் பெருமை

கால வெள்ளம் கபாடபுரத்தையும் ஜீரணித்துவிடவே நான்மாடக்கூடலென்று புகழப்படும் இன்றைய மதுரையில் உருவானது மூன்றாம் தமிழ்ச் சங்கம்.

அகத்தியத்தையும், தொல்காப்பியத்தையும் இலக்கண நூல்களாய் வைத்து, நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபதுபரிபாடல் முதலான நூல்களை நக்கீரனார், சிறுமேதாவியார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க் கிழார், இளந்திருமாறன் நல்லத்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார், சேந்தம் பூதனார் முதலான 449 புலவர் பெருமக்கள் உருவாக்கினர்.

முடத்திருமாறன் முதல், உக்கிரப் பெருவழுதி வரையிலான 49 பாண்டிய மன்னர்களின் அரவணைப்பிலே 1850 ஆண்டுகள் மூன்றாம் தமிழ்ச்சங்கம் நிலைத்திருந்தது என்று கூறப்படுகிறது.

காலப் புயலாலும், கடலின் சீற்றத்தாலும் சங்க நூல்களில் பெரும்பாலானவை அழிந்து, இன்று நமக்குக் கிடைத்துள்ளவை...

....தொல்காப்பியமும், கடைச் சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டும், சங்க மருவிய காலத்துப் பதினெண் கீழ்க் கணக்கு மட்டுமே!

''நற்றிணை நல்லகுறுந்தொகை
ஐங்குறுநூறு
ஒத்தபதிற்றுப் பத்தோங்கு
பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோ
டகம் புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை''

சங்க மருவிய காலத்தில் (கி.பி. 100-600) சோழ பாண்டிய நாடுகளை பாலி மொழியைக்கொண்ட களப்பிரர்களும் நடுநாடு தொண்டை நாடுகளை பிராகிருத மொழியினைக் கொண்ட பல்லவர்களும் கைப்பற்றிக் கொண்டதால் தமிழ் மொழியின் வளர்ச்சி தடைப்பட்டது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பௌத்த, சமண மதங்களுக்குப் பேராதரவு தந்த களப்பிரர்கள் கைசோர்ந்து பாண்டியரும், பல்லவரும் வலிமை பெறவே தமிழின் வளர்ச்சி தொடர்ந்தது. சைவ-வைணவ சமயங்கள் புத்துயிர் பெற்றன.



தமிழ்க் காப்பியங்களிலே முதன்மையானதெனக் கூறப்படும் இளங்கோ வடிகளின் சிலப்பதிகாரமும், அன்பு நிலையை வலியுறுத்தும் சாத்தனாரின் மணிமேகலையும், ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற சத்தியத்தின் தத்துவம் கூறிய திருமூலரின் மந்திரமும், மேருமந்தர புராணம் முதலான சமண நூல்களும், புறப்பொருள் வெண்பா மாலை, இறையனார் களவியலுரை என்ற இலக்கண நூல், பெருங்கதை, முத்தொள்ளாயிரம் திருக்கயிலாய ஞானவுலா, நந்திக் கலம்பகம், பாரத வெண்பா முதலானவையும் உருவாயின.

### சோழர்கால முக்கிய நூல்கள்

சோழர் காலத்தில் (கி. பி. 850-1350) வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணியும், ஐஞ்சிறு காப்பியங்களெனப் படும் உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீல கேசியும், சமண காப்பியமும், பௌத்த காப்பியம் முதலான இலக்கிய, இலக்கண நூல்களான நம்பியகப் பொருள், யாப்பெருங்கலவிருத்தி, யாப்பெருங்கலக் காரிகை, நேமிநாதம், வச்சணந்தி மாலை, வீரசோழியம், நன்னூல், தண்டியலங்காரம், அகப்பொருள் முதலானவையும் சொற்பொருள் விளக்கும் நிகண்டுகளான..... திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு, அகராதி நிகண்டு ஆகிய நிகண்டுகளோடு ஔவையின் 'ஆத்தி சூடி, நல்வழி' முதலானவை, சேக்கிழாரின் பெரியபுராணம், சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி, ஒட்டக் கூத்தரின் தக்கயாகப் பரணி, கம்பரின் இராமாயணம், புகழேந்திப் புலவரின் நளவெண்பா-கல்லாடனாரின் தருக்க நூலான 'கல்லாடம்', கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்த புராணத்தோடு, பட்டினத்தடிகள் பாடல்களும், சோழர்காலத்து முக்கிய நூல்கள் என்று அறிய முடிகிறது.



சரித்திர ஆராய்ச்சியாளர்களால் நாயக்கர் காலமென வரையறுக்கப்பட்ட (கி. பி. 1350-1750) காலத்தில் சோழப் பேரரசு வலுவிழந்து, பாண்டியர்கள் சிறப்புற்று இருந்ததும் முகம்மதியர்கள் படையெடுப்பால் மதுரை சீரழிந்ததும், விஜய நகரப் பேரரசின் பிரதிநிதிகள் மதுரையை வென்று நாயக்கர் ஆட்சிக்கு வழி கோலியதும் சரித்திரக்குறிப்புகள். நாயக்கர் காலத்தில் சகல கலைகளோடு தமிழமுத மொழியும் வளர்ந்தது.

### ஐரோப்பியரால் தமிழ் பெற்ற பயன்

கி. பி. 1750-க்குப் பின்னால் முகமதியரின் வருகையைத் தொடர்ந்து ஐரோப்பியரும் வந்து தமிழகத்துப் பேரெழிலில் பெருமயக்கம் கொண்டனர். சமய வளர்ச்சியில் மிகையான ஆர்வம் காட்டிப் பல்லாயிரக் கணக்கான இந்துக்களை, மதம் மாறச் செய்த ஐரோப்பியர் தமிழ் மொழிக்குச் சில நன்மைகளையும் செய்திருக்கிறார்கள்.

மதுரை சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்ற வீரமாமுனிவர் 'சதுர் அகராதி'யைத் தந்தார். 'தத்துவக் கண்ணாடி'யை எழுதியவர் இராபர்ட் டி நொபிலி. 'தமிழ் இலத்தீன் இலக்கண நூல்' வெளியிட்ட சிகன் பால்கு ஐயர், திருக்குறளுக்கு உரை எழுதிய எல்லீஸ் துரை, 'வேத உதாரணத் திரட்டு' எழுதிய இரேனியஸ் ஐயர், திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப்பையர், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல் ஐயர், முதல் தமிழ் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' எழுதிய தமிழ் கிறித்துவரான வேதநாயகம் பிள்ளை, 'இரட்சணிய யாத்திரிகம்' காவியத்தை எழுதிய எச். ஏ. கிருஷ்ண பிள்ளை, 'பெத்தலேகம் குறவஞ்சி' இயற்றிய வேத நாயக சாஸ்திரியார், தமிழ் ஆங்கில அகராதியை முதலில் வெளியிட்ட 'உவின்ஸ்லோ' முதலான அறிஞர் பெருமக்களைக் குறிப்பிட வேண்டும்.

அறிஞர் போப்பையரால் ஆங்கிலப்படுத்தப்பட்ட பல அற்புதப் பாடல்களை எழுதிய பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி, ''மனோகரா'' முதலான எண்பது நாடகங்களுக்கு மேல் எழுதிய தமிழ் நாடகத் தந்தையான பம்மல் சம்பந்த முதலியார், இவர்களின் இடைக் காலத்தே குடியரசு பத்திரிகையில் திராவிடக் கொள்கையை முழங்கிவந்து அரசியலிலிருந்து சமுதாய மேம்பாட்டிற்குத் தனது முழு கவனத்தைச் செலுத்தி வந்த தந்தை ஈ. வே. ராமசாமி அவர்களின் வழித் தோன்றலான பேரறிஞர் அண்ணா அவர்களது இலக்கியப் படைப்புகள் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒளி ஊட்டின. அதே நேரத்தில் மேற்சொல்லி வந்த அறிஞர் பெருமக்களின் வரிசையில் இந்த இருபதாம் நூற்றாண்டில் முன்னோடியாக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

[சென்னையில் 29-9-1979 அன்று நடைபெற்ற அண்ணா தமிழ் இலக்கியக் கழகத் துவக்க விழாவில் ஆற்றிய வரவேற்புரையிலிருந்து.]

# அரும்பொருட்களைப் பாதுகாக்கும் அரிய பணி

மாநில அரசு அருங்காட்சியகங்களில் பழமையும் பெரிதுமானது சென்னை அரசு அருங்காட்சியகமாகும். 1851-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சென்னை அரசு அருங்காட்சியகம் படிப்படியாக உயர்நிலை அடைந்துள்ளது.

இந்தியாவிலேயே அதிக அளவு சிறந்த படிமங்களடங்கிய அருங்காட்சியகம் நமதே. வெண்கலப் படிமங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு இரசாயனப் பாதுகாப்பு ஆய்வகம் (Chemical Conservation and Research Laboratory) ஒன்று அரசு அருங்காட்சியகத்தில் 1930-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆய்வகம் 1935-ஆம் ஆண்டிலேயே புராதனப் பொருட்களின் நுட்பம் அமைப்பு பற்றிய புலனாய்வுப் பணிகளிலும் கலைப் பொருட்களைப் பாதுகாக்கும் சிறந்த முறைகளைக் காணுவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

இந்த ஆய்வகம் தனது அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள மற்ற அருங்காட்சியகங்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு 1975-ஆம் ஆண்டு அரும்பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கான மறு பயிற்சியை (Refresher Course on "Care of Museum objects") ஆரம்பித்தது. இம் மறுபயிற்சி நம் மாநிலத்தைச் சார்ந்தவர்களை மட்டுமின்றி மற்றைய மாநிலங்களைச் சேர்ந்த அரும்பொருட்காட்சியகப் பணியாளர்களையும் ஈர்த்துள்ளது.

அருங்காட்சியகம், கைவினைப் பொருள் உற்பத்தி, தொல் பொருள் ஆய்வு, கோயில் அறநிலையங்கள் ஆகிய துறைகளில் பணியாற்றுகின்றவர்களும், அரும்பொருட்காட்சிப் பொருட்கள், நுண்கலை, தொல் பொருளாய்வு ஆகியவற்றைப் பயிலும் மாணவர்களும் மற்றும் இத்துறையில்





வெண்கலச் சிலை
இரசாயன பாதுகாப்பிற்கு முன்



வெண்கலச் சிலை
இரசாயன பாதுகாப்பிற்குப் பின்

ஆர்வங்கொண்டுள்ள மற்றவர்களும் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பயிற்சியில் அரும்பொருட்களை வகைப்படுத்தல், அரும் பொருட்களைப் பாதிக்கும் வானிலைக் கூறுகள், உயிரினங்கள் மூலம் பொருட்பாதிப்பு, உலோகங்களின் பாதுகாப்பு, வண்ண ஓவியங்களின் பாதுகாப்பு, ஆவணங்களின் பாதுகாப்பு போன்றவையும் இடம் பெறுகின்றன. இப்பயிற்சியில் போதனை, செய்முறை ஆகியன இரண்டும் அடங்கியுள்ளன. இப்பயிற்சி பொதுவாக ஆண்டுதோறும் ஜூன் திங்கள் ஒன்று முதல் 30 வரையிலும் ஒரு மாதக் காலம் நடைபெறுகிறது. மறு பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## ஏலக்காய் வாரியம் தரும் ரூ. 25,000 பரிசு !

ஏலக்காய் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கும் 'கட்டே' என்னும் பயங்கர நோயை எதிர்த்துச் சமாளிக்கக் கூடிய ஏலச்செடிகளைப் பயிர் செய்பவர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ. 25,000 வழங்க ஏலக்காய் வாரியம் முடிவெடுத்துள்ளது. இத்தகைய தூண்டுதல் முயற்சியில் ஈடுபடும் விவசாயிகள் அல்லது நிறுவனங்கள் மேற்கண்ட பரிசைப் பெறத் தகுதியுடையவர்கள்.

பரிசு பெறுவதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும்.

சாகுபடி செய்யப்படும் ஏலக்காய்ச் செடிகள் ('எலட்டேரியா கார்டமோமம்), நச்சுத்தன்மை மிகுந்த 'கட்டே' நோயை எதிர்த்துத் தடுக்கும் பிரத்தியேகமான ஆற்றல் வளம் மிகுந்தனவாகவும், அவை ஏக்கருக்குக் குறைந்தது 30 கிலோ என்னும் வீத அளவில் உயர்ந்த ஏலக்காய் விளைச்சலைக் கொடுக்கத்தக்கனவாகவும், அவை ஐந்து ஆண்டுகளுக்காவது களப் பரிசோதனைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியனவாகவும் அமைந்திடவேண்டும்.

விவரங்களுக்கு, ஏலக்காய் வாரியம், 10, பாரதி நகர் 2வது தெரு, தியாகராய நகர், சென்னை-17 என்னும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.



# வேளாண்மை வளர்ச்சி- நிலவள வங்கிகள் பங்கு

எச். எம். பாண்டே, ஐ.ஏ.எஸ்.
தனி அதிகாரி,
தமிழ்நாடு கூட்டுறவு மாநில
நிலவள வங்கி

தமிழ்நாடு, அண்மைக் காலத்தில் வேளாண்மை உற்பத்தியில் மகத்தான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது. இதன் பலனாகப் பலகாலம் உணவுத் தேவையில் பற்றாக்குறையாக இருந்து வந்துள்ள நமது மாநிலம் இப்பொழுது தன்னிறைவை அடைந்திருப்பதோடு மட்டுமின்றி உபரி மாநிலமாகவும் மாறியிருக்கிறது. இதற்கு முதன்மையான காரணம் பசுமைப் புரட்சி, தமிழகத்தில் மகத்தான வெற்றி பெற்றதே ஆகும். இந்தச் சாதனையில் நிலவள வங்கிகளுக்கும் உரிய பங்குண்டு.

பசுமைப் புரட்சியின் மூலவேர் பாசன வசதிதான். இத்தகைய பாசன வசதிகளைச் செய்து தருவதில் நிலவள வங்கிகள் ஆற்றியுள்ள பணி சாதாரணமானதல்ல. புதிய கிணறுகளைத் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், பம்பு செட்டுகளைப் பொருத்தவும், கணிசமான அளவுக்கு நிலவள வங்கிகள் கடன் வழங்கி இருக்கின்றன. இந்தியா முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ள மொத்த பம்பு செட்டுகளில் சுமார் கால்பாகம், தமிழ்நாட்டில் மட்டும் இருக்கின்றன. ஆகில இந்திய ரீதியில் இவ்வளவு பெருமைக்குரிய இடத்தைத் தமிழ்நாடு வகிக்குமாறு செய்ததில் மாநில நிலவள வங்கிக்கு உரிய பங்குண்டு.

### பரிணாம வளர்ச்சி

மாநிலம் முழுவதும் பரவலாக 223 பிரதம நிலவள வங்கிகள் அமைந்துள்ளன. இவற்றுக்கு மையக் கேந்திரமாக மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி இயங்கி வருகிறது. ஐம்பது ஆண்டுகளுக்குமுன், நிலவள வங்கிகள்-நில அடமான வங்கிகள் என்ற பெயரால்-துவங்கின.

அந்தச் சூழ்நிலை அலாதியானது. கடன் சுமையால் பல விவசாயிகள், அவதிப்பட்ட நேரம் அது. அவர்களுக்குக் கை கொடுக்கும் நோக்கத்துடன் குறைந்த வட்டியில், நீண்டகாலத் தவணையில் கடனுதவி செய்து தருவதற்காக இந்த வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு வரை நில அடமான வங்கிகளின் சேவை, பிரதானமாக முன் கடனைத் தீர்ப்பதற்குச் சுலபத் தவணையில் புதுக்கடன் தருவதாகவே இருந்து வந்தது. காலக் கிரமத்தில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் பயனாக, நில அடமான வங்கிகளின் பணிகளிலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. முன்கடன் தீர்ப்பதற்குப் புதுக் கடன் தருவது என்ற நிலை மாறி, விவசாய வளர்ச்சிக் காரியங்களுக்கே உதவி புரிவது-என்ற புதிய கொள்கை முகிழ்த்தது. இந்தப் புதிய கொள்கை ஆக்க பூர்வமானது. பல சிறந்த நோக்கங்களைக் கொண்டது. முதலில் விவசாய வளர்ச்சிக்கு ஆதாரத் தேவையாகிய நிரந்தரப் பாசன வசதியைச் செய்து தந்து, விவசாய உற்பத்தி பெருக கை கொடுப்பதோடு, விவசாயியின் வருமானமும் அதிகரிக்கச் செய்ய வேண்டும்; அப்படிக் கிடைக்கும் அதிகப்படியான வருமானத்தைக் கொண்டு கடனைச் சிரமம் இல்லாமல் திருப்பிச் செலுத்தவேண்டும்.


இத்தனை அம்சங்களையும் கட்டுக்கோப்பாகக் கொண்ட புதிய கொள்கையினால், நில அடமான வங்கிகள், ' நிலவள வங்கிகளாக' மாறின.

### வேளாண்மையை இயந்திர மயமாக்க....

புதிய கொள்கையின் விளைவாக, பல்வேறு வகையான விவசாய மேம்பாட்டுக் காரியங்களுக்கு நிலவள வங்கிகள் உதவி புரிய ஆரம்பித்தன. நிலத்தைப் பண்படுத்த, கிணறுகளைத் தோண்டி பம்பு செட்டுகளைப் பொருத்த, பாசனக் கால்வாய் அமைக்க கணிசமான அளவில் கடன்கள் வழங்கப்பட்டன. அது மட்டுமின்றி, நவீன முறையில், விவசாயக் காரியங்களைத் துரிதமாகச் செய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடு, விவசாயத்தை இயந்திரமயமாக்கும், பணிகளுக்கும், நிலவள வங்கிகள், கடன்களை வழங்கி வந்திருக்கின்றன.

### எளிய பிரிவினருக்குச் சலுகைகள்

சிறு விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் தருவது மட்டுமின்றி, அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் அதிக கால அவகாசம் தரப்படுகிறது. மற்ற விவசாயிகள் கடன்களைப் பெறுவதற்குக் கடன் தொகையில் 10 சதவிகிதம் பிணைத் தொகையாகச் செலுத்துவதுபோல சிறு விவசாயிகள் செலுத்தத் தேவையில்லை. நிலவள வங்கிக் கடன்களில் 50 சதவிகிதம் சிறு விவசாயிகளுக்கென ஒதுக்கப்படுகிறது. அதோடு, கடன் தருவதில் இவர்களுக்கே முன்னுரிமையும் தரப்படுகிறது.



சாகுபடி நிலங்களின் பரப்பு அதிகரிக்க முடியாத நிலையில், இருக்கிற நிலங்களில் தீவிரச்சாகுபடி முறைகளைக் கொண்டுதான் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். இருக்கிற ஒரே வழி அதுதான். அதாவது ஒவ்வொரு துண்டு நிலத்தையும் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி, கூடுமான வரை உச்ச பலனை எடுப்பதே நம் நோக்கமாக இருக்க வேண்டும். இந்த நோக்கம் ஈடேற வேண்டுமானால், நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பங்களையெல்லாம் வேளாண்மையில் புகுத்தி பயன் பெற வேண்டும்.

சாகுபடி வேலைகளை இயந்திரமயமாக்கினால், அவற்றைத் துரிதமாக, செம்மையாக குறித்த காலத்தில், செய்து முடிக்க முடியும். வேளாண்மையை இயந்திரமயமாக்குவது - என்னும்போது இதில் முக்கிய இடம் வகிப்பது டிராக்டர். பல்வேறு சாகுபடி வேலைகளுக்கும், பண்ணை வளர்ச்சிக்கும் டிராக்டரைப் பயன்படுத்தலாம். ஆகையால், விவசாயிகள், டிராக்டர் மற்றும் டிராக்டர் உபகரணங்கள் வாங்க, நிலவள வங்கி கடனுதவிஅளித்து வருகிறது.

1975-76-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை, டிராக்டர்கள் வாங்குவதற்கான கடன்கள், நிலவள வங்கியின் வழக்கமாக சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டு வந்தன. வேளாண்மையை இயந்திர மயமாக்குவதில், டிராக்டர்கள் தேவை அதிகரித்து வருவதைக் கருதி, 'ஐடா' திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு டிராக்டர் கடன்கள் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு உலக வங்கியின் அங்கீகாரம் கிடைத்தது. இந்தத் திட்டத்தின் கீழ் 1,600 டிராக்டர்களுக்குக் கடன் வரப்பட்டுள்ளன. விவசாயக் காரியங்களுக்குப் பயன்படும் டிராக்டர்கள் தமிழ்நாடு முழுவதிலும் மொத்தம் சுமார் °000 இருப்பதாகக் கணிக்கப்படுகிறது. இவற்றில் சுமார் 80 சதவிகிதம் நிலவள வங்கியின் கடனுதவியோடு வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக நிலவள வங்கி வழங்கியுள்ள கடன்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 32 கோடி. டிராக்டர் வாங்குகின்ற விவசாயி டிராக்டருடன் கூடவே டிரெய்லர் உள்பட இரண்டு, மூன்று உபகரணங்களையும் வாங்க வேண்டும் என்று (விவசாயிகளின் நலன் கருதி) வலியுறுத்தப்படுகிறது. இந்த உபகரணங்கள் வாங்கவும் நிலவள வங்கி கடன் தருகிறது.



சேலம் மாவட்டம், பெருமாபாளையம் சாமானிய விவசாயி திரு துரைசாமி, சேலம் நிலவள வங்கியில் பெற்ற கடனுதவியால் பாசன வசதி பெருக்கி, தனது நிலத்தில் அமோக விளைச்சல் கண்டார்.

**நவீன தொழில் நுட்பம்**

நம் நாட்டு விவசாயிகளில் பெரும்பாலோர் சிறு விவசாயிகளாகவே இருக்கின்றனர். அத்தகையவர்கள் அதிக விலையுள்ளதும், மிகுந்த குதிரைச் சக்தி கொண்டதுமான டிராக்டர்களை வாங்குவது இயலாது. விரும்பத் தக்கதும் அல்ல. எனினும், அந்தச் சிறு விவசாயிகள் கூட தங்கள் வேளாண்மையில் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை- உற்பத்தித் திறனைப் பெருக்கமுடியும். இதற்கு ஒரு சுலப வழி, 8 முதல் 10 குதிரைச் சக்தியுள்ள விசைக் கலப்பைகளை (பவர் டில்லர்) இவர்கள்வாங்கி உபயோகிப்பதாகும். இந்த விசைக் கலப்பைகளைக் கொண்டு டிராக்டர் செய்யும் எல்லா விவசாய வேலைகளையும் செய்து முடிக்கலாம். ஆழ உழுதல் வேண்டுமானால், டிராக்டரைப் போல் முடியாமல் போகலாம். இவற்றைக் கருத்தில் கொண்டு, நிலவள வங்கிகள், சிறு விவசாயிகள் விசைக் கலப்பைகள் வாங்க கடனுதவி செய்து வருகின்றன.

இவ்வாறு நிலவள வங்கிகள், விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு இயந்திர சாதனங்களுக்காக நிதியுதவி செய்து வருகின்றன. பம்பு செட்டுகள் பொருத்தவும், டிராக்டர்கள், விசைக் கலப்பைகள், மற்றும் கதிரடிக்கும் தானியங்களைத் தூற்றிப் பிரிக்கும் கருவிகள் ஆகியவை வாங்கவும் கடன்கள் வழங்கப்படுகின்றன. இதேபோல் கரும்பாலை போன்ற, விளைபொருள்களைப் பதனப்படுத்தி வேறு பண்டங்களாக மாற்றும் சாதனங்களுக்கும் கடன் தரப்படுகிறது. கடன் தொகை, அந்தந்தச் சாதனத்தின் விலையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக டிராக்டரும் உபகரணங்களும் வாங்க அதிகபட்சமாக ரூ. 75,000 கடன் தரப்படுகிறது. விலையில் 10 சதவிகிதத்தை, விவசாயிகள் பிணைத் தொகையாகத் தரவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, 5 சதவிகித பங்குத்தொகை அல்லாமல் எப்படியும் சாதனத்தின் விலையில் 90 சதவிகிதத்துக்கு உட்பட்ட அளவில் கடன் தொகை இருக்கும். கடனைத் திருப்பிச் செலுத்த ஏழு ஆண்டு அவகாசம் தரப்படுகிறது. இதற்கு வட்டி 10.5 சதவிகிதம். ஆனால் அதே சமயத்தில், பாசனக் காரியங்கள் நிலத்தைப் பண்படுத்தும் காரியங்கள் ஆகிய இருவகைக்கும் வட்டி 9.5 சதவிகிதமே. இது எல்லா விவசாயிகளுக்கும் பொருந்தும். எனினும், சிறு விவசாயிகளைப் பொறுத்த அளவில் மேற்குறிப்பிட்ட இருவகைக் காரியங்களுக்கு மட்டுமே அன்றி, எல்லா வகையான வளர்ச்சிக் கடன்களுக்கும் வட்டி விகிதம் 9.5 சதவிகிதமே.

நிலவள வங்கிக் கடன்கள், இவ்வளவு சுலப நியதிகளோடு தரப்படுவதால், இவற்றை வேளாண் பெருமக்கள் ஆர்வத்துடன் பயன்படுத்திக் கொள்வதைக் காணமுடிகிறது. 30.6.76 வரை ரூ. 178 கோடி அளவுக்கு, நிலவள வங்கிகள், கடன்களை



வழங்கி யிருக்கின்றன. இவற்றில் பெரும் பகுதி, சிறு பாசனக் காரியங்களுக்கும், பண்ணைச் சாதனங்கள் வாங்குவதற்குமே ஆகும். இவைதான், உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை புரியும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. இந்த முறையில், நம் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி 1965-66ல் 58.32 இலட்சம் டன்களாக இருந்ததை, 1975-76 ல் 77.71 இலட்சம் டன்களாக உயர்த்திய சாதனையில் நிலவள வங்கிகளுக்கும் உரிய பங்குஉண்டு.

**பாசன வசதிப் பெருக்கத்தில் நிலவள வங்கிகளின் பங்கு:**

கடந்த ஏழு ஆண்டுக் காலத்தில் நிலவள வங்கிகளின் கடனுதவி பெற்று எடுக்கப்பட்ட கிணறுகள் 56,525.

இக் கிணறுகள் மூலம், கூடுதலாகப் பாசன வசதி பெற்றுள்ள சாகுபடி நிலங்கள் சுமார் 1,47,000 ஏக்கர்கள்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு மட்டுமல்லாமல், பொதுவாக விவசாய உற்பத்தி, பல முனைகளிலும் செழிப்படையச் செய்வதற்காக, தோட்டப்பயிர் சாகுபடி, வணிகப் பயிர்ச் சாகுபடி முதலிய இனங்களுக்கும் நிலவள வங்கிகள் கடனுதவி புரிந்து வந்துள்ளன. பாபி, தேயிலை, திராட்சை, லவங்கம், கொக்கோ, ரப்பர், தென்னை போன்ற பயிர்கள் சாகுபடிக்கும் கடன்கள் அளிக்கப்பட்டு வந்துள்ளன.

சிறுபாசனக் காரியங்களுக்கு, நிலவள வங்கிகள் செய்து தருகின்ற, சுலபத் தவணைக் கடன் வசதியை, தமிழகம் எங்குமுள்ள விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு விட்டனர். அதையொட்டி, கடந்த சில ஆண்டுகளில் ஏராளமான



பூவிருந்தவல்லி நடுத்தர விவசாயி திரு நாராயணசாமி, நிலவள வங்கிக் கடனுதவியால் டிராக்டர் வாங்கிச் சாகுபடியில் சாதனை புரிந்திருக்கிறார். படத்தில், நடுவே நிற்பவர் திரு. நாராயணசாமி.

கிணறுகள் தோண்டப்பட்டு பம்பு செட்டுகளும் பொருத்தப்பட்டன. இதன் பலனாக, பல்லாயிரக்கணக்கான நிலங்கள், புதிதாக, நிரந்தர சாகுபடிக்கு வந்திருக்கின்றன. இந்த முறையில் நமது மாநிலத்தில் ,நிலத்தடிநீர் உச்ச அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டுவிட்டதால், சிறுபாசனக் காரியங்களுக்கு, மேற்கொண்டு உதவி புரிவதற்கான வாய்ப்பு குறைந்து வருகிறது.

இந்நிலையில், நிலவள வங்கி தனது பணிகளைப் புத்தம் புதிய துறைகளில், விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதன் பலனாக, விவசாயம் சார்ந்த பல்வேறு தொழில்களுக்கு, நிதியுதவி புரிவதற்கான திட்டங்கள், செயல்பட ஆரம்பித்திருக்கின்றன. இவற்றின்கீழ் பால்பண்ணை, கோழிப்பண்ணை ஆடு வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, மீன் வளர்ப்புபோன்ற புதிய துறைகளில் நிலவள வங்கிகள் அடி எடுத்து வைத்திருக்கின்றன. இதன்படி விவசாயத்தின் பல்வேறு முகப்புகளில் மட்டுமின்றி, விவசாயம் சார்ந்த பலப்பல துறைகளிலும் நிலவள வங்கிகளின் பணிகள் படர்ந்து வருகின்றன.

முழுக்க முழுக்க விவசாயக் காரியங்களுக்கே நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து டிராக்டர் வாங்குவதுவரை - நீண்டகால சுலபத் தவணையில், கடனுதவி புரிந்துவரும் ஒரே ஒரு நிறுவனம் நிலவள வங்கியே. பணியாலும், பாங்காலும், நிலவள வங்கி, விவசாய வங்கி மட்டுமல்ல -விவசாயிகளின் வங்கியும் கூட!

## விவசாய இடுபொருள்கள் விநியோகத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பணி

4377 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், 106 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், 106 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமும், இரசாயன உரம் வழங்கப்படுகிறது. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் பயிர்ச் கடன்களில் ஒரு பகுதியாக இரசாயன உரங்களை வழங்குகின்றன. ரொக்க விற்பனை உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதாருக்கும், செய்யப்படுகிறது. 1978-79-ல் 38.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2.53 இலட்சம் டன் இரசாயன உரங்கள் விற்கப்பட்டன.


தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி அருகில் உள்ள பாமணியில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தில் நிறுவப்பட்டுள்ள ஆலையில் மணி உரம் தயார் செய்து மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்கப்படுகிறது.

சுமார் 6 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாயத்திற்குத் தேவையான இதர பொருட்கள் இச்சங்கங்களில் வழங்கப்படுகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிச் சங்கம் பயிர்ப்பூச்சி கொல்லி மருந்துகளும், தெளிப்பான் போன்ற கருவிகளும் தயார் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது.

துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிச் சங்கமும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து, 170·50 இலட்சம் ரூபாய் செலவில் நெல், பருத்தி, வேர்க்கடலை, தானியங்கள், பயிறு வகைகள், தரமான விதைகளைப் பெருக்குவதற்கான விதை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகின்றது.

# சமூகத்தில் நலிவுற்றோர்க்கு தமிழக அரசின் சமூகநலத் திட்டங்கள்



DIPR/53415/79

## உடல் ஊனமுற்றோர் நலத் திட்டங்கள்

| எண். | திட்டங்கள் | பயன்பெற நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் |
|---|---|---|
| 1. | முச்சக்கர வண்டிகள் வழங்குதல் | இரு கால்களிலும் சக்தியை இழந்த உடல் ஊனமுற்ற ஏழைகள். |
| 2. | செவிபுலன் கருவிகள் வழங்குதல் | பள்ளி செல்லும் காது கேளாத ஏழைச் சிறுவர் சிறுமியர். |
| 3. | குழந்தைகளுக்கு செயற்கை உறுப்புகள் வழங்குதல். | இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள். |

● பயன்பெற விரும்புவோர் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகலாம்.

| | | |
|---|---|---|
| 4. | சுயவேலை வாய்ப்புக்காக பெட்டிக்கடை மற்றும் சிறுதொழில் நடத்த குறைந்த வட்டி விகிதத்தில் வங்கி மூலம் கடன் வசதியளித்தல். | உடல் ஊனமுற்ற ஏழைகள். |
| 5. | காதுகேளாத பெண்களுக்கு தையல் பயிற்சியும் உடல் ஊனமுற்ற பெண்களுக்கு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி அளித்தல். | 18 முதல் 40 வயது வரையுள்ள காதுகேளாத பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்கள். |
| | பல்வேறு பணித்துறைகளில் பயிற்சி பெற்ற 1438 உடல் ஊனமுற்ற ஒவ்வொருவருக்கும் ஓராண்டுக்கு மாதம் ரூ.150 - வீதம் பயிற்சி உதவித் தொகை அளித்து தனியார்த்துறை மற்றும் அரசுடைமையாக்கப் பட்ட தொழில்துறைகள் நிறுவனங்களில் வேலை வாய்ப்பளித்தல். | பல்வேறு பணித்துறைகளில் பயிற்சி பெற்று, வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலை வாய்ப்பின்றி இருக்கும் உடல் ஊனமுற்றோர். |
| 6. | ஒய்வூதியம் வழங்குதல். | 45 வயதுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்ற ஏழைகள். |

● பயன்பெற விரும்புவோர், சென்னையில் சமூக நலத்துறை இயக்குநர், சென்னை-35யும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களையும் அணுகலாம்.

## விதவைகள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலத் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1. | இலவச பாட புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் வழங்குதல். | ஆண்டு வருமானம் ரூ. 3000/-க்கு குறைவாகவுள்ள விதவைகளின் குழந்தைகள் (பள்ளியில் படிப்போர் மட்டும்) |
| 2. | பெண்களுக்கு தட்டச்சுப் பயிற்சியளித்தல். | ஆண்டு வருமானம் ரூ. 3000/–க்கு குறைவாக வுள்ள குடும்பத்தைச் சேர்ந்த 16 முதல் 30 வயது வரையுள்ள பெண்கள். |
| 3. | மறுமணம் புரிந்த விதவை மற்றும் அவரை மணம் புரிந்தவருக்கு ரூ. 5000 -க்கான சேமிப்பு பத்திரம் வழங்குதல். | 18 முதல் 30 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைகள். |
| 4. | பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்குதல். | 20 முதல் 40 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்கள். |
| 5. | தையற்தொழில் தெரிந்த பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்தல். | சொந்தமாக அல்லது வாடகை அடிப்படையில் தையல் இயந்திரம் வைத்துள்ள தையற் தொழில் தெரிந்த ஏழைப் பெண்கள். |
| 6. | ஆதரவற்றவிதவைகள் மற்றும் அவர்களது குடும்ப நபர்களை வைத்து மனைமாட்சி பொருட் கள் உற்பத்தி செய்தல் | ஆதரவற்ற விதவைகள் அல்லது அவர்களது குடும்ப நபர்கள். |
| 7. | ஆதரவற்ற மகளிர்க்கு எளிதான குடிசைத் தொழில் களில் பயிற்சி அளித்தல். | ஏழைப் பெண்கள். |

● பயன்பெற விரும்புவோர் மாவட்ட சமூகநல அலுவலர்களை அணுகலாம்.

| | | |
|---|---|---|
| 8 | ஒய்வூதியம் வழங்குதல். | 45 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விதவைகள். |

● பயன்பெற விரும்புவோர் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகலாம்.

இயக்குநர், சமூக நலத்துறை, சென்னை.

# செழிக்கும் சிறு தொழில்



தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது:

பிற்பட்ட பகுதி மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டி ஒதுக்கீடு செய்தல்.

சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் கட்டி கிராமப்புற வேலை வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வது.

சின்னஞ்சிறு தொழில்களுக்கு முன் முதலீட்டுத் தொகை உதவி அளித்தல்.

புது சிறுதொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் அளித்தல்.

15% மத்திய அரசின் முதலீட்டு மானியம் பிற்பட்ட பகுதிகளில் உள்ள சிறு தொழில்களுக்குஅளித்தல்.

விற்பனைஉதவி அளித்தல்.

சிறு தொழில்களுக்குத் தொழிற்கூடங்கள் கட்டி அதனைத் தொழில்முனைவோருக்குத் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் அளித்தல்.

தொழிற் பேட்டைகள் அமைத்து அதில் வளர்ச்சி செய்யப்பட்ட தொழில் மனைகளை சிறுதொழில்களுக்கு ஒதுக்கிடு செய்தல்.

சிறு " தொழில்களுக்குத் தேவையான இயந்திரத் தளவாடச் சாமான்கள் குத்தகைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் 'சிட்கோ' மற்றும்தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கூட்டு முயற்சியில் அளித்தல்.

இன்றியமையாத மற்றும் தட்டுப்பாடு உள்ள மூலப் பொருள்களை வாங்கி சிறு தொழில்களுக்குப் பகிர்ந்து அளித்தல்.

மேலும், சிறு தொழில்களுக்கு ஒரே இயக்கத்தின் மூலம் உதவிகள் தர வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகளை 'சிட்கோ' நிறுவனமே நிர்வகித்து வர தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தொடக்கத்திலிருந்து'சிட்கோ' தட்டுப்பாடுள்ள மூலப்பொருள்களைக் குறிப்பாக இரும்பு மற்றும் எஃகுப் பொருள்களைவாங்கி அவைகளை வினியோகிக்க ஏற்பாடு செய்து வருகிறது.

மூலப் பொருள்களான இரும்பு கோக்கரி, தீக்குச்சி மெழுகு மற்றும் வத்தி மெழுகு, பொட்டாசியம் குளோரேட், பாம் ஆயில் முதலியவைகளைச் சுமார் 4000 சிறு தொழில்களுக்கு விநியோகித்து வருகிறது.

சிட்கோவின் மூலம் குறிக்கோளுக்கு இணங்க சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக, குறிப்பாக கிராமப்புற, பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட திட்டங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது.

சிட்கோ இதுவரை 505 சின்னஞ்சிறு தொழிற்கூடங்களை சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டி கொடுத்துள்ளது. ஒரு தொழிற்கூடத்தின் மதிப்பு சுமார் ரூ7,600. இத்திட்டம் 78-79ஆம் ஆண்டு முதல் பாரத் ஸ்டேட் வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு காணப்படுகிறது.

**சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற் கூடங்கள்:**

சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள் கட்டத் திட்டமிட்ட போது குறிப்பிட்ட சில தொழில்களுக்காக தொழிற்கூட வடிவமைப்புகள் செய்யப்பட்டன. அவ்வாறு செய்யும் பொழுது சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் கட்டி கிராமப்புறங்களில் அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டது. குறிப்பாக பாரம்பரியமாக தீப்பெட்டி உற்பத்தி செய்யாத மாவட்டங்களில் மேற்படி கட்டடங்கள் எங்கு அதிகமாகத் தொழிலாளர்கள் அதிலும் குறிப்பாக பெண் தொழிலாளர்கள் இடைப்பார்களோ அப்பகுதியில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற்கூடமானது 18 பெண்கள் உட்பட 20 நபருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு 100 சின்னஞ்சிறு தொழிற்கூடங்களை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் கட்டி அதற்காக ஒரு பணி தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைத்து தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களை வாங்கி விநியோகித்து தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளை விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. 313 சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற்கூடங்கள் மதுரை, தருமபுரி மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தொழில் முனைவோர் சுமார் 5000 ரூபாய் மூலதனத்தில் அதிகப்படியாக இலாபம் ஈட்ட வாய்ப்புகள் உள்ளன. இத்தொழிற்கூடங்களுக்கு தேவையான மூலதனம் சுமார் 16,000 ரூபாயை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தவணைக் கடனாக கொடுக்க முன்வந்துள்ளது. மேற்படி திட்டத்திற்குத் தேவையான நிலங்களை தேர்ந்தெடுப்பதையும் மற்ற ஒருங்கிணைப்பு வேலைகளையும் சிட்கோ செய்து வருகிறது.

**முதலீட்டு முன்பணம் வினியோகம்:**

'சிட்கோ' 1978ஆம் ஆண்டு முதல் இப்புதிய திட்டத்தினை அமல்படுத்தி கிராமப்புறங்களிலுள்ள சின்னஞ்சிறு தொழிற் கூடங்களுக்கு முதலீட்டு முன் பணம்கொடுத்து உதவிவருகிறது.

**மத்திய முதலீட்டு மான்யம்:**

1.4.74 முதல் 31.3.79 வரை 639 தொழிற் கூடங்களுக்கு 214.99 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது. சென்ற இரண்டாண்டுக் காலத்தில் மட்டும் 432 தொழிற்கூடங்களுக்கு 124.35 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**விற்பனை வரிக் கடன்:**

தமிழ்நாட்டில் முதன் முறையாக ஏற்படுத்த இருக்கும் சிறு தொழில்களுக்கான இத்திட்டம் புதிய தொழில் தொடங்குபவருக்கு உதவி அளிக்க வகை செய்துள்ளது. குறைந்த பட்சம் ஆண்டிற்கு ரூபாய் 10,000 முதல் 1.25 இலட்சம் வரை விற்பனை வரிகட்டும் தொழில் அதிபர்கள் மேற்படி திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம். ஆனால் மேற்படி சிறு தொழிற்கூடம் மக்கள் தொகை இலட்சத்திற்கு மேற்படாமல் உள்ள ஊர்களில் இருத்தல் வேண்டும்.

**விற்பனை உதவி:**

சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு மிக முக்கியமான உதவிகளில் ஒன்று விற்பனை உதவி. எனவே 'சிட்கோ' சிறுதொழில்களுக்கு விற்பனை உதவித் திட்டம் ஒன்றைத் தீட்டி அதன்படி 1976-77 ஆண்டு முதல் மேற்படி திட்டத்தை அமலாக்கி வந்தபோதிலும் 1977-78 லிருந்துதான் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 1978-79 ஆம் ஆண்டு சுமார் 26 லட்சம் பெறுமானமுள்ள 26 சிறு தொழிலகங்களில் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்துள்ளது. புதிய கல்வி (10+2) திட்டத்தின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளுக்கு தேவைப்படும் ஆய்வுக்கூடத் தளவாடங்களை வாங்கி வழங்கும் பொறுப்பைத் தமிழக அரசு, இந்நிறுவனத்தின் விற்பனை உதவி திட்டத்தின் கீழ் கொடுத்துள்ளது. மேற்படி திட்டத்தை அரசுத் துறைகள் மற்றும் அதிகப்படியாக பொருள்கள் வாங்கக் கூடிய மின்வாரியம், வீட்டு வசதி வாரியம் முதலியவைகளுக்கும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் இவ்வாண்டு சுமார் 260 லட்சம் பெறுமானமுள்ள சிறுதொழில்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிட்கோவின் புதிய தொழிற் பேட்டைகள்:**

எட்டு தொழிற்பேட்டைகளில் 315 தொழிற் கூடங்களையும், தொழில் முனைவோர்களின் நிலத்தில் 127 தொழிற் கூடங்களையும் சிறுதொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. 1977-78 முதல், நிர்மாணிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிற்கூடங்கள் 532 ஆகும். இதற்கு முன் இந்த அளவில் இந்த நிறுவனத்தின் மூலமாகவோ தொழில் இயக்குநர் மூலமாகவோ வழிவகை செய்யப்படவில்லை.

'சிட்கோ' 'சென்னை பெருநகர் வளர்ச்சி நிறுவனத்தார் ஒருங்கிணைப்புடனும் உலக வங்கி உதவியுடனும் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் தொழிற்கூடங்களை கட்டி தவணை கொள்முதல் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுசெய்யத் திட்டமிட்டுள்ளது.

இதில் மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்னவென்றால் 'சிட்கோ' ஆரம்பித்து 6½ ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றத்தைக்காட்டிலும் கடந்த இரண்டாண்டுகளில் அடைந்த முன்னேற்றம் இரு மடங்காகும். மேற்படி முன்னேற்றத்திற்குக் காரணம் புதிய திட்டங்களை உருவாக்கிச் செயலாற்றி வருவதே.



## கிராமங்களில் குடிநீர் வழங்க தீவிர நடவடிக்கை

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்தும், குடிநீர் உட்பட எல்லா வசதிகளையும் பெற வேண்டுமென்ற அடிப்படையில் ஊர்வளர்ச்சித் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது.

இந்த அடிப்படையில் 69 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கும் பிரச்சினை பற்றி அரசு மேலும் ஆராய்ந்து இவ்வூராட்சி ஒன்றியங்களில் எங்கெங்கு குடிநீர்த தட்டுப்பாடு காணப்படுகிறதோ, அவை எப்பிரிவைச் சேர்ந்த சிற்றூர்களாயினும் அங்கெல்லாம் உடனடியாகத் தட்டுப்பாடுகளை நீக்கி குடிநீர் வழங்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இப்பிரச்சினையை தீர்க்க மாவட்ட ஆட்சியாளர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அவைகள்நிறைவேற்றப்படுவதில் இடைஞ்சலோ, ஐயமோ ஏற்படின் உடனடியாக, "நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்" மூலமாக அரசுடன் தொடர்புகொண்டு, தெளிவு பெற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் உடனடியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.



சென்னை பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ரெயில் பெட்டிகள், தாய்லாந்து, பர்மா, தைவான், சாம்பியா; பிலிப்பைன்ஸ், டான்சானியா, உகண்டா ஆகிய வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இதனால் பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரெயில் பெட்டிக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. வேண்டுகோள்களும் வந்து குவிந்தவண்ணமாக உள்ளன. ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கென்று இந்திய ரெயில்வே நிர்வாகம் 750 ரெயில் பெட்டிகளுக்குக் குறையாமல் அனுப்பி வருகிறது.

# வியட்னாமிற்கு பெரம்பூர் ரெயில்பெட்டி ஏற்றுமதி



கடந்த 25 ஆண்டுகளாக இது போன்ற நற்பணியைச் செய்து வரும் 'ஐ.சி.எப்.' இந்த முறையும் 25 ரெயில் பெட்டிகளை வியட்நாம் நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளது.

இதனையொட்டி பெரம்பூர் தொழிற்சாலையில் *14.12.79*ல் நடைபெற்ற விழாவில் பங்கேற்ற மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், "உலக நாடுகள் புகழும் அளவுக்கு இத்தொழிற்சாலை சிறந்து விளங்குகிறது பெரம்பூர் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் ரெயில் பெட்டிகளின் தரத்தினால் இந்தியாவுக்கு மேலும் பெருமை கிடைக்கிறது." என்று பெருமிதத்தோடு பாராட்டினார்கள்.

1978-79-ஆம் ஆண்டில் ரூ. 45 கோடி மதிப்புள்ள 752 ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டதாக "ஐ.சி.எப்" பொது மேலாளர் திரு எல். ஆர். கொசென்யன் வரவேற்புரையாற்றும்போது குறிப்பிட்டார்.

# பட்டுத் தொழிலை ஊக்குவிக்கும் புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டம் ஒரு சிறிய மாவட்டமாயினும் விவசாயம் மற்றும் தொழில் முன்னேற்றங்களுக்கு அதிக வாய்ப்புள்ள மாவட்டமாகும். எனவே, இம் மாவட்டத்தில் வரும் 5 ஆண்டுகளில் மொத்தம் 2,000 ஏக்கரில் பட்டுப்பூச்சி வளர்ப்புக்கு முசுக்கட்டைச் செடி பயிரிடும் திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் முசுக்கட்டைச் செடி பயிரிட 150 ஏக்கர்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 184 ஏக்கர் பரப்பளவில் பயிரிடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 230 விவசாயிகள் ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர். முதலில் சோதனை முயற்சியாக விவசாயி ஒருவருக்கு ஒரு ஏக்கர் என்ற விகிதத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேர்தெடுக்கப்பட்ட பகுதிகள் அனைத்தையும் பட்டுத் தொழில் உதவி இயக்குநரால் பார்வையிடப்பட்டு, அப்பகுதிகள் யாவும் ஏற்ற இடமாகவும், பட்டு உற்பத்திக்கேற்ற இயற்கை வளம் பொருந்திய பகுதிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பட்டுத்தொழில் துறையினரால் மூன்று



மாதக் காலத்திற்குப் பயிற்சிகள் கொடுப்பதுடன் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் உதவித்தொகையும் வழங்கப்படும்.

முசுக்கட்டைச் செடி வளர்ப்புக்குத் தேவையான குச்சிகளை வெளியிடங்களிலிருந்து லாரி மூலம் வரவழைக்கும் பொறுப்பைப் பட்டு வளர்ப்புத்துறையினரே ஏற்றுக்கொண்டுள்ளனர். பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்க மாவட்டத் தொழில் மையம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயியும் ரூ.1,200 வரை மானியத்தொகை பெற வாய்ப்பும் வசதியும் உண்டு. 1980-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை 300 ஏக்கரில் செயலாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உருவாக்கப்படும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய வசதியாக விற்பனைக்கூடம் ஒன்று காரைக்குடிக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இலாபத்துடன் கூடிய கவர்ச்சிகரமான இத்திட்டத்தைச் செயல்படுத்த இம்மாவட்ட மக்களிடம் மிகுந்த ஆர்வமும், வரவேற்பும் காணப்படுகிறது.



# மாணவர்களுக்கும் கூட்டுறவு!



கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களின் ஒரு பிரிவு மாணவர்களுக்கெனத் தனியே இயங்கி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அமைக்கப்பட்ட 1,746 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட, 2,147 கூட்டுறவு பண்டகசாலைகள் மாணவர்களின் சேவையில் தம்மை ஈடுபடுத்தியுள்ளன. இவற்றில் 152 பண்டகசாலைகள் கல்லூரி மாணவர்களுக்காகவும், 1,995 பண்டகசாலைகள் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காகவும் இயங்கி வருகின்றன.

மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களையும், நோட்டுப்புத்தகங்களையும், மற்றும் எழுதுபொருட்களையும் நியாயமான விலையில் விற்பதும், தட்டுப்பாடுள்ள சில நுகர் பொருட்களைச் சரியான விலைக்கு வாங்கி, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதும் இம் மாணவர் பண்டகசாலைகளின் முக்கிய குறிக்கோளாகும். இவ்வகைப் பொருட்களை இப்பண்டகசாலைகள் ஓர் ஆண்டில் சுமார் 179 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை செய்கின்றன.


அரசு பாடப் புத்தகங்களை மாணவர்களுக்குக் குறிப்பிட்ட விலைக்கு விற்பதில் மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 237 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு விற்பனை செய்தது இப் பண்டகசாலைகள், நடப்பு ஆண்டில் இது வரை 244 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்களை விற்பனை செய்துள்ளன.

மாணவர்களுக்குக், குறைந்த விலையில் மதிய உணவு வழங்கும் குறிக்கோளுடன் 28 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் பொது சமையற்கூடங்களை நடத்தி வருகின்றன.

பள்ளிப் பருவத்திலேயே கூட்டுறவுத் தத்துவங்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைகளையும் அறிந்து, பிற்காலத்தில் நல்ல கூட்டுறவாளர்களாக விளங்க மாணவர்களுக்கு இப் பண்டகசாலைகள் வாய்ப்பளிக்கின்றன.

அரசு விநியோகிக்கும் கட்டுப்பாட்டு விலைக் காகிதத்தில், மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தேவைப்படும் நோட்டுப் புத்தகங்களைத் தயார் செய்யும் நிலையம் ஒன்று நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட உள்ளது. இதுவரை மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை இல்லாத பள்ளிகளில் புதிய கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் துவக்கும் திட்டமும், மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் செவ்வனே நடைபெறுவதைக் கண்காணிப்பதற்காகப் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சிறப்புக் குழு ஏற்படுத்துவதற்கான திட்டமும் பரிசீலனையில் உள்ளன.

# அவசரத் தேவைக்கு நகை ஈட்டுக் கடன்!



சமீபத்தில் கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாகத் தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகியுள்ளது. இதனால் ஏற்பட்ட நிதி வசதிக் குறைவை, முடிந்த அளவு தீர்ப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் தம்மை ஈடுபடுத்தி, தங்க நகைகளின் பேரில் கடன்களை அதிக அளவில் வழங்கி வருகின்றன. 911 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும், மத்திய-மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் 339 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் ஆக 1378 கூட்டுறவு அமைப்புகள் நகைக் கடன்களை வழங்குகின்றன. இவ்வகை அமைப்புகளின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளதால், நகர்ப்புறங்களிலேயல்லாது, கிராமப்புறங்களிலும் உள்ள மக்கள் தம் தேவைகளைத் தம் இருப்பிடத்திற்கு மிக அருகிலேயே பெற ஏதுவாகியுள்ளது.

சவரன் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் நகைக் கடன் கொடுத்து வந்த கூட்டுறவுச் சங்கங்கள், தற்போது 500 ரூபாய் வீதம் கொடுத்து வருகின்றன. ஒரு நபர் பெறக் கூடிய நகைக் கடனின் உச்ச அளவும் 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் வழங்கப்பட்ட நகைக் கடன்களின் அளவு கீழே காட்டியபடி அதிகரித்து வந்துள்ளது :—

| ஆண்டு | | வழங்கப்பட்ட நகைக் கடன்கள் |
|---|---|---|
| 1976—77 | ... | ரூ. 40.10 கோடி |
| 1977—78 | ... | ரூ. 50.77 கோடி |
| 1978—79 | ... | ரூ. 79.17 கோடி |

நடப்பு ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 90 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன்கள் வழங்க உள்ளன.

# புனித லூயிஸ் நிலையம்

அழகுமிகு அடையாற்றின் மத்தியில் காட்சியளிக்கிறது புனித லூயிஸ் பள்ளி. 1962ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள் இப்பள்ளி துவங்கியது. மலரை நாடும் வண்டுகள்போல இப்பள்ளியை நோக்கி மாணவச் செல்வங்கள் குவிந்தன.

**செவிடர் பள்ளி :**

ஒவ்வொரு மாணவரிடமும்-அணுகுமுறை - வியத்தகு செயலாகும். செவியின் குறையே உணர முடியாத அளவிற்கு-கல்வியைப் போதிக்கும் முறையை ஒருமுறை நேரில் கண்டவர்கள் மூக்கின் மேல் விரலை வைத்துக் கொள்வார்கள்.

ஊமை மொழி ஒரு பாவனை அதாவது செய்கை மொழி என்பார்கள். முயற்சியால் முடியாதது ஒன்றுமில்லை என்பதற்கேற்ப ஆசிரியர்களில் கடும் உழைப்பால் சராசரி பள்ளிப் பிள்ளைகளுக்குப் போதிப்பது போலவே - சொற்பொழிவுமுறையில் - சைகைகளைக் குறைத்து வாய்மொழியாகவே முடிந்த மட்டும் கற்பிக்கிறார்கள்.

**இயற்கல்வியும், தொழிற்கல்வியும்:**

இங்குக் கற்பிக்கப்படும் கல்வி மற்றைய பள்ளிகளைப் போல்-இயற்கல்வியும், தொழிற்கல்வியும் கொண்டே இயங்குதலைக் காணலாம்.

**இயற்கல்வி:**

இப்பிரிவில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, நிலநூல், அறிவியல், கணிதம், நல்லொழுக்கம் முதலியவற்றோடு உடற்பயிற்சியும் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது. உலக ஒலிம்பிக் போட்டிகளில் - இப்பள்ளி மாணவர்கள் பங்கேற்று பெருமைப்பெற்று வருகிறார்கள் என்பதை 1965-ஆம் ஆண்டு முதல் ஆதாரம் நிறைய உண்டு. 1965-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் என்னுமிடத்தில் நடந்த அகில உலக செவிடர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற பெருமை மாணவ திலகங்கள் கே. கஜேந்திரனையும், ஜான் பிரிட்டோவையும் சாரும்.

**தொழிற்கல்வி :**

இங்கே ஓவியம், தையல், அச்சு முதலியன - சிறப்பு அம்சங்களாகும். எடுத்துக்காட்டாக இவர்கள் ஓவியத்துறையில் எஸ்.பி.சி.ஏ. அவர்களால் நடத்தப்படும் வனவிலங்கு வார ஓவியப்போட்டிகளில் பரிசுகள் பெற்று வந்துள்ளதையும் கூறலாம்.

இங்கே அச்சுக்கோத்தல், பைண்டிங் செய்தல் போன்றவை கற்றுத் தரப்படுகிறது.

**அரசாங்கத் தேர்வு:**

1977-ஆம் ஆண்டில் இம்மாணவர்களும் எஸ்.எஸ்.எல்.சி அரசாங்கத் தேர்வில் பங்கேற்றனர். மேலும் 1978-ஆம் ஆண்டு எழுதிய தேர்வில் நூற்றுக்கு நூறு விழுக்காடுகள் வெற்றிபெற்றுளனர்.

**பார்வையற்றோர் பள்ளி :**

இங்கே புறக்கண்ணை இழந்தாலும் அகக்கண்ணால் தெளிவு பெற்றுத் திகழும் மாணவர்களைக் காணலாம். இங்கேயும் இயற்கல்வி, தொழிற்கல்வி என இரண்டு பிரிவுகள் உள்ளன. இம்மாணவர்களுக்கும் உடற்பயிற்சி தேவை என்பதால் இக்கல்வியையும் இங்கே தேவைப்படுகிறது.

இங்கே பிரெய்ல் என்ற மேடு, பள்ள எழுத்து முறைதான் பயன்படுத்த முடியும். ஏனெனில் இம் மாணவர்கள் எதையும் தொட்டுத் தொட்டுத் தான் உணரலாம். உணர்த்தவும் முடியும். இவ்வெழுத்து முறையை முதன் முதலில் உருவாக்கியவர் சூழ்நிலையில் பார்வை இழந்த ஒருவராவார். அவர் பெயரும் லூயி பிரெய்ல் ஆகும். இவர் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவர். காலம் 1809 -1852 ஆகும்.

**தொழிற்கல்வி :**

இதில், இசை, நெசவு, பிரம்பு வேலை போன்றவையும் உள்ளன. விழியிழந்த மாணவர்களின் அக உணர்ச்சிகளால் வெளிப்படுத்தும் ஆற்றல் இசைக்கு மட்டுமே உண்டு என்றால் மிகையாகாது. இங்குப் பணியாற்றும் இசையாசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் - தன்னையே ஒன்றவைத்துச் சொல்லிக் கொடுக்கும் காட்சியைக் காணலாம். நரம்புக் கருவியை இசைக்கக் கற்றுக் [illegible]ம்போது-நரம்பு என்றால் என்ன? அதில் சுருதி எவ்வாறு சேர்ப்பது? எங்கு அழுத்தினால் என்ன [illegible]சை எழும் என்பவற்றோ[illegible] ஆரோகணத்தையும் அவரோகணத்தையும் சொல்லித்த[illegible] [illegible]கினை வாய் விட்டுச் சொ[illegible] முடியாது.

**நெசவு:**

விழியிழந்த மாணவர்கள் மனத்தை மயக்கும்-புதுப்புது டிசைன்களில் - படுக்கை விரிப்புகளும்-மற்றும் துண்டு -துவலை போன்றவற்றை- நெய்கிறார்கள். இவ்வாறு இம்மாணவர்களால் நெய்யப்படும் ஆடைகள் யு.டி.ஐ. பூம்புகார் போன்ற நிலையங்கள் மூலம் மேலை நாடுகளுக்கும் கீழைநாடுகளுக்கும் சென்று நம் கைத்திறமையைப் பேசிக்கொண்டிருப்பதைக் பெருமையோடு கூறலாம்.


**பிரம்பு வேலையும் பிளாஸ்டிக் ஒயரும்:**

பிளாஸ்டிக் ஒயரினைக் கொண்டும், பிரம்பு நார்களைக் கொண்டும் நாற்காலி முதலியவற்றை இம்மாணவர்கள் பாங்குடன் அமைப்பதைக் காணலாம்.

இம்மாணவர்கள் 1969 முதல் சராசரி மாணவர்கள் போலவே எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்குச் செல்கிறார்கள். திருத்துவோருக்குப் பிரெய்ல் தெரியாத காரணத்தால், ஒவ்வொரு மாணவருக்கு ஸ்கிரைபர் அமர்த்தப்படுகிறார்கள். இதுநாள் வரை சராசரி நூற்றுக்கு நூறு விழுக்காடுகளும் வெற்றி பெறுகின்றனர்.

இங்கே பெரும்பாலான மாணவர்கள் விடுதியில் தங்கியே படிக்கின்றனர். இங்குப் பள்ளிக்கு மகுடம் வைத்தாற்போன்று 'புனித லூயிஸ் அச்சகம்' அமைந்துள்ளது பெருமைக்குரியதாகும். இங்கே எல்லாவிதச் சிறப்பு அச்சுகளும் செய்யப்படுகின்றன. இவ்வாறு பலவகையிலும் சிறந்து விளங்குகிறது இப்பள்ளி.





# நலிந்த பிரிவினரும் கூட்டுறவும்!

கூட்டுறவு இயக்கம் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்தில் தனி ஈடுபாடு கொண்டுள்ளது. இவ் வகையினரின் நலனுக்காகத் தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள், உப்பளத் தொழிலாளர் . கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை இவற்றில் குறிப்பிடத் தக்கவை.

**தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் :**

நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் உள்ள நலிந்த பிரிவினரில் பெரும்பகுதியினர், நல்ல வேலை வாய்ப்பு இன்றி, இடைத்தரகர்களால் ஏமாற்றப்படும் அவல நிலையில் உள்ளனர். தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இடைத்தரகர்களை விலக்கி, உறுப்பினர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ்வகைத் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் 110 அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 20,000 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வுறுப்பினர்கள் அவர்களது சங்கங்களில் சுமார் ஐந்து இலட்சம் ரூபாயைப் பங்கு மூலதனமாகச் செலுத்தியுள்ளனர். இச்சங்கங்கள் சுமார் 122 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஒப்பந்தப் பணிகளை நிறைவேற்றியுள்ளன. இச்சங்கங்களின் மூலம் அவற்றின் உறுப்பினர்கள் சுமார் 60 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஊதியம் பெற்றுள்ளனர்.

இச் சங்கங்களுக்கு ஒப்பந்தப் பணிகளைத் தருவதில், சில சலுகைகளை அரசு அளித்துள்ளது.

**சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள் :**

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் தங்களுக்கெனச் சொந்த வண்டிகளை வைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கெனத் தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தம் உறுப்பினர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கும்.

இவ்வகைச் சங்கங்கள் சென்னையில் ஒன்றும் திண்டுக்கல்லில் ஒன்றுமாக இரண்டு உள்ளன. சென்னையில் உள்ள சங்கம், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெற்று 104 சைக்கிள் ரிக்ஷாக்களை சுலபத தவணை முறைத் திட்டத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது. திண்டுக்கல்லில் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் அரசிடமிருந்து நிதி உதவி பெற்று, ஐம்பது சைக்கிள் ரிக்ஷாக்களை உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளது. இன்னும் ஐம்பது சைக்கிள் ரிக்ஷாக்களை இச்சங்கம் தன் உறுப்பினர்களுக்கு வழங்க உள்ளது.

இது போன்ற சங்கங்கள் மேலும் பல இடங்களில் அமைக்கப்பட உள்ளன.

**சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :**

சலவைத் தொழிலாளர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன், தமிழ்நாட்டில் 18 சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 8,473 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் இச்சங்கங்களில் 1.87 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பங்குத் தொகை செலுத்தியுள்ளனர். தம் தொழிலுக்குத் தேவையான கருவிகளையும் மேசை போன்ற தளவாடச் சாமான்களையும் வாங்குவதற்காக உறுப்பினர்களுக்கு இச்சங்கங்கள் கடன்கள் வழங்கி வந்துள்ளன. இச்சங்

களே நவீன முறையில் உலர் சலவைப் பிரிவு அமைத்துத் தம் உறுப்பினர்களுக்கு நல்ல முறையில் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன், இச்சங்கங்களுக்கு அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

**முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் :**

முடி திருத்துவோர் நலனுக்காக 12 முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2,033 உறுப்பினர்கள் 76,000 ரூபாய் பங்கு மூலதனத்துடன் உள்ளனர். இவர்கள் தொழிலுக்குத் தேவையான கருவிகளையும் தளவாட சாமான்களையும் வாங்குவதற்காக இவர்களுக்குச் சங்கங்கள் கடன் வழங்கி வந்துள்ளன. இச்சங்கங்களே நவீன முடி திருத்தும் நிலையங்களை அமைப்பதற்கு இவற்றிற்கு அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

உப்பளத் தொழிலாளர்களுக்காக 11 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,863 உறுப்பினர்கள் 1.74 இலட்சம் ரூபாய் பங்குத் தொகையுடன் உள்ளனர். இவை ஆண்டொன்றுக்கு சுமார் 16 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உப்பைத் தயாரித்து வருகின்றன.

**கூட்டுறவு அச்சகங்கள் :**


கூட்டுறவு அச்சகங்கள் நலிந்த பிரிவினருக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. இவ்வகை அச்சகங்கள் தமிழ்நாட்டில் 16 உள்ளன. இவை ஆண்டொன்றுக்கு சுமார் 1.55 கோடி ரூபாய் அளவிற்கு அச்சு வேலை செய்து வருகின்றன.

# பணியாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள்

சிக்கனத்தையும் தன்னுதவியையும் தம் கோட்பாடாகக் கொண்ட பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில மற்றும் மைய அரசுப் பணியாளர்கள், வர்த்தகத் துறைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள், கல்லூரிகள் பள்ளிகள் ஆகியவற்றில் பணி புரியும் தொழிலாளிகள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. இவ்வகை மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்து அவர்களைத் தனியார்களின் அமித வட்டிப் பிடியிலிருந்து மீட்டு அவர்களுக்குத் தகுந்த முறையில் கடன்களை வழங்குவது இச் சங்கங்களின் தலையாய பணியாகும்.

பணியாளர்களின் ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு 50 காசிலிருந்து 50 ரூபாய்வரை அவர்களது சம்பளத்திலிருந்து மாதந்தோறும் சிக்கனச் சேமிப்பிற்காக இச்சங்கங்களால் கட்டாயமாகப் பிடிக்கப்படுகிறது. இந்த சந்தாத்தொகை முழுமையும் பின்னால் இட்டு வைப்பாக (Deposit) மாற்றப்பட்டு, அதற்குரிய வட்டியும் வழங்கப்படுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குக் கட்ட வேண்டிய சந்தாத் தொகையைக் கட்டுவதற்கும், கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் பங்குத் தொகை செலுத்துவதற்கும் இச்சிக்கன சேமிப்பிலிருந்து பணம் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது. இச் சங்கங்கள் சேகரித்த சுமார் 58 கோடி ரூபாய் இட்டு வைப்புத் தொகையில், சுமார் 50 கோடி ரூபாய் சிக்கன இட்டு வைப்புத் தொகையாகும் என்பதிலிருந்து, இச் சங்கங்கள் சிக்கனச் சேமிப்பிற்காக ஆற்றும் பணியின் பெருமை புலனாகும். குடும்பச் செலவு, வீட்டு மனை வாங்குதல், வீடு கட்டுதல், அல்லது புதுப்பித்தல், குழந்தைகள் கல்வி, மருத்துவச் செலவு மற்றும் திருமணச் செலவு நெடுநாட்கள் பயன்படும் பண்டங்கள் வாங்குதல் போன்ற காரியங்களுக்காக இச்சங்கங்கள் கடன்களை வழங்குகின்றன.

தமிழ்நாட்டில் பணியாளர்களுக்காக 1140 நாணயச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 8 இலட்சம் உறுப்பினர்கள் சுமார் 18 கோடி ரூபாய் பங்குத் தொகையுடன் சேர்ந்துள்ளனர். இச்சங்கங்கள் ஆண்டொன்றுக்குச் சுமார் 110 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்குகின்றன.




# செவிலியர் பயிற்சி பயிற்சியாளர் எண்ணிக்கை உயர்வு

மருத்துவமனையில் நோயாளிகளைச் சீரிய முறையில் கவனிப்பதற்குக் கூடுதலான தேவையைச் சமாளிக்க செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. தற்சமயம் 6 பயிற்சி நிறுவனங்களில், செவிலியர் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் ஆண்டொன்றிற்கு 300 பேர்கள் செவிலியர் பயிற்சி பெறுகிறார்கள். இவ்வாண்டு முதல், இப்பள்ளிகளில் கூடுதலாக 30 மாணவிகள் பயிற்சி பெற ஏதுவாக இடங்கள் உருவாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், 120 இடங்கள் அதிகமாக சென்னைப் பொது மருத்துவமனை, கஸ்தூரிபாகாந்தி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் உருவாக்கப்படும்.

மேலும், 1980-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் திருச்சிராப்பள்ளியிலும், சேலத்திலும் புதிய செவிலியர் பயிற்சி நிலையங்கள் திறக்கப்படும். ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டொன்றிற்கு 100 பேர் செவிலியர் பயிற்சி பெறுவர்.





# மலிவான எரிவாயுச் சாதனம்

**கே. ஆர். சுவாமிநாதன்**
தலைவர்.
**எஸ். காமராஜ்**
இணை ஆராய்ச்சியாளர்,
பண்ணை இயந்திரத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

நம் நாடு தன்னுடைய பல தேவைகளில் தன்னிறைவைப் பெற்ற போதிலும், சக்தித் தேவைகளில் தன்னிறைவைப் பெறமுடியாத நிலையில் இருக்கிறது.

சக்தித் தேவைகளில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் எரிபொருள் பெரும்பங்கு வகிக்கிறது. நாம் எரிபொருளை மண்ணெண்ணெய் அடுப்பு, விறகு அடுப்பு அல்லது காஸ் அடுப்பு போன்ற பல்வேறு முறைகளில் பயன்படுத்தி வருகிறோம். எல்லா மக்களும் எளிதாகவும், மலிவாகவும் பயன்படுத்தக்கூடிய எரிபொருள் உற்பத்திச் சாதனமே சாண எரிவாயுச் சாதனம்.

சாண எரிவாயுச்சாதனம் கண்டு பிடிக்கப்பட்டு அரை நூற்றாண்டுக் காலமாயினும் கிராமப் பகுதிகளில் , இன்றும் மாட்டுச் சாணத்தை விரட்டியாகத் தட்டி எரிபொருளாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். மேலும் நகர்ப் புறங்களில் இண்டேன் (Indane), புருசேன் (Brusane) போன்ற கொள்கலத்தில் அடைக்கப்பட்ட வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்திக் கொண்டுவருகிறார்கள்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட சாண எரிவாயுச் சாதனத்தைத் தேவையான சில மாறுதல்களுடன் மக்களுக்கு அமைத்துக் கொடுக்க முற்பட்டால் இதனை ஊக்குவிப்பதற்குப் பண உதவியும் மற்றும் சில சலுகைகளும் விரிவாகத் தேவைப்படுகின்றன. இதன் காரண காரியத்தை நாம் சிறிது ஆராய்ந்து பார்ப்போமேயானால் பின்வரும் உண்மைகளை நாம் தெளிவாக உணர முடியும்:

1 ஒரு சாண எரிவாயுச் சாதனத்திற்கு முதலீடு செய்யப்படும் தொகை ரூ.5000.

2 இன்று குறியீடிட்ட முதலீட்டிற்கு (Fixed Deposit) வங்கிகள் வழங்கும் வட்டி விகிதம் சுமார் 9 சதவீதம்.

3 ஆகவே, மாதம் வட்டி மூலம் ஆகும் செலவு ரூ. 37.50.

4 கொள்கலத்தில் அடைக்கப்பட்ட எரிபொருளுக்கு ஆகும் மாதச்செலவு ரூ35.

ஆகவே, பெரும்பாலான மக்கள் கொள்கலத்தில் அடைக்கப்பட்ட எரிபொருளை வரவேற்பதில் வியப்பேதுமில்லை.

**செய்ய வேண்டியது என்ன?**

கிராமங்களில் மாடுகளும், எருமைகளும் இன்னும் புழக்கத்தில் இருந்து வருகின்றன. உலகத்திலுள்ள மாடுகளின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பாகமான 24.5 கோடி மாடுகள் நமது நாட்டில் உள்ளன. இவற்றின்மூலம் சுமார் 1300 மில்லியன் டன்கள் அளவுள்ள மாட்டுச் சாணம் நமக்குக் கிடைக்கிறது. இம்மாட்டுச்சாணத்தில் மீதேன் (Methane) எனப்படும் எரிவாயு உள்ளடங்கி இருப்பதும் நமக்குத் தெரிந்ததே.

ஆனால் வரட்டியாகத் தட்டிய எரிபொருள் கொடுக்கும் வெப்பத்தை விட, சாண எரி வாயுச் சாதனம் அதிக அளவு வெப்பம்


கொடுப்பது மட்டும் இல்லாமல் சுற்றுப்புறங்கள் துப்புரவாக வைத்திருக்க வழிகோலுகிறது. மேலும், கொள்கலத்தில் அடைக்கப்படும் எரிவாயு கிராமங்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் இருப்பதோடு மட்டுமில்லாமல் நகரத்தின் தேவையையே சமாளிக்க முடியாத நிலையில் உள்ளது. இப்பிரச்சினையைச் சமாளிக்க சாண எரிவாயுச் சாதனத்தை எதிர்காலத்தில் மக்களிடையே புழக்கத்திலிருக்கச் செய்வது இன்றியமையாத ஒன்றாகும். இவ்வாறு செய்வதற்கு இதன் முதலீட்டுச் செலவைக் குறைக்க வேண்டியுள்ளது. இப்பளுவைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல கோணத்தில் தனது ஆராய்ச்சிக் கூடத்தில் ஆராய்ந்து ஒரு புதிய எளிய, மலிவான எரிவாயு சாதனத்தை உருவாக்கி உள்ளது. இப்படி உருவாக்கியுள்ள மலிவு எரிவாயுச் சாதனத்திற்கு ஆகும் செலவு ரூ.1300 ஆகும். இங்ஙனம் விலை குறையால் உருவாக்கப்பட்ட மலிவு எரிவாயுச் சாதனம் புழக்கத்திலிருக்கும் எரிவாயுச் சாதனத்திலிருந்து வடிவமைப்பிலும் வேலை செய்யும் முறையிலும் வேறுபட்டிருக்கிறது. இருப்பினும் இது பழைய எரிவாயுச் சாதனம் கொடுக்கும் பலனையே அளிக்கின்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு குறைந்த விலையில் உருவாக்கப்பட்டுள்ள எரிவாயுச் சாதனம் கிராமப்புறங்களில் நன்கு விரிவாக்கப்பட வேண்டும். இம்மாதிரி எரிவாயுச் சாதனம் செய்ய, செங்கல், கற்கள், சிமெண்ட் போன்ற மூலப் பொருட்களும், கட்டட வேலைக்காரர்கள், குழி தோண்டும் உடல் வலுவுள்ள வேலையாட்கள் போன்றவர்களும் தேவைப்படுகிறார்கள். இதனால் இன்று நிலவிவரும் மண்ணெண்ணெய் விறகு, காஸ் பற்றாக்குறை தீர்வதற்கு வழி வகுப்பதுடன் வேலை வாய்ப்பும் அதிகரிக்கப்படுகின்றன..

**எரிவாயுச் சாதன அமைப்பு முறை :**

2.5 மீட்டர் விட்டம் கொண்ட ஒரு குழியை 1.7 மீட்டர் ஆழம் தோண்டி அதற்குக் கீழே 0.45 மீட்டர் ஆழத்திற்கு வளைந்த அமைப்புக் கொண்ட வடிவில் அடித்தளத்திற்காகத் தோண்ட வேண்டும்

இரு பக்கங்களிலும் சாணத்தை உள்ளே நிரப்புவதற்கும் வெளியே எடுப்பதற்கும் வசதியாகத் தொட்டிகள் அமைப்பதற்குக் குழிகள் வெட்ட வேண்டும். உள் நிரப்பும் தொட்டியின்



அளவு 55×55×60 செ.மீ அளவாக இருப்பினும், 30 செ. மீ. விட்டம் கொண்ட குழாயை இணைப்பதற்குகந்த இடைவெளியைப் படத்தில் காட்டியபடி வகுக்க வேண்டும். செங்கற்சுவர் எழுப்புவதற்கு உதவியாகச் சிமெண்ட் காண்கிரீட் கலவையில் 7.5 செ.மீ. கனத்திற்கு 1:5:10 என்ற விகிதத்தில் தளம் அமைக்க வேண்டும். செங்கல் சுவர் எழுப்பப்பட்ட பிறகு மேலே மூடியாகப் பயன்படக் கூடிய கூடார அமைப்பைக் கம்பி வலை வேய்ந்த, சிமெண்ட் காண்கிரீட் கலவையால் உருவாக்க வேண்டும். மகுட மையத்தில் எரிவாயுவை வெளியே எடுப்பதற்கு ஒரு குழாயையும் அதற்கேற்ற செருகு குழாயையும் (Nipple) பொருத்த வேண்டும். சாண மட்டம் கூடாரத்திற்குக் கீழே இருக்கும்மாறு கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும். உற்பத்தியாகும் எரிவாயுக் கூடாரக் கொள்கலத்தில் சேமிப்படைந்து தேவையானபோது பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றது. சுமார் 5.7 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட வாயு கொள்கலனைச் சுமந்தவண்ணம் பூமிக்கடியில் அமைக்கப்படுகிறது. சுமார் 50 கிலோகிராம் சாணத்தைக் கரைத்து இச்சாதனத்தில் ஊற்றினால் சுமார் 1600 முதல் 2000 லிட்டர் எரிவாயு உற்பத்தியாகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக் கூடத்தில் சுமார் 45 முதல் 50 லிட்டர் எரிவாயு, ஒரு கிலோ சாணத்தில் இருந்து உருவாகியுள்ளது. நாளொன்றுக்கு நான்கு மணி நேரம் எரிவதற்குத் தேவையான எரிவாயு தயாரிக்க இயலும்.

சுமார் தொள்ளாயிரம் ரூபாய் மதிப்புள்ள சாமான்களும், ஆட்கள் கூலியாக ரூபாய் நானூறும் இச்சாதனத்தை அமைக்கத் தேவைப்படுகின்றன.

**இச் சாதனத்தால் உண்டாகும் நன்மைகள் :**

இச்சாதனம் பூமிக்குள்ளேயே அமைக்கப்படுவதால் அதில் மேலும் கீழும் நகரக்கூடிய பாகங்கள் ஏதும் இல்லை. ஆகவே, இச்சாதனத்தில் அழுத்தம் அதிகமாக மாறாத ஒரே கொள்ளளவு கொண்ட வாயுக் கொள்கலன், நெடுந்தூரத்திற்கு வாயுவினை எடுத்துச் செல்ல வாய்ப்பளிக்கிறது. இரும்போ உலோகமோ எங்கும் இல்லாததால் துருஎன்ற பிரச்சினையே எழுவதில்லை. மேல்பாகம் முழுவதும் மூடியபடி அமைக்கப்பட்டிருப்பதால் தொட்டிகள் இரண்டினைத்தவிர வேறெங்கும் சாணம் என்பது கண்ணுக்குப் புலப்படுவதில்லை

சாணத்தின் மட்டம் தரை மட்டத்திற்கு கீழே இருப்பதால் சுற்றுப்புறங்கள் அசுத்தப்படுவதும் குறைவாகிறது. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சியில் எரிவாயு உற்பத்தி ஒரு முக்கிய அம்சமாக விளங்குவதாலும், கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெற வாய்ப்பளிப்பதாலும் மலிவான விலையில் அமைக்கப்படுவதாலும், இத்தகைய மலிவு எரிவாயுச் சாதனங்களை நிறுவும் பணியில் கிராமப் பெருங்குடி மக்கள் மிக்க ஆர்வம் காட்டுவார்கள் என்பதில் யாதொரு ஐயமில்லை!





# குண்டு மல்லிகை

குண்டு மல்லிகை அதன் அழகு மற்றும் குறிப்பாக மணம் காரணமாக மிகச் சிறந்தது எனப் புகழ் பெற்றுள்ளது. மலரிலிருந்து நறுமண வாசனைத் திரவியம் தயாரிக்கப்படுவதால் இப்பொழுது அதன் முக்கியத்துவம இன்னமும் அதிகமாகியுள்ளது. இந்தச்செடி பதியம் போடும் முறையினால் இனவிருத்தி செய்யப்படுகிறது.

**தா. பாலஸ்**
துணைப் பேராசிரியர்
தோட்டக்கலைத் துறை
மதுரை வேளாண்மைக் கல்லூரி.

இச்செடியை அபிவிருத்தி செய்யும் புதியதொரு முறை மதுரை வேளாண்மைக் கல்லூரியின் தோட்டக்கலைத் துறையில் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் வாயிலாக உருவாக்கப்பட்டுள்ளது.

**வெட்டுத்துண்டுகள் தயாரிப்பு:**

இச்செடியின் கிளைகளில் கணு ஒன்றுக்கு இரு இலைகள் வீதம் அமைந்திருக்கும். கிளைகளை ஒரு வெட்டுத் துண்டுக்கு ஒரு கணுவும் இலைகளும் இருக்குமாறு துண்டுகளாக வெட்டவும். கணுவுக்கு மேல் அரை சென்டி மீட்டரும் அதற்குக் கீழே இரண்டு சென்டி மீட்டரும் இருக்குமாறு முடிந்தவரை வெட்டுத் துண்டுகள் அமையுமாறு வெட்டுவது நலம். இவற்றை அப்படியே வெட்டுத் துண்டுகளாகப் பயன்படுத்தலாம். அல்லது அவற்றை நீளவாக்கில் இரண்டாய்ப் பிளந்து இரண்டு புதிய செடிகள் உருவாக்கலாம். கிளைகளின் நுனிப் பாகத்தை ஒரு இணை முதிராத இலைகள் வெளியே இருக்கவும் ஒரு கணு மண்ணுக்குள் இருக்கவும் தக்கதாய் வெட்டி நட வேண்டும்.

**வெட்டுத் துண்டுகளை நடுதல்:**

பாலிதின் (250 கேஜ்) பைகளை (15 செ. மீ. நீளம் 12 செ. மீ. அகலம்) மணலால் நிரப்பவும். பைகளின் அடிப்பாதியின் பக்கவாட்டாக 2 அல்லது 3 சிறிய (3 மி.மி.) துவாரங்கள் இடவும். வெட்டுத் துண்டுகளை இலை மட்டத்துக்கு மேல் இருக்குமாறு பைகளின் உள் ஓரமாக நடவும்.

**இனவிருத்திக் குடில்:—**

இந்தப் பைகள் நிழலில், வெட்டப்பட்ட குழிகளில் (2X1+0.5 மீ) வைக்கப்பட்டு குழிகள் பாலிதினால் (250 கேஜ்) மூடப்படுகின்றன.

**பின்செய் நேர்த்தி:**

பகலில் சுமார் 3 மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீரைத் தெளித்துச் செடிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது. கைத் தெளிப்பான்கள் மூலம் குறைந்த விசையில் தெளிப்பது சாலச் சிறந்தது. இத்துண்டுகள் இருபது நாட்களுக்குள் வேர் விட்டு ஒரு மாதத்திற்குள்ளாக நடுவதற்கு ஏற்ற செடிகளாகத் தயாராகி விடுகின்றன. அநேகமாக எல்லாச் செடிகளும் வேர் விட்டு நடுவதற்கு ஏற்றவைகளாக வளர்ந்து விடுகின்றன.

பொதுவாகப் பழைய முறைப்படி 9 மாதக் குண்டு மல்லிச் செடியிலிருந்து 8 பதியன்கள் தான் கிடைக்கும். ஆனால் ஒரே செடியிலிருந்து சுமார் 500 புதிய செடிகளை இப்புதிய முறையினால் இனவிருத்தி செய்யலாம்.

பழைய முறையில் பதியம் போட சுமார் 1 மீட்டர் நீளம் உள்ள கிளை தேவை. ஆனால் ஒரு மீட்டர் குச்சியிலிருந்து 25 புதிய செடிகள் தயாரிக்கலாம். பழைய முறையில் பதியம்போட்டு செடி தயாரிக்க சுமார் 3 மாதங்களாகும். ஆனால் இப்புதிய முறையில் ஒரு மாதக் காலந்தான் தேவை. மேலும் இப்புதியமுறையில் மண்தொட்டியின் விலை தோட்டத்தில் பல பகுதிகளில் போடப்பட்ட பதியங்களுக்குத் தண்ணீர்விடும் செலவு போன்றவை குறைக்கப்படுகின்றன. ஏனென்றால் நட்ட செடித் துண்டுகள் (125 ச. மீ.) மிக நெருக்கமாக அடுக்கி வைக்கப்படுகின்றன. தண்ணீர் தெளிக்கும் செலவும் மிகக் குறைவு. தாய்ச் செடியானது முதிரவேண்டும் எனக் காலம் தாழ்த்தாது எப்போது வேண்டுமாயினும் புதிய செடி தயாரிக்க முடிவது இப்புதிய முறையின் தனிச் சிறப்பாகும்.



# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111


# சத்துணவுத் திட்டங்கள்




**திருமதி இராசம்மாள் பா. தேவதாஸ்,**
**இயக்குநர்—முதல்வர்**
**அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி**
**கோவை.**


உலகை மறக்க வைத்திடும் மழலையின் சிரிப்பு காணக் கிடைக்காத அரும்பெரும் செல்வமன்றோ? மழலையின் சிரிப்பைக் கண்டிட வேண்டுமாயின், அதிகாலை எழுகின்ற கதிரோன் தன் உறவில் அலர்கின்ற மலர் போன்ற வாழ்வை அவர்களுக்கு அளித்திட வேண்டும்.

ஆனால், இந்நாளின் மக்கட் தொகையில் பாதி பேர் பசி, அறிவின்மை, ஏழ்மை, நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். சத்துணவுப் பற்றி அறியாமல் வாடுகின்றனர். சத்துணவுப் பற்றாக்குறையால் ஒரு மில்லியன் குழந்தைகள் ஆண்டுதோறும் இறந்து விடுகின்றனர். பள்ளிச் செல்லும் குழந்தைகளில் 25 சத வீதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் சத்துக் குறை நோய்களால் தாக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்கி, அறிவுப் பசிக்கு வழிகோலவும், அன்றாட உணவில் இருக்க வேண்டிய உணவுச் சத்துக்களைப் பற்றியும், நோய்கள் வராமல் தடுக்க உணவியல் அறிவைக் குழந்தைகளுக்கும், மக்களுக்கும் போதிப்பதே சத்துணவுத் திட்டங்களின் நோக்கமாகும்.

குழந்தைகள் நல்ல உடல் வளர்ச்சி பெறக் கர்ப்பிணிகளுக்கு நல்ல மகப்பேறுஅமையப் பேறு காலத்தில் தாய் ஆரோக்கியமாயிருக்க, மகப்பேறு வெற்றிகரமாக அமைய, ஆரோக்கியமான குழந்தை பெற, சிறப்பான பாலூட்டுங்காலம் பெற சத்து

ணவுத் திட்டங்கள் உறுதுணை யாகின்றன. இப்பயன்களைக் கருத்தில் கொண்டு தமிழக அரசின் சமூக நலத்துறையினர் சத்துணவுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றனர்.

இன்று நமது நாட்டில் பல சத்துணவுத் திட்டங்கள் அமலில் உள்ளன. அவையாவன:

1. ஊட்ட உணவுத்திட்டம், 2. மதிய உணவுத்திட்டம். 3. தனி உணவியல் திட்டம். 4. உயிர்ச் சத்து 'ஏ' குறை, இரத்தசோகை இவற்றைத் தடுக்கும் உணவியல் திட்டம் 5. பல்வகை உணவியல் திட்டம் 6. ஒருங்கிணைந்த குழந்தை நல வளர்ச்சித்திட்டம்.

## 1980-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | செவ்வாய் | — | புத்தாண்டு நாள் |
| | 15 | செவ்வாய் | — | பொங்கல் |
| | 16 | புதன் | — | திருவள்ளுவர் நாள் |
| | 17 | வியாழன் | — | உழவர் திருநாள் |
| | 26 | சனி | — | குடியரசு நாள் |
| | 31 | வியாழன் | — | மீலாடி நபி |
| மார்ச் | 17 | திங்கள் | — | தெலுங்குப் புத்தாண்டு நாள் |
| ஏப்ரல் | 4 | வெள்ளி | — | நல்ல வெள்ளிக்கிழமை |
| மே | 1 | வியாழன் | — | மே நாள் |
| ஆகஸ்ட் | 13 | புதன் | — | ரம்ஜான் |
| | 15 | வெள்ளி | — | விடுதலை நாள் |
| செப்டம்பர் | 13 | சனி | — | விநாயகர் சதுர்த்தி |
| அக்டோபர் | 2 | வியாழன் | — | காந்தியடிகள் பிறந்தநாள் |
| | 18 | சனி | — | ஆயுத பூஜை |
| | 21 | செவ்வாய் | — | பக்ரீத் பெருநாள் |
| நவம்பர் | 6 | வியாழன் | — | தீபாவளி |
| | 19 | புதன் | — | மொகரம் |
| டிசம்பர் | 25 | வியாழன் | — | கிறிஸ்துமஸ் |

தமிழ்ப் புத்தாண்டு நாளும் (13—4—1980), ஆயுத பூஜை (விஜய தசமி)யும் (19—10—1980) வழக்கமான அரசு விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமையில் வருகின்றன.

அரையாண்டு வங்கிக் கணக்கு முடிக்கும் நாட்களான ஜூன் 30ஆம் நாள் திங்கட்கிழமையும் டிசம்பர் 31ஆம் நாள் புதன் கிழமையும் வங்கி விடுமுறை நாட்களாகும்.

குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களின் அன்றாட உணவுச்சத்துத் தேவையில் 1/3 பங்காவது நிறைவு செய்தல், மருத்துவ வசதி அளித்தல், அவர்களுடைய வளர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் மேம்படுத்துதல், குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரித்தல், குழந்தைகளுக்கு உணவின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்துதல், சத்துமிகுந்த உணவுகளை உண்ணும் பழக்கங்களை ஏற்படுத்துதல், குறிப்பிட்ட அளவு சத்துணவு உண்ணல், மற்றவர்களோடு கூடி உண்டு, சாதி, மத, சமய வேறுபாட்டை அகற்றுதல், உடல், உள்ள, ஆத்மீக வளர்ச்சியை மேம்படுத்துதல், குழந்தைகள் வாயிலாகக் குடும்பங்களுக்குச் சத்துணவுக் கல்வியைப் பரப்புதல் போன்றவை மேற்குறிப்பிட்டுள்ள சத்துணவுத் திட்டங்களின் அடிப்படை நோக்கங்களாகும்.

மேலும், முறைசாராக்கல்வி, எழுத்தறிவுக் கல்வி அளித்தல், பள்ளித் தோட்டம், வீட்டுத் தோட்டம், மகளிர்-இளைஞர் மன்றங்கள் அமைத்தல், வருவாயை அதிகரிக்கும் சிறுதொழில்களைப் பெருக்குதல், சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியனவும் இத்திட்டங்களின் பொது நோக்கங்களாகும்.

சத்துணவுத் திட்டங்களின் நோக்கங்கள் நிறைவேற, தேசிய, மாநில, மாவட்ட, கிராம அளவில் அனைத்துத் தனியார் துறை நிறுவனங்கள் அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவ, சுகாதார நிலையங்கள், சமூக வேலை நிலையங்கள் ஆகியவை ஒருங்கிணைந்த விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும்.

சத்துணவுத் திட்டங்களில், குழந்தைப் பள்ளி முதலாக சத்துணவுக் கல்வியும், சுகாதாரக் கல்வியும் அதிக அளவில் பரப்பப்பட வேண்டும். இத்திட்டங்களில் தொடர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இதன் பயன்களை முழுமையானதாக்கச் செயல்பட வேண்டும். மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் ஆக்க வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

மக்களின் வருமானம் உயர்ந்தால்தான் அவர்களிடையே பொருள்களை வாங்கும் திறனும் உயரும். அப்பொழுதுதான் உற்பத்திப் பெருக்கமும், உட்கொள்ளும் உணவின் தரமும் அதிகரிக்கும். இவை உயர்ந்தால் நாட்டின் வருங்காலச் செல்வங்களாம் இந்நாளைய பிஞ்சுக் குழந்தைகள் செம்மையான குடிமக்களாக வளர முடியும்.

# சவுக்கில் ஊடுபயிர்கள்




கு. இல. செல்லப்பிள்ளை,
உதவிப் பேராசிரியர்,
வனவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.


தமிழ் நாட்டில் சவுக்கில் மூன்று இனங்கள் உள்ளன. அவையாவன; (1) சாதாரணமாகக் காணப்படும் "கேஸ்யூரைனா ஈக்குசிட்டி ஃபோலியாவிஸ்" ஆண்பால் மரங்கள், பெண்பால் மரங்கள், இருபால் மரங்கள் தனித்தனியாக இருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். பாரம்பரிய மேம்பாடு செய்ய இது மிகவும் உதவியாக உள்ளது. (2) தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மரக்காணம் பகுதியில் காணப்படுகின்ற "கேசுரைனா ஜங்கூனியானு" என்னும் சவுக்கில் ஆண் பூக்களைக் கொண்ட மரங்கள் மட்டும் உள்ளன. இவை கடும் வறட்சியைத் தாங்கக்கூடியவை. மேலும் அவற்றினுடைய இலையின் வேலையைச் செய்யும் தண்டு மற்றப் பகுதிகள் "கேசுரைனா ஈக்குசிட்டி ஃபோலியா" என்னும் சவுக்கை விட உறுதியாகவும், நீளமாகவும் இருப்பதால் காற்றின் வேகத்தைத் தடுக்கவல்ல காற்றுத்தடை மரமாகவும் பயன்படுகிறது. (3) சிற்சில இடங்களிலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வனவியல் துறையில் உள்ள "கேசுரைனா கன்னிங்மாமியானா" என்ற சவுக்கில் இருபால் மரங்கள் ஒன்றாக இருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். விதைகள் " அர்ஜெண்டைனா" நாட்டிலிருந்து பெறப்பட்டன.

### ஊடுபயிர்

தமிழ்நாட்டில் சவுக்கு பல்வேறு சூழ்நிலையுள்ள நிலங்களிலும் வளர்க்கப்படுகிறது; அவை பின் வருமாறு: (அ) ஊடுபயிராக தோட்ட நிலங்களில் நிலக் கடலை, மக்காச் சோளம், சோளம் ஆகியவற்றுடன் வளர்க்கப்படுகிறது. (ஆ) புன்செய் நிலங்களில் (இ) மிகக் குறைந்த மழைபொழிவுள்ள நிலங்களில் சிறிதளவு கவனிப்புடன் (ஈ) குறைந்த பட்சச் சாகுபடி முறைகளுடன் கடலோரப் பகுதியில் உள்ள மணற்பாங்கான நிலங்களில் வெள்ளரிக்காயுடன் பயிரிடப்படுகின்றது.

தமிழ் நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் வட்டத்தில் பாசன வசதியுடன் சவுக்கு மரம் வளர்க்கப்படுகின்றது. முதலாண்டில் சவுக்குக் கன்றுகள் நட்ட மூன்று மாதங்கள் கழித்து, முதன் முறையாகக் களை நீக்குதல், மண் கிளறுதல் போன்ற இடைச் சாகுபடி முறைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அச்சமயத்தில் நிலக் கடலை, மக்காச்சோளம், கே. வரகு, சோளம் போன்ற ஊடு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஊடுபயிர்கள் சாகுபடி செய்வதால் அவற்றிற்காக இடப்படும் உரங்கள், நீர்ப்பாசனம் மற்ற சாகுபடி முறைகள் ஆகியவை சவுக்கு மரங்களுக்கும் நன்கு பயன்படுகின்றன.

பாண்டிச்சேரி பகுதிகளில் இறைவை நிலங்களில் முதலாண்டில் மட்டும் ஊடுபயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

சவுக்கு, நிலக்கடலை ஆகிய இரண்டு பயிர்களும் மணற்பாங்கான நிலத்திலும், மணல்கலந்த வண்டல் மண் பகுதியிலும் நன்கு வளரக்கூடியவை என்பதால் சவுக்கையும் நிலக்கடலையையும் கலப்புப் பயிர்களாகப் பயிரிடுகின்றனர். பொதுவாக ஒரு முறை மட்டும் நிலக்கடலையைச் சாகுபடி செய்கின்றனர். ஐந்து ஆண்டு முடிவுற்றதும் சவுக்கு மரப்பயிரை அறுவடை செய்யலாம். ஒரு எக்டரில் மானாவாரியில் இருக்கும் சவுக்கில் கலப்புப் பயிராக நிலக்கடலையில் முதல் ஆண்டுக்கு ரூ. 1,300 நிகரலாபமாகவும், சவுக்கிலிருந்து ஆண்டு வருமானமாக ரூ. 2,140 ஒவ்வோர் ஆண்டும் பெறலாம். இறைவையில் நிலக்கடலையில் முதல் ஆண்டுக்கு ரூ. 4,500 நிகரலாபமாகவும், சவுக்கிலிருந்து ஆண்டு வருமானமாக ரூ. 4,600 ஒவ்வோர் ஆண்டும் பெறலாம்.

சவுக்கு மரத்தைத் தனிப்பயிராகவும், கலப்புப் பயிராகவும் பண்ணைகளில் உழவர்கள் சாகுபடி செய்வது சிறந்தது. வருவாயைப் பெருக்க முடிந்த அளவிற்கு ஊடு பயிர் முறையைப் பின்பற்றவேண்டும்.

### மகசூல்

பாண்டிச்சேரியில் இறைவைப் பாசனத்தால் 1 X 1 மீட்டர் இடைவெளியில் நடப்பட்ட 10,000 சவுக்கு நாற்றுக்கள், நான்கு ஆண்டுகள் முடிந்தபின் அறுவடை செய்யும் போது 250 டன் மகசூலைத் தருகின்றன; இது ஒரு எக்டருக்கு ஆண்டு ஒன்றுக்கு 62.5 டன் மகசூலாகும்.

மதுராந்தகத்தில், பாசன வசதியுடன் 1 X 1 மீட்டர் இடைவெளியில் 10,000 சவுக்கு நாற்றுக்களும் நடப்பட்டு, அவ்வாறு வளர்க்கப்படுகின்ற மரங்கள் ஐந்து ஆண்டுகள் முடிந்தபின் அறுவடை செய்யும்போது 125 டன் மகசூலைத் தருகின்றன. இது ஒரு எக்டருக்கு ஆண்டு ஒன்றுக்கு 25 டன் மகசூலாகும்.

ஈஞ்சம்பாக்கத்தில் 2 X 2 மீட்டர் இடைவெளியில் நடப்பட்ட 2,500 சவுக்கு நாற்றுக்கள் ஐந்து ஆண்டுகள் முடிந்தபின் அறுவடை செய்யும் போது 65 டன் மகசூலைத் தருகின்றன; இது ஒரு எக்டருக்கு ஆண்டு ஒன்றுக்கு 13 டன் மகசூலாகும்.

தமிழ்நாடு அரசு வனவியல் துறையினரால் 2.5X2.5 மீட்டர் இடைவெளியில் 1,600 சவுக்கு நாற்றுக்கள் நடப்பட்டு, அவ்வாறு வளர்க்கப்படுகின்ற மரங்கள் ஏழு ஆண்டுகள் முடிந்தபின் அறுவடை செய்யும்போது 65 டன் மகசூலைத் தருகின்றன. இது ஒரு எக்டருக்கு ஆண்டு ஒன்றுக்கு 9.28 டன் மகசூலாகும்.

ஒரு டன் சவுக்கு மரம் ரூ. 185க்கு விற்கப்படுகின்றது.

### உரமிடுதல்

தமிழ் நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகத்தில், தனிப்பயிராகப் பாசன வசதியுடன் வளர்க்கப்படும் சவுக்கிற்கு மூன்று மாத கால வளர்ச்சியின் போது, (1 X 1 மீட்டர் இடைவெளியில், எக்டருக்கு 10,000 செடிகள்), எக்டருக்கு 125 கிலோ யூரியா மட்டும் தனியாகவும், அல்லது எக்டருக்கு 60 கிலோ யூரியா, 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ முயூரியேட் ஆப் பொட்டாசு ஆகியவை உரமாக இடப்படுகின்றன.

# மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கோழி வளர்ப்பு திட்டம்

TAPCO

**தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் லிமிடெட்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
**சென்னை**

நீங்கள் கோழி வளர்ப்பில் ஈடுபட ஆவலாக உள்ளீர்களா?
கோழி வளர்ப்பு ஓர் இலாபகரமான தொழில்.

அணுகுங்கள்:

*மாவட்டங்களில்: உதவிமேலாளர்கள், தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் (டாப்கோ)*
*சென்னையில்: நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம்*
*1, அண்ணா சாலை, சென்னை-18 போன்: 4431-64*



## திட்டங்களும், விவசாயிகள் பயன் பெறும் இடங்களும்

**1. சிறப்பு கோழி அபிவிருத்தி திட்டம்.**

அ. செங்கை, வடஆற்காடு, சேலம், மதுரை, ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

ஆ. சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், மற்றும் நிலமற்ற விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசின் மானிய உதவி பெற்று செயல் படுத்தப்படுகிறது.

இ. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப் படும் விவசாயிகளுக்கு, 105 எட்டு வாரக் கோழிக் குஞ்சுகள் முட்டை உற்பத்திக்காக விநியோகிக்கப் படுகின்றன

ஈ. கோழி வீடு கட்டுவதற்காக ரூ. 2100/-ம் உபகரணங்களுக்காக (தீவன, நீர்த்தொட்டிகள்) ரூ. 300/-ம் கோழிகளின் கிரயத்திற்காக ரூ. 985/-ம் தீவனச் செலவுக்கு ரூ. 982/-ம மருந்திற்காக ரூ. 210 -ம் ஆகமொத்தம் ரூ. 4577/-வங்கிகள் மூலமாக கடனுதவி பெற வழி வகை செய்கிறது. மொத்த தொகையில் 25 சதவிகிதம் சிறு விவசாயிகளுக்கும், 33 1/3 சதவீதம் நடுத்தர மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப் படுகிறது.

உ. இத்திட்டத்தின் கீழ் உள்ள விவசாயிகளின் நலனை கருதிக் கொண்டு பாப்காக், எச்.எச். 260 போன்ற உயர்ரக கோழி குஞ்சுகள் மற்றுமுள்ள உயர்ரக இன கோழிக் குஞ்சுகளும் விநியோகிக்கப் படுகின்றன.

ஊ. இத்திட்டத்தின் கீழ் வரும் விவசாயிகளுக்கு டாப்கோ நிறுவனம் கிலோவுக்கு ரூ. 1.10 என்ற குறைந்த விலையில் தரமுள்ள கோழித் தீவனம் வழங்குகிறது.

எ. இத்திட்டத்தின் கீழ் வரும் விவசாயிகளிடமிருந்து டாப்கோ நிறுவனம் பண்ணைகளில் உற்பத்தியாகும் முட்டைகளை 33 பைசாவிற்கும், கழிக்கப்பட்ட கோழிகளை ரூ. 9/-க்கும் பெற்றுக் கொண்டு விற்பனை செய்கிறது.

ஏ. கோழிகளுக்குத் தேவையான குடல்புழு, பூச்சி கொல்லி மருந்துகளும் கொடிய நோய்களுக்கு தடுப்பூசிகள் போடுதல் போன்ற பணிகளையும் டாப்கோ நிறுவனம் மேற்கொள்கிறது. கோழிப் பண்ணை பராமரிப்பிற்கு வேண்டிய தகுந்த தொழில்நுட்ப உதவியும் அவ்வப் பொழுது அளிக்கிறது.

**2. ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டம்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்திற்கு தேவையான கோழிக் குஞ்சுகள், உபகரணங்கள், தீவனம் முதலியன டாப்கோ நிறுவனத்தின் மூலமாக வழங்கப் படுகிறது.

**3. வறட்சிக்கு இலக்கான பகுதி மேம்பாடு திட்டம்.**

முகவை, தர்மபுரி மாவட்டங்களில் செயல்படும் இத்திட்டத்திற்கு சிறப்பு கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செயல்படுவது போல கோழிப் பண்ணைகள் அமைக்க தகுந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

**4. குஞ்சு பொறிப்பகங்கள்.**

மேற்கூறிய திட்டங்களுக்கு தேவைப்படும் தரமுள்ள கோழிகளை விநியோகம் செய்ய மதுரை மாவட்டத்தில் கப்பலூர் என்னுமிடத்தில் எச்.எச். 260 என்ற இனமும் கோவை மாவட்டத்திலுள்ள அரசூர் என்னுமிடத்தில் பாப்காக் என்ற இனமும் உற்பத்தி செய்ய கோழிக் குஞ்சு பொறிப்பகங்கள் நிறுவப் பெற்று இயங்கி வருகின்றன. அரசூரில் இறைச்சி கோழியும் உற்பத்தி செய்யப் படுகிறது.

**5. தீவனக் கலவை நிலையங்கள்.**

அ. சிறந்த மூலப் பொருள்களை கூட்டுறவு நிறுவனங்கள், இந்திய உணவு கழகம், நுகர் பொருள் வர்த்தக வழங்கு கழகம் மூலமாகப் பெற்று தரமான தீவனம் சென்னை கோட்டப்பட்டு, கப்பலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு பொது மக்களுக்கும் தனியார் பண்ணைகளுக்கும் கால் நடை பராமரிப்பு துறை கோழி பண்ணைகளுக்கும் வழங்கப்படுகிறது.

ஆ. இந்நிறுவனம் தயாரிக்கும் கோழித் தீவனத்திற்கு இந்திய தர நிர்ணய கழகத்தின் சான்றிதழ் (ஐ.எஸ்.ஐ.) பெற்றுள்ளது இந்நிறுவனத்தின் தனிச் சிறப்பு ஆகும்.

இ. கோழித் தீவன உற்பத்தியின் தரத்தை நிர்ணயிக்கவும் சிறந்த அளவில் பராமரிக்கும் பொருட்டும் தீவன ஆய்வுக்கூட நிலையம் ஒன்று நிறுவப்பட்டு செயல்படுகிறது.

**6. வளர்ப்புப் பண்ணைகள்.**

டாப்கோ நிறுவனத்தின் கீழ் அடையார் (சென்னை) செங்கை, கோட்டப்பட்டு (திருச்சி) கப்பலூர் (மதுரை) சேஷன்சாவடி (சேலம்) பெருந்துறை (பெரியார்) ஆகிய ஆறு இடங்களில் வளர்ப்புப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பண்ணைகள் கோழிகளை வளர்த்துத் திட்டங்களுக்கு விநியோகிக்கும் பணியையும் மேற்கொள்கிறது.

**7. விற்பனை.**

அ. முட்டைகள், கழிவுக் கோழிகள் மற்றும் இறைச்சிக் கோழிகள் ஆகியன சிறப்புக் கோழி அபிவிருத்தி திட்ட விவசாயிகளிடமிருந்தும், ஒப்பந்தபடி தனி நபர்கள் நடத்தும் கோழி பண்ணைகளிடமிருந்தும் சீரான முறையில் கொள்முதல் செய்யப்பட்டு நிலையான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆ. டாப்கோவின் விற்பனைப் பிரிவுகள் மக்களுக்கு தேவையான தரமான கோழிக்குஞ்சுகள், சரிவிகித கோழித் தீவனம் விநியோகித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகிறது. பண்ணைக் கோழிகள் இறைச்சிக் கோழிகள், பன்றி இறைச்சி மற்றும் அதன் பொருள்களும் பம்பாய் "மாப்கோ" நிறுவனத்தின் மூலமாகப் பெற்று விற்பனை மேற்கொள்ளப் படுகிறது. இவை தகுந்த குளிர் சாதனக் கருவியில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இம்மாதிரியான விற்பனை பிரிவுகள் சென்னை பெருநகரிலும், கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்களிலும் செயல்படுகிறது. இதன் விளைவாக விலைகள் கட்டுப்படுத்தப்பட்டு சீராக செயல் பட உதவி செய்கிறது.

இ. டாப்கோவின் கோழியிறைச்சி முட்டை உணவு வகைகள், தலைமைச் செயலக மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற இடங்களிலுள்ள சிற்றுண்டி விடுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது.

**8. கோழிப் பண்ணைகளுக்கு மின்சாரக் கட்டணக் குறைப்பு.**

கோழிப் பண்ணைகளில் மின்சார செலவு விகிதம் (டாரிப் ரேட்) 50% குறைக்கப்பட்டு சலுகை அளிக்கப் பட்டுள்ளது.

**9. இன்சூரன்ஸ், (காப்புறுதி)**

கோழிகள் இறப்பினால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யக் கோழிப் பண்ணைகளுக்கும் கோழி முதலியவற்றிற்கும் காப்புறுதி (இன்சூரன்ஸ்) வசதி செய்யப் பட்டுள்ளது.

**10. விற்பனை வரி சலுகை.**

கோழிக் குஞ்சு, கோழி விற்பனை, மீதுள்ள விற்பனை வரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

**11. நவீனக் கோழி பதப் படுத்தும் நிலையம்.**

செயல்படும் திட்டங்களின் மூலமாகப் பெருமளவில் வரும் கழிக்கப் பட்ட கோழிகளையும், இறைச்சிக் கோழிகளையும், விஞ்ஞான முறையில் பதப்படுத்தி முதல் தரமான இறைச்சியை இந்நிலையம் பொது மக்களுக்கும் வழங்க ஆவன செய்து வருகிறது.

**12. தீவிரமாக பெரும் கோழிப் பண்ணை அமைத்தல்**

முட்டை உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் "நாமக்கல்" என்னுமிடத்தில் டாப்கோ நிறுவனம் வெகுவாக முயற்சி எடுத்துத் திட்டங்கள் செயல்பட பேருதவி செய்கிறது.

*நிர்வாக இயக்குநர்,*
*தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம்*
*சென்னை-18*



# தழைத்தோங்கும் தருமபுரி மாவட்டம்

வரலாற்றுச் சிறப்பும், தொன்மைச் சிறப்பும், இயற்கைச்செறிவும் மிக்க தருமபுரி மாவட்டத்தை தொழில் வளர்ச்சியில் மேம்பாடு அடையச் செய்து, தமிழகத்தின் தொழில் வளம் மிக்க பிற மாவட்டங்களோடு ஒப்பிடும் வகையில் திட்டங்கள் வகுக்கப் புட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறண்ட நிலைமையைப் போக்கி, வளத்தை உருவாக்கி, உணவுப்பொருள் பெருக்கத்தை அதிகப்படுத்திட பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாசன வசதியைப் பெருக்கவும், பல அணைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதோடு, சமுதாயக் கிணறுகளும் தோண்டப்பட்டு வருகின்றன.

விவசாயப் பெருங்குடி மக்களின் அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேலைக்கு உணவு வழங்கும் திட்டம், பால்வளம் பெருக்கும் திட்டம், பட்டுவளர்ப்புத்திட்டம், காடுவளர்க்கும் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம், மண்வளப் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு மேலாக இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற கனிவளம், கச்சாப் பொருள்கள், பிற வசதிகள் ஆகியவற்றிற்கேற்ப தொழிற்சாலைகளை உருவாக்கி நிரந்தர வேலை வாய்ப்பினை இம்மாவட்டத்து மக்களுக்கு வழங்குதல் பொருட்டு அரசால் திட்டம் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஓசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இடங்களில் சிறுதொழில் வளர்ச்சிக்காகத் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஓசூரில் சிப்காட் நிறுவனம், 1153 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் பேட்டை அமைத்துள்ளது. இத்தொழிற்பேட்டை அமைந்துள்ள இடத்திற்கு இராஜாஜி நகர் என்றும் பெயர் மாற்றம் செய்து தமிழக அரசு மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்குச் சிறப்புச் செய்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் 55-க்கும் மேற்பட்ட பெரு ரகத் தொழில்கள் தொடங்குவதற்கும். ஒப்புதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிற்பேட்டையில் 'சிட்கோ நிறுவனம் 50·75 ஏக்கர் பரப்பில் 30 தொழிற்கூடங்களும், 41 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும், தவணை முறையில் தொழில் தொடங்குவோர்க்கு வழங்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இங்கு மின் இயல் தொழில் வளர்ச்சிக்காக ஒரு தொழிற்பேட்டை 12.34 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 12 தொழிற்கூடங்கள் கட்டி தொழில் தொடங்குவோர்க்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர்த்து 22 அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்கள் மின் இயல் சாதன உற்பத்திக்காகச் சிறு தொழில் தொடங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரியில் 'சிட்கோ' நிறுவனத்தின் நேரடி நிருவாகத்தில் 12 தொழிற்கூடங்களும், 25 தொழிற்கூடங்கள் தவணை முறைத்திட்டத்தின் கீழும் உள்ளன. தருமபுரியிலுள்ள தொழிற்பேட்டை 'சிட்கோ' நிறுவனத்தின் நேரடி பார்வையில் உள்ளது. இங்கு நான்கு தொழிற்கூடங்கள் உள்ளன.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பை நல்கவும், சுயவேலை வாய்ப்பை உருவாக்கவும், மாவட்டத் தொழில் மையம் அமைக்கப்பட்டு கடந்த 14 திங்களாய் புதியதாகத் தொழில் முகவர்கள் உருவாக்கப்பட்டு, வேண்டிய உதவிகள் செய்யப்பட்டதோடு சிறுதொழில்களுக்காகப் பதிவும் செய்யப்பட்டுள்ளது. நிரந்தரமாக 114 புதிய தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றது. இவற்றின் மூலம் 1,080 குடும்பங்கள் வேலை வாய்ப்புப் பெற்று பயனடைந்து வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் விவசாய சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் 115, வனப் பொருள்கள் சம்பந்தப்பட்ட தொழில்கள் 28, பிராணிகள் பராமரிப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள் இரண்டு, நெசவு சம்பந்தப்பட்ட தொழில்கள் 59, இரசாயனம் சம்பந்தப்பட்ட தொழில்கள் 43, இயந்திரம் மற்றும் அது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் 183, கட்டடப் பொருள்கள் சம்பந்தப்பட்ட தொழில்கள் 43, கனிப் பொருள்கள் சம்பந்தப்பட்ட தொழில்கள் 38, இதர தொழில்கள் 51, ஆக மொத்தம் 562 சிறு தொழில் நிலையங்கள் இயங்கி வருகின்றன.







சிறுதொழில் வளர்ச்சியைச் சீராக்குதல் பொருட்டு தொழில் தொடங்குவதில் உள்ள பிரச்சனைகளைக் கணக்கெடுத்து போக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 324 தொழிற்கூடங்களில் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வும் காணப்பட்டது.

பாகலூர், பேரிகை, ஓசூர் போன்ற பகுதிகளில் பட்டுநூல் பிரித்தெடுத்தல், முறுக்கேற்றுதல் போன்ற தொழில்களும், தருமபுரி பொம்மிடி போன்ற பகுதிகளில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உருவாக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பது உணரப்பட்டு தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பட்டுநூல் பிரித்தெடுத்தல், பட்டுநூல் முறுக்கேற்றுதல் ஆகிய தொழில்களுக்கு இயந்திரங்கள், 50 நபர்கள் வாங்குவதற்குத் தேசிய சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தில் இருந்து ரூ. 19.31 இலட்சம் பெற்றுதரப்பட்டிருக்கிறது. தருமபுரி நகரைச் சுற்றி 115 தீப்பெட்டித் தொழில் கூடங்களும், பொம்மிடி நகரைச் சுற்றி 125 தொழிற்கூடங்களும் உருவாக்கப்பட்டுவருகின்றன. இதன் மூலம் 5,000 குடும்பங்கள் வேலை வாய்ப்புப் பெறும்.

இம்மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியத்திலும் சிறு தொழிற்கூடங்கள் 150, ரூ. 8.4 இலட்சம் செலவில் கட்டி கைவினைஞர்களுக்குத் தொழில் தொடங்க கொடுக்கப்படவிருக்கிறது. காரிமங்கலம், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இடங்களில் 29 சிறு தொழிற்கூடங்கள் கட்டி கைவினைஞர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியில் இதைப்போலவே 15 தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குச்சிக்கிழங்கு மாவு, சவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் 35 இருக்கின்றன. இதில் உற்பத்தியாகும் மாவை விற்பனை செய்வதற்குப் பாப்பிரெட்டிப்பட்டியில் குச்சிக்கிழங்கு மாவு விற்பனை நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் பொருட்டு 50 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கிருஷ்ணகிரி நகரைச் சுற்றி தொடங்கப்படவிருக்கிறது. இதற்காக 25 மகளிர் தீப்பெட்டி கூட்டுறவுச் சங்கங்களும், மூன்று சாக்குக்கட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கமும் உருவாக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பேரிகை, பாகலூர், தேவிரபள்ளி, நம்மாண்டஅள்ளி, கெலமங்கலம், முதுகுறுக்கி, ஜருகு, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 8 இடங்களில் பட்டுநூல் தயாரிப்பிற்கான கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 100 குடும்பங்கள் பயனடையும். தையல் தொழிலுக்குக் காவேரிப்பட்டணம், ஓசூரில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் 100 குடும்பங்கள் பயனடையும்.

தருமபுரியில் போயர் பெருங்குடி மக்களுக்கென ஒரு தொழிற்சங்கம் உள்ளது. இதில் 109 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கட்குத் தமிழ்நாடு கனிவள நிறுவனம் கருங்கல் உடைக்கும் வேலையைக் கொடுத்திருக்கிறது.

மாவட்டத் தொழில் மையம் 76 தொழிற்சாலைகளுக்கு வங்கி மூலம் ரூ. 36.26 இலட்சம் கடன் பெறவும், 56 தொழிற்சாலைகளுக்குத் தேசிய சிறுதொழில் நிலைய மூலமாக ரூ. 21.83 இலட்சம் பெறுமானமுள்ள இயந்திரங்கள் வாங்கவும், கிராமப்புறத் தொழில் திட்டத்தின்கீழ் 51 தொழிற்சாலைகளுக்கு ரூ.246 இலட்சம் கடன் பெறவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இதுகாறும் 458 விண்ணப்பங்களுக்கு ரூ. 22.87 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் சிறு தொழில்களுக்கும், கிராமக்கைத் தொழில்களுக்கும், கிராமக் கைவினைஞர்களுக்கும் நேரடியாக வங்கிகளும் தமிழ்நாடு முதலீட்டுக் கழகமும் 1679 பேருக்கு ரூ. 152.44 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. இதன் மூலம் 5,000 குடும்பங்கள் பயனடையும்.




கிருஷ்ணகிரியில் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ. 175 இலட்சம் செலவில் உருவாக்கப்படயிருக்கிறது. இதன் மூலம் 25,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

தருமபுரி மாவட்டம் தொழில் வளத்தால் மேன்மையுற பல திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. தொழிற்சாலைகள் தொடங்குவதற்குச் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு தொழில் தொடங்குவோர் ஊக்குவிக்கப்பட்டு வருகிறார்கள். வருங்காலத்தில் சிறுசிறு தொழிற்சாலைகள் பல்லாயிரம் பெற்று, பொருளாதார எழுச்சியில் ஒரு அங்கமாக இம்மாவட்டம் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!






# பாரதி விரும்பிய அரிசன முன்னேற்றம்

— சீனி விசுவநாதன்

தேசிய எழுச்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதியார், அரிசன மக்களின் விழிப்புக்கும், முன்னேற்றத்திற்கும் பெருவழி காட்டியுள்ளார். நீணிலம் வாழ்பவரெல்லாம் நிகரெனக் கொண்டு வாழும் முறைமையை மனித சாதிக்குக்காட்டிய பெருமை கொண்ட பாரதியார், அரிசனப் பிரச்சினையைத் தேசியப் பிரச்சினையாக்கி, அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கும் சிறந்த வழிகளைக் காட்டியுள்ளார் என்றால் வியப்பாக இருக்கிறதா?

பாரதியார் தமக்கு அரிசனப் பிரச்சினையில் இருந்த இதயத் துடிப்பை-துடிதுடிப்பைப் பற்பல இடங்களில் கவிதைகளில், கதைகளில், கட்டுரைகளில் வெளியிட்டுள்ளார். ஆம்; மகாகவி தமக்குச் சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் அரிசனப் பிரச்சினையில் தமக்குள்ள அழுத்தமான ஆர்வத்தையும், அரிசன மக்களின் முன்னேற்றத்தில் கொண்டிருந்த மிகுந்த அக்கறையையும் புலப்படுத்தியுள்ளமை நம் சிந்தனைக்கு உரியது.

பொய்மைச் சாதி வகுப்பினையெல்லாம் தகர்த்து எறிய வேண்டும் என்று வெற்றி முரசு கொட்டிய பாரதியார்,

''மேலவர் கீழவரென்றே - வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெலாம்-இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும்
நன்மையுண்டாம்''

என்னும் கவிக்குரல் கொடுத்தார்.

இன்னும் சற்று அழுத்தமாக - ஆணித்தரமாக

''கலியிலே வர்ணவேறுபாடுகள் பொய்; வெறும் ஏமாற்று.....இப்போதிருக்கும் வஞ்சனை பேதங்கள் கிருதயுகத்தில் மறையும்''— என்றும்

''ஜாதி பேதங்கள் பிரயோஜனமில்லை என்று தெரிந்ததா?.... நல்லது. வாருங்கள் கோடிக்கணக்காக, சமத்துவ நெறியிலே பாய்ந்து விடுவோம். பழைய கட்டுகளை லட்சக்கணக்கான மக்கள் கூடிநின்று தகர்ப்போம்! ............ஊண், உடை, பெண் கொடுக்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமான கட்டுப்பாடுகளும் விதிகளும் தடைகளும் இருப்பதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது...... சகல மனிதரும் சகோதரர்; மனித வர்க்கம் ஓர் உயிர்''—

என்றும் எழுதி, சகல மனிதரும் சகோதர உணர்ச்சி கொண்டவர்களாக வாழவேண்டும் என்று ஆசைப்பட்டார் பாரதி.

எல்லா வகுப்பு மக்களுக்கும் சரியானபடி படிப்புச் சொல்லிக்கொடுத்தால் எல்லோரும் சமான அறிவுடையோராய் விடுவார்கள். மேல் வகுப்பினர், தம்முடைய உயர்வை மறந்து மற்றவர்களுடன் கொடுக்கல் முதலான சம்பந்தம் வைத்துக்கொண்டால் சாதிக்கு மதிப்பிராது. இராதல்லவா?

சாதி பேதத்துக்கு இடமில்லை என்ற பாணியில் தம்முடன் புதுச்சேரியில் வாழ்ந்த திரு. ரா. கனகலிங்கம் என்ற அரிசனருக்குப் பூணூல் அணிவித்த செய்தி ஊரறிந்த உண்மை.

தாம் எழுதிய 'ஆறில் ஒரு பங்கு' என்ற நூலை அரிசன மக்களுக்குக் 'காணிக்கை' ஆக்கினார். சமூகத்தில் ஆறில் ஒரு பங்கு மக்களைத் தீண்டத்தகாத சாதியாக வைத்துள்ள கொடுமையை மற்றவர் உணர்ந்திருந்தவும், அரிசன முன்னேற்றத்தில் தமக்குள்ள பாசத்தை வெளிப்படுத்தவும் இந்த நூலைக் கருவியாகக் கொண்டார் பாரதியார்.

## கைத்தறித் துணிகள் விற்பனை சிறப்புத் தள்ளுபடி

கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு, கைத்தறி ஆடைகளின் விற்பனையின் பேரில் 25.12.79 முதல் 31.12.79 வரை 10 சதம் சிறப்புத் தள்ளுபடியும், புத்தாண்டு-பொங்கல் விழாக்களை முன்னிட்டு 1.1.1980 முதல் 15.1.1980 வரை 20 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

''இந்நூலை, பாரதநாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரட்சிப்பவர்களாகிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்''—

என்று 'ஆறில் ஒரு பங்கு' நூலில் குறிப்பிட்டுள்ளமை நம் கவனத்திற்குரியது. பிறவி மாத்திரத்திலேயே உயர்வு -தாழ்வு என்ற எண்ணம் கூடாது என்று கொள்கை முழக்கம் செய்தவரின் நூல் 'சமர்ப்பண' முறை பின் எப்படி அமையும்?

புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில், தாம் எதற்கும் பயப்படாமல், சாதி வித்தியாசம் பார்க்கும் மடமைகளை விளக்கிப் பேசுவார். அரிசனங்களைக் கோயில்களுக்குள் அனுமதிக்காமல் இருப்பதற்கான காரணங்களைக் கேட்பார்; அவர்களைக் கோயில்களுக்குள் அனுமதிக்க ஒரு துண்டுப் பிரசுரமே அச்சிட்டு, தாம் மேற்கொண்டுள்ள அரிசன ஆலயப்பிரவேசக் கொள்கைக்கு ஆதரவும் தேடியுள்ளார். அந்தக் காலத்தில் பாரதியார் விதைத்த வித்தின் விளைவுதான் பிற்காலத்தில் ஆலயப்பிரவேசம் வெற்றிகரமாக முடிந்தது என்று பெருமிதத்தோடு கூறும் அரிசன நண்பர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பாரதியார் தாம் இருக்கும் இடத்தில் தீண்டாமைக்கே இடமில்லை என்பார்.

இதோ, பாரதியாரின் அன்புக்குப் பாத்திரராகி, அவரால் பூணூல் அணிவிக்கப்பெற்ற திரு. கனகலிங்கம் என்பார் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லிலே படம்பிடித்துக் காட்டுகிறார்.

''ஒரு சமயம் பாரதியார் என்னை சுந்தரேசய்யர் என்ற தமது பிராமண நண்பர் வீட்டுக்கு வந்து தம்மைச் சந்திக்கும்படி சொல்லியிருந்தார். நான் அங்கே சென்றதும், வீட்டுக்குள் புகுந்து விடாமல் தெருவில் நின்றுகொண்டே மேல்மாடியை நோக்கி, 'சுவாமி' என்று உரத்த குரலில் கூப்பிட்டேன். 'உள்ளே வா!' என்று பாரதியார் சத்தம் கொடுத்தார். அந்நாளில் புதுவை சாதி பேத உணர்ச்சிக்கு ஒரு நிலைக்களமாக இருந்ததால், பாரதியார் கூப்பிட்டும் நான் உள்ளே நுழைந்துவிடவில்லை.

''பாரதியார் மேல்மாடத்திற்கு முன்புறமாக வந்து நின்றுகொண்டு, 'உள்ளே வா!' என்று சற்றுக் கோபமாய்க் கர்ச்சித்தார். அப்பால் தயங்காமல் நான் மேடைக்குப்போய்ச் சேர்ந்தேன். அங்கே வீட்டின் சொந்தக்காரரும், வேறு மூன்று பிராமணர்களும் இருந்தார்கள். பாரதியார் என்னைக் கண்டதும் 'இன்று முதல் நான் எந்த இடத்தில் இருக்கிறேனோ, அந்த இடத்தில் தீண்டாமைப்பிணி இருக்கவே இருக்க முடியாது' என்று ஆவேசத்துடன் கூறினார். உடன் இருந்த மற்ற பிராமணர்களின் முகக் குறியும் பாரதியாரின் வார்த்தையை ஆதரித்ததாகவே மலர்ச்சி பெற்றது.

''........அன்று பாரதியாரின் தர்மாவேசமும், 'பாரதி இருக்கும் இடத்தில் தீண்டாமை எப்படி இருக்கமுடியும்?' என்று பொருள்படப் பேசிய வீரதோரணையும் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. ஆம்; உண்மைதானே! ராமன் இருக்கும் இடம் அயோத்தி என்பதுபோல, பாரதி இருக்குமிடம் சமதர்மபூமிதான்' என்பதை நான் மறந்ததுதான் பிசகு என்று உணர்ந்து கொண்டேன்.''

இவ்விதமாக தமது குருநாதரான பாரதியாரின் சமத்துவ எண்ணம் குறித்து நமக்கு நேருக்கு நேராகப் பேசுவதுபோலவே எழுதிக் காட்டுகிறார் திரு. கனகலிங்கம்.

பாரதியாரைப் புதுவையில் மற்றவர்களுக்கு இன்னார் என்று தெரியாமல் இருந்த காலத்திலேயே சிலநாள்வரை, பாரதியாரை ஆதரிக்கும்படியான பேறு பெற்றவர் திரு. சுந்தரேசன் என்பவர். இவர், மகாகவியின் சமரச நோக்கைப்பற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போமா?

''பாரதியார் முதல்தரமான சமரசவாதி. ஜாதி மத பேதங்களுக்கு அவர் புறம்பானவர். அந்தக் காலத்தில் வைதிக வழக்கங்களை மீறிக் காரியங்களைச் செய்ய எவ்வளவோ துணிச்சல் வேண்டும்; அத்தகைய தைரியம் பாரதியாரிடம் இருந்தது.

''புதுவையில் பாரதியார் இருந்த காலத்தில் தூத்துக்குடி தேசபக்தர் ஸ்ரீ.வ.உ. சிதம்பரம்பிள்ளை சிலமுறை அவரைப் பார்க்க வந்தார். வேறுசில பிராமணரல்லாத நண்பர்களும் வருவதுண்டு. யார் வந்தாலும் பாரதியார் அவர்களோடு உட்கார்ந்து உண்பது வழக்கம். தம்முடைய விருந்தினர்களோடு சேர்ந்து உண்பதில் அவருக்கு உற்சாகம் அதிகம்.

''பாரதியாருடைய அருமைப்புதல்வி ஸ்ரீமதி தங்கம்மாளது ருதுஸ்நான தினத்தில் பாரதியார் தம்முடைய நண்பர்கள் எல்லோருக்கும் ஒரு விருந்து நடத்தினார். அவ்விருந்துக்கு எல்லாச் சாதியினரும் வந்திருந்தனர்......ஒரே பந்தியில் உட்கார்ந்து ஆனந்தமாக விருந்துணவு உண்டனர்.........

''இந்தச் சமபந்தி விருந்தைக் கேட்ட பலர் திடுக்கிட்டனர். வைதிகப்பற்றுள்ள சில நண்பர்கள் அருவருப்பை வெளியிலே தெரிவிக்க முடியாமல் வருந்தினர். பாரதியாருக்குத் தம்முடைய செயல் பலருக்கு வெறுப்பை உண்டாக்குமென்பது தெரியும். ஆனால், அவருக்குச் சிறிதேனும் அதுபற்றிக் கவலையே இல்லை.

காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்று அகில லோகத்தையும் வளைத்துக் கட்டிச் சமரசம் பேசும் அவருக்கு, ஜாதிக் கட்டுப்பாடுகள் தடையாகவே இருக்கவில்லை'

இதுபோன்ற பல அனுபவங்களை திரு. சுந்தரேசன் அவர்கள் நினைவுகூர்கிறார்.

மகாகவி பாரதியாரே வசனத்தில் ஒரு கட்டுரையில்

''எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் சிநேகம். அவனுடைய கோயில் அம்மன் மீது நான் பாட்டுக் கட்டிக்கொடுத்தேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு''

என்று குறிப்பிட்டுள்ளார்.

நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற சாதியினரை நாம் முறைப்படி நடத்த வேண்டும் என்பதை நாம் மறக்கக் கூடாது என்பதை வலியுறுத்தியவர் பாரதியார்.


சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;-தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

### கைத்தறித் துணி ஜனதா ரகங்கள்

1978-79-ஆம் ஆண்டு ஜனதா ரக ஆடைகளின் உற்பத்தி சுமார் 135 இலட்சம் சதுர மீட்டராகும். 1979-80-ஆம் ஆண்டுக்கு இதுவரை இவ்வகை ஆடைகளின் உற்பத்தி அளவு 120 இலட்சம் சதுர மீட்டராகும்.

குறைந்த விலையில ஏழை, நடுத்தர மக்களுக்கு இந்தவகை ஜனதா ரக ஆடைகள் பொங்கலுக்குத் தாராளமாகக் கிடைக்கும்.

கடந்த ஆண்டு பொங்கல் விற்பனை ரூ. 616 இலட்சம். இந்தப் பொங்கலுக்கு (1980) குறியளவு ரூ. 7½ கோடி.



# பெருகிடும் பால் வளம்



தமிழ்நாடு பால்வள நிறுவனம் மணிக்கு 4 முதல் 5 டன் வரை உற்பத்தித் திறனுள்ள கால்நடைத் தீவன ஆலை ஒன்றினை 1.4.1975 முதல் நடத்தி வருகின்றது. இவ்வாலையின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு தற்போது மாதமொன்றுக்கு 1500 டன் வீதம் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

அம்பத்தூரில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறனுள்ள புதிய பால் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று, ரூபாய் 245.73 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 16.4.1976இல் இருந்து செயல்பட்டு வருகின்றது.

ஈரோட்டில் ரூபாய் 5 கோடி மதிப்பில் ஒரு பால் பதப்படுத்தும் தொழிற்சாலையும், இரண்டு குளிரூட்டு நிலையங்களும், ஒரு கால் நடைத் தீவனத் தொழிற்சாலையும் மற்றும் சேலத்தில் இதேபோன்று ஒரு பால் பதப்படுத்தும் தொழிற்சாலையும் பால் குளிரூட்டு நிலையமும் ரூபாய் 3 கோடி மதிப்பில் அமைப்பதற்கான ஆக்கப் பணிகள் நடைமுறையில் உள்ளன.

மதுரை பால் பண்ணையில் நாளொன்றுக்கு 10 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு பால் பொடித் தொழிற்சாலை ரூபாய் 85 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு 16.3.'76 முதல் இயங்கி வருகிறது. மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பால் குளிரூட்டு நிலையங்கள் அமைத்தல், மற்றும் ஏற்கெனவே இயங்கிவரும் பால் குளிரூட்டு நிலையங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பால் சேகரிக்கும் வண்டிகள் வாங்குதல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

5 ஆண்டுக்கால அளவில் நீலகிரி மாவட்டத்தில் 10,000 விவசாயிகள் பயன் பெறும் வகையில், தற்போது நாளொன்றுக்குக் கிடைக்கும் 15,000 லிட்டர் பாலை 40,000 லிட்டராக அதிகரிக்கச் செய்வதும் கோத்தகிரி

மாதவரம் பால் பண்ணையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,25,000 லிட்டராக, ரூபாய் 20.96 இலட்சம் செலவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூடலூர் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டு நிலையங்கள் அமைத்தல் மற்றும் 100 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல். மேற்கூறிய இரு இடங்களிலும் பால் குளிரூட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய பால் கொள்முதல் நாளொன்றுக்கு சராசரி 27,000 லிட்டராக உள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பால் பண்ணைத் தொழிலை மேம்படுத்துதல்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் கிருட்டிணகிரியில் ரூபாய் 175 இலட்சம் செலவில் ஒரு பால் பொடித் தொழிற்சாலையை அமைக்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

சென்னை நகரில் நாளொன்றுக்கு 2.5 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் விற்பனைக்கு இணையாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பால் கொள்முதலில் தன்னிறைவு காண 1979-80ஆம் ஆண்டு முடிவிற்குள் 1700 ஆரம்ப கிராமப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



'தமிழரசு' இதழில் புதிய பகுதி


## வெற்றிச் சரிதம் படைக்கும் வீரர்

அரசு, அரசு சார்புள்ள வாரியங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவி பெற்று—சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள்—கையினால் காகிதம் செய்தல்—பழத்தோட்டம்—கரும்பு போன்ற பணப்பயிர் செய்தல்—ஆகிய தொழில்கள் நடத்தி அவற்றின் மூலம் வெற்றி பெற்றவர்கள்—எளிய குடும்பத்தில் பிறந்து கல்வியினால் முன்னேற்றம் பெற்றவர்கள்—குடும்பநலத் திட்டத்தின் மூலம் நல்வாழ்வு கிடைக்கப் பெற்றவர்கள்—சிறுசேமிப்பின் மூலம் பெருநன்மை அடைந்தவர்கள் மற்றும் வேறுவிதமாக நல்ல பயன் அடைந்தவர்களின் வரலாறு 'வெற்றிச் சரிதம் படைக்கும் வீரர்' என்ற தலைப்பில் 'தமிழரசு' இதழில் வெளியிடப்பெறும்.

- கட்டுரை 'தமிழரசு' இதழில் ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.
- வெற்றி பெற்றோர்—அவரே சொல்வது போன்ற பாணியில் அமைக்கப்பட வேண்டும்.
- தனிப்பட்ட எழுத்தாளர்கள்—மற்றும் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் இந்தக் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.
- இடம் பெறும் கட்டுரைக்கு அன்பளிப்பு ரூ.25/- உண்டு.
- கட்டுரைகளுடன், சம்பந்தப்பட்ட தொழில் நிலையம்-வெற்றி பெற்றோர்—ஆகியோரின் புகைப்படங்களும் அனுப்பப் பெறல் வேண்டும்.
- 'கட்டுரை உண்மையான தகவல்கள் கொண்டது' என்று ஊராட்சி ஆணையரின் ஒப்புதல் கடிதத்துடன் அனுப்பப் பெறல் வேண்டும்.
- உறையின்மேல் 'வெற்றி பெற்றோர் சரிதம்' என்று குறிப்பிட வேண்டும்.

*கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி:*

ஆசிரியர்,
'தமிழரசு அலுவலகம்'
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



# ஐ.எஸ்.ஐ என்றால்?

ஐ.எஸ்.ஐ. (I.S.I.) என்றால் நீங்கள் என்னவென்று கருதுகிறீர்கள்? பிஸ்கோத் பாக்கெட்டுகள்-திடீர் காபி பொடி-வண்ணக் கலவைகள் - பிளேடுகள் - மை-மின்சார சுவிட்சுகள் - ஸ்டவ் அடுப்புகள் ஆகியவற்றில் இந்த எழுத்துக்களின் முத்திரையை நீங்கள் பார்த்திருக்க முடியும்-ஆனால் அது என்ன என்று கவனம் செலுத்தியிருக்க மாட்டீர்கள். பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவோருக்கு அது முக்கியமான அறிவிப்பு மட்டுமல்ல, நாடு முழுதும் உள்ள மக்களிடம் அறிமுகமாகியுள்ள - விற்பனை உதவிச் சாதனம் ஆகும்.

ஐ.எஸ்.ஐ பொருட்கள் என்பவை ஒரு நிறுவனத்தின் தயாரிப்புகள்-அந்த நிறுவனத்தின் வணிகப் பெயர் என்று மக்கள் பொதுவாக எண்ணிக் கொள்கிறார்கள். அது தவறு. ஐ.எஸ்.ஐ என்பது தரத்தின் அடையாளம். இந்தியப் பொருள்களைப் பயன்படுத்துவோருக்கு அப் பொருள்களின் தரத்தைக் குறித்து இந்தியத் தர நிர்ணயக் கழகம் Indian Standard Institution வழங்குகின்ற நற்சான்றிதழின் வெளிப்பாடுதான் ஐ.எஸ்.ஐ. முத்திரை.

இந்த வகையில் இந்தியத்தரம் என்பது-நுகர்வோரைக் காக்கும் அளவுக்கு-திருப்திப்படுத்தும் அளவுக்கு தரமுள்ளவையாக-பாதுகாப்புமிக்கவையாக - பல்வேறு பொருள்களையும் உருவாக்குவதாகும். நுகர்வோர் சாதாரண மனிதராக இருக்கலாம் -அரசுத் துறையில் பணியாற்றுபவராக இருக்கலாம் - ஒரு வணிக நிறுவனத்தவராக இருக்கலாம்-வெளிநாட்டுக்குப் பொருள் ஏற்றுமதி செய்பவராக இருக்கலாம்.

வீட்டு உபயோகப் பொருள்கள்-தொழிற்கூடத்திற்குப் பயன்படும் பொருள்கள் - உபகரணங்கள்-மருத்துவக் கருவிகள்-வெப்பதட்ப நிலையினால் பழுதுறாத வண்ணம் எந்தவித இடையூறும் இன்றி நல்லமுறையில் பயன்படும் வாயு அடுப்பு-உபகரணங்கள் போன்ற பலபொருள்கள்-எல்லோரையும் திருப்திப்படுத்தும் அளவுக்குத் தரமிக்கவையாகத் திகழ்கின்றன.

ஐ. எஸ். ஐ. யின் தொழில் நுணுக்க வல்லுநர் குழு-தயாரிப்பாளர்கள்-அரசுப் பிரதிநிதிகள்-நுகர்வோர் பிரதிநிதிகள் ஆகியோர்களால் பொருள்கள் ஆய்வு செய்யப்பட்டு -பகுக்கப்பட்டு தரம் நிர்ணயிக்கப்படுகின்றன. 1979 ஏப்ரல் 30ஆம் நாள் வரை ஏறக்குறைய 4926 வகைப் பொருள்கள் தரமிக்கவை என உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் 900 வகைப் பொருள்கள் ஐ.எஸ்.ஐயின் முத்திரை பெற உள்ளன. தொழில்நுட்ப நிபுணர் குழு அவ்வப்போது சந்தித்துப் பொருள்களின் தரங்களை மறு ஆய்வு செய்வதுண்டு. அவ்வாறு மறு ஆய்வு செய்யப்பட்ட பொருள்களின் வகை2114ஆகும். நாட்டில் கிடைத்துவரும் தரமான பொருள்களின் சிறப்பை தமக்குள்ளே இது எடுத்துரைக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட வகைப் பொருளுக்குத் தரம் நிர்ணயிக்கப்பட்டு விட்டால் அந்தப் பொருளை அந்தத் தரத்துடன் தயாரிக்கும் உற்பத்தியாளர்-அவரது தயாரிப்புக்குரிய ஐ.எஸ்.ஐ. முத்திரைக்காக உரிமை கேட்டு மனுச் செய்யலாம். அவரது தயாரிப்புப் பொருளை இந்தியத் தர நிர்ணயக் கழகம் ஆய்வு செய்து பார்க்கிறது. சோதனைக்குரிய பொருள் தரமானது தான் என்று கண்டால், தனது முத்திரையை (ஐ.எஸ்.ஐ)அந்த உற்பத்தியாளர் தமது பொருளில் பொறித்துக் கொள்வதற்குரிய அனுமதி வழங்குகிறது. இத்துடன் பிரச்சினை முடிந்து விடுவதில்லை. ஐ.எஸ்.ஐ நிறுவனம் தனது ஆய்வாளர்களை அனுப்பி வணிகச் சந்தையில், அப்பொருள்களின் தரத்தை அவ்வப்போது சோதித்துப் பார்க்கிறது. அவ்வாறு ஆய்வு செய்யும்போது உற்பத்தியாளர் பொருளின் தரத்தை நீடித்து வழங்கவில்லை என்று தெரிந்தால், உடனே ஐ.எஸ்.ஐ. நிறுவனம் எச்சரிக்கை செய்கிறது; ஐ.எஸ்.ஐ முத்திரையிடும் உரிமையை ரத்தும் செய்கிறது.

இதுபோன்ற ஏமாற்று வேலைகள் கண்டு பிடிக்கப்பட்டால்-ஏமாற்றும் உற்பத்தியாளர் மீது வழக்குத் தொடுத்து சிறைத் தண்டனை வழங்க வழி செய்யலாம், அவருக்கு அபராதமும் விதிக்கப்படலாம்.

இந்த ஐ.எஸ்.ஐ முத்திரையின் அறிமுகத்தின் காரணமாக உற்பத்தியாளர் ஆதாயம் அடைகிறார்-காரணம் அவர்களது தயாரிப்புகள் தர முள்ளவை. அது மட்டுமல்ல; அவர் ஐ.எஸ்.ஐ. நிறுவனத்தின் தொழில் நிபுணர்களின் உதவியால்-தமது தயாரிப்பு தரமானவையாக வெளிவருவதற்குரிய தொழில் ஆலோசனையும் பெறுகிறார்.

அரசுத் துறையினர், நகராட்சித் துறையினர்-தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், வெளிநாட்டவர்கள் ஆகியோர் எல்லாரும் ஐ.எஸ்.ஐ முத்திரையிடப்பட்ட பொருள்களுக்கே முக்கியத்துவம் தருகிறார்கள். அவை உறுதியானவை என்று சான்றிதழ் பெற்றுள்ளமைதான் அதற்குக் காரணம்.

அப்பொருள்களின் தயாரிப்பாளர்கள் உள்நாட்டிலும் - வெளிநாடுகளிலும் உள்ள நுகர்வோரின் நன்னம்பிக்கையைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

புதிதாகத் தயாரிக்கப்படும் ஒரு பொருளுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரையை வழங்குவதன் மூலமாக நுகர்வோருக்கு உறுதி வழங்குவதுடன்-ஏற்கெனவே அதே வகைப் பொருள்களைத் தயாரித்து வருவோரினால் ஏற்படும் போட்டியில்-இந்தப் புதிய தயாரிப்பாளருக்கு உதவி செய்வதாகவும் அமைகிறது.

அங்கீகரிக்கப்பட்ட வாங்குவோர்களும் வெளிநாட்டு வியாபாரிகளும் இந்தத் திட்டத்தினால் மிகுந்த பயன் அடைகிறார்கள்; காரணம்-அவர்கள் வாங்கும் பொருள்கள்-ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு - தரமானவை என்ற முத்திரையைப் பெற்றவை. அவர்கள் மறுபடியும் ஆய்வு செய்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. இதன் காரணமாக ஆய்வுக்காகச் செலவிடப்படும் தொகையும்-நேரமும் அவர்களுக்கு விரயம் ஆகாமல் தடுக்கப்படுகின்றன.

ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெற்ற ஒரு பொருளை நுகர்வோர் ஒருவர் வாங்குகிறார் என்றால் - தேசிய நிறுவனம் ஒன்றினால் உறுதியுடன் வழங்கப்படும் தரமான பொருளை-பாதுகாப்புடன் கூடிய பொருளை அவர் பெறுகிறார் என்று பொருள்.

வணிகச் சந்தையில் போலிப் பொருள்கள் பல கவர்ச்சியுடன் காணப்படலாம். ஆனால் அவற்றை எல்லாம் வாங்கி ஏமாற்றம் அடையாமலிருக்க-தரமான பொருள்களைத் தேர்ந்தெடுக்க-ஐ.எஸ்.ஐ. அவருக்குத் தக்க வழி காட்டுகிறது.

தற்செயலாக, வாங்கிய பொருள் குறைபாடு உள்ளது எனக் கண்டறிந்தால் ஐ.எஸ்.ஐ. நிறுவனம் அந்தக்குற்றச்சாட்டை ஏற்று, ஆய்வு நடத்துகிறது. அது குறை உள்ள பொருள்தான் என்பது உறுதியானால் மாற்றுப் பொருளை, நுகர்வோருக்கு வழங்குவதுடன்-அந்தப் பொருளின்-தயாரிப்பாளர் மீது தேவையான நடவடிக்கையையும் எடுக்கிறது.

ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற பொருள்களுக்குக் கிடைக்கும் பாராட்டு-அரசாங்க அலுவலகங்களினால் மட்டுமல்ல! தேசிய நிறுவனத்தை ஆதரிப்பது அரசாங்க ஊழியர்களின் கடமை; ஆனால் - தனிப்பட்ட முதலாளிகளின் நிறுவனங்களினாலும் அது ஆதரிக்கப்படுகிறது. காரணம் தரமான கச்சாப் பொருள்கள் துணைக் கருவிகள் ஆகியவை தேவையான தரத்தில் உள்ளமையால்!

நுகர்வோர் எப்போதும் தரமான பொருள்களில் நாட்டம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். ஐ.எஸ்.ஐ. முத்திரை பொறிக்கப்பட்ட பொருள்களையே வாங்க வேண்டும் என்ற வழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். நாள்தோறும் இந்த எணணிக்கை அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே சொல்லப்பட்ட சில பொருள்களுடன் - பீங்கான் சாமான்கள் - விளையாட்டு உபகரணங்கள்-காலணிகள் - ஸ்டவ்கள்-மின்துறைப் பொருள்கள், உணவுப் பொருள்கள் -மருத்துவப் பொருள்கள் போன்ற பல்வேறு பொருள்களும் ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெறுகின்றன.

சிலவகைப் பொருள்களுக்கு ஐ.எஸ்.ஐ முத்திரையிடுவது கட்டாயம் என விதிக்கப்பட்டுள்ளது.

1940 ஆம் ஆண்டின் வாயு சிலிண்டர் சட்டப்படி, சிலிண்டர்கள் சான்றிதழ்கள் பெறவேண்டியுள்ளன. 1974ஆம் ஆண்டைய உணவுப் பொருள்கள் கலப்படத் தடைத் திருத்தச் சட்டத்தின்படி சில வகை உணவுப் பொருள்களின் வண்ணங்கள்- அந்த வண்ணத் தயாரிப்புகள் ஆகியவையும் சான்றிதழ் பெறவேண்டியுள்ளன.

துரதிருஷ்டவசமாக - எல்லா வகைப் பொருள்களும் இதே போன்ற சட்ட விதிகளினால் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நிலைமை இல்லை. அதனால் இந்திய நுகர்வோர் வழிகாட்டும் குழு-சமையலுக்குப் பயன்படும் எல்லாவகை உபகரணங்களுக்கும் சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அதிலும் குறிப்பாக-பிரஷர் ஸ்டவுக்குச் சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இல்லங்களின் சமையல் அறைகளில் ஏற்படும் விபத்துக்களில் ஏறக்குறைய 41 சதவிகிதம், தரமில்லாத பிரஷர் ஸ்டவ்களின் தயாரிப்பினால் தான் ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. வணிகச் சந்தையில் உபயோகத்தில் உள்ள ஸ்டவ்களில் 11 வகைகளைச் சோதித்துப் பார்த்ததில் 10 வகைகள் பாதுகாப்பற்ற முறையில் - இந்தியத் தரத்துக்கு ஊறு தரும் வகையில் அமைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, விலை மதிப்பற்ற உயிர் காக்கப்பட வேண்டும் என்றால்-பெருஞ்சேதம் தவிர்க்கப்பட வேண்டும் என்றால் சமையல் உபகரணங்களுக்குச் சான்றிதழ் பொறிக்கப்படுதல் அவசியம்.

இதைப் போலவே அங்கீகாரம் பெறாத - தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படுவதும் - நாட்டில் பரவலாகப் பயன்படுத்தப்படுவதுமான வாசனைப் பொருள்களான பிந்தி - கஜல் - சர்மா போன்றவற்றிற்கும் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். பிந்தி, சிலருக்கு நீடித்த சருமநோயை வழங்குகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சர்மாவின் 14 மாதிரிகளைச் சோதித்துப் பார்த்ததில் 13 மாதிரிகளில் ஒருவகை நச்சு நோயை உருவாக்கவல்ல ஈய சல்பைடு கலக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.



பொம்மைகள் கூடச் சான்றிதழ் பெறவேண்டிய பொருள்கள் தாம். ஏனென்றால் அவற்றில் உள்ள வண்ணங்கள் - அல்லது அவற்றின் பாகங்கள் - குழந்தைகளுக்கு ஆபத்தை உருவாக்கலாம். ஐ.எஸ்.ஐ. நிறுவனம் - பொம்மைகளைச் சோதிப்பதற்குப் பகுதிக்குழு ஒன்றினை உருவாக்கியுள்ளது - வாசனைப் பொருள்களுக்குரிய தரத்தையும் நிர்ணயித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ நிறுவனம் வழங்கும் சான்றிதழின் வலுவான காரணங்களைப் பார்த்துப் பாராட்டு வழங்கும் அதே நேரத்தில்-சில குறைகளையும் நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

ஒரு சில பொருள்கள் கட்டாயமாக ஐ.எஸ்.ஐ. சான்றிதழ் பெற வேண்டும் என்ற விதி இருந்தாலும் - பெரும்பான்மையான பொருள்களுக்கு ஐ. எஸ். ஐ முத்திரை பெறுதல் - தயாரிப்பாளர்களின் சொந்த விருப்பத்தைப் பொறுத்த செய்திதான். அதனால் நேர்த்தியான-தரமுள்ள பொருள்கள் நமக்கு அபூர்வமாகவே கிடைக்கின்றன.

# சிறு தொழிலில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்க புதிய ஆணை

வேலை வாய்ப்புக்களைப் பெருமளவில் அதிகரிக்கவும், கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கும், சிறுதொழிலில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்கி, அத்தொழிலுக்கு அதிக ஆதரவு அளிக்கும் வகையில் தமிழக அரசு ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறது.

அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், அரசுத்துறை நிறுவனங்கள்—வாரியங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் பண்டகப் பொருள்கள் கையினால் செய்யப்படும் தாள், எண்ணெய் வகைகள், சோப்பு, பாத அணிகள், தோலினால் செய்யப்பட்ட பிற பொருள்கள், மேசை நாற்காலி போன்ற மரச் சாமான்கள், தொட்டி முதலியன பிரம்பு, மூங்கில் வகைகள் மண்பாண்டங்கள் போன்றவை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குச் சொந்தமான பிரிவுகள் அல்லது அதன் நிதியுதவி பெற்ற பிரிவுகளிடமிருந்துதான் வாங்க வேண்டும்.

மேலும் சிறு ரகத் தொழில்களுக்கு உதவும் வகையில் தமிழக அரசு இப்போது 241 பொருள்களை அரசுத் துறைகள், பொதுத்துறையிலுள்ள அரசு நிறுவனங்கள், நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் வாரியங்கள், கூட்டு நிறுவனங்கள் சிறு ரகத் தொழில்கள் பிரிவுகளிலிருந்துதான் பெறவேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவுகளைக் கண்காணிக்கும் பொறுப்பை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) மேற்கொள்ளும். இப்பொருட்களை வாங்குவதற்கு அனைத்துத் துறைகளுக்கும் தேவையான உதவிகளை கொடுப்பதோடு, ''சிட்கோ'' பொருள்களை வாங்கும் முறைகளை, முறைப்படுத்துதல், பொருட்களின் தரத்தை நிர்ணயித்தல் முதலிய பணிகளை மேற்கொள்ளும்.


கிராம—கைத்தொழில் 'பொருட்களை பொறுத்தவரை இவற்றிற்கான விலையை நிர்ணயித்தல் வாங்கும்முறை இவற்றைப் பற்றி அரசு ஏற்கனவே விடுத்துள்ள ஆணைகள் தொடர்ந்து பின்பற்றப்படும்.

இந்தத் திட்டத்தில் உள்ள மற்றொரு குறைபாட்டையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. சிலவகைப் பொருள்கள் தரமற்றவையாக இருந்தால்-அவற்றிற்கு தனது முத்திரை வழங்குவதற்கு ஐ.எஸ்.ஐ. மறுத்து விடுகிறதல்லவா? 'மறுப்புக்கு உள்ளான பொருள்-வணிகச் சந்தையில் விற்கப்படக்கூடாது' என்று ஐ.எஸ்.ஐ. நிறுவனம் வலியுறுத்துவது இல்லை. அதனால், தயாரிப்பாளர்கள் வணிகச் சந்தையில் தங்கள் பொருட்களை விற்பனை செய்துதான் வருகிறார்கள், ஐ.எஸ்.ஐ. முத்திரை இன்றி! எனவே குறைபாடு உள்ள பொருள், மக்களால் வாங்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது.

அந்தப் பொருளுக்கு முத்திரையிட மறுப்பதுடன் ஐ.எஸ்.ஐயின் பொறுப்பு முடிவடைந்து விடுகிறது. ஆனால் - பரிதாபத்துக்குரிய நுகர்வோருக்கு பாதகமான ஒரு சூழ்நிலை அமைந்து விடுகிறது!

உரிமம் பெறுவதற்காக மனுச் செய்யப்படும் - தரக்குறைவான- ஆபத்தை விளைக்கவல்ல பொருள்கள் யாவை என்பது பற்றிய விவரங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதுடன் - அத்தகைய பொருள்கள், குறைபாடுகள் நீக்கப்படும் வரை அவை சந்தையில் விற்பனை செய்யப்படக்கூடாது என்பதில் ஐ.எஸ்.ஐ. தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்றொரு குறைபாடு, உற்பத்திக் களத்தில் ஏராளமான வகைப் பொருகள் உருவாக்கப்



படுகின்றன. அவைகளை ஆய்வு செய்வதற்குப் போதிய அளவில் ஆய்வாளர்கள் இல்லை.


இப்பொழுது ஐ.எஸ்.ஐ. நிறுவனத்துக்கும் நுகர்வோர்களுக்கும் இடையேயுள்ள தொர்டபு- பாராட்டத் தக்க அளவுக்கு வளர்ச்சியுற்று வருகிறது. தற்சமயம் ஒரு சில சுறு சுறுப்பான நுகர்வோர் குழுக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர இத்தகைய நுகர்வோர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கும் - விரிவுபடுத்துவதற்கும் ஐ.எஸ்.ஐ. நிறுவனத்துக்கும் நுகர்வோருக்கும் இடையே தகவல்கள் சரியான முறையில் கிடைக்கும் வகையில் இருவழித் தொடர்பு உருவாக வேண்டியுள்ளது.

நுகர்வோர் பயன்பாட்டுக்குரிய பொருள்களின் புதிய தரங்கள்-தரத்திற்காக உருவாக்கப்படும் திட்டங்கள் ஆகியவை குறித்த தகவல்களை எளிய- இனிய - குழப்பமில்லாத மொழியில் பத்திரிகைகளின் வாயிலாக- நுகர்வோருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

நுகர்வோர் தாங்கள் பயன்படுத்தும் பொருள்களைக் குறித்த விமரிசனங்களை - அனுபவங்களை - தக்க இடத்திற்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். இது போன்ற புள்ளி விவரங்கள் ஐ.எஸ்.ஐ. நிறுவனத்திற்குப் பெரும் பயன் விளைவிக்கவும் நுகர்வோருக்கும் ஐ.எஸ்.ஐ. நிறுவனத்துக்கும் இடையேயுள்ள இந்தக் கொடுக்கல் வாங்கல் உறவு, தரமான பொருள்களின் உற்பத்தி அதிகமாவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அதே நேரத்தில் நுகர்வோர் தங்களுக்கு மிகவும் தேவையான - ஆபத்தற்ற பொருள்களைப் பெறுகிறார்கள் என்பதுடன் - அபாயகரமான- தரக்குறைவான பொருள்களை வாங்குவதிலிருந்தும் தப்பித்துக் கொள்கிறார்கள்.

—தமிழ்ப்பித்தன்


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




தமிழ்நாடு அரசும் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து கட்டிய இயற்கை இடர் தவிர்ப்புப் புகலிடத்தை 19.12.'79 அன்று மேதகு இந்தியத் துணைக் குடியரசுத்தலைவர் திரு இதயதுல்லா அவர்கள் செங்கற்பட்டு மாவட்டம் முட்டுக் காட்டில் திறந்து வைத்தார்.



சென்னை ராஜ்பவனில் 7.12.'79 அன்று நடைபெற்ற விழாவில் முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்டிர்க்கான பராமரிப்புச் செலவு உதவித் தொகையை, மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கினார்.



சென்னை, கோட்டையில் 14.12.'79 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தியக் கப்பற்படையைச்சேர்ந்த அட்மிரல் சேத்தி அவர்களும் காப்டன் கே. கோபால்ராவ் அவர்களும் சந்தித்தார்கள்.




சென்னையில் 8.12.'79 அன்று நடைபெற்ற முதறிஞர் ராஜாஜி அவர்களின் 102-வது பிறந்தநாள் விழாவில் முதறிஞர் ராஜாஜி அவர்களின் திருவுருவப்படத்தை மாண்புமிகு தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயில் அவர்கள் திறந்து வைத்தார்.

பதிவு எண். M. 8676



16-1-1980 50காசு.


DIRECTOR OF ARCHIVES
TAMIL NADU ARCHIVES
7 - ஜூ 1980
EGMORE, MADRAS-600 008.



# 7வது
# அகில இந்திய
# சுற்றுலா
# வர்த்தகப்
# பொருட்காட்சி
# 1980



2.1.80 அன்று
சென்னையில்
மாண்புமிகு
செய்தித் துறை
அமைச்சர்
ஆர்.எம். வீரப்பன்
அவர்கள் தலைமையில்
மேதகு ஆளுநர்
துவக்கி வைத்தார்



பூம்புகார்
எழுநிலை மாட வடிவில்
உள்ள
நுழைவாயில்



திருக்கழுக்குன்றத்தில்
கழுகு உணவுண்ணும்
காட்சியைச்
சித்தரிக்கும்
சுற்றுலாத் துறை
அரங்கு

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

—ஔவையார்



தமிழரசு
மலர்:10 இதழ்:14
16-1-1980

*கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாஞ் சொல்.*

சொல்லும் போது கேட்டவரைத் தன்வயப்படுத்தும் பண்புகளுடன் கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப் படுவது சொல்வன்மையாகும்.



# எளியவர்களுக்கு இசை எட்டவேண்டும்


மாண்புமிகு செய்தி- அறநிலையத் துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் நடைபெறும் தமிழ் இசை முப்பத்து ஏழாம் விழாவிற்கு வருகை தந்திருக்கும் நம் அனைவரையும் வரவேற்கும் முறையில் ஒரு மிகச் சிறந்த ஆராய்ச்சி மிக்க-ஆற்றலும் உணர்ச்சியும் பொங்குகின்ற ஒரு உரையை நிகழ்த்தி நம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைத்திருக்கின்ற தமிழ் இசைச் சங்கத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி மகராஜன் அவர்களே! இந்த ஆண்டுத் தமிழ் இசைச் சங்கத்தினுடைய இசைப் பேரறிஞர் என்ற விருதினைப் பெறுவதற்காக இங்கே வருகை தந்து இந்த விழாவிற்குத் தலைமையேற்றிருக்கின்ற தமிழகத்தின் புகழ்மிக்க கலைஞர்களில் ஒருவரான திரு முருகபூபதி அவர்களே! தமிழ் இசை என்பதை ஒரு இயக்கமாக இந்த நாட்டில் உருவாக்கி முப்பத்து ஏழு ஆண்டுகளாக அந்த இயக்கத்தை அணையாமல் காப்பாற்றி வருகின்ற செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சார்ந்த பெரியவர்களே! இங்கு குழுமியிருக்கின்ற இசைவாணர்களே! அறிஞர் பெருமக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! தமிழ் இசைச் சங்கத்தின் இசை விழாவினைத் தொடக்கிவைக்கின்ற ஒரு பெரும்பணியை—பெருமைதரும் பணியை எனக்கு அளித்ததற்கு இந்தத் தமிழ் இசைச் சங்கத்தினருக்கு நான் என்னுடைய வணக்கத்தினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே இசையைப் பற்றிய இலக்கணம் தெரிந்த பேரறிஞர் அவர்கள் தலைமையேற்கின்றார்கள். இசைப்பேரறிஞர்கள், இசைப் பெரும்புலவர்கள் பலர் இங்கே வந்திருக்கின்றார்கள். ஆனால், இத்தகைய மாமன்றத்தில் நான் எந்தப் பிரதிநிதி என்ற முறையிலே நிற்கின்றேன் அல்லது எந்தப் பிரதிநிதி என்ற முறையிலே இதிலே கலந்து கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்தேன் என்பதனை உங்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். பெருமக்களும் ஆராய்ச்சியிலே வல்லவர்களும் இசைப்பேரறிஞர்களும் தமிழ்ப் புலவர் பெருமக்களும் சான்றோர்களும் ஆன்றோர்களும் இத்தகைய தமிழ் இசை விழா நாட்களிலே தமிழ் இசைச் சங்கத்திலே இதுவரையில் 36 ஆண்டுகளாகக் கலந்துகொண்டு சமுதாயத்திற்கும் நாட்டிற்கும தமிழ் இசையைக் காக்க வேண்டிய அவசியத்தை—தமிழ் இசையை வளர்க்கவேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் நீங்கள் யாருக்காக இந்த இசையைக் காக்க வேண்டும் என்கின்றீர்களோ, யாரிடத்திலே இந்த இசை போய்ச் சேரவேண்டும் என்று கருதுகின்றீர்களோ, அத்தகைய கோடிக் கணக்கான பாமர மக்களிலே இருந்து ஒருவனை இந்த விழாவிற்கு வரவழைத்து இதனைத் துவக்கச் சொன்னால், அந்தச் சாதாரண மக்களுடைய பிரதிநிதி என்ன சொல்லுவான் என்பதனை இப்பெருமக்கள் தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பாகத்தான் இதனைக் கருதி இந்தப் பணியினை நீங்கள் என்னிடத்திலே ஒப்படைத்திருக்கின்றீர்கள் என்று நான் நினைத்துக்கொண்டு இந்த விழாவினைத் தொடங்கி வைப்பதற்காக உங்கள் முன்னாலே நிற்கின்றேன்.

## தமிழ் இசை இயக்கமும் என் இளமை நினைவு களும்

இன்றைக்கு முப்பத்து ஏழாவது தமிழ் இசை விழாவினை நான் தொடங்கி வைக்கின்ற பொறுப்பிலே நிற்கின்றபோது 1942 ஆம் ஆண்டிலே நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தாலும் பிரியாமல், நம்முடைய உணர்வோடு உணர்வாய்க் கலந்துவிட்ட செட்டி நாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் தமிழகத்திலே தமிழ் இசையைக் காக்கவேண்டும் என்பதற்காக ஒரு இயக்கம் கண்டபோது நான் சென்னையிலே இல்லை. தமிழகத்தினுடைய பல்வேறு நகரங்களிலே காலஞ்சென்ற முத்தமிழ்க் கலாவித்துவ ரத்தினம் ஔவை டி.கே. சண்முகம் அவர்களுடைய நாடகக் குழுவில் பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுப் பாலகனாய் அல்லது சிறுவனாய் நடித்துக்கொண்டிருந்தபோது இந்தத் தமிழ்இசை இயக்கத்திற்கு ஒரு தொண்டனாக இருந்தேன் என்ற பெருமை எனக்கு உண்டு என்பதனை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளுவதில் நான் பெருமைப்படுகின்றேன். எங்கோ இருந்தேன்! சென்னையிலே நடைபெறுகின்றது விழா; இசை மாநாடு ஆனால் இதனுடைய எதிரொலி, தமிழ் பேசுகின்ற மக்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்களோ, அங்கெல்லாம் ஒலித்தது. தமிழர்கள் என்று தம்மை எண்ணிக்கொண்டிருக்கின்ற தமிழர்களின் இதய நாடியைத் தடவிய அந்த இயக்கம், என் போன்ற சிறுவர்களையும் இளைஞர்களையும் அன்றைக்குத் தொட்டது. ஒரு சம்பவத்தைச் சொன்னால், இங்கே இருக்கின்ற இசைப் பேரறிஞர்கள்—பெரும்புலவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். காலம்சென்ற இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் 1942 அல்லது 1943ஆம் ஆண்டிலே அனைத்து
1. இந்திய வானொலியிலே பாடுகின்றார்கள் என்றால், அன்றைக்கு நான் நடிகனாய்ப் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த நாடகமன்றத்தில்—நாங்கள் குடியிருக்கின்ற வீட்டில் அல்லது நாடகத்தை நடத்துகின்ற அரங்கில் "இன்றைக்கு இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் வானொலியிலே தமிழ் இசை பாடுகின்றார்" என்று கையினாலே தட்டிகள் எழுதி மாட்டிவைத்து அந்தத் தமிழ் இசையின் உணர்வைப் பரப்ப வேண்டும் என்ற அந்த அற்புதமான உணர்வினுக்கு நானும் என் போன்றவர்களும் எங்களை ஆட்படுத்திக்கொண்டவர்கள். அந்த



உணர்விற்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்ற நேரத்தில் தமிழ் இசைச் சங்கத்தின் முப்பத்து ஏழாம் ஆண்டு இசைவிழாவில் நான் துவக்குகின்றவனாக வருவேன். அதுவும் மாநிலத்திலே ஒரு அமைச்சனாக இருந்து இதிலே நான் பங்கு ஏற்பேன் என்று நாங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை. இத்தகைய வாய்ப்பை-பெருமையை என்னைப் போன்றவர்களுக்கு ஏற்படுத்தித் தந்த தந்தை பெரியார் அவர்களை—பேரறிஞர் அண்ணா அவர்களை—செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் போன்றவர்களை இன்றைக்கு நான் எண்ணி அவர்களுக்கெல்லாம் வணக்கம் செலுத்துகின்றேன்.

## தமிழ் இசைச் சங்கத்தின் தலைவர்

என்னைப் போன்றவர்கள் உணர்ச்சிகரமாகப் பேசுவோம் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம். தமிழ் இசையைப் பற்றிப் பேச்சு எடுத்தால் உணர்ச்சி பொங்குகின்ற கருத்துக்களை எடுத்துவைப்போம் என்று தெரிந்தோ தெரியாமலோ அல்லது காரணம் இருந்தோ காரணம் இல்லாமலோ எங்களுடைய இயக்கத்தவர்களுக்கு அந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு வரவேற்புரை ஆற்றிய மாண்பு மிகு நீதிபதி அவர்களை நினைக்கும்போது அவர்களைக் கொண்டுபோய் இத்தனை ஆண்டுக் காலம் நீதிமன்றத்திலே உட்கார வைத்து விட்டார்களே—இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக ஆற்றல்மிக்க வரலாற்றை எடுத்து வைத்து வாதாட வேண்டியவர்களையெல்லாம், தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாதுகாவலர்களாக இருக்க வேண்டியவர்களையெல்லாம், ஆற்றல்மிக்க சக்தியாக விளங்குகின்றவர்களை எங்கோ நாளெல்லாம் வக்கீல்கள் நடத்துகின்ற வாதத்தைக் கேட்டு இயந்திரமாக மாறுகின்ற ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கிக் கடந்த முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படாமல் செய்துவிட்டார்களே என்றுதான் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். இங்கே சிலையாக இருக்கின்ற செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் இருந்தால், சர் ஆர்.கே. சண்முகம் அவர்கள் இருந்தால், இந்தத் தமிழ் இசைக்காகப் பாடுபட்ட பெருமக்கள் எல்லாம் இருந்தால், தமிழ் இசையின் மூலம் தமிழ்நாடும் தமிழ் மக்களும் தமிழ்மொழியும் காப்பாற்றப்படும் என்ற அந்த நம்பிக்கையோடு பாடுபட்ட அந்தத் தலைவர்கள் எல்லாம் இருந்தால், இங்கே நம்முடைய நீதிபதி அவர்கள் உரையாற்றினார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை, எடுத்துவைத்தார்களே ஆணித்தரமான கருத்துக்களை—அந்த ஆவேச உணர்வோடு ஆனால் அமைதியாக—அழுத்தமாக-இக் கருத்துக்காகக் கேட்டு அவர்கள் எவ்வளவு மகிழ்ந்திருப்பார்கள். அவர்கள் இல்

**வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்**
**தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று**

**வெற்றியே பெறுபவரானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது.**

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.**

**பெற்ற தாயின் பசியைக்கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்யக்கூடாது.**


லையே என்ற ஏக்கம் எனக்கு இப்போது ஏற்படுகின்றது. அண்ணாமலையார் அவர்கள் இந்த இயக்கத்தை ஆரம்பித்தபோது நம்முடைய நீதிபதி அவர்கள் அங்கே நீதிபதியாக அல்லவா இருந்தார்கள்! உள்ளத்திலே பொங்குகின்ற கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியாமல் வாய்க்குத் தடைபோட்டு அல்லவா வைத்திருந்தோம்! அதனால் அல்லவா முப்பத்து ஏழு ஆண்டுகள் கழித்தும் இன்றைக்கும் நாம் தமிழ் இசைக்காக விழா நடத்தி வாதங்களை நடத்திக்கொண்டிருக்கின்றோம்; நடத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்கே—தமிழ் நாட்டில்? நம்முடைய மொழி என்ன? தமிழ்; நமக்குப் பெயர் என்ன? தமிழர்கள்; நாம் எதற்காகக் கூடியிருக்கிறோம்? தமிழ் இசையைக் காப்பதற்கு. மாண்புமிகு நீதிபதி அவர்களே! பெரியோர்களே! உலகத்திலே வேறு எந்த நாட்டிலே இந்த விதிமுறை இருக்கிறது என்பதைத் தயவு செய்து எங்களைப் போன்ற சாதாரண மானவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். ஜெர்மானிய நாட்டிலே ஒரு விழா உண்டா? ஜெர்மானிய இசையைக் காப்பதற்கு; இங்கிலாந்து நாட்டிலே ஒரு விழா உண்டா? ஆங்கில மொழியின் இசையைக் காப்பதற்கு; விடுதலைக்குப் பெயர்பெற்ற சுதந்தர வீரர்களைப் படைத்த பிரான்ஸ் நாட்டிலே உண்டா? சொல்லுங்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலங்களிலே யாவது உண்டா? வங்காளத்திலே உண்டா? இந்தியிலே உண்டா? ஏன் பக்கத்திலேயே இருக்கின்ற கருநாடகத்திலே உண்டா? ஆந்திரத்திலே உண்டா? தமிழகத்திலே தானே தமிழ் இசை வேண்டும் என்று ஒரு இயக்கத்தை முப்பத்தேழு ஆண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இவ்வுரையைக் கேட்டு நம் சிலம்புச் செல்வர் மாண்புமிகு டாக்டர் ம.பொ.சி. அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றார்கள்! புன்னகையுடன் முகம் மலர அல்லவா இங்கே வீற்றிருக்கிறார்கள். கதர்ச்சட்டையைப் போட்டுக்கொண்டு ம.பொ.சி. தமிழைப் பற்றிப் பேசலாமா என்று கேட்டார்கள் தமிழ்நாட்டில்; கதர்ச்சட்டைக்கும் தமிழுக்கும் காததூரம் ஆயிற்றே! பேசலாமா தமிழைப்பற்றி என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு நீதிபதி அவர்கள் எங்களுடைய வேலைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று பார்க்கின்றபோது மறைந்த ஆன்றோர்களை —சான்றோர்களை — அண்ணாமலையார் போன்றவர்களையெல்லாம் நாங்கள் எண்ணி எண்ணி நீங்கள் இந்தச் சமுதாயத்திலே எடுத்துக்கொண்ட முயற்சி எத்தகைய வெற்றியைப் பெற்றிருக்கிறது பாருங்கள் என்று சொல்லுகின்றபோது நான் மாண்புமிகு நீதிபதி அவர்களையே சான்றாகக் காட்ட விரும்புகிறேன்.



## எது வாழும்?

நான் முன்னாலே எடுத்துக் காட்டியதைபோல் இந்த நாட்டிலே கோடிக்கணக்கான—சாதாரண பாமர மக்களுக்காகத்தான் இசை என்றால், அந்த இசைதான் வாழும். ஏதோ சில சதவிகிதம் படித்த வசதி வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு அல்லது இலட்சக் கணக்கானவர்களுக்கு மட்டுமே அல்லாமல் இந்த நாட்டிலே இருக்கின்ற கோடிக்கணக்கான—பெரும்பான்மை மக்கள் எதனை ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அந்த இசைதான் காலாகாலத்திற்கும் இருக்கும். இல்லையென்றால் நாம் எத்தனை விழாக்கள் நடத்தினாலும் எத்தனை ஆராய்ச்சி உரைகளை நாம் நடத்தியிருந்தாலும் அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராது. தங்க மாளிகையின் உயர்ந்த கோபுரத்திலே உட்கார்ந்துகொண்டு நாம் விவாதித்துக்கொண்டு இருந்தால் கீழே இருக்கின்ற பாமர மக்கள், ''யாரோ நாலுபேர் கொடுத்து வைத்தவர்கள். உயரே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்'' என்று அவன் அவன் தன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பான். அவ்வாறு அவன் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்திலேதான் பரத நாட்டியம் காஷ்மீரத்திலே இருந்து வந்தது என்ற கருத்தும் இழைக்கப்படுகின்ற காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையை—நீங்கள் தயவு செய்து மனத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். முப்பத்தேழு ஆண்டுகள் இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம். டாக்டர் ம.பொ.சி. அவர்கள் கடந்த ஆண்டு சாத்திரமும் சரித்திரமும் இணையாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். சாத்திரம் கற்றவர்கள், சரித்திரம் கற்கவில்லை, சரித்திரம் கற்றவர்கள் சாத்திரத்தைத் தெரிந்து கொள்ள முயலவில்லை. இந்த இரண்டும் இணைந்தால்தான் இந்த நாட்டிற்கு விமோசனம் என்று எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதைத் தான் எங்களைப் போன்ற சாதாரண மக்கள் எதிர்பார்க்கிறோம். இசையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துகின்றீர்கள்! பண் ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இவற்றையெல்லாம் நாங்கள் வேண்டாம்என்று சொல்லவில்லை. ஆனால் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலே செட்டிநாட்டு அரசர் அவர்கள் எந்தக் கருத்தோடு இந்த இயக்கத்தைத் துவக்கினார்களோ அதிலே நாம் வெற்றி பெற்றோமா என்றால் இன்றைக்குக்கூட இதனைப்பற்றி வாதிடுகின்ற நிலையிலே தான் வளர்ந்திருக்கின்றோமே தவிர — சிலபேர் இதனை ஏற்றுக்கொள்ளுகின்ற அளவிற்கு வந்திருக்கிறார்களே தவிர வேறு வளர்ச்சியில்லை. தமிழ் நாட்டில் தமிழ் இசை என்பது, உரிமை இதைத் தவிர வேறு எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை; எந்த இசையை யார் வேண்டுமானாலும் விரும்பலாம். அதிலே தவறில்லை.



**ஆனால் எங்களிடத்திலே இந்த இசையைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இந்த விழாவின்மூலம் நான் வைக்கின்ற வேண்டுகோள். இந்த இசை இன்றைக்கு எங்கே இருக்கிறது! அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? என்று நான் சரியாக-துல்லியமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எங்களைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு எட்டாத தூரத்திலே இருக்கின்றது. அதனை எங்களிடத்திலே கொண்டு வாருங்கள்; அல்லது எங்களையாவது அந்த இடத்திற்கு உயர்த்துங்கள். இந்த இரண்டையும் நீங்கள் செய்யவில்லையானால் தமிழ் இசை தமிழ் இசை என்று ஆண்டிற்கு ஒரு முறை கூடிப் பேசுவதுதான் பலன் அளிக்குமே தவிர வேறு நாம் நிச்சயமான பலனை எதிர்பார்க்க முடியாது.**

இன்றைக்கு இசையைப் பற்றிப் பேசுகின்றபோது எது சாஸ்திரிய சங்கீதம்? எது கர்நாடக இசை? எது இந்தக் காலத்திலே கலப்படமாகியுள்ள இசை என்ற ஆராய்ச்சிகளில் எல்லாம் இசை அறிஞர்கள் ஈடுபடுகின்றார்கள். எங்களுக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது. எங்களுக்கு இசை என்பதற்கு அடிப்படை இலக்கணம் என்னவோ அதுதான் தெரியும். இசை என்பது, இன்பத்தின் அடிப்படையிலே வந்தது என்று நீதிபதி அவர்கள் சொல்வார்களேயானால் அந்த இன்பத்தை எங்களுக்கு அளியுங்கள். இசை என்பது நம்மை இசைய வைப்பது; அதனால்தான் அதற்கு இசை என்று பெயர் என்று நீங்கள் எடுத்துச் சொல்வீர்களேயானால் எங்களை இசைய வையுங்கள். எங்களை உங்கள் இசை இன்பத்திற்கு இழுத்துச் செல்லுங்கள். ஏனென்றால் நாங்கள் எங்கோ இருக்கின்றோம். நீங்கள் எங்கோ இருக்கின்றீர்கள். தயவு செய்து இந்தச் சிந்தனையை உங்கள் முன்னாலே நான் வைக்க விரும்புகின்றேன். இந்த இயக்கத்திற்காக ஈடுபட்டுக் காலகாலமாகப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு தொண்டன் என்ற முறையிலே கேட்கின்றேன். நாம் சிந்திக்கவேண்டிய கட்டத்திற்கு இப்போது வந்திருக்கின்றோம். இன்றைக்கு இசையைப் பற்றி விமர்சிக்கின்றபோது, இங்கே பெரும் புலவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்; நேற்றுக் கூட இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் அவர்கள், இந்த சாஸ்திரிய சங்கீதம் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார்கள். நாங்கள் அந்தக் கருத்திலிருந்து மாறவில்லை. ஆனால் எங்களை இசைய வையுங்கள், எங்களுடைய அன்பைப் பெறுங்கள், எங்களுக்கு அரவணைப்புத் தாருங்கள்; **கோடானுகோடி மக்கள் இந்த நாட்டிலே வாழ்கின்றார்கள். பாமர மக்களான அவர்களுக்கு இந்த இசையின் ஆற்றலை உணர்த்துங்கள். இல்லையானால் அவர்களை யாரோ இழுத்துக் கொண்டு போகின்றார்கள் என்று நீங்கள் கவலைப்பட்டால் காரியம் நடக்காமல் இருக்காது.**


இந்த இசைப் பேச்சு வருகின்றபோதெல்லாம் முன்னாலே வந்து நிற்கின்ற ஒன்று, திரைப்பட இசை. சென்ற ஆண்டு டாக்டர் ம.பொ.சி. அவர்கள், முன்னாலே பேசியவர்கள் ''பாப்மியூசிக்'' கைப் பற்றிப் பேசியமையால் அதனை எடுத்துக் கொண்டு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். நான் அதற்குக் கூடப் போகவில்லை. திரைப்பட இசை, இன்றைக்கு இசையைக் கெடுத்துவிட்டது என்கின்ற வாதத்தை வைத்து நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நான் உங்களுக்கு ஒரு சிறிய கணக்கைச் சொல்லுகிறேன். இந்தத் தமிழ் இசை தோன்றிய முப்பத்தேழு ஆண்டுக் காலத்தில் அல்லது நாற்பது ஆண்டுக்காலத்தில் ஏறத்தாழ திரைப்படத் துறையிலே இருபதாயிரம் பாடல்கள் வந்திருக்கின்றன. இது சாதாரண விஷயம் அல்ல. அவற்றிற்கு

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.**

**முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று; நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு ஆகும்.**

***அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.***

**தன்னை அடுத்த பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்குபோல், ஒருவனுடைய நெஞ்சத்தில் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும்.**




இசையும் அமைக்கப்பட்டிருக்கின்றது. 40 ஆண்டுகளுக்கு முன்னாலே நாம் சங்கீதக் கச்சேரியிலே போய் உட்கார்ந்தால். அந்த மிகப் பெரிய வித்துவான் வாதாபி கணபதீம் என்று ஆரம்பித்து அதிலேயிருந்து பாடி ''நீநாமரூப முனகு'' என்று முடிப்பார். இன்றைக்கும் அப்படித்தான். இந்த இலக்கணத்திலேயிருந்து மாறி வந்திருக்கின்றவர்கள் எத்தனை பேர்! எனக்கு டாக்டர் செம்மங்குடி அவர்களின் பாட்டுப் பிடிக்கும். நான் அவர்களுடைய பாட்டினைக் காரைக்குடிக்கு அருகிலே உள்ள நாச்சியாபுரத்திலே ஒரு திருமணவீட்டில் 1940ஆம் ஆண்டில் கேட்டிருக்கின்றேன். நான் 60வது ஆண்டிலே 70வது ஆண்டிலே அவர்களுடைய கச்சேரியைக் கேட்கின்றேன் என்றால் நான் அன்றைக்குக் கேட்ட அதே கீர்த்தனத்தைத்தான் கேட்க முடியும் என்ற நிலைமையை நீங்கள் எங்களைப் போன்ற சாதாரணமானவர்களுக்குத் திணித்தால் நான் மீண்டும் டாக்டர் செம்மங்குடி அவர்கள் பாடுகின்றார்கள் என்றால் இந்தப் பக்கம் வருவேன் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? நான் இங்கே அவர்களின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் என்பதனால் அவர்களைக் குறை கூறுகிறேன் என்று எண்ணிவிடாதீர்கள். சான்றுக்காக எடுத்துக்கொள்ளுகிறேன். பத்திரிகைக்காரர்களோ மற்றவர்களோ தவறாக எண்ணக்கூடாது, காரணம் நான் உரிமையோடு அவர்களுக்கு என் கருத்தைச் சொல்லுவதற்கு உரிமை பெற்றிருக்கிறேன். அதனால் அவர்கள் பெயரைச் சொல்லுகின்றேன். மற்றவர்களைப் பற்றிச் சொன்னால் கொஞ்சம் கோபம் கூட வந்துவிடும்.

**புதியன படைக்க ஆதரவு தருக!**

நான் முன்னாலே சொன்னதைப் போல நான் ஒரு சாதாரண பாமரன். எங்களைப் போன்றவர்களை உங்கள் பக்கம் இழுப்பதற்கு என்ன செய்கின்றீர்கள்? சினிமாப்பக்கம் போகாதீர்கள், என்றால் வீட்டிலே இருப்பவர்கள் நல்ல இசை உணர்வுகளை ஊட்டினால்—மற்றவர்களை நான் திரும்பிப் பார்க்க மாட்டேன்.

சினிமாப் பாட்டைக் கேட்காதே என்றால் எவனும் வம்புக்காகவா போய்ச் சினிமாப் பாட்டைக் கேட்கின்றான்? 40 ஆண்டுக் காலத்தில் வெளி வந்த 20 ஆயிரம் திரைப் பாடல்களில் ஒரு பாடலைப்போல மற்றொரு பாடல் இல்லை. சாமாராகத்திலே ஒரு பாட்டு என்றால், சுத்த தன்யாசியிலே ஒரு பாட்டு என்றால், சங்கராபரணத்திலே ஒரு பாட்டு என்றால், நீங்கள் பிடித்த கோட்டிற்குள்ளேயே நிற்க வேண்டுமென்றால் அந்த எல்லையை விட்டுப் போகக்கூடாதென்றால் ஒரு சங்கராபரணத்திலே எத்தனை விதமான பாட்டுக்கள் போடமுடியும்? ஒரு கல்யாணியிலே எத்தனை விதமான பாட்டுக்களைத் தருவீர்கள்? கல்யாணியிலேதான் சாஸ்திரிய சங்கீதத்திலேதான் சினிமாப் பாட்டைப் போடவேண்டுமென்றால் எத்தனை பாட்டைப் போட முடியும்? ஆகையால் வரன்முறையே வேண்டாமா? என்று கேட்காதீர்கள். **காலம் எப்படி மாறுகிறது? நாம் எப்படி மற்ற விஷயங்களிலே மாறுகிறோமோ அதைப் போல இசையையும் மாற்றுவதற்குத் தயவு செய்து அனுமதியுங்கள்.** நாம் மாற்றிக் கொண்டிருக்கிறோமா இல்லையா? அன்றைக்குப் போட்ட சட்டையையா இன்றைக்கும் போட்டுக் கொண்டிருக்கிறோம்? வெள்ளுடைதான் நம்முடைய நாட்டிற்குப்பெருமை சேர்ப்பது என்று தொடங்கினார்கள். அதுதான் தூய்மையானது. ஆனால் அந்த நெறியில் நின்றோமா? இளைஞர்கள் மட்டுமல்ல. வயோதிகர்கள் கூடச் சட்டையின் வண்ணங்களை மாற்றிக் கொள்ளவில்லையா? உடையிலே மாற்றம் வேண்டும்; உணவிலே மாற்றம் வேண்டும்; பழக்க வழக்கத்திலே மாற்றம்

வேண்டும். இரயிலிலே போவதானால் நேரம் ஆகின்றது, அதனால் விமானத்திலே போக வேண்டும். விமானத்தைவிட இன்னும் வேகமாகச் செல்வதற்கு வேறு ஏதாவது கிடைக்காதா என்று பறந்துகொண்டிருக்கின்றோம். ஆனால் இசையிலே மாத்திரம் இது 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றியது, இது 200 ஆண்டுகளுக்கு முன்னாலே மும்மூர்த்திகள் உருவாக்கிய இசை, இதிலேயிருந்து மாற மாட்டோம் என்று நீங்கள் சொல்வீர்களேயானால், நாம், பெரியவர்கள் சொல்லுகிறார்கள்; நாம் அவர்கள் பக்கத்திலே போகக்கூடாது. அவர்களுக்கு அவமரியாதை செய்யக்கூடாது. ஆகவே நமக்கு எது சாதகமாகக் காதுக்கு இனிமையாக இருக்கின்றதோ அங்கே போவோம் என்று இந்த நாட்டு மக்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆகவே இதனைத் தடுத்து நிறுத்த முயல்வதில் பயன் இல்லை. எங்கே மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்ப இசை அறிஞர்கள் வேண்டிய மாற்றத்தை உருவாக்கித்தர வேண்டும்.



சென்ற ஆண்டிற்கு முன் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சில அறிவிப்புகளைத் தந்தார்கள். அந்த அறிவிப்புக்களிலே பல செயலாக்கப்பட்டு வருகின்றன அதிலே ஒன்று புதிய பண் அமைப்பவர்களுக்கு அரசாங்கம் பரிசளிக்கும் என்பதாகும். அதில் சில கருத்து மாறுபாடுகள் வந்திருக்கின்றன. பெரியவர்கள் எல்லாம் அதுபற்றிய கருத்துக்களைத் தெரிவித்து உள்ளார்கள். நான் தலை வணங்கி ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் இராகங்கள் ஏற்கெனவே வந்துவிட்டன. ஆயிரக்கணக்கிலே, நூற்றுக்கணக்கிலே இருக்கின்றன. இப்பொழுது கூட தாளங்கள் எத்தனை என்று வாதம் வந்தபோது பழக்கத்தில் இருப்பது இத்தனை என்று வழுவூராரும், டாக்டர் செம்மங்குடி அவர்களும் சொல்லியதை நான் கேட்டேன். ஆகவே, இனிமேல் இராகத்தைப் பற்றி நாம் புதிதாக ஆராய்ச்சி செய்யவே தேவையில்லை என்று நீங்கள் முடிவு கட்டி விடுவீர்கள் என்றால், நான் எங்கேயாவது காதுக்கு ஒரு இனிமையான பாட்டைக் கேட்கப் போகின்றேன். ஆனால், அதற்கும் என்னை விடமாட்டேன்; அடைத்துப் போடுவேன் என்று சொன்னால் என்ன நியாயம்! ஆனால் நான் சங்கீத வித்துவான் அல்ல! ஒரு சந்தேகம்! இந்த இராகங்களைப் புதிதாகக் கண்டுபிடிக்க முடியுமா? முடியாதா? எனக்குத் தெரியாது. ஆனால், தோடி ராகம் போன்ற சில இராகங்களின் பெயர்களை அறிந்திருப்பவன், இளமையிலே பாடியிருக்கிற காரணத்தாலே, இராசரத்தினம் பிள்ளை அவர்கள் நாதசுரம் வாசிக்கும்போது தோடி ராகம் கேட்டிருக்கின்றேன். அதையே டாக்டர் எம்.எஸ். பாடும்போதும் கேட்டிருக்கின்றேன். டாக்டர் செம்மங்குடி பாடும்போதும் கேட்டிருக்கின்றேன். மதுரை சோமு பாடும்போதும் கேட்டிருக்கின்றேன். தோடி இராகத்திற்கு ஒரே ஆரோகணம் அவரோகணம்தான். ஆனால் இந்த நாலுபேர் பாடுகின்றபோது என்னுடைய உணர்விலே மாற்றத்தை ஏற்படுத்துகின்றார்களே அதற்கு என்ன பெயர்? புதிய இராகத்தைக் கண்டுபிடிக்க முடியாது. இது என்றைக்கோ முடிந்துவிட்ட ஒன்று. அதற்குமேல் யாருமே முயலக்கூடாது என்று பெரியவர்கள் தீர்மானித்துவிடுவீர்களேயானால் ஒரே ஆரோக அவரோகணத்தை வைத்துக் கொண்டு இராசரத்தினம் பிள்ளை அவர்கள் வாசிக்கும் தோடி எப்படி வந்தது! அதனையே எம்.எஸ்., டாக்டர் செம்மங்குடி, மதுரை சோமு ஆகியோர் எப்படிப் பாடுகிறார்கள்? ஆகவே இந்த ஒரு இராகத்திற்குள்ளேயே அவர்களின் உணர்வுகளை மாற்றிக் காட்ட முடியும். ரசனையை மாற்றிக் காட்ட முடியும் என்றால் இதிலேயிருந்து ஒருவன் மேலே சென்று இன்றைக்குத் திரைப்பட இசையை அமைக்கிறான். ஆனால் கொஞ்சம் காரசாரமாக இருக்கும்; அவ்வளவு தான் !

காப்பி குடிப்பவர்களில் பல்வேறு வகையினர் இல்லையா? சிலருக்குப் பால் அதிகம் வேண்டும். வேறு சிலருக்கு டிக்காஷன் அதிகம் வேண்டும். இன்னும் சீனி மிகுதியாக வேண்டும். மற்றும் சிலருக்கு சீனி குறைவாக வேண்டும். வேறு சிலருக்கு சீனியே கூடாது. என்றாலும் அதற்குக் காப்பி என்றுதானே பெயர். நாம் உடையை அணிந்து கொள்வதிலும் எவ்வளவு வேறுபாடுகள் வைத்துள்ளோம் என்றாலும் உடை என்றுதானே சொல்கின்றோம். ஆகவே கால மாற்றத்திற்கு ஏற்றவாறு இசையை மாற்றுவதற்கு அனுமதித்து சாதாரண பாமர மக்களை இந்த இசையின் பக்கம் இழுப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

***உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்***
***எண்ணப் படவேண்டா தார்.***

**கள்ளை உண்ணக் கூடாது; சான்றோரால் நன்கு எண்ணப்படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ண வேண்டுமானால் உண்ணலாம்.**

*நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு.*

**முயற்சி செய்து தேடாமலே தரும் வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர்; தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல.**


### திரைப்பட இசை

திரைப்பட இசையைச் சாதாரணமானதாக எண்ணிவிடாதீர்கள். ஏறத்தாழ 20,000 திரைப்பாடல்களைப் பத்து, பதினைந்து இசையமைப்பாளர்கள்தான் இசை அமைத்திருக்கிறார்கள். கிட்டப்பா அவர்கள் பாடிய 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்' என்னும் பாட்டை நினைக்கும்போது அது என்றைக்கும் இன்பம் தரும் பாட்டாக— இன்னும் எத்தனை ஆண்டுகாலம் கழித்தாலும் எப்படித் தொல்காப்பியத்தை - குறளை- சிலப்பதிகாரத்தை மாற்ற முடியாதோ அதைப் போல நிரந்தரத் தன்மையுள்ள ஜீவனுள்ள பாட்டாக இருக்கின்றது. ஆனால் ஒரு கிட்டப்பா அத்தகைய ஒரு பாடலைத்தான் பாட முடியும். எல்லோரும் பாடமுடியாது. எனவே எங்களைப் போன்ற சாதாரண மக்கள் இசையின் பக்கத்தில் வருவதற்கு வழி வகுத்துத் தாருங்கள். அவ்வாறு செய்தால்தான் தொல்காப்பியத்திலே சொல்லப்பெற்ற இசை, சிலப்பதிகாரத்திலே விரித்துப் பாடப்பெற்ற இசை என்று பெருமையோடு நாம் சொல்லிக் கொள்ளுகின்ற பழம்பெரும் இசையைக் காப்பாற்ற முடியும்.

### தமிழ் இசை-விளக்கம்

**இன்றைக்கு தமிழ்இசை வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதமே கிடையாது. ஆனால் தமிழ் இசை கூடாது என்ற இயக்கம் மௌனமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த மௌன இயக்கத்திற்குப் பெரியவர்கள் ஆதரவு தரக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.** தமிழ்நாட்டிலே தமிழிலே பாடுவது தான் தமிழ்இசை என்று சொல்லுகிற கருத்தை நாம் இவ்வளவு நாளாகப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு கருத்தை இந்த மன்றத்தின் முன்னாலே உங்கள் பரிசீலனைக்கு வைக்கிறேன். இது தமிழ்ப் பாடல்களைப் பாடுகின்ற தமிழ் இசைதான் இந்த இயக்கத்தினுடைய நோக்கமா? அல்லது தமிழ் இசை என்பதே தமிழ்நாட்டில் உருவான இசைதான்; அது தான் பழமையானது. அதனைத் தவிரப் பழமையான இசை வேறு இல்லையா? இதுதான் நமது இலட்சியமா? இந்துஸ்தானி இசையைக் கொண்டு வந்து தமிழிலே பாடுவதை விரும்புகின்றோமா? இசை யென்றாலே சங்கீதமென்றாலே தமிழ்நாட்டிலே தான் உருவாயிற்று என்று நாம் நிரூபித்து அதனை நம்முடைய வாழ்க்கையிலே கொள்ள விரும்புகின்றோமா? இன்றைக்குப் பாடுவதற்குப் பெயர் கர்நாடக இசை என்று செல்லுகிறார்கள். அது ஒரு பகுதியை-நிலப்பரப்பைச் சுட்டிக்காட்டும் பெயராக அமைந்திருக்கிறது. கர்நாடகம் என்பதற்குப் பெரும்புலவர்கள் ம.பொ.சி. யைப் போன்றவர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். கரைநா⌒ அதனாலே கர்நாடகம் என்று சொல்லுகிறார்கள். மராட்டியத்தைத் தாண்டிய பிறகு கருப்பு மண்ணாக இருந்த காரணத்தால் கர்நாடகம் என்று பெயர் வைத்தார்கள் எனச் சிலர் சொல்லுகிறார்கள். நான் அதற்குள்ளே நுழையவில்லை. கர்நாடக இசை என்பது ஒரு பகுதி இசை என்று சொல்லுகிறார்களே அதனைப் போல நாம் இதனைத் தமிழ் இசை என்போமா? தமிழன் இசை என்போமா; தமிழகத்தின் இசை என்போமா? இந்த இசையை மொழியோடு இணைக்கின்ற காரணத்தால் மொழியின் மீதும் துவேஷம் வருகின்றது. அதனாலேதான் இதனைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சங்கீதம் என்றால் மொழியே தேவையில்லை என்றார்கள். அந்த விவாதம் இப்போது இல்லை. சங்கீதம் என்றால் இலக்கணம் தான் வேண்டும். வேறு எதைப் பற்றியும் கவலை இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சங்கீதம் என ஒன்று உருவான போது தமிழ் இசை தான் தமிழகத்தின் இசைதான் உலகத்திலேயே மிகப் பழமையான இசை என்று நாம் சொல்வோமானால் இதனை மொழியோடு இணைத்துச் சொல்ல விரும்புகிறோமா நம்முடைய பரம்பரை இசை என்று சொல்ல விரும்புகிறோமா? சங்கீத மும்மூர்த்திகள் 17வது 18வது நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். அவர்கள் தெலுங்கிலும் வடமொழியிலும் பாடியிருக்கிறார்கள். அவற்றைப் பார்த்தவர்கள் தமிழ் இசை என்பது இந்த மொழியில்தான் இருக்கிறதோ என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அதில் தவறில்லை. அதைத் தொடர்ந்துதான் நாம் தமிழ் என்று பேச ஆரம்பித்தோம். ஆனால் இதற்கு முன்னாலேயே ஆதிமூர்த்திகளும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தமிழிலே தான் பாடினார்கள். அவர்களும் தஞ்சை மண்ணிலேதான் பிறந்தார்கள். முத்துத்தாண்டவர் அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை இவர்களெல்லாம் சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஒரு நூற்றாண்டிற்கு முந்தியவர்கள். அந்தப் பாட்டை இன்றைக்கும் நாம் பாடிக் கொண்டிருக்கிறோம். எம்.எஸ். அவர்கள் 'யாரோ இவர் யாரோ' என்று பாடுவார்களே இந்தப் பாடல் எல்லாம் நம் சங்கீத மும்மூர்த்திகளுக்கு முன்னாலே வந்தவைகள். அவைகளையெல்லாம் கொண்டு வந்தால்தான் இசை என்றாலே தமிழகம்தான் உருவாக்கியது தமிழ் நிலத்திலே தான் விளைந்தது, தமிழ் மண்ணிலே தோன்றியது என்ற உணர்வை வளர்த்தால் தமிழைத் தவிரப் பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குக் கொஞ்சம் கோபம் வராமல் இருக்குமோ என்ற ஒரு ஆசை எனக்கு ஏற்படுகின்றது. தமிழ் என்று சொன்னால் தெலுங்கர்களுக்குக் கோபம் வருவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் நம் மாண்புமிகு நீதிபதி அவர்கள் சொன்னது போல தமிழ் பேசுகிறவர்களுக்கே இப்போது தமிழ் என்றால் கோபம் வருகிறது.



நாம் ஒரு மையக் கட்டத்திலே வந்திருக்கிறோம். இந்தக் காலத்திலேதான் தமிழர்களை இணைத்தாக வேண்டும். நான் ம.பொ.சி. அவர்களிடம் தமிழர்களைச் சேர்க்கின்ற ஆற்றல் பெற்ற சின்னமாக நீங்கள் விளங்கிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று சொல்வது உண்டு. எனவே, **இக் காலத்தில் தமிழ் இசையை விவாதத்திற்கு உரிய இயக்கமாக வளர்க்கக்கூடாது. இது தமிழகத்தினுடைய இயக்கம். தமிழ் மக்களுடைய இயக்கம் என்று மாற்ற வேண்டும்.** தெலுங்கிலே பாடுபவர்கள் இருந்தால் அங்கே இருந்து பாடிக் கொண்டிருக்கட்டும். ஆனால் தமிழகத்தினுடைய இசைதான் மிகப் பழமையான இசை; தமிழ் மண் தான் உலகிற்கு எல்லாக் கலைகளையும் தந்தது. சீவக சிந்தாமணியில் சீவகன் யாழுக்கு உரிய மரத்தைச் சுண்டிப் பார்த்து அறிந்து கொண்டான் என்று இலக்கியத்தில் கலையைப் பற்றிக் கூறியிருக்கின்ற தமிழ் மண் அல்லவா இது! மத்தளம் எப்படிப் பட்ட கட்டையிலே செய்யவேண்டும், எவ்வாறு வார் போடவேண்டும், என்றெல்லாம் எவ்வளவோ இலக்கணத்தை அறிந்தவர்கள் தமிழர்கள். உலகத்திலே ஒலியிலிருந்து இசையைக் கண்டுபிடித்தவன் தமிழனைத் தவிர வேறு யார்? மூங்கிலைத் துளைத்துக்கொண்டு வண்டு போகிறது, அந்தத் துளையில் காற்று நுழைகிறது. அது வெளியே வரும்போது ஒரு இசையோடு வருகிறது. இதனைக் கேட்டவர் குழலைக் கண்டுபிடித்தார். நாண் ஏற்றிய வில்லிலேயிருந்து எழுகின்ற நாதத்தில் அல்லவா நரம்புக் கருவிகள் கண்டுபிடித்தார்கள்? இவற்றையெல்லாம் நான் ஆராய்ந்து சொல்லவில்லை. நம் நீதிபதி அவர்களும் ம.பொ.சி. அவர்களும் எழுதியதைப் படித்து விட்டுச் சொல்லுகிறேன். இந்த அளவிற்குத் தெரிந்து கொண்டிருக்கிற எங்களை இன்னும் கொஞ்சம் தெரிந்தவர்களாக மாற்றுங்கள். நீங்களும் கொஞ்சம் கீழே இறங்கி வாருங்கள். எங்களையும் கொஞ்சம் மேலே உயர்த்துங்கள். இரண்டு பேரும் ஒரு இடத்திலே வந்து சந்திப்போம். அதற்காக இந்தத் தமிழ் இசைச் சங்கம் முயல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

செம்மங்குடி அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். நீங்கள் கலைமாமணி பட்டம் தருகின்றீர்கள். பரிசு தருகின்றீர்கள். ஆனால் 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு ஓய்வு ஊதியம் தரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதன் தொடர்பாகப் பேசும்போதுதான் பாபநாசம் சிவன் அவர்களின் வாழ்க்கையைப்பற்றிச் சொன்னேன். தமிழக அரசு கலைஞர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்து வருகிறது. எழுத்தாளர்களுக்கும், நாடக நடிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் தருகிறதென்றால் இசைக் கலைஞர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று நான் அவருடைய அறிவுரையை—ஆலோசனையை ஆணையாக ஏற்றுக்கொண்டு அதை மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று இந்த அரசு ஏற்றுக்கொள்ளுகின்றது என்று ஒப்புக்கொண்டேன்.

நம் தமிழ் இசைச் சங்கம் தமிழ் இசை தமிழ் இசை என்று வெறி பிடித்து அலையவில்லை. இசைக் கலைஞர்கள் எங்கே இருந்தாலும் அவர்களைக் காப்பாற்றும் கரங்களாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லுகிற உணர்வைக் காட்டுகிற வகையில் இந்தக் கடிதம் எனக்குத் தரப் பெற்றது. ஏறத்தாழ 10 ஆண்டுகள், மாதம் 100 ரூபாய் வீதம் பாபநாசம் சிவன் அவர்களுக்குத் தமிழ் இசைச் சங்கம் கொடுத்து வந்திருக்கின்றது. அவர்களுடைய கடைசி மூச்சு காற்றோடு கலப்பதற்கு முதல்நாள் தான் அந்த மாதத்திற்கு உரிய தவணை தமிழ் இசைச் சங்கத்தால் கொடுக்கப்பெற்று அது அவர்களுக்குப்போய்ச் சேர்ந்தது; என்றாலும் ஒரு சிறந்த கலைஞரை மாதம் ரூபாய் முப்பத்து ஐந்திற்கும் நூறு ரூபாய்க்கும் ஏங்குமாறு தமிழகம் இந்த 20ஆம் நூற்றாண்டில் வாழ வைத்துவிட்டதே, வெட்கப்பட வேண்டாமா என்பதுதான் நான் கேட்ட கேள்வி! நீங்கள் ஆதரிக்க வேண்டிய கலைஞரை ஆதரிக்காமல் ஒரு வேலியைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தால் இலட்சோப லட்சம் பாமர மக்கள் இவர்களை ஆதரிக்காமல் வேறு யாரையோதான் ஆதரிப்பார்கள். தயவு செய்து இதனை அபாய அறிவிப்பாக எடுத்துக் கொள்ளவேண்டுகிறேன். இதற்கு நீங்கள் வழிகாட்டியாக வேண்டும். எங்களுக்கு வழி தெரியாது. நாங்கள் எல்லாம் சிறியவர்கள். எதிலேயோ நாங்கள் எல்லாம் மயங்கிச் செல்லுகிறோம் என்று நீங்கள் சொல்லுவது உண்மையானால் அவ்வாறு மயங்கிச் செல்வதை நீங்கள் தடுத்துத் திருத்துவதற்கு வழியைக் காட்டுங்கள். இசையானது இன்பத்தை தருகின்றது என்று சொல்வீர்களேயானால் அந்த இன்பத்தைத் தருவதற்கு வேண்டுவன செய்யுங்கள் என்று கோடிக்கணக்கான பாமர மக்களின் பிரதிநிதியாக இருந்து இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுத்து முப்பத்து ஏழாம் தமிழ் இசை விழாவினைத் தொடங்கி வைக்கின்றேன்.

வணக்கம்.

*[சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் 21.12.1979 அன்று, 'தமிழ் இசை முப்பத்து ஏழாம் விழாவைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து]*

*வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்*
*தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.*

**வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது.**

# அன்னைத் தமிழுக்கு 'அகரமுதலி'

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல.*

**அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்ப மாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை, புகழும் இல்லாதவை.**

அகரமுதலி' என்றால் என்ன?

அதைத் தெரிந்து கொள்வதற்கு முன், அதற்குப் பின்னணியிலே உள்ள ஒரு வரலாற்றை நாம் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

பண்டைக்கால நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவமாகவே காட்சியளிக்கின்றன. அவை எளிதில் பொருள் காண இயலாத செய்யுட்களாகவும் அமைந்துள்ளன. அவற்றின் பொருளைத் தெரிந்து கொள்வதற்குத் துணையாக நிகண்டுகள் இருந்தன. 'நிகண்டு' என்பதற்கு அருஞ்சொற் பொருள் கூறும் நூல் என்று கூறலாம்.

திவாகர முனிவரால் எழுதப்பெற்ற திவாகர நிகண்டு, பிங்கல முனிவரால் ஆக்கப்பெற்ற பிங்கல நிகண்டு, மண்டல முனிவரால் செய்யப் பெற்ற சூடாமணி நிகண்டு ஆகியவை குறிப்பிடத் தக்கன. இம்மூன்று நிகண்டுகள் வழிவந்த நூலே 1594-லிருந்து அகராதி நிகண்டு அல்லது 'அகராதி' எனப்பட்டது.

## 'அகராதி' என்றால் என்ன?

அகராதி-அ என்ற எழுத்தினை முதலாகக் கொண்டு, சொற்களை நெடுங்கணக்கு முறைப்படுத்தி அமைத்த நூல். அகரம் + ஆதி எனப் பிரிக்கலாம்.

தமிழ்நாட்டில் அகராதிக்கு அடிகோலியவர், மேலைநாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவரே. அவர் நான்கு வகையாகப் பகுத்துத் தொகுத்து அச்சிற்பதித்ததே 'சதுரகராதி' ஆகும். அதன் பின்னரே தமிழகத்தில் இக்கால அகராதி தொகுக்கும் முறை வழக்கில் வந்தது.

எத்தனையோ அகராதிகள் இன்று வெளிவந்துள்ளன. யாழ்ப்பாண அகராதி, கதிரைவேற்பிள்ளை தமிழ் மொழியகராதி, தமிழ்ச் சங்க அகராதி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலம்-தமிழ்ச் சொல்லகராதி, கழகத் தமிழகராதி போன்றவைகளை நாம் பார்க்கிறோம்.

## எத்தனை அகராதிகள்....

1786ல் ஆங்கில மலபார் (தமிழ்) அகராதி ஒன்று வெளிவந்தது. பெப்ரீஷியஸ் என்பவரால் பதிப்பிக்கப்பட்டு, சென்னை வேப்பேரியிலிருந்து வெளிவந்தது இது.

1844ல் ஆங்கிலம்-தமிழ் அகராதி ஒன்று வெளிவந்தது. அருள்திரு ஜெ.நைட், அருட்திரு எஸ். ஸ்பால்டிங் ஆகியோர் வெளியிட்டது இது.


1936ல் ஆங்கிலம் -தமிழ் அகராதி ஒன்று வெளிவந்தது. அது 'ஏ' முதல் 'Sparre' என்ற சொல்வரையில் மட்டுமே இருந்தது. திரு பி. இராமநாதன் அவர்கள் இதனைத் தயாரித்திருந்தார். இவை எதுவும் நமக்கு இன்று கிடைக்கவில்லை!

1851ல் 'இங்கிலீஷ்- தெலுங்கு தமிழ்ச் சொற்கள் தொகுப்பு' வெளிவந்தது. திரு. லூயிஸ் என்பவருடைய மாணவரும், திரு டி. எம். கிருட்டிணசாமிப் பிள்ளையும் சேர்ந்து உருவாக்கிய இத்தொகுப்பு 260 பக்கங்கள் கொண்டதாகும்.

1880ல் 'கொத்தனாரது ஆங்கிலத் தமிழ்ச்சொல் அட்டவணை' ஒன்று வெளிவந்தது. திரு டி.எஸ். வீராசாமி முதலியார் அவர்கள் வெளியிட்ட இந்நூல் 70 பக்கங்கள் கொண்டதாகும்.

இவையெல்லாம் அகராதி உருவாக்கத்திற்கு முன்னோடிகளாக அமைந்தன. இம்முயற்சி மென்மேலும் பல்கிப் பெருகிடும் வண்ணம் இன்று பல்வேறு அகராதிகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் தமிழ் அன்னைக்குச் சூட்டும் மணிமகுடமாக வெளிவரவிருக்கின்றது, ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' (Tamil Etymological Dictionary). 'அகராதி' என்பதன் தனித்தமிழ் வடிவமே 'அகரமுதலி'

**மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்**



## அகரமுதலி!

சென்னை எழுமூர், அரும்பொருட்காட்சியக ( Museum ) வளாகத்தில் உள்ளது, ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்'' (Directorate of Tamil Etymological Dictionary Project). கல்வித் துறையின்கீழ் செயலாற்றும் இந்த இயக்ககத்தின் இயக்குநர் மொழிஞாயிறு திரு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள். அவரது தலைமையின்கீழ், இப்பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

1974ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

முதலில் இதன் அலுவலகம் சென்னை சேத்துப்பட்டு, ஸ்பர்டாங் சாலையிலுள்ள, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன அலுவலகத்தில் ஒரு சிறிய அறையில் இருந்தது.

## நோக்கமென்ன?

'அகரமுதலி' தயாரிப்பதன் நோக்கமென்ன?

1936ல் வெளிவந்த, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலியில் (Madras University Tamil Lexicon) இல்லாத நூற்றுக்கணக்கான சொற்களைச் சேர்த்தும், அதிலுள்ள சில சொற்களில் தவறான வடிவங்களையும், சில சொற்களில் தவறான பொருள்களையும் திருத்தியும், சொற்பொருள்களை எரண முறைப்படி (Logical Order) வரிசைப்படுத்தியும், பல சொற்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள தவறான மூலங்களைத் (Root) திருத்தியும், திரவிட இனச் சொற்களை மட்டுமின்றி (Cognates) ஆரிய இனச் சொற்களையும் குறித்தும், இயன்றவரை எல்லாச் சொற்கட்கும் வேரும் (Root), வரலாறும் வரைந்தும், விரிவான முறையில் ஒரு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் (Etymological) அகரமுதலி (Tamil Etymological Dictionary) என்று வெளியிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை இத்தகைய நூல், தமிழில் வெளிவந்ததில்லை.

## அகரமுதலியின் அமைப்பு

தமிழ், உலகம் முதல் உயர் தனிச் செம்மொழியும், திராவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமுமாய் இருத்தலால் இவ்வகர முதலியில் தமிழ்ச் சொற்களும், திரவிடச் சொற்களும் மட்டுமின்றி, பல ஆரிய சொற்களும் விளக்கம் பெறும் ஆதலால், இது உலகச் சொற்பிறப்பியல் அகர முதலியகளுள் முதன்மையானதாகும்.

இது பன்னிரு மடலங்களாக (Volumes) வெளிவரும். முதல் எட்டு மடலமும் தமிழ்ச் சொற்களை மட்டும் கூறும். ஒன்பதாவது மடலம், அல்வெட்டிலும் விடுபட்ட சொற்களைக் கூறும். பத்தாவது மடலம் சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய அயன்மொழிச் சொற்களைக் கூறும்.

முகவுரை, முன்னுரை, நூல் அமைப்பு, உருப்படி (Article) அமைப்பு, எழுத்துப் பெயர்ப்புப் பட்டி (Transliteration Table) இதனை எழுத்து வேறுபாட்டுக் குறிப்பட்டி என்றும் சொல்லலாம். வினைச் சொற்களின் புடை பெயர்ச்சி (Conjugation) முறைப்பட்டி, அகர முதலியைப் பயன்படுத்தும் முறை முதலியவற்றைக்கொண்ட பகுதி ஒரு தனி மடலமாகக் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது, முதல் மடலத்தின் முதற்பகுதியாகச் சேர்க்கப்படும்.

பதினோராம் மடலம், தமிழ் அகர முதலி வரலாறு (History of Tamil Lexicography).

பண்டைக்கால முதல் வெளிவந்த அகர முதலிகளை யார் யார், எவ்வெப்பொழுது எழுதினார்கள் என்பதைப் பற்றி விரிவாகத் தனியாக வரும்.

பன்னிரண்டாம் மடலம் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகளைக் கூறும் (Principle of Tamil Etymology) அதாவது, தமிழில் சொற்கள் எந்தெந்த முறைப்படி தோன்றி வளர்ந்துள்ளன என்பது பற்றியது. சொல்லாராய்ச்சியாளர்களுக்கும், மொழியாராய்ச்சியாளர்களுக்கும் இது மிகவும் பயன்படும்.

முதலில் சொன்ன வேர், வரலாறு இவற்றிற்கு இது சான்றாக அமையும்.

'அகரமுதலி' ஆங்கிலத்தில் பலர் எழுதியுள்ளார்கள். ஆனால், தமிழில் இதுவரை விரிவாக வெளிவந்ததில்லை.

## பணி விரைவுபெற...

''பல்வேறு அயன்மொழிகளில் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. அவற்றையெல்லாம் பார்த்தபோது, தமிழிலும் அவ்வாறு வெளிவருதல் வேண்டும் என்ற எண்ணம் என்னுள் முளைத்தது. அதன் விளைவாக, இளமைக் காலம் முதலே நான் அவற்றில் கவனம் செலுத்தலானேன். அது சம்பந்தமான நூல்களை, அகரமுதலிகளை நிறைய வாங்கிப் படிக்கலானேன். அவற்றிலேயே மூழ்கித் திளைத்தேன். இன்று அரசின் சார்பிலே உலகம் முழுவதும் பரவக்கூடிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாகின்றது. அந்தப் பணியினைச் செய்வதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றேன் - என்வாழ்க்கையில் ஒரு பெரும் பேறாகவும் கருதுகின்றேன்'' என்று பெருமிதத்துடன் கூறும் திரு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள், இவ்வரிய பணியினைத் தக்கவாறு செய்வதற்குப் போதிய உதவியாளர்கள் இல்லையே என்றும் தம் ஏக்கத்தினைத் தெரிவிக்கின்றார். அதனை உணர்ந்துதான் இன்றைய தமிழக அரசு இப்பொழுது ஏழு பதவிகளுக்கு அனுமதி தந்துள்ளது. அவை: 1) மருத்துவச் சொற்றொகுப்பாளர் ( Compiler of Medical Terms ) 2. கல்வெட்டுச் சொற்றொகுப்பாளர் (Compiler of Epigraphical Terms) 3. மெய்ப்புத் திருத்தாளர் ( Proof Reader ). அகரமுதலிச் சொற்றொகுப்புப் பிரிவுக்கு இந்தப் பதவிகள். மற்றும் கணக்குத் துறைக்கு 4 பேர்.

*சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி.*

**முன்னே தான் சமனாக இருந்து, பின்பு [illegible] சீர்தூக்கும் [illegible]கோல்போல் அமைந்து, ஒரு [illegible] சாயமல் [illegible] போற்றுவது சான்றோர்க்கு [illegible] வாகும்.**

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல், கனிகள் இருக்கும் போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

இந்த எழுவர் அமர்த்தப்பட்டதும், அகரமுதலிப் பணிகள் விரைவு பெறும்.

**அகரமுதலி எப்போது வெளிவரும்?**

இப்பொழுது, முதன் மடலம் (முதற்பகுதி) அச்சிற்கு அணியமாய் (ஆயத்தமாய்) இருக்கிறது. ஆனால், இந்த அச்சு வேலைகளையும், அவைபற்றிய எழுத்து நடவடிக்கையையும் கவனிக்கப் பதிப்பாண்மை எழுத்துறவாளர் ( Editor and Correspondent ) ஒருவர் தேவை. எப்படிப் பல்கலைக் கழக அகரமுதலிக்கு (Lexicon) ராவ்சாகிப் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இருந்து அந்த அச்சுப்பணிகளையும், உள்நாட்டு வெளிநாட்டு எழுத்துப் போக்குவரத்தையும் கவனித்தாரோ, அப்படியே இதற்கும் ஒருவர் இருப்பது தேவைமட்டுமல்ல, முக்கியமானதுங்கூட.

''உலகத் தமிழ் மாநாடு இவ்வாண்டு சூன் திங்களில் நடைபெறவிருக்கின்றதல்லவா? அதற்குள்ளாகவே, முதற்பகுதி வெளிவரத்தக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். எப்படியும் அது வெளி வந்துவிடும். முதற்பகுதி சனவரித் திங்களில் அச்சகத்துக்குப் போய் விடும்'' என்கிறார் பாவாணர் அவர்கள்.

''தமிழ், சமஸ்கிருதம் உட்பட ஆரியத்திற்கு மூலம் என்ற அடிப்படையில் இந்த அகர முதலி அமையும். மூழ்கிப் போன குமரிக் (லெமூரியா) கண்டத்திலேதான் தமிழ் தோன்றியது. அதிலிருந்துதான் பல்வேறு மொழிகளும் தோன்றின. 'முகம்' என்ற சொல் சமஸ்கிருதம் என்கிறார்கள். நாம் தமிழ் என்று சொல்லுகிறோம். சமஸ்கிருதத்துக்கு மூலம் இல்லை. நமக்கு மூலமும் உண்டு, வரலாறும் உண்டு'' என்று கூறும் பாவாணர் அவர்கள், முதல் எட்டு மடலங்களுள் ஒவ்வொன்றும் ஐந்து பகுதிகள் கொண்டது. என்றும், முதற்பகுதி ஜனவரியில் அச்சுக்குச் சென்று வெளிவந்ததும், அடுத்த பகுதிகள் இடையீடு இல்லாமல் தொடர்ந்து அச்சகம் செல்லும் என்றும் கூறுகிறார்.

இந்தப் பணி குறுகிய காலத்துக்குள் முடிந்துவிடக் கூடியதல்ல. என்றாலும் எப்படியும் இப்பணி முழுமை பெற 12 ஆண்டுக்காலமாவது ஆகும்.

**ஆக்ஸ்போர்டு அகரமுதலி**

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகரமுதலி ஒன்று முடிய 70 ஆண்டுக் காலம் பிடித்ததாம்! இது 13 மடலங்களாக வெளிவந்தது. இதன் பதிப்பாளர்கள் நான்கு தலைமுறைகளாக வந்தனராம். சொற்றொகுப்புத் துணையாசிரி



**சமூகப் பணியில் கல்லூரி மாணவிகள்!**

கடந்த நவம்பர் திங்களில் பெய்த மழையின் போது, திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பண்டுதன்பட்டி இணைப்புச் சாலையில் உடைப்பு ஏற்பட்டது.

தேசிய சேவைத் திட்டத்தின்கீழ் அந்த உடைப்பை அடைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. சிவகாசி இராசரத்தினம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் அப்பணியில் ஈடுபட்டனர். பத்தே நாட்களில் உடைப்பெடுத்த இந்தச் சாலை சீர்செய்யப்பட்டது. மொத்தம் 159 மாணவிகள் இந்தச் சமூகப் பணியில் ஈடுபட்டனர்.

தேசிய சேவைத் திட்ட முகாம் நிறைவு விழாவின்போது, இந்த மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**குடிசைகளுக்கு மின் வசதி**

200 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள மண்ணால் கட்டப்பட்ட குடியிருப்புக் கூரை வீடுகளுககு மாதம் ரூ. 2-50 மட்டும் கட்டணம் வசூல் செய்து ஒரு 40 வாட் பல்படன் இலவச மின் இணைப்புக் கொடுககத் தமிழ் நாடு மின்சார வாரியம் முன் வந்துள்ளது. இந்தப் பயனைப் பெற விரும்புபவர்கள் ஒருமுறை மின் இணைப்பு தங்கள் செலவில் செய்துகொண்டு தமிழ்நாடு மின் சார வாரியத்திற்கு மனுச் செய்துகொள்ளலாம் அல்லது ரூ. 10 செலுத்தினால் முழு மின் இணைப்பையுமே தமிழ்நாடு மின் சார வாரியம் செய்துகொடுக்கிறது.

யர்களோ 400 பேர் பணியாற்றினார்களாம்! மொழிப் பற்று மிகுந்தவர்கள், சுமார் ஆயிரம் பேர்கள், ஐந்து கண்டத்திலிருந்தும் சொற்களை அனுப்பிக் கொண்டேயிருந்தார்களாம், சம்பளம் எதுவுமில்லாமல்!

### சமஸ்கிருத அகரமுதலி

சமஸ்கிருத-ஆங்கில அகர முதலி ஒன்று பூனா டெக்கான் கல்லூரியில் 1945ல் தொடங்கியது. இப்பொழுதுதான் முதல் மடலம் மூன்று பகுதிகள் வெளி வந்துள்ளன. எத்தனை மடலம் என்று திட்டமிடப்படவில்லை. இப்பணி 1990ல் முடியலாம் என்று கருதப்படுகிறது. இதில் 22 பேர் நிலையாக இருந்து பணியாற்றுகின்றனர். இக்குழுவின் தலைவர், பூனா பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர். இப்பணிக்கு இந்திய அரசு ரூ. 1 கோடி அளித்துள்ளது. மகாராட்டிர அரசும், பூனா பல்கலைக் கழகமும் ஒரு பெருந்தொகையை ஒதுக்கியிருக்கின்றன. பல்கலைக் கழக நல்கைக்குழு (University Grants Commission) ஒரு தொகையை வழங்குகிறது. 'யுனெஸ்கோ'வும் ஆண்டுதோறும் ஒரு கணிசமான தொகையை வழங்கி வருகிறது, நூல் வெளி வரும் வரை! பாரிசு நகரிலுள்ள ஒரு சமஸ்கிருதக் கழகமும் ஒரு பெருந்தொகை வழங்கியுள்ளது.

### மலையாள அகரமுதலி

மலையாள அகரமுதலியில் நிலையாக 36 பேர் பணிபுரிகின்றார்கள். சூரநாடு குஞ்சன் பிள்ளை அவர்கள் இதன் தலைவர். 1953ல் இதன் பணி துவங்கியது. அரசும், பல்கலைக் கழகமும் இணைந்து இந்த அகரமுதலியைத் தொகுக்கின்றன. பல்கலைக் கழக நல்கைக்குழு, ஆண்டு தோறும் இதன் செலவில் 100க்கு 60 விழுக்காட்டைத் தந்து உதவுகின்றது.

இந்த அகரமுதலிக்காக, இக்குழு ஊர்ஊராகச் சென்று சொற்களைத் தொகுத்ததாம். இப்படிச் சென்றுவர, 12 ஆண்டுகள் பிடித்ததாம்! 5 ஆண்டுகளுக்கு ஒரு மடலமாக வெளியிடுகிறார்கள். இதுவரை 3 மடலங்கள் வெளிவந்துள்ளன.

### கன்னட அகரமுதலி

கன்னடத்தில் ஒரு அகரமுதலி உருவாகின்றது. அதனைத் தனிப்பட்ட ஒரு இலக்கியக் கழகம் தயாரித்து வருகின்றது. இதற்கு அரசு போதிய நிதி உதவி செய்கின்றது. 18 பேர் இதில் நிலையாகப் பணியாற்றுகிறார்கள். அச்சுக்குப் போயிருக்கும் ஒவ்வொரு பகுதியையும் இருபது முறை திருத்துகிறார்களாம்!

'அகரமுதலி' உருவாக்கம் என்பது ஆழ்ந்த சிந்தனையில் உருவாவது; அயராத பணியில் வடிவம் பெறுவது. அதைத் தயாரிப்பது என்பது எளிதான செயல் அல்ல.

ஒரு குடிசையை, இன்றைக்குள் கட்டி முடித்துவிடலாம்; ஆனால், ஒரு பெரிய மாளிகையை அவ்வாறு கட்டி முடிக்க இயலுமா?

### என்ன நன்மை?

அகரமுதலி தயாரிக்க ஏராளமான பார்வை நூல்கள் (Reference Books) தேவைப்படும். மேனாட்டினின்றும் அத்தகைய நூல்களை நாம் வரவழைத்தல் வேண்டும். அத்தகு அரிய நூல்களை-அகர முதலிகளை—கலைக்களஞ்சியங்களை வாங்குவதற்கு இவ்வியக்ககத்திற்குத் தமிழக அரசு இப்பொழுது ரூ. 12,884 அளித்துள்ளது.

'அகர முதலி' வெளிவருவதால் என்ன நன்மை?

* தமிழ் வளர்ச்சியடையும்; வடமொழிப் பிணிப்பினின்று மீளும்.

* நூலாசிரியர்களுக்குச் சொற்கள் உதவும்; புதிய அறிவியல் இலக்கியம் பெருகும்.

* சொல்லாராய்ச்சியாளர்களுக்கும், மொழியாராய்ச்சியாளர்களுக்கும் வழிகாட்டும்.

* மூன்று உலகக் கலைகள் வளர்ச்சி அடையும். அவையாவன:

1. ஒப்பியன்மொழி நூல் (Comparative Philology)
2. உலக வரலாறு (World History)
3. சமுதாயப் பண்பாட்டு மாந்தர்நூல் (Social and Cultural Anthropology)

* உலக ஒற்றுமைப்பாட்டிற்கும் இது பேரளவு துணைசெய்யும்.

* இந்தித் திணிப்பு ஒழியும்

* திருக்கோவில் வழிபாடு தமிழில் நிகழும், தமிழன் அடிமைத்தனம் நீங்கும்.

### அன்னைத் தமிழுக்கு...

இவ்வாறு தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவுதற்குப் பாவாணர் தலைமையில் உருவாகும் அகரமுதலி, அன்னைத் தமிழுக்கு ஓர் அணியாரமாகும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

—பி. வி. கிரி

***காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்***
***ஞாலத்தின் மாணப் பெரிது.***

**உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.**

*அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு*
*இன்றி யமையாத மூன்று.*

**அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல் வன்மை ஆகிய இவை தூது உரைப்பவர்க்கு இன்றிய மையாத மூன்று பண்புகளாகும்.**

# குறள் குறித்து அறிஞர்கள்

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை ஈன்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. இது குறித்துத் தமிழ் மக்கள் இறும்பூ தெய்தலாம்; இறுமாப்படையலாம். ஆனால் திருவள்ளுவரைத் தமிழ் நாட்டளவில் கட்டுப் படுத்தலாகாது. அது தளையாகும்; சிறை யாகும்.

. . .

திருக்குறளின் உள்ளக் கிடக்கையை பல படக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர் வது ஒன்று. அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது.

திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக் கால உலகைப் புரக்கும் பொருள்களை அவ்வப் போது வழங்கும் பெற்றியது. அதினின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக்கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ் வேளையில் திரண்டுவரும் புது உலகமும், இனித் திரளப் போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறட் சுரங்கம் வற்றாதது.

**— திரு. வி. க.**

உலகத்திலே இருக்கிற அத்தனை இலக்கியங்களையும் ஒன்றாய்த் திரட்டி ஒரு தட்டிலே அவைகளையும், மறுதட்டிலே நம் முடைய திருக்குறளையும் வைத்து எடை போட்டுப் பார்த்தால், திருக்குறள் இருக்கின்ற தட்டு அதிகமாகத் தாழ்ந்து நிற்கிற காட்சியைக் காண்போம். அதிக அளவிற்கு வலிவு மிக்க இலக்கியக் கருவூலத்தைப் பெற்றிருப்பவர்கள் நாம். அத்தகைய இலக்கியத்தை நமக்குப் படைத்துத் தந்துவிட்டுப் போயிருக்கிறவர் வள்ளுவர்.

வள்ளுவருடைய கருத்துக்களையெல்லாம் நாட்டிலே நடமாட விடவேண்டும். திருவள்ளுவ ருடைய கருத்துக்களை இந்த நாட்டிலே பரப்ப வேண்டுமென்று சொன்னால், நாம் அத்தனை பேரும் தமிழறிந்த தமிழர்களாக வாழவேண்டும்.

**—பேரறிஞர் அண்ணா**

உலகத்திற்கே பொதுவான வழிகாட்டி நூலாக திருக்குறள் இருக்கிறது. எல்லாக் காலத் தினருக்கும், எல்லா மொழியினருக்கும், எல்லா வகுப்பினருக்கும், எல்லாச் சமூகத்தினருக்கும், எல்லாத் தரத்தினருக்கும், எல்லா நிலையின ருக்கும், துறையினருக்கும் ஏற்றதாகவும் பயன் படக்கூடியதாகவும். இருக்கிறது.


சில புலவர்கள் சில நாடுகளுக்கு மட்டுமே உரியவர்களாகப் பாடுபட்டிருக்கிறார்கள். ஆனால், உலகத்திலுள்ள எல்லாருக்கும் எப் பொழுதும் பயன்படுகிற அறிவுக்கு திருக் குறளைத் தந்திருப்பவர், திருவள்ளுவர் ஒருவர் தான்.

**— நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

தமிழர் திருநாளை ஓர் வெற்றித் திருநாள் எனலாம். ஏன் இது வெற்றித் திருநாளாகக் கருதப்படுகிறது? புதிய நெல் விளைந்து அரிசி யாகி விட்டது. கரும்பைச் சாறாக்கிச் சர்க்கரை காய்ச்சியாகி விட்டது. இரண்டையும் சேர்த்துப் பொங்கிச் சாப்பிடுகிறோம். உழைப்பின் முழுப் பயனை இன்று பெறுகிறோம். மஞ்சளும், இஞ்சி யும், வானுயர் கரும்பும் எல்லாம் விளையும் காலம். வீடு புதிதாகிறது. ஆளும் புதியவனாக மாறு கிறான். எங்கும் புதிய நெல், புதிய பானை, புதிய உடை, புதிய மலர், புதிய வளை, புதிய இல்லம் காணப்படுகின்றது. இதைப் பார்த்துத் தமிழ் மக்கள் இந்நாளை இயற்கையோடு இயங்கும் திருநாளாகக் கருதி, திருவள்ளுவர் ஆண்டின் தொடக்க நாளாகவும் எண்ணிக் கொண்டாடுகிறார்கள். நாமும் இந்நாளை இன்று சாதி, மத, அரசியல், கட்சி வேறுபாடு களின்றிக் கூடிக் கொண்டாடுகின்றோம். இதில் எவ்வளவு மகிழ்ச்சியிருக்கிறது!

— முத்தமிழ்க் காவலர்
**கி. ஆ. பெ. விசுவநாதம்**
("வள்ளுவர் உள்ளம்" என்ற நூலிலிருந்து)

# பாம்பன் பாலத்திட்டம்



இராமேஸ்வரம் தீவை இந்தி யத் தீபகற்பத்துடன் இணைக்கும் இப் பாம்பன் சாலைப் பால மானது, முற்றுப் பெற்றவுடன் நெடுஞ்சாலைத் துறையின் சாத னையாக மட்டுமின்றி தமிழகத் தின் சாதனையாகவே அமையும்.

இந்தியாவின் மிகப் பெரும் பாலங்களோடு ஒன்றாக இணை கின்ற பேறு இப் பாம்பன்சாலை பாலத்திற்குக் கிட்டுகிறது. பல பாலங்கள் பெரும் ஆறுகளின் எல்லைகளிலும் உப்பங்கழிகளி லுமே கட்டப்பட்டுள்ளன என் றாலும், பாம்பன் சாலைப்பாலம் மட்டுமே பரந்த கடலில் கட்டப் படும் முதல் சாலைப் பாலம் ஆக விளங்குகின்றது.

இப்பாம்பன் பாலமானது வடக்கே வங்கக் கடலையும் தெற்கே மன்னார் விரி குடாவை யும் இணைக்கும் பாக் சந்தியில் அமைக்கப் பெற்றுள்ளது. எனவே, இப்பகுதியில் பாலம் கட்டுவதற்கான ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டபோதும், வடிவமைப்புத் திட்டம் தீட்டப் பட்டபோதும் பலவித இயற்கைக் கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டி நேர்நதது. அவற்றுள் கடல் நீர் அரிப்பானது முதலா வது இன்றியமையாத அம்சமா கும். அப்பகுதி முழுதுமே உப்புத் தன்மை வாய்ந்ததாக இருப்ப தால் இரயில் பாலத்தின் பரா மரிப்பே மிக்க கடினமான ஒன் றாகும். ஆகவே, சாலைப் பாலத் தில் கடலின் அரிப்பைக் குறைக்க வேண்டி மிகப் பெரும் அளவில் முன்னெச்சரிக்கைகள் மேற் கொள்ள வேண்டி இருந்தன.

தற்போதுள்ள மதுரை தனுஷ் கோடிச் சாலை மண்டபத்திற்கு அருகில் பாம்பன் ஆற்றிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் முற்றுப்பெற்று விடுவதால், இராமேசுவரம் தீவு டன் இந்திய தீப கற்பம், தற் சமயம் பாம்பன் நீர்வழியில் அமைந்துள்ள இருப்புப் பாதை மூலமாக மட்டுமே இணைக்கப் பட்டுள்ளது. இத்தீவில் உள்ள தேசீய முக்கியத்துவம் பெற்ற அருள்மிகு இராமநாதசுவாமி ஆலயம் பெருமளவில் சமயச் செல்வர்களையும், தன் நுண்ணிய கட்டட அமைப்பினால் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் பெரு மையுடைத்தாய் அமைந்துள்ளது.

ஆண்டிற்குக் கிட்டத்தட்ட 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை புரிகின்றனர். இத் தீவில வாழ்பவர்களின் முக்கியத் தொழில் மீன் பிடித்தல் ஆகும். மேலும், இத்தீவில் சுண்ணாம்பு கற்களும், பவளப் படிவங்களும் மலிந்து கிடக்கின்றன. எனவே, இத்தீவில் கிடைக்கும் மீன்வகை களையும் மற்ற பொருட்களை யும் வெளிச் சந்தைகளுக்கு எடுத் துச் செல்ல இப்போது புகை வண்டிப் பாலத்தையே நம்பி இருக்க வேண்டி உள்ளது. இந்த முறையானது போதிய வசதி யின்றி இருப்பதுடன் பருவ கால நிலைகளினால் ஏற்படும் இடர்ப் பாடுகளினால் பாதிக்கப்படும் தன்மை படைத்ததாயும் உள் ளது. எனவே, கட்டப்பட்டுவரும் இச்சாலைப் பாலமானது தீவுறை மக்களின் பொருளாதார நிலை யையும், மீன்பிடிக்கும் தொழிலை யும் மேம்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மேலும், தீவுமுனையில் உள்ள தனுஷ் கோடி வரை தங்குதடையற்ற சாலைப் போக்குவரத்திற்கும் இச்சாலைப் பாலம் உதவுகிறது.

இச்சாலைப் பாலத்திற்கான நேர்பாடானது ரெயில்வே பாலத்

*வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.*

**வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.**


**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.**

**ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால், சினம் வராமல் காத்துக் கொள்ளவேண்டும்; காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்துவிடும்.**

திலிருந்து 52 மீட்டர் தென்மேற்காக அதற்கு இணையாக அமைந்துள்ளது. இந்தப் பாலத்தின் வடிவமைப்பின் முக்கிய அம்சம், அவ்வழியே செல்கின்ற கப்பலின் தங்குதடையற்ற போக்குவரத்துக்கு உதவுவதே ஆகும். கப்பல் போக்குவரத்து வழியின் குறுக்கே தற்போதுள்ள இரயில் பாலத்தில் 61 மீட்டர் நீளமுள்ள 'ஒரு செர்சர்' ஏற்றுக்கண் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் சாலைப் பாலத்திலும் அதே 61 மீ. அகலத்தில் கப்பல் போக்குவரத்து கண் அமைக்க முதலில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் கப்பல் போக்குவரத்துப் பகுதியின் நீரோட்டம் சற்றுச் சாய்வாக இருப்பதாலும் இரயில்வே பாலத்தின் தூண்களுக்கு நேரேயே சாலைப் பாலத்தின் தூண்களை அமைக்க முடிவு செய்யப்பட்டதாலும், 115.21 மீ. அகலத்திற்குக் கப்பல் போக்குவரத்துக் கண் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

பாலத்தின் கீழ் கப்பல்கள் தங்குதடையின்றிச் செல்ல, கடல் ஏற்ற நிலையிலிருந்து கப்பல் போக்குவரத்துக்கண்ணின் மேற்பகுதி அடிமட்டம் 16.76 மீ. உயரம் இருக்குமாறு பாலம் அமைக்கப்பட வேண்டும். இந்தக் குறைந்த அளவு உயரத்தை அமைக்க ஏற்றுக் கண்ணோ அல்லது சுழலும் கண்ணோ அமைக்கலாம்; அல்லது அந்த உயரத்துக்கு ஏற்றபடி மற்ற அணுகு கண்களில் தக்க சாய்வுகளை ஏற்படுத்தியும் அமைக்கலாம். ஆனால், அம்மாதிரி அமைக்கப்படும் நிலையில் இவ்வளவு வலுவான கான்கிரீட் சாலைப் பாலத்தை உப்புத்தன்மை வாய்ந்த கடல் நீர் சூழ்நிலைகளின் இடையே பராமரிக்கும் ·ணி மிகக் கடினமான ஒன்றா ும். மேலும், இரயில் பாலத்தைப் போலன்றி, சாலைப் பாலத்தில் போக்குவரத்தானது கால அடிப்படையில் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக அமையும். இரவு, பகல் எந்நேரமும் இப்பாலமானது தங்கு தடையற்ற போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

இந்த அடிப்படை நிலையை வைத்துத்தான், மண்டபம் பக்கத்தில் ஒரு விழுக்காடு சாய் நிலையும் (Gradient), பாம்பன் பக்கத்தில் இரண்டு விழுக்காடுகள் சாய்நிலையும் அணுகு சாலையின் பக்கங்களில் அமையுமாறும் தங்கு தடையற்ற கப்பல் போக்குவரத்துக்கான குறைந்த அளவு உயரமாகச் சராசரி கடல் மட்டத்திலிருந்து 17.68 மீட்டர் இருக்கும்படியும் இப்பாலம் அமையப் பெற்றுள்ளது.



முற்றுப்பெற்ற பாலத்தூணின் அடித்தளம்

இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 2345 மீட்டர். (ஏறத்தாழ 1½ மைல்) பாலத்தின் மத்தியில் கப்பல் போக்குவரத்தின் வசதிக்காக 115.21 மீட்டர் அகலமுள்ள பாலக் கண்ணும், அதன் இருபுறமும் ஒவ்வொன்றும் 68.58 மீட்டர் அகலமுள்ள இரு நங்கூரக் கண்களும் அமைந்திருக்கும். மண்டபம் பக்கக் கரையானது 27.13 மீட்டர் அகலமுள்ள 53 கண்களையும், 40.69 மீட்டர் அகலமுள்ள ஒரு கண்ணையும் கொண்டு இணைக்கப்பட்டிருக்கும். அதேபோல் பாம்பன் பக்கக் கரையானது 27.58 மீ. அகலமுள்ள 9 கண்களையும் 27.13மீ. அகலமுள்ள 12 கண்களையும், 40.69 மீ. அகலமுள்ள ஒரு கண்ணையும் கொண்டு இணைக்கப்பட்டிருக்கும். ஆக, இப்பாலம் மொத்தம் 79 பாலக் கண்கள் கொண்டதாயிருக்கும். இச்சாலை பாலத்தின் மேல் 7.50 மீட்டர் அகலமுள்ள சாலை வழியும், அதன் இருபுறமும் 1.50 மீட்டர் அகலமுள்ள நடைபாதையும், அமைக்கப்படும். மிக அதிக அளவில், நடந்து செல்வோர் போக்குவரத்தையும் கருத்தில் கொண்டு இந்த நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

அணுகு கண்கள், மணற்கல் அடுக்கிற்குக் கீழ் 0.45 மீ. ஆழத்திற்கு அகழ்ந்தெடுத்து அமைக்கப்படும் அடித்தளத்தையும், முன் கூட்டியே வலுவேற்றப்பட்ட கான்கிரீட் மேல் தளத்தைக் கொண்டனவாகவும் அமையும். கப்பல் போக்குவரத்துக் கண்ணும், நங்கூரக் கண்களும் 15.24 மீட்டர் ஆழத்திற்குக் கிணறுகளை இறக்கி அமைக்கப்பட்ட அடித்தளத்தைக் கொண்டும் அமையும். இப்பாலத்தின் இருபுறமும் அமைக்கப்படும் அணுகு சாலைகளின் நீளம், மண்டபம் பக்கம் 6.6 கி.மீ. பாம்பன் பக்கம் 2.2 கி.மீ. இருக்கும்.

இப்பாலத்திற்காக, அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ. 532.87 இலட்சங்கள் ஆகும். பணி முடிவடையும்போது ரூ. 815.83 இலட்சங்கள் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பாலம் தேசிய நெடுஞ்சாலைப் பாலமாக அமைவதால் அனைத்து செலவுகளையும் மத்திய அரசே மேற்கொள்கிறது. பணியை மாநில அரசு மேற்கொண்டு நடத்துகிறது.







கே. எம். ராமாநுஜம்,
துணை வேளாண்மை இயக்குநர்,
வேலூர்.


சிங்காரச் சென்னையை விட்டு விரைவுப் பேருந்து புறப்பட்டு விட்டது!

இளஞ்சூரியன் தன் செங் கதிர்களால் வானத்தில் தங்க முலாம் பூசிக் கொண்டிருந்தான்.

பேருந்து சுங்குவார்சத்திரத்தில் நின்று இளைப்பாறி விட்டு மீண்டும் புறப்பட்டுவிட்டது. வளரும் வடார்க்காட்டில் மலரும் வேளாண்மையைக் காணத்தான் அன்று நான் பயணம் செய்தேன்.

'வடார்க்காடு உங்களை வரவேற்கிறது' என்கிற வரவேற்புப் பலகை.

காவேரிப்பாக்கம் அருகில் நுழைவாயில்...

எங்கோயிருந் குற்றாலக் குளிர்ச்சியுடன் வீசிய தென்றலில் மிதந்த உணர்ச்சி-ஏதோ ஒரு மணம்-இரு புறமும் பார்க்கிறேன். பச்சைப் பேசலென்ற நெல் வயல்களில் கதிர்கள் சதிராடிக்கொண்டிருந்தன.

வடார்க்காடு என்றாலே ஆர்க்காடு கிச்சடி அரிசி நினைவுக்கு வரத்தவறாது. அது இம்மாவட்டத்தின் தனிச்சிறப்பு. சன்னமாகவும் தரமிகுந்தும் இருக்கும் இந்த அரிசியை அறியாதார் யார்?

வடார்க்காடு நெல் விளைச்சலுக்குப் பெயர் பெற்றதாகும். ஆண்டுதோறும் முப்போகம், சம்பா, நவரை, சொர்ணவாரி மூன்று பட்டங்கள். பருவ மழையில் தன் பருவத்தின் பெரும் பகுதியைக் கழிக்கும். சம்பாவோ 4.5 இலட்சம் ஏக்கர், ஏரிக்கரைகளில் எக்காளமிடும் நவரையோ 2 இலட்சம் ஏக்கர், கிணறுகளைச் சுற்றி பச்சைப்பட்டாடை விரிக்கும் சொர்ணவாரியோ அரை இலட்சம் ஏக்கர். ஏழு இலட்சம் ஏக்கரிலே 7 இலட்சம் டன் அரிசியை அள்ளிக் கொடுக்கும் வடார்க்காடு தமிழகத்தின் அமுதசுரபி. தஞ்சையை மிஞ்சும் விளைச்சல் தரத்திலே என்றுமில்லை. புத்தம் புது நெல்லுக்குப் புகுந்தவீடு—வடார்க்காடு!

உயர் விளைச்சல் ரகங்கள் சுமார் தொண்ணூறு சத பரப்பளவில் சாகுபடி—

ஏக்கருக்கு இரண்டு டன் மகசூல் வியர்வைத் துளிகளையெல்லாம் வித்துக்களாகவும், நெல் முத்துக்களாகவும் மாற்றும் உழவர்களின் உழைப்பினைப் பாராட்டிக் கொண்டு இருந்தது என் நெஞ்சம்.

பேருந்து திருவத்தை நெருங்கி வந்தது. நாசியை ஈர்க்கும் மணம் வருகிறதே...ஆம். வெல்லத்தின் மணம்தான் அது! செந்நெல்லைத் தாண்டி செங்கரும்பைக் காணுகின்றோம்.

ஓங்கி வளர்ந்த கரும்புத் தோட்டங்கள் காற்றினிலே அசைந்தாடி வரவேற்கிறது. கோ. 6304 கரும்பு அதிகமாகக் காணப்படுகின்றன. 80,000 ஏக்கரிலே கரும்புக் கழனிகள் மூன்று. தமிழ்நாட்டின் ஆலைகளிலே அதிக சர்க்கரைச் சத்து திருப்பத்தூர் ஆலையில்தான் கிடைக்கிறது.

ஊர்தோறும் வெல்லப்பாகு வழிந்தோடும் வயல்கள். பகமாத்தூர் வெல்லத்தின் பளப்பளப்பு என்றுமே இம்மாவட்டத்தின் தனிச் சிறப்பு.

வரிசையாக வெல்ல மண்டிகளைக் கண்டவுடன் தான் வேலூர் வந்துவிட்டோம் என்று உணர்ந்தேன். வழியெல்லாம் புஞ்சையிலே புது ரக நிலக்கடலைகள்.

பாலாற்றங்கரையினிலே மீண்டும் என் பயணத்தைத் தொடருகிறேன்.

வரிசை வரிசையாக வாழைத் தோட்டங்கள், குட்டையும், நெட்டையுமாக நின்று குலைத் தள்ளிக் கொண்டிருக்கின்றன. எட்டடி ரொபஸ்டா, குட்டை 'கேவண்டிஷ்' இங்குதான் அதிகம்.

அக்கரைச்சீமைக்கு அடிக்கடி செல்லுகிற ரொபஸ்டா வாழை பலரை இங்கு வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

8,000 ஏக்கரில் சாகுபடிஉண்டு விரிஞ்சிபுரத்தில் வாழைக்கு ஆராய்ச்சிக் கூடமும் உண்டு.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.**

***செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க***
***செய்யாமை யானும் கெடும்.***

**ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான்; செய்யத் தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.**

குடியேற்றத்திலே பேருந்து நின்றவுடன் இரண்டு வாழைப் பழத்தைப் பிட்டு விழுங்கிவிட்டு ஒரு இளநீரையும் குடித்து வைத்தேன்.

" பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு, தென்னையை நட்டால் இளநீரு" என்று நம்பித்தான் இங்கு 15,000 ஏக்கரில் தென்னை வளர்க்கிறார்கள் போலும்!

பாலாற்றங்கரையிலே தோப்பெல்லாம் தென்னை நெட்டைக்குப் பின்னாலே குட்டையும், அவை இரண்டுக்கும் பிறந்த ஒட்டு ரகமும் இங்கு உண்டு. தமிழகத்திற்கு ஒட்டு ரகத்தை வழங்கும் தென்னை நாற்றங்கால் நவ்லாக் பண்ணையில் உள்ளது. நெட்டையிலே இரண்டு ஒரு இலட்சம் ஒட்டு ரகத்திலே கால் இலட்சம் என்று இந்த கற்பகத் தருவை ஆண்டுதோறும் நட்டு வளர்க்கிறார்கள்.


வானம்பாடி வானத்திலே பறக்கிறது. பேருந்து வாணியம்பாடியை நோக்கி விரைகிறது!



என்ன ரம்மியமான காட்சி— மேக மேலாடையினால் தன் பருவ எழிலை மறைப்பதுபோல் காட்டி நம் மனத்தை மயக்கும் ஏலகிரியின் எழில் தோற்றம் நம் கண்முன்னே—

அந்த ஏரியின்மேல் பேருந்து செல்லும்போது பார்க்கும் இடமெல்லாம் இயற்கையின் எழிலோவியம்தான் தெரிகிறது.

வண்ண வண்ண ரோஜாக்கள் தின்ன தின்ன ருசிக்கும் கனிகள்



பார்த்தாலே பசி தீரும். பச்சைக காய்கறிகள், தேன் சிந்தும் பலாச் சுளையும் காபூல் மாதுளையின் கற்கண்டு முத்துக்களும் ஏலகிரியில் ஏராளம்! ஏராளம்!

இதமான குளிர் காற்று. புத்துணர்ச்சியூட்டும் பொலிவு. ஆரவாரமற்ற அமைதி சூழ் ஏலகிரி, ஏழையின் ஊட்டி. மனத்தை மயக்கும் அந்த மந்தகாச மலையை விட்டு பேருந்து திருப்பத்தூர் வந்து சேர்ந்த உடன், மாம்பழ வாசனை வரவேற்றது.

இங்கு விளையும் கலப்பாடு மாம்பழத்துக்குத்தான் எவ்வளவு சுவை. மாவட்டத்தில் 15,000 ஏக்கரிலே விளையும் மாம்பழத்துக்கு என்றுமே கிராக்கி உண்டு.

திருப்பத்தூரிலே விளையும் துவரைக்குத் தனி ருசி உண்டு என்பார்கள். அது உண்மைதான் என்பதை அங்குக் கிடைத்த அறுசுவை உணவிலே கண்டு கொண்டேன்.

70,000 ஏக்கரிலே துவரையும் 20,000 ஏக்கரிலே உளுந்தும், பச்சைப் பயறும் விளையும் மாவட்டமல்லவா?

பருப்பு உற்பத்தியில் ஒரு திருப்பத்தைக் காட்டும் திருப்பத்தூரைத் தாண்டி நகர்ந்தது பேருந்து.

பேருந்து ஓடத் தொடங்கியதும் பருத்தி வயல்கள் பார்வையில் பட்டன. விவசாயிகள் பொதி பொதியாகப் பருத்தியை வண்டிகளில் ஏற்றி மாடப்பள்ளி விவசாய சேவைச் சங்கத்திற்குக் கொண்டு செல்கிறார்கள். விரைவாக வடார்க்காட்டில் ஒரு 'மினி மான்செஸ்டர்' தோன்றிக்கொண்டிருக்கிறது.

வரலட்சுமி விதைத்த வயல் களிலெல்லாம் தனலட்சுமியின் தாண்டவம்-தெரிகிறது.

சந்தனம் மணக்கும் ஜவ்வாது மலையைத் தாண்டி இப்போது பேருந்து வந்து நின்றது.

மத்திய அரசு பண்ணையைப் இப்போது பார்க்கிறோம்.

*11,000 ஏக்கர் பண்ணை அது.*

ராட்சச இயந்திரங்களினால் சாகுபடி வேலைகள் நடக்கின்றன.

இங்கு விளையும் மக்காளச் சோளம். சூரியகாந்தி, பிரிமியர் பீன்ஸ், ரோமா தக்காளி வித்துக்கள் நாட்டின் சொத்துக்களாகி வருகின்றன.

பயணம் தொடருகிறது !

பெண்ணையின் வண்ண எழில் இப்போது நம்மை வரவேற்கிறது.

சாத்தனூர் அணையில் சதிராடும் நீரோட்டம் அதில் நெஞ்சை அள்ளும் மீனாட்டம். —சாத்தனூர் பாசனப் பகுதியில் நீர் நிர்வாக நிருபணங்களைச் செய்து காட்டுகிறார்கள்.

" அளவோடு நீர் பாய்ச்சி அமோக விளைச்சல் காண" அவை அடித்தளம் அமைக்கின்றன.

அண்ணாமலைத் தெய்வத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டு போளூரை நோக்கிப் புறப்பட்டது பேருந்து.

அங்குதான் விதைச் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. ஆண்டுக்கு 2,000 டன் சான்றிதழ் பெற்ற விதைகளை இங்குத் தயார் செய்து அனுப்புகிறார்கள்.

மீண்டும் நெல்லும், கன்னலும் வாழையும், தென்னையும், மஞ்சளும், காயும், கனியும் வழியெல்லாம் மண்டிக்கிடக்கின்றன.

மாவட்டத்தில் விளையும் காய்கறிகளுக்குத் தனிச் சுவை உண்டு. இலவம்பாடி கத்தரிக்கு இணையெங்கும் இல்லை. கணியம்பாடி வந்ததும் ஆயிரம் ஏக்கர் நிரு பணப்பண்ணை ஆரஞ்சு நிற விளம்பரப்பலகை நம்மை 'பிரேக்' போட வைக்கிறது. புஞ்சையிலும் பசுமைப் புரட்சியைப் புகுத்திய ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப்பண்ணை இங்குதான் அமைந்துள்ளது. தமிழகத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு இது ஓர் விடிவெள்ளி. கணியம்பாடி ஒரு கலங்கரை விளக்கமாக இன்று தமிழகம் முழுவதும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

மழைத்துளியெல்லாம் மகசூலாக மாற்றிய காட்சியை இங்குக் காணலாம். மழைக்கு ஏங்கிய மண்ணெல்லாம் இன்று பொன் விளையும் பூமி.

மண்ணைத் தரம் அறிந்து உரமிட்டதால் உயர்ந்தது விளைச்சல். தமிழகத்திலே அதிகமாக 60,000 மண் மாதிரிகளைச் சோதித்த மாவட்டமல்லவா இது-இது மட்டுமா?

தமிழ்நாட்டிலேயே நிலக் கடலைப் பரப்பிலும் மொத்த விளைச்சலிலும் இம்மாவட்டந்தான் முன்னணியில் உள்ளது.

எங்கெங்கும் காணினும் கேணியடா!

அதில் மின் சக்தி வெளிச்சம் போடுதடா—



என்று சொல்லத் தக்க வகையில் மாவட்டத்தில் மூன்று இலட்சம் கிணறுகள் உள்ளன. அதில் 1½ இலட்சம் கிணறுகளில் மின்சாரப் பம்பு செட்டுகள் நீர் இறைக்கின்றன.

வற்றாத வள நதிகள் இல்லையென்றாலும் உழைப்பில் வற்றாத உழவர் கூட்டம் வாழும் தேன்கூடு வடார்க்காடு!

"என்ன வளம் இல்லை இந்த வடார்க்காட்டில்?

ஏரோட்டம் இல்லையென்றால் வயிற்றுக்குச் சோறோட்டம் ஏது?

சோறோட்டம் இல்லையென்றால் ஊரில் தேரோட்டம் ஏது?

என்ற உழைப்பின் சிறப்பினை- உழவுச் செல்வத்தின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் ஏர்க்காடு, அதுவே வழிகாட்டும் வடார்க்காடு!

***அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது***
***அஞ்சல் அறிவார் தொழில்.***

**அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்; அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும்.**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரூபாய் 50 இலட்சம் மூலதனத்துடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் 5568 ஏக்கரா பரப்பளவு கொண்ட மாரியூர் வாலி நோக்கும் உப்பு கூட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இக்கூட்டுத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 145 இலட்சம். அதனுடைய விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| உப்பளங்கள் ... | 46.84 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 36.71 |
| இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் | 41.05 |
| முன்னோடித் திட்ட வேலைச் செலவுகள் | 10.60 |
| இதர செலவினங்கள் | 3.80 |
| நடைமுறைமூலதனம் | 6.00 |
| மொத்தம் | 145.00 |

இக்கூட்டுத் திட்டங்களை உருவாக்குவது படிப்படியாக எடுத்




துக் கொள்ளப்பட்டிருப்பதனால், உப்பு உற்பத்தி செய்யும்பொழுது ட்ட விரிவுபடுத்தும் வேலையும் டைபெறுவதால், சுமார் ரூபாய் 0 இலட்சம் இத்திட்டத்தின் முலமாகவே பெருக்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளதானது. இத்திட்டத்தின் ஒரு சிறந்த அம்சமாகும்.

அரசு இத்திட்டத்திற்கு ரூபாய் 50 இலட்சம் மூலதனமாகவும் இதர நிதி நிறுவனங்கள் மூலமாக ரூபாய் 40 இலட்சமும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் மூலம் ரூபாய் 15 இலட்சம் இததிட்டத்திற்கு மூலதன உதவியாக வழங்கப்பட்டது. அரசு இக்கூட்டுத் திட்டத்திற்கு இதுவரை ரூபாய் 45 இலட்சம் பங்குகளாகச் செலுத்தியுள்ளது. மீதியுள்ள ரூபாய் 5 இலட்சமும் நடப்பு ஆண்டில் செலுத்தப்படும். 1979 மார்ச் மாதம் முடிய இத்திட்டத்திற்கு ரூபாய் 70 இலட்சம் செலவாகியுள்ளது.

இத்திட்டப் பகுதியைச் சுற்றி சுமார் 24 மீட்டர் நீளமுள்ள சுற்று அணைக்கரை போடப்பட்டு, வெள்ளம் உட்புகாவண்ணம் தடுக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 100 உப்பளங்கள் தயார் செய்யப்பட்டு, அவைகளில் உப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது. சுமார் 370 ஏக்கர் பரப்பளவில் கடல் நீரைக்கெட்டிபடுத்துவதற்கும் மற்றும் சுமார் 846 ஏக்கராப் பரப்பளவில் கடல் நீரைத்தேக்கி வைப்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது. இத்தேக்கங்களுக்கு நிமிடத்திற்கு 30,000 காலன் கடல் நீர் பம்பு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு, இதுவரை, நிமிடத்திற்கு 20,000 காலன் கடல் நீரைப் பம்பு செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இக்கூட்டுத் திட்டத்தில் இதுவரை 1650 ஏக்கராக்கள் தயார் செய்யப்பட்டு, 1978-ஆம் சுமார் 6500 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும், 500 ஏக்கராக்கள் தயார் செய்யப்பட்டு கூடுதலாக 100 உப்பளங்கள் உப்பு உற்பத்திக்குத் தயார் செய்யப்படும். இதன் மூலம் சுமார் ரூபாய் 15 இலட்சம் பெறுமானமுள்ள 30,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் சுமார் 1500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டுவரை இத்திட்டத்தில் சுமார் ரூபாய் 19 இலட்சம் நட்டமாகக் கணக்குகளில் காட்டப்பட்டாலும், 1981 முதல் இத்திட்டம் இலாபத்தில் இயங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சமீப காலத்தில் டிட்கோ நிறுவனம் மேலும் இரண்டு திட்டங்களுக்கான முன்னோடி அறிக்கைகளைத் தயாரித்துள்ளது. அவைகளில் ஒன்று தஞ்சை மாவட்டம் மரவக்காடு—வடகாடு பகுதியில் சுமார் 5,400 ஏக்கராப் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டமாகும்.


இத்திட்டப்பகுதி வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதியிலுள்ள சுமார் 60,000 ஏக்கரா பரப்பளவின் ஒரு பகுதியாகும். இத்திட்டப்பகுதியில் சுமார் 10 இலட்சம் டன் உப்பு உற்பத்தியும், கடல் இரசாயனத் திட்டங்களையும் உருவாக்குவதற்கான நடைமுறைத் திட்ட அறிக்கையை "டிட்கோ" நிறுவனம் தயாரித்துள்ளது. இச்சதுப்பு நிலப்பகுதி அபூர்வமான சதுப்பு நிலப்படர் தாவர வகையை உடையதாகவும் இடம் பெயரும் பறவை இனங்களைக் கவர்வதாகவும் உள்ளதனால் இப்பகுதியில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டம் நிறுவுவது, இப்பகுதியில் வாழும் உயிரின வாழ்க்கைச் சூழ்நிலையைப் பாதிக்குமென்று அரசு வனத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், இச்சூழ்நிலையைப் பாதிக்காதவண்ணம் சதுப்பு நிலப் பகுதியின் மேற்குப்புறத்தில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் மரவக்காடு திட்டம் உருவாக்குவதற்கான ஆணையை 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசு பிறப்பித்துள்ளது. இத்திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 2 கோடியாகும். இத்திட்டத்தின் மூலம் 1000 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இந்நிறுவனம் எடுத்துள்ள மற்றொரு திட்ட வேலை, அடையாற்றிலிருந்து சூணாம்பேட்டை வரையுள்ள பக்கிங்காம் கால்வாய்ப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றை வகுத்தலாகும்.



டாடா அக்ரிகோ

அசலின் சின்னம்



நீங்கள் வாங்கக்கூடிய நம்பகமிகுந்த விவசாயக் கருவிகளுக்கு உத்தரவாதம்

# அக்ரிகோ

டாடா ஸ்டீலின் ஓர் பிரிவு.
உயர்தர தயாரிப்பாளர் : பௌராஸ், ஷோவல்ஸ்,
க்ரோ பார்ஸ், பிகாக்ஸஸ், ஸ்லெட்ஜ் ஹாமர்ஸ்.

எல்லா விவரங்களுக்கும் எழுதவேண்டிய முகவரி :
தி டிவிஷனல் மானேஜர்
தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
அக்ரிகோ, ஜாம்ஷெட்பூர் 831 009

YIS 3584

ஜாக்கிரதை. போலியான கருவிகளை வாங்கி ஏமாருதீர்கள். உத்தரவாதம் பெற்ற அக்ரிகோ வியாபாரிகளிடம் மட்டுமே வாங்குங்கள்.

*புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*
*அறங்கூறும் ஆக்கம் தரும்.*

**புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்தலைவிட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல், அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.**

# முட்டை கெடாமலிருக்க...



**ஏ. பி. சாந்தி,**
**உணவு நுண்ணியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,**
**கோவை.**

கிராமங்களிலும், பட்டணங்களிலும் அநேகர் கோழிப்பண்ணைகளைவைத்துள்ளனர். ஏனெனில் இது ஒரு இலாபகரமான தொழில். கோழிப்பண்ணைகளின் வளர்ச்சி, சென்ற பத்து ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துள்ளது.

கோழிமுட்டை ஒரு சத்து மிகுந்த உணவுப் பொருள். இதில் புரதச்சத்து, கொழுப்புச் சத்து, இரும்புச்சத்து, உயிர்ச்சத்துக்கள் ஏ.பி. போன்றவை உள்ளன. முட்டையின் புரதச் சத்தின் தரம் மற்ற எல்லா உணவுப் பொருட்களின் புரதங்களைவிட மேலானது. இத்தகைய தன்மைவாய்ந்த முட்டை விரைவில் கெட்டுப் போகிறது. சாதாரணமாக முட்டை, அறை வெப்பநிலையில் (28.34 சி) ஒரு வாரம் மட்டுமே தரமுள்ளதாய் இருக்கிறது.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் 12,000 மில்லியன் முட்டைகள் உற்பத்தியாகின்றன. ஆனால், அவற்றைப் பாதுகாத்து அதிக நாட்கள் கெடாமல் சேமித்து வைப்பதற்கு வசதியில்லை.

விற்பனை வசதிகள், சீரான முறையில் இல்லாததால் சில சமயங்களில் பண்ணைகளிலோ, அல்லது வியாபாரிகளிடமோ முட்டைகள் விற்காமல் தேங்கி விடுகின்றன. அச்சமயங்களில் முட்டைகள் கெட்டுப் போனதால் நஷ்டமேற்பட நேரலாம். மேலும், முட்டைகள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து வெகு தொலைவிற்கப்பாலுள்ள இடங்களுக்குச் சில சமயங்களில் அனுப்பப்படுகின்றன. இதனால் முட்டையிட்டுப் பல நாட்களுக்குப் பின்பே அது விற்பனையாக வேண்டியுள்ளது. நம் நாட்டின் வெப்பநிலை அதிகமானதால், முட்டை சீக்கிரத்தில் கெட்டுப்போக ஏதுவாகிறது.

இவ்வாறு ஏற்படும் சேதங்களைத் தடுத்து, முட்டையைச் சுலபமாக அதிக நாட்கள் பாதுகாக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு நுண்ணியல் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக ஒரு சுலபமான வழிமுறை கண்டறியப்பட்டுள்ளது.

கடலை எண்ணெய் 100மில்லி லிட்டர், தண்ணீர் 100 மில்லி லிட்டர், ட்ரைஇத்தானால் அமைன் 1 மில்லி லிட்டர், ப்யூடிலேடட் ஹைடிராக்ஸிடாணையின் 100 மில்லி கிராம், அக்ரிமைசின் 20 மில்லி கிராம் ஆகியவற்றை ஒன்றாக ஒரு 'மிக்ஸியில்' அடித்துக் கலந்து கொள்ள வேண்டும். இப்போது நீரும் எண்ணெய்யும்சேர்ந்த 'எமல்ஷன்' கலவை வெண்மை நிறத்தில் காணப்படும். இதை ஒரு தெளிப்பானைக் கொண்டு முட்டைகளின் மேல் அடிக்கவேண்டும். வீடுகளில் கொசு மருந்து அடிக்க உபயோகிக்கும் கருவியை இதற்குப் பயன்படுத்தலாம். ஆயிரக்கணக்கான முட்டைகளுக்கு விவசாயத்தில் உபயோகிக்கும் பெரிய தெளிப்பான்களைப் பயன்படுத்தலாம். ஆனால், ஏற்கெனவே வேறு மருந்துகளையும், கொல்லிகளையும் தெளிக்கப் பயன்படுத்தப் பட்ட தெளிப்பான்களைஇதற்கு உபயோகிக்கக் கூடாது. தெளிப்பான்கள் இல்லாத நேரங்களில், ஒரு பஞ்சை இந்தக் கலவையில் நனைத்து முட்டைகளின் மேல் துடைக்கலாம்.

ஒரு லிட்டர் 'எமல்ஷன்' கலவையைக் கொண்டு சுமார் 6,000 முட்டைகளைத் துடைக்கலாம். அல்லது 3,500 முட்டைகளின் மேல் தெளிக்கலாம். ஆயிரம் முட்டைகளைக் கலவையால் துடைக்க 85 காசும், கலவையால் தெளிக்க ரூ. 1.50 ஆகும். கலவையைத் தெளிக்கும்போது, அது முட்டை இல்லாத இடங்களிலும் படுவதால் அதிகச் செலவாகிறது. ஆனால், பெரிய கோழிப் பண்ணைகளில் தெளிக்கும் முறையே சிறந்ததாகும். பெரிய தெளிப்பானை உபயோகிக்கும்போது, ஒரு மணி நேரத்தில், இரண்டுவேலையாட்கள் வைத்து 8,000 முட்டைகளின்மீது தெளிக்கலாம்.

முட்டைகளைத் துடைப்பதால் குறைந்த செலவானாலும், இப்படிச் செய்ய அதிக நேரமாகும். மேலும், ஒவ்வொரு முட்டையாகத் துடைக்கும் போது, அவை விழுந்து உடைய வாய்ப்புண்டு. இதனால் தெளிக்கும் முறையே சிறந்தது.

இவ்வாறு கலவை தெளிக்கப்பட்ட முட்டைகளை நல்ல காற்றோட்டமுள்ள அறைகளில் வைக்கவேண்டும். இம்முட்டைகளை அறை வெப்பநிலையில் 4 வாரங்களுக்கு, முட்டையின் தரம் அதிகமாகக் குறையாமலும் கெடாமலும் வைத்திருக்கலாம்.





# புதுக்கோட்டை

**—வி. டி. வீரப்பன்**
**உதவி இயக்குநர்**
**செய்தி-மக்கள் தொடர்புத்துறை,**

புதுக்கோட்டை மாவட்டம் தமிழகத்தில் 15-வது மாவட்டமாக 1974ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14ந் தேதி முதல் இயங்கி வருகிறது.

இன்றையப் புதுக்கோட்டைப் பகுதி தமிழகத்தின் தொன்மையான பகுதிகளில் ஒன்றாகும்.

புதுக்கோட்டைப் பகுதியில் சமண, புத்த மதங்கள் ஒரு காலத்தில் சிறப்புற்றிருந்தன. அவர்களின் பள்ளிகள், குகைச் சிற்பங்கள் ஆகியவற்றிற்கான சின்னங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் சுற்றுலாத் தலங்களின் மிகுதியால் சிறப்புடையும் மாவட்டம் ஆகும். விராலிமலை முருகன் கோயிலைப் பற்றியும், சித்தன்னவாசலில் உள்ள அழகிய ஓவியங்களைப் பற்றியும், அழகிய சிற்பங்களைக் கொண்ட ஆவுடையார்கோயிலைப் பற்றியும் கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. சில சுற்றுலாத் தலங்களைப் பற்றி இப்போது காண்போம்.

புதுக்கோட்டை நகரத்தில் ஒரு பகுதியாகிய திருக்கோகர்ணத்தில் அமைந்துள்ள அருள்மிகு பிரகாதாம்பாள் உடனுறை கோகனேஸ்வரர் ஆலயம் காணத்தக்க ஒன்று. இத்தலம் சேர, சோழ, பாண்டியர்களால் திருப்பணி செய்யப்பட்டது. பிற்கால சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள குடவரைக்கோவில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதாகும். இது மகேந்திர வர்மன் பாணியை ஒத்திருக்கும், குடவரை அமைப்பைக் கொண்டது. இதன் முகமண்டபத்தில் வடக்குப் பகுதியில் இருக்கும் கங்காதரர் குடைச்சிற்பம் தமிழ் நாட்டில் மிகச்சிறந்த சிற்பங்களில் ஒன்றாக விளங்கும் பெருமையுடையது. இங்குள்ள குடவரைக் கோயிலும், சிற்பங்களும் புதுக்கோட்டை மாமன்னர் அவர்களின் வாகனங்கள் அமைப்பும் மிகச் சிறப்பானது ஆகும்.

புதுக்கோட்டையில் 1910ஆம் ஆண்டு மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டமான் என்பவரால் துவக்கப்பட்ட அருங்காட்சியகம் உள்ளது. புதுக்கோட்டையின் தொன்மைச் சிறப்பையும், கலைச் செல்வங்களையும், இயற்கை வளங்களையும் நினைவுக்கூட சிறந்த இடமாக இவ்வருங்காட்சியகம் திகழ்கின்றது.

நார்த்தாமலை புதுக்கோட்டையிலிருந்து 16 கி.மீ.தொலைவில் திருச்சி சாலையில் உள்ளது. இது சமண முனிவர்களின் உறைவிடமாக இருந்துள்ளது. மேலமலையில் காணப்படும் விஜயாலய சோழேச்சரம் முத்தரையர்களால் கட்டப்பட்டது. இக்கோவில் பிற்கால பல்லவர் கலை அமைப்பையும், முற்கால சோழர்களின் கட்டடக்கலை அமைப்பையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இங்குள்ள கடம்பர் கோவில் சிறப்பு மிக்க ஒன்றாகும். இங்குள்ள முத்துமாரியம்மன் ஆலயம் புகழ்மிக்கது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் மாரியம்மன் தேர்த் திருவிழாவிற்கு மக்கள் பல்லாயிரக்கணக்கல் கூடுவர்.

குமரமலை புதுக்கோட்டையிலிருந்து 10. கி.மீ. தொலைவில்

*உடைய ரெனப்படுவது ஊக்கம்அ.: தில்லார்*
*உடையது உடையரோ மற்று.*

**ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ ?**

***இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண***
***நன்னயம் செய்து விடல்.***

**இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும்படியாக அவர்க்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையை மறந்து விடுதலாகும்.**

காரையூர் சாலையில் உள்ளது. இங்கு சுமார் 40 அடி உயரமுள்ள குன்றின் மீது மிக அழகான முருகன் கோவில் அமைந்துள்ளது. பழனிக் குமரனை தரிசித்த புண்ணியம் குமரமலைக் குமரனைத் தரிசிப்பவர்களுக்கும் கிடைக்கும் என்பது ஐதீகம். இம்மலையில் உள்ள சுனைநீர் புனிதத்தன்மை உடையதாகக் கருதப்படுகிறது.

விராலிமலை புதுக்கோட்டையிலிருந்து மேற்கே சுமார் 40 கி.மீ தொலைவில் திருச்சியிலிருந்து மதுரை செல்லும் வழியில் உள்ளது. இங்கு குன்றின் மேல் உள்ள முருகன் ஆலயம் மிக்க புகழ் வாய்ந்தது. ஆலயம் 120 அடி உயரம் உள்ள குன்றின் மேல் உள்ளது. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய இடம் விராலிமலை. இங்கு மயில்கள் தோகையை விரித்து ஆடுவது காணவேண்டிய ஒரு காட்சி ஆகும். இங்கு மயில்கள் மரங்கள் அடர்ந்த பகுதியில் உறைந்து வாழ்கின்றன. இங்கே மயில்கள் சரணாலயம் அமைக்கப்பட வாய்ப்புள்ளது.

அறநிலையத்தினரால் பயணியர்கள் வசதிக்காகக்குடில் கட்டப்பட்டுள்ளது.

குடுமியாமலை புதுக்கோட்டையிலிருந்து சுமார் 20. கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள சைவ ஆலயத்தில் உள்ள இறைவனின் பெயர் சிகநாதர் அல்லது குடுமியுடையான். இக்கோவிலில் கணபதி, சுப்பிரமணியர், அனுமான், மன்மதன், ரதி போன்ற சிற்பங்கள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குப் பல்லவர் காலச் சிலைகளும், பாண்டியர் காலச்சிலைகளும், நாயக்கர்காலச் சிலைகளும் காணப்படுகின்றன. தமிழர்களின் சிற்பக் கலைக்குச் சிகரமாக அமைந்துள்ளது இக்கோவில். சங்கீதக் கலைக்கு வழிகாட்டியாக விளங்குகிற மகேந்திரவர்மன் சங்கீதக் கல்வெட்டு இங்கு காணப்படுகிறது.

இக்கல்வெட்டு கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் செழித்திருந்த இசைக்கலையின் நுணுக்கங்களை நமக்கு உணர்த்துபவை எனலாம். இதில் இசையின் ராகங்களைப் பற்றியும், தாள வகைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இங்குள்ள குடவரைக் கோவிலில் செதுக்கியிருக்கும் பல்லவர் காலத்து துவாரபாலகர்கள் நல்ல வேலைத்திறம்மிக்கவை.

இங்குள்ள கோவிலின் பாறையில் 63 நாயன்மார்கள் சிலைகளைச் செதுக்கியுள்ளனர். மலையின் உச்சியில் முருகன் கோயில் உள்ளது.

குடுமியாமலை என்றாலே அண்ணா பண்ணை நினைவிற்கு வரும். 1017 ஏக்கர் நிலத்தில் இப்பண்ணை அமைந்திருக்கின்றது. இங்குள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

சித்தன்னவாசல் புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை செல்லும் வழியில் சுமார் 16 கி.மீ. தொலைவில் இருக்கிறது. தமிழ் நாட்டின் பண்டைய ஓவியக் கலைக்குச் சான்று கூறும் மிகக் குறைந்த, விரல் விட்டு எண்ணக் கூடிய இடங்களில் ஒன்றாகச் சித்தன்னவாசல் விளங்குகிறது. தமிழகத்தில் கிடைக்கும் பழங்கால ஓவியங்களில் காலத்தால் மிகப் பழமையானதாக இங்குள்ள ஓவியங்கள் விளங்குகின்றன. அஜந்தா பாணிக்கும், தஞ்சைப் பெருவுடையார் சோழர் பாணிக்கும் இடையே விளங்கும் இணைப்பாக இங்குள்ள ஓவியங்கள் விளங்குவதாக வரலாற்று அறிஞர் திரு. நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார்.

இங்கு குன்றின்மேல் ஒரு குகை உள்ளது. இதை ஏழடிப்பட்டம் என்பார்கள். குகையின் வாயிலில் ஏழு படிக்கட்டுகளைக் கடந்து குகையினுள் செல்லவேண்டும். எனவே ஏழடிப் பட்டம் என்று சொல்லப்படுகிறது. இங்கு 17 கல்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு படுக்கைகளுக்குப் 'பிரமி' எழுத்திலான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

இக்குகையைச் சமண முனிவர் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை தங்கள் இருப்பிடமாகக் கொண்டிருந்தார்கள்.

இங்கு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவனால் கட்டப்பட்ட குகைக்கோயில் உள்ளது. முக மண்டபத்தில் சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

குகைக் கோயிலின் தரை தவிர மற்ற எல்லாப்பகுதிகளிலும் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அழிந்தது போக மிச்சமுள்ள சித்திரங்கள் கொஞ்சமே உள்ளன.

மேல் கரையில் தாமரையும், அல்லியும் பூத்துக் குலுங்கும் ஒரு தடாகம் சித்திரிக்கப்பட்டுள்ளது. மீன்களும், அன்னங்கள் தங்கள் பெட்டையுடன் இருப்பதும், யானைகளும், மாடுகளும் தடாகத்தில் இருப்பது போல தீட்டப்பட்டுள்ளன. இவைபோன்று இன்னும் எத்தனையோ அழகிய சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை அஜந்தா ஓவியங்கள் விஞ்சும் வண்ணம் உள்ளன.

இங்கு வரும் பயணிகளுக்குக் குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளது.



கொடும்பாளூர் புதுக்கோட்டையிலிருந்து மேற்கே சுமார் 34 கிலோ மீட்டர் தொலைவில் மணப்பாறைச் சாலையில் உள்ளது. சங்க காலத்திலும் சோழர் காலத்திலும் சிறந்து விளங்கியது.

இரண்டாம் பராந்தகசோழன் காலத்தவனாகிய பூதிவிக்கிரக கேசரி எனும் இருக்குவேளால் கட்டப்பட்டது மூவர்கோவில்.

தென்னிந்திய சிற்பக்கலையின் வரலாற்றில் ஓர் உன்னத இடத்தை வகிக்கிறது மூவர் கோயில். தற்போது இரண்டே கோயில்கள்தான் உள்ளன.

மூவர் கோவிலுக்கு ஒருபர்லாங் தூரத்தில் முசுகுந் தேசுவரர் கோயில் உள்ளது. முதலாம் பராந்தகன் காலத்தில் மகிமாலயன் இருக்குவேள் என்பவர் இக்கோயில் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

சிலப்பதிகாரத்தில் கொடும்பாளூர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரிலும் பயணிகளுக்கு இன்றியமையாத வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திருமயம் புதுக்கோட்டையிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் காரைக்குடி செல்லும் சாலையில் உள்ளது.

இங்குள்ள கோட்டை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். கட்டடக்கலை இலக்கணத்தோடு அமைந்தது இக்கோட்டை. இக்கோட்டை வட்டவடிவமாக அமைந்துள்ளது.

தென்பாண்டிச் சீமையில் பாளையக்காரர்களை அடக்க வந்த வெள்ளையர்ப்படை இக்கோட்டையில்தான் தனது படைக்குத் தேவையான கருவிகளையும், வெடி மருந்துகளையும் சேமித்து வைத்திருந்தது. வெடிமருந்து வைத்திருந்த அறையை இன்றும் நாம் கோட்டையின் குன்றில் காணலாம். தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் சற்று நல்ல நிலையிலேயே விளங்கும் ஒரே கோட்டையாக இது விளங்குகிறது.

இக்கோட்டைக்கு ஊமையன் கோட்டை என்று பெயர் வழங்கி வருகிறது. ஆனால், இக்கோட்டைக்கும் ஊமையனுக்கும் எந்த விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கோட்டை சேதுபதி விஜயரகுநாதர் என்பவரால் கட்டப்பட்டதாகும்.

கோட்டை அமைந்துள்ள குன்றின் தென்பகுதியில் வைணவக் கோயில்களும், அதன் அருகே சிவன் கோயிலும் அமைந்துள்ளன. வைணவக்கோயில் திருமால் பள்ளிகொண்ட நிலையில் காட்சியளிக்கிறார். இக்கோயில் ஆதிரங்கம் என்று கூறப்படுகிறது. இத்தலம் திருமங்கையாழ்வார் என்பவரால் பாடப்பட்டதாகும். இக்கோயில் பல்லவர் காலத்தைச் சேர்ந்தது.

சிவன் கோயிலும் மிகப் பழமையானதாகும். இக்கோயிலில் உள்ள கற்சிலைகள் காணத்தக்கவை.

கவிச்சக்கரவர்த்தி கம்பனால் பாண்டியநாட்டின்எல்லையெனக் கூறப்பட்டுள்ள வெள்ளாற்றின் தென்கரையிலே மாணிக்கவாசகரால் எழுப்பப்பெற்ற கோயில் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயில்.

இது 2000 ஆண்டுகளுக்கு முந்திய கோயில் ஆகும்.

புதிதாகக் கோயில்கள் கட்டுகின்ற ஸ்தபதியார் ஆவுடையார் கோயில் சிற்ப அடங்களுக்குப் புறம்பாக என்று தங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு எழுதுவார்கள்.

ஆவுடையார் கோயில் தெற்கு முகமாக உள்ளது.

மூலஸ்தானத்தில் எந்தவிதச் சிலையும் இல்லை.

மலை, குன்று இல்லாத பகுதியில் வெறும் கற்களினாலே கட்டப்பட்ட கோயிலாகும். இக்கோயிலின் தாழ்வாரத்திலுள்ள கொடுங்கைகள் மிக வேலைப் பாட்டுடன் அமைந்ததாகும்.

தேக்கு மரச்சட்டம்போல் இழைத்து, கம்பிகளும், ஆணிகளும்போல் கல்லில் செய்து, மெல்லிய ஓடு வேய்ந்திருப்பது போல செய்யப்பட்டிருப்பது மிகச் சிறப்பானது. இங்கு 10,15 வளையங்கள் கொண்ட கற்சங்கிலிகள் ஒரே கல்லினால் செதுக்கப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ளன.

கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவை இக்கோயிலில் இல்லை.

இக்கோயிலில் செப்பேடு வேயப்பட்ட விமானம் உள்ளது. இவ் விமானத்தில் உள்ள மரங்கள் எல்லாம் தேவதாரு மரத்தால் ஆனதாகும். தேக்கைவிட உயர்ந்தது தேவதாரு மரம்.

இங்குள்ள சிற்பங்கள் மிகச் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடியவை. ஒவ்வொரு தூணிலும் இவை விளங்குகின்றன.

இக்கோயிலில் காணப்படும் கல்விளக்குகளும், பாவை விளக்கு, கற்சிற்பங்களும், கன்னியாகுமரியையடுத்த சுசீந்திரம் கோயிலில் உள்ள சிற்ப பாணியை நினைவூட்டத் தக்கவையாக உள்ளன. இக்கோயிலில் ஒவ்வொரு பகுதியில் உள்ள சிற்பங்களும் ஒவ்வொரு பாணியைத் தெரிவிக்கின்றன.

காலில் உள்ள நரம்பும், தலையில் உள்ள முடியும் நன்குதெரியுமாறு சிலைகள் அமைக்கப்பெற்றிருப்பது மிகவும் சிறப்பானதாகும். இங்குள்ள சிற்பங்களில் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடிய நகைகள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இங்குக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச கல்யாணிக்குதிரை மிகச் சிறந்த வேலைப்பாட்டுடன் கூடியது. மலைக்குறத்தி சிலை ஒன்றும் உள்ளது. குறி சொல்லுகின்ற குறத்திபோல் இச்சிலை உள்ளது.

திருவாசகம், திருக்கோவையார் ஓலைச் சுவடிகள் இங்கு மிகவும் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன.


இங்குப் பயணிகளுக்குத் தங்குமிடம், கழிவறை மற்றும் குடிதண்ணீர் வசதி செய்யும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.


புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைக் காணாத கண்ணென்ன கண்ணோ அவற்றின் பெருமையைக்கேளாத செவியென்ன செவியோ....

[நன்றி: வானொலி]

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு.*

ஒப்புரவினால் உலகம் வாழுமாறு விரும்பும் பேரறிவாளனின் செல்வம், ஊரார் நீருண்ணும் குளம், நீரால் நிறைந்தாற் போன்றது.



# சென்னை மாநகராட்சியின் சிறப்புப் பணிகள்

'மக்களைச் சந்திப்போம்' திட்டத்தின் கீழ், வடசென்னையைப் பொறுத்த வரையில் வந்த 259 முறையீடுகள் மீது ரூ. 40.10 இலட்சம் செலவிலும், தென் சென்னையைப் பொறுத்த வரை ரூ. 89 இலட்சம் செலவிலும், சாலை அமைப்பு, நடைபாதை, சீரமைப்பு, பொதுக் குழாய்கள் அமைப்பு போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டன.

வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ், சீர்குலைந்த சாலைகளைச் செப்பனிட பாதி கடன், மீதி உதவி என்ற அடிப்படையில் ரூ. 179.61 இலட்சம் அரசு மாநகராட்சிக்கு அளித்துள்ளது.

கட்டணக் கழிவிடங்கலள நவீனப் படுத்தி ஏலம் விட்டதன் விளைவாக 52,675 ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்தது.

வர்த்தக நிறுவனங்கள், அங்காடிகள் நிறைந்த பகுதிகளில் இரவு நேர துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


உலக வங்கி உதவியுடன் 1977-78ல் ரூ. 24.97 இலட்சம் செலவிலும், 1978 79ல் ரூ. 82.85 இலட்சம் செலவிலும்நடைபாதைகள், சாலைகள் முதலியன மேம்படுத்தப்பட்டன. மத்திய அரசின் உதவியோடு பாலங்கள் முதலியன கட்டும் பணிகளுக்காக 1977-78 இல் ரூ. 7.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ. 101.71 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

30,000 குடிசை வாழ் குடும்பங்களின் மேம்பட்ட வாழ்விற்கு தேவையான வசதிகளை, அளிக்கும் பணியை உலக வங்கி உதவியுடன் ரூ. 50 இலட்சம் செலவில் மாநகராட்சி மேற்கொள்ளவிருக்கிறது.









எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

கடந்த இரண்டாண்டுகளில் 37 வகுப்பறைகள் மாநகராட்சிப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ளன.

ரூ. 10 இலட்சம் செலவில் மின் சுடுகாடு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நகர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ், இரண்டு மழை நீர் வடிகால் திட்ட வேலைகளுக்காக அரசு அளித்த ரூ. 75 இலட்சத்திற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

பல் மருத்துவ மனைக்கு எதிரிலுள்ள வடிகாலையும், சைதாப்பேட்டை ரெட்டி



குப்பம் சாலை வடிகாலையும் புதுப்பிக்க அரசு ரூ. 50.716 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் மாநகராட்சியின் பல்வேறு பகுதியில் வடிகால் கட்டுவதற்காக ரூ. 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஈராண்டில் மட்டும் ரூ. 18.5 இலட்சம் செலவில் புதிதாக வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 1,40,400 செலவில் அதிக ஒளிதரக்கூடிய குழல் விளக்குகள் பொருத்தப்பட்டன.

வடசென்னை புறநகர்ப் பகுதி (வியாசர்பாடி) எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, இராசா அண்ணாமலை புரம் ஆகிய இடங்களில் கிளை மின் நிலையங்கள் ரூ.6.00 இலட்சம்செலவில் நிறுவப்பட்டு செயல்படுகின்றன.

ஆதி ஆந்திர துப்புரவுப் பணியாளர்களுக்குக் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மாநகராட்சி குடியிருப்புகளை குறைந்த விலையில் அவர்களே சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தை முதலமைச்சர் 24.10.78 அன்று தொடங்கி வைத்தார்.


இத்திட்டத்தின் கீழ், ஆஞ்சநேய நகர், சிமிட்ரி சாலை, சிகிறந்த பாளையம், 27 வது கோட்டம், ஓய்வுதியர் குடியிருப்பு, குறவன் குளம் குடியிருப்பு, நரசிம்ம நகர், அங்காளம்மன் கோயில் குடியிருப்பு, பழைய ஆட்டுத் தொட்டி சாலை குடியிருப்புகள், காட்டூர் நல்லமுத்து தெரு.



செம்பிய குடியிருப்பு, துவாரா நகர் குடியிருப்பு, ராம்நகர், காந்திபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மாநகராட்சி இல்லங்கள், துப்புரவுபணியாளர்களுக்கு அளிக்கப்படும். இதனால் பயன் பெறும் பணியாளர்களின் எண்ணிக்கை 466.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் 9 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கொசுக்கள் தொல்லையை ஒழிக்க ரூ. 76,000 செலவில் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் கருவிகள் 25 வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மேலும் ரூ. 24,800 செலவில் மின்சார மருந்து கருவி வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



# புகையானைப் புரிந்து கொள்ளுங்கள்

எஸ். வசந்த குமார்,
துணை வேளாண்மை அலுவலர்,
(பயிர்பாதுகாப்பு)

மனித இனம் தோன்றுவதற்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே உருவெடுத்த இந்தப் பூச்சி இனம் மனிதனுக்குப் பிரச்சினையாக விளங்குவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புகையான் (பழுப்பு தத்துப் பூச்சி) பூச்சியானது உலகமெங்கும் நெல் சாகுபடி செய்யும் நாடுகளான இந்தோனேசியா, கொரியா, மலேசியா, சைனா, பீஜி தீவுகள், நியூகினியா, பிலிப்பைன்ஸ், தாய்வான், தாய்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளிலும் நமது நாட்டிலும் நெற்பயிரினைத் தாக்கி பெரும் சேதத்தினை உண்டாக்குகிறது.

இப்பூச்சிகளானது சாதகமான சூழ்நிலையில் அதிகமாக இனவிருத்தி செய்து பெருகி மெயின்லாண்டு, சைனா, பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து மற்ற தென்கிழக்கு ஆசியா நாடுகளுக்குக் காற்றில் மிதந்து சென்று நெற்பயிருக்குச் சேதம் விளைவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பிற நாடுகளிலிருந்து, விமானங்களின் வருகையைக் கண்காணிக்க ரேடார் சாதனங்கள் உள்ளது போல் புகையானின் நடமாட்டத்தினைக் கண்காணிக்க விளக்குப் பொறிகள் அமைத்து எண்ணிக்கையினைக் கணித்தல், வயல்களைப் பார்வையிடுதல் போன்ற பணிகள் ஆங்காங்கே மிகவும் வியக்கும் வண்ணம் நடைபெற்று வருகின்றது. பலத்த கண்காணிப்புகளுக்கு இடையிலும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும் அங்கிருந்து பல்வேறு இடங்களுக்கும் காற்றில் மிதந்து சென்று எங்கெங்கு நெல்பயிர் சாகுபடி செய்யப்படுகின்றதோ அங்கெல்லாம் சேதத்தினை விளைவித்திடும் இச்சிறிய பூச்சியின் திறமையினை நோக்கும்பொழுது மிகவும் விந்தையாக உள்ளதல்லவா?

இதற்கான காரணங்களை ஆராயும்பொழுது, நம் வீட்டில் வளர்க்கும் கோழிகளில் பல ரகங்கள் இருப்பது போல் இந்தப் புகையான் பூச்சிகளில் அவ்வப்பொழுது பல ரகங்கள் உருவாகின்றன. இவைகள் வெளித்தோற்றத்தில் ஒன்றுபட்டிருப்பினும், புகையானின் தாக்குதலை எதிர்த்து வளரக்கூடிய ஒரு நெல் ரகத்தினை தாக்கி சேதம் விளைவிக்கும் தன்மையில் மாறுபடுகின்றது. இதில் சில ரகங்கள் பூச்சி மருந்துகளின் நச்சுத் தன்மையையும் எதிர்த்து தன் இனத்தை விருத்தி செய்துகொள்ளும் திறமை படைத்தவையாக உள்ளன.

புகையானின் தாக்குதலை எதிர்த்து நிற்கக்கூடிய ஒரு நெல் ரகத்தினைத்தொடர்ந்து நான்கு பருவங்களில் ஒரு பகுதியில் சாகுபடி செய்யும் போது அந்த நெல் ரகத்தினைத் தாக்கிச் சேதம் விளைவிக்கும் ஒரு புகையான் ரகம் உருவாகின்றது. எனவே, இப்பூச்சிகள் மனிதனின் சாதனைகளை முறியடித்து எப்படியாவது தன் இனம் அழிந்து விடாமல் பல்கிப் பெருகி வருகின்றன என்று கூறினால் மிகையாகாது.

## இப்பூச்சிகளின் வாழ்க்கை முறை:

வளர்ச்சி பெற்ற பூச்சிகளில் இரண்டு வகை உள்ளது. ஒன்று மேக்ராப்டீரஸ். (Mecroptirous) இறக்கைகள் உள்ளது. மற்றொன்று (Brachyptirous) இறக்கைகள் இல்லாதது. இப்பூச்சிகளின் ஆண், பெண் பூச்சிகள் இனச்சேர்க்கை செய்து பெண் பூச்சிகள் நெற்பயிரில் இலைத்தோகைகளில் கீழ்ப்பகுதிகளில் நடு நரம்பிற்கு இருபக்கங்களிலும் முட்டைகளை வரிசையாக உள்ளே திணிக்கிறது. இம்முட்டைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஒரு சங்கிலி போல் முத்து வெள்ளை நிறத்தில் இலைகளின் உட்புறத்தில் இடப்பட்டிருப்பதை உருப்பெருக்கியின் மூலம் இலைகளைப் பிரித்துப் பார்த்தால் காணலாம். ஒரு பெண் பூச்சியானது 300-500 முட்டைகளை இடுகின்றன. இம்முட்டைகளிலிருந்து 4-5 நாட்களில் வெளிவரும் குஞ்சுகள், பழுப்பு நிறத்தில் கூட்டம் கூட்டமாக நெற்பயிரின் அடித்தண்டுப் பகுதியில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சி உண்டு வளர்கிறது. இக்குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் 0.6 மி. மீ. நீளமுடையதாக இருக்கும். இவைகள் 13-15 நாட்களில் ஐந்து முறை சட்டை உறித்து வளர்ச்சியுற்ற பூச்சிகளாக மாறுகின்றது. வளர்ந்த பூச்சிகள் கடுகைவிட சற்றுப் பருமனாக உடலமைப்பு கொண்டதாகப் பழுப்பு அல்லது கரிய பழுப்பு நிறத்துடன் காணப்படும். இப்பூச்சிகளும் குஞ்சுகளும் பயிரின்

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

சொற்களில் பயன் [illegible]
சொல்ல வேண்டும்; [illegible]
களைச் சொல்லவே கூடாது.

அடிப்பாகத்தில் இருந்துகொண்டு சாற்றை உறிஞ்சும்பொழுது விஷத்தன்மையுள்ள தனது உமிழ் நீரையும் உள்செலுத்துவதால் பயிர்கருகி புகைந்தது போல் காணப்படுகின்றது.

பயிரில் அதிக எண்ணிக்கையுடைய பூச்சிகள் இருந்துகொண்டு தனது ஊசி போன்ற வாய்ப் பாகத்தினைத் தண்டினுள் செலுத்திச் சாற்றை உறிஞ்சும் பொழுது தண்டுகள் வலுவிழந்து உணவுப்பொருள்கள், தண்ணீர் ஆகியவை தண்டின் மேல்பகுதிக்குச் செல்லாது தடைப்பட்டு மணிகளில் பால் அடைப்பது பாதிக்கப்படுவதுடன், பயிர்கள் சாய்ந்து விடுகின்றன. அவ்வாறு வலுவிழந்த பயிர்த்தோகைகள் அழுக ஆரம்பித்துவிடுகின்றன.

தாக்கப்பட்ட இடங்களில் பயிர்கள் வட்ட வட்டமாகப் புகைந்து காய்ந்தது போல் காட்சியளிக்கின்றன. அப்பயிர்களில் முழுமையாக மணிப்பிடிக்காமல் பாதி பதராகி விடுகின்றன.

இவ்வாறு காய்ந்த பகுதிகளில் உணவு கிடைக்காத நிலையில் இறக்கையுள்ள இப்பூச்சிகள் இறக்கையினை விரித்து காற்றில் மிதந்து நல்ல பசுமையான பயிரினை நாடிச் சென்று முட்டையிட்டு தனது இனத்தை விருத்தி செய்கின்றன. இறக்கையில்லாத பூச்சிகளும் குஞ்சுகளும் பாசன நீரில் மிதந்து சென்று பக்கத்து வயல்களுக்குப் பரவி தனது இனத்தினை முழுமூச்சுடன் விருத்தி செய்கின்றன. முழுவளர்ச்சியடைந்த பூச்சிகள் 45 நாட்கள் வரை உயிர் வாழ்ந்து தனது இன விருத்தி வேலையினைச் செவ்வனே செய்கின்றன.

தமிழ்நாட்டில் இப்பூச்சிகள் ஆவணி மாதம் முதல், மார்கழி, தை மாதம் வரை அதிகமாக காணப்படுகின்றது.. சில பகுதிகளில் மாசி, பங்குனி மாதங்களிலும் அதிகமாகத் தோன்றி பயிருக்குச் சேதம் விளைவிக்கின்றது.

இப்பூச்சிகளானது பகல் நேர அதிகபட்ச வெப்பநிலைக்கும், இரவு நேர குறைந்த பட்ச வெப்பநிலைக்கும் 6 முதல் 8 சென்டிகிரேட் வித்தியாசம் தொடர்ந்தாற்போல் 10-15 நாட்களுக்கு இருக்கும் பட்சத்தில் அதிகமாகப் பல்கிப் பெருகுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள்:**

இப்பூச்சியின் தாக்குதலை எதிர்க்கவல்ல ரகமான கோ.41 நெல் ரகத்தினைச் சாகுபடி செய்தல். தழைச்சத்து அளிக்கும் உரத்தினை, பயிரின் தேவையினை அறிந்து இடுதல். தழைச்சத்து உரம் தேவைக்கு அதிகமாக இடப்பட்டு பயிர் அதிகமாக தூர்கட்டி அடர்ந்து இருக்கும் பகுதியில் இப்பூச்சிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டவுடன் வயலில் உள்ள தண்ணீரை வடித்துவிட வேண்டும்.

தமிழரசு
சந்தா
ஓராண்டு ரூ. 12.
அரையாண்டு ரூ. 6.

நெற்பயிர் இல்லாதபொழுது புல், பூண்டுகளில் இப்பூச்சிகள் இனவிருத்தி செய்வதால், வயலில் புல், பூண்டுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளுதல் நடவு செய்யும் பொழுது குத்துக்கு 2 நாற்றுக்கள் வைத்து சதுர. மீட்டருக்கு 50 குத்துக்கள் மட்டும் நடவு செய்தல்.

**விளக்குப் பொறிகள் அமைத்தல்:**

சாதாரணமாக குழல் விளக்குடன் அமைக்கப்பட்ட 15 விளக்குப் பொறிகளில் 4½ மணி நேரத்தில் (இரவு 7 முதல் 11.30வரை) 92.16 மில்லியன் இறக்கைகளுடன் கூடிய புகையான் பூச்சிகள் வந்து விழுவதாகக்கணக்கிடப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு ஏக்கர் பரப்பிற்கு ஒரு விளக்குப்பொறி அமைத்தால் பெரும்பாலும் இறக்கையுள்ள புகையான் பூச்சிகள் ஈர்க்கப்பட்டு அழிக்கப்படும்.

குறிப்பாக எந்த நேரத்தில் புகையான் பூச்சிகள் விளக்குப் பொறிகளால் கவரப்படுகின்றன என்பதனை 60 வாட்ஸ் டங்ஸ்டன் பல்புகொண்ட விளக்குப் பொறி கொண்டு சோதனை செய்தபொழுது இரவு 6.30 மணி முதல் 8.30 மணி வரை அதிகமான அளவு புகையான் பூச்சிகள் விளக்குப் பொறியால் கவரப்படுகின்றது என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, விளக்குப் பொறிகளில் மாலை 6.30 மணி முதல் 8.30 மணிவரை விளக்குகள் எரிந்தால் போதுமானது.

விளக்குப் பொறியினைச் சுற்றியுள்ள 5-6 மீட்டர் சுற்றளவுள்ள பயிரினை நன்கு பூச்சி மருந்து தூவி பராமரிக்க வேண்டும்.

வயலில் உள்ள நீரினை நன்றாக வடித்துவிட்டு, பயிரினை நான்கிலிருந்து ஆறடிக்கு ஒரு முறை பத்தி பத்தியாக நீக்கி தண்டின் அடிப்பகுதியில் படியுமாறு ஏக்கருக்கு 20 கிலோ பி.எச்.சி. 10% அல்லது 10 கிலோ செவின் 10% மினி டஸ்டர் கொண்டு தூவ வேண்டும்.

திரவ மருந்துகளாக இருந்தால் ஏக்கருக்கு 200 மில்லி பெலாசிட் அல்லது 200 மில்லி டைமெக்ரான் அல்லது 100 மில்லி டைமக்ரானுடன் 100மில்லி நூவான் சேர்த்துத் தெளிக்க வேண்டும்.

வயலில் தண்ணீரை வடிக்க முடியாத இடங்களில் ஏக்கருக்கு 1½ லிட்டர் மண்ணெண்ணையினை வயலில் பரவலாக ஊற்றி பின்பு மருந்துகளைத் தூவவோ, தெளிக்கவோ வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் பெருமக்களுக்கு உதவும் வண்ணம் தமிழக அரசு புகையான் பூச்சிகளின் தாக்குதல் தென்படும் பகுதியில் மருந்துகளை விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் விநியோகிக்கும் திட்டமும் உள்ளது.





# தித்திக்கும் திருக்குறளில் தீந்தமிழ் ஆட்சிமொழி

கோ. முத்துப்பிள்ளை

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு செய்தியை இங்கே குறிக்க விரும்புகிறேன். உணவுப் பங்கீட்டு முறை (rationing) அமலில் இருந்த சமயம் அது. அரசு அலுவலர் தேர்வு ஆணையம் (Public Service Commission) நடத்திய நேர்காணல் தேர்வு (interview) ஒன்றிற்கு என் நண்பர் ஒருவர் சென்றார். தேர்வு செய்ய வீற்றிருந்த ஆணைய உறுப்பினர்களில் தமிழார்வமிக்க உறுப்பினர் ஒருவர் ஒரு வினாவை எழுப்பினார். Rationing முறையைப் பற்றி, திருவள்ளுவர் ஏதேனும் சொல்லியிருக்கின்றாரா என்பதுதான் அந்த வினா. நண்பர் திகைத்துப் போய்விட்டார்! அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை! ''திருவள்ளுவர் காலத்தில் உணவுப் பொருள்கள் நிறையக் கிடைத்திருக்குமே. தட்டுப்பாடு எதுவுமே இருந்திருக்காதே. அவ்வாறாயின் திருவள்ளுவர் ஏன் rationing பற்றிப் பாடப் போகிறார்?'' என்றெல்லாம் நண்பரின் சிந்தனை சுழலத் தொடங்கியது. ஆணையத்தின் உறுப்பினர் அவர்களோ குறுநகை புரிந்து ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்னும் திருக்குறள் தங்களுக்குத் தெரியுமா? என்று வினவினார். ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'' rationing தானே என்று மேலும் வினவினார். இதைக் கேட்ட நண்பர் வியப்பிலே மூழ்கி நின்றார்!

நன்னடத்தை அலுவலர் (Probation Officer) ஒருவர் (டாக்டர் இலக்குவனாரின் மகன்) என் இல்லத்திற்கு வந்திருந்தார். நன்னடத்தை அலுவலர் என்னும் பதவிப் பெயர் அந்தப் பதவியின் பணியை நன்கு விளக்குவதாகத் தெரியவில்லை. இந்தப் பெயரை மாற்றியமைத்து விட்டால் கூட நல்லதென்று தெரிகின்றது.


குற்றம் புரிந்தவர்களில் சிலர் நீதிமன்றத்தால் மன்னிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலம்வரையில் கண்காணிக்கப்படுகின்றார்கள். இந்த முறையில் கண்காணிப்புச்செய்யும் அலுவலர்களையே நன்னடத்தை அலுவலர்கள் என்று கூறுகின்றோம். அப்படிக் கூறும்போது, இந்த அலுவலர்களுக்கே நன்னடத்தை கற்பிக்கப்படுவதுபோலத் தோன்றுகின்றது. இந்தச் சமயத்தில் புறநானூற்று வரி ஒன்று நினைவிற்கு வருகின்றது.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும்
பிறர்க்கு எடுத்துச் சொல்லியும் தான் அவற்றின் நெறியில்
அடங்கி ஒழுகாத பேதைபோல் வேறு பேதையர் இல்லை.

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**

**மிக்க பசியும், ஓயாத நோயும் (வெளியே இருந்துவந்து தாக்கி) அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.**



''நன்னடை நல்கல் வேந்தற்குக்
கடனே''

என்பதுதான் அந்த வரி. இனி மேல் நன்னடத்தை அலுவலர்களை ''நன்னடை நல்கும் அலுவலர்கள்'' என்று அழைக்கலாமே என்று எண்ணத் தோன்றுகின்றது.

நிற்க, நன்னடத்தை அலுவலர் என்னிடம் சொல்லிய செய்தியை இப்போது பார்ப்போம். ''எங்கள் பணியைப் பற்றிக்கூட வள்ளுவர் அருமையாக விளக்கியுள்ளார்'' என்று அவர் பெரும் பூரிப்புடன் குறிப்பிட்டார்.

''திருக்குறளில் சொல்லப்படாத செய்தி எதுவுமே இல்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லப்போகின்றீர்கள் போலும்'' என்று நான் சொல்லிவிட்டு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

''ஒறுத்தாற்றும் பண்பினார் கண்
ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை'

என்னும் தலையாய குறட்பாவை எடுத்துக்கூறிப் புன்னகை பூத்தார். கருத்துக்கள் மெல்ல மெல்லத் தெள்ளத் தெளிவாயின. ''ஒறுத்தாற்றும் பண்பினார்'' தாம் குற்றவாளிகள்! எத்துணை நுட்பமான கருத்து இதிலே ஒளிந்து கொண்டுள்ளது! அவர்மீது கூடக் கண்ணோட வேண்டும்! ஆம். அவரை மன்னித்தல் வேண்டும். பொறுத்தாற்றும் பண்பு என்பது என்ன? அதுதான் நீதிமன்றத்தின் தலைசிறந்த பண்பு. பொறுத்தாற்றும் பண்புடைய நீதிமன்றத்துக்கு ஒறுத்தாற்றும் பண்பினரைக் கண்காணிக்கத் துணையாக நிற்பவர்கள்தாம் நன்னடத்தை அலுவலர்கள்.

குடும்ப நலத் திட்ட அலுவலர் ஒருவர் ஒரு நாள் உரையாடிக் கொண்டிருந்தார். ''குடும்ப நலத்தைப் பற்றித் திருவள்ளுவர் கூறியிருக்கின்றாரே தெரியுமா'' என்றார். ''ஆம். திருக்குறள் நூல் முழுவதுமே குடும்பநல விளக்கந்தானே?'' என்று நான் விடை பகர்ந்தேன். ''இல்லை. ஐயா, குடும்பத்தை அளவுபடுத்துவதைப் பற்றிக்கூட திருவள்ளுவர் தெரிவித்துள்ளார்'' என்று தொடர்ந்து கூறினார். வியப்பாக இருந்தது. ''திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில், மக்கள் நெருக்கம் இந்த அளவிற்கு இருந்திருக்காதே. எல்லா வசதிகளும் எல்லார்க்கும் எளிதாகக் கிடைத்திருக்குமே'' என்றெல்லாம் எண்ணத் தொடங்கினேன். நண்பர் நயமாக ஒரு குறட்பாவை எடுத்துக் கூறினார்.

''அளவறிந்து வாழாதான்
வாழ்க்கை உளபோல்
இல்லாகித் தோன்றாக்
கெடும்''

**அளந்து அளந்தல்லவா சொற்களை அமைத்துள்ளார் வள்ளுவர்.**
**''அளவோடு பெற்று**
**வளமோடு வாழ்க''**

என்னும் அழகுமொழி வந்த வரலாறு இப்போது புரிகின்றதல்லவா?

இன்று பெரிதாகப் பேசப்படும் எந்தக் கருத்திற்கும் வேர்க் கருத்துக்கள் திருக்குறளில் பொதிந்து கிடக்கின்றனவென்பதற்கு மேலே சொல்லப்பட்ட செய்திகள் ஒரு சில எடுத்துக்காட்டுகளேயாகும்.

இது மட்டுமன்று. எத்தனையோ ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான மொழிபெயர்ப்புகள் கிடைக்கவில்லையே என்று ஏங்கிப் புலம்புகின்றோம். ஆனால் ஆட்சிமொழிக் கண்கொண்டு திருக்குறளைத் திரும்பவும் படிக்க நாம் முனைவதில்லை. அவ்வாறு முனைந்தால் முழு மணிகள் நிறையக் கிடைக்கும்.

ஆட்சிமொழி வகுப்புகளை நடத்திவந்தபோது ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்றை இப்போது குறிப்பிட விரும்புகிறேன். Industry என்னும் சொல்லுக்கு ஈடாக ''தொழில்'' என்று சொல்லுகின்றோம். ஒரு நண்பர் எழுந்து நின்றார். ''ஐயா, Industry என்றால் ''தொழில்'' என்று மொழி பெயர்க்கின்றோம். அவ்வாறாயின், Profession என்பதற்கு உரிய மொழி பெயர்ப்பு என்ன?'' என்று கேட்டுவிட்டு, மிடுக்காக அமர்ந்து கொண்டார். வகுப்பிலிருந்த மற்றவர்களும் ''ஆசிரியர் அகப்பட்டுக் கொண்டார்'' என்னும் முறையில் முறைப்பாக உட்கார்ந்தனர்! எங்கிருந்தோ ஓர் எண்ணம் என் மனத்தில் பளிச்சிட்டது. ''செய் தொழில்'' என்று சொல்லிவிட்டு, பெருமூச்சுவிட்டுக்கொண்டேன். வினாவைத் தொடுத்த நண்பரும் மற்றவர்களும் புன்னகை பூத்தனர்! ''ஆசிரியர் எப்படியோ சமாளிக்கிறார்'' என்பதுதான் அந்தப் புன்னகையின் பொருள்! தீஞ்சுவைத் திருக்குறள் நினைவிற்கு வரவே எனக்குப் புதுத் தெம்பு ஏற்பட்டது.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்
கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

என்று நிறுத்தி நிறுத்தித் தெளிவாகச் சொல்லிவிட்டு அமர்ந்தேன். எதிர்ப்புகள் தவிடுபொடியாயின. எல்லாருமே வியந்து பாராட்டத் தொடங்கினர். அண்மைக் காலத்தில் வாழ்ந்த தண்டபாணி அடிகளார் அருளிய அடிகள் நமக்கெல்லாம் தெரியுமே!


''செய்யும் தொழிலனைத்தும்
சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிற்கு நிக
ரில்லை''

இங்கு அடிகள் குறிப்பிடும், செய்யும் தொழிலைத்தான் நாம் ''செய்தொழில்'' என்று அமைத்துக்கொண்டுள்ளோம்.

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு சமயம் too high என்னும் தொடரும், too low என்னும் தொடரும் எங்களுக்கு இடர் செய்தன. மிக அதிகம், மிகக் குறைவு என்று சொல்லிப் பார்த்தோம். இவை very high, very low என்னும் தொடர்களுக்கே பொருந்தும் என்று தெரிந்தது. ஆனால் too என்னும் சொல் ''அளவுக்கு மேல்'' என்னும் பொருளைத் தருகின்றதல்லவா? ''அளவுக்கு மேல் அதிகமானது'', ''அளவுக்கு மேல் குறைந்தது'' என்று சொல்ல வேண்டும். வழக்கறிஞர் முகமது யாசின் அவர்களுக்கு ஒரு நல்ல கருத்து தோன்றியது. ''சால மிகுதி'', ''சாலக்குறைவு'' என்று சொல்லலாமே என்று அவர் தெரிவித்தார். ''சால'' என்றாலும் ''அதிகம்'' என்னும் பொருள் தானே ஏற்படும் என்பதை அவரிடம் எடுத்துச் சொன்னோம்! அவரோ விடுவதாக இல்லை! கருத்து நிறைந்த குறட்பா ஒன்றினைக் கணீரென்ற குரலில் கவினுற மொழிந்தார்.

''பீலிபெய் சாகாடும் அச்
சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

என்பதுதான் அந்தக் குறட்பா. இந்தக் குறளில், ''சால'' என்னும் சொல் ''அளவுக்கு மேல்'' என்னும் பொருளில் வந்திருப்பதைக் கண்டு இன்புற்றோம்.





அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் செய்யும் தவறுகளைப் பொதுவாக acts of Commission and omission என்று குறிப்பிடுவார்கள். செய்யக்கூடாத ஒன்றைச் செய்துவிட்டால், அது குற்றமாகும் என்பதை யாவரும் அறிவர். இதுதான் Commission. இதைப் போலவே செய்ய வேண்டிய ஒன்றைச் செய்யாது விட்டுவிட்டாலும் குற்றம். இதைத்தான் Omission என்று சொல்வார்கள். இந்த இரண்டு வகைக் குற்றங்களையும் திருவள்ளுவர் தீந்தமிழ்ச் சொற்களால் விளக்குகின்றார்.

''செய்தக்க அல்ல செயக்கெடும்
செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்''

என்பது அவருடைய அமுத வாக்கு. செய்யத் தகாதன செய்தல்=Commission. செய்யத்தக்கன செய்யாமை=Omission.

**Efficiency** என்னும் சொல் நீண்ட நாட்களாகத் தொல்லை கொடுத்துக் கொண்டுள்ள ஒரு சொல்லாகும். ஆம். நான் அதன் மொழிபெயர்ப்பைத்தான் குறிப்பிடுகின்றேன்! இதற்கொரு மொழிபெயர்ப்பைத் தருவதற்கே efficiency தேவைப்படும் போலிருக்கிறது! Merit என்பதற்குத் ''தகுதி'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றோம். Efficiency என்னும் சொல்லிற்குத் ''திறமை'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். ''அவர் திறமை வாய்ந்தவர்'' என்னும் ஒரு வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதை ஆங்கிலத்தில் He is an able person என்றுதான் சொல்லுவோம். எனவே ability என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத்தான் ''திறமை'' என்னும்சொல் நன்றாகப் பொருந்துகின்றது. அவ்வாறாயின் efficiency என்பதற்கு ஏற்ற மொழிபெயர்ப்பு கிடைக்கவில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். ஒருநாள் திருக்குறளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, பின்வரும் குறள் என் கருத்தைக் கவர்ந்தது:

''முறைப்படச் சூழ்ந்தும் முடி
விலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்''.

முன்கூட்டியே முறைப்படி ஆராய்ந்திருந்தும்கூட, அந்தச் செயலைச் செய்யும்போது, சீரிய முறையில் செய்து முடிக்கமாட்டார்கள். அதற்குக் காரணம் அவர்கள் ''திறப்பாடு'' இல்லாதவர்கள். திறப்பாடு இல்லாதவர்களை inefficient persons என்று சொல்லலாமல்லவா? புதையல் கிடைத்துவிட்டது. Efficiency என்பதற்குத் ''திறப்பாடு'' என்பதே ஏற்ற மொழி பெயர்ப்பும் இனியமொழி பெயர்ப்பும் ஆகும்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் முறையிலேதான் இந்தக் கட்டுரையை வரைந்துள்ளேன். ஆர்வமுள்ள அனைவரும் அரும்பெறல் நூலாகிய தீந்தமிழ்த் திருக்குறளைத் திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும். ஏற்ற சொல் '' இல்லை'' என்பார்க்கெல்லாம் ''உண்டு'' எனபதை உணர்த்திடவேண்டும்.

**பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்லது அமைச்சு.**

**பகைவர்க்குத் துணையானவரைப் பிரித்தலும், தம்மிடம் உள்ளவரைக் காத்தலும், பிரிந்தவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளலும் வல்லவன் அமைச்சன்.**

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.**

**பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை (பல வளமும்) இருப்பதுபோல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.**

# தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள்

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை 1977-ஆம் ஆண்டில் மாதிரி அரைவையைத் தொடங்கியது. 40,490 டன் கரும்பு அரைவை செய்து 8.80 சதவீத சர்க்கரைச் சத்துடன், 35,159 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 24.893 குவிண்டால் சர்க்கரை குவிண்டால் ஒன்றுக்குச் சராசரி ரூ. 208.29 விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 7809 ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு, ஆலையின் 1977-78 அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டது.

1-12-1977 முதல் 25-6-78 முடிய நடந்தேறிய முதலாம் முக்கிய அரைவைப் பருவத்தில் 2,18,673 டன் கரும்பு அரைவை செய்யப்பட்டது. 8.88 சதவீத சர்க்கரை சத்துடன் 1,95,433 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 6825 ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு 1978-79 ஆம் ஆண்டின் அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டது.

1978-79 ஆம் ஆண்டு பருவத்தில் இவ்வாலையின் உற்பத்தி விவரம் வருமாறு :

(1) கரும்பு அரைத்தது, 183349 டன், (2) சர்க்கரை உற்பத்தி செய்தது 176016 குவிண்டால். 3. சர்க்கரை விற்பனை 31-5-79 முடிய, 94,424 குவிண்டால். 4. சர்க்கரைச் சத்து 9.16 (5) சராசரி விலை (குவிண்டாலுக்கு) ரூ. 196.88.

**ஜவகர்லால் நேரு சர்க்கரை ஆலை**

18 மாதக் கால இடைவெளியில் கட்டி முடிக்கப்பட்ட இச்சர்க்கரை ஆலை 1978 - ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ஆம் நாள் தனது மாதிரி அரைவையைத் தொடங்கியது. இவ்வரைவைப் பருவத்தின் சாதனை பின்வருமாறு :

(1) கரும்பு அரைவைசெய்தது 1,41,383 டன். (2) சர்க்கரை உற்பத்தி செய்தது, 1,28,305 குவிண்டால். 3. சராசரி சர்க்கரைச் சத்து 9.2 சதவீதம். 6,000 ஏக்கரில், கரும்புப் பயிர் செய்யப்பட்டு, 1978-79 பருவ அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1978-79-ஆம் ஆண்டுப் பருவத்தில் சர்க்கரை ஆலையின் உற்பத்தி விவரம் வருமாறு :

1. கரும்பு அரைத்தது (டன்) 187497, (2) சர்க்கரை உற்பத்தி (குவிண்டால்) 168780 டன், (3) சர்க்கரைச் சத்து 9.03 சதம், (4) சர்க்கரை விற்பனை (31-5-79) 58079 குவிண்டால், (5) சராசரி விலை ரூபாய் 191.56.

31-5-79 முடிய 6463 ஏக்கரில் கரும்புப் பயிர் செய்யப்பட்டு 1979-80 ஆம் ஆண்டின் பருவ அரைவைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



தமிழகத்தில் தற்பொழுது 20 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 9 ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 9 ஆலைகள் தனியார் துறையிலும் மிகுதியுள்ள இரு ஆலைகள் பொதுத் துறையிலும் உள்ளன.

இந்த ஆலைகளில் தினசரி கரும்பு அரைவைத்திறன் 40100 டன்களாகும். இந்த 20 ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் இரண்டும் பொதுத் துறையில் இரண்டும் ஆக 4 புதிய ஆலைகளாகும். இவற்றில் 1976-77 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் மூன்று ஆலைகளும் 1977-78-ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் ஒரு ஆலையும் தனது முதல் அரவைப் பணியைத்தொடங்கின. இவை தவிர ஐந்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் ஐந்து ஆலைகளும் தங்களது அரவைத் திறனை விரிவாக்கம் செய்து விரிவாக்கப்பட்ட திறனுடன் இயங்கி வருகின்றன.

1976-77 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 1.54 இலட்சம் எக்டேர்களில் கரும்புச் சாகுபடி செய்யப்பட்டது. அது 1977-78 ஆம் ஆண்டில் 1.64 இலட்சம் எக்டேர்களாக உயர்ந்தது. கரும்பு உற்பத்தி முறையே 142 இலட்சம் டன்னிலிருந்து 172 இலட்சம் டன்களாக உயர்ந்தது. இதில் 30-லிருந்து 35 சதவீதம் கரும்பு சர்க்கரை உற்பத்திக்கென ஆலைகளினால் அரைக்கப்படுகிறது. 1976-77-ல் 37.91 இலட்சம் டன்கள் கரும்பு. அரைவை செய்யப்பட்டது. 1977-78-ல் இது 54.66 இலட்சம் டன்களாக உயர்ந்தது.

1978-79 நடப்பு ஆண்டிலும் சுமார் 56 இலட்சம் டன்கள் கரும்பினை சர்க்கரை ஆலைகள் அரைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவே இதுவரை தமிழ்நாட்டில் அரவை செய்யப்பட்ட கரும்பின் அதிக அளவு ஆகும். சர்க்கரை உற்பத்தி 1976-77-ல் 3.22 இலட்சம் டன்களாக இருந்து 1977-78-ல் 4.68 இலட்சம் டன்களாக உயர்ந்தது. 1978-79லும் இந்த அளவினை எட்டிட முழு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே கடந்த இரண்டு ஆண்டுகளில் கரும்பு உற்பத்தியிலும் கரும்பு அரவையிலும் சர்க்கரை உற்பத்தியிலும் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**புதிய ஆலைகள்**

நமது மாநிலத்தில் மக்களிடையே கூட்டுறவு இயக்கம் மிகுந்த அளவில் பரப்பப்பட வேண்டுமென்றநல்லெண்ணத்தை மேற்கொண்டுள்ள தமிழக அரசு 1977-ஆம் ஆண்டில் இனித் துவக்கப்படவிருக்கும் புதிய சர்க்கரை ஆலைகள் அனைத்தும் கூட்டுறவுத் துறையிலேயே அமைக்கப்படவேண்டுமெனமுடிவுஎடுத்தது. அதன்படி நாளொன்றுக்கு 1250 டன்கள் கரும்பு அரவைத்திறன் கொண்ட புதிய சர்க்கரை ஆலை ஒன்றை தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பெரிய செவலை என்ற கிராமத்தில் நிறுவனம் செய்ய ஆக்க வேலைகள் துரிதமாக நடந்து கொண்டு வருகின்றன. இந்த ஆலையினை அமைத்த உத்தேச செலவு ரூபாய் 650 இலட்சமாகும். இதனைத் தமிழக 'அரசு, கரும்பு விவசாயிகள் இவர்களிடமிருந்து பங்கு மூலதனமாக ரூ. 227.50 இலட்சமும் மத்திய நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடனாக ரூ. 422.50 இலட்சமும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தனது பங்கு மூலதனமாக அரசு ரூ.145 இலட்சம் வழங்கியுள்ளது. கரும்பு விவசாயிகளிடமிருந்து ரூ. 20 இலட்சம் பங்கு மூலதனமாகப் பெறப்பட்டுள்ளது. மத்திய நிதி நிறுவனங்களிடம் நிதி உதவி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இது கிடைப்பதற்குச் சிறிது காலம் ஆகும் என்று உணர்ந்த தமிழக அரசு, ஆலை நிர்மாணத் தேவைகளைத் தொடருவது என்று தீர்மானித்து வழிவகைகள் முன்பணமாக ரூ. 150 இலட்சம் வழங்கியுள்ளது. ஆலைத் தேவையின் அவசியத்தை எதிர் நோக்கி வரும் ஆண்டிலும் ரூ. 175 இலட்சத்தை உதவவும் முன் வந்துள்ளது. இந்தப் புதிய ஆலை 31-10-1980-க்குள் தனது அரவையைத் தொடங்கிவிடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலை அமைப்பதால் இந்தப் பகுதியில் ஆயிரக் கணக்கான கரும்பு விவசாயிகள் பயனடைவதோடு இந்தப்பகுதியினைச் சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப்பும் ஏற்படும்.

**வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி**

தமிழக சர்க்கரை ஆலைகளில் 1977-78ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டசர்க்கரையிலிருந்து 1,66 இலட்சம் டன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதே மாதிரி 1978-79-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையிலிருந்தும் கணிசமான அளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. நமது நாட்டில் வேறு எந்த மாநிலத்திலிருந்தும் இந்த அளவு சர்க்கரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஏற்றுமதிக்கு லாயக்கான சர்க்கரையைத் தேர்ந்தெடுக்கும் குழு நமது ஆலைகளில் குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் தரம்மிகவும் சிறப்பானதாக உள்ளது என்று கருதியதால் நாம் இந்த அளவுக்கு ஏற்றுமதி செய்ய முடிந்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியது.

சர்க்கரை விற்பனைக் கட்டுப்பாடு நீங்கியவுடன் வெளிச்சந்தையில் சர்க்கரை விலை வீழ்ச்சி ஏற்பட்டதோடல்லாமல் மத்திய அரசினால் கிடைக்கும் என்று எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கப் பெறாத சூழ்நிலை ஏற்பட்டபோது, தமிழக சர்க்கரை ஆலைகளில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அண்டை மாநிலங்களான கர்நாடகம் மற்றும் மராட்டிய மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் கடும் போட்டியிலிருந்து தமிழக சர்க்கரை ஆலைகளுக்கு சர்க்கரை விற்பனையில் மிகக் குறைவான விலையே கிடைத்தது. இதன் காரணமாக ஆலைகளுக்கு கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குக் கரும்புக் கிரயம் முழுமையாகக் கொடுக்க இயலாத சூழ்நிலை இருந்தது.

கரும்பு விவசாயிகள் ஆலைகளுக்குக் கொடுத்த கரும்பினை கிரயத்தை அவர்களுக்கு அளிப்பதில் காலத் தாமதம் ஏதும் ஏற்பட்டு அதனால் அவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகக் கூடாது என்கிற நோக்கத்தில் தமிழக அரசு இந்த ஆலைகளுக்கு வழி வகைக் கடனாக ரூ. 209.33 இலட்சம் அளித்துள்ளது. இதனால் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் கரும்பின் முழு கிரயத்தை உடனடியாகக் கொடுக்க முடிந்தது. இதன் மூலம் பயனடைந்தோர் பல்லாயிரக்கணக்கான கரும்பு விவசாயிகள் ஆவர்.

சர்க்கரை ஆலைகள் கிராமப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. அறுவடை செய்யப்பட்ட கரும்பு உடனடியாகச் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அரைக்கப்பட வேண்டும். இல்லையெனில் சர்க்கரைச் சத்து பாதிக்கப்பட்டு சர்க்கரை கட்டுமானம் குறையும். ஆகவே, கரும்பு பயிராகும் பகுதிகளில் போதிய சாலைகளமைத்தலின் அவசியத்தை உணர்ந்த நமது அரசு இம்மாதிரி சாலைகள் அமைப்பதற்காக 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 75 இலட்சம் செலவு செய்ததை 1977-78ஆம் ஆண்டிற்கு ரூ. 105.04 இலட்சம் ஆகவும்,1978-79ஆம் ஆண்டிற்கு ரூ. 109.92 இலட்சம் ஆகவும் உயர்த்தியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பலகிராமங்களுக்குச் சாலை வசதிகள் கிடைப்பதுடன் கிராமப் பொருளாதார முன்னேற்றமும் உண்டாகும்.

**பயிற்சி நிலையம்**

சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் இரசாயன மற்றும் பொறியாளர்களுக்கும் வல்லுநர்களுக்கும் தகுந்த பயிற்சி கொடுக்கவும் மற்றபடி சர்க்கரைத் தொழில் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் இதுவரை இந்தியாவில் கான்பூரில் உள்ள தேசிய சர்க்கரைப் பயிற்சி நிலையம் ஒன்றுதான் உள்ளது. ஆலைகள் நல்ல முறையில் இயங்க பயிற்சி பெற்ற ஊழி

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.**

**(மக்களுடைய குணங்களாகிய) பெருமைக்கும், (குற்றங்களாகிய) சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல்லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.**

***தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.***

**ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும், ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.**

யர்கள் அவசியம். இந்த அவசியத்தை உணர்ந்து பயிற்சி அளிக்கவும் இதர ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் நமது மாநிலத்திலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் ஆலைகள் பெரும் பயனடையும்.

கழிவுப் பாகு 'மொலாசஸ்' எனப்படுவது சர்க்கரைத் தயாரிப்பில் கிடைக்கும் துணைப் பொருள்களில் ஒன்றாகும். இதுவே எரி சாராய உற்பத்திக்கு மூலப்பொருளாகும். இதற்காகத் தமிழகத்தில் 8 வடிப்பகங்கள் இயங்கிவருகின்றன. கழிவுப்பாகு, நல்லெண்ணெய், கோழி - கால் நடைத் தீவனத் தயாரிப்பு ஆகியவற்றுக்கும் ஒதுக்கப்பட்ட பின் மிகுதி அதிகப்படியான அளவு உள்ளது. இதனை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய தமிழகஅரசு முடிவு செய்துள்ளது. இந்த நடவடிக்கையினால் சர்க்கரை ஆலைகள் பெரும்பலன் அடையும்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் சர்க்கரைத் தொழிலாளர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் 1.10.1978 முதல் சர்க்கரைத் தொழிலாளி ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 20.40 ஊதிய உயர்வு அளித்தது. நமது அரசு அதற்கு மேலாக ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 30.40 கிடைக்க வழி செய்வதோடு இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக ஏற்படவிருந்த வேலை நிறுத்தத்தையும், அதனால் விளையவிருந்த உற்பத்திக் குறைவையும் தவிர்த்துள்ளது.

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கழிவுப்பாகு தவிர மற்ற பொருள்களான கரும்பு சக்கை, அழுக்கு மண் போன்றவற்றைப் பயன்படுத்தி வந்த தொழிலும் நமது மாநிலத்தின் கணிசமான அளவு முன்னேற்றம் அடையவில்லை. கரும்புச் சக்கையைப் பயன்படுத்த காகிதம் உற்பத்தி செய்ய தொழிற்சாலைகளும், அழுக்கு மண்ணைப் பயன்படுத்தி மெழுகு உற்பத்தி செய்யத் தொழிற்சாலைகளும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நமது மாநிலத்தில்தொழில் வளரும். வேலை வாய்ப்புகளும் பெருகும்.

# தஞ்சை மாவட்டத்தில்

## 1 கோடி செலவில் வேலைகள் முடிந்தன

வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் ரூ. 1 கோடி மதிப்புள்ள வேலைகள் நடந்தன. இன்னும் 4 ஆயிரத்து 918 வேலைகள் செய்ய வேண்டியது இருக்கிறது என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## "வழிகாட்டி விளக்குகள்"

தஞ்சை மாவட்டத்தின் கடலோரப்பகுதிகளான ஏரிப்புறக் கரை, மல்லிப்பட்டிணம், வானமாதேவி; செந்தலைவயல், கரையூர் தெரு ஆகிய ஐந்து மீனவ கிராமங்களிலுள்ள மீனவர்கள் இரவு நேரங்களில் மீன்பிடித்துத் திரும்பும்போது அவர்களின் வசதிக்காகத் தங்களுடைய கிராமங்களைக் கண்டுகொள்ளவும், கரையேற வேண்டிய இடங்களுக்குப் பத்திரமாகச் சேரவும் மேற்குறிப்பிட்ட 5 இடங்களிலும் புதிதாக "வழிகாட்டி விளக்குகள்" அமைக்கத் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

## 300 நெல் கொள்முதல் நிலையங்கள்

தமிழக அரசு நடப்பு குறுவைப் பட்டத்தில் நெல் விலையை உயர்த்தி ஆணையிட்டதற்கிணங்கத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அறிவிக்கப்பட்ட உயர் விலையில் தஞ்சை மாவட்டத்தில் எல்லா வட்டங்களிலும் 300 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதுகாறும் 2408 டன் நெல், கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அனுமதிக்கப்பட்டுள்ள எட்டு அரைவை முகவர்களும் 678 டன் நெல், கொள்முதல் செய்துள்ளார்கள்.

## குறளில் உள்ளவை



குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன.

— தந்தை பெரியார்



# வசதியான பயணத்திற்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம்

முதன் முதலாக நெடுந்தொலைவு விரைவுப் பேருந்து 1959ஆம் ஆண்டில் சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையே கிருஷ்ணகிரி வழியாகத் துவக்கி வைக்கப்பட்டது. பொது மக்கள் ஆதரவு பெருகவே மேலும் பல நெடுந்தொலைவுப் பேருந்துகள் அடுத்து விடப்பட்டன. தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்ட பிறகு விரைவுப் பேருந்துகள் இயக்ககம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 15.9.1975 முதல் இணைக்கப்பட்டு ஒரு தனிப் பிரிவாகச் செயல்படத் தொடங்கியது.

உலகத்துக்கு அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலின் தத்துவத்தைத் தொகுத்தளித்த பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவர் தினமான 16.1.1980-ல் பல்லவன் விரைவுப் பிரிவு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமாகத் தனித்து இயங்குகிறது.

## கழகத்தின் பேருந்துகளும் அதன் இயக்ககமும்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் 378 பேருந்துகள் இருக்கின்றன. இவைகளில் 322 பேருந்துகள் அன்றாடம் 127 வழித் தடங்களில் இயக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டத் தலை நகரங்களுக்கும் முக்கிய புண்ணியத் தலங்களுக்

***மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.***

**முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்து போற்றிப் பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.**

*இளிவரின் வாழாத மானம் உடையார்*
*ஒளிதொழுது ஏத்தும் உலகு.*

**தமக்கு யாதேனும் இழிவு நேர்ந்தால் உயிர்வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தார் தொழுது ஏத்தி நிற்பார்கள்.**

கும், அண்டை மாநிலங்களான புதுவை, திருப்பதி, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், கோட்டயம், குமிலான் ஆகிய இடங்களுக்கும் பயணிகள் வசதியையும் சேவையும் மையமாகக் கொண்டு இரவும் பகலுமாக நாளொன்றுக்கு 1.95 இலட்சம் கி.மீ. தூரம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அண்டை மாநிலங்களுக்கு 32 வழித்தடங்களில் 74 பேருந்துகள் சென்று வருகின்றன. ஒரு நாளைக்கு சராசரி 35,000 பயணிகள் பயணம் செய்து இன்புறுகின்றனர். பேருந்துகளைப் பராமரிப்பதற்கும், இயக்குவதற்கும், தமிழ்நாடு முழுவதுமாக 12 பணிமனைகள் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. எல்லா வசதியும் நிறைந்த எட்டுப் பேருந்து நிலையங்கள் சென்னை, வேலூர், திண்டிவனம், கோவை, சேலம், திருச்சி, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. அந்நிலையங்களில் முக்கியமாக பயணிகள் உபயோகத்திற்காக நவீன முறையில் சுத்தமான கழிவறைகளும், குளியலறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகள் தங்கள் பொருட்களை பாதுகாப்பாக வைத்துவிட்டு வெளியில் சென்றுவர (Clcck room) வசதியும் உள்ளது.

வண்டிகளின் வருகை, புறப்பாடு முதலியவற்றைப் பயணிகளுக்குத் தெரிவிக்க ஒலி பரப்பு அமைப்பும் உள்ளது. பயணத்தை துவக்கும் முன்னரோ, முடிந்த பின்னரோ பேருந்து நிலையத்தில் தங்கி ஓய்வெடுக்க விரும்பும் பயணிகளின் தேவைக்கு குறைந்த கட்டணத்தில் ஓய்வு அறைகளும் உள்ளன. பயணிகள் பசியாற சிற்றுண்டிச் சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து நிலையங்கள் பொது மக்களின் பயணத்தேவைகளைப் பெருமளவில் நிறைவேற்றும் என்று நினைத்து நெடுந்தூர பயணத்திற்கான இத்தகைய வசதிகளை தேசிய நெடுஞ்சாலையின் பல பகுதிகளில் படிப்படியாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**விரைவுப் பேருந்தின் அமைப்பு**

கண் கவர் வண்ணத்திலே அழகாக குளிர் கண்ணாடிகள் பொருத்தப்பட்டு கோடை காலத்திற்கும், கார் காலத்திற்கும் உகந்த வண்ணம் பேருந்து அமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் வசதியுடன் அமர்ந்து, பயணம் செய்ய மிருதுவான இருக்கைகள், நெடுந்தூரப் பயணத்திற்கு ஏற்ப உறக்கம் கொள்ள சாய்வு வசதிகள் கொண்ட இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. வண்டியில் குடிநீர் வசதி, மின் விசிறி வசதிகளுடன் பயணிகள் தங்கள் பொருட்களை வசதியாக வைக்கப் பேருந்து உள்ளும், வெளியிலும் வைப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயணிகள் நெடுந்தூரப் பயண வசதியை முன்னிட்டு சில ''DELUX'' பேருந்துகள் 34 இருக்கைகளுடன் வசதியாக அமைக்கப்பட்டு, பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன.

**குறைந்த கட்டணம் நிறைந்த சேவை**

பெரும்பாலான பயணிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் விரைவுப்பேருந்துகளின் கட்டணங்கள் 1976 மார்ச் மாதத்தில் கி.மீட்டருக்கு 6 காசு என்றிருந்ததை முதல் தடவையாக 1977 செப்டம்பர் திங்களில் 5½ காசாக குறைக்கப்பட்டு, மேலும் 1978 ஏப்ரல் மாதத்திலிருந்து 5 காசாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**திரைப்பட குளுமைப் பேருந்து**

தென் மாநிலங்களிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் சென்னை-திருவனந்தபுரத்திற்கிடையே 13.9.78 முதல் குளுமைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதைத் தொடர்ந்து சென்னையிலிருந்து பெங்களூர், கோவை, ராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்குத் திரைப்பட குளுமை இன்பப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகள் மன நிறைவுடன், களிப்புடன் நெடுந்தூர பயணத்தை மேற்கொள்ள ஏற்ற வகையில் ''சுகமாய் தூங்க மெத்தை, சுழலும் விசிறி, படிப்போர்க்கு தினசரி பத்திரிகைகளும்-தனி விளக்கும், செவிக்கினிய இசையமுதும், நா சுவைக்க இனிப்பும்'' வழங்கப்படுகின்றன. பேருந்துகளின் வளர்ச்சி விதத்திற்கு ஈடு கொடுத்து பயணிகளுக்கு நல்கும் வசதிகளின் தரமும் தொழிலாளர் பணிக்கான நலன்களும் விரிவாக்கப்பட்டுள்ளன. இந்த மேம்பாட்டுச் சிறப்புக்கு பேருந்துகளின் தரமான பராமரிப்பு, பேருந்துகள் இயக்க நியதிகளின் சீரமைப்பு, வருவாய் கசிவை முடியாத விழியடைப்பு, எல்லா வகைப்பணியாளர்களுக்கும், உற்பத்தித் திறன் அடிப்படையில் ஊக்கப் பணம் ஆகிய முறைகளே காரணங்கள் என்றால் அது மிகையாகாது.

**தொழிற்பட்டறையும் அதன் உற்பத்தியும்**

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்துக்கென்றே திருச்சியில் நவீன முறையில் ஒரு தொழிற்பட்டறை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இங்கு மாதத்திற்கு சராசரி 2 பேருந்துகளுக்குக் கூண்டு கட்டும் பணியும், 40 என்ஜின்கள், 1000 டயர்கள் புதுப்பித்தலும் செய்யப்பட்டு கழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் சுமார் 3700 தொழிலாளர்கள் பணி புரிந்து வருகின்றார்கள்.

வசதி நிறைந்த குளு குளு இன்பப் பயணத்திற்கும், நெடுந்தூர சொகுசு பயணத்திற்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் உங்களைப் பெருமிதத்துடன் அழைக்கிறது.



# நீலகிரி மாவட்டத்தில் நிவாரணப்பணிகள்

நீலகிரி மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் 1978-ஆம் ஆண்டு நவம்பரில் வரலாறு காணாத அளவில் சேதங்கள் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து 1979-ஆம் ஆண்டும் அந்த ஆண்டைப் போலவே அதே நவம்பர் மாதம் ஏற்பட்ட அடைமழையின் காரணமாகச் சில இடங்களில் வெள்ளப் பெருக்கம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டு மிகப் பெரியச் சேதங்களை உண்டாக்கி விட்டது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இயற்கையின் சீற்றத்துக்கு எழில் கொஞ்சும் நீலகிரி மாவட்டம் ஆளாகியது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட எதிர்பாராத இயற்கையின் சீற்றத்தின் காரணமாக இந்த ஆண்டும் அப்படி ஏற்பட்டால் அதிலிருந்து மக்களைக் காப்பது எப்படி என்ற முயற்சியில் தமிழக அரசு தொடக்கம் முதலே மிகவும் கவனமாக இருந்தது. அதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் வெள்ள நிவாரண அலுவலகம் ஒன்றை அதற்கென்று தனியாக அமைத்துத் தனி அலுவலரை நியமித்து புயல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கையாக மேற் கொண்டது. வானிலை அறிக்கைகளை அவ்வப்போது மக்களுக்குத் தெரிவித்து வந்தது. தாழ்வானப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களை மேடான பகுதிகளுக்குப் பாதுகாப்பான இடங்களுக்குப் போக தேவையான முன்னேற்பாடுகளைச் செய்தது. துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள், சினிமா சிலைடுகள் ஆகியவற்றின் மூலமும், ஒலிபெருக்கிகளின் மூலமும் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் புயல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன.

மாவட்டத்தின் அனைத்துப் பகுதியிலுமுள்ள ஆசிரியப் பெருமக்களுக்கும் புயல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்த அவர்களையும் தயார் நிலையில் வைக்கப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு இல்லங்கள் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

மருத்துவர் குழு, ஊர்க்காவல் படை, காவல்துறை மற்றும் சமூக சேவை சங்கங்கள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. புயல் வெள்ளத்தால் மின்தடை ஏற்படுமானால் மாற்று ஏற்பாடாக ஜெனரேட்

*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்.*

**ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.**

# தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு.

**மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.**

டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. மக்களை உஷார் படுத்துகின்ற வகையில் உதகை, குன்னூர் ஆகிய நகரங்களில் அபாயச் சங்குகள் நிறுவப் பட்டன.

கடந்த ஆண்டு அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஊட்டி கால்வாய் என அழைக்கப்படும் உதகை நகரின் மையப் பகுதியில் செல்லும் கால்வாயானது தீவிரமாகச் சீரமைக்கப்பட்டது. இத்தகைய முன்னெச்சரிக்கைப் பணிகளை அரசு தீவிரப்படுத்தியிருந்த காரணத்தினால்தான் இந்த ஆண்டு உயிர் மற்றும் உடமைச் சேதங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டது என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது!

கடந்த 1979ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் நாள் பெருவெள்ளமும், புயலும் நீலகிரி மாவட்டத்தின் குன்னூர் பகுதியில் அதிகமாக ஏற்பட்டது. அதன் காரணமாகக் குன்னூரில் 3 உயிர்கள் வெள்ளத்திற்குப் பலியாயின. அதைத் தொடர்ந்து மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அடைமழை கனமழை பெய்து பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக கோத்கிரி, குன்னூர் பகுதிகளில் நிலச்சரிவு அதிகமான அளவில் ஏற்பட்டது. அதன் விளைவாக இந்த ஆண்டு மொத்தத்தில் 1375 குடிசைகளும், 120 வீடுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. அதில் 175 குடிசைகளும், 13 வீடுகளும் அடியோடு இழந்து நாசமாயின.

மழை மற்றும் நிலச்சரிவுக்கு மொத்தம் 9 மனித உயிர்கள் பலியாகி உள்ளனர். 3 கால்நடைகள் உயிரிழந்தன.





மிகவும் தாழ்வானப் பகுதிகளில் குடியிருந்த சுமார் 1837 குடும்பங்கள் வெளியேற்றப் பட்டு, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 1800 குடும்பங்களைச் சார்ந்த 13,920 நபர்களை 10 பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைத்து உணவு வழங்கப்பட்டது.

காலரா மற்றும் டைபாய்டு போன்ற நோய்கள் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டம் முழுவதும் 39,800 நபர்களுக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டு, அதன் பயனாக இந்த ஆண்டு இந்த மாவட்டத்தில் தொத்து நோயே உண்டாகாமல் தடுக்கப்பட்டது.

இந்த ஆண்டு மழையின் காரணமாக இந்த மாவட்டத்தில் மொத்தம் 410 இடங்களில் மாவட்டம் முழுவதும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. 60 இடங்களில் பெரிய அளவிலும், 350 இடங்களில் சிறிய அளவிலும் நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்பட்டது. பெரிய பெரிய தேயிலைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டன. உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. மேலும், மழை நிலச்சரிவு காரணமாக 264 பாலங்களில் உடைப்பு ஏற்பட்டது. தேயிலைத் தோட்டங்களில் மழை காரணமாக வேலைசெய்ய முடியாத நிலை ஏற்பட்டதால் ரூ. 21 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. மேலும், மழையினால் ரூ. 34 இலட்சம் மதிப்புள்ள தேயிலைப் பயிர்கள் சேதம் அடைந்தன. மொத்தம் ரூ. 55 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டது.



மழை, நிலச்சரிவு காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உருளைக் கிழங்கு பயிர் மிக அதிக அளவில் சேதம் அடைந்தது.

ஆக, இந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் மழை, நிலச்சரிவு காரணமாக ரூ. $5\frac{1}{4}$ கோடி சேதம் அடைந்துள்ளது எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் ரூ. 1 கோடியே 65 இலட்சமும், நகராட்சி மற்றும் ஊராட்சிக்குச் சொந்தமானவைகள் பழுதடைந்ததில் 1 கோடியே 50 இலட்சமும், பொதுமக்களது உடைமைகள் 2 கோடியே 9 இலட்சத்து 50 ஆயிரமும் ஆகும்.



நிவாரணப்பணிகள் நடைபெறுகின்றன


வீடு இழந்தவர்களுக்கும், மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணமாக ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. அரசு தொடர்ந்து நிவாரணப் பணிகளைச் செய்து வருவதுடன் நிலச்சரிவைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. புவியியல் நிபுணர்கள் நீலகிரி மாவட்டத்தில் முகாமிட்டு ஆராய்ச்சி நடத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடம் நிதியுதவி கேட்டுள்ளது. மத்திய அரசும் மத்தியக் குழு ஒன்றை நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பி, அந்தக் குழு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது.



*அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.*

**அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம்முடைய உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.**



# பெட்ரோலை-பயன் படுத்துவதில் சிக்கனம் தேவை!

"டீசல்" "பெட்ரோல்" போன்ற விசையூட்டும் பொருள்களுக்கு உலக அளவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. பெட்ரோலிய பொருள்களைத் தயாரிக்கத் தேவைப்படும் அடிப்படையான மூலப்பொருள் 'க்ரூட் ஆயில்' எனப்படும்.

இந்த 'க்ரூட் ஆயில்' மத்தியக் கிழக்கு நாடுகளில்தான் பெருமளவு நிலத்துக்குக் கீழேயிருந்து மேலே கொண்டு வரப்படுகிறது.

'க்ரூட்' உற்பத்தி செய்யும் நாடுகள் அதன் விலையை உயர்த்தி விட்டன. அரசியல் மற்றும் பல்வேறு காரணங்களால் ஒருசில நாடுகளுக்கு 'க்ரூட்' ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. இதனால் உலகமெங்கும் 'க்ரூட்' பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருள்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை எப்படிச் சமாளிப்பது?

'பெட்ரோல்', 'டீசல்' 'சமையல் எரிவாயு' போன்றவற்றைப் பயன்படுத்துவோர் சிறிது கவனமுடன் செயல்பட்டால் இந்த நெருக்கடியை ஓரளவு சமாளிக்கலாம்.

**தொழில்கள் :**

'டீசல்' எண்ணெய் மற்றும் பல்வேறு வகையான 'மசகு' எண்ணெய் தொழில்களுக்கு இன்றியமையாதது. இவற்றின் பயனைத் திட்டமிட வேண்டும். சுத்தமான தரமான, தகுதியான குரூட் எண்ணெய்யை உபயோகிக்க வேண்டும்.


இயந்திரங்களின் முக்கிய உறுப்புகளைச் சுத்தமாகப் பழுது பார்த்து வைக்கவேண்டும். வடிகட்டும் பகுதிகள் பர்னர்கள் போன்றவற்றைச் செம்மையாக வைத்திருக்க வேண்டும். சரியான வெப்பநிலையைக் கடைப்பிடிக்க வேண்டும்.


'டீசல்' மற்றும் மசகு எண்ணெய்யைப் பயன்படுத்தும் தொழிலாளர்களுக்குச் சிக்கனத்தில் பயிற்சி அளிக்கவேண்டும்.


இதைப்போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டால் 20 சதவிகித அளவு 'டீசல்' மற்றும் மசகு எண்ணெய்களை மிச்சம் பிடிக்கலாம்.

**விவசாயிகள் :**

டிராக்டர்களைப் பயன்படுத்தும் விவசாயிகள் பொருத்தமான டிராக்டர்களை டிரெய்லர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். சக்கரங்கள், மற்றும் உள்ள உபகரணங்களைச் சரியாகப் பாதுகாக்க வேண்டும்.







அனாவசியமாக டிராக்டர்களை ஓட்டக்கூடாது.


டிராக்டர் என்ஜின்களை அடிக்கடி சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல பாசனத்துக்குப் ('டீசல்' மோட்டார்களை) பயன்படுத்தும் விவசாயிகள் பொருத்தமான இணைப்புக்குழாய்களைப் பயன்படுத்த வேண்டும். தேவைக்கு அதிகமான உயரத்தில் இயந்திரத்தை வைக்கக் கூடாது. இயந்திரம் அடிக்கடி குளிர்ந்து போகும்படி விடக்கூடாது.

இத்தகைய நடவடிக்கைகளைக் கையாண்டால் விவசாயத்துக்கான 'டீசல்' உபயோகத்தில் கணிசமான அளவு சேமிக்க முடியும்.

பெட்ரோல் அதிகமாகப் பயன்படுவது கார்களுக்குத்தான். சில நடைமுறைகளை வழுவாமல் கையாண்டால் கார்களுக்கான பெட்ரோல் செலவில் பெருமளவுக்கு மிச்சம் பிடிக்கலாம்.

சீரான வேகத்தில் காரை ஓட்டவேண்டும். அடிக்கடி 'கியர்' மாற்றக்கூடாது. தேவையற்ற முறையில் காரின் இயந்திரம் ஓடிக் கொண்டிருக்கக் கூடாது. காரின் இயந்திரம் ஒருமணி நேரம் சும்மா ஓடிக்கொண்டிருந்தால் ஒரு லிட்டர் பெட்ரோல் வீணாவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். பெட்ரோல் கசிவு, டயர்களில் போதுமான காற்று இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளால் பத்து சதவிகித அளவுக்குப் பெட்ரோல் செலவில் மிச்சம் பிடிக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**சமையல் எரிவாயு :**



இதுபோலவே சமையலுக்குப் பயன்படும் எரிவாயுவைக் குடும்பத் தலைவியர் மிச்சம் பிடிக்கலாம். பொருத்தமான அளவிலான பாத்திரங்களைப் பயன்படுத்துவது-கொதிக்க ஆரம்பித்த உடனேயே எரிவாயு 'ஸ்டவ்' அடுப்பை அணைப்பது, தேவையான அளவு மட்டுமே தண்ணீரைப் பயன்படுத்துவது, ஸ்டவ்வின் பர்னர்களையும், இதர சாதனங்களையும் பழுதுபார்த்து சுத்தமுடன் வைத்திருத்தல் ஆகிய இந்த முறைகளைக் கடைப்பிடித்தால் எரிவாயுவில் கணிசமான அளவு சேதாரத்தைத் தவிர்க்க முடியும்.

பெட்ரோல் - டீசல் போன்றவை இன்றைய நிலையில் அத்தியாவசியமானவை. அதே சமயத்தில் அவைகளுக்கு மிகப் பெரிய அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெட்ரோல் - டீசல்-போன்ற பொருள்களைச் சிக்கனமாகத் தேவையான அளவு மட்டுமே பயன்படுத்துவதன் மூலம் நாட்டுக்குப் பலவழிகளில் நாம் பேருதவி செய்தவர்கள் ஆவோம்.

—ஆனந்தன்.

## பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி

தமிழ்நாடு அரசு சமூக நலத்துறையினரால் சென்னையில் உள்ள 19 லிருந்து 30 வயது வரை உள்ள பெண்களுக்குத் தையற் பயிற்சி, சென்னையில் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் 1980ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை ஓர் ஆண்டுக்காலம் தரப்புடுகிறது.

இதற்காக மாதம் ரூ. 30 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சியை இடையில் நிறுத்தினால் இத்தொகை முழுவதும் திரும்பக் கட்டுதல் வேண்டும். பெற்றோருக்கு ஆண்டு வருமானம் ரூ. 3,000 இருப்பதற்கான வட்டாட்சியரின் சான்றிதழ் வேண்டும். மேலும், மனுதாரர்கள் அரிசன வகுப்பு அல்லது பின்தங்கிய வகுப்பு அல்லது ஆசிரியர் குடும்பத்தினராக அல்லது ஓய்வு பெற்ற இராணுவத்தினர் குடும்பத்தினராக இருத்தல் வேண்டும்.

*பயிற்சி நடைபெறும் இடங்கள் :*

பட்டினப்பாக்கம், சென்னை–28, தேனாம்பேட்டை, சென்னை–18, திருவல்லிக்கேணி, சென்னை–5, கோட்டூர்புரம்–சென்னை–85, இதற்கான விவரங்கள், விண்ணப்பம் ஆகியவற்றை மாவட்ட சமூக நல அலுவலர், 51ஏ, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–8 அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு.*

**மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர்.**

*நற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

கற்புநெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

# நலிந்த சிறிய தொழிற்சாலைகளுக்கு தமிழக அரசின் உதவி

நலிந்த தொழிற்சாலைகளுக்கு உதவி என்பது, இதுவரை பெரிய தொழிற்சாலைகளுக்கு மட்டுமே கிடைத்து வந்தது. அது சிறிய தொழிற்சாலைகளுக்கு இல்லாமல் இருந்தது. இனிமேல் நலிந்த சிறிய தொழிற்சாலைகளுக்கும் இந்த உதவி வழங்கப்படும்.

சிறிய தொழிற்சாலைகளுக்கு வங்கிகள் கடன் கொடுப்பதற்காக முன்பணம் கட்டவேண்டியதில் பாதியை மாநில அரசே வட்டி இல்லாக் கடனாகக் கொடுக்க முன் வந்துள்ளது. இந்தப் பிரச்சனை குறித்து தமிழக அரசு ஆய்ந்தறிந்து, இதிலுள்ள இன்னலைத் தவிர்க்கும் பொருட்டு, ஈவுத் தொகைத்திட்டம் (Margin Money Scheme) ஒன்றைச் செயல் படுத்த முடிவு எடுத்துள்ளது.

இத்திட்டம் குறித்து அரசு ஆணையிலுள்ள சிறப்பு அம்சங்கள் வருமாறு:—

1. இத்திட்டத்தின் கீழ் மறுவாழ்வுக்கான நிதி தேவைப்படும் நிறுவனங்கள் தமிழ்நாடு சிறு தொழில்நிறுவனத்திற்கு (சிட்கோ) உரிய படிவத்தில் விண்ணப்பிக்கலாம். பதிவுக்கட்டணம் எதுவும் விதிக்கப்படமாட்டாது.

2. இது பற்றித் தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்ற நிறுவனம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் கலந்து ஆலோசித்து நலிவுபெற்ற நிறுவனங்களின் மறுவாழ்வுக் குழு முன்பு அதன் பரிசீலனைக்காக வைக்கப்படும்.

மறுவாழ்வு அளிக்கத் தகுந்த வெளிப்படையாகத் தோன்றும் தொழில் பிரிவுகள் என்று ''எஸ்.ஐ.ஆர்.சி.''யால் கருதப்படும். தொழில் பிரிவுகள் இத்திட்டத்தின்கீழ் ஈவுத்தொகை உதவி பெறத் தகுதியானதாகும்.

3. நலிவுற்ற நிறுவனமும் தொழில் முனைவோரும்கொண்டு வர வேண்டிய கூடுதல் முதலீட்டில் 50 சதவிகிதம் வட்டியில்லாக் கடனாக 'சிட்கோ' அளிக்கும். இது போன்ற கடன்கள் தொழில் முனைவோர் கொண்டு வரவேண்டிய பங்கு மூலதனத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படும்.

4. இத்திட்டத்தின் விளைவாக ஏற்படும்நிர்வாகச் செலவு வகைக்காக இது போன்ற கடன்கள் மீது ஒரு சதவிகிதம் சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படும். கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் நலிவுற்ற தொழில்கள் மறு வாழ்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

இருப்பினும் கடன்களை ஒத்தி வைப்பதற்கான காலம் நான்கு ஆண்டு காலத்திற்கு மேல் போகக் கூடாது என்றும் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் ஒத்தி வைப்பு உள்பட எப்படியிருப்பினும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் போகக்கூடாது.

5. விதி விலக்கு அளிக்கப்படல் சம்பந்தமாக நலிவுற்ற தொழில்கள் மறு வாழ்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொழில் முனைவோர் கொண்டு வர வேண்டிய கூடுதல் முதலீட்டில் 75 சதவிகிதம் வரை வட்டியில்லாக் கடனாக சிட்கோ அளிக்கும்.

இது போன்றவற்றில் தொழில் முனைவோர் கொண்டுவர வேண்டிய கூடுதல் முதலீடு விகிதாச்சார அடிப்படையில் 25 சதவிகிதமாகக் குறையும்.

6. ரூ. 20,000க் குறைந்த ஈவுத் தொகை கடனை எஸ்.ஐ.ஆர்.சி.யின் துணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சிட்கோ வழங்கும். ரூ.20,000க்கு மேல் அதிகமாகத் தேவைப்படும் ஒவ்வொரு தொழில் பிரிவுக்கும் எஸ்.ஐ.ஆர்.சியின் பரிந்துரையின் அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான செலவை சிட்கோ மூலம் அரசு ஏற்கும். இதற்கென சிட்கோவிற்கு அரசு தேவையான வட்டியில்லாக்கடன் தொகையை அளிக்கும். இக்கடனை தானாவட்டத்தில் சிட்கோ திரும்பிப் பெறும் கடன்கள் மூலம் திரும்பிச் செலுத்தும்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் செலவுக்காக அரசு சிட்கோவிற்கு ரூபாய் 25 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்கும்.

## பெண்களுக்கு இலவச தட்டச்சுப் பயிற்சி

தமிழ்நாடு அரசு சமூக நலத் துறையினரால், சென்னையில் உள்ள 15லிருந்து 30 வயதுகுள் இருக்கும் பெண்களுக்கு இலவச தட்டச்சுப் பயிற்சி 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் அக்டோபர் மாதம் முடிய நடைபெறவிருக்கிறது.

இவர்கள் பள்ளி இறுதி வகுப்பில் மொத்தத்தில் 50 (விழுக்காடு) மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பெற்றோருக்கு ஆண்டு வருமானம் ரூ. 3000க்குள் இருக்க வேண்டும். இதற்கான வட்டாட்சியரின் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். இவர்களுக்கு இப்பயிற்சிக்காக ரூ. 15 தரப்படும். இடையே பயிற்சியை விறுத்துபவர்கள் இத்தொகையினைத் திருப்பித் தருதல் வேண்டும்.

# பொங்கல் விழா!



சிறுவை. நச்சினார்க்கினியன்

தமிழ்நாட்டிற்குப் பொங்கல் விழா ஒன்று தான் பெரும் விழா. இவ் விழாவினைத் தமிழகத்தில் வாழும் எல்லாச் சமயத்தினரும்,சாதியினரும் கொண்டாடி மகிழ்கின்றனர். எனவே இதனைத் தமிழர் திருநாள் என்று கூறியதிலும் வியப்பில்லை. இப் பெருவிழா போகி, பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் (அல்லது கன்னுப் பொங்கல், கன்னிப் பொங்கல்) என்று கொண்டாடும் வழக்கம் வாழையடி வாழையாக அமைந்து வந்துள்ளது. இவ்விழா, என்று தோன்றியது எனத் திட்டமாகக் கூறமுடியாது.

இப் பொங்கல் விழாவினைத் தமிழன் இயற்கைச் சக்திக்கு-ஆற்றலுக்குக் காட்டும் நன்றி விழா எனக் கூறின் மிகையாகாது. உழவர்கள் - வேளாண்மை செய்வோர் தங்கள் உழைப்பின் வெற்றி விழாவாக—மகிழ்ச்சி விழாவாகக் காண்கின்றனர்.

ஆடி முதல் மார்கழிவரையில் தமிழகத்தில் நெல்பயிரிடும் காலம். மழையின் உதவியால் இரவும் பகலும் கழனியில் உழவர்கள் இடைவிடாது உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழி இறுதியில் தங்கள் வீட்டிற்குக் கொண்டு வருவர். அதனைச் சுற்றம் சூழவும் தம் மனைவி மக்களுடனும் மிக்க மகிழ்ச்சி பொங்க இவ்விழாவை நடத்துவர்.

மார்கழிக் கடைசி நாள் போகி எனவும் அதனைச் சார்ந்த தைத் திங்கள் முதல் மூன்று நாள் பொங்கல் விழா எனவும் கொண்டாடுவர்.

போகி மார்கழியின் இறுதி நாள். போகி என்பது இந்திரனுக்கு ஒரு பெயர். போகத்தை நுகர்பவன். புதிய பொருள்களை விரும்புவான். பழம் பொருள்களை நீக்குவான். போகியன்று விடியற்காலையிலேயே பழம் பொருள்களையெல்லாம் மாற்றிப் புதுப் பொருள்களாகிய நெல், பால்,துவரை,இஞ்சி, மஞ்சள், கரும்பு முதலியவற்றைத் திரட்டிச் சேர்த்துக்கொள்வர். இந்திரன் மழைக்கு உரியவன். மழைக்கு நன்றி செலுத்தும் முகத்தான் எடுக்கும் விழா எனக் கொள்ளல் தகும்.

அடுத்துத் தைத் திங்கள் முதல்நாள் உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாள். இது பொங்கற் புதுநாள். அன்று யாவும் புதியனவாகவே இருக்கும். புத்தாடைகள் அணிந்து புதிய நெல்லைக் குற்றி எடுத்த அரிசியைப் புதிய பானையில் இட்டுப் பொங்குவர். பானைகளில் புதிய மஞ்சளைப் புதிய கயிற்றில் கட்டி, காப்பாக அணிவர். வாசலில் கோலமிட்டு, செம்மண் தீட்டி, பானைகளை வைத்துப் பொங்கலிடுவார்கள். எத்தனை பானைகள் வைக்கவேண்டும் எனவும் எவ்வளவு அரிசி போடவேண்டும் என்றும் சில குடும்பங்களில் வழக்கம் உண்டு. பொங்கல் பானை பொங்கி வரும்போது, உழவர்கள் மனைவி மக்களுடன் ''பொங்கலோ பொங்கல்'' என ஆரவாரித்து மகிழ்ச்சி கொள்வர்.

ஞாயிற்றின் பேரொளி மழைக்குக் காரணமாய் அமைந்து உழவாகிய அடிப்படைத் தொழில் நிகழ்ந்து நெல், பருப்பு, கரும்பு, மஞ்சள், பூசணி, மலர்கள், கனி வகைகள் அனைத்தும் உண்டாவதால் இவைகளையெல்லாம் ஞாயிற்றுக்குப் படைத்து மகிழும் செய்ந்நன்றி விழாவாக மலர்ச்சியடைகிறது. நக்கீரர் ''பொருள் பத்து நாழிகைக்கு மேல்'' என்று கூறி ஒரு நாளின் இடைப்பகுதியை அதற்கு உரியதாக்குவர். அதனால் உச்சி வேளையில் நன்கு சுடர் விட்டு மிளிரும் ஞாயிற்றுக்குப் பெரும்பொங்கல் இடுவது வழக்கமாயிற்று.

தைத் திங்கள் இரண்டாம் நாள் மாட்டுப்


*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.*

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

*வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீர துடைத்து.*

**வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது. மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.**

பொங்கல். உழவுக்குப் பாடுபட்ட, சேவை செய்த மாடுகளை நன்றாகக் குளிக்கச் செய்து அழகுறப் புனைந்து, கொட்டிலில் கட்டி பொங்கற் சோறு படைத்து வழிபடுவார்கள். சில இடங்களில் எருதுகளை வண்டிகளிற் பூட்டி, ''பொங்கலோ பொங்கல்'' என ஆரவாரித்து ஓட்டிக்கொண்டு ஊர்வலமாக அழைத்துச் சென்று மகிழ்வடைவர். பொங்கலன்று அரிசி கழுவிய நீரை எடுத்துச் சென்று கழனிகளில் வைகறையில் தெளித்துப் பொங்கலோ பொங்கல் என எழுப்பும் ஓசை கழனிகளெங்கும் இனிமையாக ஒலிக்கும். அன்று மாடுகளை எந்த வேலைக்கும் பயன்படுத்த மாட்டார்கள்.



சமய நெறி எவ்வாறு ஆயினும் தொண்டுக்கு, சேவைக்கு உகந்தது எருது. மொகஞ்சதரோவிலும், அரப்பாவிலும் கிடைத்த பழஞ்சான்றுகளில் மாடுகளின் உருவங்கள் காணப்படுகின்றன. என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதுதான் அதன் இலட்சியம். உழவுக்கு—வேளாண்மைத் தொழிலுக்கு அணுக்கத் தொண்டனாய் இருந்து தொண்டு செய்வது எருது. நாலடியார் எனும் நூல்,. ''மானிடனே! நீ பெற்ற உணவு எருதுகளின் உழைப்பால் கிடைத்தது. அதனைப் பலரோடு கூடியிருந்து உண்பாயாக'' என்ற அழகிய கருத்தினை, ''பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க!'' என்று பேசும்.

அடுத்து தை மூன்றாம் நாள் **காணும் பொங்கல்.** அன்று ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்வர். தொழிலாளர்கள் உழவர்கள் வீடு தோறும் சென்று வணங்கி அன்பளிப்புப் பரிசுப் பொருள்களைப் பெற்று மகிழ்வர். இதனைச் சிலர் கன்னுப் பொங்கல் என்றும் சிலர் கன்னிப்பொங்கல் என்றும் சொல்வர். சில வட்டாரங்களில் கன்னிப் பெண்கள் பொங்கல் இடுவதால் கன்னிப் பொங்கல் என்பர்.

இச்சமயத்தில் நாம் சில கருத்துக்களை நினைவு கூர்தல் நலம் பயக்கும். தைத்திங்கள் முதல் நாளன்று ஞாயிறு மகர ராசியில் வந்து உத்தராயணம் தொடங்கும். இதனை மகர சங்கராந்திப் பண்டிகை என்பர். உழவர்களே அன்றி ஏனையோர் யாவரும் கொண்டாடி மகிழும் நாளாக இது அமைந்துள்ளது.

சங்க நூல்களில் ஒன்றாகிய கலித்தொகையில் ஆயர் விழாவாக வரும், ஏறு தழுவல் என்பது அக்காலத்தில் பெண்களை மணப்பவரைத் தேர்ந்தெடுத்தலாகக் காணப்பெறும் ஒரு நிகழ்ச்சி. இக் காலத்தில் சில இடங்களில் மஞ்சு விரட்டு விழாவாக மாட்டுப் பொங்கலன்று நடைபெறுவதைக் காணலாம்.


''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'' என்பது தமிழ் மறையின் கருத்து. கருமான் கையில் தோன்றிய ஏராயினும் மின் சக்தியால் விளைந்த ஏராயினும் உலகம் உழவின் பின்னால்—ஏரின் பின்னால்—அதனை இயக்கும் வேளாண்மையினர் பின்னால். வேளாண்மை செய்பவர்கள் தமக்காகவும் பிறர்க்காகவும் செய்கின்றனர். வேளாண்மை என்ற சொல்லுக்கு உதவி என்பதுதான் சிறந்த பொருள்.

காலமெல்லாம் உழைத்த உழவன் நிலத்தில் இவ்வாண்டு கிடைத்தது இத்தனை மூட்டைகள் எனின் அடுத்த ஆண்டு மேலும் சில மூட்டைகள் அதிகம் பெற உழைக்க வேண்டும் என்பது அவனது ஆவல். அஃதே போல் சொல்லேர் உழவர்களாகிய இலக்கியச் செல்வர்கள்—தமிழர்கள் யாவரும் இவ்வாண்டு இந்த வகையில் நாம் நமது இலக்கியச் செழுமையைக் கண்டோம், இனி வரும் ஆண்டில் மேலும் பல புத்தம் புதிய இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்ற கருத்தில், பேராசிரியர் கா. நமச்சிவாயர் அவர்கள் பொங்கல் திருநாளன்று தமிழ்த் திருநாளாகக் கொண்டாடக் கற்றுத் தந்தார். 1934-ஆம் ஆண்டில் அவர்கள் கொண்டாடத் தொடங்கினார்கள்.

இச் செய்தியைப் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1952, 53ஆம் ஆண்டுகளில் சென்னைக் கடற்கரை திராவிடர் திருநாள் கூட்டத்தில், ''அதோ தெரிகின்றதே மாநிலக் கல்லூரி, அங்குதான் பேராசிரியர் கா.நமச்சிவாயர் தமிழ்ப் பணி புரிந்து வந்தார். அவர்தான் முதன் முதலில் இந்தப் பொங்கல் திருநாளினைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாட நமக்கெல்லாம் கற்றுத் தந்தார். அவர்கள் அன்று எடுத்த தமிழ்த் திருநாள்தான் தமிழர் திருநாளாகி இன்று திராவிடர் திருநாளாக மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்'' என்று உள்ளப் பூரிப்புடன் கூறிய சொற்கள் நம் உள்ளத்தில் பசுமையாக இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழில்மிகு
உங்கள்
மொழி வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி




தமிழரசு
1-2-1980 50 காசு
MADRAS-600 008.







வேலை மற்றும் கல்விச் சலுகைகளுக்குத் தகுதி பெற, பிற்பட்ட வகுப்பினர்களின் வருமான வரம்பு நிர்ணயம் குறித்து விவாதிக்க கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் சென்னை தலைமைச் செயல கத்தில் 21.1.80 அன்று நடைபெற்றது.




# தமிழரசு

மலர் 10 • 1.2.1980 • இதழ் 15




**பேரறிஞர் அண்ணா அவர்களின்**
**11 வது நினைவு நாள்**
**3. 2. 1980**

முகப்பு:-
இந்தியநாட்டின் பிரதமராக
திருமதி இந்திரா காந்தி அவர்கள்
14-1-80-ல் பதவி ஏற்றார்





# வறுமையும் வேலையின்மையும் விரைந்து நீங்கிட ஒன்றுபட்டு உழைப்போம்!

## ஆளுநர் உரை

மேன்மை தங்கிய சட்ட மன்ற உறுப்பினர்களே,

இவ்வாண்டின் புதிய கூட்டத் தொடருக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

2. புதிதாக மத்தியில் அமைந்துள்ள ஆட்சிக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நல்வரவேற்பு கூற விரும்புகிறேன். அனைத்து மாநிலங்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் பெறும் வகையிலும், மாநிலங்கள்



தங்கள் கடமைகளைச் சீர்வர ஆற்றுவதற்கு உறுதுணையாக அமையும் வகையிலும் புதிதாக மலர்ந்துள்ள மைய அரசு செயல்படுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். 1977-ல் மத்திய அரசு புதிதாக அமைந்த பிறகு, இவ்வரசின் கருத்துக்களை ஆளுநர் உரையின்போது வெளியிட்டதை இங்கு மீண்டும் குறிப்பிடுவது பொருத்தமாகுமென்று கருதுகிறேன்.

"எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று, ஆக்க பூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென உறுதி கூறுகிறேன். அதே நேரத்தில் தமிழ்நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம். அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவி சாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம்..... மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ்நாட்டினை வளங்கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்".



3. குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டபடி 20 அம்சத் திட்டத்தை மைய அரசு அமுல் நடத்த முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியது. இத்திட்டம் முன்பு வெளியிட்டபோதே, இப்போது தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சி அதனை வரவேற்று, மக்கள் மத்தியில் அத்திட்டத்தின் கருத்துகளை வலியுறுத்தி பிரச்சாரம் செய்ததை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். குறிப்பாக, தமிழகத்தில் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட இத்திட்டம் உதவி செய்தது. இத்திட்டத்தைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதில் இம்மாநில அரசு, மைய அரசுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

4. அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பொதுவாக அமைதிச் சூழ்நிலையிலே நடைபெற்றதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். ஜனநாயக மரபுகளைப் பேணிக் காக்கும் பண்பும் வாக்காளப் பெருமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற விழைவும் வளருவதை எண்ணி என் அரசின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. சென்ற ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்ட பலத்த வெள்ளத்தைச் சமாளிப்பதில் விரைவாகவும் கடமையுணர்ச்சியுடனும் செயல்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துன்பங்கள் ஏற்பட்டதைக் குறைக்கும் முயற்சியில் அரசு சிறப்பாக ஈடுபட்டது. மேலும், பல்வேறு தொண்டுள்ளம் கொண்ட நிறுவனங்களும் மாணவர் அமைப்புகளும் துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்டன. முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டதன் விளைவாக, ஏற்பட்டிருக்கக்கூடிய உயிர்ச் சேதங்கள் பெருமளவிற்குத் தவிர்க்கப்பட்டன; தொடர்ந்து நிவாரணப் பணிகளும் செயலாக்கப்பட்டு வருகின்றன. நமது அழைப்பிற்கிணங்கி, உடனடி நிவாரணப் பணிகளுக்கு உதவி செய்வதற்காக, அறிக்கை சமர்ப்பிப்பதற்குக் குழு ஒன்றை மத்திய

அரசு அனுப்பி வைத்தது. இந்தக் குழுவின் அறிக்கையின் மீது, மத்திய அரசு அண்மையில் நிதி உதவிபற்றிய தனது முடிவினை அறிவித்ததற்குத் தமிழக அரசின் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். மத்திய அரசின் நிதியுதவி பற்றிய முடிவு தெரியும் வரை காத்திராமல், உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆணைகள் பிறப்பித்தும், தக்க நிதி ஒதுக்கீடுகளைச் செய்தும் தமிழக அரசு முனைப்பாகச் செயல்பட்டுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியது.

6. தக்காவிக் கடன்களை அரசு தள்ளுபடி செய்ததன் விளைவாக 8·51 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. அரசு அறிவித்த கூட்டுறவுக்




கடன் பற்றிய சலுகைகளைக் கூட்டுறவு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு அளிப்பதற்கு வகை செய்திட, அரசு 16 கோடி ரூபாய் வழிவகை முன்பணமாகக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுத்து உதவியுள்ளது. கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் ஏற்பட்ட சுணக்கம் காரணமாக, மத்திய கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் பெற முடியாத நிலையில் இருந்து வந்தன. இதன் விளைவாக, முறையாகக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்கள்கூட, தேவையான கடன்களை மீண்டும் பெறமுடியாத கவலையான சூழ்நிலை இருந்து வந்தது. இதனைத் தவிர்த்து, கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு மீண்டும் கடன் கிடைக்கச் செய்வதற்காக, தமிழக அரசு ஒன்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்காக மொத்தம் 27·5 கோடி ரூபாய் அண்மையில் கொடுத்து உதவியுள்ளது. இதனை உறுப்பினர்கள் வரவேற்பார்களென்று நம்புகிறேன்.

7. தமிழ் நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக இருந்து வருகிறது. விவசாயிகளிடமிருந்து நேரடியாகவோ, வர்த்தகர்களிடமிருந்து லெவியாகவோ கட்டாயக் கொள்முதல் ஏதும் செய்யப்படவில்லை. மத்திய அரசு நிர்ணயித்ததை விட உயர்ந்த விலையில் குவிண்டாலுக்கு 105 ரூபாய் கொடுத்து, நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கென அரசின் சார்பில் நேரடிக் கொள்முதல் நிலையங்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகின்றது. கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள் அமைக்கும் இந்த அரசின் திட்டத்தின்கீழ், எல்லாக் கிராமங்களிலும் நியாயவிலைக் கடைகள் நல்ல முறையில் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. மேலும், அண்மையில் சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்படவிருந்த சூழ்நிலையில், அரசு உடனடியாகத் தீவிர நடவடிக்கைகள் எடுத்து, மாநிலம் முழுவதிலும் பொதுமக்களுக்குக் குடும்ப அட்டைகள் மூலம் சர்க்கரை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தட்டுப்பாடு ஏற்படாமல் வெற்றிகரமாக நிலைமையைச் சமாளித்தது.

8. வேளாண்மைக்குத் தேவையான இடு பொருள்களின் (Inputs) விலைகளை கட்டுக்குள் வைத்து, அதன் மூலம் சாகுபடிச் செலவை நியாயமான அளவில் இருக்கச் செய்யவேண்டும். அதே நேரத்தில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாமல், சீரான விலையில் வேளாண்மைப் பொருள்களை விற்பதற்கான ஏற்பாடுகளும் உருவாக்கப்பட வேண்டும். முக்கியமான பல்வேறு விளை பொருள்களின் அடிப்படை விலைகள் பெரிதும் வீழ்ச்சி அடைந்துவிடாமல் இருப்பதற்கேற்றவண்ணம், விவசாயிகள் நம்பிக்கையுடன் அவற்றை விளைவிக்க ஊக்கம் அளிக்கு முகமாக, பல்வேறு விளை பொருள்களுக்கு தக்க அடிப்படை விலையை நிர்ணயிக்க வேண்டும். மேலும், அப்பொருள்களில் சேமக் கையிருப்பு (Buffer Stock) வைத்திருப்பதற்கான முறையில் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்வது தவிர்க்க முடியாததாகும். தற்போது, அரிசி, கோதுமை ஆகியவற்றுக்கு இருந்துவரும் இத்தகைய ஏற்பாட்டை மற்ற பல வேளாண்மைப் பொருள்களுக்கும் விரிவாக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், விவசாயிகள், கூட்டுறவு இயக்கத்தின் மூலமும் மற்ற வழிகளிலும் பெறும் கடன்களைப் பருவநிலை தவறும்போது திருப்பிச் செலுத்த முடியாமல் தொடர்ந்து இன்னலுறும் நேரத்தில், அந்தக் கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய முடியாவிட்டாலும், அவர்களுக்குத் தக்க சலுகைகளை அளிப்பதற்கான, நாடு தழுவிய கொள்கையொன்றை மத்திய அரசு உருவாக்கி, அதற்கேற்றதொரு நிதி அமைப்பினையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நமது குடியரசின் தலைவர், நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின்போது "உழவர்களுக்கு அவர்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு உரிய விலைகள் கிடைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்" எனக் கூறியுள்ளதை எனது அரசின் சார்பில் வரவேற்பதோடு, அதனைச் செயல்படுத்தும் பணியில் மைய அரசு தீவிரம் காட்ட வேண்டுமெனவும் விரும்புகின்றேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளை அளிப்பதற்கும், அவற்றின்மூலம் விவசாயிகள் பல்வேறு விளை பொருட்களை விற்பதற்கு ஊக்கமளிப்பதற்கேற்ற வகையில் அவற்றைத் திருத்தியமைப்பதற்கும் சுமார் 100 கோடி ரூபாய் செலவிலான பெரிய திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றுவதற்காக இத்திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட வரைவும், மத்திய அரசின் ஒப்புதலுடன், விரைவில் அவைமுன் கொண்டு வரப்படும்.

9. பழங்குடியினர் நிலங்களைப் பிறர் வாங்குவதைத் தடுப்பதற்கான சட்ட வரைவுகள் இக்கூட்டத் தொடரில் அவையின் ஒப்புதலுக்காகக் கொண்டு வரப்படும். குத்தகைதாரர்கள் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளக் கூடிய குத்தகை நில உச்சவரம்பு



5 ஸ்டாண்டார்டு ஏக்கர் அளவாக இருந்தது. இதை 3 ஸ்டாண்டார்டு ஏக்கர் அளவுக்குக் குறைக்க, அவசரச் சட்டமொன்றை அரசு அண்மையில் பிறப்பித்தது. இதன் மூலம், குத்தகைதாரர்கள் மிகப்பெருமளவில் நிலங்களை வைத்துக்கொள்வதைத் தவிர்த்து, பலருக்கும் நிலங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாகுமென்று அரசு நம்புகிறது. இந்த அவசரச் சட்டத்தை மாற்றி, நிரந்தரமான சட்டமாக்குவதற்கான சட்ட வரைவும் அவைமுன் கொண்டு வரப்படும்.

10. இம் மாநிலத்தின் வனவளத்தைப் பெருக்குவதற்கான சில நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப் படும். அத்துமீறி மரங்களை வெட்டுதல், அவற்றைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் ஆகியவற்றைத் தடுப்பதிலும் இக்குற்றமிழைப்போருக்குக் கடுந் தண்டனை வழங்க ஏற்பாடு செய்வதிலும் அரசு முனைப்பாக இருக்கும்.

11. தமிழ்நாடு தன்னகத்தேயுள்ள நீர் வசதிகளைப் பயன்படுத்துவதில் முன்னணியில் இருந்து வருகிறது. ஆறு, குளம், ஏரிகளில் உள்ள நீரை முழுமையாகப் பயன்படுத்துவதோடு, நிலத்தடி நீரையும் (Ground Water) மிகப் பெரும் அளவுக்கு நமது மாநிலம் பயன் படுத்தி வருகிறது; ஒரு சில இடங்களில் அளவுக்கும் அதிகமாகவே நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுகிறது. அண்டை மாநிலங்கள் தம்மிடமுள்ள உபரி நீரை தமிழ் நாட்டுக்கு அளிப்பதற்காக, அம் மாநிலங்களுடன் தமிழ் நாடு அரசு இணக்கமான முறையில் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தும். இதன் மூலம் நாட்டின் உற்பத்தி பெருகுவதுடன், வறண்ட பகுதிகளில் வேலை வாய்ப்பும் பெருகும்.

12. நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதன் மூலம் நமது நாட்டை பலம் பொருந்திய நாடாக ஆக்க முடியுமென்பது தெளிவு. தொழில் வளர்ச்சிக்கான



மத்திய அரசின் முதலீடுகள், நாட்டின் பல்வேறு பகுதி களுடன் ஒப்பு நோக்கும்போது, கடந்த சில ஆண்டு களாகத் தமிழ்நாட்டில் குறைவாகவே இருந்து வருகின்ற தென்பது கீழ்வரும் புள்ளி விவரத்தின் மூலம் தெளி வாகும்.

| | மத்திய அரசின் முதலீடு. | | |
|---|---|---|---|
| | இந்தியா முழுவதும். | தமிழ் நாட்டில். | சத வீதம். |
| | (ரூபாய் கோடிக் கணக்கில்) | | |
| 1969–70 வரை .. | 3,885 | 312 | 8 |
| 1976–77 வரை .. | 11,451 | 467 | 4 |

1969–70 வரையில் செய்யப்பட்ட முதலீடுகளில் தமிழ்நாட்டின் பங்கு 8 சதவீதமாக இருந்தது. 1976–77ஆம் ஆண்டில் இந்த சதவீதம் 4 ஆகக் குறைந்துள்ளது இதிலிருந்து தெரிய வரும். மக்கள் தொகையில் வறுமைக் கோட்டின் கீழ் வாடும் மக்களின் சதவீதம், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில் இருந்து வருகின்றது. வேலை யற்றோர் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில் அதிகமான

நிலையில் இருந்து வருகின்றது. மத்திய அரசு தக்க முறையில் நேரடியாகத் தொழில் முதலீடுகள் செய்வதன் மூலமாகவும், தொழில் வளர்ச்சிக்கு மற்ற வகைகளில் வழி கோலுவதன் மூலமாகவும் தமிழ் நாட்டின் இப்பெரும் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். தொழில் முதலீடுகளில் பல்வேறு பகுதி களிடையே ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சீர்செய்யும் முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு, தமிழ்நாட்டில் கூடுதல் முதலீடுகள் செய்ய வேண்டு மென்றும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். இன்றையப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்ட சேலம் உருக்காலைத் திட்டத்தின் முதற்கட்டத்தை விரைந்து செயல்படுத்துவதோடு, ஒருங்கிணைந்த உருக்காலைத் திட்டத்தின் இதர பகுதிகளையும் உடனடி யாக அமைப்பதன் மூலம் இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கு அடிகோலும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.


13. தமிழ் நாடு அரசு, சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. தொழிலில் பின்தங்கிய 24 வட்டங்களில் புதிதாக நிறுவப்படும் சிறு தொழில்களுக்கு முதலீட்டு மானியம் கொடுக்கும் புதிய திட்டமொன்றைத் தமிழக அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. அரசின் பல்வேறு துறைகளும் அரசைச் சார்ந்துள்ள நிறுவனங் களும் தத்தம் தேவைகளுக்காகப் பொருள்களை வாங்கும் நேரத்தில், 241 பொருள்களை, அவற்றை உற்பத்தி செய்யும் சிறு தொழில்களிடமிருந்தே பெற வேண்டு மென்றும் அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நலிந்துள்ள தொழில்களுக்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சியில் சிறு தொழில்களையும் உள்ளடக்கி, அவற்றிற்குத் தேவையான மூலதன உதவி செய்வதற் கான மற்றுமொரு புதிய திட்டத்தையும் தமிழ்நாடு



அரசு அண்மையில் செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இவ்வாண்டு 2,000 தீப்பெட்டி உற்பத்தி செய்யும் அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டதற்கு மாறாக, இதுவரை மொத்தம் 2,600 நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இவை முழுத் திறனுடன் செயல்படும் பொழுது, மொத்தம் சுமார் 52,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். 8,000 ஏக்கரில் புதிதாக முசுக்கட்டை பயிரிடுவதன் மூலம் பட்டுத் தொழிலில் பெரியதொரு வளர்ச்சியை ஏற்படுத்த அரசு திட்டமிட்டது மன்ற உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். இதற்கு எதிராக, 1979ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முடிய 7,000 ஏக்கர் பரப்பில் புதிதாக முசுக்கட்டை பயிரிடப் பட்டு, இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுமென்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. எனது சென்ற உரையின் போது நான் குறிப்பிட்டவாறு தூத்துக்குடி ஆல்கலி கெமிகல் நிறு வனம் ஆலையை நிறுவுவதற்கான வேலைகளை முனைப் பாகச் செயல்படுத்தி வருகின்றது. இவ்வாலை 1982ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே உற்பத்தியைத் தொடங்கு மென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் செய்வதற்கான அரசின் முடிவைச் செயல்படுத்த, அரசு நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14. சென்னை நகரம், தமிழ்நாட்டின் தலைநகரமாக அமைந்துள்ளது மட்டுமன்றி, தென்னகத்தின் நுழை வாயிலாகவும் வணிக மையமாகவும் விளங்குகின்றது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின் றது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் பெரு நகர வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம்

நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், 57 கோடி ரூபாய் செலவிலான இரண்டாம் கட்டத்திற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. நகரின் போக்கு வரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கான ஒரே வழி, விரைந்து ஓடும் இரயில்கள் (Mass Rapid Transit System) அமைப்பதன் மூலமேயென்பதை இங்கு நான் மீண்டும் எடுத்துக்கூற விரும்புகின்றேன். விரைவு இரயில் போக்குவரத்து அமைப்பதற்கான பணிகளை வரும் ஆண்டிலாவது மத்திய அரசு தொடங்கவேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாட்கள் செல்லச் செல்ல பிரச்சினை சிக்கலாவதுடன், செலவும் அதிகமாகிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையிலான குறுகிய இருப்புப் பாதையை (metre gauge) அகலப் பாதையாக (broad gauge) மாற்று வதற்கு மத்திய அரசு விரைவாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதன் மூலமாக, தூத்துக்குடி துறைமுகம் நாட்டிற்கு நன்முறையில் பயன்பட வாய்ப்பு ஏற்படும்; தொழிலில் பின்தங்கிய பல்வேறு பகுதிகள் தொழில் வளர்ச்சி பெறவும் வகை ஏற்படும்.



15. கிராமங்களில் தேவையான அடிப்படை வசதி களை ஒருங்கிணைந்த முறையில் தருவதற்காக, இந்த ஆண்டு மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுச் சிறப்புத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டது. இதனை விரிவாக்கி, அடுத்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் செயல் படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

16. வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குவதற்காக, மைய அரசு நடத்திவரும் 'வேலைக்கு உணவு' திட்டத்தை மேலும் தொடர்ந்து விரிவாக்க வேண்டும்.

இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வரும் தமிழக அரசிற்கு மைய அரசு இன்னும் அதிக அளவில் அரிசி ஒதுக்கீடு செய்து ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது ஆசை. இத்தருணத்தில், தமிழக அரசு அறிவித்த 'உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்' செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது என மகிழ்ச்சியுடன் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

17. நடமாடும் மருத்துவ நிலையங்கள் இம் மாநிலத்தில் அருந்தொண்டாற்றி வருகின்றன. இத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். சிறு நகரங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும்கூட இதய நோய் சிகிச்சை போன்ற சில சிறப்புப் பகுதிகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

18. இப்போது மேல் நிலைக் கல்விக்கூடங்களில் சிறப் பாகத் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இக்கல்வியின் தரம் உயர்வதற்கும், இப்பள்ளிகளுக்கு வேண்டிய கருவிகளைக் கொடுத்து சோதனைக்கூடங்கள் அமைப்பதற்கும் அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். பள்ளிக் கல்வி நிலையிலேயே மாணவர்களுக்கு வேலை அனுபவம் (Work experience) தேவை என்றும் அவர்கள் சமூகத்திற்குப் பயன்படக்கூடிய தொழில்களில் பயிற்சி பெறுதல் அவசியம் என்றும் இந்த அரசு கருது கிறது. எனவே, உயர்நிலைப் பள்ளிகளிலும் தொழிற் கல்வி போதிப்பதற்கான ஏற்பாடுகள் படிப்படியாகச் செய்யப்படும். இக்கல்வி முறைகள் பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக அமையும்.

19. உடற்பயிற்சி, விளையாட்டுத் துறைகளில் தனி இயக்குநரகம் அமைத்து, அரசு சிறப்பாகச் செயலாற்றி வருவதை உறுப்பினர்கள் அறிவார்கள். மாணவ,



மாணவியருக்கு உடற்பயிற்சி அளிக்கும் திட்டங்கள் வரும் ஆண்டில் பெரிய அளவில் விரிவாக்கப்படும். தேவைப் படும்போது மாணவ, மாணவியர் சமுதாயத்திற்கு நல்லதொரு பாதுகாப்பு அரணாகத் திகழும் வண்ணம், அவர்களுக்குப் பல்வேறு சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படும்.


20. சென்ற ஆண்டு எனது உரையின் போது நான் குறிப்பிட்டதைப் போல், ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கிராமப்புறங்களில் கட்ட உதவும் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இதன்கீழ் 20,000 வீடுகள் கட்ட முதலில் திட்டமிட்ட தற்குப் பதிலாக, தற்பொழுது 30,000 வீடுகள் கட்டு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 38,000 விண்ணப்பங்களுக்குக் கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வீட்டுவசதி நகர வளர்ச்சி நிறுவனம் (HUDCO), மற்றுமுள்ள நிதி நிறுவனங்களின் உதவியைப் பெற்று இத்திட்டத்தை மேலும் விரிவாக்குவதற்கான முயற்சிகளையும் அரசு மேற் கொண்டு வருகின்றது.

21. தமிழக அரசு, தாழ்த்தப்பட்டோர் நலன்களை மேம்படுத்துவதிலும், அவர்களது உரிமைகட்கு முழுப் பாதுகாப்பு தருவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. இவற்றுக்கான தக்க நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது.


22. தமிழகத்திலுள்ள அனைத்து தாழ்த்தப் பட்டோர் காலனிகளுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டு விட்டது என்னும் செய்தி மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகும். மேலும், தாழ்த்தப்பட்டோர் வாழும் காலனிகள் அனைத்திற்கும் இணைப்புச் சாலை, குடிநீர் வசதி, இடுகாட்டுக்கு பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து அளிப்பதற்கான சிறப்புத் திட்டமொன்றை உடனடியாக அரசு மேற்கொள்ளும். இந்த 'தாழ்த்தப்பட்டோர் காலனிகள் மேம்பாட்டுத் திட்டம்' வரும் ஆண்டில் 5,000 காலனிகளில் செயல்படுத்தப்படும். மேலும், அரிசன நலத்துறைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவைப்படும் நிலையான கட்டிடங்களும் அடுத்த ஆண்டு கட்டுவதற்கான பணியும் மேற்கொள்ளப்படும்.

23. கிராமங்களிலும் நகர்ப் பகுதிகளிலும் கடன் தொல்லையால் அவதியுறும் ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிப்பதற்காக ஒரு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்படும்; இதற்கான சட்ட வரைவு இக்கூட்டத் தொடரில் அவை முன் வைக்கப்படும்.

24. தமிழ் மொழிப்பற்று, அதன் பாதுகாப்பு இவற் றிற்காகவும் தமிழ் பேசும் பகுதிகள் தமிழகத்துடன் இணையவேண்டுமென்ற ஆர்வத்துடன் செயல்பட்ட தாலும், இன்னலுற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க சட்ட வரைவு ஒன்றை அரசு தயாரித்து வருகின்றது. இது, விரைவில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்காக கொண்டுவரப்படும்.



25. நமது மாநிலத்தில், கேரள எல்லைக்கு அருகில் அமைந்திருக்கும் கண்ணகி கோயில் பிரச்சினை பற்றி எனது அரசு கேரள அரசோடு பேச்சு வார்த்தைகள் நடத்தும். இதன் விளைவாக, அக் கோயிலை மக்கள் சென்று பார்ப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படும். மாநில அரசின் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் இங்கும் மற்ற பல இடங்களிலும் ஆராய்ச்சிகள் மேற் கொள்வார்கள். சரித்திரப் புகழ்பெற்ற இடங்கள் சுற்றுலா மையங்களாக மாற்றப்பட்டு, வெளிநாட்டினரும் நம் நாட்டினரும் அவற்றைக் காண ஏற்பாடு செய்யப் படும். இதன் மூலம் வெளிநாட்டு செலாவணி ஈட்டப் படுவதுடன் வேலை வாய்ப்புகளும் பெருகும்.



26. அறநிலையத் துறை நிறுவனங்களின் நிர்வாக அமைப்புகளைச் சீராக்கி மேம்படுத்த இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். குறிப்பாக, அறக்கட்டளைகளுக்குப் பொருள் எழுதி வைத்தோரின் நோக்கங்களும் விருப்பங்களும் நிறைவேறும்வண்ணம் அவைகள் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

27. இப்போதுள்ள நிலையில், தொழிற் தகராறு சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் தொழிற்சங்கங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள், எல்லாத் தொழிலாளர்களையும் கட்டுப்படுத்துவதாக அமைகின்றன. தொழிற் சாலையில் வேலை செய்யும் பெரும்பான்மையோரின் பிரதிநிதிகளாக இல்லாதபொழுதும், தற்போதுள்ள விதியின்படி, சங்கங்கள் அவ்வாறு ஒப்பந்தங்கள் செய்து கொள்ள வகை இருக்கின்றது. தொழிற்சங்க உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களில், மிகப் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்ட 12 (3) ஒப்பந்தம், வேலை நிறுத்த அறிவிப்பு முதலியவை மட்டுமே எல்லோரையும் கட்டுப்படுத்தும் என்று தெளிவாக்குவதற்கான சட்டத் திருத்தம் ஒன்று அவையின் ஒப்புதலுக்குக் கொண்டு வரப்படும்.

28. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சி ஆகிய உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். பதினெட்டு வயது வந்தோர் அனைவரும் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான சட்டத் திருத்தம் செய்யவும் தாய்மார்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் தக்க இட ஒதுக்கீடு பற்றிய சட்டத்திருத்தங்கள் செய்யவும் அரசு உத்தேசித்துள்ளது.

29. முன்னாள் இராணுவ வீரர்களை நகரப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தும் திட்டமொன்றை அரசு அண்மையில் அறிவித்துள்ளது. இது, மேலும் பரவலாக்கப்படும். மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகளில்






சட்டம், ஒழுங்கு நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், ஆக்கிரமிப்பு, வனப் பொருள்களைக்கடத்துதல் போன்ற குற்றங்களைத் தடுப்பதற்கும் ஆங்காங்கே நிரந்தரமாகக் காவல் படை இருத்தி வைக்கப்படும்.


30. நிர்வாகச் சீரமைப்புகளைத் தேவைப்படும் போதெல்லாம் தொடர்ந்து செய்து வரும் தமிழக அரசு, வரும் ஆண்டில் வருவாய் வாரியத்தை நீக்கி, அதற்குப் பதிலாக தனித்தனியான துறைத் தலைவர்கள் (Heads of department) அமைப்பதென முடிவு எடுத்துள்ளது. இதனை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென்பதை மன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

31. காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்ற கருத்து பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்தே பொதுவாக நிலவி வருகின்றது. இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு அரசு பரிந்துரை செய்யும்.

32. தமிழ்நாடு சட்ட மன்றம் ஆக்கபூர்வமான யோசனைகளை அரசுக்கு நல்கி, பண்பாடு குன்றாமல் தனது நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் சீரிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இந்த மரபு குன்றாமல், வரும் சட்டமன்றக் கூட்டத்தொடர் அமையவேண்டுமென்றும் அதற்கு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் மனமார்ந்த முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

33. தமிழக மக்களின் நலன்களுக்காக, மன்ற உறுப்பினர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற விழைகின்றேன். வறுமையும் வேலையின்மையும் விரைவில் நீங்குவதற்காக நாமனைவரும் ஒரு சேர உழைப்போமாக! வணக்கம்.

மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 30.1.80 அன்று தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டவையில் ஆற்றிய உரை.



சென்னைத் தலைமைச் செயலகத்திலுள்ள அணி வகுப்புத் திடலில் தியாகிகள் நாளன்று (30-1-1980) மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் தீண்டாமை ஒழிப்புக்கான உறுதிமொழி எடுக்கப்பட்டது.


## படமும் செய்தியும்

குடியரசு நாள் விழா அன்று (26.1.80) முதன் முறையாகச் சென்னை உயர்நீதி மன்றத்தில் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு எம். இஸ்மாயில் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.





உலகப்புகழ் வாய்ந்த குத்துச்சண்டை வீரர் முகமது அலி சென்னையில் காட்சிப் பந்தயமாகக் குத்துச்சண்டை நிகழ்ச்சி நடத்தியபோது (31.1.80) மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை வகித்து, முகம்மது அலிக்கும், ஜிம்மி எல்லிசுக்கும் குத்துவிளக்குகளையும், தஞ்சாவூர்த் தட்டுகளையும், திருக்குரான் புத்தகத்தையும் பரிசாக வழங்கினார்.










சென்னையில் குடியரசு நாள் அணிவகுப்பு விழாக் காட்சிகள் (26-1-1980)






























## டாடா அக்ரிகோ

அசலின் சின்னம்



நீங்கள் வாங்கக்கூடிய நம்பகமிகுந்த விவசாயக் கருவிகளுக்கு உத்தரவாதம்

# அக்ரிகோ

டாடா ஸ்டீலின் ஓர் பிரிவு.
உயர்தர தயாரிப்பாளர்: பௌராஸ், ஷோவல்ஸ், க்ரோ பார்ஸ், பிகாக்ஸஸ், ஸ்லெட்ஜ் ஹாமர்ஸ்.
எல்லா விவரங்களுக்கும் எழுதவேண்டிய முகவரி:
தி டிவிஷனல் மானேஜர்
தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
அக்ரிகோ, ஜாம்ஷெட்பூர் 831 009

[illegible]க்கிரதை [illegible]லியான கருவிகளை [illegible]ங்கி ஏமாறாதீர்கள். [illegible]




# தீர்த்தமலை ஒரு சுற்றுலாத் தலமாகிறது!


பி. சுப்பையா
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
தருமபுரி.


சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற இடமாக தீர்த்தமலை விளங்குகிறது. தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் எழில் கொஞ்சும் இயற்கை வனப்பும், பசுமை நிறக் காடுகளும், நோய் போக்கும் மூலிகைகளும் நிரம்பி வழியும் பழமைச் செறிவுமிக்க பாடல் பெற்ற மலை தீர்த்தமலையாகும்.

அரூரிலிருந்து 15 கி.மீ. தொலைவில்பெண்ணையாற்றின் தென் கரையில் இவ்வனப்புமிகு மலை அமைந்துள்ளது.

இம்மலைக்குத் தவசாரகிரி, பஞ்சபூதகிரி, சிவசைலம், தீர்த்தகிரி, கங்காகூடம், புனல்சடிலம், சித்த நிவாசம், நிரந்தரம், நியாதிநாசம், துரிதகரம், சோககரம், இராமேட்டம், சுவாமிசிங்கம் என பதின்மூன்று பெயர்கள் உண்டு.

### புராணங்களில் கதை!

மலைமேல் எப்போதும் வற்றாது பொழிந்துவரும் நீர் ஊற்றுக்கள் இராம தீர்த்தம், அக்னி தீர்த்தம், குமார தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம், கௌரி தீர்த்தம் என ஐந்து தீர்த்தங்களாகப்பகரப்பட்டு பழம்பெரும் புராணங்களின் கதைகளைத் தாங்கி பக்தர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

பழம்பொருள் ஆய்வுக்கும், கோயில் கலை, தமிழ்க்கலை, கலாச்சாரம் ஆய்வுக்கும் பயன்படும் வகையில் 19 கல்வெட்டுக்கள் ஆங்கே காணக்கிடக்கின்றன. இரண்டு கல்வெட்டுக்கள் வட்டெழுத்திலும், ஒன்று தெலுங்கிலும், பதினாறு கல்வெட்டுக்கள் தமிழ் எழுத்துக்களிலும் உள்ளன.

கல்வெட்டுக்கள் இத்திருக்கோயில் முதலாம் இராஜேந்திரனின் இருபத்து ஒன்பதாம் ஆண்டு கி.பி. 1041-ல் புதுப்பிக்கப்பட்டது என்பதால் அவனது ஆட்சிக் காலத்திற்கு முன்பே அதாவது இன்றைக்கு 1500 ஆண்டுகட்கு முன்பே இக்கோயில் உருவாக்கப்பட்டிருக்குமெனத் தோன்றுகிறது. கல்வெட்டுக்கள் தீர்த் தலையென்றே இவ்வூரைக் குறிக்கின்றன. நிகரிலி சோழ மண்டலத்துக் கலிங்க நாட்டுப் புறமலை நாட்டுத் தகடூரில் பெண்வணையாற்றின் தென்கரையில் தீர்த்தமலை அமைந்துள்ளது என்பது கல்வெட்டிலிருந்து கிடைக்கும் செய்தியாகும்.

### மன அமைதி தேடுவோருக்கு புகலிடம்

இம்மலையில் உள்ள இறைவன் சுவாமி தீர்த்தகிரீசுவரர்; இறைவடிவழகி அம்மையாவர். மலைத் திருக்கோயிலில் உள்ள ஐந்து தீர்த்தங்கள் புனிதத் தன்மையும், எக்காலத்திலும் வற்றாத தன்மையும் உடையனவாகும். மனஅமைதி தேடுவோருக்கு இது நல்ல புகலிடமாகும். சிவபெருமான் உமையம்மை, முருகன் முதலிய தெய்வங்களும், இமயன் அல்லி முதலிய தேவர்களும், வசிட்டர், அகத்தியர் முதலிய முனிவர்களும், சுவதேகேது என்ற மன்னனும், இராமபிரானும் இம்மலையில் தங்கி நீராடி தவம் புரிந்து சிவபூசையினைச் செய்து நற்பேறு பெற்றதாகப் புராணங்கள் செப்புகின்றன.

மலைக் கோயில் வனத்துறை எல்லையிலும், அடிவாரக்கோயில் ஊரக வளர்ச்சித்துறை எல்லையிலும் அமைந்துள்ளது. மலையடிவாரக் கோயிலைச் சுற்றி 22 மடங்கள் குறைந்த அளவில் தங்கும் வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. அரிசன நலத்துறையால் தாழ்த்தப்பட்டோருக்காக ஒரு



சமுதாய நலக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

### மாசிமகம் திருவிழா

மலைக்கோயிலை அடைந்ததும் இளந்தென்றல் மெய்மறக்கச் செய்கிறது. மலைச்சரிவுகள் அடுக்கடுக்காய் மலைச் சிகரத்திலிருக்க பழஞ் சிறப்பை, பழஞ் சாற்றாய் வழங்கும் திருக்கோயில் அமைந்துள்ளது. நீர் ஊற்றுகளின் தோற்றம் காணயிலா வண்ணம் அற்புதமாகவுள்ளது. கோயிலையொட்டிய கற்பாறையில் கல்வெட்டுக்களும், அங்குள்ள மூன்று மண்டபங்களின் அடிச்சுவற்றிலும் கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோயிலைத் திருப்பணி செய்த மன்னன் தன் மனைவியுடனும் குழந்தையுடனுமிருக்கும் தோற்றம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. பழங்காலத்தில் கல்லில் வடிக்கப்பட்ட துர்க்கை. கோயிலுள் தனியாகக் கிடந்ததை மண்டபத்தில் வைத்து பூசை செய்து வருகிறார்கள்.

ஆடிப்பதினெட்டு அன்று பெருந்திரளான மக்கள் இம்மலைக் கோயிலுக்கு வருவது வழக்கம். மாசிமகம் திருவிழா பத்து நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கென்று அரசு நிதி உதவி அளிக்கிறது. -60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் இவ்விழாவைக் காண கூடுகிறார்கள். வாரந்தோறும் வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை நிறைய அளவில் பொதுமக்கள் இங்கு வருகிறார்கள். பெரும்பாலும் தருமபுரி, சேலம், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் நிறையளவில் இங்குவந்து ஆண்டவனைத் தரிசித்து செல்லுகிறார்கள்.

மலை உச்சியில் விழும் தீர்த்தத்தில் குளித்துச்சென்றால் சர்ம நோய்கள் நீங்குமென பக்தர்கள் பகர்கிறார்கள்.

### 6-வது ஐந்தாண்டுத்திட்டம்

கோயில் வருமானம் குறைந்ததால், நிர்வாக அதிகாரியும் இக்கோயிலுக்கு நியமிக்க இயலவில்லை. அரூர், ஊத்தங்கரை வட்டத்திலுள்ள கோயில் ஆய்வாளர் நிர்வாகத்தின்கீழ் இக்கோயில் கொண்டுவரப்பட்டுள்ளது.

இக்கோயிலில் ரூ. 40,000 மதிப்புள்ள தங்க நகைகளும் ரூ. 5,000 மதிப்புள்ள வெள்ளி நகைகளும், ஐம்பொன்னால் செய்யப்பட்ட 12 சிலைகளும் உள்ளன.

சுற்றுலாத்துறையின் சார்பில் தீர்த்தமலையை அழகுபடுத்தி சுற்றுலாத் தலமாக ஆக்கவும், மலைப்பாதையைச் செப்பனிடவும், பயணிகள் தங்கும் வசதி அமைக்கவும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.





# நிலக்கடலை
## நோய்களும் தடுப்பு முறைகளும்

டாக்டர் பெ. நாராயணசாமி,
இணைப் பேராசிரியர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை.

அண்ணல் காந்தியடிகள் நிலக்கடலையையும், ஆட்டுப் பாலையும்தான் சத்துணவு எனக் கருதி விரும்பி உட்கொண்டார் என்று கூறக் கேட்டிருக்கிறோம் நாம்.

நிலக்கடலை, உணவுப் பொருளாகவும், உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்தும் எண்ணெய்யாகவும் நம் வாழ்வில் பெரிதும் பயன்படுவதாகும். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நிலக்கடலை பயிரிடுவது அவ்வளவு எளிதானது அல்ல.

நிலக்கடலைப் பயிர் பலவகையான நோய்களினால் தாக்கப்படுகிறது. இந்த நோய்கள் பூசணங்களினாலும் நச்சுயிரி போன்ற நுண்கிருமிகளினாலும்தான் உண்டாகின்றன. நோய்களின் அறிகுறிகளை ஆராய்ந்து அறிந்துகொண்டு தக்க சமயத்தில் தேவையான பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதால் அதனால் உண்டாகும் பெருத்த நட்டத்தைத் தவிர்க்க முடியும் என்பதைக் அது குறித்த பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள் தெளிவாக உணர்த்தியுள்ளன.

### டிக்கா இலைப்புள்ளி நோய்

நில்க்கடலையில் உண்டாகும் நோய்களில் ஒன்று டிக்கா இலைப்புள்ளி நோய்.

பொதுவாக, விதைத்த 40 நாட்களுக்குப் பின்னால் செடியின் அடியிலுள்ள இலைகளில் இந்தநோய் தோன்றுகிறது. முதலில் சிறிய வட்டமான கரும் பழுப்பு நிறப்புள்ளிகள் இலைகளில் தோன்றும். தேவையான சூழ்நிலைகள் உள்ளபோது, இந்தப் புள்ளிகள்விரைவாகப் பெரிதாகிப் பரவி ஒன்றோடு ஒன்று சேர்ந்து இலையின் பெரும் பகுதியினை ஆக்கிரமிக்கும். இதனால் செடிகளின் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் சக்தி மிகவும் குறைந்து விடுகின்றது. இந்த நோய் தண்டுப் பகுதிகளைத் தாக்கும்பொழுது, நீண்ட கரும் பழுப்புநிறமான புள்ளிகள் ஏற்படுகின்றன. பின்னர் செடியின் சிறு கிளைகளும் காய்ந்துவிடுகின்றன. நோயின் தாக்குதல் கடுமையாக உள்ளபோது காய்கள் பிடிப்பது மிகவும் குறைந்து விடும். உண்டாகின்ற காய்கள் சிறியதாகவும் முழுவதும் நிரம்பாமலும் இருக்கும்.

இந்த நோயினைக் கட்டுப்படுத்த பல வழிமுறைகள் உள்ளன. நோய் தாக்கி உதிர்ந்த இலைகள் மற்றும் காய்ந்த செடிகளை முழுவதுமாக அகற்றி அழித்து பயிர்ச் சுகாதாரத்தைக் காப்பதனால் அடுத்த பயிருக்கும் இந்த நோய் ஏற்படும் வாய்ப்புகள் குறைகிறது. பயிர் சுழற்சியின் மூலமாகத் தொடர்ச்சியாக நிலக்கடலைப் பயிர் செய்யாமல் தவிர்ப்பதன் மூலம் நோயின் தாக்குதல் அளவு குறைகிறது.

குறித்த அளவு தழைச்சத்து, மணிச்சத்து உள்ள உரங்களை இடுவதாலும், சாம்பல் சத்தை அதிகரிப்பதாலும், ஜிப்சம் உப்பைப் போடுவதாலும், இந்த நோயின் கடுமையானது குறையும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊடுருவிப் பாயும் இரசாயன மருந்தான பாலிக்ஸ்டின் மருந்தை ஏக்கருக்கு 100 கிராம் அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து நோய் கண்டவுடன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து இரண்டாம் முறையாகவும் தெளித்து



நோயின் வேகத்தைக் கட்டுப் படுத்தலாம்.

### துருநோய்

நிலக்கடலைப் பயிரில் துரு நோய் என்றொரு நோயும் உண் டாகிறது.

துரு நோய் கோவை, திருச் சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில்தான் அதிகமான அளவில் கடலைப் பயிரைத் தாக்குகிறது.

பொதுவாக, இந்த நோயும் இலைப்புள்ளிநோயைப்போலவே விதைத்த 40 நாட்களுக்குப் பின் னர் செடியில் காணப்படுகிறது. செடியின் அடிப்பாகத்திலுள்ள இலைகள் இந்த நோயால் முத லில் தாக்கப்படுகின்றன. நோய் பற்றிய இலைகளின் அடிப்புறத் தில் சிறிய ஆரஞ்சு அல்லது செம் பழுப்பு நிறக் கொப்புளங்கள் உண்டாவதைக் காணலாம். இலை களின் மேலுறையில் வெடிப்பு ஏற்பட்டு பூஞ்சாள வித்துக்கள் வெளியில் வந்து காற்றுமூலமாகப் பரவுகிறது. நோய் கடுமையாகத் தாக்கும்போது இலைகள் முழுவ தும் கொப்புளங்கள் நிறைந்து தோன்றுவதால் இலைகள் கருகிக் காய்ந்துவிடுகின்றன.

சூழ்நிலைகள் காரணமாகச் செடிகள் கடுமையாகத் தாக்கப் பட்டு கருகிக் காய்ந்துவிடுகின் றன. நோய் தாக்கிய இலைகள் காய்ந்து உதிர்ந்து விடுவதாலும், கிளைகள் காய்ந்து விடுவதாலும் காய்கள் பிடிப்பது இந்நோய் காரணமாகவும் மிகவும் குறைந்து விடுகிறது. காய்கள் சிறியதாக வும், பூரணமாக நிரம்பாமலும் இருக்கும். கடலைப் பருப்பின் எடை குறைவதுடன்எண்ணைய்ச் சத்தின் அளவும் குறைகிறது.

இந்த நோய் காற்று மூலமாக விரைவில் தொற்றிப் பரவுகிறது. மழைக் காலங்களிலும் வெப்பம் குறைந்த பருவங்களிலும்தான் இந்தத் துருநோய் மிகுதியாகத் தோன்றுகிறது.

துரு நோயைக் கட்டுப்படுத்த சில வழிமுறைகள் உள்ளன. ஏக்க ருக்கு 600 கிராம் டக்கோனில் அல்லது 500 கிராம் டைத்தேன் எச்.45 மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்துக கைத் தெளிப்பானால்; நோய். தோன் றியவுடன் ஒரு முறையும், அதற் குப் பின்னர் 15 நாட்கள் கழித்து இரண்டாம் முறையாகவும் தெளிக்க வேண்டும்.

டிக்கா இலைப்புள்ளி நோயும், துருநோயும் பல மாவட்டங்களி



> ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத் தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்!
>
> —பேரறிஞர் அண்ணா

லும் சேர்ந்தே காணப்படுகின் றன. அப்பொழுது இந்த இரண்டு நோய்களையும் கட்டுப்படுத்த பாவிஸ்டின் 200 கிராம், டைத் தேன் எம்.45, 250 கிராம் அள வில் இரண்டு மருந்துகளையும் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து இருமுறை தெளிக்க வேண்டும். இப்படித் தெளிப்பதால், இந்த இரண்டு நோயும் வேகம்குறைந்து கொஞ்சம் கொஞ்சமாக அடி யோடு நீங்கிவிடும்.

### வட்டத்தேமல் நோய்

நிலக்கடலைச் செடியைப் பீடிக்கும் நோய்களில் வட்டத் தேமல் நோய் என்பதும் ஒன்றா கும்.

பயிரின் பல பருவங்களிலும் தோன்றக்கூடிய வட்டத்தேமல் நோயினைப் பற்றித் தெரிந்து கொள்ளுவது நிலக்கடலை பயி ரிடுவோருக்கு மிகவும் அவசியமா கும். நச்சுயிரியனால் ஏற்படும் இந்த நோயின் தாக்குதல் சமீப காலத்தில் பல மாவட்டங்களி லும் பரவலாகக் காணப்பட் டுள்ளது. சாதாரணமாக நிலக் கடலை விதைத்த மூன்று வாரங் களுக்குப் பின்னால் இந்தநோயின் முதல் அறிகுறிகள் தென்படு கின்றன. சிறிய மஞ்சள் நிற முள்ள வட்டமான வளையங்கள் அல்லது புள்ளிகள் துளிர் இலை களில் தோன்றுகின்றன. பின் னால் இந்தப் புள்ளிகள் அளவில் பெரிதாகி, பொது மைய வட்டங் களைக் கொண்ட வளையப் புள் ளிகளாகவும், மஞ்சளும் பச்சையும் கலந்த தேமல் நோய் அறிகுறி போலவும் மாறுகிறது.

இந்த நச்சுயிரியில் இருவகை கள் உள்ளன. அவை மிதவகை, தீவிர வகை என்பவைகளாகும். தீவிர வகை நச்சுயிரியினால் தாக் கப்பட்டு செடிகளின் கிளைகளின் நுனி பிஞ்சுகள் இலைமொட்டுக்கள் வட்டத்தேமல் நோயால் தாக் கப்பட்டு கருக ஆரம்பிக்கும். நாட்கள் போகப் போக கிளை கள் முழுவதும் நுனியிலிருந்து அடிவரை கருகிக் காய்ந்துவிடும். இளம் பயிரை நோய் தாக்கினால் செடிகள் முழுவதுமாகச் செத்து விடுகின்றன. மித வகை நச்சுயிரி தாக்கும்பொழுது செடிகள் கொல்லப்படுவதில்லை.

ஆனால், செடிகள் குட்டையாக வும், இலைகள் சிறியதாகவும், பச்சை மஞ்சள் பகுதிகள் கலந்து தேமல் அறிகுறியைக் கொண்டும் நரங்கிப்போய் இருக்கின்றன. பூக்களின் எண்ணிக்கையும் மிக வும் குறைந்து விடுவதால் விளைச் சல் வெகுவாமகப் பாதிக்கப்படு கிறது. கடலைப் பருப்பு சிறியன வாகவும் சுருங்கியும் இருக்கும். இதனால் எடுக்கும் அளவும் குறைவாகிவிடும்.

இந்த நோயினைத் தடுப்பு முறைகளால் கட்டுப்படுத்திவிட முடியும். விதைகளை 15 X 15 செ.மீ. இடைவெளி கொடுத்து விதைக்க வேண்டும். விதைத்த பின்னால் 45 நாட்கள் வரை நோய் தாக்கிய செடிகளைப் பார்த்த உடன் அவ்வகைளைப் பிடுங்கி அழித்துவிட வேண்டும். விதைத்த 30 நாட்களுக்குப் பின் னால் நுவக்கிரான் மருந்தை ஏக்கருக்கு 200 மி.லி. அளவில் தெளித்து நோய் பரப்பும் பூச்சி களைச் செயலிழக்கச் செய்வதால் நோய் பரவுவது குறையும்.

கடலையைத் தாக்கும் இந்த மூன்று முக்கியமான நோய்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் 70சதம் வரை, விதைப்போருக்கு நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

எனவே, இந்நோய்களைக் கவ னித்துக் கட்டுப்படுத்துவதன் மூலம் இப்பேரிழப்பைத் தவிர்த்து நிலக்கடலை விளைச்சலைப் பெருக்க முடியும் என்பது உறுதி யாகும்.



# ஆடு வளர்ப்பு



திரு பொ. துரைசாமி, ஐ.ஏ.எஸ்.
இயக்குநர்,
கால்நடைப் பராமரிப்புத்துறை,
சென்னை.

தமிழ் நாடு விவசாய நாடு. விவசாயத்தையே நம்பி இருக்கும் நம் நாட்டிற்கு மாடுகள், ஆடு கள், கோழி இனங்கள் ஆகிய கால்நடை இனங்கள் மிகவும் இன்றியமையாதது என்பது யாவ ரும் அறிந்ததே. கூட்டுறவு சங் கங்களின் மூலம் சிறு விவசாயி, மிகச் சிறு விவசாயி, நிலம் இல் லாத விவசாயத் தொழிலாளி ஆகியவர்கள் அடைந்து வரும் பயனைஎண்ணும்போது, கூட்டுற வின் பெருமை வியப்புக்குரியதாக உள்ளது. உலகு எங்கும் கூட்டுற வின் கோட்பாட்டைப் பல துறை யிலும் புகுத்தி சாதாரண எளிய மக்களும் மேம்பாடு அடைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

கால்நடை இனங்களில் கூட் டுறவு சங்கங்களின் எண்ணிக்கை இன்றியமையாததாக உள்ளது. குறிப்பாக சமீப காலத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தலில் விவசாயிகள் தீவிர கவனம் செலுத்துவதினால் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. சுமார் 350 ஆடு வளர்ப்புக் கூட்டு றவுச் சங்கங்கள் தற்சமயம் தமிழ் நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் பல்வேறு திட்டங் கள் மூலம் செயல்பட்டு வரு கின்றன.

விவசாயிகள் அதிக அளவில் ஆட்டின அபிவிருத்திக்கு அக் கறை காட்டுவது கீழ்க்கண்ட காரணத்தை எண்ணியே ஆகும்.

1. ஆடு வளர்த்தற்குப் பெரிய கட்டிடங்கள் எதுவும் தேவையில்லை; திறந்த பட்டிகளில் அடைத்து வைக்கலாம்.
2. ஆடுகள் குறுகிய காலத்தில் எண்ணிக்கையில் பெருகு கின்றன. அதாவது இரண்டு வருடங்களில் மூன்று குட்டிகள் போடும் தன் மையைத் தன்னிடத்தே கொண்டுள்ளது.
3. ஆடுகள் பராமரித்தல் மிக வும் சுலபமானது. அதிக ஆட்கள் தேவை இல்லை. குறைந்த பட்சம் 40முதல் 50 ஆடுகளை மேய்ச்ச லுக்கு அழைத்துச் செல்ல ஒருவரே போதும்.
4. விவசாயத்திற்குத் தேவை யில்லாத புல்பூண்டுகளைத் தின்றே ஆடுகள் நன்கு வளர்ந்து விடும். தனியாக இதற்காகச் செலவு செய்ய வேண்டியதில்லை.
5. இறைச்சி, ஆட்டின் உரம்; தவிர ஆடுகளை விற்றல், ஆகியவைகள் மூலம் கூடு தலான தொகையை விவ சாயிகள் பெறுகின்றனர்.
6. ஆட்டின் தோல், கம்பளம் ஆகியவைகள் மூலம் நம் நாட்டிற்கு அந்நிய செலா வணியையும் ஈட்டித் தரு கின்றது.

மேற்கண்ட காரணத்தை மன தில் கொண்டு விவசாயக் குடிமக் கள் அதிக அளவில் இந்த உபரி தொழிலையே முழு நேரத்தொழி லாகவும் கொள்ள எண்ணுகின்ற னர். கால்நடைப் பராமரிப்புத் துறையின் அலுவலர்கள் யாவ ரும் மக்களின் எண்ணத்தை நன்கு மனதில் கொண்டு அதற்கு ஏற்ப தன் கவனம் முழுவதையும் செலுத்தி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும், பொரு ளாதாரத்தையும் உயர்த்துவ தற்குத் தக்க திட்டங்கள் மூலம் வழிவகுத்து வருகின்றனர்.

1977ம் ஆண்டு அரசு எடுத்த புள்ளி விவரப்படி கால்நடை களின் எண்ணிக்கை 23.64 மில்லி யன்கள் ஆகும். அவற்றுள் ஆடு கள் மட்டும் 5.18 மில்லியன்கள் உள்ளன. நடப்பு ஆண்டில் ஆட் டினங்களின் தமிழ் நாட்டில் வியக்கும் அளவிற்கு 6 மில்லிய னாகக் கூடுதல் அடைந்திருக் கிறது. இதற்கு முக்கியக்காரணம் தமிழக அரசு கால்நடை பராம ரிப்புத் துறை மூலம் நிறைவேற்றி வரும் திட்டங்களே என்பது வெள்ளிடை மலை. ஆடு அபி விருத்திக்காகக் கீழ்க்கண்ட திட் டங்கள் உள்ளன.

### விவசாய மறுநிதி கழகத் திட்டம் :

இத்திட்டம் தேர்ந்தெடுக்கப் பட்ட 39 ஆடு வளர்ப்புக் கூட்டு றவுச் சங்கங்கள் மூலம் 7 மாவட் டங்களில் முறையே செங்கல் பட்டு, வடஆற்காடு, தர்மபுரி, மதுரை, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங் களில் செயல்பட்டு வருகின்றன. கடன் தொகை மாநில கூட்டு றவு வங்கி மற்றும் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் வழிபடுத்தப்பட்டு, கூட்டு றவுச் சங்கங்கள் மூலம் அங்கத்தி னர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூபாய் 2,500- விதம் 10 சத விதம் வட்டியில் ஆடுகளாக வாங்கிக் கொடுக்கப்படுகின்றது. சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1750- (ரூபாய் ஆயிரத்து எழு நூற்று ஐம்பது மட்டும்) தன

வாட சாமான்கள் மற்றும் மருந்து உபகரணங்கள் வாங்க அரசு கடனாகக் கொடுக்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு சங்கத்திற்கும் காரியதரிசியாகப்பணியாற்ற கால்நடை ஆய்வாளர் ஒருவரை இலவசமாகத் தந்துள்ளது. கால்நடை மருத்துவர் மூன்று சங்கங்களுக்கு ஒன்று வீதம் மேற்பார்வை செய்து வருவதால், அங்கத்தினர்களின் ஆடுகளுக்கு மருத்துவ வசதி தேவையான போது கிடைக்க ஏதுவாக உள்ளது. கணக்குகளைப்பார்வையிட 10 சங்கங்களுக்கு ஒரு முதுநிலை ஆய்வாளர் (கூட்டுறவு) அமைக்கப்பட்டுள்ளார்.

செங்கை மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், மதுரை மாவட்டத்தில் உள்ள எழுவனாம்பட்டி ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய வங்கிக்குச் சேரவேண்டிய கடன் தொகை முழுவதையும் தவணைகள் முடியும் முன்பே திருப்பிச்செலுத்தியுள்ளது எனில் அது சங்கத்தின் வளர்ச்சியையும் அங்கத்தினர்கள் ஆட்டின வளர்ப்பினால் அடையும் ஆதாயத்தையும் காட்டுவதாக உள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள சின்னதாண்டா ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்த காலத்திலேயே, சங்க வருமானம் மூலம் கிடைக்கப்பெற்ற உபரி நிதியிலிருந்து சங்கத்திற்காக ரூ. 16,384- செலவில் கட்டிடம் கட்டியுள்ளது, என்பதுபெருமைக்குரிய விஷயமாகும். ''மதராஸ் சிகப்பு இன ஆடுகள்'' செங்கை மற்றும் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆடுகள் சேகரிக்கப்பட்டு இலங்கை அரசுக்கு விற்பனை செய்து அந்நியச் செலாவணியையும் நம் தமிழகத்திற்கு ஈட்டித் தந்துள்ளது.

**சிறப்பு கால்நடைத்திட்டம் :**

மத்திய அரசின் துணை கொண்டு தமிழக அரசு கால்நடை பராமரிப்பின் துறை மூலம் சேலம், வடஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 9,000 ஆட்டின நிலையங்கள் அமைக்க இசைந்துள்ளது. இத்திட்டமானது சிறு விவசாயி, மிகச் சிறு விவசாயி, விவசாயத் தொழிலாளி ஆகியவர்கள் பயன் அடைவதற்கு என்றே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆட்டின நிலையமும், 20 ஆடுகளையும், ஒரு கிடாவையும், கொண்டதாகும். ஆகவே ஒரு ஆட்டின நிலையம் ரூ. 3,000 முதலீட்டுத்தொகையைக் கொண்டதாகும். இத்திட்டத்தின் மூலம் சிறு விவசாயி ரூ. 750 யையும் மிகச் சிறு விவசாயி மற்றும் விவசாயத் தொழிலாளி ரூ. 1000யையும் மான்யமாகப் பெற அரசு வழிவகை செய்துள்ளது. கடன் முதலீட்டுத் தொகை ரூ. 3000-ஐ பெற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மற்றும் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் முன் வருகின்றன. அரசு அலுவலர்கள் இதற்கான அவசியமான உதவிகள் அனைத்தும் செய்து தருகின்றனர். தற்சமயம் இத்திட்டத்தில் மட்டும் 122 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

## முதியோர், விதவை, உடல் ஊனமுற்றோர்களுக்கு உதவி

தமிழ்நாட்டில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் அனாதை முதியோர், புகலற்ற விதவைகள், உடல் ஊனமுற்றோர், பார்வையிழந்தோர் ஆகியோர் பயன்பெறுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை 97,020 ஆக இருந்தது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத் திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ளவர்களின் எண்ணிக்கை பற்றிய முழுக் கணக்கெடுப்பு உடனடியாக நடத்தப்பட்டு, அரசுக்குத் தெரிவிக்கப்படவேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து விவரங்கள் அவர்களிடமிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன. இதுபற்றிய முடிவான விவரங்கள் கிடைக்கப்பெறும் முன்பு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 16,950 பேர்களுக்கு உடனடியாக உதவியளிக்க இப்போது அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. இவர்களின் விவரம் அனாதை முதியோர்—8,550, புகலற்ற விதவைகள்—7,500, உடல் ஊனமுற்றோர் பார்வையிழந்தோர்—900.

இதனால் அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 50.85 இலட்சம் ஆகும். இத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 1,13,970 ஆகத் தற்போது உயர்ந்துள்ளது.

**வறட்சிப்பணி நிவாரணத்திட்டம்:**

வறட்சிப் பணி நிவாரணத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு, அம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பிற்காகக் கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் தற்சமயம் 69 ஆடு வளர்ப்புச் சங்கங்கள் உள்ளன. அரசு இத்திட்டத்தில் பயன் பெறும் அங்கத்தினர்களுக்கு மான்யத் தொகை மட்டுமே வழங்கி வருகின்றது. இத்திட்டத்திற்குத் தேவையான கடன் தொகைகள் யாவும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் ஆகியவைகளின் ஒத்துழைப்பின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இருபது பெட்டை ஆடுகளையும், ஒரு கிடாவையும் கொண்டது ஒரு ஆட்டின நிலையமாகும். கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் பணியாற்றி வரும் உதவி இயக்குநர், மற்றும் மண்டல இணை இயக்குநர்கள் அவ்வப்போது அங்கத்தினர்களுக்குத் தேவையான கடன் வசதிகளையும், ஆட்டின நிலையங்களை நன்கு பாதுகாக்க ஆலோசனைகளும் ஆட்டின் நோய்களைப் போக்க மருத்துவ வசதியும் செய்து தருகின்றார்கள்.



**மலைவாழ் மக்கள் அபிவிருத்தி திட்டம் :**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மக்கள் பயன் அடையும் பொருட்டே இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 400 ஆட்டின நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அமைக்க அரசு எண்ணி செயல்படுத்தி வருகின்றது. நான்கு கூட்டுறவுச் சங்கங்கள் முறையே உதகமண்டலம், கோத்தகிரி, கூனூர், கூடலூர் ஆகும். ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் 12 பெட்டை ஆடுகள் ஒரு கிடா கொண்ட ஆட்டின நிலையங்கள் அமைக்க அரசு ரூ. 2000 கடன் கொடுக்கின்றது. இக்கடனை அங்கத்தினர்கள் நான்கு ஆண்டில் திருப்பிச்செலுத்துதல் வேண்டும். நான்காவது ஆண்டு தவணை தொகையான ரூ 500ஐ மான்யமாகக் கருதப்பட்டு அரசு தள்ளுபடி செய்கின்றது. கடன் தொகையான ரூ. 2000 ரொக்கமாகக் கொடுக்கப்படாமல், அங்கத்தினர்களின் ஒப்புதலோடு நல்ல தரமான ஆடுகள் இத்தொகைக்கு ஏற்ப கால்நடை மருத்துவரின் பரிசோதனைக்குப் பின் வாங்கித் தரப்படுகின்றன. அரசு இக்கடனை 9 சதவீத வட்டியில் கொடுத்து உதவுகிறது.

ஒவ்வொரு சங்கமும் நன்கு செயற்படுதற் பொருட்டு, கால்நடை ஆய்வாளர் ஒருவரை சங்கக் காரியதரிசியாகவும், மந்தை காப்பாளர் ஒருவரையும் இலவசமாக வழங்கியுள்ளது. அங்கத்தினர்களின் ஆடுகளுக்கு நல்ல முறையில் வைத்திய வசதி அளித்தற் பொருட்டு, இரண்டு கால்நடை மருத்துவரை இத்துறையின் கீழ் செயல்பட வழி செய்துள்ளது. முதுநிலை ஆய்வாளர்(கூட்டுறவு) அவர்கள் சங்கக் கணக்குகளைக் கவனித்து கொள்கின்றார்கள்.

மலைவாழ் மக்களின் பொருளாதாரம் இதன் மூலம் ஓர் அளவிற்கு உயர்ந்துள்ளது. மேய்ச்சல் வசதி அம்மாவட்டத்தில் நன்கு இருப்பதாலும், சீதோஷ்ண நிலை ஆடு வளர்ப்பிற்கு ஏற்ப உள்ளதால், மக்கள் மிக்க ஆர்வத்தோடு இதனை ஏற்கின்றனர். கம்பளி நெசவும் விரிவடைய இதனால் வாய்ப்புண்டு.


**பழங்குடி மக்கள் அபிவிருத்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடி மக்களின் அபிவிருத்திக்காக தென்ஆற்காடு, வடஆற்காடு, சேலம், தர்மபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 356 ஆட்டின நிலையங்கள் அமைத்தற்காக அரசு ரூ.2.33 இலட்சம் வழங்கியுள்ளது. மேற்கண்ட தொகையை முறையே கல்வராயன், ஏலகிரி, ஜவ்வாது, ஏற்காடு, சித்தேரி ஆகிய இடங்களில் வாழும் பழங்குடி மக்களின் நன்மைக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. வடஆற்காடு மாவட்டத்தில் இயங்கிவரும் ஜமுனா மருதூர் ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பிரத்தியேகமாக கால்நடை ஆய்வாளர் ஒருவரின் பணியினை இலவசமாக வழங்க அரசு இணங்கியுள்ளது. இது சங்கம் நன்கு செயல்பட வழிவகுக்கும்.

இத்திட்டம் எல்லா மாவட்டங்களிலும் உள்ள பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலம் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப் பார்வையின் கீழ் செயல்பட்டு வருகின்றது. கால்நடை பராமரிப்புத் துறை கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தற்கும் மருத்துவ வசதி தேவையான போது அளித்தற்கும் உதவி புரிகின்றது. நல்லதரமான ஆடுகளை அங்கத்தினர்கள் பெறுதற்கு இத்துறையின் கால்நடை மருத்துவர் மற்றும் வல்லுநர்கள் திறம்படச் செயலாற்றி வருகின்றார்கள், இத்திட்டத்திற்குத் தேவையான கடன் தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பெறப்படுகின்றது. 20 பெட்டை ஆடுகள் ஒரு கிடா கொண்ட ஆட்டின நிலையங்கள் அமைத்தற்கான கடன்தொகை ரூபாய் 3000ம் ஆடுகளாக வாங்கிக் கொடுக்கப் படுகின்றது. மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் இத்திட்டத்திற்குப் பெரும்பாலும் உதவி வருகின்றன.

அரசின் மேற்கண்ட திட்டங்கள் நன்கு செயல்படவும், ஆட்டினம் நன்கு தமிழ் நாட்டில் அபிவிருத்தி அடைவதற்கும் விவசாயிகளும் இத்தொழிலில் சிறிது அளவு கவனம் செலுத்துதல் வேண்டும். கீழே கொடுக்கப்படும் குறிப்புகளைச் சற்றுக் கவனித்து அதற்கு ஏற்ப நடந்தால் தற்சமயம் ஆட்டினால் ஏற்படும் ஆதாயத்தைக் காட்டிலும் கூடுதலான இலாபத்தை நிரந்தரமாகப் பெறலாம்.

1. சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற ஆட்டினத்தை முதலில் தேர்ந்து எடுக்கவேண்டும்.
2. புதிய இனத்தை முழுமையாகப் பயன்படுத்தாது, படிப்படியாகப் பயன்படுத்துதல் வேண்டும்.
3. தேர்ந்து எடுக்கப்படும் கிடாக்கள் நல்ல வலுவானதாகவும், வளமானதாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேர்ந்து எடுக்கப்படும் பெட்டை ஆடுகள் தரமான, நிறைய குட்டிகள் போடக் கூடிய சீரான உடல் அமைப்புக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
5. 40 முதல் 50 வரை கொண்ட பெட்டை ஆடுகளுக்கு ஓர் கிடர் அவசியம் வேண்டும்.
6. சிறு வயதில் ஆட்டை இனப்பெருக்கத்திற்கு விடவே கூடாது.
7. கொட்டகையில் அளவிற்கு மீறிய எண்ணிக்கையில் (50க்கு மேல்) ஆடுகளை அடைத்து வைத்தல் கூடாது.
8. நல்ல தீவனம், சுத்தமான தண்ணீர் அவசியம்.
9. குடற்புழு நீக்கம் வருடத்திற்கு நான்குமுறை தவறாது செய்தல் வேண்டும்.



## முதல்வரின் கருத்துரைகள்

* உழைக்கும் வர்க்கம், எடுத்துக் கொள்ளும் நிலைக்கு வந்தால் தடுக்க முடியாது. ஆனால், அதற்கு முன்பு நாமே கொடுக்கக்கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்!
* ஒரு மனிதனின் எண்ணமும், நோக்கமும் மட்டுமே நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. செய்லும், பண்பாட்டுடன் இருக்கவேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் நாட்டில் நல்லவை நடக்கும்.



# திருவள்ளுவர் திருநாள்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு'' என்றார் பாரதியார். அந்தச் சிறப்பை நமது தமிழகமே பெற்றிருக்கிறது.

உலக இலக்கியங்களில் காணப்படாத வாழ்க்கை நெறிகளைக் குறள் மட்டும் கூறியிருக்கிறது என்று உலகப் பேரறிஞர்கள் பலரும் புகழாரம் சூட்டியிருக்கிறார்கள். பழந்தமிழ் இலக்கியத்தில் தலையாக விளங்குகிறது திருக்குறளே!

இரண்டு வரிகளில் எல்லா அடிப்படைப் பிரச்னைகளையும் வள்ளுவர் மாத்திரமே சுட்டிக் காட்டியிருக்கிறார். இது ஒரு அறநூலாகத் திகழ்கிறது.

கம்பரைப் போல், வள்ளுவரைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்று போற்றற்கரிய பெரும் புலவர்களுள் முதன்மையானவராய்த் திகழ்ந்தவர் வள்ளுவர் ஆவார்.

அத்தகைய பெரும்புலவனுக்குச் சென்னைத் திருநகர்ல, அதுவும் அவர் பெயராலே நிறுவப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் சீர்மிகு விழா எடுத்துச் சிறப்பித்தது.

### விழாக்கோலம் பூண்ட இனிய விழா!

*1980-ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் நாள்!*

வள்ளுவர் கோட்டம் காலை 8 மணிக்கெல்லாம் விழாக்கோலம் பூண்டது.

காலை நிகழ்ச்சிகள் ''களை'' கட்டத் தொடங்கியதன், முதல் நிகழ்ச்சியாக நாதசுர இசைக் கல்லூரி மாணவர்களின் நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

திரு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்றார்.

அரங்கின் உட்புறமும் வெளிப்புறமும் மக்கள் நிரம்பி வழிந்தனர். அரங்கின் வெளிப்புறத்தில் நிற்பவர்களும் 'விழாப்பேருரைகளை—வள்ளுவர் பற்றிய வாய்மைச் சிறப்புக்களைக் கேட்டுக் களித்திடும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

### குறளில்தான் மெய்யறிவு

நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்றுப் பேசியபோது ''குறளின் நெறிகள் வாழ்க்கையில் எதிரொலிக்கும்படி வாழ வேண்டும்'' என்றார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 1330 திருக்குறள் இன்னமும் அனைத்து நாட்டவருக்கும், எல்லாக் காலத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

'உலக இலக்கியங்களில் எதிலும் இல்லாத அளவுக்கு மாண்புமிக்க மெய்யறிவு குறளில்தான் இருக்கிறது. வேறு எந்த இலக்கியங்களிலும் இல்லை' என்று ஆங்கில மேதை ஆல்பர்ட் சுவைட்சர் கூறியதை நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

### நீதிபதி மகராஜன் எழுதிய 'திருக்குறள்' ஆங்கில நூல்

மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், நீதிபதி டாக்டர் மகராஜன் அவர்கள் எழுதிய ''திருவள்ளுவர்'' என்னும் ஆங்கில நூலை வெளியிட்டார்.



அதன் முதற் பிரதியை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த ஆங்கில நூலைப் புதுடில்லி சாகித்திய அகாதமி பதிப்பித்திருந்தது. நூலைப் பற்றி டாக்டர் சி. ஆர். சர்மா அவர்கள் விளக்கவுரை ஆற்றினார்.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு வரும் அனைவருக்கும், சாகித்திய அகாதமி பதிப்பித்துள்ள ஆங்கில மொழி திருக்குறளைப் பரிசாக வழங்க வேண்டும் என்றும், மாணவர்களுக்கும் இந்த நூலை அரசே வாங்கிப் பரிசாக வழங்கிட வேண்டும் என்றும், சென்னையில் சாகித்திய அகாதமிக்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்ட இலவசமாக நிலம் வழங்க வேண்டும் என்றும் அரசை அவர் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் நூல் குறித்து ஆய்வுரை நிகழ்த்தினார். பின்னர் நீதிபதி டாக்டர் மகராஜன் அவர்கள் பேசினார்.



நீதிபதி டாக்டர் மகராஜன் எழுதிய 'திருவள்ளுவர்' ஆங்கில நூலை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

### உலக வரலாற்றில் தமிழகம்

மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில், சமுதாயத்தைத் தர்மத்தின் அடிப்படையில் வழிநடத்தும் நூலாகக் குறள் விளங்குகிறது. தமிழ் அறிஞர்கள், இந்த நூலிலுள்ள பெருமையைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்ல முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

85330

''தீர்ப்புத் திரட்டு'', ''குற்ற வழக்குத் திரட்டு'' ஆகிய வெளியீடுகளை மாண்புமிகு தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயில் அவர்கள் வெளியிட, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சி. அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.



மனிதாபிமானத்தை வலியுறுத்துவதாக அமைந்திருப்பதாகக் குறளைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் திரு. பட்வாரி அவர்கள் தமிழர்களின் வேத நூலாகவும் குறள் விளங்குவதாகத் தெரிவித்தார்.

### காலம் மலர்ந்திருக்கிறது

அடுத்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள், தமிழில் பேசுவதையே இழுக்கு என்று கருதப்பட்ட காலம்போய், தமிழகத் தலைமை நீதிபதியாக தமிழாய்ந்த தமிழறிஞர் பொறுப்பேற்கும் காலம் மலர்ந்திருக்கிறது'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சியில் 380 பேருந்துகள் கொண்ட விரைவுப் பிரிவுக்குத் ''திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்'' என்று பெயரிட்டுள்ளது தமிழுக்குச் செய்யும் சிறப்பு'' என்றும் அவர் குறிப்பிட்டார்.



குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றம்

''ஒருமைப்பாட்டை - ஒற்றுமையை வலியுறுத்தும் வழிகாட்டியாக விளங்கும் திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஆக்கவேண்டும்'' என்றும் மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தமிழக மக்களின் சார்பாக மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

**வரலாறு கிடையாது**

''மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களது சீரிய ஆட்சியில்தான் ஒரு கிலோ மீட்டருக்குக் கட்டணம் ஆறு காசில் இருந்து ஐந்து காசாகக் குறைக்கப்பட்டது'' என்று குறிப்பிட்டார்.

'செந்தமிழ்ச் செல்வர்' எனும் விருது இவ்வாண்டு மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ் மாநாட்டில் வழங்கப்படும்'' எனும் அறிவிப்பினையும் மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் வெளியிட்டார்.

இந்த ஆண்டு நடைபெறும் வள்ளுவர் விழா வெறும் சொற்பொழிவை மட்டுமே வைத்து அமையவில்லை என்றும், பல செயல் திட்டங்களையும் நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் விழாவாக அமைந்தது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.


**முற்போக்குச் சமுதாயம் அமைக்க**

மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், வள்ளுவர்

அரசு உதவித்தொகை பெற்ற தமிழ் அறிஞர்கள்








**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.**

விழாவையொட்டிய நூற்காட்சியையும், கருத்தரங்கத்தையும் தொடங்கி வைத்துப் பேசிய போது, உலகம் முழுவதிலும் குறளின் கீர்த்திகளைப் பரப்பிட வேண்டும் என்றும், குறள்நெறியைப் பின்பற்றி நடக்க மக்கள் முனைந்தால், உலகில் ஒரு முற்போக்குச் சமுதாயத்தை நிர்மாணித்துவிடலாம் என்றும் குறிப்பிட்டார்.

''குறளில் இயல்'' என்பதைப் பற்றி திரு அ. நடேசனார் அவர்களும், ''குறளில் இசை'' என்பது குறித்து மதுரை டாக்டர் திருமதி இராதா தியாகராசன் அவர்களும், ''குறளில் நாடகம்'' என்பது பற்றி திருக்குறளார் வீ.முனிசாமி அவர்களும் உரையாற்றினார்கள்.

**அறிஞர்களுக்கு உதவிகள்**

மாலை நிகழ்ச்சிகளும் சுவை சொட்டும் அளவில் தொடங்கி நடந்தன. காலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மக்கட்பெருங் கூட்டம் மாலை நிகழ்ச்சிகளிலும் அப்படியே அலைபாய்ந்தது.

**பட்டிமன்றத்தில் தமிழ் விருந்து!**

''திருவள்ளுவர் கொள்கையில் நம்மை மிகுதியும் ஈர்ப்பவை அறச் சிந்தனைகளே'' என்ற தலைப்பில் மதுரைப் பேராசிரியர் திரு சோ. சத்தியசீலன், செல்வி ருக்குமணி, திரு ஆ.செகந்நாதன், செல்வி மணிமொழி ஆகியோரும், ''திருவள்ளுவர் கொள்கையில் நம்மை மிகுதியும் ஈர்ப்பவை வாழ்வியற் கோட்பாடுகளே'' என்ற தலைப்பில் திரு அ. வ. இராசகோபாலன், திருமதி உமையாள் முத்து, திரு சுகிசிவம், திரு அ.அறிவொளி ஆகியோரும் பட்டிமன்றத்தில் வெட்டியும் ஒட்டியும் தங்களின் வாதத்திறமைகளைக் காட்டியது நல்ல தமிழ் விருந்தாக இருந்தது.

பட்டிமன்றத்திற்கு நடுவராக இருந்த, தவத்திரு குன்றக்குடி அடிகளார் ''திருவள்ளுவர் கொள்கையில் நம்மை மிகுதியும் ஈர்ப்பவை'' வாழ்வியற் கோட்பாடுகளே என்று தீர்ப்பளித்துப் பட்டிமன்றத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

**தீர்ப்புத் திரட்டு**

அடுத்த நிகழ்ச்சியைத் தமிழக மேலவைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்.

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் ஆதரவில் ''தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா'' ஆகியோரின் புகழைப் பற்றி உளுந்தூர்ப்பேட்டை திரு. சண்முகம் இயற்றிய பாடல் திருச்சி திரு. லோகநாதன் மகன் திரு மகராஜன் அவர்களால் பாடப்பட்டது. இந்த ''இசைத்தட்டு'' வெளியீட்டு விழாவும் இதே நிகழ்ச்சியில் நடந்தது.

அதன்பிறகு "தீர்ப்புத் திரட்டு" ''குற்றவழக்குத் திரட்டு'' என்னும் மாத இதழ்களை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயீல் அவர்கள் வெளியிட்டுப் பேசினார்.

**எங்கும் எதிலும் தமிழ்!**

விழாத்தலைமையேற்ற மேலவைத் தலைவர் பேசுகையில், ''தமிழ் கற்று வயதான காரணத்தால், வாழ முடியாது அவதிப்படுகிறவர்களை வாழவைப்பதை, தமிழக அரசு தனது கடமையாகக் கருதி வருகிறது. 'எங்கும் எதிலும் தமிழ்' என்ற நிலை ஏற்பட மீதி இருக்கும் நீதித்துறையிலும்அது முழுமையாக இடம் பெற வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த நிலை ஏற்பட முதல்வர் அவர்களும், அமைச்சர்களும் முனைந்து பணியாற்றியிருக்கிறார்கள்.



தமிழில் சிறந்த வரைவுகள் எழுதிய அரசுப் பணியாளர்கள்

''தமிழுக்குச் சலுகை என்ற நிலை இல்லாமல் உரிமையுடன் தமிழ் எங்கும் எதிலும் இடம் பெற வேண்டும்'' என்று வற்புறுத்தினார். திருச்சியில் அமைய விருக்கும் பல்கலைக் கழகத்திற்கு 'வள்ளுவர்' பெயரிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

**தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை**

வறுமையில் வாடும் 31 தமிழ் அறிஞர்களுக்கு உதவிடும் பொருட்டு ரூ. 250 வீதம் மாத உதவித் தொகையினை இந்த விழாவிலே வழங்கப்பட்டது, தமிழுக்கு – தமிழ் அறிஞர்களுக்கு மேலும் புகழ் சேர்ப்பது போன்று இருந்தது. இதில் 22 பேர் மட்டும் நேராக வந்து உதவித் தொகை பெற்றனர். வர இயலாதவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்கள்.

இத்திட்டம் துவக்கப்பட்ட போது ரூ. 75 ஆக இருந்தது. அது பிறகு ரூ. 100 ஆயிற்று. இப்போது ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டது.

இந்த உதவித் தொகைகளை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வழங்கினார்.

தமிழில் சிறந்த வரைவுகள் எழுதிய மூவருக்கும் அமைச்சர் பரிசுகளை வழங்கினார். முதல் பரிசு ரூ. 500ஐ திரு. ஜோசப் சேவியர் தவமணி அவர்களும்,

இரண்டாவது பரிசாக ரூ. 300ஐ செல்வி கே. ஏ. மேரி அவர்களும், மூன்றாவது பரிசாக ரூ. 200ஐ திரு ஏ. அய்யண்ணதாஸ் அவர்களும் பெற்றனர்.

''ஜஸ்டிஸ்'' என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு குறித்துப் பல யோசனைகளைத் தெரிவித்த தலைமை நீதிபதி திரு மு. மு. இஸ்மாயீல் அவர்கள், 'நீதி அரசர்', 'தலைமை நீதி அரசர்' என தற்போது மாத வெளியீடுகளில் (ஜஸ்டிஸ் என்பதற்குப் பதிலாக) குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்.

விழாவின் இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் திரு.வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.


தமிழக அரசின் சார்பில் செய்தி - மக்கள் தொடர்புத் துறையினரால் நடத்தப்பெற்ற திருவள்ளுவர் விழா, வள்ளுவர் புகழினை வான்முட்டப் பரப்பிடும் அற்புத நிகழ்ச்சியாக அமைந்திருந்தது!

## முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி

7.10.78ல் நீலகிரி மாவட்டம் கூடலூரில், வருவாய்த்துறை அலுவலகத்தின் முன்னால் தீக்குளித்து மரணமடைந்த பேபி லூயிஸ் என்பவரின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஐந்தாயிரம் வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

1978 டிசம்பரில் பெய்த பெருமழை காரணமாக, சுவர் இடிந்து விழுந்ததில் மதுரை மாவட்டம், விரகனூர் கிராமத்தைச் சேர்ந்த பிச்சை என்பவர் மரணமடைந்தார். அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

# கோழி வளர்ப்பில் புதிய நம்பிக்கை



—டி. பி. எஸ். சுந்தரநாதன்,
மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணைகள் அமைக்க நிதியுதவி மானியத் தொகையுடன் வழங்கப்பட்டு வருகின்றது. மக்களின் ஆர்வம் பெருகி வருகின்ற வகையில் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 30,000 கோழிகளுக்கு மேல் கிராம மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்திலேயே இதுவரை செயல்படத் துவங்காத கோழி வளர்ப்பிற்குப் பாதுகாப்பளிக்கும் ''கோழி இன்சூரன்ஸ் திட்டம்' குமரி மாவட்டத்தில்தான் முதன்முதலாகத் துவக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது கிராம மக்களுக்கு நன்மையூட்டும் திட்டமாகும். இதுவரை கிராம மக்களிடையே நிலவி வந்த கோழி வளர்ப்பைப் பற்றிய அதிக ஈடுபாடின்மையை இத்திட்டம் நீக்கியதோடு மட்டுமல்லாமல், அதிக அளவில் ஆர்வங்காட்டி



கோழிப்பண்ணைகளை அமைத்திட கிராம மக்கள் முன்வரவும் வழிவகுத்துள்ளது.

குமரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோழிகளுக்கு இன்சூரன்ஸ் செய்யும் திட்டம் 1979-ல்தான் துவங்கப்பட்டது. இம் மாவட்டத்தில் இத்திட்டத்திற்கான யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியார் குறைந்த பிரிமியத்தில் கோழிகளுக்கு இன்சூரன்ஸ் செய்கின்றார்கள்.

இக்கோழிகளுக்கான இன்சூரன்ஸ் பாலிசி வழங்குவதற்குச் சில எளிய நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இன்சூரன்ஸ் செய்ய விரும்புபவர்களுக்குக் குறைந்தது ஐம்பது கோழிகள் இருக்க வேண்டும். கால்நடை மருத்துவரிடமிருந்து தடுப்பு ஊசி போட்டிருப்பதற்கும், வயது நிர்ணயத்திற்கும், கோழிகளை அடையாளம் கண்டு பிடிப்பதற்கான வளையங்கள் பொருத்தி இருப்பதற்கும் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அதோடு அதற்குரிய விண்ணப்ப பாரத்தையும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித்திட்டத்தின் கீழ் வாங்கப்படுகின்ற கோழிகளுக்கு பிரிமியத் தொகை குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோழிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 80 காசு மட்டும்தான் பிரிமியமாக வசூலிக்கப்படுகிறது. இத்தகைய கோழிகள் விபத்தினாலோ, நோயினாலோ இறந்துவிட்டால், அதற்கான நட்ட ஈட்டுத் தொகையினை இன்சூரன்ஸ் கம்பெனியார் கால்நடை மருத்துவரின் சான்றிதழ் பெற்று உடன் வழங்குகிறார்கள்.

ஆக, இத்தகைய சிறந்ததொரு ஏற்பாட்டினால் கிராம மக்களிடையே கோழி வளர்ப்பில் புதியநம்பிக்கையும் ஆர்வமும் மலர்ந்துள்ளது. தங்கள் பொருளாதாரமுன்னேற்றத்தில் கோழி வளர்ப்பு சிறப்பான அம்சமாக விளங்கும் என்று கிராம மக்கள் உணரத் துவங்கியுள்ளார்கள். குமரி மாவட்டத்தில் வரும் ஆண்டில் மேலும் 25,000 கோழிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருக்கின்றன.

# தமிழ்நாடு பரிசுச் சீட்டு வழங்கும் மாபெரும் பொங்கல் சிறப்புக்குலுக்கல்!

2 சிறப்பு முதல் பரிசுகள்

ரூ.5,00,000 வீதம்



3 சிறப்பு இரண்டாவது பரிசுகள்
ரூ. 1,00,000 வீதம்
மற்றும் ஆயிரக்-கணக்கான இதர பரிசுகள்!

பொங்கல் சிறப்புக் குலுக்கல் தேதி: 23.2.1980
மொத்த வரிசைகள்: 6
சீட்டின் விலை: ரூ. 2/-



இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.


# காய்கறிகளும் அவற்றின் சத்துக்களும்



கே. இராமச்சந்திரன்,
மாவட்ட வேளாண்மை அலுவலர்,
செய்பாறு.

நாம் வலிவுடனும், வளத்துடனும் வாழவும், நாட்டில் வளம் பெருகவும் நம் உணவில் காய்கறிகளின் பங்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில் காய்கறிகள் நமக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை அளிப்பதுடன், நம்மைத் தாக்கவல்ல நோய்களைத் தடுக்கவல்ல காப்பு உணவாகவும்( Protuctive Food) விளங்குகிறது. எனவேதான் அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை ஊட்டச் சத்துணவு அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள்.

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின்படி வயதுவந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் 285 கிராம் (10 அவுன்ஸ்) காய்கறிகளை உட்கொள்ள வேண்டுமென்றும், அதில் 115 கிராம் (4 அவுன்ஸ்) இலைவகைக் காய்கறிகளாகவும், ( Leafy Vegetables ) 85 கிராம் (3 அவுன்ஸ்) கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளாகவும், 85 கிராம் (3 அவுன்ஸ்) விதை மற்றும் பழவகைக் காய்கறிகளாகவும்(Seeds and Fruit Vegetables) அமைந்திருக்கவேண்டும். ஆனால், தற்பொழுது நாம் உட்கொள்ளும் சராசரி காய்கறிகளின் மொத்த அளவும் 100 கிராம். இது மிகவும் குறைந்த அளவேயாகும். குறிப்பிட்ட அளவு காய்கறிக்ளை உணவில் சேர்த்துக் கொள்ள முடியாததற்குக் காரணம், மொத்த காய்கறிகளின் உற்பத்தி மிகக் குறைவேயாகும். அவைகளின் விலையும் அதிகமாக உள்ளன. சத்துணவு பற்றித் தெரியாமலிருப்பதுவும், நமது உணவுப் பழக்கமும் இந்தக் குறைபாட்டிற்குக் காரணங்களாகும்.

## காய்கறிகளை ஏன் உண்ண வேண்டும் ?

1. காய்கறிகள் புரதச்சத்து (புரோட்டின்), மாவுப்பொருள்கள் (கார்போஹைடிரேட்) தாது உப்புகள் (மினரல் சால்ட்),உயிர்ச் சத்துக்கள் ( வைட்டமின்கள் ) ஆகிய சத்துக்களை நமக்குக் கொடுக்கின்றன.

2. உணவில் சுவை ஏற்படுத்துகின்றன.

3. நமக்குத் தேவையான எல்லாச் சக்திகளையும் அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

4. நம் உடலுறுப்புகள் வலுவடையவும், நாம் ஊக்கத்துடன் பணிகளில் ஈடுபடவும் உதவுகின்றன.

5. நமக்கு வலிமை மட்டுமல்லாது, வனப்பையும் தருகின்றன.

நம் உடலில் சுமார் 30 தாது உப்புக்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை கால்சியம், பாஸ்பரம், பொட்டாசியம்,சோடியம், மக்னீசியம், இரும்பு, செம்பு, அயோடின், துத்தநாகம் முதலியன.

கால்சியமும், பாஸ்பரசும் சேர்ந்து ..லும்பு, பல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியளிக்கின்றன. கால்சியம் இரத்தம் கட்டுவதற்கும், தசைமடங்குவதற்கும், இருதயத் துடிப்பிற்கும், உடல் வளர்ச்சிக்கும் அவசியம். இரத்தத்தின் செந்நிறத்திற்கு இரும்பு மிகவும் தேவை. பொதுவாக உயிர்ச்சத்துக்கள் தாது உப்புக்கள், கண் பாதுகாப்பிற்கும், பல், எலும்புகளின் உறுதிக்கும், உடல் வளர்ச்சிக்கும், நோய் அணுக்களைத் தடுப்பதற்கும், ஆரோக்கியமாக இருப்பதற்கும்அவசியம். காய்கறிகளினால் நமக்குக் கிடைக்கும் பயன்கள்:

1. ஒளிமிகுந்த கண்கள்
2. உறுதியான பற்கள்.
3. வலுவுள்ள எலும்புகள்
4. பளபளப்பான மேனி
5. இரத்த விருத்தி
6. உடல்வலிமை
7. நோய் எதிர்ப்புச் சக்தி
8. ஆரோக்கியமான வாழ்வு
9. நீடித்த ஆயுள்.

நம் உடலில் உயிர்ச்சத்துக்கள் குறைவதனால் ஏற்படும் போஷாக்கு. குறை நோய்களும், அவைகளை நிவர்த்திக்கும் முறைகளும் பற்றி அறிந்து கொள்வோம்.

உதாரணம்: உயிர்ச்சத்து'ஏ' குறைவின் காரணமாக மாலைக் கண், கண் பார்வை மங்கல், புள்ளிவிழுதல், கண் கருவிழிகள் கெட்டுப் போகும். அவை முற்றி குருடு ஏற்படக்கூடிய (Aeroto magacia) என்ற நிலையும் ஏற்படும். இந்நோய்கள் வராமல் தடுக்க 'ஏ' சத்து நிறைந்துள்ள கீரைவகைகள்,பொதினா, தண்டுக்கீரை, கறிவேப்பிலை, காரட், பூசணி, பப்பாளி போன்ற மஞ்சள் நிறக் காய்கறி, பழங்களை தினசரி உபயோகித்து வந்தால் போதும்.

## உயிர்ச்சத்து 'சி'

இதன் குறைவினால் நோய் எதிர்ப்புச் சக்தி குறைகிறது. தோல் சொர சொரப்பாக உள்ளது. பல் ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். இத்தகைய குறையை நீக்க 'சி' சத்து நிறைந்துள்ள நெல்லிக்காய் ஆரஞ்சு, எலுமிச்சை முதலியன சேர்க்கவும். இரத்தப் பெருக்கத்தைத் தடுக்கவும் உயிர்ச் சத்துக்களைப் பெற பச்சைக் காய்கள், கீரைகள் உபயோகிக்கவும். இரத்தச் சோகை என்னும் (Anemia) இரும்பு ஊட்டக்குறைவு எல்லா வயதினரையும் பாதிக்கும். பசுமையான கீரைகளில் இச்சத்து அதிகம். இவைகளை தினசரி உட்கொண்டால் இக் குறையைப் போக்கலாம்.

கால்சியம், பாஸ்பரசு குறைந்தால் எலும்புகள் வளைந்தும்,

பல் சொத்தையாகியும் விடும். வளரும் குழந்தைகளின் கால்கள் வளைந்து ஒன்றுக்கொன்று தட்டி நிற்க முடியாமல், நடக்க முடியாமல்போகின்றன. இதற்குக் கீரை .சேர்த்துக் கொள்ளலாம்.

இலை வகைக் காய்கறிகளாக தண்டுக்கீரை, அகத்திக்கீரை, முட்டைக்கோசு, முருங்கை இலை, ஸ்பைனாஸ் சிறந்த பாதுகாப்பு உணவாகும். ஏனெனில் அவைகளில் சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து ஆகியவை அடங்கியதாது உப்புகளும், வைட்டமின்களும் நிறைந்துள்ளன.

விதை வகைக் காய்கறிகளான (Seeds Vegetables) பீன்சு,



பட்டாணி, விதைகள் போன்றவை வயிறு நிரப்புவதற்கான திடப்பொருள்களையும், புரதச் சத்து, உயிர்ச்சத்துக்கள் ஆகியவைகளையும் கொடுக்கின்றன.

பழவகைக் காய்கறிகள் (Fruits Vegetables) தக்காளி, பலாக்காய், வாழைக்காய், முருங்கைக்காய், கத்தரி, வெண்டை, பூசணி, போன்றவை சிறந்த சத்துக்களைக் கொண்டுள்ளன. தக்காளியில் உயிர்ச்சத்து, 'சி'யும், முருங்கைக்காயில் சுண்ணாம்புச் சத்தும், உயிர்ச்சத்தும் 'சி' யும் நிறைய உள்ளன. பறங்கிக்காயில் உயிர்ச்சத்து 'ஏ' பெருமளவில் உள்ளது.

### கிழங்கு, வேர்வகைக் காய்கறிகள்

உருளைக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, கேரட்; பீட்ரூட், முள்ளங்கி, டர்னிப் போன்றவற்றில் மாவுப்பொருட்களும் உயிர்ச்சத்து 'சி'யும் உள்ளன. சர்க்கரை வள்ளி, கேரட் உயிர்ச் சத்து 'ஏ'யைக் கொடுக்கின்றன. இவ்வகைக் காய்கறிகள் உடலுக்குத் தேவையான மாவுப்பொருட்களைக் கொடுப்பதால் நமது உணவில் தானியங்களுக்குப் பதிலாக இவைகளைப் பயன்படுத்தி தானியங்களில் ஒரு பகுதியைக் குறைத்து மீதப்படுத்தலாம்.

கொல்லைப்புறத்தில் அன்றாடம் கீரை கிடைக்கிற வகையில் ஒரு முருங்கை மரம், அகத்தி மரம், பசலி, தவசிக்கீரை, இவைகளும், காய்கறிகள், பப்பாளி, எலுமிச்சை, நெல்லி, கொய்யா போன்ற பழமரங்கள் வைத்துப் பயிர் செய்தால் எல்லாவிதக் காய்கறிகள், கீரை, பழங்கள் அன்றாடம் தவறாமல் கிடைக்கும். கீரைத் தோட்டத்தைத் தமது 'மருந்துப்பெட்டி' என்று டால்ஸ்டாய் கூறியுள்ளார்.

பால் சாப்பிடுவதால் என்ன நன்மை ஏற்படுகிறதோ, அதே சத்துக்களைப் பச்சைக்கீரைகள் அளித்துவிடும் என்று பிரபல ஆங்கில டாக்டர் ஒருவர் காந்தியடிகளிடம் குறிப்பிட்டுள்ளார். கீரைகளில் மருத்துவக் குணங்களும் அடங்கியிருப்பதால்தான், பச்சிலை மூலிகைகளாக நோய்க்குப் பயன்படுத்துகிறார்கள் மருத்துவர்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த உணவுப்பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்வதால் நீடித்த ஆயுளும், ஆரோக்கியமும் கிடைக்கும்.

நாம் தினசரி உண்ணும் காய்கறிகள் அளவில் குறைத்து மட்டுமல்ல, அவைகளைச் சமைக்கும் பொழுதும் தெரிந்தோ, தெரியாமலோ அவைகளின் சத்துக்களை வீணாக்கிவிடுகிறோம். சத்துக் கெடாமல், சிறந்த முறையில் காய்கறி சமைக்கத் தெரிந்து கொள்ளவேண்டும்.

1. காய்கறிகளை அவ்வப்போது பறித்து, பறித்தவுடன் உபயோகிப்பது நல்லது. காய்கறிகள் வாடும்போது உயிர்ச்சத்து 'சி'யை இழந்து விடுகின்றன.

2. காய்கறிகளை வெட்டும் முன்னால் கழுவுவது அவசியம். அவைகளை வெட்டி தண்ணீரில் போட்டு அதன் பின்னர் சமைக்கும்பொழுது அவை குன்றி சத்துக்கள் குறைந்து விடுகின்றன.

3. காய்கறிகளின் மேல் தோலை ஆழமாகச் சீவாமல் லேசாகச் சுரண்டி எடுக்கலாம். ஏனெனில் தோலிலும், தோலுக்கடியிலும் உயிர்ச் சத்துக்கள் இருக்கின்றன. கிழங்கு வகைகளையும் வேக வைத்தபின் தோலை உரித்து விடலாம். சில காய்கறிகளின் மேல் பாகத்தை வேறு பதார்த்தங்களாகச் சமைக்கலாம் (பீர்க்கங்காய், பூசணிக்காய்).

4. பெரிய துண்டுகளாக வெட்டினால் சத்துக்கள் அதிகம் அழியாமலிருக்கும்.


5. நீரை முதலில் கொதிக்க வைத்து பிறகு கொதி நீரில் காய்கறிகளை வேகவிடுவது நல்லது. மசாலாவைச் சேர்த்துக் குழம்பாகக் கூட்டிக் கொதித்தவுடன் காய்கறிகளைச் சேர்க்கலாம்.

6. காய்கறி, கீரை இவைகளின் வேகவைத்த நீரை இறுத்து வீணாக்காமல் அளவோடு தண்ணீர் விட்டு மூடி வேகவைக்க வேண்டும். பொறியல், அவியல் முதலிய பதார்த்தங்கள் செய்யும்போது தண்ணீர் கூடிப் போனால் அந்தத் தண்ணீரை வீணாக்காமல் சாம்பார், ரசத்துடன் சேர்த்துக் கொள்ளலாம்.

7. காய்கறிகளை அதிகமாக வேகவிடாமல், சரியான பக்குவத்தில சமைத்து உபயோகிக்கவும்.

8. கீரைகளை முழுவதும் மூடிவிடாமல், குறைந்த அளவில் ஒரு பகுதி மூடி வேக வைத்தல் நலம்.

9. காய்கறிகளைப் பச்சையாக தயிர், எலுமிச்சம்பழம் சேர்த்து பச்சடி செய்து சாப்பிடலாம். வெண்டைக்காய், காரட், தக்காளி, மாங்காய், வெங்காயம், மல்லித்தழை, புதினா, கருவேப்பிலை போன்றவை சட்னி துவையல் செய்து சாப்பிடலாம்.







# மக்கள் நண்பன்
## மாவட்ட தொழில் மையம்

ஒரு நாட்டின் முதுகெலும்பாய் இருப்பது தொழிலாகும். அந்தத் தொழில், வளம் பெற்றுத் திகழ்ந்தால்தான் - தொழில்வளம் பெருகினால்தான் அந்நாடு பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும்.

தொழில் வளம், பொருளாதாரம் இதனை அடிப்படையாய்க் கொண்டே ஒரு நாட்டின் மதிப்பும், முன்னேற்றமும் உயர்கிறது.

'சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்?' என்பார்கள். அதைப்போல தொழில் என்று ஒன்று இருந்தால்தான் குடும்பம் செழிக்கும்; அதன் மூலம் ஒரு சமுதாயமே வளம் கொழிக்கும்.

அந்த வகையில் பல்வேறு தொழில்கள் வளரவும், அதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகவும் அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது. அவற்றுள் ஒன்றுதான், 'மாவட்டத் தொழில் மையம்.'

### தொழில் வளர்ந்திட....

தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கிடும் வகையில் இந்த மையங்கள் அமைக்கப்படுகின்றன. மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாட்டில் மாவட்டத் தொழில் மையங்கள் செயல்வடிவம் பெற்று வருகின்றன. 1977-ஆம் ஆண்டு டிசம்பரில் மத்திய அரசின் சார்பாகத் தொழில் கொள்கையின் விளைவாக மாவட்டத் தொழில் மையங்கள் உருவாயின. மாநகரங்களுக்கு வெளியே குறிப்பாகச் சிறிய குடிசை மற்றும் கிராமக் கைத்தொழில்களை அமைப்பதை ஊக்குவிக்கும் நோக்கோடு மாவட்டத் தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### எங்கெங்கு உள்ளன?

இந்த நல்ல திட்டம், 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செங்கல்பட்டு, தருமபுரி, இராமநாதபுரம், சேலம், திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. 1978 ஆகஸ்டுத் திங்கள் முதல் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தென்னார்க்காடு மாவட்டங்களில் இவை இயங்கி வருகின்றன.

1979 செப்டம்பர் திங்கள் முதல் பெரியார் மாவட்டத்தில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. 1979 அக்டோபர் திங்கள் முதலாக சென்னை மாவட்டம் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் இவை செயல்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத் தொழில் மையத்தை, தற்காலிகமாக கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் ஏற்கும்.

### முக்கிய அம்சங்கள்

இந்தத் தொழில் மையங்கள் திட்டமிட்ட முறையில் செயல்பட்டு வருகின்றன.

பகுதி வாரியாக ஆய்வு செய்தல்.

வளர்ச்சிக்குள்ள வாய்ப்பினைக் கண்டறிதல்.

வாய்ப்புள்ள தொழில்களுக்குரிய திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல்.

தொழில் [illegible] ஊக்குவிப்பு முகாம்கள் நடத்துதல்.

தகுதி வாய்ந்த தொழில் முனைவர்களை நிர்ணயித்தல்.

உற்பத்தி [illegible] தேவையான உதவிகளை வழங்குதல்.

MADRAS-600 013

இவை, தொழில் மையங்கள் மேற்கொள்ளும் திட்டங்களில் முக்கியமான அம்சங்களாகும்.

### கைவினைஞருக்கு நிதி உதவி!

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற நாமக்கல் கவிஞரின் வாக்கிற்கிணங்க, கைத்தொழில் ஒன்று தெரிந்திருந்தும் வசதி இன்மையால் ஏங்கித்தவிக்கிறார் ஒரு இளைஞர். முன்னேறத் துடிக்கும் அவருக்கு இத்தொழில் மையம் ஏதேனும் உதவி செய்யுமா?

நிச்சயமாகச் செய்யும். வசதி இல்லாத—கைத்திறன் இருந்தும் முன்னேற முடியாத அத்தகைய கைவினைஞர்களுக்கு நிதியுதவி பெற்றுத் தருகிறது, தொழில் மையம்.

அதுமட்டுமா? சொந்தக்காலில் நின்று—சுயவேலை வாய்ப்புப் பெற்றுள்ள திறமையானவர்களுக்குக் கூட, இம்மையம் நிதி உதவி பெற வழிகாட்டுகிறது.

### கனவு நனவாகுமா?

ஒருவன் ஏதாவதொரு தொழிலில் திறம் பெற்று விளங்குவான். ஆனால், அவனை வறுமை தழுவிக் கொண்டிருக்கும். அவன் கரையேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பான். சமுதாயத்தில் மற்றவர்களைப் போலத் தாமும் வாழவேண்டும் - உயர வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருப்பான். அவனது கனவு நனவு ஆகுமா?

மாவட்டத் தொழில் மையம், அதற்கு வழி வகை செய்கிறது.

நலிவுற்ற அந்த ஏழை எளிய கைவினைஞர்களின் கனவு நனவாகும் வகையில், நியாயமான வட்டி விதங்களில், போதுமான நிதி உதவி பெற்றுத் தந்து உதவுகிறது. அதன் மூலம் இடைத்தரகர்களின் இடையூறுகளிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை கிடைக்கிறது. அது மட்டுமல்ல, உழைப்புக்கேற்ற வருவாயும் கிடைக்கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

### பல்வேறு வசதிகள்

உரிமங்கள் (லைசென்ஸ்) கிடைப்பதற்குக்கூட மாவட்டங்களிலேயே கிடைப்பதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான அதிகாரங்கள் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல, துரிதமாக மின் இணைப்புக் கிடைக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மின்வாரியத்தில் கோட்டப் பொறியாளர்க்கு இரண்டு இலட்ச ரூபாய் வரை பெறுமானமுள்ள இணைப்பு வேலைகளுக்கு ஒப்புதல் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்புகள்

தளர்ந்த நிலையில் உள்ள 196 தொழில்கள் தழைத்திடும் வண்ணம் கடந்த ஆண்டு ஆகஸ்டு 31 ஆம் நாள் வரை 55 தொழில்கள் இலாபகரமான வகையில் செயல்பட வழி வகுக்கப்பட்டுள்ளன.

மாவட்டங்களில் தொழில் மையங்கள் ஏற்பட்டுள்ளதால், முதல் எட்டு மாவட்டங்களில், கடந்த ஆண்டு செப்டம்பர் வரை சுமார் 3000 சிறுதொழில்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் 35,000 பேர்.

### சேலம் மாவட்டத்தில்....

புதிய தொழில் பிரிவுகளைத் துவக்குவதற்கு முன்பும், ஏற்கெனவே இருக்கிற தொழில் பிரிவுகளை வளரச்செய்யும் முன்பும் இவற்றின் வளர்ச்சி குறித்த சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்வதற்காகத் தொழில் நுட்ப, பொருளாதார ஆராய்ச்சி நடத்துவது மிக்க அவசியமாகிறது.

இந்த நோக்கத்தோடு, மாநில தொழில்துறையின் யோசனையின் பேரில், சேலம் மாவட்டத்தில், புதிதாகத் தொழில்நுட்ப, பொருளாதார ஆராய்ச்சியினைச் சென்னை சிறுதொழில்கள் பணிக் கழகம் மேற்கொண்டது. அந்தக் கழகத்தின் அலுவலர்கள் அடங்கிய குழுவொன்றும், இந்தியன் வங்கியும் மற்றும் மாவட்டத் தொழில் மையமும் இந்த ஆராய்ச்சியை நடத்தின.

### தொழில் மயமாக....

பொறியியல், இரசாயனம், உணவு, தோல், பனியன் மற்றும் பலவகைப்பட்ட தொழில்களைத் துவக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கத்தில்) காவிரி ஆற்றின் கரையிலுள்ள அம்மா மண்டபத்தை சீரமைக்க அரசு முடிவு

திருச்சி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கத்தில் (திருவரங்கத்தில்) காவிரி ஆற்றின் கரையில் குளிப்பதற்கு இருக்கும் அம்மா மண்டபம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இருப்பினும் தற்போது இதில் போதிய வசதிகள் இல்லை. எனவே இந்த அம்மா மண்டபத்தை சீரமைத்து, இதில் இரவு காலங்களில் வருகின்றவர்களும், காவிரி ஆற்றில் குளிப்பதற்காக வசதியாக விளக்கு வசதியும் உடைமாற்றும் அறை வசதி மற்றும், ஆண், பெண் தனித்தனியே நின்று பாதுகாப்பாகக் குளிப்பதற்குத் தகுந்த தடுப்பும் இம் மண்டபத்தில் அமைக்கப்படும்.

இதற்காக திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) நகராட்சிக்கு அரசு ரூ. 3 இலட்சம் அனுமதித்துள்ளது.

சேலம், மேட்டூர், ஆத்தூர் போன்ற நகரங்களின் சுற்றுப்புறங்களில் ஏற்கெனவே சில தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, வருங்காலத்தில் கிராமப்பகுதிகளிலும் தொழில் மயமாக்கும் திட்டங்களை வகுக்க மிகுந்த முயற்சி எடுத்துக் கொள்வது அவசியமென்றும் அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. விசை அல்லது சக்தி தவிர, தொழில் வளர்ச்சிக்கு மற்றபடி போதுமான வசதிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தோல் பதனிடும் தொழில், காகித — வைக்கோல் அட்டை (Straw Board) போன்ற தொழில்களுக்குத் தண்ணீர் பெருமளவு தேவைப்படுகிறது என்பதும், இது ஒரு கட்டுப்பாடாக இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மலைச் சாதியினர் வாழும் கொல்லிமலைப் பகுதியில் பட்டுப் பூச்சி வளர்த்தல், கால்நடை வளர்ச்சி போன்ற தொழில்களுக்கும், தேங்காய் நாரிலிருந்து கயிறு திரிக்கும் தொழில்களுக்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பாய்முடைவோருக்கான கூட்டுறவுச் சங்கம் அமைப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இறைச்சியைப் பக்குவப்படுத்தி அனுப்பும் தொழில்களைத் தொடங்குவதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### தோல் பதனிடும் தொழில்

சுமார் 1.8 முதல் 2 இலட்சம் தோல் துண்டுகளைப் பதனிடுவதன் சாத்தியக்கூறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 6 சிறிய தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் முக்கியமாக திருச்செங்கோடு, முள்ளுக்குறிச்சி ஆகிய இடங்களில் தோல் பதனிடும் தொழில்சாலைகளை மேலும் அமைத்திட இக்குழு பரிந்துரை செய்துள்ளது. சேலத்திலும், ஓமலூரிலும் காலணி உற்பத்தித் தொழிற்கூடம் ஒன்றை ஆரம்பிக்கும் திட்டமும் உள்ளது.

மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம் சென்னையில் உள்ளது. இங்குப் பொருளாதாரப் பிரிவு ஒன்றும் செயல்படுகிறது. தொழில்நுட்ப — பொருளாதார ஆராய்ச்சி அறிக்கைகளை நிபுணர்கள் வெளியிட்டு வருகிறார்கள். தோல் பதனிடுதல், காலணிகள் தயாரித்தல், தோல் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்திக்குத் தொழிற்கூடங்களை ( Units ) அமைப்பதன் வழி முறைகள் குறித்தும் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு, சிறு தொழில்கள் சிறந்த முறையில் வளரவும், அதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகவும், அதே சமயத்தில் பொருளாதாரச் செழிப்புக்கு வழி வகுக்கவும் இந்த மாவட்டத் தொழில் மையங்கள் மக்களுக்கு உற்ற தோழனாய் இருந்து உதவி வருகின்றது.

—பி. வி. கிரி





# கூட்டுறவு இயக்கப்பணிகள்

"சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உதவி புரிவது நமது முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். கூட்டுறவு அணுகுமுறை அதற்கு உறுதுணை புரிகிறது. அல்லது அந்த வகையில் உதவ வேண்டும்'' - என்றார் நேரு அவர்கள்.

நலிந்த பிரிவினர் நலம் பெற, கூட்டுறவுமுறை எந்த அளவுக்கு உதவி புரிவதாக இருக்கிறது என்பதனை விளக்க இதுவே போதுமானதாகும்.

கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களானாலும், நகர்ப்புற வளர்ச்சிப் பணிகளானாலும் கூட்டுறவுச் சங்கங்களே உயிரோட்டமாக இருப்பதைப் பார்க்கிறோம். இதனால் தான் நாட்டுயர்வுக்குக் கூட்டுறவு முறை செயல்படுத்தப்படுகிறது.

12 ஆயிரம் கிராமங்களிலும், 50 ஆயிரத்திற்கும் மேலான சிற்றூர், பேரூர்களிலும் கால் ஊன்றியுள்ள இந்தக் கூட்டுறவு இயக்கம் கிராமப்புற சமூக பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளிலே மட்டுமல்ல; கூட்டுறவு அமைப்பு இன்னும் இவ்வாறான பல்வேறு ஆக்கப் பணிகளிலும் அங்கம் வகிப்பதாக இருக்கிறது.

### மலைவாழ் மக்கள் நலம்

மலைவாழ் மக்கள் நலன்காக்க கூட்டுறவு அமைப்பு சிறப்புறப் பணியாற்றிவருகிறது.

நலிவுற்றோர் என்பார் மலைவாழ் மக்களிலும் உண்டல்லவா?

எனவே, மலைவாழ் பகுதியினரில் மிகவும் பின்னடைந்தோரை மேம்படுத்துவதற்காக ஒன்பது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

இச்சங்கங்கள் மூலம் மலைவாழுநர் நான்கு சதவிகித வட்டியில்லாக் கடன் சலுகை பெறுகின்றனர். மீதமுள்ள வட்டித் தொகையை அரசு மானியமாக வழங்குகிறது.

வேளாண்மைக்கான கடன்கள் தவிர துணைத் தொழில்களுக்காகவும், நுகர்வுத் தேவைகளுக்காகவும், நடுத்தர காலக் கடன்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 'லாம்ப்ஸ்' (Lamps) சங்கங்கள் மூலமாக அவர்களுக்கு நுகர்பொருட்களும் அளித்து ஆதரவு காட்டப்படுகிறது.

இச்சங்கங்களுக்குச் சேமிப்பு, அதற்கான போக்குவரத்துவசதி ஆகியவைகளை அரசே செய்து கொடுத்து மலைவாழ் மக்களில் நலிவுற்றிருப்போரின் நல்வாழ்வுக்கு உதவுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக, மாணவ சமுதாயத்திற்கான பாடப்புத்தக விநியோகத்தைக் கூட்டுறவு நிறுவனங்களே தனிப்பட்ட முறையில் கவனித்து வருகின்றன.

பாடநூல்களை விரைந்து விநியோகிக்கவும், கூட்டுறவுத் துறையிலே மாணவ - மாணவிகளை ஈடுபாடு கொள்ளச் செய்திடவும் சென்ற ஆண்டில் மட்டும் இரண்டாயிரம் மேல்நிலைப் பள்ளிகளிலே மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இன்னும் கூட்டுறவு அமைப்புகள் இவ்வகையிலே ஏற்றம் பெற இது ஒரு நல்ல ஏற்பாடாக விளங்கும்.

கூட்டுறவு வாழ்க்கை முறை குறித்து, முதியோருக்கு அளிக்கப்படுகிற கல்வி எவ்வளவு முக்கியமானதோ - அந்த அளவில் இளைஞர்களுக்கு அளிக்கப்படுகிற கூட்டுறவுக் கல்வியும் இன்றியமையாதது என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இத்திட்டம் தமிழகத்தில் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டது.

தனிப்பட்ட வியாபாரி மூலம் ஏற்படும் ஒழுங்கீனமான விற்



பனை முறைகளை நிவர்த்திக்க என்றே கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது.

விளை பொருட்களின் விற்பனை; தொகையில் அவசியமற்ற இடைத்தரகு; எடைக் குறைவு; இவற்றால் நேரும் வருமானக் குறைவு ஆகிய அபாயங்களிலிருந்து விளைபொருட்களை விற்பனை செய்வோரை இந்த விற்பனைச் சங்கங்கள் காப்பாற்றுகின்றன.

விற்பனைச் சங்கங்கள், விளை பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதன் மூலம் விலை மிகவும் இறங்கிடும்போது தங்களுடைய சேமிப்புக் கிடங்குகளில் அப் பொருட்களைச் சேமித்து, நல்ல விலைவரும் போதோ, அல்லது வெளிமாநிலங்களில் தேவை ஏற்படும்போதோ அவற்றை விற்று உணவுப் பொருள் உற்பத்தியாளருக்கு உறுதுணையாக இருக்கிறது.

விளைபொருட்களை வாங்குவதற்கும், கிராமப்புறங்களிலிருந்து கொண்டுவர வசதி செய்து தந்தும், தரம் பிரித்தும், ஒன்று சேர்த்தும் - பகிரங்க ஏல விற்பனை செய்வதன் மூலமும் அல்லது நேராகக் கொள்முதல் செய்வதன் மூலமும் இச்சங்கம் பேருதவி புரிகிறது.

விளைபொருட்களைக் கெடாமல் பாதுகாத்து வைத்து விற்பனை செய்யவும்கூட விற்பனைச் சங்கங்கள் உதவுகின்றன. நல்ல விலை வரும்வரை, விளைபொருளைக் குறைந்த வாடகையில் பாதுகாத்து வைத்திடவும், இச்சங்கம் குறைந்த வட்டியின்மேல் முன்பணமும் கொடுத்து வருகின்றது.

விளைபொருட்களை நேரடிக் கொள்முதல் செய்வதன் மூலம் ஏற்படும் பணவீக்கத்தைத் தடுப்பதற்காக, அரசு இத்தகைய சங்கங்களுக்குச் சிறப்பு விலை ஏற்றத் தாழ்வு நிதிக்குப் பெரும் பொருளுதவி செய்துள்ளது. ஆகவே, பொருட்களை அதிக விலைக்கு விற்பதன் மூலம்கிடைக்கும் இலாபத்தினைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் விளை பொருள் உற்பத்தியாளருக்கே தந்துவிடுகின்றது!

கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியில், இந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் வகித்திடும் பங்கு மகத்தானதாகும்.


## நுகர்பொருள் விநியோகம்


கிராம விவசாயிகளுக்கு மட்டுமே கூட்டுறவு அமைப்புகள் பயன்படுவதில்லை. கிராம மக்களுக்கு வேறுபல வகைகளிலும் இவ்வகை அமைப்புகள் துணை செய்கின்றன. அவற்றில் ஒன்று கிராம நுகர்பொருள் விநியோகம்.

ஏழை, நடுத்தர, கிராம மக்கள்-நகரத்தில் பெறும் அத்தனைப் பொருட்களையும் கிராமத்திலேயே பெற்றுக் கொள்ள வகை செய்வதே இத்திட்டம். கொள்முதல், போக்குவரத்து, சேமிப்பு, விநியோகம் முதலான நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

சமூக நலனைக் குறிக்கோளாகக்கொண்ட இந்த நுகர்பொருள் விநியோகம், மொத்தச் செலவுகளைக் குறைத்து மக்களுக்கு திருப்தியையும், முடிந்த அளவு கூடுதல் நன்மைகளையும் வழங்கிட முயற்சித்து வருகிறது.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட தேசியக் கூட்டுறவுக் கொள்கைத் தீர்மானங்களின் கீழ், நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் விரிவாக்கம் பெறுகின்றன. தரமான பொருட்களைத் தங்கு தடையின்றிக் கிராமங்களிலும், நாட்டின் மூலை முடுக்குகளிலும் உள்ள ஏழை எளிய மக்களுக்குச் சிறு விற்பனைப் பிரிவுகளை அமைத்து அவற்றின் மூலம் வழங்





குவதற்காக வகைசெய்யப்பட்டுள்ளன.

நுகர் பொருட்களின் விநியோகத்தைக் கிராமங்களில் சிறப்புறச் செயல்படுத்துவதற்கு இரண்டாயிரமோ, அதற்கு மேலோ மக்கட்தொகைகொண்ட ஒரு கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றைப் பெரும்பாலும் கூட்டுறவுகளோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களோ நடத்தும். இக்கொள்கையின் தொடர் நடவடிக்கையாக நுகர்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுகள் நீங்கலாக அடுத்த சில ஆண்டுகளில் கிராம அளவிலான சங்கங்கள் 30 ஆயிரம் திறக்கப்படவிருக்கின்றன. இவை மக்களுக்குத் தேவையான அவசியப் பொருட்களை விநியோகிக்கும்.

இச் சங்கங்களின் பொருட்தேவையைக் கருத்தில் கொண்டு மாநில அரசுகள் இந்தச் சங்கங்களில் பங்கு முதலீடு செய்து அவை நன்கு பணியாற்றிட மத்திய அரசு நிதியுதவி வழங்கும்.

### கடனும் வசூலும்

கூட்டுறவுத்துறை வங்கிகள் வழங்கும் கடன்கள் பற்றியும் இங்கே நாம் குறிப்பிட்டாக வேண்டும். மாவட்ட மத்திய வங்கிகள் தாங்கள் பொதுமக்களிடமிருந்து பெறுகின்ற இட்டு வைப்புகளில் இருந்தும், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறுகின்ற கடன்தொகை மூலமும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்குகின்றன. மாநிலக் கூட்டுறவு வங்கி, ரிசர்வ் வங்கியிலிருந்து பெறுகிற கடனோடு, பொதுமக்களிடமிருந்து பெற்றுள்ள இட்டுவைப்புக்களையும் சேர்த்து மத்திய வங்கிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

சராசரியாகப் பார்க்கும்போது விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் பயிர்ச் சாகுபடிக் கடனில் 50 சதவீதத்திற்கும் குறைவாக ரிசர்வ் வங்கியிலிருந்து கிடைக்கிறது. மற்றப் பகுதி விவசாய உறுப்பினர்களின்பங்குத்தொகை, இட்டு வைப்புகள், மத்திய வங்கிகள், மாநில வங்கிகள் ஆகியவற்றிலுள்ள இட்டு வைப்புகளைக் கொண்டு அளிக்கப்படுவதாலும், மற்ற எந்த வங்கியையும் போலத் தான் கிராமக்கூட்டுறவுச் சங்கமும் இயங்குகிறது.

தான், உயர்நிலை வங்கியிலிருந்து பெற்ற கடனை உரிய காலத்தில்அது திருப்பிச் செலுத்த வேண்டும். உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் கடன்களை உரிய காலத்தில் வசூலித்துத்தான் தன்னுடைய நாணயத்தை அது காப்பாற்றிக் கொள்ள முடியும். இதே நிலைமைதான் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிக்கும் உள்ளது.

கடன் வசூலில் ஓரளவுக்குச் சுணக்கம் ஏற்பட்டால், இவை தங்கள் சொந்த நிதியைக் கொண்டு தாங்கிக் கொள்ளமுடியும். பெருத்த அளவிற்குச் சுணக்கம் ஏற்பட்டால், மேல்நிலை வங்கிகளுக்குக் கடனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் போய் மேற்கொண்டு கடன் பெற்ற விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் சக்தி இல்லாத நிலை ஏற்பட்டு விடும்.

இதனால் தான் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச்செலுத்த வேண்டுமென்பது அவசியமாகிறது.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் விளைச்சல் குறைந்துவிட்டால், அந்தப் பயிருக்காகப் பெற்ற குறுகிய காலக் கடனை அடுத்த மூன்றாண்டுகளில் திருப்பிச் செலுத்தும் மத்தியகாலக் கடனாக மாற்றும் வசதி ரிசர்வ் வங்கியின் உதவியுடன் அளிக்கப்படுகிறது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் விளைச்சல் பாதிக்கப்பட்டால், மேற்படி கடன் 5 ஆண்டுக் கடனாக மாற்றப்படுவதோடு இரண்டாவது பெற்ற குறுகிய காலக் கடனும் மூன்றாண்டுக் கடனாக மாற்றப் படுகிறது.

சென்ற சில ஆண்டுகளில் இவ்விதம் இயற்கைச் சீற்றத்தினால் தமிழ்நாட்டில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு, மேற்கண்ட வகையில் குறுகிய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த வசதியிருந்தும், தவணை தவறிய கடன்களில் நிலுவை அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளது.

விவசாயிகளின் சில பிரச்னைகளுக்குத் தீர்வு காண அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு விவசாயிகளின் கடன் பிரச்னையையும் பரிசீலித்துச் சில பரிந்துரைகள் செய்தது. இந்தப் பரிந்துரைகளைப் பரிசீலித்த தமிழக அரசு ஏறக்குறைய 27 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுச் சங்கக் கடன் பெற்ற உறுப்பினர்களுக்கு மானியம் அளித்துள்ளது.

### பெருமை காப்போம்

இந்தியக் கூட்டுறவு இயக்கம் 75வது வயதில் பீடுநடைபோடுகிறது. அந்த இயக்கத்தின் துவக்கமே தமிழகம்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திரூரில் தான் முதல் கூட்டுறவுச் சங்கம் உதயமாகியது.

இந்தப் பெருமையைக் கட்டிக் காக்கின்ற வகையிலே மட்டுமல்ல; மென்மேலும் வளர்த்திடும் வகையிலே தமிழகத்தில் தழைத்து வருகிறது கூட்டுறவு இயக்கம். இந்த இயக்கம் மேலும் நல்ல முறையிலே தொடர்ந்து பணிபுரியப் பலப்படுத்த வேண்டியது மக்கள் கடமை.

—பி.எல்.ஆர்.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:** இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:** விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:** விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:** நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.


மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY

MPL 2111


## 1. வட சென்னை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,39,196 |
| பதிவான வாக்குகள் | ... | 5,27,126 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,18,531 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,595 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **ஜி. இலட்சுமணன்** | **தி.மு.க.** | ... | **2,97,268** |
| எம். எஸ். அப்துல்காதர் | அ.இ.அ.தி.மு.க. | | 1,97,950 |
| புலவர் ஆர். இந்திரகுமாரி | சுயே. | ... | 16,378 |
| ராமய்யா | சுயே. | ... | 681 |
| கோவிந்தராஜுலு என்கிற ஜெகஜ்ஜோதி | சுயே. | ... | 778 |
| டி.வி. செல்வராஜ் | சுயே. | ... | 236 |
| டாக்டர் சி. வி. தளபதி சேமன் | சுயே. | ... | 478 |
| எஸ். பாலசுப்பிரமணியம் | சுயே. | ... | 200 |
| என். எம். மணிவர்மா | காங்(அ) | ... | 2,065 |
| பி. மானக்சந்த் நஹார் | சுயே. | ... | 195 |
| ஏ. எஸ். ஆர். மாரியப்பன் | ஜனதா (எஸ்) | ... | 722 |
| ஓ. ஏ. வரததேசிகன் | சுயே. | ... | 884 |
| டாக்டர் என்.கே. வாரியர் | சுயே. | ... | 186 |
| பி. ஜான் | சுயே. | ... | 375 |
| டாக்டர் ஏ.கே. ஜெய்னுதீன் | சுயே. | ... | 135 |

## 2. மத்திய சென்னை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,26,953 |
| பதிவான வாக்குகள் | ... | 4,93,806 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,87,409 |
| செல்லாத வாக்குகள் | ... | 6,397 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **டாக்டர் ஏ. கலாநிதி** | **தி.மு.க.** | ... | **2,90,199** |

| | | | |
|---|---|---|---|
| தூக்குமேடை பி. ராஜகோபாலன் | காங்(அ) | ... | 6,172 |
| வி. சங்கர்கிரி | சுயே. | ... | 1,134 |
| கே. சந்திரன் | சுயே. | ... | 1,623 |
| டாக்டர் ஏ. கே. ஜெய்னுதீன் | சுயே. | ... | 1,676 |
| மானக்சந்த் நஹார் | சுயே. | ... | 666 |
| ப. இராமச்சந்திரன் | ஜனதா | ... | 1,85,150 |
| சி. பி. லோகநாதன் | சுயே. | ... | 789 |

## 3. தென் சென்னை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 8,11,849 |
| பதிவான வாக்குகள் | ... | 5,52,796 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,44,980 |
| செல்லாத வாக்குகள் | ... | 7,816 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **ஆர். வெங்கட்டராமன்** | **இ. காங்.** | ... | **3,28,836** |
| டி. ராகவன் | சுயே. | ... | 666 |
| ஏ. சடகோபன் | சுயே. | ... | 1,930 |
| ஈ.வி.கே. சுலோசனா சம்பத் | அ.இ.அ.தி.மு.க. | | 2,08,474 |
| டாக்டர் சி. வி. சேமன் | சுயே. | ... | 1,510 |
| டாக்டர் ஜி. மோகன் நாயர் | சுயே. | ... | 1,344 |
| வி. வள்ளியப்பன் | சுயே. | ... | 1,188 |
| இ. ஜகந்நாதன் | சுயே | ... | 1,032 |

## 4. ஸ்ரீபெரும்புதூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,20,766 |
| பதிவான வாக்குகள் | ... | 4,51,190 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,41,945 |
| செல்லாத வாக்குகள் | ... | 9,245 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **டி. நாகரத்தினம்** | **தி.மு.க.** | ... | **2,53,912** |
| எம். எஸ். உலகநாதன் | சுயே. | ... | 803 |
| வி. எம்பெருமான் | சுயே. | ... | 6,017 |
| எம். மூர்த்தி | சுயே. | ... | 6,317 |
| டி. வரதராஜன் | சுயே. | ... | 1,347 |
| எஸ். ஜகந்நாதன் | அ.இ.அ.தி.மு.க. | | 1,71,135 |
| டி. ஜெயபாரதி | காங் (அ) | ... | 2,414 |

## 5. செங்கல்பட்டு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,73,832 |
| பதிவான வாக்குகள் | ... | 4,84,102 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,73,014 |
| செல்லாத வாக்குகள் | ... | 11,088 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **இரா. அன்பரசு** | **இ. காங்.** | ... | **2,83,163** |
| பி. எஸ். கந்தசாமி | சுயே. | ... | 8,150 |
| சி. தர்மலிங்க முதலியார் | சுயே. | ... | 5,097 |
| ஆர். மோகனரங்கம் | அ.இ.அ.தி.மு.க. | | 1,73,147 |
| வி.டி.ஆர். வீரப்ப கவுண்டர் | சுயே. | ... | 3,457 |

## 6. அரக்கோணம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,01,433 |
| பதிவான வாக்குகள் | ... | 4,68,113 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,57,858 |
| செல்லாத வாக்குகள் | ... | 10,255 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **ஏ. எம். வேலு** | **இ. காங்.** | ... | **2,78,516** |

| | | | |
|---|---|---|---|
| எம். ரகுநாதன் | அ.இ.அ.தி.மு.க. | | 1,61,155 |
| ஏ. கந்தப்பன் | சுயே. | ... | 3,255 |
| கே. கிருஷ்ணன் | சுயே. | | 7,904 |
| ஆர். எம் பெரியசாமி ரெட்டியார் | சுயே. | ... | 4,153 |
| ஏ. ஜானகிராமன் | ஜனதா(எஸ்) | ... | 2,875 |

## 7. வேலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,00,222 |
| பதிவான வாக்குகள் | ... | 4,30,318 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,21,976 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,342 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **ஏ. கே. ஏ. அப்துல் சமது** | **மு.லீக்.** | ... | **2,32,567** |
| பி. எஸ். கணேசன் | சுயே. | ... | 1,983 |
| ஜி. கமலக்கண்ணன் | சுயே. | ... | 5,339 |
| வாரண்ட் ஆபீசர் சேஷன் | சுயே. | ... | 4,170 |
| வி. தண்டாயுதபாணி | ஜனதா | ... | 1,53,021 |
| எம். ஜெ. தமிழ்மணி | ஜனதா (எஸ்) | ... | 16,007 |
| பிச்சா லோகநாத நாயுடு | சுயே. | ... | 8,939 |

## 8. திருப்பத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,86,891 |
| பதிவான வாக்குகள் | ... | 4,44,712 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,36,393 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,319 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **எஸ். முருகையன்** | **தி.மு.க.** | ... | **2,74,216** |
| எம். பாண்டுரங்கன் | அ.இ.அ.தி.மு.க. | | 1,58,855 |
| ஏ. ஏ. ரசீத் | சுயே. | ... | 3,322 |

## 9. வந்தவாசி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,14,275 |
| பதிவான வாக்குகள் | ... | 4,68,039 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,57,876 |
| செல்லாத வாக்குகள் | ... | 10,163 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **டி. பட்டுச்சாமி** | **இ. காங்.** | ... | **2,85,549** |
| ஏ. சடகோபன் | சுயே. | ... | 3,384 |
| ஆர். ஏ. நடராஜன் | காங்(அ) | ... | 5,327 |
| கே. முருகேசன் | ஜனதா(எஸ்) | ... | 5,221 |
| சி. வேணுகோபால் கவுண்டர் | அ.இ.அ.தி.மு.க. | | 1,58,395 |

## 10. திண்டிவனம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,17,265 |
| பதிவான வாக்குகள் | ... | 4,55,048 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,42,840 |
| செல்லாத வாக்குகள் | ... | 12,208 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **எஸ். எஸ். ராமசாமி படையாச்சி** | **இ. காங்.** | ... | **2,90,069** |
| எஸ். ராஜாமணி | சுயே. | ... | 9,160 |
| பூவராக மூர்த்தி | சுயே. | ... | 10,440 |
| திருக்குறளார் முனுசாமி | அ.இ.அ.தி.மு.க. | | 1,33,171 |

## 11. கடலூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,92,583 |
| பதிவான வாக்குகள் | ... | 4,54,244 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,42,319 |
| செல்லாத வாக்குகள் | ... | 11,925 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். முத்துக்குமரன்** | **இ. காங்.** ... | **2,62,694** |
| பி. அப்துல் வகாப் | சுயே. ... | 1,984 |
| அரவிந்த பாலாபழனூர் | அ.இ.அ.தி.மு.க. | 1,54,043 |
| எல். ராமமூர்த்தி | ஜனதா(எஸ்) ... | 4,959 |
| ஏ. ராமலிங்கம் | சுயே. ... | 4,970 |
| செல்வி ராஜலட்சுமி | சுயே. ... | 6,359 |
| டி. கனகரத்தினம் | சுயே. ... | 5,786 |
| டி. ஆர். நரசிம்மன் | சுயே. ... | 3,524 |

## 12. சிதம்பரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,94,357 |
| பதிவான வாக்குகள் | ... | 4,87,049 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,75,735 |
| செல்லாத வாக்குகள் | ... | 11,314 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **டாக்டர் வி. குழந்தைவேலு** | **தி.மு.க.** ... | **3,02,523** |
| எஸ். மகாலிங்கம் | மார்க்ஸ்.கம்யூ. ... | 1,63,798 |
| ஆர். என். துரைசாமி | சுயே. ... | 5,984 |
| டி. துரைவேலவன் | சுயே. ... | 3,430 |

## 13. தருமபுரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,91,267 |
| பதிவான வாக்குகள் | ... | 3,84,635 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 3,77,330 |
| செல்லாத வாக்குகள் | ... | 7,305 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. அர்ஜுனன்** | **தி.மு.க.** ... | **2,09,603** |
| சி. கணேசன் | சுயே. ... | 5,020 |
| கந்தன் | சுயே. ... | 2,525 |
| டாக்டர் எம். பி. சிவராஜ் | சுயே. ... | 1,468 |
| தங்கராஜ் | சுயே ... | 2,188 |
| கே. நல்லசாமி | ஜனதா(எஸ்) ... | 13,794 |
| ஜி. பூவராகன் | ஜனதா ... | 1,42,732 |

## 14. கிருஷ்ணகிரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,56,225 |
| பதிவான வாக்குகள் | ... | 3,62,269 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 3,53,525 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,744 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. ராமமூர்த்தி** | **இ. காங்.** ... | **2,22,839** |
| வி. ராஜகோபால் | அ.இ.அ.தி.மு.க. | 1,22,328 |
| கே. எம். சுவாமிநாதன் | சுயே. ... | 3,552 |
| நம்பிராஜ் | காங்(அ) ... | 4,806 |

## 15 ராசிபுரம் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,34,962 |
| பதிவான வாக்குகள் | ... | 4,41,588 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,32,588 |
| செல்லாத வாக்குகள் | ... | 9,000 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **பி. தேவராசன்** | **இ. காங்.** ... | **2,36,112** |
| எஸ். அன்பழகன் | அ.இ.அ.தி.மு.க. | 1,76,240 |
| கே. கந்தசுவாமி | காங்(அ) ... | 5,018 |
| எஸ். கந்தசுவாமி | சுயே. ... | 4,903 |
| எம். காமராஜ் | சுயே. ... | 6,106 |
| கே. நடேசன் | சுயே. ... | 1,620 |
| பி. ரங்கசாமி | சுயே. ... | 2,589 |

## 16. சேலம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,91,389 |
| பதிவான வாக்குகள் | ... | 4,70,633 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,60,108 |
| செல்லாத வாக்குகள் | ... | 10,525 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **சி. பழனியப்பன்** | **தி.மு.க.** ... | **2,33,971** |
| சி. என். கங்கானி | சுயே. ... | 953 |
| பி. கண்ணன் | அ.இ.அ.தி.மு.க. | 2,07,713 |
| பி. கந்தசுவாமி | சுயே. ... | 918 |
| எம். காந்தி நாதன் | காங்(அ) ... | 5,381 |
| டி. சாம்பலிங்கம் | சுயே. ... | 3,327 |
| எஸ். சி. தம்பி (சர்க்கரை கவுண்டர்) | சுயே. ... | 440 |
| பி.என். பாலசுப்பிரமணியம் | சுயே. ... | 3,007 |
| எம். ராமசுவாமி | சுயே. ... | 1,864 |
| பி. வடிவேலு | சுயே. ... | 1,092 |
| வசந்திமுத்து | சுயே. ... | 1,442 |

## 17. திருச்செங்கோடு

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 8,89,296 |
| பதிவான வாக்குகள் | ... | 5,47,419 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,35,881 |
| செல்லாத வாக்குகள் | ... | 11,538 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். கந்தசாமி** | **தி.மு.க.** ... | **2,76,015** |
| ஆர். எஸ். குழந்தைவேலு | அ.இ.அ.தி.மு.க. | 2,54,797 |
| ஆர். ஜி. சுவாமி | சுயே. ... | 3,771 |
| ஈ.எம்.எஸ். நாராயணன் | சுயே. ... | 1,298 |

## 18. நீலகிரி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,34,760 |
| பதிவான வாக்குகள் | ... | 4,88,097 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,78,505 |
| செல்லாத வாக்குகள் | ... | 9,592 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். பிரபு** | **இ. காங்.** ... | **2,73,614** |
| அடால்பஸ் மேசன் | சுயே. ... | 916 |
| ஜெ. செல்வராஜ் | சுயே. ... | 2,461 |
| டி. பி. எஸ். திப்பையா | ஜனதா ... | 1,87,871 |
| எம். போஜராஜன் | சுயே ... | 1,970 |
| கே. பி. ராஜு | சுயே. ... | 2,846 |
| ஜி.எஸ். வெங்கடாச்சலம் | ஜனதா (எஸ்) | 8,827 |

## 19. கோபிச்செட்டிபாளையம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,78,003 |
| பதிவான வாக்குகள் | ... | 4,34,266 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,22,452 |
| செல்லாத வாக்குகள் | ... | 11,814 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **சி. சின்னசாமி** | **அ.இ.அ.தி.மு.க.** ... | **2,10,808** |
| எம். கே. சண்முகம் | சுயே. ... | 4,326 |
| இ. சித்த கவுண்டர் | சுயே. ... | 10,385 |
| என் ஆர். திருவேங்கடம் | இ.காங். ... | 1,96,933 |

## 20. கோயம்புத்தூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,85,260 |
| பதிவான வாக்குகள் | ... | 5,18,780 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,10,166 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,614 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **ராம்மோகன் என்கிற இரா. மோகன்** | **தி.மு.க.** | ... | **2,76,975** |
| பார்வதி கிருஷ்ணன் | இந்திய கம்யூ. | ... | 2,20,866 |
| என். ராமலிங்கம் | காங்(அ) | ... | 4,219 |
| ஏ. கோயில் | சுயே. | ... | 1,920 |
| என். நடராசன் | சுயே. | ... | 865 |
| சண்முகம் | சுயே. | ... | 1,555 |
| ராஜகோபால் என்கிற எல். ஜி. பி. ராஜன் | சுயே. | ... | 3,166 |
| டி. எம். எஸ். அன்வர் உசேன் | சுயே. | ... | 800 |

## 21. பொள்ளாச்சி (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,05,793 |
| பதிவான வாக்குகள் | ... | 4,64,211 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,53,721 |
| செல்லாத வாக்குகள் | ... | 10,490 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **சி. டி. தண்டபாணி** | **தி.மு.க.** | ... | **2,33,261** |
| கே. நாகராஜன் | சுயே. | ... | 2,934 |
| எம். நடராஜன் | அ.இ.அ.தி.மு.க. | | 2,17,526 |

## 22. பழனி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,62,601 |
| பதிவான வாக்குகள் | ... | 4,40,801 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,31,997 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,804 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **சேனாபதி கவுண்டர்** | **இ. காங்.** | ... | **2,30,733** |
| அப்பன் | சுயே. | ... | 2,107 |
| கார்வேந்தன் | சுயே. | ... | 21,925 |
| லட்சுமிபதிராஜு | ஜனதா | ... | 1,71,165 |
| ஜான் பீட்டர் | சுயே. | ... | 6,067 |

## 23. திண்டுக்கல்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,57,333 |
| பதிவான வாக்குகள் | ... | 4,81,438 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,72,487 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,951 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **கே. மாயத் தேவர்** | **தி.மு.க.** | ... | **2,44,669** |
| ராஜன் செல்லப்பா | அ.இ.அ.தி.மு.க. | | 2,17,923 |
| கிருஷ்ணன் | ஜனதா (எஸ்) | ... | 2,552 |
| எம். சுடலைமுத்துப்பிள்ளை | சுயே. | ... | 1,227 |
| கே. சுப்பிரமணியன் | சுயே. | ... | 1,220 |
| முத்துக்கிருஷ்ணன் | சுயே. | ... | 3,506 |
| பி. எம். முஸ்தபா | சுயே. | ... | 1,390 |

## 24. மதுரை

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,87,564 |
| பதிவான வாக்குகள் | ... | 5,33,277 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,26,182 |
| செல்லாத வாக்குகள் | ... | 7,095 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **சுப்புராமன்** | **இ. காங்.** | ... | **2,92,380** |
| உதயணன் | சுயே. | ... | 662 |
| கருப்பையா செட்டியார் | சுயே. | ... | 897 |
| காமராஜ் | சுயே. | ... | 1,424 |
| கிருஷ்ணன் | சுயே. | ... | 2,588 |
| சுந்தரராஜ் தேவர் | சுயே. | ... | 5,046 |
| பாலசுப்பிரமணியம் | மார்க்ஸ். கம்யூ. | ... | 2,23,185 |

## 25. பெரியகுளம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,35,390 |
| பதிவான வாக்குகள் | ... | 5,06,263 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,97,460 |
| செல்லாத வாக்குகள் | ... | 8,803 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **கம்பம் நடராஜன்** | **தி.மு.க.** | ... | **2,55,204** |
| ராமசாமி | அ.இ.அ.தி.மு.க. | | 2,35,322 |
| சுருளிவேலு | சுயே. | ... | 6,934 |

## 26. கரூர்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,62,973 |
| பதிவான வாக்குகள் | ... | 5,14,544 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,06,788 |
| செல்லாத வாக்குகள் | ... | 7,756 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **துரை செபாஸ்டியன்** | **இ. காங்.** | ... | **2,81,149** |
| எம். அப்பாவு | சுயே. | ... | 5,250 |
| பி. எம். இளமாறன் | ஜனதா (எஸ்) | ... | 11,215 |
| கே. கனகராஜ் | அ.இ.அ.தி.மு.க. | | 2,07,015 |
| வி. மாரிமுத்து | சுயே. | ... | 2,159 |

## 27. திருச்சிராப்பள்ளி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 7,22,379 |
| பதிவான வாக்குகள் | ... | 5,19,651 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,12,709 |
| செல்லாத வாக்குகள் | ... | 6,942 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **என். செல்வராஜு** | **தி.மு.க.** | ... | **2,78,485** |
| எஸ். ரத்தினம் | சுயே. | ... | 898 |
| எம். ஜே. செல்வநாதன் | சுயே. | ... | 1,204 |
| எஸ். பெரியண்ணன் | சுயே. | ... | 2,004 |
| டி. கே. ரங்கராஜன் | மார்க். கம்யூ. | ... | 2,04,886 |
| லால்குடி ராஜேந்திரன் | சுயே. | ... | 23,133 |
| என். விஜயரங்கன் | சுயே. | ... | 986 |
| சி. வேலு | சுயே. | ... | 1,113 |

## 28. பெரம்பலூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,94,116 |
| பதிவான வாக்குகள் | ... | 4,90,148 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 4,80,175 |
| செல்லாத வாக்குகள் | ... | 9,973 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **கே. பி. எஸ். மணி** | **இ. காங்.** | ... | **2,82,767** |
| எம். அய்யாக்கண்ணு | சுயே. | ... | 4,012 |
| கே. கார்மேகம் | சுயே. | ... | 3,504 |
| கே. குமாரவேலு | சுயே. | ... | 4,812 |
| எஸ். தங்கராஜு | அ.இ.அ.தி.மு.க. | ... | 1,83,595 |
| பி. வடிவேலு | சுயே. | ... | 1,485 |

## 29. மாயூரம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,76,693 |
| பதிவான வாக்குகள் | ... | 5,20,978 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 5,09,810 |
| செல்லாத வாக்குகள் | ... | 11,168 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| **குடந்தை ராமலிங்கம்** | **இ. காங்.** | ... | **2,91,625** |

| | | |
|---|---|---|
| கோவிந்தசாமி | ஜனதா ... | 1,99,620 |
| மலவை சிங்காரவேலன் | சுயே. ... | 4,822 |
| மாயூரம் சுந்தரேசன் | ஜனதா (எஸ்) ... | 13,743 |

## 30. நாகப்பட்டினம் (தனி)

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 6,84,297 |
| பதிவான வாக்குகள் ... | 5,53,290 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,46,448 |
| செல்லாத வாக்குகள் ... | 6,842 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **தாழை மு. கருணாநிதி** | **தி.மு.க. ...** | **2,78,561** |
| கே. முருகையன் | இந்திய.கம்யூ. ... | 2,67,887 |

## 31. தஞ்சாவூர்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 6,60,633 |
| பதிவான வாக்குகள் ... | 5,12,635 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,06,949 |
| செல்லாத வாக்குகள் ... | 5,686 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எஸ். சிங்காரவேலு** | **இ. காங். ...** | **2,68,382** |
| டி.எம். கணபதி | சுயே. ... | 1,498 |
| ஆம்பலாப்பட்டு கே. சுப்பையா | சுயே. ... | 8,867 |
| ஏ. சேதுமாதவன் | அ.காங். ... | 4,359 |
| கே. தங்கமுத்து | அ.இ.அ.தி.மு.க. | 2,23,843 |

## 32. புதுக்கோட்டை

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,43,763 |
| பதிவான வாக்குகள் ... | 6,00,327 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,89,914 |
| செல்லாத வாக்குகள் ... | 10,413 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **சுவாமிநாதன்** | **இ. காங். ...** | **2,94,494** |
| சூரியநாராயண் | சுயே. ... | 6,486 |
| செல்லையா | அ.இ.அ.தி.மு.க. | 2,78,395 |
| தண்டாயுதபாணி | சுயே. ... | 6,389 |
| ராமானுஜம் | ஜனதா (எஸ்) .. | 4,150 |

## 33. சிவகங்கை

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,25,576 |
| பதிவான வாக்குகள் ... | 5,14,079 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,04,28 |
| செல்லாத வாக்குகள் ... | 9,651 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **ஆர். வி. சுவாமிநாதன்** | **இ. காங். ...** | **3,06,748** |
| ஆர். எம். அழகப்பன் | சுயே. ... | 2,186 |
| என். என். கே. சீனிப்புலவர் | சுயே. ... | 3,073 |
| எம். சுப்பிரமணியம் | சுயே. ... | 17,705 |
| சோமசுந்தர உடையார் | சுயே. ... | 2,529 |
| டி. பாண்டியன் | இந்.கம்யூ. ... | 1,72,187 |

## 34. இராமநாதபுரம்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,36,600 |
| பதிவான வாக்குகள் ... | 4,94,392 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 4,85,422 |
| செல்லாத வாக்குகள் ... | 8,910 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். எஸ். கே. சத்தியேந்திரன்** | **தி.மு.க. ...** | **2,75,049** |
| ஜி. ஏ. அப்பன் | சுயே. ... | 3,913 |
| பி. அன்பழகன் | அ.இ.அ.தி.மு.க. | 1,90,916 |
| கல்யாண்நாஸ் நடாதிபதி | சுயே. ... | 4,108 |
| டாக்டர் எஸ். பலராமன் | சுயே. ... | 8,300 |
| ஏ. மணி | சுயே. ... | 1,093 |
| முத்துசாமி பாரதி | ஜனதா (எஸ்) ... | 558 |
| வடிவேல் தேவர் | சுயே. ... | 1,485 |

## 35. சிவகாசி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,56,211 |
| பதிவான வாக்குகள் ... | 5,17,475 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 5,09,343 |
| செல்லாத வாக்குகள் ... | 8,132 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **என். சௌந்தரராஜன்** | **அ.இ.அ.தி.மு.க. ...** | **2,34,654** |
| ஜி. ஏ. அப்பன் | சுயே. ... | 2,455 |
| எஸ். அருள்ராஜ் தேவர் | சுயே. ... | 1,174 |
| எஸ். பி. ராஜு | சுயே. ... | 12,422 |
| கே. காளியப்பன் | சுயே. ... | 806 |
| எஸ். பி. சண்பகமூர்த்தி | அ.காங். ... | 2,402 |
| வி. என். சாந்தாராம் | சுயே. ... | 570 |
| ஆர். சூரியநாராயணன் | சுயே. ... | 1,856 |
| எஸ். ராஜன் | சுயே. ... | 670 |
| லட்சுமண சுப்பராயலு | சுயே. ... | 526 |
| வி.எஸ். வீரபத்திர நாடார் | சுயே. ... | 909 |
| வெள்ளைச்சாமி என்கிற அப்பு ரெட்டியார் | சுயே. ... | 709 |
| ஏ. ஜெகந்நாதன் | சுயே. ... | 991 |
| திருமதி வி. ஜெயலட்சுமி | இ.காங். ... | 2,28,042 |
| ஆர். எம். ஸ்ரீராம் | சுயே. ... | 21,157 |

## 36. திருநெல்வேலி

| | |
|---|---|
| மொத்த வாக்காளர் ... | 7,02,603 |
| பதிவான வாக்குகள் ... | 4,75,645 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 4,67,531 |
| செல்லாத வாக்குகள் ... | 8,114 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **டி. எஸ். ஏ. சிவப்பிரகாசம்** | **தி.மு.க. ...** | **2,56,626** |
| வி. அருணாசலம் | அ.இ.அ.தி.மு.க. | 1,96,664 |
| சுப்பாநாயக்கர் | சுயே. ... | 1,156 |
| பி. செல்லசாமி | சுயே. ... | 1,256 |
| இஸட். ஞானசுந்தரப் பிள்ளை | சுயே. ... | 810 |
| டேவிட் நாடார் | சுயே. ... | 857 |
| பாண்டியன் | சுயே. ... | 2,026 |
| எஸ். முருகேசன் | சுயே. ... | 7,614 |
| பி. ராமசாமி ரெட்டியார் | சுயே. ... | 492 |

## 37. தென்காசி (தனி)

| | |
|---|---|
| மொத்த வாக்காளர் ... | 6,79,386 |
| பதிவான வாக்குகள் ... | 4,47,808 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 4,36,204 |
| செல்லாத வாக்குகள் ... | 11,604 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **எம். அருணாசலம்** | **இ. காங். ...** | **2,72,260** |
| எஸ். ராஜகோபாலன் | ஜனதா ... | 1,63,944 |

## 38. திருச்செந்தூர்

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் ... | 7,04,399 |
| பதிவான வாக்குகள் ... | 4,45,880 |
| செல்லுபடியான வாக்குகள் ... | 4,39,140 |
| செல்லாத வாக்குகள் ... | 6,740 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | பெற்ற வாக்குகள் |
|---|---|---|
| **கே. டி. கோசல்ராம்** | **இ. காங். ...** | **2,27,395** |
| என். ஹரிஹர ஐயர் | சுயே. ... | 1,666 |
| பி. அழகப்பன் | சுயே. ... | 2,200 |
| கனகசபை என்கிற மோசஸ் | சுயே. ... | 3,390 |

| | | | |
|---|---|---|---|
| குமரி அனந்தன் | சுயே. | ... | 75,020 |
| இ. சண்முக வேல் | சுயே. | ... | 965 |
| என். சௌந்தர பாண்டியன் | ஜனதா | ... | 1,13,576 |
| என். துரைசாமி நாடார் | சுயே. | ... | 822 |
| பிள்ளை | ஜனதா(எஸ்) | ... | 14.106 |

## 39. நாகர்கோயில்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர்கள் | ... | 6,63,322 |
| பதிவான வாக்குகள் | ... | 3,70,796 |
| செல்லுபடியான வாக்குகள் | ... | 3,64,605 |
| செல்லாத வாக்குகள் | ... | 6,191 |

| வேட்பாளர் பெயர் | கட்சியின் பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| என். டென்னிஸ் | இ. காங். | ... | 1,87,111 |
| என். துரைசாமி நாடார் | சுயே. | ... | 1,850 |
| எஸ். பூமேடை லட்சுமணன் பிள்ளை. | சுயே. | ... | 4,656 |
| எஸ். பொன்ராஜ் | சுயே. | ... | 1,536 |
| ஏ. வில்சன் | சுயே. | ... | 18.137 |
| பி. விஜயராகவன் | ஜனதா | ... | 1,48,703 |
| ஏ. ஜே. ஜார்ஜ் | சுயே | ... | 2,612 |

# போக்குவரத்துப் பிரச்சினை

நித்தமும் வளர்ந்து வருகிறது சென்னை நகரம். நகரின் மக்கள் தொகையும் 30 இலட்சத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. வளர்ந்து வரும் பெருநகரில் போக்குவரத்து பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மக்களும் அரசாங்கமும் தினமும் சந்தித்துத் தீரவேண்டிய-சமாளித்து வெற்றி காண வேண்டிய பிரச்சினை இது.

பொது மக்களுக்கு நல்லமுறையில் உதவி செய்யவேண்டும் என்பதற்காக - அரசு நூற்றுக் கணக்கான 'நகர பஸ்களை' பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் வாயிலாக ஏற்பாடு செய்துவந்த போதிலும் காலையில் அலுவலக நேரத்திலும் மாலையில் அலுவலகம் முடிவடையும் நேரத்திலும் பஸ்களில் கூட்டம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றது. எனவே பயணிகள் வசதியாகப் பயணம் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணம் காரணமாக-சிட்டி எக்ஸ்பிரஸ் பஸ்களை பல்லவன் போக்குவரத்துக் கழகம் 10-5-79 முதல் அறிமுகம் செய்திருக்கிறது; முக்கியமான வழித்தடங்களிலெல்லாம் இந்தப் பேருந்துகள் செல்கின்றன. முக்கியமான நிறுத்தங்களில் மட்டும் நிறுத்தப்படுகின்றன. இதில் பயணம் செய்வதற்கு வழக்கமான கட்டணத்தை விட அரைப்பங்கு முதல் ஒன்றரைப் பங்கு வரை அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பொது மக்களுக்கு இது ஒரு வரப் பிரசாதமாகவே காட்சி தருகிறது. சொகுசுப் பேருந்தில் உல்லாசப் பயணம் செய்வது போல் இதில் செல்ல முடிகிறது.


சென்னை நகரில் அரசு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் பலர், நகரத்தின் நெருக்கடிக்கு பயந்து -செங்கல்பட்டு, தாம்பரம், திருவள்ளூர் போன்ற புறநகர்ப் பகுதிகளில் வசித்து வருகிறார்கள். தினமும் பொழுது புலரும்போது சென்னையை நோக்கிக் கிளம்பி, இரவு 10 மணிக்கு - தூங்கப் போகும் வேளையில் வீட்டுக்குத் திரும்புவது மக்களின் அன்றாட வாழ்க்கை முறையாகி விட்டது. இதனை உணர்ந்துதான் மைய அரசு நீண்ட காலத்துக்கு முன்பே சென்னைக்கும் தாம்பரத்துக்கும் மின்சார ரயில் போக்குவரத்தை தொடங்கியுள்ளது. வளர்ந்து வரும் சென்னைப் பெருநகரம் போக்குவரத்திலும் வளர்ச்சியுறுவது அவசியம் என்பதால்-சென்னை-திருவள்ளூர் மின்சார ரயில் போக்குவரத்துத் திட்டத்தை மைய அரசு முனைப்புடன்செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் ஒருவகையில் வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டமாகும். சென்னையிலிருந்து புறநகர்ப் பகுதிக்குச் செல்லும் மின்சார ரயில் போக்குவரத்தில் இது தனிச் சிறப்புப் பெறுகிறது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமான சென்னை - கும்மிடிப்பூண்டி மின்சார ரயில் போக்குவரத்து 13.4.'79 அன்று முடிவடைந்தது. இந்தியக் குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி இந்தப் போக்குவரத்தைத் தொடங்கி வைத்தார். இதன் இரண்டாவது கட்டமான சென்னை கடற்கரை கொருக்குப்பேட்டை மின்சார ரயில் போக்குவரத்தை 9.8.'79 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மூன்றாவது கட்டமான சென்னை - திருவள்ளூர் மின்சார ரயில் போக்குவரத்து 29.11.'79 அன்று மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் நான்காவது கட்டம் மூர்அங்காடியின் அருகில் புறநகர் ரயில் நிலையம் துவக்கப்படும் திட்டமாகும். இந்தப் பணிகளினால் வட சென்னை-மேல் சென்னை ஆகிய பகுதிகளிலிருந்து சென்னைக்கு வரும் பயணிகளுக்கு போக்குவரத்து வசதியைத் தருவதுடன்-சென்னைப் பெருநகரின் பஸ் பயணத்தையும்-ரயில் பயணத்தையும் இணைப்பதற்கு ரயில்துறை தொண்டாற்றி வருகிறது.


நித்தமும் வளர்ந்துவரும் பெருநகரமாம் சென்னையின் வளர்ச்சியில் போக்குவரத்துக்குப் பெரும் பங்கு உண்டு. தேவையான பணம் பையில் இருந்தால் - எதையும் நம்மால் வாங்க முடிகிறதல்லவா? அதுபோல, தேவையான போக்குவரத்து வசதி இருந்தால் -எங்கும் எந்த நேரத்திலும் செல்லமுடியும்! அதுவே ஒரு திருப்திதானே!


தமிழக அரசின் பஸ் போக்குவரத்தும் - மைய அரசின் மின்சார ரயில் போக்குவரத்தும்-சென்னை நகர மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கி வருகின்றன. பலராலும் 'தலைவலி' எனக் கருதப்படும் போக்குவரத்துப் பிரச்சினையைச் சமாளித்து வெற்றி காண்பதில் இவை தனித்திறமை கொண்டு விளங்குகின்றன - பெரும் வரலாற்றைப் படைக்கின்றன.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழில்மிகு
உங்கள்
மொழி வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண். M. 8676











குடியரசு நாள் விழா- [26-1-1980]







தமிழரசு
16.2.1980 50காசு


SHIP

# பாரதியார் போற்றிய உ. வே. சாமிநாதையர்

பாரதியார், தம்மை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'சக்கர வர்த்தினி' மாத இதழில் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர்களைக் குறித்து கவிதை எழுதி, குறிப்பும் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்த் தாத்தாவைப் பாராட்டி பாரதியார் எழுதிய பாடல் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் அவர் எழுதிய உரை நடைப் பகுதி இதுவரை பலரும் அறிந்திராத ஒன்று. உ. வே. சாமிநாதையர் அவர்களின் 125-வது ஆண்டு நிறைவையொட்டி அதனை இங்கே வெளியிடுகிறோம்.



## மஹா மஹோ பாத்தியாய சாமிநாதையர்

பழைமைத் தமிழ் நூல்களிலே கல்வியுந் தானமே விசேஷ முடையதென்று மேலோர் சொல்வார்கள். அழிந்துபோன ஆலயங்களை மறுபடி புதுப்பிக்கட்டிப் பிரதிஷ்டை புரிந்தோர், நெடுங்காலமாக நின்றுபோன அன்னசத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போர், வறண்டு மண்ணேறிப் போய்க்கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பலவகையாரினும், மக்கி மறைந்துபோய்க் கிடக்கும் புராதனப் பெருங்காவியங்களைப் பெரு முயற்சிசெய்து திரும்ப உலகத்துக்கு அளிக்கும் பெரியோர்கள் புண்ணியத்திற் குறைந்தவர்களல்லர். மேலும், புகழ் விளக்குந் தன்மையில் மற்றெல்லோரைக் காட்டிலும், இவரே சிறந்தவராவார்.

பிரமஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர் மேற்கூறப்பட்ட பெருந் தருமத்தை நன்கு புரிந்தவர். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களை இன்று நம்மவர் கற்றுக் களிப்பது சாமிநாத ஐயருடைய கருணை மிகுதியாலல்லவோ? இவருக்கு கவர்ன்மெண்டார் "மஹா மஹோபாத்தியாய"ப் பட்டம் கொடுத்துப் பெருமைப் படுத்தியது மிகவும் பொருத்தமுடைய விஷயமே. இன்னும் நெடுங்காலம் இம்மஹா பாத்தியாயர் சீரும் சிறப்பும் பெற்று, தமிழுலகத்தாருக்கு இனியன புரிந்து வாழவேண்டுமென்பதே நமது விருப்பம்.



சென்னை பிரஸிடென்ஸி காலேஜில்

மிஸ்டர் வி. சுப்பிரமணிய பாரதி,

மகா மகோ பாத்தியாய

சாமிநாதய்யரைப்பற்றிச் சொல்லியன.

செம்பரிதி ஒளிபெற்றான், பைந்நறவு சுவைபெற்றுத் திகழ்ந்த, தாங்கள்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென் றெவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா தப்புலவன் குறைவில்கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல் பேருவகை படைக்கின்றீரே? (1)

அன்னியர்கள், தமிழ்ச்செவ்வி யறியாதார் இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மஹாமஹோ பாத்தியா யப்பதவி பரிவி னல்கி
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா தன்றனக்குப் புகழ்செய்வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பி னிவன்பெருமை மொழிய லாமோ?(2)

நிதி யறியோம்; இவ்வுலகத் தொருகோடி இன்பவகை நித்தந் துய்க்கும்
கதி யறியோம்; என்று மனம் வருந்தற்க குடந்தைநகர்க் கலைஞர் கோவே!
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும் காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றித் துலங்குவாயே.(3)

தகவல் : சீனிவிசுவநாதன் ஆதாரம் : வானவில் பிரசுர பாரதியார் கவிதைகள்

தமிழரசு மலர்:10 16-2-1980 இதழ்:16



# கோபுரக் கலசம்

—கவிஞர் சுரதா

ஆதிநூல் அனைத்தும் கற்றே
ஆழ்ந்தசிந் தனையைப் பெற்றே
நீதிநூல் வழியில் வாழ்ந்து
நிலையான கீர்த்தி சேர்த்த
வேதநா தையர், செய்யுள்
வித்தை நா தையர், நல்ல
சாதுநா தையர், உ.வே.
சாமிநா தையர் ஆவார்.

ஒருசிலர் எல்லாம் செய்வர்;
செய்வதை ஒழுங்காய்ச் செய்யார்
ஒருசிலர் ஒன்றே செய்வர்;
செய்யினும் ஒழுங்காய்ச் செய்வர்.
அரும்பெரும் செயல்கள் செய்யும்
ஆற்றலோர் சிலர்க்கே உண்டு
திருவளர் ஐயர் செய்த
சேவையோ அரிய சேவை!


பழங்காலச் சுவடி தேடும்
பணியிலே ஈடு பட்டு,
விழுங்காலம் வரும்வ ரைக்கும்
வேதியர் தொண்டு செய்தார்.
செழுங்காந்தள் மலரைப் போன்று
சிவந்தவர் செய்த தொண்டோ
ஒழுங்கான தொண்டு, கல்வி
உலகமே போற்றும் தொண்டு.

நாமெலாம் பத்துப் பாட்டை,
நன்னூலைப் பார்க்கின் றோமே,
ஓமநா தைய ரோவவ்
ஓலையை அச்சி லிட்டார்?
பூமிபோற் பொறுமை கொண்ட
புலவராம் இவரே இட்டார்.
சாமிநா தைய ரின்றேல்
சங்கநூல் மறைந் திருக்கும்!

ஆயிரம் பிறைகள் கண்டார்
ஆணிப்பொன் ஐயர். பெற்ற
தாயினும் சிறந்த தான
தமிழுக்கே தம்மை ஈந்தார்.
தூயநூற் சுவடி தந்த
தூயவர், பாடல் பெற்ற
கோயில்போ லானார் தஞ்சைக்
கோபுரக் கலச மானார்!







# தமிழ்த் தாத்தாவின் தமிழ்ப் பணி

மு.கோ.ராமன்

கடந்த நூற்றாண்டின் முக்கால் பகுதிவரை அதாவது 1875 வரை, தமிழில் உள்ள பக்தி இலக்கியங்கள் சமய, சாத்திர நூல்கள், சிறுபிரபந்தங்கள் மட்டுமே மக்களுக்குத் தெரிந்திருந்தன. திருக்குறளும், தொல்காப்பியமும் அவைகளின் தனிச் சிறப்பால் உணரப் பெற்றதாயினும் அவைகளின் தொன்மையை மக்கள் அறியக்கூடவில்லை. இந்த நிலை டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் கும்பகோணத்தில் சேலம் இராமசாமி முதலியாரைச் சந்திக்கும்வரை இருந்தது.


டாக்டர் ஐயரவர்களின் வாழ்வில் ஒரு திருப்பு மையமாக அமைந்த அந்நிகழ்ச்சியினை விவரிக்குமுன் ஐயரவர்கள் கல்வி பயின்றதும், திருவாவடுதுறை மடத்தில் தமிழ் போதித்ததும், பிறகு திருச்சி. தியாகராச செட்டியார் தயவினால் கும்பகோணம் கல்லூரியில் பண்டிதராகச் சேர்ந்ததும் ஆகிய விவரங்களைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

1855-ஆம் ஆண்டு; ஆம் நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் என்பவருக்கும், சரஸ்வதி அம்மாளுக்கும் தவப்புதல்வராகப் பிறந்தவர் நம் ஐயரவர்கள். வேங்கட சுப்பையர் சிறந்த சங்கீத வித்துவான் – மிகப் பிரசித்தி பெற்ற சங்கீத வித்துவானாகிய கிருஷ்ணையரின் சீடராவார்.

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

என்ற குறளின் இலக்கியமாக இவர் தந்தை இசைச் செல்வம் நிறையப் பெற்றிருப்பினும், வறுமை நிலையிலேயே வாழ்ந்து வந்தார். அந்நாளில் சங்கீதத்தை ஆதரித்து வந்த அரியலூர் ஜமீன்தாரிடம் அவைப்புலவராக இருந்து அரியலூரில் வாழ்க்கை நடத்தி வந்தார். அக்காலத்தில் ஜமீன் வருமானம் குறைந்து ஜமீன்தாரே கடன் பட்டிருந்தமையால் ஜமீன் வருமானமும் இவருக்கு இல்லாமல் போயிற்று. தம் புதல்வனும் சிறந்த சங்கீத வித்துவான் ஆக வேண்டும்என்று கருதி இசையையும், தெலுங்கையும் தம் புதல்வருக்குப் போதிக்க முயன்றார். ஆனால் தமிழ் செய்த புண்ணியம், தமிழர் செய்த தவம், இவருக்குக்கருவிலே உதித்த தமிழார்வம் இவையெல்லாம் தெலுங்குக்கும், இசைக்கும் அணையிட்டு விட்டன. இதை நன்குணர்ந்த இவர் தந்தை இவருக்குரிய தமிழ்க் கல்வியை அளிக்கத் தேவையானவற்றை எல்லாம் செய்தார். இவர் கல்விக்காகவே, குன்னம், செங்கணம் முதலிய ஊர்களில் தம் குடும்பத்தை மாற்றி அமைத்துக் கொண்டார்.

ஐயரவர்களுடைய தமிழ் ஆர்வத்துக்குப் பிஞ்சு நெஞ்சிலே வித்திட்டவர் அரியலூர் சடகோப ஐயங்கார் ஆவார். வளமூட்டியவர்கள் குன்னம் சிதம்பரம் பிள்ளையும், செங்கணம்விருத்தாசல ரெட்டியாரும் ஆவார்கள். சிலகாலம் தமிழை இவருக்குப் போதித்த இவர்கள் இவருடைய தணியாத தமிழ் வேட்கையைக் கண்டு இவர் தந்தையிடம் 'ஐயா இவருக்கு எங்களுக்குத் தெரிந்த தமிழை எல்லாம் ஊட்டிவிட்டோம். இவருக்குள்ள தமிழ் வேட்கை தணியவில்லை. இவரை திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் சேர்த்து விடுங்கள், அவர், என்றும் பொய்யாமல் ஓடுகின்ற காவிரி போன்றவர்கள், நாங்களெல்லாம் வானம் பார்த்த மேட்டு நிலத்துக் குளம், குட்டை போன்றவர்கள்'' என்று கூறினர். அது முதல் ஐயரவர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம்



சென்னை திருவான்மியூரில் உள்ள மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய கட்டடம்.

எப்படியாவது சேர்ந்து தமிழ்ப் பசியைத் தணிக்க வேண்டும் என்பதை ஒரே நோக்கமாகக் கொண்டிருந்தார். ஐயரவர் தந்தையும் இவர் தமிழ்ப் பசியின் அளவை உணர்ந்து இவரை மகாவித்துவான் பிள்ளையவர்களிடம் மாணாக்கராகச் சேர்த்து விட்டார். அப்போது ஐயரவர்கள் வயது 17. ஐயரவர்களுக்கு திருமணம்கூட நடந்துவிட்டது. அதுமுதல் பிள்ளையவர்கள் காலமாகும்வரை சுமார் ஐந்தாண்டுகள் பிள்ளையவர்கள் நிழல் போலத் தங்கி அவர் அன்பையும் பெற்று நல்ல முறையில் தமிழை ஓதி உணர்ந்தார்.

பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்தமையால் ஐயரவர்களுக்கும் அந்த ஆதீனத் தொடர்பு கிடைத்தது. அப்போதைய ஆதீன கர்த்தர் மேலகரம் திரு சுப்பிரமணிய தேசிகர் திரு பிள்ளையவர்களின் புலமையை உணர்ந்து போற்றி மதித்து வந்தனர். அதனால் பிள்ளையவர்கள் அன்புக்குகந்த ஐயரவர்கள் பாலும், அன்புகொண்டிருந்தனர். எனவே, பிள்ளையவர்கள் மறைவுக்குப் பிறகு ஐயரவர்கள் திருவாவடுதுறையில் தொடர்ந்திருக்க வாய்ப்பேற்பட்டது. அப்போது இவரைத் திருவாவடுதுறை சாமிநாதையர் என்றே குறிப்பிடுவார்கள். திருவாவடுதுறையே நிரந்தரம் என்று இருந்த இவர் வாழ்க்கையில் அப்போது ஒரு நல்ல திருப்பு முனை தமிழர்கள் நல் வினையால் ஏற்பட்டது.

கும்பகோணம் கல்லூரியில் அப்போது தமிழ்ப் பண்டிதராக இருந்த திரு தியாகராஜ செட்டியார் (இவர் பிள்ளையவர்களின் மாணாக்கர்களில் முதன்மையானவர்) இவருக்குத் தம் வேலையை வாங்கிக்கொடுத்து ஓய்வு பெற்றார். இந்த நிகழ்ச்சி 1880-ல் நிகழ்ந்தது.

கும்பகோணம் கல்லூரி ஆசிரியரான ஐயரவர்கள் கும்பகோணத்தில் இருந்த அரசின் பெரிய அலுவலர்களையெல்லாம் அறிமுகம் செய்து கொண்டு அவர்களுடன் பழகி வந்தார். அந்த முறையில் அப்போது கும்பகோணத்துக்குப் புதிதாக மாவட்ட முனிசிப்பாக வந்த சேலம் இராமசாமி முதலியாரைப் பார்த்து அறிமுகம் செய்து கொள்ளச் சென்றார். இந்த நிகழ்ச்சியே தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

சேலம் இராமசாமி முதலியாரை முதலில் சந்தித்தபோது தம்மைக் கும்பகோணம் கல்லூரி தமிழ்ப் பண்டிதர் என ஐயரவர்கள் அறிமுகம் செய்து கொண்டார். உடனே முதலியார், 'அப்படியா நீங்கள் என்ன என்ன தமிழ் நூல்கள் படித்திருக்கின்றீர்கள்' என வினவினார். ஐயரவர்கள் தாம் படித்த நூல்களின் பட்டியலை அடுக்கினார். அவ்வளவையும் கேட்ட முதலியார் 'இவ்வளவுதானா?' என்றதும் ஐயரவர்கள் தாம் கம்பராமாயணம் படித்த செய்தியைக் கூறவில்லையே என நினைந்து 'கம்பராமாயணம் முழுவதும் படித்




திருக்கிறேன்' என்று கூறினார். இதற்கும் முதலியார் 'இவ்வளவுதானா? வேறு பழைய நூல்கள் படித்ததில்லையா ? இதனாலென்ன பிரயோசனம்?' என்று கூறினார். ஐயரவர்கள் வியப்படைந்து இவரிடம் ஏதோ சரக்கிருக்கின்றதென்பதை ஊகித்து "நான் படித்த நூல்கள் இவ்வளவுதான். என் ஆசிரியப்பிரான் அறிந்த நூல்களும் இவ்வளவுதான்" என்று கூறித் தமிழில் வேறு நூல்கள் இருப்பதாகத் தெரியவில்லை எனக் கூறினார். முதலியார் 'சீவகசிந்தாமணி படித்திருக்கின்றீர்களா?' என வினவினார்.

"நான் படித்ததில்லை. நூல் கிடைத்தால் படிக்கத் தடை இல்லை" என்று ஐயரவர்கள் பதிலிறுத்தார். இவ்வாறு ஐயரவர்கள் கூறியதைக் கேட்ட முதலியார் "பலரிடமும் தாம் இம்மாதிரி வினவியதாகவும் யாரும் படித்ததாகவோ, படிக்கிறேன் என்றோ கூறவில்லை. நீங்கள்தான் தைரியமாகப் படிக்கிறேன் என்று கூறியவர். என்னிடம் ஒருபிரதி சீவக சிந்தாமணி உள்ளது. நான் அதைத் தனியே படிக்க முயன்று பல இடங்கள் விளங்காமல் தடுமாறினேன். அந்தப் பிரதியைத் தருகிறேன். கவனமாகப் படித்து எனக்கும் பாடம் சொல்லுங்கள்" என்றுகூறிஅப்பிரதியை அளித்தார். அப்பிரதியைப் பெற்று வீட்டுக்கு வந்ததும் ஐயரவர்கள் நூலைப் பிரித்துப் பார்த்தார். முதலில் காப்புச் 'செய்யுளைப் படித்தார்.

"மூவா முதலா உலகம் ஒரு மூன்றும் ஏத்த" என்ற முதலடியைப் படித்ததும் குழப்பம் ஏற்பட்டது. இந்த அடியில் பொருள் விளங்காத சொல் ஒன்றும் இல்லை ஆயினும், கருத்துப் புரியாமல் குழப்பம் ஏற்பட்டது. உலகம் அழியும் தன்மை உள்ளது என்றே அதுவரை அறிந்திருந்த ஐயரவர்களுக்கு அழியாத உலகம் என்ற கருத்துபுதிதாக இருந்தது. நச்சினார்க்கினியர் இதற்கு என்ன உரை எழுதி இருக்கிறார் எனப் பாடலின் கீழே பார்த்தார். "ஆதியும் அந்தமும் அற்ற மூன்று உலகம் எனப் பொருள் கூறி அதற்குப் பல மேற்கோள்களைச் சான்றாகக் கூறியிருந்தார். அந்த மேற்கோள்கள் ஒன்றுகூட ஐயரவர்கள் படித்திருந்த நூல்களிலிருந்து காட்டப் பெறவில்லை. இவையாவும் தனியே ஒரு தமிழ்ப் பிரபஞ்சமாக இருந்தது. தாம் இன்னும் படிக்காத பல தமிழ் நூல்கள் உள்ளன. அவற்றை எல்லாம் தேடிப் பிடித்துப் படிக்க வேண்டும் என்று அன்று விரதம் பூண்டார். அதுவே அவர் வாழ்வின் திருப்பணியாக அமைந்தது. அன்றே தமிழின் புதுயுகம் பூத்தது.

அந்தக் காலத்தில் தமிழின் நிலையைச் சிறிது உணர வேண்டும். சிலப்பதிகாரம் சிறப்பதிகாரம் எனக் கூறப் பெற்றது. சேர அரசன் பாடியநூல் என்ற செய்தி மட்டும் தெரிந்திருந்ததால் பிற்காலத்தில் தமிழில் ஆதி உலாப் பாடிய சேரமான் பெருமான் நாயனாரைச் சிலப்பதிகார ஆசிரியராகக் கருதிச் சேரமான் பெருமான் நாயனாரியற்றிய சிலப்பதிகாரம் என்றே பதிப்பித்தனர். எட்டுத் தொகை என்ற தொகை நூல்கள் இருப்பதே தெரியாமையால், ஏட்டில் குறில்-நெடில் வித்தியாசம் காண முடியாமையால், எட்டுத்தொகை ஏட்டுப் பிரதியை ஏதோ ஏடுகளின் தொகுதி எனக் கருதி 'ஏட்டுத் தொகை' எனவே குறித்திருந்தார்கள்.

வித்துவான் தியாகராச செட்டியார் கும்பகோணம் கல்லூரி ஆசிரியராக இருந்தபோது சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தில் ஒரு பகுதி பாடமாக இருந்தது. பாடப் புத்தகத் தேர்வுக் குழுவினர் அந்தக் காலத்தில் தமிழ்ப் பாடம் தேர்ந்தெடுக்கும் முறை விசித்திரமானதாகும். பேர் மாத்திரம் தெரிந்த நூலிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியைப் பாடமாக வைத்து விடுவார்கள். ஏட்டுச் சுவடியைத் தேடி, உள்ளது உள்ளபடியே யாரேனும் பதித்து விடுவார்கள். அதை வைத்துக் கொண்டு தெரிந்தது தெரியாததெல்லாவற்றையும் குழப்பி தமிழாசிரியர்கள் பாடம் சொல்லுவார்கள். சிலப்பதிகாரம் பழைய நூலென்பது மாத்திரம் அக்காலத்தில் தெரிந்திருந்தது. நூலின் சிறப்பை அறிந்து கொள்வது நூலை அறிந்து கொள்வதைவிடச் சுலபம். ஆகவே சிலப்பதிகாரப் பகுதி பாடமாகவமைந்து விட்டது. தியாகராச செட்டியார் அப்பகுதியைப் பாடம் சொல்ல முயன்று பொருள் காண முடியாமல் இது இந்திர விழவூர் எடுத்த காதையா, இந்திர இழவூர் எடுத்த காதையா எனச் சலித்து 6 மாதம் விடுப்பு எடுத்துக் கொண்டனர். இந்தச் சூழலில் ஐயரவர்கள் தம் தமிழ் மறுமலர்ச்சிப் பணியைத் துவக்கினார். இந்தத் திருப்பணியில் ஈடுபட்டுத் தம் வாழ்நாள் முழுதும் தமிழ் நூல்களைத் தேடி நாடித் தொகுத்து ஆராய்ந்து உலகமே அவர் ஆராய்ச்சிப் பதிப்பை வியக்கும் வண்ணம் பதிப்பித்தளித்தார். தம் நீண்ட வாழ்வில்(87 வயது) அவர் பதித்த நூல்கள் 93, இவற்றில் சில அவருடைய உரைநடை நூல்களும் ஆகும். இவற்றின் சிறப்பை வெளிப்படுத்தும் முறையில் இவருடைய சதாபிஷேகத்தின்போது பாஷா கவிசேகர ரா. ராகவையங்காரவர்கள்,

"பத்துப் பாட்டு பதிற்றுப்பத்
துப்புறப்
பாட்டொடைங்குறு நூறுசிந்
தாமணி
புத்தர் கொள்கை புகல்மணி
மேகலை
பொற்சிலப்பதி காரம் பெருங்
கதை
மெத்து நன்பரி பாடல் பரணி
நூல்
வேம்பத் தூரர் திருவிளை
யாடலோ (டு)
இத்த ரைக்கிர வாதுசெய்
வள்ளன்மைக்கு
யாதுளோம் சாமி நாதற்
குதவற்கே"

என்று கூறி அடுத்த பாடலில் இவர் நூல் பதிப்பிக்கும்போது பட்ட சிரமங்களை,


ஏடு தேடி அலைந்தவூ ரெத்தனை
எழுதி யாய்ந்த குறிப்புக்கள்
எத்தனை
நாடும் அச்சிற் பதிப்பிக்குங்
கூலிக்கு
நாளும் விற்றபல் பண்டங்கள்
எத்தனை

என மிகவும் உருக்கமாகக் கூறியுள்ளனர்.

ஐயரவர்கள் தம் நீண்ட ஆயுட்காலத்தில் வெளியிட்ட நூல்கள் 93 என்பது ஒரு பெரும் மலை எனக் கருதினால், ஐயரவர்கள் இப்பதிப்புக்களுக்காக மேற்கொண்ட முயற்சிகளையும் தொகுத்த நூற்களின் கணக்கையும், எடுத்துள்ள குறிப்புக்களின் குவியல்களின் தன்மைகளையும் வானினும் பரந்ததென்றே கூற வேண்டும்.

ஐயரவர்களை ஒருமுறை பத்திரிகை நிருபரொருவர் சந்தித்து, "ஐயா தாங்கள் உலகில் செயற்கரிய செயல்களை எல்லாம் செய்துள்ளீர்கள். தாங்கள் செய்த புண்ணியங்களின் பலனால் நிச்சயம் வீடுபேற்றையே அடைவீர்கள். தங்களுக்கு இனிப் பிறவியே கிடையாது என்று நிச்சயமாக நம்புகிறோம். தங்கள் முன் தெய்வந் தோன்றி உங்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால் என்ன கேட்பீர்கள்?" என்று வினவினார். அதற்கு ஐயரவர்கள், "நான் மறு பிறவியில் மனிதனாகப் பிறக்க வேண்டும், அதுவும் தமிழ்நாட்டில் பிறக்க வேண்டும். நான் விட்டுச் சென்ற தமிழ்ப்பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற வரத்தைக் கேட்பேன்" என்று கூறிவிட்டு, பெருமூச்சு விட்டு, அப்போது நான் வைத்திருந்த சுவடிகளும், குறிப்புகளும் நான் வைத்திருந்தபடியே அழியாமல் இருக்க வேண்டுமே எனக் கூறினராம்.

ஐயரவர்கள் காலமான பிறகு அவர் தொகுத்த ஏட்டுச் சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும், நூற் குறிப்புக்களும், அவர் உபயோகித்த நூல்களும் அவர் பேரால் திருவான்மியூரில் உள்ள நூல் நிலையத்தில் திருமதி ருக்மிணிதேவி தலைமையில் பாதுகாக்கப் பெற்று வருகின்றன. இவற்றில் உள்ள நூல்களின் அளவு:



1. ஏட்டுச் சுவடிகள் 1484, இவற்றில் உள்ள நூல்கள் 2500

2. கையெழுத்துப் பிரதிகள் 746, இவற்றில் உள்ள நூல்கள் 746.

3. ஐயரவர்களுக்கு வந்த கடிதங்களும் பிற குறிப்புக்களும் பல சிறு துண்டுத் தாள்களில் இருந்து பிரதி செய்யப் பெற்றவை. பக்கங்கள் 12000.

இவைகளுக்கு ஆறு தொகுதிகளாக சுமார் 3000 பக்க அளவில் சுவடிகளின் விளக்கம் என்ற அட்டவணை தயாரிக்கப் பெற்றுள்ளன. இவை நிகண்டு, இலக்கணம், காவியம், புராணம், தல புராணம், பிரபந்தங்கள் (அந்தாதி, அகவல், உலா, கலம்பகம், கோவை, சதகம், பிள்ளைத் தமிழ், மடல், மாலை, மஞ்சரி, வண்ணம்) சமயம், தத்துவம், வரலாறு, இசை, நாடகம், நாட்டியம், வானநூல், சோதிடம், மருத்துவம் என வகைப்படுத்தப் பெற்றுள்ளன. இவற்றில் மூன்றில் இரண்டு பங்கு, அச்சான முன்னரே பதிப்பிக்கப் பெற்ற நூல்களாகும். மூன்றில் ஒன்று அதாவது 1000-க்கும் மேற்பட்ட நூல்கள் தமிழ் மக்கள் அறியாதனவாகும. இவ்விதம் 1000-க்கும் அதிகமான நூல்கள் பதிப்பிக்கப் பெற்றால்தான் தமிழ் மொழியின் அருமையும் பெருமையும் புலனாகும். இவை ஐயரவர்கள் தொகுப்பிற்கு மட்டும் நான் கூறும் கணக்காகும். (நம் நாட்டில் பல இடங்களிலும் வெளிநாடுகளிலும் குவிந்துள்ள சுவடிகளின் கணக்கு இங்கு கூறப் பெறவில்லை.)

ஐயரவர்கள் தம் 60 ஆண்டு தமிழ்ப் பதிப்புப் பணியில் வெளியிட்ட பழந்தமிழ் நூல்கள் 74 என்பதை நினைக்குமபோது ஐயரவர்கள் தொகுப்பில் உள்ள 1000-த்துக்குமதிகமான நூல்களைப் பதிப்பிக்க எவ்வளவு காலம், எவ்வளவு உழைப்புத் தேவை என்பதைச் சிந்திக்கவேண்டும். அவ்வளவு காலமும் இந்தச் சுவடிகள் பாதுகாக்கப் பெற வேண்டும். அத்துடன் சுவடிகள் படித்துப் பேர்த்தெழுதும் கலை பாதுகாக்கப் பெற வேண்டும். சுவடி படிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை ஐயரவர்கள் என் சரித்திரத்தில், ''இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. 'ர' கரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம், சாபமாகத் தோற்றும், சாபம் சரபமாகத் தோற்றும். ஓரிடத்தில் 'சரடு' என்று வந்திருந்த வார்த்தையைச் சாடு என்றே பலகாலம் எண்ணி வந்தேன். தரனென்பதைத் தானென்று நினைத்தேன்'' (பக்கம் 768) என எழுதியுள்ளார். மற்றும் ஓரிடத்தில் 'எத்தரு மயிற்குழாம் இருந்த போன்ற என்ற அடிக்கு நச்சினார்க்கினியர் மேல் நோக்கு தலைத் தருகின்ற மயிற்றிரள் பொலிந்திருந்தனவற்றையொத்த



நூலகத்திலுள்ள சுவடிகள்

என்க' என உரை எழுதி ஏக்கழுத்தம் என்றார் பிறரும் என்று மேற்கோள் காட்டுகிறார். சிறு பஞ்ச மூலத்தில்,

,'கல்லாதான் தான் காணும்
நுட்பமும் காதிரண்டும்
இல்லாதானைக் கழுத்தா
செய்தலும்''

என்ற பாடல் நினைவுக்கு வந்தது''. சிறுபஞ்ச மூலத்தில் வரும் எக்கழுத்தம் என்ற சொல் ஏக்கழுத்தம் என்பது புலனாயிற்று. நீதிநெறி விளக்கத்திலும் 'ஏக்கழுத்த மிக்குடைய' என்றே பதிப்பிக்கப் பெற்றிருந்தது. இங்கும் ஏக்கழுத்தம் என்பதே சொல்லின் வடிவம் என்பதை உணர்ந்த போது எனக்குக்கூடச் சிறிது ஏக்கழுத்தம் உண்டாயிற்று'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏட்டில் எழுதியும், படித்தும் பயின்ற ஐயரவர்களே சுவடி படிக்கையில் தடுமாறிய செய்திகளை அறியும்போது அந்தக் கலையே அழியும் தறுவாயில் அதைக் காப்பாற்றினால்தான் தமிழை உண்மையாகக் காக்க முடியும். இப்போது சிறிய அளவில் ஏழெட்டு மாணவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'சுவடி இயல் பட்ட மேற்படிப்புப் பயிற்சி' என 6 மாதப் பயிற்சி அளித்து வருகின்றது. இப்பயிற்சிக்கு 6 மாதக் காலம் போதாது என்பது சுவடி இயல் துவக்க விழாவின்போதே சுட்டிக் காட்டப் பெற்றது. இப்பயிற்சி ஆண்டு தோறும் பல மாணவர்களுக்கு அளிக்கப் பெற்று நம் பழந்தமிழ்ச் செல்வம் அழியாமல் பாதுகாக்கப் பெறல் வேண்டும்.

இப்பயிற்சிகள் இல்லாமல் சிலர் இப்போது சுவடிகளைப் பதிக்க முன் வருகின்றனர். இம்முயற்சியால் பல பிழைகள் மலிகின்றன. ஏட்டில் இருந்தாலாவது ஓரளவு ஊகிக்கலாம. அச்சில் வந்தால் ஊகிக்கவே இயலாது. உதாரணமாக, ஏட்டில் 'பொன பினஎன' என்ற அடியின் பொருள் உணராமல் 'போன பின்னே' எனப் பதிப்பித்துள்ளனர். ஏட்டுச் சுவடிகளின் உதவியினால் இச்சொல் 'பேரன் பின்னே' என உணர முடிந்தது.

ஒரு பர்டலில் 'தங்கத் தகடு மத்தநதி மருப்பு' என்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இச்சொற்களுக்குப் பொருள் ஏதும் விளங்கவில்லை. நதிக்கு மருப்பு(கொம்பு) உண்டு என்பது மரபில்லை. நதிக்கு மத்தம் (மயக்கம்) ஏற்படுவதும் மரபில்லை. கூர்ந்து கவனிக்கும்போது புணர்ச்சியில் 'அகரம் 'ம' வாகியுள்ளது புலனாகி மத்த நதி. அந்தந்தி என்று

## கும்பகோணத்தில் கைத்தறிக் கண்காட்சி

மகாமகம் திருவிழாவையொட்டி தேசிய கைத்தறிக் கண்காட்சி. அமைப்பதற்கான பணி, கும்பகோண நகர் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் இரவும் பகலும் நடந்து கொண்டு இருக்கிறது. மத்திய தொழில் அமைச்சகத்தின் கைத்தறி வளர்ச்சி ஆணையினரால் இக்கண்காட்சி அமைக்கப்படுகிறது. கைத்தறித் துறையின் வளர்ச்சியையும், திட்டங்களையும் விவரிப்பதற்கான ஒரு அரங்கம் இதில் அமைக்கப்படவிருக்கிறது. கைத்தறியைப் பற்றிய திரைப்படங்களும் இவ்வரங்கில் இடம் பெறும். பல மாநிலங்களும் இக்கண்காட்சியில் தங்கள் அரங்கங்களை அமைக்கும். இதில் 20 சதவிகித தள்ளுபடியுடன் கைத்தறித் துணிகளை இம்மாநிலங்கள் விற்பனை செய்யும். கலாச்சார நிகழ்ச்சிகளும், ஆடை அலங்கார நிகழ்ச்சிகளும் இக்கண்காட்சியில் இடம்பெறும்.

## ரயில்வே பயணிகளின் வசதிகளைக் கவனிக்க தனிப் பிரிவு

ரயில் பயணிகளை நேரடியாகப் பாதிக்கக்கூடியவற்றைக் கவனிக்க ரயில்வே கழகம் ஒரு தனிப் பிரிவை அமைத்துள்ளது. இத் தனிப் பிரிவு சுத்தம், உணவு வழங்குதல், ரிசர்வேஷன் கிடைப்பதில் சிரமம் ஆகிய குறிப்பிட்ட துறைகளைக் கவனிக்கும். சோதனையிடுவதற்கு முக்கிய ரயில்களையும், ரயில் நிலையங்களையும் தெரிந்தெடுக்கும்படி ரயில்வே கழகம் மண்டலரயில்வே தலைமை மேலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. டிவிஷனல் மேலாளர்கள் வாரத்திற்குக் குறைந்தது மூன்று பயணி ரயில்களையும், இரண்டு ரயில் நிலையங்களையும் மூத்த அதிகாரி மூலம் சோதனை இடவேண்டும். சோதனையின்போது அவ்வதிகாரிகள், ரயில் பெட்டிகள், ரயில் நிலையங்கள், தங்கும் அறைகள் ஆகியவைகள் சுத்தமாக இருத்தல், விளக்குகள் உன்பட பொருத்தப்பட்டுள்ள பொருட்களின் நிலைமை, தண்ணீர் கிடைத்தல் ஆகியவற்றைக் கவனிப்பார்கள். மண்டல தலைமை மேலாளர்கள் மூலம் டிவிஷனல் தலைமையகங்களிலிருந்து இவ்விஷயங்கள் குறித்து தினமும் இவ் தனிப் பிரிவிக்கு அறிக்கைகள் வரும். தேவைப்படும் இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு இவ்வறிக்கை உதவும்.

---

விளக்கமுற எல்லாம் சரியாகப் புரியவந்தது. இவற்றை உணரத் தமிழ் யாப்பிலக்கணப் பயிற்சி மிகவும் அவசியமாகும். இந்த இடர்ப்பாடுகளை உள்ளத்தில் கொண்டு ஏட்டுச் சுவடிகளைப் படிக்கவும், பிரதி செய்யவும், பதிப்பிக்கவும் தொடர்ந்து ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதனால் ஐயரவர்கள் தொகுத்த சுவடிகளில் இதுவரை அச்சில் வராத நூல்களின் அளவும் அவற்றை ஆய்ந்து பதிப்பிக்க் வேண்டிய அவசியமும், அதற்கு எத்தனை நூற்றாண்டு உழைப்பும் தேவை என்பது புலனாகும்.

இனிப் பதிப்பாகியுள்ள நூல்களின் சுவடிகளின் அவசியத்தையும் உணர வேண்டும். ஏற்கெனவே பதிப்பான நூல்களுக்கு (ஐயரவர்கள் பதிப்புத் தவிர பிற) இன்ன சுவடிகள் மூலமாக இருந்தன என்று கூற இயலாது. எனவே அந்நூல்களுக்குச் சில சிறந்த பாடங்கள், விளக்கங்கள் இவற்றிலிருந்து கிடைக்கும். அச்சில் பதிக்கப் பெறாத சில பகுதிகளும் இவற்றில் இருக்கலாம்.

உதாரணமாக, மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பெரிய புராணம் பாடம் சொல்லுகையில் கண்ணப்ப நாயனார் சரித்திரம் அச்சுப் புத்தகத்தில், சிவகோசரியார் துதித்தலாக வரும் பாடல்கள் இடம் பெறவில்லை. அந்தப் பகுதியில் அவை விட்டுப் போன செய்தியைப் பிள்ளையவர்கள் கூறி, திருவாவடுதுறை மடத்திலிருந்த பெரிய புராணச் சுவடியை எடுத்து வரச் செய்து அதிலிருந்து அப்பகுதியில் விட்டுப் போன 5 பாடல்களைச் சுட்டிக் காண்பித்தனராம்.

நூலகத்தில் ஐயரவர்கள் தொகுப்பில் உள்ள தாயுமானவர் பாடல்கள் என்ற சுவடியில், அச்சுப் பிரதிகளில் காணப் பெறாத 'மூலகுரு' என்ற பதிகம் காணப் பெறுகின்றது.


'சிவப்பிரகாச விகாசம்' என்ற நூலில் அச்சுப் பிரதியில் விடுபட்ட செய்யுட்கள் 19 ஏட்டுச் சுவடியில் உள்ளன. குவலயானந்தம் என்ற அச்சுப் பிரதியினின்றும் முற்றிலும் வேறுபட்ட ஒரு இலக்கண நூலே உள்ளது.

அச்சில் சிவஞான பாலைய தேசிகர் மீது சிவப்பிரகாசர் பாடியதாக உள்ள நெஞ்சுவிடு தூது என்ற நூலின் பெயரும், ஊரும் வரும் இடங்கள் மாற்றப் பெற்று 'கமலை ஞானப் பிரகாசர் மீது ம்ா.சிவாமணி தேசிகர் இயற்றிய நெஞ்சுவிடு தூது' என்ற பிரதி ஒன்று உள்ளது. ஆராய்ச்சியாளர்கள் இதில் எது மூலம், எது காப்பி என்பதை இனி ஆராய வேண்டும். இம்மாதிரிப் பல விவரங்கள் அறியவும், ஆய்வு செய்யவும் இந்தச் சுவடிகள் பயன்படுமாதலால் இவற்றை அழியாமற் பாதுகாப்பது அவசியமாகின்றது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இச்சுவடிகளைப் பிரதி செய்ய எத்தனை காலம் தேவை எனக் கணக்கிட்டதில் ஒரு தனி மனிதன் சுமார் 100 ஆண்டுகள் பிரதி செய்ய வேண்டிவரும் எனத் தெரிய வருகின்றது.

ஓலைச் சுவடிகளின் நிலை பற்றியே இதுகாறும் சொல்லப் பெற்றது. கையெழுத்துக் காகிதப் பிரதிகளிலும் மேலே கூறிய செய்திகள் யாவும் அடங்கியுள்ளன. என்றாலும் இவை சுவடிகளை விட விரைவில் அழியும் தன்மை உள்ளனவாக இருப்பதால் இவற்றை விரைவில் படியெடுத்துப் பாதுகாத்தல் அவசியமாகின்றது. இவற்றுக்கெல்லாம் தேவையான மூலதனமும் ஆள் பலமும் இல்லாத போதிலும் இக்காரியத்துக்கு முதலிடம் கொடுத்து இவை பிரதி செய்யப் பெற்று வருகின்றன. அரசின் உதவியும் தக்க பிரதி செய்வோர்களும் கிடைத்தால் இப்பணியை ஊக்கமுடன் நிறைவேற்றலாம்.

இங்ஙனம் பிரதி செய்து பாதுகாக்கும் முயற்சியின் முதற்படியாக அச்சில் வராத நூல்களைப் பிரதி செய்து தக்க அறிஞர்களி



மகாமகோபாததியாய 'சன்னத்' பட்டமும் டாக்டர் பட்டமும் அளிக்கப்பட்ட பட்டயங்கள்.

டம் கொடுத்து குறிப்புரையும், முகவுரையும், ஆய்வுரையும் வரையச் செய்து மாதந்தோறும் ஒரு நூலை 'அச்சில் வராத தமிழ் நூல் அறிமுகம்' என்ற தலைப்பில் அறிமுகம் செய்து நூலை அச்சிற் பதிப்பிக்க ஏற்ற வகையில் பாதுகாக்க இந்த ஆண்டில் திட்டமிட்டு இதுவரை 8 நூல்கள் அறிமுகம்செய்யப் பெற்றுள்ளன. இவை தொடர்ந்து நடைபெற முயன்று வருகிறோம். மாதம் ஒரு நூல் என்றால்கூட 1,000 மாதங்களுக்கு மேல் இந் நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும்.

மேலும், இங்குள்ள சுவடிகளையும், நூல்களையும் ஆராயும் போது பல உண்மைகள் தெரிய வருகின்றன. தமிழ் எழுத்து மொழி வரலாறு அறிய இயலும், சமுதாய சமூக அமைப்புக்களை உணர வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. அவ்வக்காலங்களில்வாழ்ந்த மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக. மகாபாரதம் அசுவமேதம் என்ற 1300 பாடல்கள் கொண்ட காவியம் ஒன்று உள்ளது. இதனை இயற்றியவர் 'அதிராம பட்டிணம் சையத் முகம்மது அண்ணவியார்' என்பதை அறியும் போது நாம் இப்போது பேசி வரும் தேசிய ஒருமைப்பாடு எவ்வளவு இறுக்கமாக இருந்தது என்பது புலனாகும்.

அதே போல குணங்குடி மஸ்தான் சாயபு பாடல்கள்' என்ற நூலைத் 'திறந்து பார்த்ததும் முதன் முதலாக முகப்பில் காணப் பெறுவது சரவணப் பெருமாளையர் இயற்றிய மஸ்தான் சாயபு நான்மணி மாலையாகும். சரவணப் பெருமாளையர், திருத்தணிகைச் சந்நிதி முறை இயற்றிய கந்தப்பையர் என்னும் வீர சைவப் புலவரின் திருமகனாவார் என்ற செய்தியும் தமிழ் இலக்கிய வட்டங்களில் சாதி-மத-இன வேறுபாடு அக்காலத்தில் இல்லை என்பதும் உணரலாம்.

ஐயரவர்கள் தொகுப்பில் பல பத்திரிகை இதழ்கள் ஜனவிநோதினி, சித்தாந்த தீபிகை, செந்தமிழ், கலைமகள் போன்றவை 1870 முதல் நாளது வரை வந்தவை உள்ளன. இவை சுமார் 76 தலைப்பில் 700 தொகுதிகளுக்கு மேல் உள்ளன. இவற்றில் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், செய்திகளும் உள்ளன. இவை வேறு எந்த நூல்களிலும் இடம் பெறவில்லை. ஆதலால், இவைகளில் உள்ள கட்டுரைகளுக்குப் பத்திரிகை வாரியாக இப்போது அட்டவணை செய்து வரப் பெறுகின்றது. இம் முயற்சி நிறைவேறினால் ஆராய்ச்சியாளர்களுக்கு இது ஒரு 'கை ஏடு'(ரெடி ரெக்கனர்) போலப் பயன்படும். பின்னர் இந்த அட்டவணையையே, ஆசிரியர் பெயர் வரிசையிலும், பொருளமைப்பு வரிசையிலும், ஆண்டுகளின் அடிப்படையிலும் வெவ்வேறு அட்டவணை தயாரிக்கலாம். அதனால் இலக்கிய வரலாறு, பத்திரிகை வளர்ச்சி முதலிய ஆய்வுகள் செய்வதைச் சுலபமாக்கலாம்.

இதுவரை கூறியவற்றால், ஐயரவர்கள் தமிழ் மக்களுக்குத் திருத்திப் பூட்டிய ஆபரணங்களின் வகைகளோடு சேமித்து தமிழ் மக்கள் பிற்காலத்தில் தமிழ் தாய்க்கு அணிவிக்க அளித்த ஆபரணங்களின் அளவும், பெருமையும், ஐயரவர்கள் தமிழ் காதலும் ஓரளவு .புரியவரும்



# சேமிப்பு ஒரு சமயசஞ்சீவி!



இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற மக்கள் ஒரு பக்கம் விலைவாசி ஏற்றத்தினாலும், மறுபக்கம் சங்கிலித் தொடர்போல், வரம்பு இல்லாத தேவைகள் அதிகரிப்பதாலும் அல்லலுறுகின்றனர். அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் பல. அந்தச் சூழலுக்கு இடையே 'நம்மால் சேமிக்க இயலுமா?' என்ற வினாக் குறி எழுவது இயல்புதானே?

நல்ல காரியங்களுக்குக் கடன் வாங்கிச் செலவழிக்கலாம். ஆனால், தவிர்க்கக்கூடிய செலவினங்களுக்குக் கடன் வாங்கிச் செலவழிக்கின்ற மனப்பான்மையை நாம் அகற்றி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். மனம் போன போக்கிலே ஊதாரித்தனமாகச் செலவு செய்யும், மனப்போக்கினைத் தடுக்க முயற்சிக்கலாம் அல்லவா?

**நிழலின் அருமை!**

கையில் பணம் இருப்பு இருந்தால் நாம் அதை அப்படியே செலவு செய்துவிடுகிறோம். ஆனால், ஒரு கணிசமான தொகையைச் சேமிக்க வேண்டும் என்ற எண்ணமே நமக்கு வருவதில்லை. வருகின்ற வருவாயிலேயே கொஞ்சங் கொஞ்சமாக மிச்சப்படுத்தி - சேமித்து தன் சொந்தக் காலில் நிற்க நம்மை நாமே தயார்ப் படுத்திக்கொள்ள வேண்டும்.

துன்பத்தில் இன்பம் காண்பது போலவும், வெய்யிலிலேயே நிழலின் அருமையைத் தேடுவது போலவும், நாம் பணத் தட்டுப்பாட்டின் மத்தியிலேயும் சேமிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்—வறுமையில் செம்மை காண்பது போல!

செலவிட வேண்டும்-கையிலுள்ள பணத்தைச் செலவு செய்தாக வேண்டும் - கடன் வாங்கியாவது செலவு செய்யவேண்டும் என்ற துடிப்பு-தினவு-கொக்கரிப்பு-சேமித்துத் திட்டமிட்டு வாழவேண்டும் என்ற எண்ணத்தையே குடை சாய்த்துவிடும். எனவே, மிச்சப்படுத்தி வாழவேண்டும் என்ற பழக்கத்தை-பண்பை ஒரு வைராக்கியமாக, ஒரு உறுதியான முடிவாகக் கைக்கொண்டு வாழ்ந்தால்தான் சேமிக்க முடியும்.



மேலும், சிறு தொகை சேமித்து, பெரும் பிரச்சினைகளைச் சமாளிக்கப் பயன்படாது என்ற நினைப்பில், மிச்சப்படுத்தக் கூடிய சக்தி உள்ளவர்கள்கூட, பல சமயங்களில் மிச்சப்படுத்தாமலேயே வாழ்ந்து விடுகிறார்கள். நெருக்கடியான நேரத்தில் மட்டும்-நெருக்கடியான காலகட்டத்தில்—இழந்த கால ஊதாரித்தனத்தை எண்ணி வருந்துகிறார்கள். ஆனால், வருந்துவதால் பயன் என்ன?

**கை கொடுக்கும்!**

திட்டமிட்டுச் சேமித்துச் சீராக வாழ்வதை ஒரு இலட்சியமாக-ஒரு கொள்கையாக-வாழ்க்கைக்கே வழிகாட்டும் அறநெறியாகக் கைக்கொண்டு ஒழுக வேண்டும் என்ற மனத் திண்மை-மன உறுதி-பிடிவாதம், வாழ்க்கையில் நாம் சந்திக்கும் அல்லது நம்மை முற்றுகையிடும் பணக் கஷ்டங்களைச் சுதாரிக்கக் கைகொடுத்து உதவும்.

'சிறு தொகைதானே, இதை மிச்சப் படுத்தி வாழ்க்கையில் என்ன சாதிக்கப் போகிறோம்?' என்ற அக்கறையற்ற மனப் பான்மையைத் தூக்கி எறிந்து விட்டால், நாம் எளிதாக மிச்சப்படுத்தப் பழகிக் கொள்ளலாம்.

எனவே, மிச்சப்படுத்த வேண்டும் என்கிற பழக்கமும்-சேமிக்க வேண்டும் என்கிற பண்பாடும்-இறுக்கிப் பிடித்து வாழவேண்டும் என்ற நினைப்பும் நமக்கு வந்தாலொழிய நாம் சேமிக்க முடியாது.

**இருப்பதுபோல் தோன்றி....**

சிக்கனம் - சேமிப்பு இவற்றின் அவசியத்தை வலியுறுத்தத்தான், இரண்டாயிரம்

ஆண்டுகளுக்கு முன்பேயே திருவள்ளுவர் தம் திருக்குறளில்—

''அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உள போல
இல்லாகித் தோன்றாக் கெடும்.''

என்று கூறியுள்ளார். கிடைக்கும் வருவாயின் அளவு அறிந்து, அதற்குப் பொருத்தமாக வாழாதவனுடைய வாழ்க்கை, இருப்பதுபோல் தோன்றி, இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்'' என்று சீராகத் திட்டமிட்டு வாழும் கலையின் நுட்பத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

**என்ன நன்மை?**

சேமிப்பில் என்னென்ன திட்டங்கள் உள்ளன? அவற்றால் என்ன நன்மை?

இவற்றை விளக்கிடும் வண்ணம் பல திட்டங்களை மக்களிடையே விளக்கி வருகிறது, தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை.

நாட்டின் இன்றைய பொருளாதாரத் தேவைக்கும், மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கும் ஒருங்கே நலம் பயப்பது சிறுசேமிப்புத் திட்டமாகும்.

ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகையில் மூன்றில் இரண்டு பங்கைத் தமிழக அரசின் முன்னேற்றத் திட்டங்களுக்காக மத்திய அரசு 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக அளித்து வருகிறது.

**எல்லாரும் சேமிக்கலாம்!**

சிறு சேமிப்புத் திட்டங்கள் அஞ்சல் நிலையங்கள் வாயிலாகச் செயல்பட்டு வருகின்றன. எளியோர், செல்வந்தர், விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள், சிறார்கள் போன்றோர் அவரவர் நிலைக்கு ஏற்ப, சேமிப்பதற்கான சிறந்த திட்டங்கள் உள்ளன.

சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு ஏனைய வங்கிகளில் அளிக்கப்படும் வட்டியைவிட, அதிக வட்டி அளிக்கப்படுவதுடன், வரி செலுத்தும் நிலையில் உள்ளவர்களுக்குக் கவர்ச்சிகரமான வரிச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

**சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம்**

இத்திட்டத்தில் மாதச் சம்பளம் பெறுபவரும், குறைந்த வருமானமுள்ளோரும், மாதா மாதம் சேமிக்க விரும்புவோரும் சேமிக்கலாம். ஐந்து ஆண்டுகள் அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டம், பத்து ஆண்டுகள் தொடர் வைப்புத் திட்டம் (10 years Cumulative Deposit Scheme) என்பது இதற்குப் பெயர். இவ்விரு திட்டங்களும் 'சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம். (Pay Roll Savings Scheme) என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றன. இது, அலுவலகங்களில், தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்குப் பெரிதும் துணைபுரியும் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் கணக்குத் துவங்கியவர்கள், மாதாமாதம் அஞ்சலகம் சென்று





அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயனடைந்த சென்னை எழும்பூர், மாநகராட்சி நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு எம். சின்னசாமி அவர்கள் கூறுகிறார்:

''முதன் முதலில் நான் இந்தத் திட்டத்தில் மாதம் ரூ. 10 சேர்த்து வந்தேன். இந்தப் பணம் ஐந்து ஆண்டுகள் கழித்து வட்டியுடன் ரூ. 760 கிடைத்தது. அந்தச் சமயத்தில்—அதாவது 1978ல் என்னுடைய மகள் திருமணத்தை நிச்சயித்திருந்தோம். இந்தப் பணம் அப்போது மிகவும் பயன்பட்டது.

''இப்போது அதிகப்படியாகச் சேமிக்க வேண்டும் என்ற அவா எழுந்தது. அதாவது மாதம் ரூ. 65 இப்போது—1979 அக்டோபரிலிருந்து இதே திட்டத்தில் சேமித்து வருகிறேன். இத்தொகை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ரூபாய் ஐயாயிரமாகக் கிடைக்கும். என்னுடைய மூத்த மகனுக்கு 9 வயதாகிறது. எதிர்காலத்தில் அவனது கல்விக்கு இந்தப் பணம் மிக்க உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

''மாதந்தோறும் சம்பாதிக்கிறோம். அதை எல்லாவற்றையும் செலவழித்துவிடாமல், 'நாளைக்கு வேண்டும்' என்ற எண்ணத்தில் கொஞ்சம் மிச்சம் பிடித்துச் சேமிக்கவும் வேண்டும்.

''என்னைப் போலவே எங்கள் பள்ளியில் உள்ள 18 ஆசிரியர்களும் சேமித்து வருகிறார்கள். இளம் வயதிலேயே சேமிக்கின்ற பழக்கம் வர வேண்டும் என்ற நோக்கத்தில் எங்கள் பள்ளி மாணவர்களையும் சேமிக்கும்படி தூண்டி வருகின்றோம். அதன் பயனாக, எங்கள் பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்ட உத்தேச தவணைக்கு அதிகமாகவே, மும்மடங்கு சேமித்து வந்துள்ளனர்.''

பணம் கட்ட வேண்டிய தேவையில்லை.

சம்பளம் வழங்கும் அலுவலர்களே, கணக்குத் துவங்கியவர்கள் சம்பளத்தில் பிடித்து, மாதாமாதம் அஞ்சலகத்தில் செலுத்திவிடுவார்கள்.



சிறுகச் சிறுக மாதாமாதம் சேமித்த பணம் 5 ஆண்டு அல்லது 10 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன் மொத்தமாகக் கிடைக்கும்.

இந்தப் பணம், பண நெருக்கடியான காலத்தில் ஒரு சமயசஞ்சீவியாக இருந்து நமக்கு உதவும்.

தமிழ்நாடு, சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில், ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாய் இருந்து வருகிறது. ஆண்டுக்காண்டு சம்பளப் பட்டியல் மூலம் சேமிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் தமிழகத்தில் சம்பளப் பட்டியல் திட்டத்தின் மூலம் கிடைத்த வருவாய் வருமாறு:

| | சேமிப்பவர்களின் எண்ணிக்கை | சேமிப்புத் தொகை. ரூ. (கோடி) |
|---|---|---|
| 1977-78 | 10,50,244 | 9.25 |
| 1978-79 | 11,30,369 | 10.05 |

**அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்**

ஐந்து ஆண்டு அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் (Five years Post Office Recurring Deposit) இது.

இத்திட்டம் அனைவருக்கும் ஏற்ற அருமையான திட்டமாகும். குறிப்பாக, குறைந்த வருமானமுள்ளோர், அலுவலகங்களில் பணிபுரிவோர், தொழிலாளர்கள், சிறுகச் சிறுக மாதாமாதம் சேமிக்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றதொரு திட்டமாகும் இது. ரூபாய் நூறு வரை இக் கணக்கில் சேமித்தால், ஐந்தாண்டுகளில் 10.5 சதவீதம் கூட்டு வட்டியுடன் நம்முடைய சேமிப்பு எப்படி வளர்ந்துள்ளது என்பதைக் கீழே காணலாம்:

| மாதம் சேமிக்கும் தொகை | அசல் | வட்டி | 5 ஆண்டிற்குப் பின் வட்டியுடன் கிடைக்கும் தொகை |
|---|---|---|---|
| ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 5 | 300 | 89.05 | 389.05 |
| 10 | 600 | 178.10 | 778.10 |
| 15 | 900 | 267.15 | 1167.15 |
| 20 | 1,200 | 356.20 | 1556.20 |
| 25 | 1,500 | 445.25 | 1945.25 |
| 50 | 3,000 | 890.50 | 3890.50 |
| 100 | 6,000 | 1,781.00 | 7781.00 |



சென்னை இராயப்பேட்டையில் மருத்துவமனையில் உதவியாளராகப் பணியாற்றும் திருமதி சாந்தா அரிதாஸ் அவர்கள் அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்த காரணத்தை விளக்குகிறார்:

''1977ஆம் ஆண்டிலிருந்து ரூ. 25 வீதம் சேமித்து வருகிறேன். சம்பளத்திலேயே இத்தொகையை அவர்களாகவே பிடித்துக் கொள்வதால், அஞ்சல் நிலையத்துக்குப் போய்க் கட்ட வேண்டிய அவசியமில்லை. இந்தப் பணம் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மொத்தமாகக் கிடைத்ததும், அதைச் செலவு செய்யாமல் அப்படியே குறிப்பிட்ட காலச் சேமிப்பில் (Fixed Deposit) போட்டுவிடுவேன். எனக்கு ஒரு மாதக் கைக்குழந்தை இருக்கிறது. அதன் எதிர்காலத்துக்கு—கல்விக்கு இந்தப்பணம் எனக்கு உதவியாக இருக்கும். சேமிப்பின் அவசியத்தினை உணர்ந்தே, என்னுடன் பணியாற்றும் 75 பேர்களும் மாதாமாதமும் சேமித்து வருகிறார்கள்.''

இந்தக் கணக்கை எந்த ஒரு அஞ்சல் நிலையத்திலும் துவங்கலாம். ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் சேமிக்கலாம். ஆனால், மாதாமாதம் சேமிக்கும் தொகை ஒரே அளவாக இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் சிறப்புச் சலுகை ஈட்டுறுதிச் (Insurance Coverage) சலுகையாகும். இத் திட்டத்தின்கீழ் ரூ. 5, 10, 15, 20 என்ற கணக்குத் துவங்கி, இரண்டு ஆண்டுகள் தவறாமல் சேமித்து, சேமிக்கின்ற காலத்தில் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால், ஐந்தாண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுவதும், உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும்.

கணக்குத் துவங்கியபோது வயது 18க்குக் குறைவாகவோ, 53க்கு அதிகமாகவோ இருத்தல் கூடாது. இந்தச் சிறந்த சலுகையை எந்த ஒரு வங்கியும் அளிப்பதில்லை.

**அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம் (C.T.D.)**

வருமானவரி செலுத்துபவருக்கு ஏற்ற திட்டம் இது. குறைந்த முதலீடு ரூ. 5. தனி நபர் கணக்கில் ஆண்டுக்கு ரூ. 1,20,000க்கு மிகாமலும், கூட்டுக் கணக்கில் ரூ. 2,40,000க்கு மிகாமலும் தொகை செலுத்தலாம். சேமிக்கும் தொகை ஒரே அளவினதாக இருக்க வேண்டும். வட்டி முழுவதிற்கும் வருமானவரி விலக்கு உண்டு. சொத்து (செல்வ) வரியிலிருந்து வரி விலக்கு உண்டு. ரூ. 1000 வரை இக்கணக்கில் சேர்ந்தால், கணிசமான வருமான வரிவிலக்கு பெறுவதோடு தொகை 6.75 சதவிகிதக் கூட்டு வட்டியுடன் எப்படி வளர்ந்திருக்கும் என்பதைக் கீழே காணலாம்:

| மாதம் சேமிக்கும் தொகை | அசல் | வட்டி | 10 ஆண்டிற்குப் பின் கிடைக்கும் தொகை |
|---|---|---|---|
| ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 5 | 600 | 246.60 | 846.60 |
| 10 | 1200 | 493.20 | 1693.20 |
| 50 | 6000 | 2466.00 | 8466.00 |
| 100 | 12000 | 4932.00 | 16932.00 |
| 1000 | 1,20,000 | 49,320.00 | 1,69,320.00 |



**பள்ளிச் சேமிப்பு வங்கி**

பள்ளி, மாணவ, மாணவிகளுக்கான பயனுள்ள திட்டமே, பள்ளிச் சேமிப்பு வங்கி (சஞ்சாயிகா என்றும் கூறுவதுண்டு). 1971ஆம் ஆண்டில் துவக்கப்பெற்றது இது.

கடந்த இரு ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் கிடைத்த வருவாய் வருமாறு:

| | 1977-78 | 1978-79 |
|---|---|---|
| சிறு சேமிப்பில் ஈடுபட்டுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | 2,985 | 3,250 |
| சேமிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை | 9,93,578 | 11,58,210 |
| சேமித்த தொகை | 16,38,594 | 17,63,563 |



பள்ளிச் சேமிப்புத் திட்டத்தில் (சஞ்சாயிகா) சேர்ந்துள்ள, சென்னை லேடி. எம். சி. டி. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் எட்டாவது படிக்கும் மாணவி இ.பி.டி. கற்பகம் அவர்கள் பள்ளியிலேயே மிக அதிக அளவில் சேமித்திருக்கிறார். அவர் கூறுகிறார்:

"இதுவரை ரூ. 300 வரை சேர்த்திருக்கிறேன். அந்தப் பணத்தில் இதுவரை எதையும் நான் எடுத்ததில்லை. அவ்வாறு எடுப்பதாக இருந்தால், அந்தப் பணம் என்னுடைய சீருடைக்கோ, அல்லது புத்தகங்கள் வாங்கவோ பயன்படும். பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் கொடுக்கும் காசை - அது சிறுதொகையாக இருந்தாலும் வீணாகச் செலவழிக்காமல் சேமித்து வந்தால், அது வருங்காலத்துக்கு நமக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். எவ்வளவுக்கெவ்வளவு சேமிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது."



ஆண்டு முழுவதும் மாணவர்கள் சிறுகச் சிறுகச் சேமித்த பணம் அவர்களது மேற்படிப்பிற்கு உதவுகிறது. இடையே இப்பணம் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதே சமயத்தில் மாணவர்களிடையே நாட்டுப்பற்றையும், தொண்டு வளர்ச்சியையும் தூண்ட இத்திட்டம் வழிவகுக்கின்றது.

மேற்கண்ட திட்டங்களன்றி, வேறுபல சிறந்த திட்டங்களும் உள்ளன. அவை பற்றியும் சற்றுத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

**தேசிய சேமிப்புப் பத்திரங்கள்**

ஏழு ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்களில் (7 years National Savings Certificate) இரண்டாம், மூன்றாம் வெளியீடுகள், வருமான வரி கட்டுபவர்களுக்கு வரியைக் குறைக்க உதவும் சிறந்த திட்டங்களாகும். இரண்டாவது வெளியீட்டிற்கு (II Issue) ஆண்டுக்கு 6.5 சதவிகிதம் வட்டியும், மூன்றாவது வெளியீட்டிற்கு (III Issue) 6 சதவிகித வட்டியும் அளிக்கப்படுகிறது. வட்டி முழுவதற்கும் வருமான வரிவிலக்கு உண்டு.

ஏழு ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் நான்கு மற்றும் ஐந்து வெளியீடுகள், வருமானவரி கட்டாதவர்களுக்கு உகந்த அதிக வட்டி அளிக்கும் திட்டங்களாகும். ஐந்தாவது வெளியீட்டிற்கு ஆண்டுக்கு 10.75 கூட்டுவட்டியும், நான்காவது வெளியீட்டிற்கு ஆண்டுக்கு ரூ. 10.25 சதவிகித வட்டியும் வழங்கப்படுகிறது.

**அஞ்சலகக் கால வைப்புத் திட்டம்**

அதிக வட்டி வேண்டுவோருக்கு ஏற்ற திட்டம்தான் அஞ்சலகக்கால வைப்புத் திட்டமாகும் (Post Office Time Deposit). இத்திட்டத்தில், ஓராண்டிற்கு முதலீடு செய்தால் 8 சதவிகித வட்டியும், இரண்டு ஆண்டிற்கு 8.5 சதவிகித வட்டியும், மூன்றாண்டிற்கு 9 சதவிகித வட்டியும், ஐந்து ஆண்டிற்கு 10.5 சதவிகிதம் வட்டியும் அளிக்கப்படுகிறது.

**பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதி**

பெரும்வியாபாரிகளுக்கும், சொந்தமாகத் தொழில் நடத்துபவர்களுக்கும், எதிர்கால நல்வாழ்விற்காகச் சேமிக்கவிரும்புமெல்லார்க்கும் ஏற்றது பொதுமக்கள்வருங்கால வைப்பு நிதித் திட்டம் (Public Provident Fund). 7.5 சதவிகித கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது. முதலீட்டுத் தொகைக்கும், வரிச்சலுகை வழங்கப்படுகிறது. வட்டி முழுவதிற்கும் வருமான வரிவிலக்கு உண்டு. சொத்து (செல்வ) வரியிலிருந்தும் வரிவிலக்கு உண்டு. ஸ்டேட் வங்கி, அதன் துணை நிறுவனங்கள் மற்றும் எல்லாத் தலைமை அஞ்சல் நிலையங்கள் மூலமாக இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு**

இலட்சக்கணக்கான மக்கள் சேமிக்கும் திட்டமே, அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு (Post Office Savings Bank). இது 5.5 சதவிகித வட்டியளிக்கும் ஒரு திட்டமாகும். இந்தச் சேமிப்புக் கணக்கில் ரூ. 200க்குக் குறையாமல், ஆறுமாதக் காலத்திற்கு வைத்திருந்தால், ரூ. 20.5 இலட்சத்திற்கான 11,116 பரிசுகளில் ஒன்றைப் பெற வாய்ப்பு உண்டு. முதற்பரிசு ரூ. 1,00,000 ஆகும்.



சென்னை லேடி எம். சி. டி. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி ராஜீ பாய் ஆதம்ஸ் அவர்கள் 'பள்ளிச் சேமிப்பு வங்கி' பற்றிக் கூறுகையில் தெரிவித்த கருத்தாவது:

"எங்கள் பள்ளியில், மாணவிகளை இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு ஊக்குவித்து வருகிறோம். அதன் பயனாக இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் சேமித்து வருகின்றனர். கடந்த ஆறாண்டுகளாக எங்கள் பள்ளியில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இரண்டு ஆசிரியைகள் பொறுப்பாக இருந்து இத்திட்டத்தை இங்கு வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள். சிறுசேமிப்பு சம்பந்தப்பட்ட போட்டிகளிலும் எங்கள் பள்ளி மாணவிகள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார்கள்.

"இத்திட்டத்துக்குப் பெற்றோர்களும் ஊக்கம் தருவதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும். இந்த ஆண்டு நூற்றுக்கு நூறு சதவிகிதம் பேர் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறும் இவரும் மாதா மாதம் சேமித்து வருவது பற்றி மேலும் கூறுகிறார்:

"1971-76 ஆண்டுகளில் ரூ. 20 வீதம் மாதாமாதம், அஞ்சலக வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் சேமித்து வந்தேன். அது பிறகு ரூ. 1,320 ஆக எனக்குக் கிடைத்தது. அந்தப் பணம் தக்க சமயத்தில் எனக்குக் கைகொடுத்து உதவியது. என் மகன் பொறியியல் கல்லூரியில் சேர அந்தத் தொகை பேருதவியாக இருந்தது.

"இப்போது மீண்டும் 1976-81 ஆண்டுகளுக்கு மாதம் ரூ. 20 வீதம் சேமித்து வருகிறேன். அத்தோடு 1977-87 ஆண்டுகளுக்கு 10 ஆண்டுகள் தொடர்வைப்புத் திட்டத்தில் 25 ரூபாய் சேமித்து வருகிறேன்" என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

### சீரான வருமான திட்டம்

வயதான காலத்திலும் கஷ்டப்படாமல், நிம்மதியாக வாழவேண்டும் என்றுதானே எல்லாரும் நினைப்பார்கள்? ஆகவே, வயதான காலத்தில், சீரான வருமானம் கிடைத்திட வழி வகுக்கிறது இத்திட்டம், (Regular Income Plan).



அஞ்சல் நிலையத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒரு ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரத்தை (5-வது வெளியீடு) வாங்கினால் ஏழாண்டுகளுக்குப் பிறகு நம்முடைய முதலீட்டுத் தொகை 104.5 சதவிகித அளவுக்கு உயரும். அதாவது, நம்முடைய பணத்திற்கு ஆண்டொன்றுக்கு 14.93 சதவிகித சாதாரண வட்டி, அல்லது 10.75 சதவிகிதத் தொடர் வட்டி கிடைக்கும். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் மாதம் ஒன்றாக நிறைவுறும். பிரதி மாதமும், நாம் சேமித்த ஒவ்வொரு 100 ரூபாய் தொகைக்கும், நமக்கு ரூ. 204.50 கிடைக்கும். இந்த 204.50 ரூபாய் நம்முடைய சீரான கூடுதல் வருமானமாக அமையும்.

### தேசிய சேமிப்பு ஆண்டுத் தொகைப் பத்திரம்

இந்தப் பத்திரங்கள் (National Savings Annuity Certificate) ரூ.3,200 ரூ. 6,400 ஆகிய இருதொகைகளில் அஞ்சலகங்களில் கிடைக்கும். இந்தத் தொகையை மொத்தமாகவோ அல்லது இரண்டு ஆண்டுகளுக்குத் தவணையாகவோ கட்டலாம். அதன்பிறகு மூன்றாண்டுகள் கழித்து அடுத்த 84 மாதங்களுக்கு ரூ. 3.200 முதலீட்டிற்கு மாதந்தோறும் ரூ. 50 வட்டியாகக் கொடுக்கப்படும். திட்ட முடிவில் ரூ. 4,320 மொத்தத் தொகையும் வழங்கப்படும்.

### தேசிய வளர்ச்சிப் பத்திரம்

இந்தப் பத்திரம் (National Development Bond), ஆண்டுக்கு 10.5 சதவிகிதக் கூட்டு வட்டி தருகிறது. இது அனைத்து அஞ்சலகங்களிலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் கிடைக்கும். இந்தப் பத்திரங்கள் 5 ஆண்டுகள் கழித்து முதிர்வடைகின்றன. முதிர்வுத் தொகைகள் பின்வருமாறு:

| வாங்கும் மதிப்பு | முதிர்வுத் தொகை |
| --- | --- |
| ரூ. 10 | ரூ. 16.70 |
| ரூ. 100 | ரூ. 167.00 |
| ரூ. 500 | ரூ. 835.00 |

### சிறப்பான வசூல்

நடப்பு நிதியாண்டில் முதல் எட்டு மாதங்களில் அதாவது 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் வரை தேசிய சேமிப்பு நிகர வசூல் 524.19 கோடி ரூபாயாகும்.

1978-ஆம் ஆண்டின் இதே காலத்தை ஒத்து நோக்கும்போது இது 142.24 கோடி ரூபாய் அதிகமாகும். 1979-ஆம் ஆண்டின் மொத்த வசூல் 1729.21 கோடி ரூபாயாகும். 1978-ஆம் ஆண்டை ஒத்து நோக்கும்போது இது 258.87 கோடி ரூபாய் அதிகமாகும்.

அஞ்சல் நிலைய கால வைப்பு நிதிகள் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் (ஐந்தாவது வெளியீடு) ஆகியவை அதிக அளவில் விற்பனையாகி உள்ளன. நடப்பு நிதியாண்டின் முதல் எட்டு மாதங்களில் காலவைப்பு நிதிகளின் விற்பனை 318.43 கோடி ரூபாயாகும். தேசிய சேமிப்புப் பத்திரங்களின் விற்பனை 188.83 கோடி ரூபாயாகும்.



### மகளிர் முகவர் சேமிப்புத் திட்டம்

1972ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது இத்திட்டம். இத்திட்டத்தின்கீழ் பெண் சமூக ஊழியர்கள், குடும்பப் பெண்களை அவர்களது இல்லத்திலேயே சந்தித்து, சேமிப்பின் அவசியத்தை உணர்த்தி, அவர்கள் சேமிக்கும் தொகையை அஞ்சலகங்களில் கட்டி உதவி புரிகின்றனர். இவர்களுக்கு ஊதியமாக 4 சதவிகிதம் கமிஷன் தொகை கொடுக்கப்படுகிறது.

1977-78ல் இத்திட்டத்தில் ஈடுபட்ட பெண் ஊழியர்கள் 3,136. அவர்கள் சேமித்த தொகை ரூ. 41,52,919. 1978-79ல் ஈடுபட்ட பெண் ஊழியர்கள் 5,075. சேமித்த தொகை ரூ. 1,14,86,778. ரூ. 2 இலட்சத்திற்கு மேல் சிறுசேமிப்பு ஆவணங்களில் முதலிட வழிவகை செய்யும் மாதர் சங்கங்களுக்கு ரூ. 2,000 கட்டடம் கட்டுவதற்கோ அல்லது ஏற்கெனவே உள்ள கட்டடத்தை விரிவுபடுத்துவதற்கோ மானியமாக வழங்கப்படுகிறது.

1978-79ல் சிறுசேமிப்பு வசூல் எந்த ஆண்டிலும் இல்லாத ஓர் உயர்நிலையை எட்டியுள்ளது. ரூ 63.12 கோடி நிகர வசூலாக உள்ளது.

இவ்வாறு வளமான எதிர்காலத்துக்கு, சிறுசேமிப்புத் திட்டங்கள் வழிவகுக்கின்றன. வீட்டுக்கு ஒருவர் வீதம் சேர்ந்தாலே — சேமித்தாலே நாட்டுக்கும் நன்மை பயக்கும், நமக்கும் நன்மை கிடைக்கும்!

—தொகுத்து எழுதியவர் : பி. வி. கிரி.





# சித்திரக்குடி வள்ளுவர் கல்விக் கழகம்

**தேசிய விருது பெற்றது**

குழந்தைகள் ஒரு நாட்டின் செல்வமாகக் கருதப்படுவர். அக்குழந்தைகள் நல்ல கல்வி அறிவையும், உடல் நலத்தையும் பெற்றிருப்பது இன்றியமையாததாகும். குழந்தைகளின் முன்னேற்றம் அவர்களின் கல்வியைப் பொறுத்தே அமைகிறது.

குழந்தைகளுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பதன் காரணமாகத்தான் அரசு, ஆண்டுதோறும் கல்வித்துறைக்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கிக் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிட்டு வருகிறது. . எந்தத் திட்டமானாலும் அது வெற்றியுடன் நிறைவேற வேண்டுமானால் மக்களின் ஒத்துழைப்பும் மிக அவசியமாகிறது. அந்த வகையில் தான், கல்வித் துறையில் தன் சீரிய பணியை, திரு. ஆ. எஸ். சீனிவாசஐயர் அவர்களைத் தலைவராகக் கொண்ட வள்ளுவர் கல்விக் கழகம் இணைத்துக் கொண்டிருக்கிறது.

தஞ்சை நகரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சித்திரக்குடி என்ற ஊரில் வள்ளுவர் கல்விக்கழகம் அமைந்திருக்கிறது.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே 1933-ஆம் ஆண்டு திரு. சீனிவாசஐயர் அவர்கள் பயிற்சி பெறாத இளநிலை ஆசிரியராகத் தனியார் பள்ளியில் பணியாற்றத் துவங்கி, 1937-ல் கூனமங்களம் என்ற ஊரில் அரிசனத் தெருவில் ஒரு பள்ளியைத் துவக்கி பெரும்பாலான அரிசனக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துக் கல்வி கற்பிக்க ஆரம்பித்தார்.

இதன் காரணமாக எதிர்ப்புகளுக்கும் இடையூறுகளுக்கும் ஆளான போதிலும் கல்விப் பணியைச் சிறப்பாகச் செய்துகொண்டு அதே வேளையில் உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றுப் பின்னர் ஆசிரியர் பயிற்சியிலும் வெற்றி பெற்றார்.

போதுமான இடவசதி வேண்டுமென்பதன் காரணமாக இப்பள்ளியைச் சித்திரக்குடி என்ற ஊருக்கு மாற்றி, மீனாட்சி அரிஜன உதவி பெறும் நடுநிலைப் பள்ளியாக மாற்றினார். இப்பள்ளிதான் இன்று இந்திய தேசிய விருதினைப் பெறுகின்ற பெருமைக்குள்ளாகி இருக்கிறது. 1958-ஆம் ஆண்டு இவரால் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட பல பள்ளிகளை ''வள்ளுவர் கல்விக் கழகம்'' எனப் பதிவு செய்தார்.

இக்கழகம் இரண்டு நடுநிலைப் பள்ளிகள், மூன்று ஆரம்பப் பள்ளிகள், ஒரு இளநிலை அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, பால்வாடி அரிசன விடுதி, அனாதை இல்லம், அச்சகம், தையல் பயிற்சி நிலையம் ஆகியவற்றைச் சித்திரக்குடி, வல்லம் பெரம்பூர், ஆணார் திருவேழம்பொழில், கூனமங்களம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. அனாதை மற்றும் ஏழைப் பெண்களுக்குத் தஞ்சையில் அச்சுப் பயிற்சியும், தையல் பயிற்சியும் அளித்து, அவர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவ, மாணவிகளுக்குக் கல்வி அளிப்பது, உணவு, உடை, தங்கும் வசதி ஆகியவற்றை இலவசமாக அளிப்பதும், அவர்களுக்கு விவசாயம், தையல் தோட்டக்கலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதுடன், சமூக கிராமப்புற.மேம்பாட்டுக்கு உழைப்பதும் இவ் வள்ளுவர் கழகத்தின் உயர்ந்த இலட்சியமாகும். அரிசன மேம்பாட்டுச் சமூக சேவை, குழந்தைகள் வளர்ச்சிப் பணி, மகளிர் நலப்பணி ஆகிய பணிகளும் இக்கழகத்தின் சிறந்த நோக்கமாகும். மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வள்ளுவர் கழகம் மாணவச் சமுதாயத்திற்காகப் பணியாற்றிவருகின்றது.

சுமார் 40 ஆண்டுக் காலமாகத் திரு ஆர்.எஸ். சீனிவாச ஐயர் அவர்கள் ஆசிரியராகக் கல்விப் பணியாற்றி, 1974-ஆம் ஆண்டு

மாணவர்கள் உணவருந்தும் காட்சி






வள்ளுவர் கல்விக் கழக அச்சகத்தில் அச்சுக்கோக்கும் மகளிர்

சிறந்த ஆசிரியருக்கான தேசிய விருதைப் பெற்றார். அதே ஆண்டில் வேலையிலிருந்து ஓய்வும் பெற்றார்.

இக்கழகத்தின் கிளைகளான மொத்தம் 13 பள்ளிகளில் 1,750 மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களில் 600 பேர் மாணவிகளாவர். மொத்தம் 60 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். விடுதியில் தங்கிப் படிப்பவர் மொத்தம் 1,212 மாணவர்களாவர். இதில் 75 சதவிகித மாணவர் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள்.

மாணவிகளுக்கெனத் தனி விடுதியும் நடத்தப்பெறுகிறது. ஏழை மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் கல்வி, உணவு, உடை, விடுதி வசதி யாவும் இலவசமாக அளிக்கப்படுகிறது. அரசின் உதவித் தொகை, கத்தோலிக்கச் சங்கத்தால் உதவியாகத் தரப் தரப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் வள்ளுவர் கழகத்திற்குச் சொந்தமான வயல்களிலிருந்து கிடைக்கும் தானியங்களைக் கொண்டும் மாணவர்களுக்கான செலவுகள் ஈடு செய்யப்படுகின்றன.

அச்சகத்தில் பணியாற்றும் அரிவையர்



**வள்ளுவர் கல்விக் கழகத்தின் சித்திரக்குடியிலுள்ள பள்ளிகள் பயிலுவோர் விவரம்:**

மீனாட்சி அரிசன நடுநிலைப் பள்ளி-547. இளநிலை அங்கீகரிக்கப்பட்ட பள்ளி 113, மகாத்மா அரிசன விடுதி 104, குழந்தைகள் இல்லம் 65, வள்ளுவர் அனாதை இல்லம் 70, பால்வாடி 40. இவர்களில் 373 மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள்

1979 அகில உலகக் குழந்தைகள் நல ஆண்டினையொட்டி குழந்தைகள் நலத் துறையில் ஆற்றிய சிறந்த சேவைக்காக இந்த ஆண்டு மத்திய அரசால் இரண்டு தேசிய விருதுகள் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று நிறுவனத்திற்கும், மற்றொன்று தனி நபருக்கும் உரியதாக அறிவிக்கப்பட்டுள்ளன.



மீனாட்சி அரிசன நடுநிலைப் பள்ளி மாணவர்கள் உடற்பயிற்சி செய்தல்

குழந்தைகள் நலத்துறையில் ஆற்றப்பட்ட சிறந்த சேவைக்காக நிறுவனத்திற்கான தேசிய விருதைப் பெறுவதற்குத் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த சித்திரக்குடியிலுள்ள வள்ளுவர் கல்விக் கழகம் இந்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி விருது ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கமும், ஒரு நற்குறிப்பும் இணைந்ததாகும்.

தனி நபருக்கான தேசிய விருது ரூபாய் இருபதாயிரத்தை, மகாராட்டிர மாநிலத்தைச் சார்ந்த திருமதி. அனுதாய்வாக் அவர்கள் பெறுகிறார்.

சித்திரக்குடி வள்ளுவர் கல்விக் கழகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள தேசிய விருதான ரூபாய் ஒரு இலட்சத்தில், ரூபாய் ஐம்பதாயிரம் மற்றும் திரு. சீனிவாச ஐயர் அவர்கள் தனது மூன்று ஏக்கர் நன்செய் நிலம், வீடு ஆகியவற்றையும் சேர்த்து மாலை நேர சமஸ்கிருதப் பள்ளி தொடங்குவதற்காகப் பயன்படுத்த இருப்பதாகவும் கூறுகிறார். எஞ்சியுள்ள விருதுத் தொகை ரூபாய் ஐம்பதாயிரத்தில் கிடைக்கக் கூடிய வட்டியை வள்ளுவர் கல்விக் கழகப் பள்ளிகளில் படிப்பை முடித்து 9-ஆம் வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரை படிப்பைத் தொடரும் மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகை அளிக்க முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கிறார்.



தஞ்சையிலுள்ள அச்சகத்தில்

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கங்கப்பா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் 17.1.1980 அன்று சித்திரக்குடிப் பள்ளியை முழுவதுமாகச் சுற்றிப் பார்த்தார். பின்னர் அன்று அங்கு நடைபெற்ற பள்ளிப் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார். பள்ளி மாணவர்களின் படிப்பின் தன்மை, அரசு வேலையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல், சுயவேலை வாய்ப்பிற்கு அடிகோலுவதாக அமைந்திருக்க வேண்டுமென நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும், இதன் நிருவாகி அவர்கள் ஆற்றி வருகின்ற அரிய பணிகளைப் பற்றியும், பெறுகின்ற விருதுகளைப் பற்றியும் பாராட்டிக் கூறுகையில் அவர் தம் உள்ளத்தில் இத்தகையதொரு நலிந்த பிரிவினருக்குப் பாடுபட வேண்டுமெனத் தோன்றிய எண்ணம்தான் சிறந்த பாராட்டுக்குரியது எனக் குறிப்பிட்டார்.

பல நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மாணவ, மாணவியர்களுக்கும், அனாதைகள் மற்றும் குற்றம் புரிந்த சிறுவர்கள் ஆகியவர்களுக்கும், கல்வி, உணவு உடை, இருப்பிட வசதி அளித்து எதிர் காலத்தை நம்பிக்கையுடையதாகவும், ஒளி தரக்கூடியதாகவும் மாற்றி, வாழ வழிகாட்டுகின்ற வள்ளுவர் கல்விக் கழகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

—ம. அரிகிருஷ்ணன்

# தமிழநாட்டில் கூட்டுறவு இயக்கம்

இன்றைக்கு எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோன்றியது. ஜெர்மனியில் செழித்து மக்களுக்கு உதவி வந்த கூட்டுறவு அமைப்பு இந்தியாவுக்கும் பொருந்தும் என அன்றைய இந்தியப் பேரரசு கருதியது.

கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கான சட்டம் 1904ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவிக்க சென்னை மாநிலமும் முற்பட்டது. அப்போது மேற்கொண்ட முயற்சி இன்றும் குறையவில்லை. கூட்டுறவு இயக்கத்தில் முன்னணியில் நிற்கும் பெருமையைத் தமிழகம் இன்றும் பெற்றிருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் துவக்கப்பட்டபோது தமிழகம் சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1956 அக்டோபருக்குப் பின்னரே தமிழகம் மொழி வழியமைந்த மாநிலமாயிற்று. எனவே, கூட்டுறவு இயக்கத்தின் எழுபத்து ஐந்து ஆண்டு வரலாறு என்னும்போது 1956 வரை, அதில் சென்னை மாகாணத்தின் வரலாறும் கலந்திருக்கும். மேலும் எழுபது ஆண்டுகளுக்கு முன் மாகாணங்களுக்கு இன்றுள்ள உரிமைகள் பல இல்லை. கூட்டுறவுச் சட்டம் வகுத்து, இயக்கத்தை வளர்ப்பது அன்றைய இந்திய அரசின் பொறுப்பாகவே இருந்தது. 1920-க்குப் பிறகு தான் கூட்டுறவு நிர்வாகம் மாகாண அரசுக்குத் தரப்பட்டது. 1904-ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் முதலில் கடன்வழங்கு சங்கங்களே அமைக்கப்பட்டன. பெரும்பான்மையும் கிராமியச் சங்கங்களாகவே அமைந்தன. கிராமியக் கடன் வழங்கும் சங்கங்களில் உழவர்களே பெரும்பான்மை உறுப்பினர்களாக இருந்தனர். 1904 ஆகஸ்டு மாதத்தில் திரூரில் தமிழ்நாட்டின் (இந்தியாவின்) முதல் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம் துவக்கப்பட்டது.

**திருவோங்கும் இயக்கம் :**

பெயரிலே திரு உடைய திரூரில் துவங்கிய இயக்கம், இன்று திருவோங்கும் இயக்கமாக வளர்ந்ததில் வியப்பில்லை. அடுத்து, முதல் நகர்ப்புறச் சங்கம் காஞ்சிபுரத்தில் அதே ஆண்டில் இரு மாதங்களுக்குப் பின் பதிவு செய்யப்பட்டது

எழுத்து அறிவும், சிந்தனைத் தெளிவும், செயலாற்றும் திறனும் இல்லாத மக்களால் கூட்டுறவுச் சங்கங்களை நடத்திச் செல்ல முடியுமா? நிதி திரட்டவும், நிர்வாகம் செய்யவும், அரசாங்கமே துணையாக நின்றது,

## தென் மாநிலத்தில் 242 புதிய நிறுவனங்கள்

தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களும், பாண்டிச்சேரியும் அடங்கிய தென் மாநிலத்தில் மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 3411.90 இலட்ச ரூபாய் மூலதனத்துடன் 242 நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 30ந் தேதியோடு முடிவடைந்த காலாண்டில் இந்நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 300 இலட்ச ரூபாய் மூலதனத்துடன் ஏழு அரசு நிறுவனங்களும், மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 566.30 இலட்ச ரூபாய் மூலதனத்துடன் 74 தனியார் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாண்டிச்சேரியில் மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 16 இலட்ச ரூபாய் மூலதனத்துடன் நான்கு தனியார் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1905-ஆம் ஆண்டு சென்னையில் மத்திய நகர வங்கி அமைத்து, சங்கங்களுக்கு நிதியுதவியளித்தது. 1912-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் திருத்தப்பட்டது. அதன்கீழ் மத்திய வங்கிகள் உருவாக வழி வகுக்கப்பட்டது. மாகாணத்தின் பல மாவட்டங்களில் மத்திய வங்கிகள் தோன்றின. அவற்றில் தனிப்பட்டவர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களாயினர். சங்கங்களின் சட்டம் திருத்தப்பட்டது. அதன்கீழ் மத்திய வங்கிகள் உருவாக வழி வகுக்கப்பட்டது. மாகாணத்தின் பல மாவட்டங்களில் மத்திய வங்கிகள் தோன்றின. அவற்றில் தனிப்பட்டவர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் உறுப்பினர்களாயினர். சங்கங்களின் நிதித் தேவையை இவ்வங்கிகள் நிறைவேற்றின.

முதல் உலகப்போரின் பின்னர் விலைவாசி உயர்வால் மக்களிடம் பணம் செழித்தது. எல்லாவகைக் கூட்டுறவுச் சங்கங்களும் பெருகி, வேரூன்றி, வளரத் தலைப்பட்டன. 1918 முதலாகவுள்ள பத்தாண்டுக் காலத்தை இயக்கத்தின் ஏற்றம் கண்ட பகுதியாகக் கொள்ளலாம். கூட்டுறவு மாகாண ஆட்சிக்குட்பட்ட துறையாக மாறியது வளர்ச்சிக்குத் துணையாக இருந்தது. இவ்வாறு விரிந்து, பரந்து வளம் பெற்ற கூட்டுறவு இயக்கத்தை மேலும் வளர்க்க விரும்பினர்.

1928-ல் கூட்டுறவு ஆய்வுக் குழு ஒன்றை நியமித்தனர். அக்குழுவின் ஆய்வுரை வெளிவரு முன்பே உலகப்பொருளியல் வீழ்ச்சி கூட்டுறவு இயக்கத்தையும் கவ்விக்கொண்டது. விவசாயப் பண்டங்களின் விலைகள் சரிந்தன. கடன் வழங்கு சங்கங்கள் சீர்குலைந்தன. பல கலைந்தன. தவணை கடந்த கடன் தொகை உயர்ந்தது. ஆனால், இந்த இருண்ட காலத்திலும் பளிச்சிடும் ஒளியாக நில அடமான வங்கிகள் (1925) தோன்றின. நீண்ட காலக் கடன் வழங்க மத்திய நில அடமான வங்கி 1929-ல் துவக்கப்பட்டது. கடன் வழங்குவதற்கல்லாது, விளைபொருள் விற்பனைக்கும், பால் வழங்குவதற்கும், நெசவாளர் உதவிக்கும் பல சங்கங்கள் வளர்ந்ததும் இக்காலத்தில் தான்.

**வளம் கூட்டியது:**

1938-க்குப் பின் சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் நிலைபெற்று ஓங்கலாயிற்று. உறுப்பினர் தொகையும் உயர்ந்தது. மக்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் இயக்கம்



புகுந்து பரந்தது, பொருளியல் துறையைக் கடந்து மக்களின் சமூக இயல்துறையிலும்நுழைந்து வாழ்க்கைக்கு வளம் கூட்டியது. ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட சங்கங்கள் 1939-ல் இருந்தன. என்றாலும், நூற்றுக்கு எண்பது வேளாண்மைக் கடன் சங்கங்களே, இன்றும் அவைகளே பெரும்பான்மையாக உள்ளன. எனவே, கூட்டுறவின் வளர்ச்சியை அளவிட அச் சங்கத்தின் வரலாற்றைத் தொகுத்தால்போதும் அன்றியும் எல்லாவிதச் சங்கங்களையும் பற்றி ஆராய இக்கட்டுரை இடந்தராது.

கூட்டுறவு வளர்ச்சி என்னும் போது சங்கங்களின் எண்ணிக்கை உயர்வை மட்டும் குறிப்பிட்டால் பொருந்தாது. அதைவிட அவற்றின் அமைப்பு, நிதி நிலை, செயல்திறன் ஆகியவற்றை அளவிடலே சிறப்பாகும். ஆனால், அவற்றையும் விரிவாக விளக்க சிறு கட்டுரை போதாது. எனவே, இங்கு கடன் வழங்கு சங்கத்தின் அமைப்பு எழுபது ஆண்டுகளில் எவ்வாறு மாறி, திருந்தி வளர்ந்துள்ளது என்பதை மட்டும் காண்போம்.

**சீமந்தப் பிள்ளை:**

இந்திய மக்களில் எண்பது சதவீதத்தினர் கிராமங்களில் வாழ்கின்றார்கள். உழைப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் உழவுத்தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்கள். கடன் கொண்ட உழவர்களின் துயர் போக்கும் மருந்தாக அமைந்த வேளாண்மைக் கடன் வழங்கு சங்கங்கள், பிற சங்கங்களைவிட அளவிலும் உறுப்பினர் தொகையிலும் மிகுதியாகவுள்ளன. அவை உயிர்ப்பொருளைப் படைக்கின்ற பயிர்த்தொழிலை மேற்கொண்ட உழவர் நலம் பேணுகின்றன. அதனால் பிற சங்கஙகளைவிட மிகுதிச் சிறப்பும், பராமரிப்பும் அரசினரிடமிருந்து பெற்றுள்ளன. கூட்டுறவு இயக்கத்தின் இந்தச் சீமந்தப் பிள்ளைக்கு இந்திய ரிசர்வ் வங்கியினரின் ஆதரவும் நிரம்ப உண்டு. கூட்டுறவு இயக்கம் துவங்கிய நாளிலிருந்தே துவளாது, துளிர்விட்டு வளம் கூட்டும் இச்சங்கங்களின் வளர்ச்சியை மதிப்பிட்டால், அது கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியையே அளவிட்டதாக ஆகும். முன்நாட்களில் அமைக்கப்பட்ட வேளாண்மைக் கடன் சங்கங்கள் எவ்வாறு திருத்தி செறிந்து பொலிவுற்றன என்பதைக் காண்போம்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தை உருவாக்கிய இந்திய அரசினர், 'ஏழை எளிய மக்களுக்குச் சிறிய கடன் தொகையைத் தந்து, குறுகிய காலத்தில் வசூல் செய்வதே கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கம்' என்று சொன்னார்கள். 1904-ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் வரையறையில்லாத பொறுப்புடையனவாக இருந்தன. ஓர் ஊரில் வாழும் மக்கள், அல்லது சில ஊர்களைக்கொண்ட பகுதி மக்கள் அச்சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்ததால் அந்நாளில் இம்முறை பொருத்தமாகக் கருதப்பட்டது. திருத்தப்பட்ட 1912-ஆம் ஆண்டுச் சட்டத்திலும் வரையறை இல்லா பொறுப்பே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வரையறையில்லாத பொறுப்புடைய கிராமக் கூட்டுறவுச் சங்கம் ஒரு கிராமத்தைப் பணிப் பரப்பாகக் கொண்டிருந்தது. உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்திருந்தனர். உறுப்பினர்களின் தொழிலையும் வருவாயையும் சங்கம் அறிந்து வைத்திருந்தது. சாதாரணமாக உழவர்களின் சொத்து, குறைந்த மதிப்புடையது. அவர்கள் ஒன்று சேர்ந்து, சங்க உறுப்பினர்களாகச் சேர்ந்தால், அவர்களுடைய சொத்து அனைத்தையும் ஈடாகக் காட்டினால், சங்கத்துக்குக் கடன்தர யாரும் தயங்கமாட்டார்கள். ஒவ்வொருவரும் மற்ற உறுப்பினர்களை வற்புறுத்திக் கடனை மீட்க முடியும். இப்படி வாங்கும் கடன் குறுகிய காலக் கடனாக இருந்தது. சங்கம் வாங்கிய கடனைத் திருப்பித்தர முடியாமற்போனால், எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இயன்ற வரை உதவி, கடனைத் தீர்க்க இயலும்.


கிராமக் கூட்டுறவுச் சங்கம் குறுகிய பணிப்பரப்பை உடையது. உறுப்பினர்களும் சிலரே. அவர்களுக்கும் கடன் மட்டுமே வழங்கப்பட்டது. உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்தார் சங்கத்தை நடத்திச் சென்றனர். அதற்காக அவர்கள் ஊதியம் பெற்றுக்கொள்ளவில்லை. 1914-ல் நியமிக்கப்பட்ட மாக்லகன் குழுவினரோ அல்லது 1937-ல் மாநில அளவில் அமைக்கப்பட்ட டவுன்சென்ட் குழுவினரோ, இந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் வரையறையில்லாத பொறுப்பை குறையாகக் கருதவில்லை. 1938-ல் ஆய்ந்த விஜயராகவாச்சாரியார் குழு இம்முறையை வன்மையாகக் கண்டித்தது. ஆனால், அன்றைய அரசாங்கம் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.


1952-ல் ரிசர்வ் வங்கியின் ஆதரவில் ஏற்பட்ட கிராமியக் கடன் அளவீட்டுக்குழுவினர், இக்கொள்கையைப் புதிய கோணத்திலிருந்து ஆய்ந்தனர். கூட்டுறவுச் சங்கம் கிராமங்களில் நிலைப்பெற்று உழவர்களுக்குப் பணியாற்ற வேண்டுமானால், அது வட்டிக் கடைக்காரர்களை எதிர்த்து நிற்கும் வன்மை பெற்றிருக்கவேண்டும். அதிக மக்களைத் தன்பால் உறுப்பினர்களாக அனைத்துக் கொள்ளவேண்டும். பெருமளவில் பங்குத் தொகை திரட்ட வேண்டும். கடன் வாங்குவதோடு, உழவர்களுக்கு வேண்டிய உரம், விதை, பூச்சி மருந்து ஆகியவற்றையும் விநியோகிக்கவேண்டும். உறுப்பினர்கள் பயிர்-ஏற்ற வாங்கிய கடனை விளைந்த பொருளின் விற்பனையிலிருந்து தீர்க்கவேண்டும். அவர்களுக்கு விளைபொருளை ஈடாகப் பெற்று, கடன் வழங்கவேண்டும். இப்பணிகளை ஏற்க சங்கத்துக்குக் கிடங்கு இருக்க வேண்டும். சங்கத்தின் பணி பரவலாக விரிந்து இருப்பதால் அதனை நிர்வாகம் செய்ய தனி அலுவலர் வேண்டும். அவர் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். கிராமியக் கடன் அளவீட்டுக்குழு பரிந்துரைத்ததை இந்தியப் பேரரசு முழுமையாக ஏற்றுக்கொண்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குழுவின் பரிந்துரைகள் பல செயலாக்கப்பட்டன. கட்டடம், கிடங்கு கட்டவும், அலுவலர் நியமிக்கவும் அரசினர் கடன் தந்து உதவினர். சங்கங்களின் பங்குத் தொகையிலும் அரசினர் முதலீடு செய்தனர். சிறு சங்கங்கள் பல இணைந்து வரையறுக்கப்பட்ட பொறுப்படைய கூட்டுறவு விவசாய வங்கிகளாக அமைக்கப்பட்டன. நான்கு அல்லது ஐந்து கிராமங்களுக்கு ஒரு விவசாய வங்கி என அமைக்கப்பட்டது. இவ்வங்கிகள் அதிக அங்கத்தினர்களையும், அதிக பங்கு மூலதனத்தையும், பெருமளவில் கொடுக்கல் வாங்கல்களையும், பயிற்சி பெற்ற செயலாளர்களையும் பெற்று மக்களிடையே சிறப்பாகப் பணியாற்றின. வரையறையுள்ள பொறுப்பு ஒரு குறையாகவே தெரியவில்லை. மாறாக மக்கள், உறுப்பினர் அல்லாதவர்கள்கூட, தங்களுடைய பணத்தை வைப்புத் தொகையாக இந்த வங்கிகளில் போட்டுவந்தனர். மக்களிடம் இவை பெற்றுள்ள நம்பிக்கைக்கு இதுவே சான்று!

1958-ல் தேசிய வளர்ச்சிக்குழு கூட்டுறவுச் சங்கம் ஊருக்கு ஒன்றாக அமைக்கப்பட வேண்டும் என அறிவுரை தந்தது. இந்திய அரசு அதை நிறைவேற்ற மாநிலங்களுக்கு ஆணை வழங்கியது. ஆயிரம் மக்கள் தொகையுடைய கிராமங்களுக்கு ஒரு சங்கமும், பின்தங்கிய பகுதிகளில் 5,000 மக்கள் தொகையுடைய சில ஊர்களுக்கு ஒரு கடன் வழங்கு ஒன்றியமும் 1960-ல் துவக்கப்பட்டன. விவசாய வங்கிகள் அமைப்பது நிறுத்தப்பட்டன விவசாய வங்கிகளின் சிறப்பையும், பயனையும் காட்டி மத்திய அரசை மாநில அரசு அவற்றை அமைக்க மேலும் உதவி கோரியது. மத்திய அரசு மறுத்துவிடவே 330 விவசாய வங்கிகளோடு நின்றுவிட்டது.

1960-ல் அமைக்கப்பட்ட மேத்தா குழு கூட்டுறவுக் கடன் வசதியை நாடு முழுவதும் பெருக்குவதற்கு ஆய்வுரை வழங்கியது. 1964-ல் மத்திய அரசு அக்குழு





வின் ஆய்வுரைகளை ஏற்றுக் கொண்டு, அவற்றைச் செயலாக்க மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டது, ஒரு கிராமக் கடன் வழங்கு சங்கம் திறம்படச் செயலாற்றப் போதிய வலிமையுடையதாக இருக்கவேண்டும் என அக்குழு கூறியது, அக்குழுவின் ஆய்வுரைக்கேற்ப தமிழகத்தில் கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்கள் திருத்தியமைக்கப்பட்டன. விவசாய வங்கிகள் 330-ம், கடன் வழங்கு ஒன்றியங்கள் 150-ம் வலிமையுடைய சங்கங்கள் 1452-ம் தவிர, ஏனைய கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் அனைத்தையும் திருத்தியமைக்கத் திட்டமிடப்பட்டது. மத்திய காலக் கடன் மட்டுமே வழங்கி வந்த கிராமக் கூட்டுறவு வங்கிகளும் திருத்தியமைக்கப்பட்டு, குறுகிய காலக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு இலட்சம் ருபாய் கடன் வழங்கும் வன்மையுள்ள சங்கங்கள் வலிமைச் சங்கங்களாகக் கருதப்பட்டன. அவை ஒவ்வொன்றும், 2000 முதல் 3000 ஏக்கர் வரையுள்ள விளைநிலப் பரப்பை தனது பணியெல்லையில் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது.

கூட்டுறவுச் சட்டம் 1961-ல் மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தப்பட்ட பொறுப்புடைய சங்கம், வரையறுக்கப்படாத பொறுப்புடைய சங்கம், இரண்டும் தனியாக விளக்கப்பட்டது. அத்துடன் விவசாயக்கடன் சங்கம் வரையறையில்லாத சங்கமாகத்தான் இருக்கவேண்டும் என்ற பழைய சட்டத்திலிருந்த விதி திருத்தப்பட்டது. அதனால் விவசாயக் கடன் வழங்கு சங்கம் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமைய வழி ஏற்பட்டது. வலிமை பெற்ற சங்கங்கள் வரையறுக்கப்பட்ட சங்கங்களாகப் பதிவு பெறத் துவங்கின.

## முழு மாற்றம்

1965-ல் பதினொன்றாயிரத்துக்கும் மேற்பட்ட கடன் வழங்கு சங்கங்கள் இருந்தன. இவற்றில் 557 மட்டுமே வரையறுக்கப்பட்ட பொறுப்புடையவை. புதிய சட்டமும், கொள்கையும் இந்நிலையை முற்றிலும் மாற்றிவிட்டன. 1973-ல் சங்கங்களின் எண்ணிக்கை 5301 ஆகக் குறைந்தது. அவற்றில் 1487 வரையறுக்கப்பட்ட பொறுப்புடையவை. ஏனைய சங்கங்களும் வலிமையுடையனவாக மாற்றப்பட்டு வருகின்றன.

இந்த மாற்றத்தால் விளைந்த பயன் என்ன? கூட்டுறவு இயக்கம் வளர இம்மாற்றம் துணை செய்ததா? ஆம், கடன் வழங்கும் சங்கத்தில் சேராமல் ஒதுங்கியிருந்த பல உழவர்கள் உறுப்பினராகியுள்ளனர். சொத்தை மட்டுமே மதிப்பிட்டு, கடன் பெறுகின்றார்கள். கூட்டுக்குள் அடைப்பது போன்ற முடங்கிக் கிடந்த கடன் சங்கம், இன்று பணிப்பரப்பை விரிவாக்கி, வழங்கும் கடன் தொகையையும் பெருக்கியுள்ளது. ஒரு சங்கம் திறம்படச் செயலாற்றுவதால் மக்களின் நம்பிக்கையையும், மத்திய வங்கியின் உதவியையும் பெற முடியுமேயன்றி, வரையறையில்லாத பொறுப்பினால் அல்ல என்பது உறுதியாகிவிட்டது. இம்மாற்றத்துக்கு அரண் செய்வதாக 1967ல் அமைக்கப்பட்ட சந்தானம் குழுவினர் ஆய்வுரை வழங்கியது. 1904-முதல் ஐம்பது ஆண்டுக் காலம் வளர்ச்சி இன்றி நலிந்து கிடந்த வேளாண்மைக் கடன் வழங்கும் சங்கம் 1955-க்குப் பின் புதிய பொலிவும், வளமும், திறமும் பெற்றுள்ளன என்றால் அதற்கு இந்த வரையறைப் பொறுப்பும் ஒரு காரணமாகும்.

## குறியீடுகள்

இதுவரை கூட்டுறவு இயக்கத்தின் ஒரு துறையாகிய கடன் வழங்கு சங்கத்தின் அமைப்பில் ஒரு இயலைப் பற்றி மட்டுமே சொல்லப்பட்டது. அன்று இயக்கம் மேல்நாட்டு அமைப்பு முறையைப் பின்பற்றித் துவக்கப்பட்டது. எழுபத்தைந்தாண்டுக்கால அனுபவமும், அதன் வாயிலாக வந்த குழுக்களின் ஆய்வுரைகளும் கூட்டுறவுச் சங்கங்களை நம் நாட்டுப் பண்புக்கும் பழக்கத்துக்கும் ஏற்ப மாற்றியமைத்துள்ளன. அதனால் கூட்டுறவு இயக்கம் நிலைபெற்று வளர்ந்து வருகிறது. சங்கங்களின் எண்ணிக்கை வளர்ச்சி, உறுப்பினர் பெருக்கம், வழங்கிய கடன் தொகை உயர்வு இவை யெல்லாம் வளர்ச்சியின் அறிகுறிகள் என்றாலும் அதைவிட மக்கள் மனப்பாங்கு எப்படி மாறியுள்ளது, கூட்டுறவு பற்றிய அறிவு அவர்கள் மனத்தில் எவ்வளவு ஆழமாக வேர்விட்டிருக்கிறது, அவர்கள் வாழ்க்கை முறையை எப்படித் திருத்தியுள்ளது, இவைதாம் வளர்ச்சியைக் காட்டும் குறியீடுகள்.

உழவு வாழ்க்கை முறை என்ற நிலை மாறி அது ஒரு துறை என்றாகிவிட்டது. தொழில் அதிபர்கள் உற்பத்திக்கு எவ்வாறு கடன் வாங்குவார்களோ, அதே முறையில் உழவர்கள் கடன் வழங்கு சங்கத்தில், தங்கள் உற்பத்தித் தேவைக்குக் கணக்குப் பார்த்து, கடன் பெறுகிறார்கள். உயர் ரகப் பயிர்களை விளைவிக்க முற்பட்டு அதிக அளவில் கடன் பெற இரசாயன உரத்தின் தன்மையைத் தெரிந்து கூட்டுறவுச் சங்கத்தில் அதை வாங்க வருகிறார்கள். பூச்சி மருந்தைக் கேட்டிராத காலம் மாறி, மருந்தின் பெயரைச் சொல்லி சங்கத்திலிருந்து பெற்றுச் செல்லுகிறார்கள். சேமித்த பணத்தைச் சங்கத்திலேயே ஓரளவு வைப்புத் தொகையாகச் செலுத்துகிறார்கள். இவ்வாறு தங்கள் தொழில் உற்பத்திக்கு உதவும் நிறுவனமாகச் சங்கத்தைக் கருதுகிறார்கள். வட்டிக்குக் கடன் தரும் சங்கம் என்ற நிலைபோய் உழவைக் கட்டி வளர்க்கும் கரங்கம் என்று எண்ணுகிறார்கள். ஆண்டுக்கு ஒருமுறை வந்து கடன் தொகையைப் பெற்றவர்கள் வணிக வங்கியின் வாடிக்கையாளர்களைப் போல், அடிக்கடி சங்கத்துக்கு வந்து போகிறார்கள். உழவர்களிடையே மலர்ந்துள்ள இந்தப் புத்துணர்வே கூட்டுறவின் உண்மை வளர்ச்சி. அது மேலும் செழித்து வளரட்டும்!



# கிராமக் குழந்தைகள்



இந்தியக் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான பணி குழந்தைகள் ஆண்டுடன் முடிவடைந்துவிட முடியாது. கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகள் முன்னேறுவதற்கு வாய்ப்புகள் இல்லாமல் பெரிய அளவு பாதிக்கப்பட்டு முடமாக்கப்பட்டவர்களாக உள்ளனர். சமூக தீங்குகளினாலும் ஒழுங்கீன செயல்களினால் கிராம குழந்தைகள் அடையும் பிரச்னைகள் பல.

2,480 இலட்சம் இந்தியக் குழந்தைகள் உலகக் குழந்தைகள் எண்ணிக்கையில் 16 சதவிகிதம் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நாம் 130 இலட்சம் சிசுக்களை எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். 1971ல் எடுத்த மக்கள் கணக்கெடுப்பின் படி இந்தியக் குழந்தைகளில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் 42 சதவிகிதமும், 6 வயதிற்குட்பட்ட குழநதைகள 21 சதவிகிதமும் உள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 81 சதவிகித எண்ணிக்கையுள்ள இந்தியக் குழந்தைகள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

1976-ஆம் ஆண்டின் கணக்கின்படி ஏறக்குறைய மொத்த இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கையில் ஏறக்குறைய ஆயிரம் இலட்சம் குழந்தைகள் மனிதன் உயிர் வாழ்வதற்குத் தகுதி குறைந்த பிரதேசங்களில் வசிக்கின்றனர். அவற்றில் பாதிக்கு மேற்பட்ட குழந்தைகள் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளாகும். இந்த வழியற்ற குழந்தைகளில் 360 இலட்சம் குழந்தைகள் கிராமங்களில் வாழ்கின்றனர். 97 இலட்சம் குழந்தைகள் நகரங்களிலும், 29 ஆயிரம் குழந்தைகள் மலைப் பகுதிகளிலும் உள்ளனர்.

## உயிர் வாழ்வதற்குப் போராட்டம்

உயிருக்குப் போராடும் குழந்தைகள் எப்பொழுதும் வெற்றி அடைவதில்லை. உயிருடன் பிறக்கும் ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளிலும் 122 குழந்தைகள் முதல் ஆண்டிலேயே இறந்துவிடுகின்றன. 12 மாதத்திற்கு உட்பட்ட 20 இலட்சம் குழந்தைகளின் இறப்பும், ஒரு வயதிலிருந்து 4 வயதிற்குட்பட்ட 12 இலட்சம் குழந்தைகளின் இறப்பும் நாட்டில் ஆண்டுதோறும் இறக்கும் மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையில் 40 சதவிகிதம் அளவு உள்ளது.

சிசுக்களின் இறப்பின் விதம் நிதானமாகக் குறைந்த போதிலும் இன்னும் அதிக அளவே உள்ளது. 1915ஆம் ஆண்டில் உயிருடன் பிறந்த குழந்தைகளில் 1000-க்கு 204 குழந்தைகளும், 1945-ஆம் ஆண்டில் உயிருடன் பிறந்த குழந்தைகளில் 1000-க்கு 161 குழந்தைகளும் இறந்துள்ளன. சராசரி தேசிய சிசுக்கள் இறப்பின் விதம் உயிருடன் பிறந்த குழந்தைகளின் 1000-க்கு 122 குழந்தைகள் இறக்கின்றன.

இந்தியாவில் உயர்ந்துள்ள சிசுக்களின் இறப்பு விதத்தில் முக்கியமாக நம்முடைய கிராமங்களில் பயங்கரமாகக் குறிப்பிடும்



படி உள்ளதால் கிராமங்களில் மருத்துவக் கண்காணிப்பு வசதிகளை இன்னும் உறுதியாக அமைக்க வேண்டும். கிராமத்திலுள்ள குழந்தைகள் பல நோய்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பல குழந்தைகள் சிறு வயதிலேயே சரியான நேரத்திற்கு மருத்துவக் கண்காணிப்பு இல்லாமையால் இறந்துவிடுகின்றனர்.

இந்த இறக்கும் குழந்தைகளில் பாதிக்குமேற்பட்ட குழந்தைகள், ஒரு வயதிற்குட்பட்டவர்களாகும். சுற்றுப்புறச் சுகாதாரம் மக்கள் நெருக்கடி உள்ள இருப்பிடம் ஊட்டக்குறைவு, சுகாதார எச்சரிக்கைகளைஅறியாமை போன்ற காரணங்களினால் எல்லாவிதமான நோய்களுக்கும் குழந்தைகள் பலியாகின்றனர். வெகுதூரத்திலுள்ள கிராமங்களில் உள்ள பள்ளிக் குழந்தைகள் சிறுகுடல் சம்பந்தமான தொற்று நோய்களாலும், சுவாச சம்பந்தமான நோய்கள், ஜீரணக் கோளாறுகள் போன்ற நோய்களாலும் பாதிக்கப்படுகின்றனர். சரியான கண்காணிப்பு இல்லாமையாலும், வைட்டமின் பற்றாக்குறைகளாலும் சரியான நேரத்தில் மருத்துவச் சிகிச்சை இல்லாமையாலும் பல குழந்தைகள் பார்வையற்றவர்களாகி விடுகின்றனர். காச நோயும்கூட சிறு பிள்ளைகளுக்குச் சாதாரணமாகக் காணப்படுகின்றன.

**ஊட்டக்குறைவுள்ள குழந்தைகள்**

சாவின் பயங்கரம் இந்தியாவிலுள்ள சத்துணவற்ற பல குழந்தைகளை வட்டமிட்டுக் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் குறிப்பாக, கிராமங்களில் அதிகமான குழந்தைகள் ஊட்டக்குறைவினால் இறக்கின்றன. இன்னும் அதிகமான குழந்தைகள் தொற்று நோய்களால் இறக்கின்றன.

**பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே விட்டவர்கள்:**

14 வயதுவரை குழந்தைகளுக்கு இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வியளிக்கப்படவேண்டும் என்ற அரசியல் அமைப்புக் கொள்கையில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை 10 ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற வேண்டும். ஆனால் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. நாட்டிலுள்ள 575926 எண்ணிக்கையுள்ள கிராமங்களில் 48566 கிராமங்களில் பள்ளி வசதியே இல்லை. இலவசமாகக் கல்வியளிக்கின்ற வெவ்வேறு மாநிலத்திலும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. 12 மாநிலங்களில் பள்ளி இறுதி ஆண்டுவரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. எட்டு மாநிலங்களில் பள்ளி இறுதி ஆண்டுவரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. எட்டு மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் நடுநிலைப் பள்ளி படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இரண்டு மாநிலங்கள் ஆரம்பப் பள்ளி வகுப்பு வரை இலவசக்கல்வி அளிக்கின்றன.

நர்சரி கல்வியில் நாம் இன்னும் போதுமான முன்னேற்றம் செய்ய வேண்டும். அதிகமான நர்சரிப் பள்ளிகள் நகரங்களிலும் பட்டினங்களிலும் அமைந்திருக்கின்றன. உயர்ந்த வருமானமுள்ள குடும்ப குழந்தைகளும் நடுத்தர வருமானமுள்ள குடும்பக் குழந்தைகளுமே இந்தப் பள்ளிகளினால் நன்மை அடைகின்றன. 45 இலட்சம் குழந்தைகள் நர்சரிப் பள்ளி வசதிகளைப் பெற்றுள்ளன என்று புள்ளி விவரம் குறிப்பிடுகிறது. இது 3விருந்து 6 வயது வரை குழந்தைகளின் எண்ணிக்கையில் 5 சதவிகிதமாகும்.

முதல் வகுப்பில் நுழையும் ஒவ்வொரு 100 குழந்தைகளில் பாதிக்கும் குறைவானவர்கள் தான் ஐந்தாம் வகுப்புவரை செல்கின்றவர். இதில் 24 பேர்களே 8ஆம் வகுப்புவரை படிக்கின்றனர். கல்வியை விட்டு விடுகின்றவர்கள் எண்ணிக்கை விகிதம் பெண்களில் அதிகம். முதல் வகுப்பில் நுழையும் ஒவ்வொரு 100 பெண்கள் எண்ணிக்கையில் 30 பேர்களே 5ஆம் வகுப்பை அடைகின்றனர்.

கிராமத்திலுள்ள பெண்கள் கல்வியைப் பாதியிலேயே விட்டு விடுவதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால் ஏழ்மைத்தனமும், வீட்டிலிருந்து பள்ளிகள் தூரத்தில் இருப்பதாலும், பணிகள் செய்யும் பெண்களுக்குக் குழந்தைகளை பகலில் கவனித்துக் கொள்வதற்குக் குழந்தை காக்கும் நிலையங்களின் வசதியின்மையும் ஆகும். தாய் வெளியில் செல்லும்போது 9 வயது மகள் அவளுடைய தம்பி, தங்கைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

சில நேரங்களில் வேலை செய்யும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளையும் தாங்கள் வேலை செய்யும் இடத்திற்கு எடுத்துச் செல்வர். இம்மாதிரியான குழந்தைகளுக்குப் பெரிய ஆபத்துக்கள் ஏற்படுகின்றன.

1971-ஆம் ஆண்டின் புள்ளி விவரத்தின்படி 93 சதவிகிதம் குழந்தை தொழிலாளர்கள் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த கிராமக் குழந்தைகள் எண்ணிக்கையில் இது 5.3 சதவிகிதமாகும்.

கிராமக் குழந்தைகளின் விடிவு வரப்போகின்ற காலங்களில் நாம் கிராம முன்னேற்றத்திற்கு என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறோம் என்பதைப் பொருத்துள்ளது.



# இந்தியத் தலைநகரில் தமிழகக் கலைக்குழு

**அரங்க. இராவணன்,**
**மக்கள் தொடர்பு உதவியாளர்,**
**செய்தி-மக்கள்**
**தொடர்புத் துறை.**

புது தில்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக, மத்திய அரசின் அழைப்பின் பேரில் தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ஜனவரிதிங்கள்8-ஆம்நாள்இருபத்திரெண்டு கலைஞர்கள் கொண்ட மதுரை ஓம். பெரியசாமி கலைக் குழுவினர் சென்றனர். 10-ஆம் நாள் காலை புதுதில்லி சென்றடைந்தோம். கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த ஆண்டு குளிர் சற்று அதிகமாகவே இருந்தது. தேசிய ஒருமைப்பாட்டுக்கு வித்திடும் முகத்தான் அனைத்து மாநிலக் கலைக் குழுவினரையும் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையினர் ஒரே இடத்தில் சங்கமிக்க வைத்தது, வியந்து பாராட்டக் கூடியதாக இருந்தது. ஜனவரித் திங்கள் 11-ஆம் நாள் முதற் கொண்டே 26-ஆம் தேதி குடியரசு தினவிழா நிகழ்ச்சிக்கு முன் ஒத்திகைப் பயிற்சி அளிக்கத் தயாராய் விட்டனர்.

'ரவீந்தர ரங்க்சாலா கேம்ப்' என்றழைக்கப்படும் அந்த இடம் சகல வசதிகளையும் கொண்டது. டெலிவிஷன், உணவகம், மருத்துவ வசதி, தபால் அலுவலகம், வங்கி அலுவலகம், தீயணைக்கும் அலுவலகம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கியது. மத்திய அரசின் செய்தித் துறையினரால் ஒவ்வொரு மாநிலத்தின் கலை நிகழ்ச்சிக்கு ஏற்ப நிமிடங்கள் ஒதுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. நமது கலைக் குழுவில் நியாகர் ஆட்டம், காளை ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், கரகம், காவடி ஆகிய நிகழ்ச்சிகள் அடங்கியிருந்தன. இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து நம் குழுவுக்கு ஒதுக்கித் தந்த நேரம் ஏழு நிமிடம்தான்! இந்த ஏழு நிமிடத்தில் இத்தனை நிகழ்ச்சிகளையும், நையாண்டி மேள இசையுடன் வழங்கி அனைவரையும் மகிழ வைத்தனர் நம் குழுவினர். 13 மாநிலங்களைச் சார்ந்த கலைக் குழுவினர் வந்திருந்தனர். அனைத்துத் தரப்பட்ட மக்களும், வெளிநாட்டவரும், நமது கலை நிகழ்ச்சிகளை மிகவும் விரும்பி ரசித்துப் பாராட்டினர் என்பது அவர்கள் அப்போது எழுப்பிய கரவொலியே சான்றாய் அமைந்தது.

26-ந் தேதி காலை 6 மணிக்கெல்லாம் 'ராஜ்பாத்' என்று அழைக்கப்படும் 'ராஷ்டிரபதி பவனம்' முன்னர் அனைத்துக் குழுக்களும் நிறுத்தப்பட்டன. ராணுவத்தினரின் பல்வேறு அணி வகுப்புகளையும், அலங்கார ஊர்தி வண்டிகளையும் கண்ட போது, குளிரின் வேகத்தை மறந்தே போய் விட்டோம்!

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திறந்த ஜீப்பில் கலைக் குழுவினரின் மரியாதையை ஏற்றுச் சென்ற காட்சியும், பன்னிரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட அந்தச் சாரட்டில் மேதகு குடியரசுத் தலைவர் பவனி வந்த காட்சியும் என்றும் நெஞ்சை விட்டகலா!

27-ந் தேதி காலை 9 மணியளவில் மேதகு இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு இதயதுல்லா அவர்களின் இல்லம் சென்று கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கலைக் குழுவினருக்கும் விருந்து வைத்து உபசரித்தார்கள். மாலையில் இண்டோர் ஸ்டேடியம் என்றழைக்கப்படும் கலையரங்கில் நிகழ்ச்சி நடைபெற்றது.

28-ந் தேதி காலை 9 மணியளவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் இல்லத்தில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. குடியரசுத் தலைவர் அவர்கள் நமது கலைக் குழுவினரின் ஊர், தொழில் ஆகியவற்றை அன்புடன் விசாரித்தார்கள்.

கடைசி

அட்டைப்படக்

கட்டுரை :

29-ந் தேதி மாலை 3 மணியளவில் மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஜெயில் சிங் அவர்களின் இல்லத்தில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. எல்லாக் கலைஞர்களுக்கும் ஒரு கம்பளிப் போர்வை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

31-ந் தேதி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் இல்லத்தில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதமர் அவர்கள் அனைத்துக் கலைஞர்களுக்கும் ஒரு ஸ்வெட்டரும், ஒரு கேடயமும் வழங்கி கவுரவித்தார்கள். அன்று மாலை 5 மணியளவில் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கென நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் நமது குழுவும் பங்கேற்று கலை நிகழ்ச்சியினை நடத்தியது.

பிப்ரவரி 1, 2 தேதிகளில் புது தில்லியின் முக்கிய இடங்களை நமது குழுவினருக்குச் சுற்றிக் காண்பித்தார்கள்.

பிப்ரவரி 3-ந் தேதி 'பால பவன்' என்ற இடத்தில் மத்திய அரசின் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கிணங்க நமது கலை நிகழ்ச்சி நடைபெற்றது.


தமிழகத்தின் கலைச் சிறப்பை, தலைநகரில் பட்டொளி வீசச் செய்தோம் என்ற பெருமிதத்தோடு பிப்ரவரி 4ந் தேதி தமிழகம் நோக்கிப் பயணமானது தமிழகக் கலைக்குழு !

# 1990 புதிய இரகங்கள்

வேளாண்மை உற்பத்தியில் உயர் விளைச்சல் பெற இந்த புத்தாண்டில 8 புதிய இரகங்கள் நெல், சிறுதானியம், பருத்தி, சோயா மொச்சை, முருங்கை ஆகிய பயிர்களில் வெளியிடப்படுகிறது. இந்த இரகங்கள் உயர் விளைச்சல் தருவதுடன், தனக்கென சிறப்பு குணங்களையும் பெற்றுள்ளன.


## நெல்

| | | |
|---|---|---|
| 1. | இரகம் | : ஆடுதுறை-36 |
| 2. | பெற்றோர் | : திருவேணி × ஐ. ஆர். 20 |
| 3. | ஏற்ற பருவம் | : குறுவை, தாளடி மற்றும் நவரை |
| 4. | சிபாரிசு செய்யப்படும் பகுதி | : தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில் குறுவை, பின்போக தாளடி பருவங்களுக்கு ஏற்றது. |
| 5. | வயது | : குறுவையில் 107 நாட்கள். தாளடி, நவரையில் 120 நாட்கள். |
| 6. | பயிரின் உயரம் | : 95 செ.மீ. (அடர்த்தியான) ஓரளவு குட்டை இரகம் |
| 7. | அரிசியின் தன்மை | : நடுத்தர சன்ன வெள்ளை நிற அரிசி |
| 8. | பூச்சி நோய் தாங்கும் திறன் | : கொள்ளை நோய் மற்றும் இலைக்கருகல் நோயை ஓரளவு தாங்கும் சக்தி வாய்ந்தது. |
| 9. | சிறப்புத் தன்மைகள் | : 1. அறுவடையான 3 வாரங்களில் முளைக்கும் தன்மையுடையது.<br>2. துத்த நாகச்சத்து குறைவான நிலங்களிலும் நல்ல மகசூல் தரவல்லது.<br>3. ஆடுதுறை 31, ஐ. ஈ. டி. 4786ஐ விட அதிக மகசூல் தரவல்லது. |
| 10. | மகசூல்/ஹெக்டேர் | : தானியம் 5052 கிலோ |




## கம்பு

| | | |
|---|---|---|
| 1. | இரகம் | : கோவில்பட்டி-4 வீரிய ஒட்டு கம்பு (கே. 4 எச். பி) |
| 2. | பெற்றோர் | : 111 ஏ × எஸ் 411 |
| 3. | ஏற்ற பருவம் | : இறவையில் கோடை பருவத்திலும், மானாவாரியாக ஜூன், ஜூலை, செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலும் பயிரிடலாம். |
| 4. | சிபாரிசு செய்யப்படும் பகுதி | : தமிழகம் முழுவதும் |
| 5. | வயது | : 85 முதல் 90 நாட்கள் |
| 6. | பயிரின் உயரம் | : 160–170 செ. மீ. |
| 7. | தானியம் | : சாம்பல் நிறமுடையது |
| 8. | பூச்சி, நோய் தாங்கும் திறன் | : பசுங்கதிர் நோய், தேன் ஒழுகல் நோய் மற்றும் பூச்சிகளையும் ஓரளவு தாங்கும் தன்மையுடையது. |
| 9. | சிறப்புத் தன்மைகள் | : குடுமியாமலை-2 இரகத்தைக் காட்டிலும் 19 சதம் அதிக மகசூல் தரவல்லது.<br>2. பசுங்கதிர் நோயை ஓரளவு தாங்கும் தன்மையுடையது.<br>3. தானியங்களை சுலபமாக பிரித்து எடுக்க முடியும்.<br>4. சமையலுக்கு ஏற்ற சுவையுள்ள இரகமாகும். |
| 10. | மகசூல்/ஹெக்டேர் | : தானியம் 4750 கிலோ |




## மக்காச் சோளம்

| | | |
|---|---|---|
| 1. | இரகம் | : கோவில்பட்டி-2 வீரிய ஒட்டு மக்காச் சோளம் (கே. 2 எச். எம்.) |
| 2. | பெற்றோர் | : (கே. இசட் 1009 × சி. எம். 500)/(கே. இசட் 1027 × சி. எம். 202) |
| 3. | ஏற்ற பருவம் | : எல்லா பருவங்களுக்கும் ஏற்றது. |
| 4. | சிபாரிசு செய்யப்படும் பகுதி | : தமிழகம் முழுவதும் பயிரிடலாம். குறிப்பாக தஞ்சை, புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு சிறந்தது. |
| 5. | வயது | : 85 முதல் 90 நாட்கள் |
| 6. | பயிரின் உயரம் | : 205 செ. மீ. |
| 7. | தானியம் | : நல்ல மஞ்சள் நிறமுடையது. |
| 8. | பூச்சி, நோய் தாங்கும் தன்மை | : பொதுவாக பூச்சிகளையும், நோய்களையும் ஓரளவு தாங்கும் தன்மையுடையது. |
| 9. | சிறப்புத் தன்மைகள் | : 1. வறட்சியைத் தாங்க வல்லது.<br>2. சமையலுக்கு மிகவும் ஏற்றது.<br>3. கங்கா-5 இரகத்தை விட 32.3 சதவீதம் அதிக மகசூல் தரவல்லது.<br>4. நீண்ட நாட்கள் தரம் கெடாமல் சேமித்து வைக்கலாம். |
| 10. | மகசூல்/ஹெக்டேர் | : இறவையில் 4871 கிலோ |



## தீவன சோளம்

1. இரகம் : கோவில்பட்டி-7 (கே. 7)
2. பெற்றோர் : கே. 3 × எம். 35-1
3. ஏற்ற பருவம் : தென் மாவட்டங்களில் செப்டம்பர்-அக்டோபர்.
4. சிபாரிசு செய்யப்படும் பகுதி : தீவன சோளம் சாகுபடி செய்யும் தமிழக தென் மாவட்டங்கள் முழுவதற்கும்
5. வயது : 100 முதல் 105 நாட்கள்
6. பயிரின் உயரம் : 220 செ.மீ.
7. தானியம் : மணிகள் வெண் முத்து நிறம் உடையது.
8. தட்டை : சாறுள்ளது, தக்கை யற்றது.
9. பூச்சி நோய் தாங்கும் திறன் : பூச்சிகளையும், நோய்களையும் ஓரளவு தாங்கும் தன்மை யுடையது.
10. சிறப்புத் தன்மைகள் :
    1. அதிக மகசூல் தரவல்லது.
    2. தக்கையற்ற மெல்லிய தட்டையும், இனிமையான சாறும் உடையது.
    3. வறட்சியைத் தாங்க வல்லது.
    4. மணிகள் சிரமம் இன்றி பிரித்து எடுக்கலாம்.
11. மகசூல்/ஹெக்டேர் : தானியம் 863 கிலோ. தட்டை 16436 கிலோ.



## பருத்தி

1. இரகம் : கோவில் பட்டி கம்போடியா-1 (கே. சி. 1)
2. பெற்றோர் : குஜராத் மாநிலம் சூரத்-1 இரகத்திலிருந்து மறு தேர்வு செய்யப்பட்டது.
3. ஏற்ற பருவம் : அக்டோபர் (புரட்டாசி பட்டம்)
4. சிபாரிசு செய்யப்படும் பகுதி : தென் தமிழகத்தில் மானாவாரி கரிசல்மண் பகுதிகளுக்கு ஏற்றது.
5. வயது : 140 முதல் 145 நாட்கள்.
6. பயிரின் உயரம் : 60 முதல் 70 செ. மீ.
7. பூச்சி, நோய் தாங்கும் திறன் : சாற்றை உறிஞ்சும் பூச்சிகளை ஓரளவு தாங்கும் தன்மை யுடையது.
8. சிறப்புத் தன்மைகள் :
    1. இலட்சுமி பருத்தியை விட 20-25 நாட்கள் குறைந்த வயதுடையது.
    2. எம். சி. யூ. 6 மற்றும் இலட்சுமி இரகத்தை விட அதிக மகசூல் தரவல்லது.
    3. வறட்சி பகுதிகளில் பயிரிட ஏற்றது.
    4. பாரதி, இலட்சுமி இரகங்களை விட அதிக நூற்புத் திறனும் உடையது.
9. மகசூல்/ஹெக்டேர் : 327 கிலோ பருத்தி




## பருத்தி



1. இரகம் : கோவில்பட்டி-2 வீரிய ஒட்டு பருத்தி இரகம் (கே.2 எச்.சி)
2. பெற்றோர், : எம்.சி.யூ 7 × எஸ். பி. 289 இ.
3. ஏற்ற பருவம் : ஜனவரி-பிப்ரவரி. (தை மாசிப்பட்டம்).
4. சிபாரிசு செய்யப் படும் பகுதி : தஞ்சை, திருச்சி நெல், தரிசு நிலங்களுக்கு ஏற்றது.
5. வயது : 140 முதல் 150 நாட்கள்.
6. பயிரின் உயரம் : 100 முதல் 150 செ.மீ.
7. சிறப்புத் தன்மைகள் :
    1. குறைந்த வயதுடையது.
    2. எம்.சி.யூ. 7 ஐ விட 42 சதம் அதிக மகசூலும், நூற்புத் திறனும் தரவல்லது.
    3. நெல் தரிசு நிலங்களுக்கு மிகவும் ஏற்றது.
8. மகசூல்/ஹெக்டேர் : 1681 கிலோ பருத்தி

## சோயா மொச்சை

1. இரகம் : குடுமியாமலை-1 (கே.எம். 1)
2. பெற்றோர் : தைவான் இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது.
3. ஏற்ற பருவம் : எல்லா முக்கிய சாகுபடி பருவங்களுக்கும் ஏற்றது. புரட்டாசி பட்டம் மிகவும் சிறந்தது.
4. சிபாரிசு செய்யப்படும் பகுதி : தமிழகம் முழுவதும்
5. வயது : 95 முதல் 110 நாட்கள்
6. பயிரின் உயரம் : 45-50 செ. மீ.
7. பயறு : இதர சோயா மொச்சைகளை விட சிறியவை. அழகிய இளம் பச்சை நிறமுடையது.
8. பூச்சி நோய் தாங்கும் திறன் : பொதுவாக ஓரளவு நோய்களை தாங்கும் தன்மையுடையது.
9. சிறப்புத் தன்மைகள் :
    1. நெல் வரப்புகளில் பயிரிட ஏற்றது.
    2. சோயா மொச்சைகளில் உள்ள வாடை இதில் மிகவும் குறைவு.
    3. தோசை, இட்லி மற்றும் வடை முதலிய பதார்த்தங்களுக்கு உளுந்துடன் கால்பங்கு சேர்த்து உபயோகிக்கலாம்.
10. மகசூல்/ஹெக்டர் : 1069 கிலோ



# முருங்கை

| | | |
|---|---|---|
| 1. இரகம் | : | குடுமியாமலை-1 (கே. எம் 1) |
| 2. பெற்றோர் | : | அருப்புக்கோட்டை உள்ளூர் இரகங்களிலிருந்து தேர்வு முறையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. |
| 3. ஏற்ற பருவம் | : | அக்டோபர்-நவம்பர் சிறந்த பருவம். |
| 4. சிபாரிசு செய்யப்படும் பகுதி | : | தமிழகம் முழுவதும். |
| 5. வயது | : | ஒரு ஆண்டு பயிர் |
| 6. பயிரின் உயரம் | : | 3.46 மீட்டர் |
| 7. காய்களின் தன்மை | : | நல்ல ருசியான, சதைப் பற்றுள்ள, குறைந்த விதைகள் உள்ள காய்கள் கொண்டது. |
| 8. சிறப்புத் தன்மை | : | 1. ஒரு ஆண்டு பயிர். 2. 120 நாட்களில் பூத்து 160 நாட்களில் மகசூல் தரும் தன்மையைக் கொண்டது. 3. குறைந்த நாருடன், நல்ல சுவையுள்ள காய்களையும் கொண்டது. 4. 409.4 சதம் அதிக மகசூல் தர வல்லது. |
| 9. மகசூல்/ஒரு மரத்திற்கு | : | ஒரு ஆண்டில் 868 காய்கள் தரவல்லது. |





## சீர்திருத்தப் பணித்துறைக் காப்பகங்கள்

சீர்திருத்தப்பணித்துறையின்கீழ் தற்போது இயங்கிவரும் காப்பகங்களின் பெயர், இனி தமிழில் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படும் :

| | |
|---|---|
| Government Vigilance Home, and Stri Sadana, Madras. Government unmarried Mothers' Home, Madras. | அரசினர் மகளிர் காப்பகம், மயிலை, சென்னை. |
| Government Protective Home, Tiruchirapalli. | அரசினர் மகளிர் காப்பகம், திருச்சிராப்பள்ளி. |
| Government Vigilance Home, Madurai. | அரசினர் மகளிர் காப்பகம், மதுரை. |
| Government Vigilance Rescue Shelter, Madurai, Tiruchirapalli, Vellore, Salem, Coimbatore & Madras. | அரசினர் மகளிர் மீட்பு மனை, மதுரை, திருச்சிராப்பள்ளி,, வேலூர், சேலம், கோயம்புத்தூர். |




தமிழ்நாட்டில் நீர்ப்பாசனம் தொன்று தொட்டு நடைபெற்று வரும் ஒரு சாதனை ஆகும். பல ஆயிரக்கணக்கான ஏரிகளை அமைத்து மழைநீரைத் தேக்கிப் பாசனத்திற்கு உபயோகப்படுத்தி வருகிறோம். நமக்குக் கிடைக்கப் பெறும் ஆற்று நீர்வளத்திலும் சுமார் 95 விழுக்காடு உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. நீர்த் தேக்கங்கள், அணைகள், வாய்க் கால்கள், ஏரிகள் முதலியவற்றை ஆங்காங்கு அமைத்ததனால் இந்த சாதனை சாத்தியமாயிற்று.

நாடு சுதந்திரம் பெற்று ஐந் தாண்டுத் திட்டங்கள் ஆரம்பிப்ப தற்கு முன்பே 23 பாசனத் திட் டங்கள் தமிழ்நாட்டில் செயல் பட்டு வந்தன. இவை 11 இலட் சம் ஹெக்டேர் (27 இலட்சம் ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளித்தன. பெண்ணாறு, காவிரி, தாமிரபரணி ஆற்றுப் படுகைகளிலும், சமவெளிகளி லும் அணைக்கட்டுகளின் மூலம் நீர்ப்பாசனம் விரிவுபடுத்தப் பட்டன. அதுவன்றி இருபெரிய நீர்த்தேக்கங்களும் அமைக்கப் பட்டன. இதில் மேற்கு நோக்கி ஓடும் பெரியாற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட பெரியாறு நீர்த் தேக்கம் ஒன்று. இதனால் மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீர் ஒரு குடைவரை (டன்னல்)மூலம் கிழக்கே கொண்டுவரப்பட்டு மதுரை மாவட்டத்திற்குப் பய னளிக்கிறது. மற்றது காவிரி யின் குறுக்கே கட்டப்பட்ட மேட் டூர் நீர்த்தேக்கம் ஆகும். தமிழ் நாட்டில் அதிக நீர் கொள்ளள வுள்ள நீர்த்தேக்கம் இதுதான்.

1951-52 முதல் செயல்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் 6 பெரிய மற்றும் 39 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் 3.34 இலட் சம் ஹெக்டேர் (8.26 இலட்சம் ஏக்கர்) பரப்புள்ள புதிய நிலங் களுக்குப் பாசன வசதியளிக்க சுமார் 217 கோடி ரூபாய் மதிப் பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட் டன. இவற்றுள் 4 பெரிய மற் றும் 32 நடுத்தர திட்டங்கள் முடிவடைந்து 2.00 இலட்சம் ஹெக்டேர் (4.95 இலட்சம் ஏக் கர்) புதிய நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. இவை தவிர, படிப்படியாக நிறைவேற்றப் பட்டுவரும் பரம்பிக்குளம் ஆழி யாறு திட்டத்தின் மூலம் 88 ஆயிரம் ஹெக்டேர் (2.18 இலட் சம் ஏக்கர்) புதிய நிலங்கள் பாச பாசன வசதி பெறுகின்றன. 1978-79ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட திட்டங்களினால் சுமார் 2,700 ஹெக்டேர்(6,600 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். நடப்பு (1979-80) நிதியாண்டில் சுமார் 5,000 ஹெக்டேர் (12,400 ஏக் கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட் டுள்ளது.

தற்போது செயல்படுத்தப் பட்டு வரும் முக்கிய பாசனத் திட்டங்களாவன:—

### 1. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

பல நோக்கங்கள் கொண்ட பல பள்ளத்தாக்குத் திட்டமாகிய பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொடங்கப்பட்டது. அண்டை மாநிலங்களில் ஒத்துழைப்புக்கும், நல்லெண்ணத்திற்கும் இது ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இது வரை இத்திட்டத்தில் அடங்கிய 6 நீர்த்தேக்கங்கள், ஒரு அணை, 7 கால்வாய்கள் தொடர்புச் சுரங்கங்கள் முதலியன கட்டி முடிக்கப்பட்டுப் பாசன வசதி அளிக்கப்பட்டு வருகிறது. கீழ் நீராறு நீர்த்தேக்கம், குடைவரை வேலைகள் நடைபெற்று வருகின் றன. இவை நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு மேலும் 6,520 ஹெக்டேர் (16,000 ஏக்கர்) நிலங் களுக்குப் பாசன வசதி அளிக்க வகை செய்யப்படும். இத்திட் டத்தின் கீழ் பாசன வசதிபெற திட்டமிட்ட பரப்பு இரண்டு இலட்சத்து ஐம்பத்தினாயிரம் ஏக்கர். ஆயினும், மற்றும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பு பாசன நீர் வசதியின்றி உள்ளன. வறட்சியான பகுதிகளி லும் இத்திட்டத்தின் பயன் விரி வாக்கப்பட வேண்டும் என்று கருதி இந்த அரசு இத்திட்டத்தை மேலும் 1.10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறையாவது பாசன வசதி அளிக்கும் வகையில் விரிவாக்க, அங்கீகரித்துள்ளது.



### 2. பெரியாறு-வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டம்

பெரியாறு வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் வகையிலும், நிலநீர் உறிஞ்சி வீணாகும் அளவைக் கட்டுப்படுத்தும் வகையிலும் ஒரு புதுமையான திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 41.04 கோடியாகும். இதனால் 15,950 ஹெக்டேர் (39,420 ஏக்கர்) புதிய நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்தை நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. சாத்தனூர் நீர் வழங்கும் அணைக்கட்டிலிருந்து ஒரு வலது பக்கக் கால்வாயை வெட்டுதல்:

சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள அணைக்கட்டிலிருந்து முன்பு பாசன வசதி அளிக்கப்படாத வலது பக்கத்தில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டு வருகிறது. முதலில் இத்திட்டத்தின் கீழ் புதியதாக 3,600 ஹெக்டேர் பரப்புள்ள (9,000 ஏக்கர்) நன்செய் நிலங்களுக்குப் பாசனவசதி அளிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், தற்போது இக்கால்வாய்த் திட்டத்தைப் புன்செய்ப் பாசனத்திற்குப் பயன்படுத்தினால் சுமார் 6,554 ஹெக்டேர் (16,443 ஏக்கர்) நிலங்கள் பயனடையும் என்ற முறையில் மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தலைப்புப் பகுதிகளில் உள்ள ஒரு பகுதி ஆயக்கட்டுக்கு இக்கால்வாயின் மூலம் நீர் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கால்வாய்த் திட்டத்திற்கான அண்மை மதிப்பீட்டுச் செலவு 500 இலட்சம் ரூபாயாகும். இத்திட்டம் நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முடிவடையும்.

### 4. கேலவரப்பள்ளிக்கருகில் பெண்ணையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்:

தருமபுரி மாவட்டத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே கேலவரப்பள்ளி கிராமத்திற்கு அருகில் சுமார் 607 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஓர் அணை கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1977-ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்தது. இதனால் 3,237 ஹெக்டேர் (8,000 ஏக்கர்) பரப்புள்ள புதிய புன்செய் பாசனவசதி பெறும். 386 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு இரண்டு கால்வாய்களும் வெட்டப்படும். நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டம் முடிக்கப்படும்.

### 5. மரம்பட்டி கிராமத்திற்கு அருகில் பாம்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டும் பணி:

வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ், வறட்சிப்பகுதியான தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை தாலுக்கா, மரம்பட்டி கிராமத்திற்கு அருகில் பாம்பாற்றின் குறுக்கே 248 இலட்சம் ரூபாய் செலவில் ஓர் நீர்த்தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. இதனால் 1,620 ஹெக்டேர் (4,000 ஏக்கர்) பரப்புள்ள புதிய புன்செய் நிலங்கள் பாசனவசதி பெறும். நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டம் முடிக்கப்படும்.

### 6. குண்டாறு நீர்த்தேக்கத் திட்டம்:

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், கன்னிப்புளிமேட்டிற்கு அருகில் குண்டாற்றின் குறுக்கே 25 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள ஒரு நீர்த்தேக்கம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏற்கெனவே பற்றாக்குறை பாசனம் பெற்றிருந்த 495 ஹெக்டேர் (1,222 ஏக்கர்) பரப்புள்ள நிலம் தவறாத பாசன வசதி பெறும். மேலும் 40 ஹெக்டேர் (98 ஏக்கர்) நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்காக 82 இலட்சம் ரூபாய் திருத்திய மதிப்பீட்டுச் செலவிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டம் முடிக்கப்படும்.

### 7. வீராணம் ஏரிக் கால்வாய் மேம்பாட்டுப் பணி (முன்னோடி ஆய்வு:)

(1) வீராணம் ஏரியையும் அதன் கால்வாய்களையும் (2) வடவாறு, வடவாற்றுப் பாசனக் கால்வாய்களையும் மேம்படுத் திட்டமிட்டு, முதல்நிலையில் லால்பேட்டை, வள்ளிக்குடிக் கால்வாய்களை 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

1978-79-ஆம் ஆண்டில் அரசு கீழ்க்கண்ட நான்கு நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுக்காவில் தும்பலஹள்ளி கிராமத்தின் அருகிலுள்ள பூலப்பட்டியாற்றின் குறுக்கே 131 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் கட்டுதல் இத்திட்டத்தினால் 884 ஹெக்டேர் (2,184 ஏக்கர்) புதிய நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், ஏற்கெனவே பற்றாக்குறை பாசனம் பெற்றிருந்த 171 ஹெக்டேர் (422 ஏக்கர்) நிலங்கள் தவறாத பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் மதிப்பீடு 123.97 இலட்சம் ரூபாய் ஆகும்.

2. தருமபுரி மாவட்டம், அரூர் தாலூக்கா, முள்ளிக்காடு கிராமத்தின் அருகிலுள்ள வாணியாற்றின் குறுக்கே 418 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைத்தல். இத்திட்டம் ஏற்கெனவே பற்றாக்குறை பாசனம் பெற்றிருந்த 749 ஹெக்டேர் (1,852 ஏக்கர்)நிலங்களுக்குத் தவறாத பாசன வசதி அளிப்பதுடன், 3,460 ஹெக்டேர் (8,550 ஏக்கர்) புதிய நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கும். இத்திட்டத்தின் மதிப்பீடு 560 இலட்சம் ரூபாய் ஆகும்.

3. இராமநாதபுரம் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை என்ற கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றின் குறுக்கே 398 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் கட்டுதல். இத்திட்டத்தினால் 3,278 ஹெக்டேர்(8,100 ஏக்கர்) புதிய, வறட்சியான நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். இத்திட்டத்தின் மதிப்பீடு 296 இலட்சம் ரூபாய் ஆகும்.

4. இராமநாதபுரம் மாவட்டத்தில் குல்லூர் சந்தை என்ற கிராமத்திற்கு அருகில் விருதுபட்டி ஓடையின் குறுக்கே 127 இலட்சம் ரூபாய் செலவில் 127 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் கட்டுதல். இதனால் 1,034 ஹெக்டேர் (2,556 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

மேலும், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே சிறப்புச் சிறுபாசன வேலைகளும் நடந்து வருகின்றன. சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 25 இலட்சம் ரூபாய்க்கும் குறைவான மதிப்பீட்டில் பல சிறு வேலைகள் ஆங்காங்கே பாசன வசதிகள் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூர் ஏறி விட்டதன் காரணமாகப் பாசன ஏரிகள் கொள்ளளவை இழக்கின்றன. முழு ஏரி மட்டத்தை உயர்த்துவது, ஏரிப் படுகைகளில் தூர் எடுப்பது, ஏரி எதிர்வாய் நிலங்களைப் பண்படுத்துவது ஆகியவற்றின் மூலம் இழந்த கொள்ளளவில் ஒருபகுதியையோ அல்லது முழுப்பகுதியையோ மீட்க முடியும். இவ்விரு முறைகளையும் விவேகத்துடன் செயல்படுத்துவதன் மூலம் தூர் வாருதல் பண்படுத்தல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துவக்கப்பட்ட இத்திட்டம், நடப்பு ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் தொடர்கிறது. துவக்கத்திலிருந்து மொத்தம் 263 ஏரிகளிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 13 ஏரிகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் 37,000-க்கும் மேற்பட்ட ஏரிகளின் மூலம் சுமார் 9.3 இலட்சம் ஹெக்டேர் (22.98 இலட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இவற்றுள், 40 ஹெக்டேருக்கு (100 ஏக்கர்)அதிகமாகப் பாசன வசதியளிப்பவை மட்டுமே தற்போது பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளன. ஏரிகளின் பராமரிப்பின் அவசியத்தையும், ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஏரிகள் மானியக் குறைவால் சரியாகப் பராமரிக்க முடியவில்லை என்பதையும் கருத்தில் கொண்டு ஏரிகளின் தரத்தை உயர்த்த 1974-ஆம் ஆண்டு விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத்திட்டத்தை அரசு தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலுள்ள, மற்றும் முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த ஏரிகள் முதற்கண் பொதுப்பணித்துறையினால் தர நிலைகளுக்குக் கொண்டுவரப்பட்டு பின்னர் ஊராட்சி ஒன்றியங்களிடம் அவற்றின் பராமரிப்பில் இருக்க வேண்டியவை ஒப்படைக்கப்படுகின்றன.

மேலும், 200 ஹெக்டேரும் (500 ஏக்கர்) அதற்கு அதிகமாகவும் ஆயக்கட்டு கொண்ட சுமார் 500 ஏரிகளை நவீனப்படுத்தவும் அவற்றின் நீரைச் சிக்கன முறையில் பயன்படுத்தவும் ஒரு பெரிய திட்டம் 192.68 கோடி ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு உள்ளது.





'தமிழ்நாட்டில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எஞ்சியுள்ள உபரி நீர் வளம் குறைவானது. அதனையும் முடிந்த அளவு உபயோகப்படுத்தப் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. ஆற்று நீர்வளத்தை ஏறக்குறைய முழு அளவு பயன்படுத்திவிட்டதால் அண்டை மாநிலமாகிய கேரளத்தில் மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளில் இருந்து உபரி நீரினை கிழக்கு நோக்கித் திருப்பி நமது மாநிலத்தில் பாசன வசதியைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மத்திய அரசு ஒரு தொழில் நுட்பக் குழுவை அமைத்துள்ளது.

மற்றும் அரசு, நடைமுறையில் உள்ள திட்டங்களை மேம்படுத்தி நீரை மிச்சப்படுத்தி பாசன வசதியளிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கால்வாய்களுக்குக் காரை பூசி நீர்க்கசிவு குறைக்கப்படுகிறது. பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல், கால்வாய்களுக்குக் காரை பூசுதல் முதலிய பணிகளை எங்கெங்கு சிக்கனமாக நிறைவேற்ற முடியுமோ அங்கெல்லாம் படிப்படியாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இருக்கும் நீர்வளத்தைக் கொண்டு நல்ல முறையில் பாசன வசதிகளை இயன்ற அளவு விரிவுபடுத்த அரசு 'ஆவன செய்கிறது.

'தமிழரசு' இதழில் புதிய பகுதி

# வெற்றிச் சரிதம் படைக்கும் வீரர்

*அரசு, அரசு சார்புள்ள வாரியங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவி பெற்று—சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள்—கையினால் காகிதம் செய்தல்—பழத்தோட்டம்—கரும்பு போன்ற பணப்பயிர் செய்தல்—ஆகிய தொழில்கள் நடத்தி அவற்றின் மூலம் வெற்றி பெற்றவர்கள்—எளிய குடும்பத்தில் பிறந்து கல்வியினால் முன்னேற்றம் பெற்றவர்கள்—குடும்பநலத் திட்டத்தின் மூலம் நல்வாழ்வு கிடைக்கப் பெற்றவர்கள்—சிறுசேமிப்பின் மூலம் பெருநன்மை அடைந்தவர்கள் மற்றும் வேறுவிதமாக நல்ல பயன் அடைந்தவர்களின் வரலாறு 'வெற்றிச் சரிதம் படைக்கும் வீரர்' என்ற தலைப்பில் 'தமிழரசு' இதழில் வெளியிடப்பெறும்.*

- கட்டுரை 'தமிழரசு' இதழில் ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.
- வெற்றி பெற்றோர்—அவரே சொல்வது போன்ற பாணியில் அமைக்கப்பட வேண்டும்.
- தனிப்பட்ட எழுத்தாளர்கள்—மற்றும் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் இந்தக் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.
- இடம் பெறும் கட்டுரைக்கு அன்பளிப்பு ரூ.25/- உண்டு.
- கட்டுரைகளுடன், சம்பந்தப்பட்ட தொழில் நிலையம்-வெற்றி பெற்றோர்—ஆகியோரின் புகைப்படங்களும் அனுப்பப் பெறல் வேண்டும்.
- 'கட்டுரை உண்மையான தகவல்கள் கொண்டது' என்று ஊராட்சி ஆணையரின் ஒப்புதல் கடிதத்துடன் அனுப்பப் பெறல் வேண்டும்.
- உறையின்மேல் 'வெற்றி பெற்றோர் சரிதம்' என்று குறிப்பிட வேண்டும்.

*கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி:*

ஆசிரியர்,
'தமிழரசு அலுவலகம்'
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



# பாரதியாரின் ஓவியச் சிந்தனைகள்


ஓவியர் முத்து

மகாகவி பாரதியார், நம் பாரதத் திரு நாட்டின் விடுதலைக் கவிஞர். அந்நிய ஏகாதி பத்தியத்தின் கோரப்பிடியிலிருந்து இந்தியா விடுபட்டுப் பாரத மக்கள் வீர சுதந்தர மக்க ளாய்த் திகழ வேண்டும் என்ற எண்ணம், பாரதியாரின் உள் மனத்தில் ஆழப் பதிந்து, குமுறி அதுவே எரிமலையாக வெடித்தது.

அவ் வெடிச் சிதறல்கள் தலைசிறந்த கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும், காவி யங்களாகவும், கதைகளாகவும், கனல் கக்கும் பேச்சுகளாகவும் தெறித்தன. அவர் தம் கவிதை வரிகள், வீரம், காதல், அஞ்சாமை, நாட்டுப் பற்று, மொழிப்பற்று, ஒற்றுமை யுணர்வு மற்றும் பல உயரிய உணர்வுகளை உண்டாக்கும் திறம் படைத்தனவாகும்.

பல்வேறு கவிதைகளைப் பாடிக் குவித்த பாரதியார், ஒரு தலைசிறந்த ஓவியச் சிந் தனையாளராகவும்-ஓவிய ஞானம்-கலையுள் ளம்-கலைநோக்கு ஆகியவையுங் கொண்டிருந் தார் என்றால், அது மிகையாகாது. ஒருபக்கம் குடும்பச் சுமை, மறு பக்கம் அந்நிய ஏகாதி பத்தியக் கொடுமை; வேறொரு பக்கம் இவற் றையெல்லாம் விஞ்சும் வறுமையின் கோரத் தாண்டவம். இத்துணைத் துயரங்களையும் தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு, காட்டிலே சிதறிக் கிடக்கும் கவின்மலர்க் குவியல்களைப் போல், அவர்தமது கவிதை களுக்கிடையே ஓவியக் கருத்துகளை உதிர்த் துள்ளார். ஈடிணையற்ற அவரது கவிதைச் சுடரிலே ஓவியச் சிந்தனைகள் ஒளி வீசுகின் றன.

உலகில் ஓவியங்கள் நிலையான இடத் தைப் பெறுகின்றன. பிரான்சு நாட்டைத் தாக்கிய ஜெர்மானியரிடமிருந்து பிரெஞ்சு நாட்டின் புகழ்பெற்ற ஓவியங்களெல்லாம் ஒரு சேதமும் ஏற்படாமல் பிரெஞ்சு மக்கள் அரும்பாடுபட்டுக் காப்பாற்றினார்கள், என்ற வரலாறு ஒன்றுண்டு. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஓவியத்துக்கு, ஓவியச் சிந்தனையும்



கலை உள்ளமும் மன அமைதியும் வேண்டும். மன அமைதி இல்லையேல், கைதேர்ந்த ஓவியனால்கூட ஒப்பற்ற ஓவியத்தை உருவாக்க முடியாது.

ஊணின்றி உறுத்தும் பசியையும் தாங்கிக் கொண்டு, ஓவியந் தீட்டலாம். பல ஓவியர்கள் பசியெனும் பகைவனுடன் போராடிக் கொண்டே தலைசிறந்த ஓவியங்களைத் தீட்டித் தந்துள்ளனர். ஆனால், பாரத விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கு பெற்று, அந்நிய ஏகாதிபத்தியத்தின் அளவற்ற கொடுமைகளைத் தாங்கிக் கொண்டும் பசிப்பகையுடன் போராடிக் கொண்டும், தலைசிறந்த கலை நுணுக்கம் மிக்க ஓவியத்தைப் பற்றி அந்த இளம் வயதிலேயே பாரதியாரால் எப்படி எழுத முடிந்தது என்பதை ஒரு கணம் சிந்திக்கும்போது வியப்புறவே செய்கிறோம்.

எட்டயபுரத்திலே பிறந்த பாரதியார், உலக மகா கவி யாகத் திகழ்வதற்கு அவரது நாட்டுப் பற்றும் விடுதலை உணர்ச்சியும் வீரிட்டெழும் கவிதைகளும்தாம் காரணம் என்றாலும், அவரது ஓவியச் சிந்தனைகளைப் பற்றி மட்டுமே இங்குக் குறிப்பிடுகின்றேன்.

''பாரத நாடு பல வளங்களையும் பெற்ற நாடு; எதற்கும் பிற நாட்டினரிடம் கையேந்தி நிற்க வேண்டிய நிலையில் இல்லாத நாடு. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்றவர்களும் ஒன்றுபட்டு வாழ்வோம்; ஒவ்வொரு மாநில மக்களும் பண்டமாற்று செய்து கொண்டு பண்போடு வாழ்வோம், நாங்கள் யார்க்கும் சளைத்தவர்கள் அல்லர்; எல்லாவற்றையும் நாங்களே செய்துகொள்வோம்; அறிவும் ஆற்றலும் அளவின்றிப் பெற்றவர்கள் நாங்கள்'' என்று பாரத நாட்டின் வளத்தைப் பறைசாற்றும் பாரதியார்க்கு ஓவியமும் முன் வந்து நிற்கின்றது.

''ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்.
உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்''



என்று புன்னாகவராளியிலே பூரித்துப் பாடுகின்றார் பாட்டுக்கொரு புலவர்.

''வீர சுதந்தரத்தை வேண்டி நிற்பவர்கள் வேறொன்றையும் விரும்பமாட்டார்கள்; சுதந்தரப் பசியெடுத்து அலைகின்ற புலிகள் புல்லைத் தின்னமாட்டா'' என்று பல எடுத்துக்காட்டுகளோடு குறிப்பிடும் பாரதியார், இறுதியில் சித்திரத்தையே சிறந்த எடுத்துக் காட்டாகத் தருகின்றார்.

''கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ'' என்று ''இல்லை வெளியில் கலந்துவிட்டால், அவர் திரும்பியும் வருவாரோ'' என்னும் மெட்டிலே திளைத்துப் பாடுகின்றார். சுதந்தரத்தைப் பறிகொடுத்து விட்டுச் சுகபோக வாழ்வு வாழலாமென்று நினைப்பவர்களைச் சாடுகின்றார்.

நாட்டின்மீது எந்த அளவுக்குப் பக்தி கொண்டிருந்தாரோ, அந்த அளவுக்குக் கடவுள்மீதும் பக்தி கொண்டிருந்தார் பாரதியார். இறைவனின் படைப்பைக்கண்டு வியந்து நின்ற பாரதியார், அதை இறைவனிடமே கூறிக் களிக்கின்றார்.

''எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
  இறைவா! இறைவா! இறைவா!
சித்தினை அசித்துடன் இணைத்தாய்-அங்குச்
  சேரும் ஐம்பூதத்து வியனுல கமைத்தாய்!
அத்தனை யுலகமும் வர்ணக்களஞ்சியம்
  ஆகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்!''

''பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்று கேட்கவந்த பாரதியார், ஓர் அற்புதமான கற்பனை மாளிகையைக் கட்டுகின்றார். இக்காலக் கட்டடப் பொறியியல் வல்லுநர்கள், எவ்வாறு அமைந்தால் ஒரு மாளிகை அழகாகவும் அமைப்பாகவும், சுத்தமாகவும், சுகாதார வசதிகள் கொண்டதாகவும் இருக்கும் என முன் கூட்டியே வரைபடம் வரைந்துகொண்டு கட்டடம் கட்டுவதைப்போல், ஓவியச் சிந்தனையையும் கலைக் கண்ணோட்டத்தையும் கொண்டு, வரைபடம் வரைகின்றார் கவிதை மையால்.

'காணி நிலம் வேண்டும்—பராசக்தி
  காணி நிலம் வேண்டும்!
தூணில் அழகியதாய்-நன் மாடங்கள்
  துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
  கட்டித் தரவேண்டும்—அங்குக்
கேணி யருகினிலே—தென்னைமரம்
  கீற்றும் இளநீரும்

பத்துப் பன்னிரண்டு-தென்னைமரம்
  பக்கத்திலே வேணும்!—நல்ல
முத்துச் சுடர்போலே—நிலாவொளி
  முன்பு வரவேணும்—அங்குக்
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
  காதிற் படவேணும்—என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
  தென்றல் வரவேணும்!''

என்று பாட்டாலே பாங்கான மாளிகை ஒன்றைக் கட்டி மகிழ்கின்றார், ஓவியச் சிந்தனையுடன் மகா கவி பாரதியார்.



''அத்தினாபுரத்தின் அழகை வர்ணிக்கையில் இனிய இசைகள் எங்கும் எழுந்தொலிக்கின்றன; நாட்டிய நங்கையர்கள் ஆடும் நல்ல நாட்டியங்கள் எங்கும் நடைபெறுகின்றன; பழம்பெரும் பாவியங்கள் பல பண்பாட்டைப் பரிந்தூட்டுகின்றன'' என்றெல்லாம் கூறிக் கொண்டு வரும்போதே அவருடைய கண்முன் ஓவியம் ஓடிவந்து நிற்கின்றது. திறமை வாய்ந்த ஓவியர்கள் தீட்டிய ஓவியங்கள் ஒளி வீசித் திகழ்கின்றன'' என்று ஓதுகின்றார்.

''நல்லிசை முழக்கங்களாம்—பல
  நாட்டிய மாதர்தம் பழக்கங்களாம்!
தொல்லிசைக் காவியங்கள்—அருந்
  தொழிலுணர் சிற்பர்செய் ஓவியங்கள்''

என்று அவர் அத்தினாபுரத்தின் அழகைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

பாண்டவர்கள் செய்த பெரு வேள்வியை முன்னிட்டு மன்னர் பலர் பரிசாகக் கொண்டு வந்து குவித்ததைக் கண்டு உளங் கொதித்தான் துரியோதனன், பரிசாக வந்த பொருள்களை வரிசைப்படுத்திக் கூறிக்கொண்டு வரும் பொழுது,

''சேலைகள் நூறு வண்ணம்-பல
  சித்திரத் தொழில்வகை சேர்ந்தனவாய்
சாலவும் பொன்னிழைத்தே—தெய்வத்
  தையலர் விழைவன பலர்கொணர்ந்தார்!''

என்று ஏக்கப் பெருமூச்சுவிடுகின்றான் துரியோதனன். பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் துரியோதனின் பொறாமை உள்ளத்தைப் புரியவைப்பதற்காக இந்தச் சித்திரக்காட்சியைக் கொண்டுவந்து காட்டுகின்றார்.

மன்னர்கள் கொண்டுவந்து குவித்த பொருட் குவியலைக் கண்ட துரியோதனன், பொருள்களை வரிசைப்படுத்திக் கூறுவதைப் போல் அமைத்த பாரதியார்க்குப் பெண்கள் பெருமையுடன் அணிந்து கொள்கின்ற சித்திரச் சேலைகள் நினைவுக்கு வருகின்றன. பெண்களும் புடவைகளும் நினைவுக்கு வந்தவுடன் சித்திரம் அவர் தம் நினைவுக்கு வராமல் இருந்திடுமா? எதையுங் கலைக்கண் கொண்டு பார்க்கின்ற பாரதியார், சேலையை வெற்றுச் சேலையாகக் கூறாமல், வேலைப்பாடமைந்த பல சித்திரங்கள் தீட்டப்பட்ட சேலை என்று கூறித் தம் தணியாத ஓவியச் சிந்தனையை இழையோட விடுகின்றார்; படிப்பவர் இதயத்தைத் தொடுகின்றார்.

நல்லணிகளையும்-நாட்டையும்-தன் உடன் பிறப்புகளையும் சூதாட்டத்தில் பணயமாக வைத்திழந்த தருமன், இறுதியில் பாஞ்சாலியையும் பணயமாக வைக்கத் துணிந்துவிட்டான் என்பதைக் கூறவரும் பாரதியார்,

'' பாவியர் சபைதனிலே—புகழ்ப்
  பாஞ்சால நாட்டினர் தவப்பயனை
  ஆவியில் இனியவளை—உயிர்த்
  தணிசுமந் துலவிடு செய்யமுதை
  ஓவியம் நிகர்த்தவளை—அரு
  ளொளியினைக் கற்பினுக் குயிரதனை
  ....  ....  ....  ....
  ....  ....  ....  ....
  கொடியவர் அவைக்களத்தில்—அறக்
  கோமகன் வைத்திடத் துணிந்துவிட்டான்''

என்று கூறிப் பாவியர் சபைதனிலே, பாஞ்சால நாட்டின் தவப்பேற்றால் கிட்டிய பயன் பணயமாவதுவோ என அங்கலாய்க்கின்றார். ஓவியத்தின் அருமையை அறியாத பாவியர், அவைதனிலே இந்த ஓவியத்தைப் பணயமாக வைப்பதுவோ, என்று உள்ளம் வெதும்பிக் கூறும்பொழுதுகூட, பாரதியாரின் ஓவியச் சிந்தனை முதலிடத்தைப் பெறுவதை உணர முடிகிறது.

''இந்திய நாட்டின் வளத்தைப் பற்றிச் சிந்திக்கும்போதும் வீர சுதந்தரத்தை வேண்டி நிற்பவர்களைப் பற்றிச் சிந்திக்கும்போதும இறைவனைப் பற்றிப் பாடும்போதும் பராசக்தியை வேண்டும்போதும் கலைமகளின் இருப்பிடத்தைக் கூறும்போதும் நகரத்தின் அழகை நவிலும்போதும் பரிசுப் பொருள்களைப் பார்க்கும்போதும் பாஞ்சாலியின் நிலைமையை நமக்குப் படம் பிடித்துக்காட்டும்போதும் இன்ன பல நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும்போதும் பாரதியாரின் கண் முன்னால் பாங்கார் ஓவியம் முந்திக்கொண்டு வந்து நிற்கின்றது.

கவிஞனும் ஓவியனும் கலை உள்ளங் கொண்டவர்களே. கவிஞனின் கலை உள்ளம் கவிதையை வடித்துக் காட்டுகிறது; ஓவியனின் கலையுள்ளம் அதை ஓவியமாய்த் தீட்டிக் காட்டுகிறது. காவியந் தீட்டும் கவிஞனும் ஓவியந் தீட்டும் ஓவியனும் கலை நிலத்தில் செய்யுள்-ஓவியம் என்கின்ற பயிர்களை விளைவித்துக் கருத்துப் பயன்களை நாட்டுக்கு நல்குபவர்களே.

காவியத்தில் ஓவியம் தீட்டிய கன்னித் தமிழ்க் கவிஞர் பாரதியாரின் ஓவியச் சிந்தனைகள் உயர்ந்தவை; கற்பவர் நெஞ்சில் என்றென்றும் நிலைபெற்று நிற்பவை.



# இலாபகரமான மாட்டுத்தீவனம்

சாதுவாக இருப்பதால் மட்டுமல்ல; பரிபூரணத்வம் நிறைந்த உணவாகக் கருதப்படும் சிறப்புடைய பாலைத் தருவதாலேயே 'பசு மிக நல்லதடி பாப்பா' என்று பாடினார் பாரதியார். பாலைக் குறைவின்றித் தர பசுவுக்கு உதவும் தீவனங்கள் சில உண்டு. அவற்றை இனமறிந்து பயன்படுத்தினால் நன்மை உண்டு.

பால் பண்ணைத்தொழில் ஒரு இலாபகரமான தொழில். கறவை மாடுகளுக்குக் கொடுக்கப்படும் வைக்கோல், புல், மற்றும் கெட்டித் தீவனங்கள் பாலாக மாற்றித் தரும் தன்மை கொண்டவை.

கறவை மாடுகளைப் பராமரிக்கும் செலவில் சுமார் 70 சதவிகிதம் மாட்டுத் தீவனத்திற்காகச் செலவிடப்படுகிறது.

நமது மாநிலத்தில் ஒரு கிலோ கடலைப்புண்ணாக்கு, எள்ளுப் புண்ணாக்கு ஆகியவை காலத்துக்கேற்றபடியான விலைகளில் விற்கப்படுகின்றன. மாட்டுத்தீவனத்தின் விலை கூடுதலாவதற்கு மற்றொரு காரணம் தீவனத்தில் 30 சதவிகிதம் வரை தானியங்கள் சேர்ப்பதாகும்.

தமிழ்நாட்டில் கறவை மாடுகளுக்குப் பால் உற்பத்தியாளர் பெரும்பாலும் தீவனத்தில் எள்ளுப்புண்ணாக்கையே புரதமாகச் சேர்க்கின்றனர். புண்ணாக்குகளில் விலை அதிகமானது எள்ளுப்புண்ணாக்காகும். கறவை மாட்டின் தீவனத்தில் சேர்க்கப்படும் மற்ற பொருள்கள் கோதுமை, அரிசி தவிடுகள் மற்றும் பொட்டு வகைகளாகும்.

டாக்டர் டி. மங்கள்ராஜ்
டாக்டர் ஜி. சங்கரநாரயணன்
டாக்டர் எஸ். வெங்கட்டையன்
உடல் அமைப்பியல் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.

பால் உற்பத்தியாளர்கள் மாட்டுத்தீவனத்தை அதிகவிலை கொடுத்து வாங்கச் சிரமப்படுகிறார்கள். எனவே, விலை மலிவான கடலைப் புண்ணாக்கு, சூரியகாந்தி புண்ணாக்கு போன்றவைகளை உபயோகிப்பதால் தரம் குன்றாமல் தீவனமாக அளிக்க முடியுமா என்பதைப் பற்றி கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடை உடலமைப்பியல் துறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

தானியங்கள் சேர்க்கப்படாத, மாட்டுத் தீவனத்தின் தன்மையைக் குறித்து விவசாயிகளுக்கும் பால் உற்பத்தியாளர்களுக்கும் உபயோகமாக இருக்கும் வகையில் சில ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

தானியங்களை மட்டுமே கொடுக்காமல் அரிசி தவிடு, கோதுமை தவிடு, புண்ணாக்குகள் உபயோகப்படுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

இந்த ஆராய்ச்சிகளில், நான்கு விதமான தீவனக் கலவைகள், துளையிடப்பட்ட இரைப்பையோடு கூடிய மாடுகளுக்குத் தீவனமாக அளிக்கப்பட்டன.

இத்தீவனக் கலவைகள் ஒவ்வொன்றுடனும் ஒரு நாளைக்கு சூப்பர் மின்டிப் (தாதுப்பொருள்கள்) 60 கிராம், உப்பு 40கிராம் சேர்க்கப்பட்டது. மாடு ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வைக்கோல் மேற்குறிப்பிடப்பட்ட மொத்த தீவன அளவுடன் கொடுக்கப்பட்டது. இக்கலவைகள் நான்கும் ஒரே அளவு புரதச் சத்துக் கொண்டவைகளாகும்.

மாட்டின் இரப்பையில் தீவனம் பெரும்பாலும் நுண்ணுயிர்களால் செறிக்கப்படுகின்றன. புரதப்பொருள் செறிக்கப்படும்போது அமோனியா வெளியிடப்படுகிறது. இவ்வமோனியாவை, நுண்ணுயிர்கள் உபயோகித்து, தன்னுள் புரதமாக மாற்றி அவைகள் வளரவும் பெருகவும் செய்கின்றன. வெளிவரும் அமோனியா துரிதமாக வெளியிடப்பட்டால் அது நுண்ணுயிர்களின் தேவைக்கு அதிகமாகி, உபயோகப்படாமல் கழிவுப் பொருளான யூரியாவாக மாற்றப்பட்டு வெளியேற்றப்படுகிறது. அமோனியா வெளிப்படும் தன்மை தீவனத்தில் கலந்துள்ள, புண்ணாக்கில் கழிவுப் பொருளான யூரியாவாக மாற்றப்பட்டு வெளியேற்றப்படுகிறது. அமோனியா வெளிப்படும் தன்மை தீவனத்தில் கலந்துள்ள புண்ணாக்கில் உள்ள புரதத்தின் கரையும தன்மையைப் பொருத்துக் காணப்படும்.



அப்படி உபயோகிக்கப்பட்ட தீவனக்கலவைகளின் விவரம் வருமாறு:

| கலவையில் உள்ள சேர்க்கைகள் | கலவை 1 | கலவை 2 | கலவை 3 | கலவை 4 |
|---|---|---|---|---|
| | கிலோ | கிராம் | கிராம் | கிராம் |
| எள்ளுப் புண்ணாக்கு | 1 கிலோ | — | 250 | — |
| கடலைப் புண்ணாக்கு | — | 600 | 450 | 400 |
| சூரியகாந்திப் புண்ணாக்கு | — | — | — | 300 |
| கோதுமைத் தவிடு | 600 | 800 | 800 | 800 |
| அரிசித் தவிடு | 500 | 500 | 500 | 500 |
| மொத்த அளவு | 2.3 கிலோ | 1.9 கிலோ | 2 கிலோ | 2 கிலோ |

மேலும், அளவுடன் அமோனியா வெளிவந்தால் அதை நன்றாக நுண்ணுயிர்கள் உட்கிரகித்துப் புரதமாக மாற்றி, தங்கள் பெருக்கத்திற்கும் வகை செய்கிறது. அப்போது மணம் தரும் அமிலங்களும் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. எனவே நல்ல ஊட்டமுள்ள தீவனத்தின் தன்மையானது, அது இரைப்பையில் அளவுடன் வெளிப்படுத்தும், அமோனியாவும், அதிக அளவில் உற்பத்தியாகும் மணந்தரும் அமிலத்தைப் பொருத்ததாகும்.

இவ்விரண்டு தன்மைகளும் மேற் குறிப்பிடப்பட்ட நான்கு தீவனக்கலவைகளை மாட்டுக்குக் கொடுத்து ஆராயப்பட்டது.

முதலாவது தீவனக் கலவையில், எள்ளுப் புண்ணாக்கு பிரதானப் புரதச் சத்தாய் உள்ளது. இந்தக் கலவை சீராக அமோனியாவை வெளிப்படுத்தி, அதிக நுண்ணுயிர்களின் எண்ணிக்கையைக் கொடுக்கக்கூடியதாகவும் மிகுந்த அளவு மணந்தரும் கொழுப்பு அமிலங்களைக்கொடுக்கத் தக்கதாகவும் உள்ளது என்பது அதன் சிறப்பாகும்.

இரண்டாவது தீவனக் கலவையில் கடலைப் புண்ணாக்கு பிரதானப் புரதச் சத்தாய் உள்ளது. இந்தக் கலவை துரிதமாக அமோனியாவை வெளிப்படுத்தி, மிகுந்த அமோனியா அளவும், குறைந்த நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும், குறைந்த அளவு மணந்தரும் கொழுப்பு அமிலங்களைக் கொடுக்கத்தக்கதாக உள்ளது.

மூன்றாவது தீவனக் கலவையில் இதில் எள்ளுப் புண்ணாக்கு, கடலைப் புண்ணாக்கு ஆகிய இரண்டும் பிரதான புரதச்சத்தாய் உள்ளது. இதன் தன்மை கலவை ஒன்றுடன் ஒத்ததாய் உள்ளது.

நான்காவது தீவனக் கலவையில் கடலைப் புண்ணாக்கும், சூரிய காந்திப் புண்ணாக்கும் பிரதானப் புரதச் சத்தாயுள்ளது. கலவை ஒன்றும், கலவை 3-ம் ஒத்ததாக இருக்கின்றன. இத்தீவனக் கலவையை உபயோகப்பதில் காணப்படும் சிறப்பு, நுண்ணுயிர்களின் அதிக எண்ணிக்கையாகும்.



எள்ளுப் புண்ணாக்கு, கடலைப்புண்ணாக்கு, சூரியகாந்திப் புண்ணாக்கு ஆகியவைகளின் விலை கிலோவுக்கு முறையே ரூ.2 ரூ.1 ரூ. 0.90 ஆக இருக்குமானால், மேற் குறிப்பிடப்பட்ட கலவைகள் நான்கும் கிலோவுக்கு முறையே ரூ. 1.26, ரூ. 0.80 ரூ. 0.98, ரூ. 0.74 ஆக அமையும். கோதுமை அரிசி தவிடுகளின் விலை கிலோவுக்கு ரூ. 0.70 ஆக எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேசிய பால்பண்ணை ஆராய்ச்சி மாடுகளில் நடத்திய ஆராய்ச்சியில் கலப்பு இன கறவை மாடுகளில் நடத்திய ஆராய்ச்சியில் 20 பங்கு கடலைப்புண்ணாக்கு 10 பங்கு எள்ளுப்புண்ணாக்கு, 40 பங்கு கோதுமைத் தவிடு, 20 பங்கு அரிசித்தவிடு, 10 பங்கு பொட்டு கொண்ட தீவனக் கலவை இலாபகரமானது என்றும், இது 38 சதவிகிதம் தீவனச் செலவைக் குறைக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இத்தீவனக்கலவை கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சி செய்யப்பட்ட தீவனக் கலவை மூன்றும் ஒத்ததாய் இருக்கிறது.

உபயோகப் படுத்தப் பட்ட நான்கு தீவனக் கலவைகளில் கலவை 3-ம் கலவை 1-ம் ஒத்ததாக இருக்கின்றன. ஆனால், கலவை 1 கலவை 3-ஐக் காட்டிலும் அதிக விளையுள்ளது. கலவை விலை குறைந்ததாக இருந்தாலும் உபயோகத்தில் இலாபகரமானதாக இல்லை. கலவை 4 உபயோகத்தில் கலவை 1-ம், 3-ம் ஒத்ததாகவும் விலை குறைந்ததாகவும் உள்ளன.

எனவே, தீவனக்கலவை 3-ம் 4-ம் இலாபகரமாக உபயோகப் படும் கலவைகளாகும். புண்ணாக்குகளின் விலை நிலவரத்தைப் பொறுத்து இக்கலவைகள் கறவை மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்கப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

இந்த முறைகளில் மாட்டுத் தீவனம் கொடுப்போமானால், கறவைகள் அளிக்கும் பால்விகிதம் நிச்சயம் 'அளவுக்கு அதிகமானதாகவே இருக்கும்.




மானாவாரியில் இருபோகச் சாகுபடி முடியுமா என்பது பற்றிப் பார்ப்போம். மானாவாரிச் சாகுபடிக்கு என்னென்ன தேவை? நிலம், நீர், உரம், விதை மற்றும் பயிர்ப் பாதுகாப்புத் தேவை. நிலம் இயற்கை உரங்களும் உங்களிடம் உள்ளன. செயற்கை இரசாயன உரங்கள் கடைகளிலும், விதைகள் பயிர்ப் பாதுகாப்புப் பொருள்கள் வேளாண்மைக் கிடங்குகளிலும் உள்ளன. ஆனால், மழை மட்டும் பருவத்தைப் பொறுத்தே கிடைக்க வல்லது.

எனவே, நாம் பெறும் மழை அளவினைச் சற்றுக் கவனிப்போம். காஞ்சிக் கோட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளின் சராசரி மழையளவு பின்வருமாறு:

| | | மில்லி லிட்டர். |
|---|---|---|
| ஜனவரி | ... | 6.04 |
| பிப்ரவரி | ... | 1.44 |
| மார்ச் | ... | 8.45 |
| ஏப்ரல் | ... | 10.74 |
| மே | ... | 61.54 |
| ஜூன் | ... | 100.22 |
| ஜூலை | ... | 153.55 |
| ஆகஸ்ட் | ... | 147.96 |
| செப்டம்பர் | ... | 148.52 |
| அக்டோபர் | ... | 282.27 |
| நவம்பர் | ... | 181.39 |
| டிசம்பர் | ... | 144.37 |

ஆகவே, செங்கை மாவட்டத்தின் ஏப்ரல் முதல் டிசம்பர் வரை மழை உள்ளது. ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் மழையைக்கொண்டு நிலத்தை உழுது தயாரிக்கலாம். இது கோடைக் கால மழை ஜூன், ஜூலை மாதங்களில் பெய்யும் மழையைக் கொண்டு நிலத்தை நன்கு உழுது பின் விதைக்கலாம். ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாத மழையினைக்கொண்டு முதல் போகப் பயிரை வளர்த்து அறுவடை செய்யலாம். அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கிடைக்கும் மழையைக் கொண்டு இரண்டாம் போகப் பயிரினை விதைத்து அறுவடையும் செய்யலாம்.

சுருங்கக் கூறினால், கோடைக்கால மழையில் நிலத்தை நன்கு தயாரித்துக் கொள்ள வேண்டும். தென் மேற்குப்பருவ மழையின் ஆரம்பத்தில் விதைத்து, பயிர்தனை வளர்க்க வேண்டும். வடகிழக்குப் பருவ மழையில் முதற் பயிரின் அறுவடையும், அதைத் தொடர்ந்து இரண்டாம் பயிரின் விதைப்பு மற்றும் வளர்ப்புப் பணிகளைச் செய்தல் வேண்டும்.

செங்கை மாவட்டத்தில் மட்டும் சுமார் 1,35,900 ஏக்கர் நிலங்களில் மானாவாரி பயிர் சாகுபடியில் உள்ளது. அனைவரும் முயன்று இருபோகச் சாகுபடி செய்தால் 'உழவர் நிலை' உயரும் என தயக்கமின்றிக் கூறலாம்.

முதல்போகச் சாகுபடியாக நிலக்கடலையைப் பயிரிடலாம். இதற்குச் செலவு ரூ. 450 ஆகும். வரவு ரூ. 750. இரண்டாம் போகச் சாகுபடிக்குச் செலவு ரூ. 250 வரவு ரூ. 450 ஆக ஒரு ஏக்கருக்குக் குறைந்தது ரூபாய் 500 நிகர இலாபமாகப் பெறலாம். முயற்சி திருவினையாக்குமல்லவா?

முதல்போக, பயிர் நிலக்கடலையுடன் டி. 9 உளுந்து, காராமணி மற்றும் பச்சைப் பயிர் முதலியவற்றைச் சாலில் விதைக்கலாம். இதனால் கூடுதல் விளைச்சலும், வருமானமும் கிடைக்கிறது.

இரண்டாம் போகப் பயிரினைத் தேர்ந்தெடுக்கையில் நிலத்தின் ,ஈரம், தாக்கும் தன்மை, மழை கிடைக்கும் காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே தேர்ந்து எடுக்க வேண்டும்.

குறைந்த காலத்திற்குத்தான் நிலத்திற்கு மழையும், ஈரமும் கிடைக்குமென்றால் 60 முதல் 65 நாட்கள் வயதுடைய டி. 9, உளுந்தைத் தேர்ந்தெடுத்து விதைக்கலாம்.

ஈரம் காக்கும் நிலம் மற்றும் மழையும் நன்கு கிடைக்கும் என இருக்குமானால் சி. எஸ். எச். 5 சோளம், கோ. 7, ராகி கே. எம். 2, கம்பு போன்ற 100 நாட்கள் வயதுடைய பயிர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இரண்டு பயிர்களுக்கும் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை நன்கு அனுசரித்துக் கடைப்பிடிக்க வேண்டும். மழை நீரையும் நிலத்தில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதிக விளைச்சலுக்கும், சாகுபடிச் செலவைக் குறைப்பதற்கும் கருத்தில் கொள்ள வேண்டியவை.



## அம்பாசமுத்திரம் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்

நிர்வாக வசதியின் பொருட்டு, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி என இரு வட்டங்களாக அமைக்கப்படும்.

புதிய அம்பாசமுத்திரம் வட்டத்தில் அம்பாசமுத்திரம், சிங்கம்பட்டி, கடையம், ஆழ்வார் குறிச்சி ஆகிய பிர்க்காக்களும், சேரன்மகாதேவி வட்டத்தில் பாப்பாக்குடி, முக்கூடல், சேரன் மகாதேவி, தற்போதைய அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள மேலச்செவல் ஆகிய பிர்க்காக்களும் அடங்கும்.

புதிய வட்டங்கள , அமைப் : செயல் முறைகளை மேற்கொண்ட பின், வருவாய்த் துறை வாரியம் அறிவிக்கும் நாளிலிருந்து செயல்பட துவங்கும்.

1. பொறுக்கு விதைகளை உபயோகிக்கவும்.
2. சத்தூட்டப்பட்ட தொழு உரம் ஏக்கருக்கு 300 கிலோ இடவும்.
3. மண்ணைப் பரிசோதனை செய்யவும்.
4. நுண்ணூட்டச் சத்து இடவும்.
5. பயிர்களின் எண்ணிக்கையினைச் சரியாகப் பராமரிக்கவும்.
6. தகுந்த நேரத்தில் களையெடுக்கவும்.
7. இரண்டாம் களையின்போது, நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடவும்.
8. தக்க நேரத்தில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
9. நிலத்தைப் பண்படுத்தும்பொழுதே மேட்டுப் பாத்திகளை அமைத்து மழை நீரினைச் சேமிக்கவும்.

நிலத்திற்குச் சத்தூட்டப்பட்ட தொழு உரம் இட்டால் செலவு மிச்சமாகும். நிலக்கடலைக்குத் தழைசத்து 5 கிலோ, சாம்பல் சத்து 10 கிலோ, மணிச்சத்து 10 கிலோ என்ற விகிதத்தில் உரமிடவும்.

### சத்தூட்டப்பட்ட தொழுஉரம் தயாரிக்கும் முறை:

மானாவாரி பயிருக்கு 300 கிலோ தொழு உரத்துடன் முழு அளவு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து தரும் உரங்களை நன்கு கலந்து 1 மாதம் வரை குழியில் இட்டு, பதப்படுத்தி, விதைக்கு முன் தேவையான அளவு தழைச் சத்து உரத்தையும், பலநோக்குச் சாகுபடிக் கருவி மூலம் இடவேண்டும். இதனால் நல்ல பலனை அடைவதுடன் உரத்திற்கு ஆகும் செலவில் ரூ. 40 மிச்சமாகிறது.

நிலத்தைப் பண்படுத்தும்பொழுது, மேடைப் பாத்தி (Raised Bed) அமைக்கவும். இதற்குப் பலநோக்குச் சாகுபடிக் கருவியை உபயோகித்து நிலத்தை நன்கு உழவும். அடுத்து, அக் கருவியில் உள்ள கிடங்கு பார் கலப்பைக் கொண்டு நிலத்தில் சரிவுக்குக் குறுக்காக மேட்டுப் பாத்திகளை அமைக்கவும். இரண்டு சாலுக்கு இடைவெளி 120 சென்டிமீட்டரும், சாலின் அளவு 30 சென்டிமீட்டரும் இருக்க வேண்டும்.

நிலத்தின் சரிவுக்குக் குறுக்காக இருக்கும்படி விதை சால் அமைத்திட வேண்டும். பலநோக்குச் சாகுபடி கருவியைக் கொண்டு உரம் மற்றும் விதைகளைப் போடவும். இதனால் ஏக்கருக்கு ரூ. 50 மிச்சமாகும். இம்மேட்டுப் பாத்தி முறையில் மழை நீரை அதிகம் சேமித்து வளரும் பயிருக்கு ஈரத்தை அளிக்கலாம்.

### டி. 9. உளுந்து:

காலம்: மானாவாரி-செப்டம்பர், அக்டோபர்.

| | |
|---|---|
| வயது ... | 65 நாட்கள். |
| உரமிடுதல் ... | 5 கிலோ தழைச்சத்து.<br>10 கிலோ மணிச்சத்து.<br>10 கிலோ சாம்பல்சத்து. |
| விதையளவு ... | ஏக்கருக்கு 8 கிலோ விதை. இத்துடன் நுண்ணூட்டக் கலவையைக் கலந்து விதைக்கவும். |
| இடைவெளி ... | 30 செ. மீ. X 10 செ.மீ. |
| களையெடுத்தல் | விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் களையெடுத்துக் கொத்திவிடவும். களையெடுக்கும் போது செடிகள் அதிகமுள்ள இடங்களில் களைந்து விடுதல் வேண்டும். |
| பயிர்ப்பாதுகாப்பு: | பயிர் பூத்த பின் இருமுறை காய்ப் புழுவைத் தடுக்க பி. எச்.சி.சி.10 சதம் டி.டி.டி. 5 சதம் மருந்துகளைச் சம அளவில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும். |

காய்கள் முற்றியவுடன் அறுவடை செய்யவும். ஏக்கருக்குச் சுமார் 150 கிலோ உளுந்து அதாவது ரூ. 450 பெறுமான உளுந்து கிடைக்கும்.

### கோ. 7 கேழ்வரகு:

| | |
|---|---|
| பருவம் (மானாவாரி) | நிலக்கடலை அறுவடைக்குப் பின். |
| விதையளவு | ஏக்கருக்கு 2 கிலோ |

| | |
|---|---|
| விதை நேர்த்தி | 1 கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது 2.5 கிராம் பெனிஸ்டின் கலக்கவும். |
| இடைவெளி | 15 செ.மீ. X 15 செ.மீ. |
| ஒரு ஏக்கருக்கு இருக்க வேண்டிய செடிகள் ... | 1,77,000. |
| உர அளவு ... | 16 கிலோ தழைச்சத்து. 8 கிலோ மணிச்சத்து. 6 கிலோ சாம்பல்சத்து. 8 கிலோ நுண்ணூட்டச் சத்தினை மணலுடன் கலந்து வயலில் தூவவும். |
| இடையுழவு ... | பயிரின் 3-ஆம் வாரத்தில் களையெடுத்துக் கொத்தவும். |

**பயிர்ப் பாதுகாப்பு**

| | |
|---|---|
| வேர் அசுவணி: | பயிரின் வேர் பாகத்தில் ஏக்கருக்கு 20 கிலோ பி.எச்.சி. 10 சதம் போடவும். |
| குருத்துப்பூச்சி. | எண்டோசல்பான்300மிலி, பாஸ்போமிடான் 110மிலி, குயினைல்பாஸ் 300 மி.லி. போன்ற மருந்துகளை ஏதேனும் ஒன்றை நீரில் கலந்து தெளிக்கவும். |
| குலைநோய் ... | வயலில் ஏக்கருக்கு ஹினோசான் 300 மில்லி தெளிக்கவும். காப்பர் ஆக்ஸிகுளோரைடு 600 கிராம், சிரம் 600 கிராம் போன்ற மருந்துகளை ஏதேனும் ஒன்றை நீரில் கலந்து தெளிக்க வேண்டும். |

**சி.எஸ்.எச். 5 சோளம் :**

| | |
|---|---|
| விதையளவு ... | ஏக்கருக்கு 3 கிலோ |
| விதைநேர்த்தி... | ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் (அல்லது 4 கிராம்காப்டான் அல்லது 2 கிராம் பெனிஸ்டின் கலக்கவும். (சான்றிதழ் பெற்ற விதைகள் விதை நேர்த்தி செய்யப்பட்டிருக்கும்). |
| இடைவெளி ... | 45 செ.மீ. X 45 செ.மீ. பயிரின் 3-ஆம் வாரத்தில் இடைவெளிக்குத் தகுந்தபடி செடிகளைக் கலைக்கவும். ஒரு சதுர மீட்டருக்கு 20 செடிகள் இருக்க வேண்டும். |
| உர அளவு ... | தழைச்சத்து 16 கிலோ, மணிச்சத்து 8 கிலோ ஏக்கருக்குச் சாம்பல்சத்து 6 கிலோ. |
| | 8 கிலோ நுண்ணூட்டச் சத்தினை ஒரு ஏக்கருக்கு இடவும். |

**(3) புஞ்சையில் இரண்டாம் பயிர்**

| | |
|---|---|
| இடையுழவு ... | விதைத்த 3-ஆம் வாரம் களையெடுத்துக் கொத்தி விடவும். மேலும், மண்ணிலுள்ள நீரை வெளியேறாமல் தடுக்க மண்ணை இடையிடையே கொத்தி விடவும். |

**பயிர்ப் பாதுகாப்பு :**

| | |
|---|---|
| குருத்து ஈ ... | அதிக அளவு விதைகளை உபயோகித்துக் குருத்து ஈ தாக்கிய செடிகளை பிடுங்கி எறியவும். அல்லது மிதைல் 3 டைமிசியோட்டிமீடான் தெளிக்கலாம். |
| தண்டுப்புழு ... | விதைத்த 30, 45,60-ஆம் நாட்களில் 300 மி.லி.எண்டோசல்பான் அல்லது சற்று முன்கூறிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை நீரில் கலந்து தெளிக்கவும். |
| பேன்கள் ... | ஒரு ஏக்கருக்கு 10 கிலோ கந்தகம் அல்லது 300 மில்லி கெல்தேன் உபயோகிக்கவும். |
| பயிர் பூக்கும் ... சமயம் | 5 கிலோ பி. எச். சி. 10 சதம், 5 கிலோ டி. டி. டீ. 5 சதம் கலந்து தூவவும். |

**கே. எம். 2 கம்பு**

| | |
|---|---|
| விதையளவு ... | 1½ கிலோ. |
| இடைவெளி ... | 45 செ. மீ. X 15 செமீ. |
| அடியுரம் ... | 26 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து 6 கிலோ சாம்பல் சத்து. |
| | நுண்ணூட்டச்சத்து 8 கிலோ அல்லது 6 கிலோ. துத்தநாக சல்பேட்டை 3 பங்கு மணலுடன் கலந்து வயலில் தூவவும். |
| இடையுழவு : ... | விதைத்த 3-ஆம் வாரம் களையெடுத்துக் கொத்தி விடவும் மண்ணில் ஈரம் காக்க இடையிடையே கொத்தி விடவும். |
| பயிர்ப் பாதுகாப்பு: | விதைத்த 20-ஆம் நாளிலிருந்து 600 கிராம் டைத்தேன் மருந்தை 15 நாள் இடைவெளியில் தெளித்து வருவது பசுங்கதிர் நோய் வராமல் தடுக்கும். |

எனவே, மானாவாரில் இரண்டாம் பயிருக்கு நிலத்தின் தன்மை நீர் கிடைக்கும் காலம் ஆகியவற்றைக் கணக்கிட்டுக் குறுகிய காலப் பயிரில் டி.9. உளுந்து, ஈரம் காக்கும் நிலங்களில் கோ. 7, ராகி, சி. எஸ். எச். 5, சோளம், கே. எம். 2 கம்பு போன்ற ரகங்களில் ஒன்றைப்பயிர் செய்து பயன் அடையலாம்.

# வெற்றி வாகை சூடிய தமிழ்நாடு என்.சி.சி.

டெல்லியில் நடைபெற்ற 1980-ஆம் ஆண்டு குடியரசுநாள் முகாமில் தேசிய மாணவர் படைகளின் அனைத்து இயக்ககங்களிடையே நடைபெற்ற போட்டியில் தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்ககம் வெற்றி வாகைசூடி, வீர முதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டில் மட்டும் மிகக் குறைவான புள்ளிகளால் தமிழ்நாடு புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்ககம், வீரமுதன்மை வெற்றிக் கொடி பெறும் வாய்ப்பை இழந்தது. எனினும் இவ்வாண்டுடன் சேர்ந்து ஒன்பது முறை வீர முதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

தேசிய மாணவர் படைகளுக்கான இயக்ககங்கள் அமைக்கப் பட்டவுடன் 1964-ஆம் ஆண்டுக்குப் பிறகு அனைத்து இயக்ககங்களான வீரமுதன்மை வெற்றிக் கொடி அளிக்கப்பட்டு வருகிறது.

நமது தமிழ்நாடு புதுவை மாநில தேசிய மாணவர் படை எட்டுமுறை, முறையே 1962, 1966, 1971, 1973, 1974, 1975, 1977, 1978, 1980 ஆகிய ஆண்டுகளில் வெற்றி வாகை சூடியுள்ளது. இயக்ககம் என்ற அமைப்பு உருவாவதற்கு முன்பே 1962-லும் தமிழ்நாடு அணியினர் வெற்றி பெற்றுள்ளனர்.

பங்கேற்ற பதினைந்து முறைகளில் ஒன்பது முறை குறிப்பிட்ட ஓர் இயக்ககமே வெற்றி பெற்று வாகை சூடியுள்ளது போற்றிப் பாராட்டுக்குரிய செயலாகும்.

இவ்வாண்டு நடைபெற்ற போட்டியில் கருநாடக தேசிய மாணவர் படை இயக்ககம், சாப் தேசிய மாணவர்படை இயக்ககம் ஆகியவற்றின் கடுமையான போட்டிகளைச் சந்தித்து தமிழ்நாடு இயக்ககம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

இவை அனைத்திலும் மிகுந்த பெருமையை இவ்வாண்டு குடியரசுநாள் முகாமில் தமிழ்நாடு தேசிய மாணவர்படை ஏராளமான முதன்மைப் பரிசுகளைப் பெற்றதாகும்.

அனைத்து இந்தியாவிலும் சினியர்டிவிஷனில்சிறந்தபயிற்சிப் படைஞராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் சாரதா ராமச்சந்திரன். ஆண்கள் ஜூனியர் பிரிவு எம். ஏ. ரவியும், பெண்கள் ஜூனியர் பிரிவில் அனீதா ஹரிகரனும், சிறந்த பயிற்சிப் படைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சுடும் போட்டியில் டி. சிவகாமியும், பி. சிவகுமாரும் முதல் பரிசு பெற்றனர். வாய்ப்பாட்டு போட்டியில் எஸ். கிரிஜாவும், ஆர். இராமச்சந்திரனும் பரிசு பெற்றார்கள். கருத்தூன்றிய பணிமுறைத் துணைவருக்கு உரிய போட்டியில் (Stick Orderly) எஸ். ஜயந்த்தும் முதல் பரிசு பெற்றார்கள்.

துப்பாக்கிச் சுடும் போட்டியில் எஸ். தயாளன் இரண்டாவது



## இரண்டாவது அட்டையில்....

புதுடெல்லியில் அனைத்து தேசிய மாணவர் படை இயக்கங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றிவாகை சூடிய தமிழ்நாடு மாநில தேசிய மாணவர் படை இயக்ககத்திற்குத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வீரமுதன்மை வெற்றிக் கொடியை 28.1.1980 அன்று அளித்தார்கள். சார்பு அலுவலர் திரு சரண்ஜித்சிங் அதனைப் பெற்றுக் கொள்கிறார்.

பரிசும் பெற்றார். ஹோம் நர்சிங்கில் மீனா பாலசுப்பிரமணியமும், ஆர். ரத்னாவும் பரிசு பெற்றார்கள். தியுனுள் செல்லும் போட்டியில் எம். சாரதி இரண்டாவது பரிசு பெற்றார்.

''கிட்-லே அவுட்'டிலும் முதல் பரிசு பெற்றனர். படகு ஓட்டுதலில் இரண்டாவது பரிசு பெற்றனர்.

குழுவினராகக் கலந்து கொள்ளும் போட்டியில் கலைநிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்றது தமிழ்நாடு என். சி. சி. மாணவர் அணி தான்!

துப்பாக்கிமுனை ஈட்டிச் சண்டையில் மூன்றாவது பரிசும், அணிவகுப்பில் மூன்றாவது பரிசும், கப்பல் மாடலிங்கில் மூன்றாவது பரிசும் பெற்றனர்.

இப்படி ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி வாகைசூடி, தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படை இயக்ககத்திற்குப் பெருமையைச் சேர்த்துள்ளனர்.

இளைஞர்களின் ஆற்றல் பயனுள்ளவைகளாக அமைய வேண்டும் என்ற நோக்கோடு அமைக்கப்பட்டது. மாணவர்கள் தலைமைப் பொறுப்புகளுக்குத் தங்களைத் தகுந்தவர்களாக ஆக்கிக் கொள்ளுவதற்கும், நற்குணங்களை உருவாக்கிக் கொள்வதற்கும், தோழமை உணர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், போட்டி விளையாட்டுகளில் பேராற்றல் பெற்றுக் கொள்ளுவதற்கும் வழிவகுப்பது தேசிய மாணவர்படையின் இலட்சியமாகும்.

ஒழுங்குமுறையும் பயிற்சிமுறையும் பெற்ற மனித ஆற்றல் மிகுந்த இப்படை நாட்டின் பாதுகாப்புக்கு உறுதுணையாக அமைவதும் என். சி. சி. யின் நோக்கமாகும்.

தொண்டாற்றும் மனப்பான்மையை இளமையிலேயே அடைந்து வளர்ந்து வருவதற்கு உரிய பயிற்சியை அளிக்கிறது என். சி. சி.

தேசிய மாணவர் படை இதன் அடிப்படையான நெறிமுறைகள் வருமாறு:

1. புன்னகையுடன் பணிந்து நட (Obey with a Smile).

2. காலம் தவறாதே (Be Punctual).

3. குழப்பமின்றியும் கடினமாகவும் உழை. (Work hard and without Fuss).

4. பொய் சொல்லாதே! மன்னிப்பு கேட்கும் சூழ்நிலைக்கு வராதே (Make no Excuse and Tell no Lies).

இவைகளைக் கடைப்பிடித்து தங்களின் திறமைமிக்க பயிற்சியால் அரிய சாதனைகளைக் குவித்திருக்கின்றனர்.

இப்படி, தமிழ்நாட்டுக்குப் பெருமைதேடிக் கொடுத்த தேசிய மாணவர் படை, சிறந்த மாணவ, மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தமிழ்நாடு அரசு ரூ. 1,000 பரிசு அளித்துள்ளது.

வெற்றி குவித்துள்ளவர்களை நாமும் வாழ்த்துவோம்!

—மாமுனன்.

## அரசு நடத்தும் நிறுவனங்களின் உற்பத்தியில் 27 சதவிகிதம் உயர்வு

தொழில் வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கி வரும் அரசு நிறுவனங்கள் 1519.51 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை 1979 டிசம்பர் மாதத்தில் உற்பத்தி செய்துள்ளன. இந்த உற்பத்தி 1685.46 இலட்சம் ரூபாய் குறியளவில் 90.15 சதவிகிதமாகும். 1978 டிசம்பர் மாதத்தின் உற்பத்தியான 1193.49 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களைவிட இது 27.31 சதவிகிதம் அதிகமாகும்.

இந்தப் பிரிவுகளின் 1979 நடப்பு நிதியாண்டில் முதல் 9 மாதங்களான ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர் வரையான உற்பத்திப் பெருக்கத்தின் மதிப்பு 11071.12 இலட்சம் ரூபாயாகும். இது குறியளவில் 84.05 சதவிகிதமாகும். கடந்த 1978-ஆம் ஆண்டு இதே காலவரையில் உற்பத்தியான 9603.35 இலட்ச ரூபாய் பொருட்களைக் காட்டிலும் 15.28 சதவிகிதம் அதிகமாகும்.

1978 டிசம்பர் மாதத்தைவிட 1979 டிசம்பர் மாதத்தின் உற்பத்தியை அதிகரித்த நிறுவனங்கள், இன்ஸ்டிருமென்டேஷன் லிமிடெட் 240.40 சதவிகிதமும், இந்தியா சிமெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட் 73.42 சதவிகிதமும், இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தயாரிப்பு நிறுவனம் 54.95 சதவிகிதமும், நேஷனல் நியூஸ் பிரிண்ட் அண்ட் பேப்பர் மில்ஸ் லிமிடெட் 16.66 சதவிகிதமும் உற்பத்தியை அதிகரித்துள்ளன.



# தன்னிகரற்ற தென்னை


நாம் பயிரிடும் தோட்டப்பயிர்களிலேயே தென்னை ஒரு தனிப் பெருமையுடன் திகழ்கிறது. இம்மரத்தின் எல்லாப் பாகங்களும் ஒவ்வொரு வகையில் பயன்படுவதாகும். அதன் இளநீர், காய், கொப்பரை, உரிமட்டை, ஓடு, இலை, கீற்று யாவும் நம் எல்லோருடைய அன்றாடத் தேவைக்கு மட்டுமல்ல; விவசாயியின் விற்பனைக்கும் பயன்படுகின்றன என்பது வெளிப்படை.

தென்னை ஒரு பயனுள்ள மரம். கற்பக விருட்சம் என்று கருதப்படும் தென்னை இலாபகரமான ஒரு வர்த்தகப் பயிரும் ஆகும். திருந்திய சாகுபடி முறைகளைத் தவறாது கையாண்டால், விவசாயிகள் தென்னை பயிரிடுவதன் மூலமாக வியக்கத்தக்க இலாபமடையலாம். மேலும், நம் மாநிலத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்யவும், ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கவும் இது வழிகோலும்.

விவசாயிகளின் உழைப்பினால் தென்னை உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு மிகவும் உயர்ந்துள்ளது. பரப்பும் உற்பத்தியும் கணிசமான அளவிற்கு உயர்ந்திருந்தாலும் கூட, மரம் ஒன்றின் உற்பத்தி 35 முதல் 38 காய்களே தான். ஆனால், ஒவ்வொரு மரத்தின் உற்பத்தியையும் 100 காய்கள் வரை சுலபமாக உயர்த்தலாம். உற்பத்தியை உயர்த்துவதினால் விவசாயிகளுக்கு அதிக இலாபமும் மக்களுக்குத் தாதுப் பொருட்களுடன் ஊட்டச்சத்தும் எண்ணெய்ச் சத்தும் நிறைந்த உணவுப்பொருள் அதிக அளவில் கிடைக்கும்.

தென்னை உற்பத்தியைப் பெருக்க தரமான கன்றுகளை அதிக அளவில் விநியோகம் செய்வதன் மூலம் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும் - இரண்டாவதாக ஏற்கெனவே சாகுபடி செய்யப்பட்டுள்ள தோப்புகளில் சீரிய பராமரிப்பு முறைகளைச் செயல்படுத்தி தோப்பின் சராசரி விளைச்சலைப் பெருக்கவும் வேளாண்மைத்துறையினர் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றனர். புதிய நடவு, மற்றும் நடவு மூலம் உடனடியாகத் தென்னை உற்பத்தியைப் பெருக்குவது என்பது இயலாது. எனவே, ஏற்கெனவே நடவாகியுள்ள தோப்புக்களில் சீரிய சாகுபடி முறைகளைச் செயல்படுத்தி சராசரி மகசூலை மிகக் குறுகிய காலத்தில் கணிசமான அளவுக்கு உயர்த்தலாம்.

திருந்திய செயல் நேர்த்தி முறைகள் பயன் தருபவைகளாகும். அதன்படி ஏக்கருக்கு 70 முதல் 80 வரை தென்னை மரங்



கள் இருப்பின் நல்ல மகசூல் கிடைக்கும். அதிகமான மரங்கள் வைப்பதானது, மகசூலைக் குறைக்கும். விவசாயிகள் இதை நினைவிற்கொள்ள வேண்டும்.

**அதிகப் பயன்தரும் மரங்களின் அமைப்பு:**

மரத்தின் தண்டு நன்கு பருமனாகவும் நேராகவும் நெருக்கிய இலையின் வடுக்கள் கொண்டதாகவும் இருக்கும்.

மரத்தின் உச்சியில் 40 முதல் 50 மட்டைகள் இருக்கும். ஓலைகள் பார்க்க நன்கு பிரிந்து குடை போல் இருக்கும். ஓலைகள் மிகவும் சாய்ந்து சற்று மூடிய குடை போல் இருப்பின் அதிக மரங்களில் காய்கள் அதிகமாகப்பிடிக்காது.

தென்னம்பாளையின் தண்டு குட்டையாகவும் பருமனாகவும் இருக்கும்.

ஒவ்வொரு மட்டைக்கும் ஒரு பாளை தள்ளும் மரமாக இருக்கும்பட்சத்தில் ஆண்டு ஒன்றுக்கு 80 முதல் 100 காய்களுக்குக் குறையாமல் காய்க்கும் தன்மையுடையனவாய் இவை இருக்கும்.

மட்டையுரித்த தேங்காய்க் கொப்பரையின் எடை 32 சதவிகிதம் ஆக இருக்கும். மேலும், கொப்பரையின் எடை 100 முதல் 200 கிராம் இருக்கும்.

நல்ல பலன் தரும் மரங்களை விட்டு வைத்து, பலன்தராத மரங்களை அகற்றி அகற்றி தோப்பில் மரங்களின் எண்ணிக்கையை ஏக்கருக்கு 70 முதல் 80 ஆகச் செய்யலாம்.

அடுத்து, கவனிக்கப்படவேண்டியவை உழவியல் முறைகளாகும்.

அதிக மகசூல் பெறவும், களைகள் வராமல் இருக்கவும் தென்னந் தோப்புகளைப் போதுமான அளவு உழுது பயன்படுத்துதல் அவசியமாகும். இல்லையேல் மரத்தின் வளர்ச்சியும் காய்ப்பும் குறையும். காசர்கோடு மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்ட பரிசோதனைகளின்படி பண்படுத்தப் பட்ட ஆனால் உரமிடாத ஒரு



தளையில் இருந்து ஆண்டிற்கு, மரமொன்றிற்கு 38 காய்கள் கிடைத்தன.

இது, உரமிடாத பண்படுத்தாத மற்றொரு தளையின் 'மகசூலைவிட மரமொன்றிற்கு12 காய்கள் அதிகமாகும். இந்த அதிக விளைச்சல் 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து கிடைத்து வந்துள்ளது.

எனவே ஆண்டுதோறும் ஜூலை, ஆகஸ்டு, அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் மும்முறை நன்கு உழுது மண்ணைப் பண்படுத்துதல் அதிகக் காய்ப்புக்கு மிகவும் அவசியமாகும்.

நம் நாட்டில் தென்னை மரத்தின் மகசூலுக்குத் தேவையான அளவு உரமிடாமலிருப்பது ஒரு பலவீனமாகும். உரமிடுவதால் ஒவ்வொரு மரமும், ஒரு மட்டையும், ஒரு குலையும் உற்பத்தி செய்வதோடு சற்று வளரவும் செய்கிறது.

சாதாரண வளமுள்ள ஒரு தோட்டத்தில் ஒரு ஏக்கரில் தென்னை மரங்கள் ஆண்டுதோறும் 22.5 கிலோ தழைச் சத்து, 11 கிலோ மணிச்சத்து, 34.2 கிலோ சாம்பல் சத்து, 19.2 கிலோ சுண்ணாம்புச் சத்து, 8.4 கிலோ மக்னீசியம் சத்துபோன்ற பயிரூட்டச் சத்துக்களைக் கிரகித்துக் கொள்கிறது. எனவே, இதனை ஈடுசெய்ய வருடந்தோறும் தேவையான இரசாயன உரமிடுவது அவசியமாகும்.

மேலும், பொதுவாக மணற்பாங்கான அல்லது குறுமண் கலந்த மணற் பாங்கான நிலத்தில் தான் தென்னை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. ஆதலால், கோடைக் காலத்தில் மண்ணின் ஈரப்பசையைக் காக்க தழை போன்ற இயற்கை எருக்களைத் தென்னைக்கு இட வேண்டியது அவசியமாகிறது.

பரிசோதனைகளின் முடிவுப்படி மரம் ஒன்றுக்கு 0.05 கிலோ தழைச் சத்து, 0.32 கிலோ மணிச்சத்து, 1.2 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இதன் வளர்ச்சிக்கு மிக அவசியமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றை மரத்திலிருந்து 1.5 மீட்டர் தொலைவில் 30 செ.மீ. ஆழம் தோண்டப்பட்ட அரைவட்டமான பள்ளத்தில் முதலில் பசுந்தழைகளை நிரப்பியபின் உரங்களைத் தூவி மண்ணால் மூட வேண்டும்.

தோட்டத்திற்குத் தேவையான தழைகளை கிளைரிசிடியா போன்ற மரங்களைப் பயிரிட்டோ, கலப்ப கோனியம் சணப்பு போன்ற தழை உரங்களைப் பயிரிட்டோ நாம் எடுக்கலாம். தென்னையானது, நீரை விரும்புகின்ற ஒரு மரம். காலால் உண்ட நீரைத் தலையால் தருகிற பெருந்தன்மை உடைய மரமும் கூட. ஆகவே, இதன் நல்ல விளைச்சலுக்குப் போதுமான மண் ஈரம் அவசியம்.

கன்னியாகுமரி போன்ற மற்ற எல்லா மாவட்டங்களிலும்தான் பரவலாக, போதுமான மழை கிடைக்கிறது. மற்ற எல்லா மாவட்டங்களிலும் ஆண்டில் 6 மாதங்கள் வறட்சியினால் பாதிக்கப்படுகின்றது. வறட்சியில் தோன்றும் பாளைகளில் உள்ள காய்கள் உதிர்ந்து விடுதலுக்கும், முழுவளர்ச்சிப் பெறாமல் இருப்பதற்கும் ஏதுவாகின்றது. இதனால் எல்லா மரங்களிலும் அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை குறைவான மகசூலே கிடைகின்றது.

ஆகையால், கோடைக் கால வெப்பநிலையைப் பொறுத்தும், மரங்களின் தன்மையைப்பொறுத்தும் 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மரத்தில் இருந்து ஒன்றரை மீட்டர் தொலைவுவரை 20 செ.மீ. ஆழத்திற்கு, தோண்டப்பட்ட பள்ளத்தில் நீர்பாய்ச்சுதல் காய்ப்பை அதிகமாக்கும் இலாபகரமான முறையாகும்.

வேப்பங்குளத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில், தென்னந்தோப்பின் ஒரு பாகத்தில் கோடை காலத்தில் நீர்பாய்ச்சப்பட்டு மற்றொரு பாகத்தில் நீர் பாய்ச்சப்படாமல் பராமரிக்கப்பட்டது. நீர் கட்டிய பாகத்தில் 15 சதவிகிதம் அதிக விளைச்சல் கிட்டியது. இதிலிருந்தே கோடையில் மரங்களுக்கு நீர் பாய்ச்சுவது மிகவும் இலாபகரமானது என்பது விளங்குகிறது.


தமிழரசு
சந்தா விவரம்
ஓர் ஆண்டு ரூ.12
அரை ஆண்டு ரூ.6


மழையினால் தென்னைக்குக் கிடைக்கும் நீரை நீண்ட காலத்திற்குக் காயாமல் காக்க வேண்டும். இதற்கு உரிமட்டைகளை தென்னையைச் சுற்றிலும் புதைத்தல் மிகச் சிறந்ததாகும். காசர்கோடு மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவுப்படி, உரி மட்டைகளை மரங்களின் இடைவெளியில் புதைத்ததனால் மூன்றாவது ஆண்டுமுதல் மரத்திற்கு 7 முதல் 22 காய்கள் வரை அதிக உற்பத்தி கிடைத்துள்ளன!

மரங்களில் இடைவெளியில், ஒன்றரை மீட்டர் முதல் இரண்டு மீட்டர் வரை அகலத்தில் 30 முதல் 50 செ.மீ. ஆழமாகப் பள்ளம் தோண்டி அதில் உரித்த மட்டைகளைக் குழிப் பக்கமாக மேல்நோக்கி இருக்குமாறு ஒவ்வொரு மரத்திற்குச் சுமார் 100 மட்டை விதம் அடுக்கி மண்ணால் மூட வேண்டும். மழை நீரை இம்மட்டைகள் கிரகித்து தேக்கி வைத்து நீண்ட காலத்திற்கு மரங்களுக்கு அளிக்கும்.

இதன் பலன் 5 முதல் 6 ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கும். கோடை காலத்தில் மண்ணில் நீர் ஆவியாகாமல் இருக்க மண்ணைக் கடல்பாசி வைக்கோல் மற்றும் உரிமட்டை போன்றவைகளால் மூடிப் பாதுகாக்கவும் செய்யலாம்.

தென்னந்தோப்புகளைச் செந்நீர் ஒழுகல் நோய், குருத்து அழுகல் நோய், இலைப்புள்ளி நோய், வாடல் நோய் போன்ற நோய்களில் இருந்தும், கருவண்டு சிவப்பு வண்டு, கருந்தலைப் புழு போன்ற பூச்சிகளிலிருந்தும் மரங்களைத் தேவைக்கேற்ப தக்க மருந்து தெளித்துப் பாதுகாக்க வேண்டும். கருந்தலைப் புழு கோடையில்தான் அதிக அளவு தென்னையைத் தாக்கும்.

மருந்தடித்தல் மூலமும், ஒட்டுண்ணிகளைப் பரந்த அளவில் விட்டும் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

ஒவ்வொரு தோப்பிலும் பலன் தரும் மரங்களைத் தேர்ந்தெடுத்து மற்றவைகளை அகற்றி ஏக்கரில் மர எண்ணிக்கையை அளவோடு வைத்து தோட்டத்தில் ஆண்டுதோறும் மும்முறை உழுது தேவையான உரமிட்டு, கோடை நீர் பாய்ச்சி உரிமட்டைகளைப் புதைத்து, மழைநீரை நீண்டகாலம் தங்க வைத்துக் காத்து, பூச்சி பூஞ்சாணங்கள் மரத்தைத் தாக்காவண்ணம் மருந்தடித்து, தென்னை உற்பத்தியைப் பெருக்குவது மிக நல்லாணியாகும்!

# குடும்பநலத்திட்டத்தில் தொழிலாளர் பங்கு

**இல. பழனியப்பன்**

குடும்ப நலமே தொழிலாளர் நலம். நாட்டு நலனுக்கு அடிப்படை வீட்டு நலனே. ஆகவே, வீட்டு நலனும் நாட்டு நலனும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. பின்னிப் பிணைந்தவை. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக நின்று நாட்டின் பொருளாதாரத் தேரை ஓட்டிச் செல்லும் சாரதிகளாகத் திகழும் தொழிலாளர்கள் நமது பாதுகாவலர்கள். அவர்கள் நல்வாழ்வைப் பொறுத்தே அவர்களின் உழைக்கும் சக்தி பெருகும். மன அமைதி உள்ள தொழிலாளியே தொழில் வளர்ச்சியின் மூலதனம். வீட்டிலே ஆயிரமாயிரம் தொல்லைகளை வைத்து கொண்டு, பணிக்கு வரும் தொழிலாளியிடமிருந்து தொழில் திறமையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

## உற்பத்திப் பெருக்கம்

நமது நாட்டுத் தொழிலாளர்கள் குடும்பங்களில் பலவற்றில் சம்பாதிப்பவர் ஒருவர் எனில், அவரைச் சார்ந்திருப்பவர்கள் பலர் என்ற நிலையே உள்ளது. தொழிலாளர்கள் பெரிய குடும்பப் பாரத்தைச் சுமந்து கொண்டு வேலைக்கு வந்து பணியாற்றுகின்ற நிலை, உற்பத்திப் பெருக்கத்துக்கு வழி வகுப்பதற்குப் பதிலாக, அதற்கு மாறான விளைவையே ஏற்படுத்தி வருகிறது. இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமான முடிவு ஏற்படுவதன் மூலமே தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு மட்டுமின்றி அவர்களின் ஆக்கச் சக்தியின் மூலம் பயன்பெறும் எல்லா மக்களின் நல்வாழ்வுக்கும் வழியாகும்.

## எதிர்காலச் சந்ததி

தொழிலாளர்களைச் சிறு குடும்ப நெறியைப் பின்பற்றச் செய்வதில் தொழில் அமைதிக்கு வழி இருப்பதை உணர்ந்த பல்வேறு நிர்வாகத்தினரும் இத்திட்டத்தின்பால் ஈடுபாடு கொண்டு இத்திட்டத்தின் வெற்றிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றனர். இது ஓர் நல்ல தொடக்கமாகும். அரசு அளிக்கும் ஊக்கத் தொகையோடு நிர்வாகத்தினரும் முன்வந்து சிறப்பு ஊக்கத் தொகையும், சலுகைகளும் அளித்து வருகின்றனர்.

தொழிலாளர்களும் இச்சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு சிறு குடும்ப நெறிகளை ஏற்றுக் கொள்வதன் வாயிலாகவே தங்கள் வாழ்வையும், அதன் வழி தங்கள் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வையும் நன்முறையில் அமைத்துக் கொள்ள முடியும். இம்முயற்சியில் இந்திய அரசின் தொழிலாளர் கல்வி இயக்ககம் தொழிலாளர்களிடையே நல்லதோர் சூழ்நிலையையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதில் பொதுத்துறையைச் சார்ந்த தொழிலாளர்கள் முன்னோடியாக இருந்து மற்ற தொழிலாளர்களுக்கு வழிகாட்ட வேண்டும். அவ்வாறே நாடு முழுமையும் உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் ஆசிரியர்களும் இத்திட்டத்தில் முக்கிய பங்கு வகித்து குறிப்பாக கிராமத்தில் உள்ள ஒழுங்குபடுத்தப்படாத துறையில் உள்ள தொழிலாளர்களை இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்யலாம். இம்முயற்சி கிராமப்புற வாழ்வில் புதிய மறுமலர்ச்சியை உருவாக்கி, நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமையும்.

அவ்வாறே தொழிற்சங்க இயக்கங்களுக்கும் இத்திட்டத்தில் மிக முக்கிய பொறுப்பு உள்ளது. ஊதிய உயர்வால் மட்டும் தொழிலாளரின் சமூக வாழ்வில் முன்னேற்றம் ஏற்படாது. அளவான குடும்பத்தின் மூலமே தொழில் அமைதியை ஏற்படுத்தி தொழிலாளரின் தனி வாழ்வில் மனநிம்மதியை உருவாக்கி, தொழிலாளர்களைப் பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்க முடியும்.

தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்த மகளிர் உழைப்புத் திறனும் குடும்பத்தின் அளவால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அடிக்கடி மகப்பேறுக்கு ஆளாகும் அவர்கள், உடல் வலிவிழந்து வாழ்க்கையில் சலிப்புணர்ச்சியடைவது-பல்வேறு புதிய சிக்கல்களைத் தோற்றுவிப்பதுடன் அவர்களையும் அவர்கள் சந்ததியினரையும் நிரந்தர நோயாளிகளாக ஆக்கி விடுகிறது.

ஆகவே, தொழிலாளர்கள் குடும்பநலத். திட்டத்தில் தங்கள் பங்கைச் செலுத்தி 'சிறு குடும்ப நெறியே சீர்பெருகும் வழி' என்ற வாழ்வு நெறியைப் பின்பற்றினால், வளமானதொரு எதிர்காலம் நிச்சயம் உருவாகும்!



# எள் உற்பத்தி - சில தகவல்கள்

டாக்டர் சு. தங்கவேலு
பயிர் நிபுணர் (எண்ணெய் வித்து)
முந்திரி ஆராய்ச்சி நிலையம்,
விருத்தாசலம்.

இந்தியா எள் உற்பத்தியில் உலகின் முக்கிய நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. சுமார் 37 லட்சம் ஏக்கர் பரப்பளவில் இந்தியாவில் எள் சாகுபடி செய்யப்பட்டாலும் மொத்த உற்பத்தி சுமார் நான்கரை லட்சம் டன்களே ஆகும். இது சராசரி ஏக்கருக்கு 122 கிலோ மகசூல் ஆகிறது. இந்தியாவில் எள் பயிரிடப்படும் ஏழு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் சுமார் மூன்று லட்சம் ஏக்கரில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்குச் சராசரி மகசூல் 130 கிலோ ஆகும். இது இந்தியாவின் சராசரி மகசூலைவிட அதிகமாக இருந்தாலும் குறைந்த விளைவு ஆகும்.

எள் விதைத்த நிலத்தில் கொள்ளும் விளையாது' என்று சொல்லுவதையும் கேட்டிருப்பீர்கள். சாதாரணமாக எள்ளுக்கு உரம் போடுவதில்லை. அதிலும் மானாவாரியாக விதைத்தால் எள்ளுக்கு உரமா என்று கேட்பதையும் பார்த்திருக்கின்றோம். எள் விதை முளைத்து செடியாகி, பூத்து விதையை உற்பத்திசெய்ய ஓரளவு சத்துப் பொருள்களை மண்ணிலிருந்து எடுத்துத்தானே ஆகவேண்டும். உரம் போடவில்லை என்றால் எள் பயிர் சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்கிறது. மேலும் எள்ளின் வேர் சிறிது ஆழம் செல்வதால் ஆழத்தல் இருந்தும் சத்துக்கள் எடுக்கப்படுகின்றன. இந்த அளவிற்கு மண்ணில்வளம் குன்றிவிடுகிறது. மீண்டும் நாம் அடுத்த பயிர் செய்யும்போது குன்றிய சத்துக்களை ஈடு செய்யாவிட்டால் மகசூல் குறையத்தானே செய்யும்? இதை அறியாது சொல்லப்பட்ட கருத்தே முதலில் சொல்லியதாகும். பரிசோதனை மூலம் ஆராய்ச்சிகள் நடத்தியதில் எள்ளுக்கு வேண்டிய சத்துப் பொருட்களை உரமாக இட்டால், அடுத்த பயிரின் மகசூல் எக்காரணத்தாலும் குறைவதில்லை என்று கண்டறியப்பட்டது.

## மூன்று பருவங்கள்

எள் தமிழ்நாட்டில் மூன்று பருவங்களில் பயிரிடப்படுகிறது. மானாவாரியாக ஜுன், ஜுலை மாதங்களிலும் அக்டோபர், நவம்பர் மாதங்களிலும் விதைக்கப்படுகிறது. இறைவைப் பயிராக பிப்ரவரி - மார்ச் மாதங்களில் பயிரிடப்படுகிறது. சாதாரணமாக நெல் அறுவடைக்குப் பிறகு எள் அதிகப் பரப்பளவில் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 75,000 ஏக்கர் பரப்பளவில்இறைவையில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் அறுவடைக்குப் பிறகு தை - மாசி மாதங்களில் எள் விதைக்க ஆரம்பித்து விடுவார்கள். சில பகுதிகளில் பங்குனி-சித்திரை மாதங்களிலும் எள் இறைவையில் பயிர் செய்யப்படுகிறது. இந்நிலையில்இறைவையில் அதிக மகசூல் பெற என்ன என்ன ரகங்களைப் பயிரிடலாம். எவ்வளவு உரம்போட வேண்டும். எவ்வளவு இடைவெளி இட வேண்டும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் என்ன என்பது போன்றவற்றை நீங்கள் அறிந்து கொண்டால் விளைவையும் பெருக்கி, வருமானத்தையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

பருவத்திற்கு ஏற்பவும், இடத்திற்கு ஏற்பவும் எள் ரகங்கள் வேறுபடும். சாதாரணமாக பழைய ரகங்களையும் விவசாயிகள் பயிரிட்டுவருவதால் மகசூலை அதிகரிக்க வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுகின்றன. மேலும் பழைய ரகங்கள் உரங்களை ஏற்று அதிக மகசூல் அளிக்கும் திறன் பெற்றவையும் அல்ல. சமீப காலங்களில் வெளியிடப்பட்ட பொறுக்கு ரகங்களைப் பயிரிடுவதால் மகசூலையும் அதிகரிக்கலாம். இந்த ரகங்கள் உரம் ஏற்கும் தன்மையையும் பெற்றுள்ளதால் உரமிட்டு அதிக மகசூல் பெறலாம்.

## தூயவழித் தேர்வு

இறைவைப் பயிருக்கு டி.எம்.வி.3, டி.எம்.வி.4, டி.எம்.வி.6, ரகங்கள் சிறந்தவை. டி.எம்.வி. 3-ம் டி.எம்.வி. 4-ம் தமிழ்நாடு முழுவதும் இறைவைப் பயிராக கோடையில் பயிரிட ஏற்றவை. டி.எம்.வி. 6 என்ற ரகம் கோவை, சேலம் தர்மபுரி மாவட்டங்களுக்கு மிகவும் சிறந்தது. டி.எம்.வி. 3 என்ற ரகம் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப்பட்டது. எனவே ஓரளவு விவசாயிகளிடையே பரவியுள்ளது. இதற்குப்பின் வெளியிடப்பட்ட டி.எம்.வி. 4 என்ற ரகம் டி.எம்.வி. 3 டி.எம்.வி. 4 என்ற ரகம் இறைவைப் பயிருக்கு அதிக அளவில் சிபாரிசு செய்யப்படுகிறது. இது சாத்தூர் எள்ளில் இருந்து தூய வழித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகமாகும். ஏக்கருக்கு 300-350 கிலோ வரை மகசூல் அளிக்கவல்லது. விதை டி.எம்.வி. 3 எள்ளைப் போன்றே பழுப்பு நிறம் உடையது. இதன் வயது 85 நாட்கள். 52 சதவிகிதம் எண்ணெய்கொண்டது.

டி.எம்.வி. 6 என்ற ரகத்தின் வயதும் 85 நாட்கள்தாம். விதை பழுப்பு நிறமானது. எண்ணெய் சதவிகிதம் 54 ஆகும். ஏக்கருக்கு டி.எம்.வி. 4 ரகத்தைப் போலவே 300-350 கிலோ மகசூல் அளிக்கும் திறன் பெற்றது. இந்த ரகம் ஆந்திரா எள்ளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுக்கு வித்தாகும்.

இன்னும் பல புதிய ரகங்களை உருவாக்க வேளாண்மைப் பல்

கலைக் கழகமும், விவசாயத் துறையும் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. கம்பு, சோளம், பருத்தி பயிர்களில் ஒட்டு விதைகள் உருவாக்கப்பட்டது போல் எள்ளிலும் அதிக மகசூல் தரக்கூடிய ஒட்டு விதைகளை உண்டு பண்ணத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எள்ளில் பல பருவங்களுக்கு ஏற்பவும், பல பகுதிகளுக்கு ஏற்பவும் அதிக மகசூல் தரக்கூடிய புதிய ரகங்களை உருவாக்க விருத்தாசலத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்உள்ள ஆராய்ச்சி நிலத்தில் கனடாவில் உள்ள சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டுத்திட்டக் குழுவின் பொருளாதார உதவியுடன் ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வெளி நாடுகளில் இருந்து அதிக மகசூல் தரக்கூடிய எள் வகையைப் பெற்று நம் விதைகளோடு இனக் கலப்பு செய்து நல்ல ரகங்களைத் தேர்ந்தெடுக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவை இல்லா எள் வகையை உருவாக்கவும் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

### அவசிய முறை

சிறந்த ரகங்களைப் பயிரிடுவதால் மட்டும் அதிக மகசூலைப் பெற்றுவிட முடியாது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். சிறந்த கட்டுக்கோப்பான சாகுபடிமுறைகளை அந்த ரகங்களுக்கு ஏற்ப கடைப் பிடிப்பதும் மிக மிக அவசியமானது.

எள் பயிரிடுவதற்குக் கருநிறக் கரிசல்மண், பொல பொலப்பான செம்மண் பூமி சிறந்தவை. எள் அதிக ஈரத்தைத்தாங்கும் தன்மை உடையது அல்ல. ஆகவே நல்ல வடிகால் வசதி வேண்டும். எள் வறட்சியைத் தாங்கும் சக்தியை ஓரளவுப் பெற்றுள்ளதால் அதிக தண்ணீர் அவசியமில்லை.

நிலத்தைத் தயாரிக்கும் பொழுது மண் நன்றாகப் புழுதியாகும்படி உழுது தயார் செய்ய வேண்டும். இதனால் விதைகள் நன்முறையில் முளைத்துவர ஏதுவாக இருக்கும். 'எள்ளுக்கு ஏழு உழவு' என்று சொல்வதையும் கேட்டிருப்பீர்கள். எள் விதைகள் மிகச் சிறியனவாக இருப்பதால் நிலத்தைப் பண்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் ஆகும்.



## வெளிநாட்டுப் பயணிகளுக்காக 'குளுமை' வசதியுள்ள பேருந்து

''வெளிநாட்டுப் பயணிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் 'குளுமை' வசதிகள் கொண்ட ஒரு பேருந்தினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விட முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள மகாபலிபுரம், இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதிகளையொட்டி சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக அதிக அளவு தங்கும் விடுதிகள் கட்டவிருக்கிறது.

மதுரை நகரில் ரூ. 35 இலட்சம் செலவில் ஒரு நட்சத்திர விடுதியும், கோவை பேருந்து நிலயம் அருகில் ரூ. 20 இலட்சம் செலவில் மற்றொரு சுற்றுலாப் பயணிகள் விடுதியும் கட்டப்பட்டு, முடியும் கட்டத்தில் இருக்கின்றன.

கடலில் படகுகள் மூலம் சென்று 'பிச்சாவரம்' வனத்துறைகளின் இயற்கை எழில்களைக் காணுவதற்காக தமிழக அரசு ரூ. 6 இலட்சத்தில் ஒரு திட்டத்தினை அமல்படுத்தவிருக்கிறது.

இராமேஸ்வரம் அருகிலுள்ள 3 தீவுகளுக்குப் பயணிகள் சென்றுவர வசதியாகப் படகுகள் விடுகிற திட்டம் இருக்கிறது. இதனைக் காண வரும் மக்கள் வசதிக்காக மண்டபத்தில் ஒரு சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதியும் கட்டப்படும்.

உதகை — கொடைக்கானல் — குற்றாலம் ஆகிய கோடை வாசஸ்தலங்களைச் சுற்றுலாப் பயணிகள் வசதிகளுக்காகப் பல நல்ல திட்டங்களைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டிருக்கிறது.

ஏக்கருக்கு ஐந்து டன் அளவில் தொழு உரம் கடைசி உழவிற்கு முன் இட வேண்டும். விதைப்ப தற்கு முன் அடியுரமாக தழைச் சத்து 14 கிலோவும், மணிச்சத்து 9 கிலோவும், சாம்பல் சத்து 9 கிலோவும் இடவேண்டும். அதா வது 31 கிலோ யூரியாவும் 56 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 15 கிலோ மூரியேட் ஆப் பொட் டாஷும் போட வேண்டும். இந்த உர அளவு மண்ணின் வளத்திற்கு ஏற்ப வேறுபடலாம். மண் பரி சோதனை முடிவுகளுக்கு ஏற்ப வும் மாறுபடலாம். விதைப்ப தற்கு முன் 2 கிலோ மாங்கனீசு சல்பேட்டை சுமார் 18 கிலோ மண்ணுடன் கலந்து பரவலாகத் தூவ வேண்டும். இது எள்ளுக்கு வேண்டிய மங்கனீசு என்ற நுண் ணூட்டச் சத்தை அளித்து மக சூலை அதிகரிக்க உதவுகின்றது.

## பாத்தியும் விதைப்பும்

தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற அளவுகளில் பாத்திகளை அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது கரும்பு நடுவதற்கு அமைப்பது போல் மஞ்சி அமைக் கலாம். இதனால் தண்ணீர் தேங் குவது தவிர்க்கப்படுகிறது. தண் ணீர் தேங்கினால் விதை முளைப்பு பாதிக்கப்படும். ஒரு ஏக்கருக்கு 1 கிலோ விதை போதுமானது.

விதையை மணலுடன் கலந்து விதைக்கவேண்டும். விதை அளவு அதிகமானால் பிறகு செடிகளை அதிகமாகக் கலைக்க வேண்டி யிருக்கும். நல்ல மகசூல் பெற ஒரு ஏக்கருக்கு குறைந்தது நாற் பத்து மூவாயிரம் செடிகள் இருக்க வேண்டும் என்று கண்டறியப்பட் டுள்ளது. அப்படியானால் சதுர அடிக்கு ஒரு செடி இருக்க வேண் டும். ஆகவே செடிக்குச் செடி எல் லாப் பக்கங்களிலும் 1 அடி இடை வெளி இருக்க வேண்டும். விதைக் கும்பொழுது இவ்வாறு விதைப் பது கடினம். ஆகவே விதைத்த 15 நாட்களுக்குப் பிறகு அதிக மாக உள்ள செடிகளின் பாதி யளவு குறைக்க வேண்டும். தண் டும் 10 நாட்கள் கழித்து அதா வது முதல் களை கலைத்து விட வேண்டும். முதலிலேயே முழுமை யாகக் கலைத்துவிட்டால் களை எடுக்கும்போதும், பிறகும் செடி களின் எண்ணிக்கை பாதிக்கப்பட லாம்.

முதல் களைக்குப் பிறகு 10 நாட்கள் கழித்து இரண்டாம் முறையாகக் களை எடுத்து [illegible]த்தமாக வைத்துக் [illegible]டும். இவ்வாறு [illegible]ம் இட்ட உரம் எள்ளுக்கு [illegible] கிடைக்க ஏது [illegible]கிறது. [illegible] வயது குறு [illegible]யது. [illegible]ல் முதலில் இருந்தே களை இல்லாமல் வைத் திருத்தல் அவசியம். இல்லையேல் செடியின் வளர்ச்சி பாதிக்கப் படும்.

## நீர் பாய்ச்சல்

அதிகத் தண்ணீர் எள்ளுக்கு உதவாது. தண்ணீர் பாய்ச்சி சரியான ஈரத்தில் விதைத்தால் நல்ல முளைப்பு இருக்கும். சாதா ரணமாக 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போது மானது. ஆனால் விதைத்தமூன்று நாட்களுக்குப் பிறகு லேசாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நீர் பாய்ச்சுதல் மண்ணின் தரத்திற் கேற்ப மாறுபடும். பூக்குந் தரு ணத்திலும், காய் பிடிக்கும் தரு ணத்திலும் சிறிது அதிக ஈரம் இருத்தல் வேண்டும். இதற்கு ஏற்ப நீர் பாய்ச்ச வேண்டும். காய்கள் முதிரும் பருவத்தில் தண்ணீர் அளவு குறைவாக இருக்க வேண்டும். 60-65 நாட் களுக்குப் பிறகு தண்ணீர் பாய்ச் சுவதை நிறுத்திவிட வேண்டும். தண்ணீர் தேங்கினால் பயிர் பாதிக்கப்படும். ஆகவே தண்ணீர் தேங்க விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தரமான பொறுக்கு விதை, உரம், தண்ணீர் முதலியவை விளைச்சலை அதிகப்படுத்த உத வும். ஆனால் பூச்சி நோய் இவற் றின் தாக்குதலைத் தடுக்க வேண் டிய முறைகளைத் தக்க சமயத்தில் கடைப்பிடிக்காவிட்டால் இந்த மகசூல் பெருவாரியாகப் பாதிக் கப்படும். ஆகவே தக்க பயிர் பாது காப்பு முறைகளைக் கையாள் வது மிகமிக அவசியமாகும்.

## மருந்தோடு விதைத்தேர்வு

விதை நேர்த்தி செய்வதால் விதைகள் மூலம் பரவுகின்ற இலைப்புள்ளி நோய், வேர் அழு கல் நோய் ஆகியவைகளை வரா மல் தடுக்க இயலும். இதற்கு ஒரு கிலோ விதையை 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் அல்லது 4 கிராம் தைரம்போன்ற பூஞ்சாள மருந்துகள் கலந்து விதைக்க வேண்டும்.

எள் பயிரை அதிகமாகக் கொண் டைப் புழுவும், காய் கொக்கிப் புழுவும் தாக்குகின்றன. கொண் டைப்புழு 50 சதவிகிதத்திற்கு மேல் விளைச்சலைக் குறைக்கின் றது. காய்களையும், இலைகளை யும் ஒன்றுடன் ஒன்று சேர்த்து கூடு கட்டுகிறது. இதைத்தடுக்க எக்காலக்ஸ், நுவான்நுவக்கிரான் எண்டோசல்பான், லேபலான், போன்ற மருந்துகளைத் தண்ணீ ரில் கலந்து தெளிக்கலாம். அல் லது 4 சதத் தூளை தூவலாம்.

என்னைத் தாக்கும் நோய் களில் முக்கியமானவை இலைப் புள்ளி நோயும், சாம்பல் நோயும் ஆகும். இந்நோய்கள் செடியின் இளம் பருவத்திலேயே தோன்ற ஆரம்பித்தால் உடன் மருந்து



தெளித்து கட்டுப்படுத்த வேண் டும். இலைப்புள்ளி நோயை டைத்தேன்-45 அல்லது டசோலில் மருந்தைத் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத் தலாம். சாம்பல் நோயைக் கட்டு படுத்த கரையும் கந்தகத்தூளை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். பில்லோடி என்ற நோய் இறை வைப் பயிரை அதிகமாகத் தாக்கு வதில்லை. அப்படித் தாக்கினால் முதலிலேயே தாக்கப்பட்ட செடி களைப் பிடுங்கி எரித்துவிட வேண்டும்.

முடிவாகச் சுருங்கச் சொல்லின் இறைவையில் எள் பயிரிட்டு அதிக மகசூலைப் பெற்று நல்ல இலாபம் பெற டி.எம்.வி. 4 என்ற ரகம் தமிழ்நாடு முழுவதும் பயிரிடச் சிறந்தது. கோவை, சேலம், தர்மபுரி மாவட்டங் களுக்கு டி.எம்.வி. 6 என்ற ரகம் உகந்தது. ஏக்கருக்கு ஐந்து டன் தொழு உரத்துடன், 14 கிலோ தழைச்சத்தும், 9 கிலோ மணிச் சத்தும் 9 கிலோ சாம்பல் சத் தும் 2 கிலோ மங்கனீஸ் சல்பேட் டும் அடியுரமாக இட்டால் மக சூலை அதிகரிக்கலாம். ஏக்கருக்கு 43,000 செடிகள் இருந்தால் மக சூல் குறையாது. அதாவது ஒரு சதுர அடிக்கு ஒரு செடி இருக்க வேண்டும். தண்ணீர் தேங்காமல் போதுமான அளவு தண்ணீர் பாய்ச்சினால் விளைச்சல் அதிகம் ஆகும். மகசூல் பாதிக்காமல் கொண்டைப்புழுவின் தாக்கு தலையும், இலைப்புள்ளி நோய் சாம்பல் நோய் தாக்குதலையும் தகுந்த பயிர் பயிர் பாதுகாப்பு முறைகளினால் கட்டுப்படுத்த வேண்டும்.

நெல்லிலும், கம்பிலும், சோளத்திலும், நவீன விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து உற் பத்தியைப் பெருக்குவதுபோல் எள்ளிலும் விஞ்ஞான முறை யைப் பின்பற்றி உற்பத்தியை அதிகரித்து வருமானத்தையும் பெருக்கலாம்!

[illegible]ம் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

85330


எழில்மிகு
உங்கள்
மொழிவண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
எழில்வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்



டில்லியில்
நடைபெற்ற
குடியரசு தின
விழாவில்
(26-1-89)
தமிழகக
கலைக்குழு
பங்கேற்பு





